நிலைபேறான
இலங்கை

# இலட்சியம் அறிக்கை

சனாதிபதி
நிபுணர் குழு (PEC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனாதிபதி நிபுணர் குழு (PEC)

# நிலைபேறான இலங்கை

# இலட்சியம்

# அறிக்கை

1-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதிபதி நிபுணர் குழு (PEC)

**நிலைபேறான இலங்கை 2030 இலட்சியம் - அறிக்கை**
**நவம்பர் 2017**


| | |
|---|---|
| பிரதம பதிப்பாசிரியர்: | மொஹான் முனசிங்க |
| பணியகம்: | சமன் கெலேகட<br>துனி வீரக்கூன்<br>ஹேமந்தி ரணசிங்க டப்.எல்.சுமதிபால<br>சிறி ஹெட்டிகே<br>சாவித்திரி குணசேகர |
| தலைமைக் கட்டுரையாளர்கள்: | பிரவீன் அபயரத்ன \| எஸ்.ஆர்.கே.அருப்பொல<br>அப்துல் அஸீஸ் \| காமினி பட்டுவிதாகே<br>நிலூபர் டி மெல் \|அனுர ஏக்கநாயக்க<br>ஷவி பெர்ணாந்து \| உதான் பெர்ணாந்து \| பி.ஏ.குணரத்ன<br>சாவித்திரி குணசேகர \| சிறி ஹெட்டிகே \| சமன் கெலேகம<br>அமல் குமாரகே \| மொஹான் முனசிங்க \| ஜகத் முனசிங்க<br>ஹேமந்தி ரணசிங்க \| கமல் ரணதுங்க \| ரொஹான் சமரஜீவ<br>\| டப்.எல்.சுமதிபால \| அசங்க திலகரத்ன \| மனோ தித்தவெல<br>துனி வீரக்கூன் \| மதுரா வெஹெல்ல |
| பக்க ஒழுங்கமைப்பு | அனுஹஸ் மஹவலகே |
| வெளியீடு | அரசாங்க தகவல் திணைக்களம் |
| பதிப்பு | அரசாங்க அச்சகத் திணைக்களம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செய்தி

முன்னுரையும், ஏற்புரைகளும்

**E. நிறைவேற்றுச் சராம்சம்**

16 EC. அறிமுகமும், கொத்தணிகளும் (பொருளாதாரம், சூழல், சமூகம்)

24 ES. துறைசார்

38 ET. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

53 EV. 2030 இலட்சியம் - சாராம்சம்

**I. அறிமுகமும், பொதுப்பார்வையும்**

60 I1. பின்னணி

63 I2. நிலைபேறான அபிவிருத்தி இலட்சியமும், சமனிலையான, அனைவரையும் தழுவும் பசுமை வளர்ச்சிப்பாதையும்

69 I3. கட்டமைப்பு விபரங்களும், ஒன்றிணைப்புச் செயல்முறையும்

70 I4. இலங்கை - சுருக்கமான பொதுப்பார்வை

**C. பொருளாதார, சூழல் மற்றும் சமூக நிலைபேற்றுத்தன்மை**

74 C1. தற்போதைய நிலை

80 C2. பொருளாதாரம்: தீர்மானகரமான விவகாரங்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

103 C3. சூழல்: தீர்மானகரமாக விவகாரங்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

114 C4. சமூகம்: தீர்மானகரமான விவகாரங்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

122 C5. நிலைபேற்றுக் கண்ணோட்டம்: 2020 மற்றும் அதற்குமப்பால்

**S. துறைகள்**

132 S1. விவசாயமும், உணவும்

139 S2. கல்வி

151 S3. சக்தி

175 S4. சௌக்கியம்

182 S5. கடல்சார் மூலவளங்கள்

198 S6. போக்குவரத்து

213 S7. நகர அபிவிருத்தியும், பௌதீகத் திட்டமிடலும்

228 S8. நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T. **ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்**


**244** T1. காலநிலை மாற்றம், அழிவுகள் மற்றும் வளியின் தரம்

**256** T2. ஒழுக்க நெறியியல், விழுமியங்கள் மற்றும் குடியுரிமை

**267** T3. பால்நிலை

**275** T4. ஆட்சிமுறை

**284** T5. புதிது புனைதல், தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில்

**294** T6. சர்வதேச உறவுகள்

**299** T7. வறுமையும், சமத்துவமின்மையும்

**316** T8. மீளிணக்கம், பாதுகாப்பு மற்றும் சமாதானம்

**333** T9. இளைஞர் யுவதிகள் தலைமுறையை விஞ்சிச்செல்லும் கண்ணோட்டம்


R. **விதப்புரைகளும், முடிவுரைகளும்**


**347** RO. பொதுப்பார்வை

**350** RC. கொத்தணிகள்

**359** RS. துறைகள்

**370** RT. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்


**பின்னிணைப்புகள்**


**384** A. பங்களிப்புச் செய்தோர்

**386** B. சனாதிபதி நிபுணர் குழுவின் (PEC) அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனாதிபதியின் செய்தி



நிலைபேறான இலங்கை இலட்சியம் மற்றும் பேருபாயப்பாதை சம்பந்தமான முதலாவது வரையும், 2017 சனவரி 02 ஆம் திகதி நியமிக்கப்பட்ட சனாதிபதி நிபுணர் குழுவின் (PEC) அறிக்கையுமாகிய இந்த ஆவணத்துக்கு இச்செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை 2030 அளவில் உண்மையான நிலைபேற்றுத்தன்மைகொண்ட தேசமாவதற்கு வழிகாட்டல் வழங்கும் நிலைமாற்றமில்லாத தேசியக் கொள்கைகளை வகுத்தமைக்கும் நோக்கத்தில் ஆரம்பிக்கப்படும் பொதுமக்களைக் கலந்தாலோசிக்கும் செயல்முறைக்கு இந்த வரைபு ஓர் அடிப்படை ஆவணமாக அமையும்.

சனாதிபதி நிபுணர் குழு விதந்துரைக்கும் நிலைபேறான அபிவிருத்திப்பாதை இலங்கைக்கு தனிச்சிறப்புவாய்ந்த ஒன்றாகும். **"சமநிலையான, அனைவரையும் உள்ளடக்கும் பசுமை வளர்ச்சி"** (BIGG) ஆயிரக்கணக்கான வருடங்களாக எமது நாடு ஒரு மீளெழுச்சித்தேசமாக விளங்குவதற்கு உதவிய ஒரு நடுநிலைப்பாதை அணுகுமுறையுடன் ஒட்டிநிற்கும் நீண்ட பாரம்பரியத்துடன் இணைந்து செல்வதுமாகும். நிலைபேறான அபிவிருத்தி விடயத்தில் சருவதேசரீதியில் புகழ்பெற்ற நிபுணராகிய பேராசிரியர் மொஹான் முனசிங்கவின் தலைமையிலான சனாதிபதி நிபுணர் குழுவினால் முன்மொழியப்பட்டுள்ள இந்தப் புதிதுபுனைதலான பாதைகுறித்து நான் பாராட்டுத் தெரிவிக்கின்றேன். (PEC)யின் பெருமுயற்சியுடன்கூடிய பணி இந்த அறிக்கையில் பிரதிபலிக்கின்றது. இது நிலைபேறான அபிவிருத்தியின் சகல அம்சங்களையும் உள்ளடக்குவதோடு, இடர்வரவுகளைச் சுட்டிக்காண்பித்து, பரிகாரங்களையும் முன்வைக்கின்றது. இத்தேசியப் பிரயத்தனத்தில் காண்பித்த அர்ப்பணவுணர்வுக்காக நான் PEC யின் சகல அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

அபிவிருத்தியை மேலும் நிலைபேறாக்குவதில் இலங்கை காண்பிக்கும் அர்ப்பணவுணர்வு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். செத்தெம்பர் 2015 இல் நான் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் உலகத்தலைவர்கள் முன்னிலையில் எழுந்துநின்று 2030 அளவில் இலங்கை நிலைபேறான குறியிலக்குகளை ஈட்டிக்கொள்வதற்கு அவசியமான அடிப்படையான நடவடிக்கைகளை எடுப்பதில் தலைமை வழங்குவேன் என்று வாக்குறுதியளித்தேன். இன்று நிலைபேறான அபிவிருத்தி குறித்த சனாதிபதி நிபுணர்கள் குழு தனது வரைபு அறிக்கையை வெளியிடுகின்றது. எமது நாட்டின் வளர்ச்சி நிலைபேறாக அமைவதை உறுதிப்படுத்துவதற்கு எனது அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இருக்கின்றார். இது தொடர்பில் நாம் உலகிலேயே முதலாவது நிலைபேறான அபிவிருத்தி குறித்த பாராளுமன்றச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். இது நிலைபேறான அபிவிருத்தி மன்றத்தை நியமிப்பதற்கு வழிசெய்கின்றது. இது இப்பொழுது நிறுவப்பட்டுள்ளது. மேலும் இலங்கை நிலைபேறான அபிவிருத்தி குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை ஏற்படுத்திய உலகின் முதலாவது நாடாகவும் உள்ளது. இந்த முன்முயற்சிகள் அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை 2030 அளவில் நிலைபேறான அபிவிருத்திக் குறியிலக்குகளை உண்மையில் ஈட்டிக்கொள்வதற்கான துணைக்கருவிகளை வழங்கிநிற்கின்றன.

மதிப்புவாய்ந்த நிபுணர்கள் தீர்ப்பாயமொன்றினால் எழுதப்பட்ட இந்த முதலாவது வரைபு ஒரு சுருக்கமான, நம்பிக்கைவாய்ந்த அறிக்கையாகவுள்ள அதேவேளையில், இது உண்மையில் ஒரு கருத்தொருமை தேசிய இலட்சியமாக ஆகவேண்டுமெனில், இது மக்களாலும், சகல கட்சிகளாலும், சிவில் சமூகத்தினாலும் மற்றும் வியாபாரத்தொழில் சமூகத்தினாலும் தமது சொந்த ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். இதைச்செய்வதற்கு நாம் கருத்துரை, விமர்சனம் மற்றும் ஆக்கபூர்வமான பின்னூட்டல் என்பவற்றை வழங்கும் வகையில் சகல நலன்பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல் வேண்டும். இதுவே நாம் இன்று தேசிய நிலைபேற்றுத்தன்மைகுறித்த உரையாடலை ஆரம்பிப்பதற்கான காரணமாகும். இந்த உரையாடலைத்தொடர்ந்து பிரசைகளின் பின்னூட்டலை அடிப்படையாகக்கொண்ட ஓர் உண்மையான கருத்தொருமிப்புத் தேசிய இலட்சியத்தை உருவாக்கும் வகையில் இந்த ஆவணம் திருத்தியமைக்கப்படும்.


எமது தேசத்தின் கூட்டு எதிர்காலத்தை வடிவமைக்கும் வகையிலும் இலங்கையைப் பொருளாதாரரீதியில் சுபீட்சமுள்ள, போட்டித்தகவுமிக்க, முன்னேற்றகரமான, சூழல்ரீதியில் பசுமை மற்றும் செழிப்புமிக்க, சமூகரீதியில் அனைவரையும் உள்ளடக்கும், சௌஜன்யம், சமாதானம் மற்றும் நீதி நிறைந்த, மேல் நடுத்தர வருமானமுள்ள இந்துசமுத்திர நாடாக, வடிவமைப்பதற்கும் ஒவ்வொருவரும் இவ்வுரையாடலில் துடிப்புடன் ஈடுபடுவார்கள் என்று நான் உளப்பூர்வமாக நம்புகின்றேன்.

**மைத்திரிபால சிறிசேன**

**இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசின் சனாதிபதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதமரின் செய்தி



நான் இச்சந்தர்ப்பத்தில் பெரும் முயற்சியெடுத்து இந்த ஆவணத்தைத் தயாரித்தமைக்காக பேராசிரியர் மொஹான் முனசிங்க அவர்களுக்கும், அவரின் நிபுணர்கள் குழுவுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த ஆவணத்தைப் பிரசைகள் பெற்றுக்கொள்வதும், பொது மக்கள் பின்னூட்டலை ஊக்குவிக்கும் வகையில் ஓர் உரையாடலை ஆரம்பித்தமையும் பாராட்டுக்குரியவையாகும். இது நாங்கள் கடந்த மூன்று வருட காலத்தில் மீளவும் கட்டியெழுப்பிய பங்கேற்பு சனநாயகத்தின் ஓர் அடையாளம் ஆகும்.

இந்த இலட்சியம் யதார்த்தமாவதற்கு எமது செயற்பாடுகள் வெளியக உலகத்துடன் கைகோர்த்தல் வேண்டும். இலங்கை என்பது ஒரு பெரிய உலகின் மத்தியில் உள்ள ஒரு சிறிய தீவாகும். இப்பேருபாய இட அமைவு காரணமாக ஆயிரக்கணக்கான வருடங்களாக நாம் பல அனுகூலங்களை அனுபவித்துவந்துள்ளோம். துரதிருஷ்டவசமாக நாம் இந்த இட அமைவு சம்பந்தமான உயர்வான அனுகூலத்தை மறந்துவிட்டதுபோலத் தோன்றுகின்றது. எமது இலட்சியம் அந்த 4 சருவதேச தொடர்பாடல் அனுகூலங்களை மீண்டும் ஈட்டிக்கொள்வதாகும். இந்த இடத்தில் வளர்ச்சிக்கான எமது ஆற்றலைப்பாதித்த பல தசாப்தகால உள்நிலைநோக்கு கொள்கைகளைக் கைவிடுதல் வேண்டும்.

இலங்கை சனநாயக விழுமியங்களை மதிக்கும் ஒரு தேசமாகும். தேசிய நிலைபேற்றுத்தன்மை குறித்த உரையாடல் எமது பிரசைகள் அனைவரையும் ஐக்கியம் மற்றும் பலம் சம்பந்தமான உணர்வில் ஒன்றுசேர்ப்பதாகும். கடந்தகாலத்தில் குடியேற்றவாத ஆட்சியின் பிடியிலிருந்து தேசத்தை விடுதலைசெய்வதற்கு அனைவரும் ஒன்றுசேர்ந்ததைப்போல், சனவரி 08 ஆம் திகதி இலங்கையர்கள் தேசத்தை சர்வாதிகாரம், ஊழல், உறவினர்களுக்குச் சலுகை மற்றும் குடும்ப ஆட்சி என்பவற்றின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிப்பதற்காக ஒன்றுசேர்ந்தனர். இதன்மூலம் மக்களுக்குச் சுதந்திரத்தையும், நீதியையும் உறுதிப்படுத்தும் உயர்வான சனநாயகத் தேசங்களின் சமூகத்திற்கு நாம் திரும்பிச்செல்வதை உறுதிப்படுத்தினர். இப்பொழுது எமக்கு முன்னால் இருக்கும் பணி நாம் போராடி வென்றெடுத்த சுதந்திரம் அதன் அர்த்தத்தையும், முக்கியத்துவத்தையும் தக்கவைத்துக்கொள்வதை உறுதிசெய்து, தற்போதுள்ள மிகப்பெரிய இயற்கை நெருக்கடியாகிய காலநிலை மாற்றத்தை துணிவுடனும், முன்தயாரிப்புகளுடனும் எதிர்கொள்வதாகும். இது மத, இனத்துவ மற்றும் அரசியல் உறவுகளுக்கு அப்பாற்பட்டவிதத்தில் ஐக்கியப்படுவதற்கு அழைப்புவிடுக்கும் ஒரு பணியாகும். இது உண்மையில் அரசாங்கத்தின் ஓர் இலட்சியமாகும். உலகத்தின் பார்வையில் இலங்கை சனநாயகத்தின் உயர்வான கோட்பாடுகளை மதிக்கும் ஒரு நாடாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சகல பிரசைகளும் நிலைபேறான சமூகப் பொருளாதார அபிவிருத்தியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பும் எண்ணக்கருவை முன்னேற்றும் அதேவேளையில், அனைவருக்கும் நிலையான சமாதானம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை உறுதிப்படுத்தும் பாரிய பணி எம்முன்னால் உள்ளது.

தேசிய நிலைபேற்றுத்தன்மை குறித்த உரையாடல் ஒரு தேசம் என்றவகையில் எம்முன்னால் இருக்கும் சவால்களை விளங்கிக்கொள்ள முயற்சிசெய்யவும், எமது தேசத்தை முன்னோக்கி கொண்டுசெல்லும் ஓர் உன்னதமான இலட்சியத்துக்கு இதயபூர்வமாக எம்மை அர்ப்பணிக்கத் தீர்மானிக்கவும் உதவுவதாகுக.

**ரணில் விக்கிரமசிங்க**
**இலங்கை சனநாயக சோ'லிசக் குடியரசின் பிரதமர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலைபேறான அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் விடுக்கும் செய்தி



தேசிய நிலைபேற்றுத்தன்மை அபிவிருத்தி இலட்சியத்தை உள்ளடக்கும் இந்த அறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

செத்தெம்பர் 2015 இன் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அல்லது நிலைபேறான அபிவிருத்திக குறி-யிலக்குகளுக்கு தம்மை அர்ப்பணித்துக்கொண்டபின்னர், பல்வேறு அரசாங்க அமைப்புகள் இலங்கையில் அதை நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் பல முன்முயற்சிகளை மேற்கொண்டன. எனது அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட நாடுதழுவிய பிரதான பிரவாக மற்றும் ஆற்றலைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களும், தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தை வகுத்தமையும் இத்தகைய முன்முயற்சிகளுள் சிலவாகும். பயனுறுதியுள்ள நடைமுறையாக்கத்தை உறுதிசெய்து, தகவலை அனைவரும் பெற்றுக்கொள்வதை மேம்படுத்துவதற்கு எனது அமைச்சும் ஒரு துடிம அரங்கை அபிவிருத்திசெய்துள்ளது.

எனது அமைச்சு நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றம் குறித்து முதலாவது தன்னார்வத் தேசிய மீளாய்வைத் (VNR) தயாரிக்கும் பல்தரப்பு நலன் பிரதிநிதிகளின் நிர்மாணச் செயல்முறைளை வழிநடத்தியது. இது 2018 யூலையில் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற உயர்மட்ட அரசியல் அரங்கில் சமர்ப்பணம் செய்யப்பட்டது. பலநாடுகள் இலங்கையின் முன்னேற்றத்துக்கு பாராட்டுத்தெரிவித்தனர். பல்வேறு நலன்பிரதிநிதிகள் குழுக்களை பிரதிநிதித்துவம்செய்யும் நூற்றுக்கணக்கான பங்கீடுபாட்டாளர்கள் சம்பந்தமுற்ற VNR செயல்முறையின்போது இலட்சியம் 2025 மற்றும் பகிரங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2017-2020 என்பவை முக்கியமான அளவில் நிலைபேறான அபிவிருத்திக் குறியிலக்குகளுடன் இணக்கப்பாடுற்றவை என்பது தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் அதிமேதகு சனாதிபதி அவர்களின் முன்முயற்சியாக சனாதிபதி நிபுணர்குழு தயாரித்த இந்த பணிவிளைவு அறிக்கை நாட்டின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலைச் செழுமைப்படுத்துவதற்கான முக்கிய உள்ளீடுகளை வழங்கும் என்று நான் 'நம்புகின்றேன்.

**பீல்ட் மார்'ல் சரத் பொன்சேகா**
**நிலைபேறான, அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும்**
**பிராந்திய அபிவிருத்தி அமைச்சர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செய்தி

பேண்தகு அபிவிருத்திப் பேரவையின் தலைவர் என்ற வகையில் தேசிய பேண்தகு அபிவிருத்தி தொலைநோக்கு தொடர்பான முதலாவது நகலின் வெளியீடு தொடர்பாக இச்செய்தியை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். 2030 ஆண்டுவரை இலங்கையின் பாதையை எவ்வாறு தயார்படுத்துவது என்பது தொடர்பான ஒரு கொள்கைக் கலந்துரையாடலில் பிரசைகள் ஈடுபடுவதற்கான ஓர் அடிப்படை ஆவணமாக பயன்படக் கூடிய இவ்வாவணம் மேதகு சனாதிபதி அவர்களின் வல்லுனர் குழுவினால் பெரும் பற்றுறுதியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அவர்களது முயற்சிகளை இச்சந்தர்ப்பத்தில் நான் வியந்து போற்றுகின்றேன்.

நாட்டின் வலிமையையும், வல்லமைகளையும் பிரதிபலித்து அடுத்த 12 ஆண்டுகளுக்கு அதன் நீண்டகால பொருளாதார, சமூக மற்றும் சூழல் இலக்குகளை விளக்குவதற்கான ஒரு நீல அறிக்கையைத் தயாரிப்பதற்கான இலங்கையின் முதலாவது தேசிய முயற்சி இதுவேயென நான் கருதுகின்றேன். இது ஓர் உண்மையான பங்கேற்பு சனநாயகத்தினதும் கொள்கை வகுப்பில் மக்களின் பங்கேற்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு முயற்சியினதும் அறிகுறியாகும்.

2030 தொலைநோக்கு ஆவணத்தின் முதலாவது நகலின் உள்ளடக்கம் தொடர்பான 3 மாத தேசிய கலந்துரையாடல் குறிப்பிட்ட பிரச்சினைகளில் பிரசைகள் எந்த நிலைப்பாட்டில் உள்ளனர் என்பது தொடர்பான கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு உதவும். பேண்தகு அபிவிருத்தி உண்மையான பிரசைகள் பங்களிப்பினூடாகவே எய்தப்படலாம் என்பதனால் பேண்தகு அபிவிருத்திப் பேரவை நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்த முயற்சிக்கு உறுதுணை புரியும்.

2030 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையை உண்மையாகவே ஒரு பேண்தகு நாடாக ஆக்குவதற்கான எமது எதிர்கால நடவடிக்கைகளை அறிவிக்கும் முகமாக பேண்தகு அபிவிருத்தி தொடர்பாக பொது மக்கள் கருத்தொருமைப்பாட்டை பேண்தகு அபிவிருத்திப் பேரவை எதிர்பார்த்திருக்கின்றது.

எமது பிரசைகளின் உண்மையான திறமையையும், கருத்துக்களையும் இத்தேசிய கலந்துரையாடல் வெளிப்படுத்துமென நான் எதிர்பார்க்கின்றேன்.

**உதய ஆர். செனெவிரத்ன**
**சனாதிபதியின் செயலாளர்**
**மற்றும் தலைவர், பேண்தகு அபிவிருத்திப் பேரவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தேசியப் பொருளாதார மன்றத்தின் செயலாளர் நாயகமும், பிரதம பொருளியலாளருமானவர் விடுக்கும் செய்தி

நிலைபேறான இலங்கை 2030 இலட்சியம் பிரகடனப்படுத்தப்படும் இவ்வேளையில் இச்செய்தியை அனுப்புவதுகுறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கை அனைவரையும் உள்ளடக்கும் வகையிலான நிலைபேறான பொருளாதார அபிவிருத்தி குறித்த சவால்களைக் கையாளும் இந்தவேளையில், பொருளாதார சமூக மற்றும் சூழல் துறைகளில் கொள்கைகளையும், பேருபாயங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் வழிநடத்தும்வகையில் நாடு ஓர் அனைத்துமடங்கும் தேசிய இலட்சியத்தைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியமாகும்.

சகல மக்களுக்கும் நன்மையளிக்கும் இலங்கையின் பாரம்பரியமான நடுநிலைக் கொள்கைகளின் பிரகாரம் இந்த ஆவணத்தில் இனங்காணப்பட்டுள்ள சமநிலையான, அனைவரையும் உள்ளடக்கும் பசுமை வளர்ச்சி என்னும் அபிவிருத்திப்பாதை மிகவும் பொருத்தமானதொன்றாகும். 2030 அளவில் தேசிய முன்னேற்றத்தையும், நிலைபேறான அபிவிருத்தி குறியிலக்குகளை ஈட்டிக்கொள்வதையும் உறுதிசெய்வதாயின், இலங்கை ஒரு நிலைமாற்றமில்லாத கொள்கைச்சட்டகத்தை ஏற்றுக்கொள்வதும், அத்தகைய கொள்கையை வினைத்திறனுடன் நடைமுறைக்கிடுவதற்கான முறைமைகளை உருவாக்குவதும் தீர்மானகரமான தேவையாகும்.

இலங்கை அரசாங்கத்தின் அதியுயர்வான கொள்கை நிறுவனம் என்றவகையில் தேசியப் பொருளாதார மன்றம் நிலைபேறான அபிவிருத்தி இலட்சியத்தை வரவேற்பதோடு, அது அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், அதன் வெற்றிகரமான நடைமுறையாக்கத்துக்கு ஆதரவு வழங்கும்.

இந்த அறிக்கையை வரைந்த நிலைபேற்றுத்தன்மை இலட்சியம் குறித்த நிபுணர் குழுவின் அங்கத்தவர்கள் வழங்கிய பெறுமதிமிக்க பங்களிப்புகளுக்காக நான் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

**பேராசிரியர் லலித் பி.சமரக்கோன்**
**செயலாளர் நாயகம் மற்றும் பிரதம பொருளியலாளர்**
**இலங்கை தேசியப் பொருளாதார மன்றம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரையும், நன்றி நவிலலும்

சனாதிபதி வல்லுநர் குழுவின் (PEC) தலைவர் என்ற வகையில் **பேண்தகு இலங்கை 2030 தொலைநோக்கு - மூலோபாய பாதை** தொடர்பாக அறிக்கையொன்றை தாயரிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆம் திகதி மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களினால் எனக்களிக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். PEC 2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத தொடக்கப் பகுதியில் நியமிக்கப்பட்டது. நாங்கள் வாக்குறுதியளித்திருந்த ஒரு வருடத்திற்குள்ளேயே 2017 டிசம்பர் மாத ஆரம்ப பகுதியில் இப்பணி நிறைவேற்றப்பட்டதென்பதை கூறுவதில் நான் பெருமையடைகின்றேன். அத்தகைய விரிவான மற்றும் மூலோபாய தேசிய ஆவணமொன்றை தயாரிப்பதற்கு சுயாதீன அறிவியல் பூர்வ குழுவொன்றை இலங்கை சனாதிபதியொருவர் நியமித்திருப்பது இதுவே முதல் தடவையாகும். தனது மாபெரும் பொறுப்புக்களோடு எம்மை கௌரவப்படுத்துவதோடு, இலங்கை அன்னைக்கு நாம் சேவையாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்கும் அதேவேளை அவர் எமக்களித்த தொடர்ச்சியான ஆதரவிற்காக சனாதிபதி மைத்திரபால சிறிசேன அவர்களுக்கு PEC பெரிதும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி அறிவித்த தொலைநோக்கை விளக்குவதற்கு PEC முயன்று பாடுபட்டுள்ளது. அத்தொலைநோக்கில், 2030 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஒரு செழிப்புமிக்க, போட்டித்தன்மைமிக்க மற்றும் முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தோடும், ஒரு செழிப்புறும் பசுமை சூழலோடும், ஓர் அரவணைக்கும், இணக்கமிகு, சமாதானமிக்க மற்றும் நீதியான சமூகத்தோடும் இலங்கை ஒரு பேண்தகு, உயர்நடுத்தர வருமானம் ஈட்டும் இந்து சமுத்திர முக்கிய மையமாக மாறும்.

எமது பணியானது, 2015 செப்டெம்பர் மாதம் நியுயோர்க் நகரில் ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அங்கீகரித்த ஐ.நா.பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் (SDC) மற்றும் 2030 நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றுக்கான தேசிய பங்களிப்பின் பாகமாகும். நாமறிந்த வரை, தேசிய பேண்தகு அபிவிருத்தித் தொடர்பாக அத்தகைய ஒரு விரிவான மூலோபாய திட்டத்தை தயாரிப்பதில் முதன்முதலில் ஈடுபட்ட நாடுகளுள் இலங்கை ஒன்றாகும்.

ஒவ்வொருவரும் தத்தமது துறைகளில் வலிமையான கருத்துக்களை கொண்டுள்ள இலங்கையின் மிகச்சிறந்த விஞ்ஞானிகள் மற்றும் அறிஞர்கள் கொண்ட குழுவொன்றை முகாமைத்துவம் செய்வது எனக்கு சவால்மிக்கதொரு பணியாகவிருந்தது. இருப்பினும், PEC யின் தன்னலமற்ற அர்ப்பணிப்பின் காரணாக இச்சிரமமான பணியை எம்மால் நிறைவு செய்யக் கூடியதாகவிருந்தது. இப்பணி தேசிய நலனைக் கருத்திற் கொண்டு கொடுப்பனவின்றி மேற்கொள்ளப்பட்டு, PEC உறுப்பினர்களின் கடும் வேலைப்பளு இருந்தும் உரிய நேரத்தில் நிறைவேற்றப்பட்டது. விடயப் பொருளின் சிக்கல்களையும் காலத்திற்குக் காலம் எழுந்த கருத்து வேறுபாடுகளையும் சமாளிக்குமுகமாக ஒரு சகாக்கள் உணர்வினை பேணி, ஓர் ஒற்றுமையான கலப்பு ஆவணமொன்றை தயாரிப்பதற்கு நாம் ஒரு குழுவாக இருந்து பணியாற்றினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது எழுதும் அணியிலிருந்த PEC அல்லாத உறுப்பினர்கள், இப் பணிக்கு அமர்த்தப்பட்ட சனாதிபதி செயலக ஆளணியினர், அபிவிருத்திக்கான முனசிங்க நிறுவனத்தின் (MIND) ஆளணியினர் ஆகியோரின் சிறப்பான பங்களிப்புகளையும் நான் பாராட்டுகின்றேன். பங்களிப்புச் செய்த அனைவரதும் பெயர்கள் தெளிவாக இவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது ( பின்னிணைப்பு அ)

எமது அறிக்கை ஒரு மூலோபாய ஆவணமாகும். இலங்கையின் தற்போதைய நிலைமையையும் அந்தஸ்த்தையும் பேண்தகு அபிவிருத்தி தொடர்பான முக்கிய பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புகளையும், எதிர்கால முன்னுரிமைகள் மற்றும் இலக்குகளையும், 2030 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலட்சிய இலக்குகளை எய்துவதற்கான தெரிவுகளையும் அது விளக்குகிறது. சனாதிபதி அவர்களுக்கு அறிவிக்குமுகமாகவும் மக்களுக்கு வலுவூட்டும் முகமாகவும் அரசாங்கத்திற்கும், சிவில் சமூகத்திற்கும் மற்றும் வியாபாரங்களுக்கும் வழிகாட்டல் வழங்குவதற்கும் நாம் இம் மூலோபாய தேசிய பேண்தகு பாதையை எளிய மற்றும் தெளிவான மொழிநடையில் விபரிக்கின்றோம். தேசிய கருத்தொருமைப்பாட்டை கட்டியெழுப்புவதும் பின்தொடர் நடவடிக்கைகளை நோக்கி விரைவாக நகர்வதுமே இதன் இறுதி நோக்கமாகும். இவ்வறிக்கையின் முக்கிய கண்டறிதல்கள் அடிப்படையிலேயே உறுதியானவையாகுமென நாம் நம்புகின்றோம். 2030 ஆம் ஆண்டுவரை அனைத்து அரசாங்கங்களுக்கும் அது மூலோபாய வழிகாட்டலைத் தொடர்ந்து வழங்குமென்பது எமது நம்பிக்கையாகும்.

பொருளாதார சமூக மற்றும் சூழல் அம்சங்கள் எனும் பேண்தகு அபிவிருத்தி முக்கோணத்தை ஒன்றுக்கொன்று இசைவாக்கம் செய்ய இம்முக்கிய வரைச்சட்டகம் முயல்கின்றது. “மரபு வழி இலங்கை 2018” லிருந்து “பேண்தகு இலங்கை 2030” விற்கான தேசிய மாற்றத்திற்கு வசதியேற்படுத்தும் **சம அரவணைப்பு பசுமை வளர்ச்சி (BIGG)** பாதையை இவ்வறிக்கை இனங்காண்கிறது. BIGG பாதை 2020, 2025 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளில் அடையப்பெறவுள்ள இலக்குகளை இனங்காணும் மூன்று நிழற்படங்களினால் விளக்கப்படுகிறது. இத்தொலைநோக்கை எய்துவதற்கு நாம் எமது விழுமியங்களையும், மனப்பாங்குகளையும், நிறுவனங்களையும், நடத்தைகளையும், நடைமுறைகளையும், முறைமைகளையும், கருவிகளையும், தொழில்நுட்பங்களையும், கருத்திட்டங்களையும், கொள்கைகளையும் மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

BIGG நடைமுறை இலங்கையின் பாரம்பரிய **நடுவழியைப்** பின்பற்றுகிறது. சனநாயக மற்றும் பன்மைத்துவ நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டதும், எமது அறவிழுமியங்கள், மரபுரிமை மற்றும் சூழல் ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடியதும், சுதந்திரம், நீதி, சமவாய்ப்பு மற்றும் மனிதஉரிமைகள் ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பதன்மீது கட்டியெழுப்பப்படுவதுமான ஒரு மக்கள்-மைய மற்றும் திறந்த சமூகப் பொருளாதார முறைமையை நோக்கி நாம் செயல்படுகிறோம். எமது வளமிக்க கடந்த காலத்தின் பெருமை மிகு அம்சங்களினால் உந்தப்பட்டு முக்கிய பங்கீட்டுப்பாட்டாளர் குழுக்கள் அனைத்தும் (அரசாங்கம், தனியார்துறை, மற்றும் சிவில் சமூகம்) இவ்வரைச்சட்டகத்தினுள் பயனுறு வகையில் ஒத்துழைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பகுப்பாய்வானது முதலில் பேண்தகு அபிவிருத்தியின் மூன்று பிரதான அம்சங்கள் (அல்லது கொத்தணிகள்) உடன் ஒருங்கிணைக்கப்பட்டு இசைவாக்கப்பட்டுள்ளது : பொருளாதார சமூக மற்றும் சூழல். முக்கிய தேசிய பிரச்சினைகள் விவரிக்கப்பட்டு அதன் பின்னர் நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் இனங்காணப்பட்டுள்ளன. இப்பகுப்பாய்வின் இரண்டாம் கட்டம் (விவசாயம், வலு, நீர், சுகாதாரம், கல்வி ஆகியன போன்ற) விசேட துறைகளை ஆராய்கின்றது. ஒவ்வொரு துறையிலுமான முக்கிய பிரச்சினைகள் இம்மூன்று முக்கிய கொத்தணிகளோடு இணைக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, வலுப் பாவனை பொருளாதார செழிப்பிற்கான ஒரு பிரதான தூண்டியாகும் என்பதோடு சமூக நலச்செழிப்பிற்கு இன்றியமையாததுமாகும். எனினும் வலுப் பாவனை சூழல் கேடுகளையும் ஏற்படுத்துகின்றது. மூன்றாவது கட்டத்தில், ஒன்றோடொன்று ஊடறுக்கும் தொனிப்பொருள்கள் (வறுமையும் ஏற்றத்தாழ்வும், நல்லிணக்கமும் தேசிய ஒருமைப்பாடும், பால் நிலை ஆகியன போன்றவை) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை இம் மூன்று கொத்தணிகள் மற்றும் துறைகளிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இறுதியாக, ஒவ்வொரு கொத்தணிக்கும், துறைக்கும் மற்றும் ஊடறுக்கும் தொனிப்பொருளுக்கும் முக்கிய செயற்பாட்டுப் பரிந்துரைகள் விளக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர செயற்பாடுகள் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து நடுத்தரக்காலத்திற்கான (2025) மற்றும் நீண்ட காலத்திற்கான (2030) கொள்கைகளும் நடவடிக்கைகளும் விளக்கப்பட்டுள்ளன.

அடிப்படைச் சேவைகளை வழங்குவதில் குறைந்தபட்ச நியமங்களை பூர்த்தி செய்து அனைவருக்கும், அதிலும் குறிப்பாக வறியவர்களுக்கும், வசதி வாய்ப்பற்றவர்களுக்கும் ஒரு கௌரவமான வாழ்க்கைத் தரத்தை வழங்குவதன் மீதுதான் எமது முக்கிய கவனம் குவிந்துள்ளது. இது, "எவரையும் விட்டுவிடாதிருப்பதற்கு" நோக்கம் கொண்டுள்ள SDG மற்றும் ஐ.நா. 2030 நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் உட்பொருளுக்கு அமைவானதாகவுள்ளது. அவ் அடிப்படை இலக்குகளுக்கப்பால், இலங்கை பேண்தகு அபிவிருத்தியின் ஒவ்வொரு துறையிலும் மேலும் முன்னேற்றகரமான தரத்தை அடைவதற்கு வேணவா கொள்வதற்கு இலங்கைக்கு உதவக் கூடிய மிகப் பிந்திய அறிவு, முறைமைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிலான ஒரு தொலைநோக்கிற்கும் நாங்கள் உறுதுணை புரிகின்றோம்.

எமது ஆணையினால் விதிக்கப்பட்ட ஒரு சில கட்டுப்பாடுகளையும் அத்துடன் கால மற்றும் வள மட்டுப்பாடுகளையும் இவ் அறிக்கை பிரதிபலிக்கின்றது. எனவே, இவ் அறிக்கையை வலுப்படுத்தவதற்கும் 2030 பேண்தகு தொலைநோக்கை எய்துவதை நோக்கிய இலங்கையின் முன்னோக்கிய நகர்விற்கு உறுதுணை புரிவதற்கு தேசிய கருத்தொருமைப்பாட்டை மேலும் கட்டியெழுப்புவதற்குமான கருத்துரைகளை PEC வரவேற்கின்றது. இலங்கை பேண்தகு அபிவிருத்தியில் ஓர் உலக முன்னணி நாடாக மாறுவதோடு, எழக்கூடிய எந்த பின்தொடர் திட்டங்களுக்கும் உதவக் கூடிய தயார் நிலையில் இருக்க முடியும் என்று நாம் உணர்கின்றோம்.

பேராசிரியர் மொஹான் முனசிங்க

தலைவர், சனாதிபதி வல்லுநர் குழு

ஜூலை 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# E. நிறைவேற்றுச் சாராம்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2030 அளவில் இலங்கை ஒரு நிலைபேறான, மேல் நடுத்தர வருமானங்கொண்ட, செழுமையான, போட்டித்தகவுள்ள, முன்னேறிய, பொருளாதாரத்துடன் கூடிய, இந்து சமுத்திர, செயல்மைய நாடாகவும், பசுமையான செழித்துவளரும் சூழலைக்கொண்ட ஒரு தேசமாகவும். அனைவரையும் உள்ளடக்கும், சௌஜன்யமிக்க, சமாதானமான, நீதியான ஒரு சமூகத்தைக்கொண்ட நாடாகவும் பரிணமிக்க எதிர்பார்க்கின்றது. சமனிலையான, அனைவரையும் தழுவும், பசுமை வளர்ச்சி அடிப்படையிலான ஒரு நடுநிலைப் பாதையை நாம் பின்பற்றுவோம்.

EC

# EC. அறிமுகமும், கொத்தணிகளும் (பொருளாதாரம், சூழல், சமூகம்)

## EC1. அறிமுகமும், பொதுப்பார்வையும்[1]

2015 இல் இலங்கை உள்ளிட்ட ஐ.நா.அங்கத்துவ அரசுகள் 17 நிலைபேறான அபிவிருத்திக் குறியிலக்குகளையும் (SDG), 2030 நிகழ்ச்சிநிரலையும் பூரணமாக அங்கீகரித்தன. இந்தச் சட்டகத்தினுள், சகல நாடுகளும் 2030 க்கான தமது இலட்சியக்காட்சியை எடுத்துரைத்து, SDG குறித்த முன்னேற்றத்தைக் காண்பிக்கும் வருடாந்தத் தேசிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் 20130 க்கான தேசிய இலட்சியக்காட்சி 2017 ஜனவரி 2 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதி நிபுணர் குழுவுக்கு (PEC) அறிக்கையைத் தயாரிக்கும் பணிப்பாணையை வழங்கியபோது தெரிவித்ததுபோன்று அந்த இலட்சியக்காட்சியை உரைசெய்து, உயிர்கொடுக்கும் வகையிலான ஒரு பேருபாய ஆவணமாகும். இந்த இலட்சியக் காட்சியில் 2030 அளவில் இலங்கை ஒரு நிலைபேறான, மேல் நடுத்தர வருமான இந்து சமுத்திர நாடாகவும், பொருளாதாரரீதியில் செழிப்பான செயல்மையமாகவும், போட்டித்தகவுள்ள, முன்னேறிய தேசமாகவும், பசுமையான, செழிப்பான சூழலைக்கொண்ட, சமூகரீதியில் எவரையும் ஓரங்கட்டாத, ஒத்திசைவு, சமாதானம் மற்றும் நீதி கோலோச்சும் நாடாகவும் மிளிரும். ஜனாதிபதியின் இலட்சியக்காட்சியை மேலும் விரிவுபடுத்தும்வகையில் காட்சியை மேலும் விரிவுபடுத்துகையில், இந்த அறிக்கை இடையில் 2010 மற்றும் 2015 இல் நிலைபேற்றுக் கண்ணோட்டங்களை உள்ளடக்கும்வகையில், 2030 அளவில் இத்தகைய நிலைபேறான ஒரு எதிர்காலத்தை ஈட்டிக்கொள்வதற்கான ஒரு நடைமுறைப்பாதையை விபரிக்கின்றது. நிலைபேற்று அபிவிருத்தித் தலைப்புகளின் ஒரு வீச்சுடன் பூரணமாகப் பரிச்சயமுற்ற PEC அணி சகல இயைபுள்ள நலன் பிரதிநிதிகளுடனும் முறைமையான கலந்தாலோசனைகளை நடாத்தி, 2030 இலங்கைக்கான இலட்சியக் காட்சியை நோக்கிய பரிணமிக்கும் பாதைக்குப் பரந்த அளவில் நாம் சொந்தம் கொண்டாடுவதை உறுதிப்படுத்துகின்றது.

PEC அறிக்கை இலங்கையின் தற்போதைய நாட்டு இலட்சண விபரிப்புகள், அந்தஸ்து, முக்கியமான விவகாரங்கள், நிலைபேறான அபிவிருத்தி குறித்த வாய்ப்புகள் (SD), எதிர்கால முன்னுரிமைகளும், இலக்குகளும் மற்றும் 2030 அளவில் இந்தப் பேரார்வக்

---

1 எழுதுநர் அணி

அறிமுகமும், அனைத்தையும் தழுவும் ஒன்றிணைப்பும் - மொஹான் முனசிங்க

பொருளாதாரம் - சமன் கெலேகம மற்றும் துஷ்னி வீரக்கூன்
சூழல் - ஹேமந்தி ரணசிங்க மற்றும் டப்.எல்.சுமதிபால
சமூக - சிறி ஹெட்டிகே மற்றும் சாவித்திரி குணசேகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியிலக்கை ஈட்டிக்கொள்வதற்கான புதிய முன்முயற்சிகள் மற்றும் விருப்புத்தெரிவுகளை எடுத்துரைக்கின்றது. நாம் ஜனாதிபதிக்குத் தகவலளிப்பதற்கும், மக்களுக்கு அதிகார வலுவளிப்பதற்கும், அரசாங்கத்துக்கும், சிவில் சமூகத்துக்கும், வியாபாரத்தொழில் சமூகத்துக்கும் வழிகாட்டல் வழங்குவதற்கும் இந்தப் பேருபாய, தேசிய நிலைபேற்றுப் பாதையை எளிமையான, தெளிவான மொழியில் எடுத்துரைக்கின்றோம்.

உள்ளமைச் சட்டகம் SD முக்கோணத்தில் பொருளாதார, சூழல் மற்றும் சமூகப் பரிமாணங்களை இணக்குவிக்க முயலுகின்றது. எமது நிலைபேறான அபிவிருத்தி இலட்சியக் காட்சியை ஈட்டிக்கொள்வதற்கான நடைமுறைப்பாதை ஒரு சமனிலையான, அனைவரையும் உள்ளடக்கும், **பசுமை வளர்ச்சிப் பாதையைப் (BIGG)** பின்பற்றுகின்றது. இது 2030 அளவில் இலங்கை உலகிலேயே நிலைபேற்றுத்தன்மைகுறித்த ஒரு முன்னணி நாடாகப் பரிணமிக்க உதவும்.

**BIGG** பாதை இலங்கையின் மரபாகிய நடுநிலைப் பாதையைப் பின்பற்றுவதாகும். நாம் ஜனநாயக மற்றும் பன்மைத்துவ நிறுவனங்களை அடிப்படையாகக்கொண்ட, எமது ஒழுக்கநெறி விழுமியங்கள், மரபுரிமைகள் மற்றும் சூழலைப் பாதுகாக்கக்கூடிய மற்றும் சுதந்திரம், நீதி, சமமான வாய்ப்புகள் மற்றும் மனிதஉரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய, நாட்டின் செழுமைமிக்க கடந்த காலத்தின் கீர்த்திமிக்க விடயங்களால் உணர்வூட்டப்படும், ஒரு மக்கள் திசைமார்க்கங்கொண்ட திறந்த, சமூக-பொருளாதார முறைமையை நோக்கிப் பணியாற்றுகின்றோம். இந்தச் சட்டகத்தினுள் சமனிலையான, ஒத்துழைப்புமிக்க, பயனுறுதியுள்ள பாத்திரங்களை வகிப்பதற்கு மூன்று பிரதான குழுக்களும் (அரசாங்கம், தனியார்துறை மற்றும் சிவில் சமூகம்) போதிய அளவிலான ஒழுக்கசீலங்களைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இந்த அறிக்கை எமது பணிப்பாணை, காலம் மற்றும் மூலவள வரைவெல்லைகளால் சுமத்தப்படும் சில மட்டுப்பாடுகளைப் பிரதிபலிக்கின்றது. முதலாவதாக, இந்த அறிக்கை அபிவிருத்தித் திட்டமிடல் பணியை ஏற்கெனவே ஆற்றும் அரசாங்கத்தின் ஏனைய கிளைகளின் செயற்பாட்டைப் பிரதிசெய்யும் தேசிய அபிவிருத்தித் திட்டமல்ல. அதற்குப்பதிலாக, நிலைமாற்றமில்லாத, அனைத்துமடங்கும், நீண்டகால எண்ணக்கருச் சட்டகத்தினுள் வைத்தமைக்கப்படும் தற்போதுள்ள தேசிய மற்றும் துறைசார் மற்றும் ஏனைய திட்டங்களையும், தரவுகளையும் பயன்படுத்துகின்றோம். இரண்டாவதாக, விஸ்தாரமான பேரியல்புக் காட்சிநிலைப் பகுப்பாய்வுகளின்றி, ஓர் எளிமையான தளக்கோட்டு முன்மதிப்பீட்டைப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறாக, எமது தள விடயம் சராசரியாக, 5% GNP வளர்ச்சிவீதத்தையும், 2030 வரையிலான 1% ஜனத்தொகை வளர்ச்சியையும் அனுமானிக்கின்றது. எமது பெறுபேறுகள் இத்தளக்கோட்டைச் சுற்றியமையும் ஒரு வீச்சான விழுமியங்கள் சம்பந்தமாக மிகவும் காத்திரமானவையாக அமைகின்றன. (உதாரணம் - GNP வேறுபாடு - +/- 1%). அத்தோடு, துறைசார் மட்டத்தில் சில முக்கியமான காட்சிநிலைகள் இடர்வரவு முகாமைத்துவத்துக்குப் பேருபாய வழிகாட்டலை வழங்கும்வகையில் ஆய்வுசெய்யப்படுகின்றன. (உதாரணம் - விவசாயத்தைப் பாதிக்கும் மிகமோசமான நிலை அழிவுகள்) மூன்றாவதாக, நடைமுறையாக்கப்பணி குறித்துரைப்பாக எமது பொறுப்பாக இல்லாவிடினும், கடந்தகால உத்திகள் மற்றும் கொள்கைகள் நிறைவேற்றத்தில் வெற்றியின்மை இந்த முக்கிய விடயத்தில் சில கருத்துக்களை முன்வைக்கும் கடப்பாட்டை ஏற்படுத்துகின்றது. அறிக்கை பின்வரும் முறையில் கட்டமைப்புச் செய்யப்பட்டுள்ளது. அது பிரிவு E யுடன் ஆரம்பிக்கின்றது. இது நிறைவேற்றுச் சாராம்சமாகும். இதன் பின்னராக, பிரிவு 1 இடம்பெறுகின்றது. இதில் நாம் நிலைபேறான அபிவிருத்தியின் அடிப்படை அம்சங்களை விளக்குகின்றோம். அடுத்ததாக, நாம் இதை மூன்று பரந்த வகைப்பிரிவுகளாகப் பிரித்து இலங்கைச் சூழமைவில் இச்சிக்கலான தலைப்பு எவ்வாறு வியாக்கியானம் செய்யப்படுகின்றது என்பதை விளக்குகின்றோம்: 1. பொருளாதார, சமூக மற்றும் சூழல் கொத்தணிகள் (அல்லது பரிமாறல்கள்); 2. துறைகள், மற்றும் 3. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள், பரிமாணங்கள்,



2-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் மற்றும் தொனிப்பொருட்களிடையிலான ஒன்றிணைப்புச் செயல்முறையும் விபரிக்கப்படுகின்றது. அதன்பின்னர், பிரிவு C நிலைபேறான அபிவிருத்தியின் மூன்று பரந்த பரிமாணங்களைப் (கொத்தணிகளை) பிரதிநிதித்துவம் செய்யும் கண்ணோட்டத்தை வழங்குகின்றது. பிரிவு S துறைசார் பகுப்பாய்வுகளை எடுத்துரைப்பதோடு, பிரிவு T ஊடறுக்கும் தொனிப்பொருட்களை உறவிணைப்புச் செய்கின்றது. முறையே ஒவ்வொரு கொத்தணியையும், துறையையும், தொனிப்பொருளையும் உள்ளடக்கும் உப-பிரிவுகள் தற்போதைய நிலை, பிரதான விவகாரங்கள், மற்றும் சவால்கள், சாத்தியவளப் பரிகாரங்களும், அனுகூலங்களும் மற்றும் எழக்கூடிய எதிர்கால நிலை என்பவற்றை விபரிக்கின்றன. பிரிவு R இல் முக்கியமான விதப்புரைகளையும், பெறுபேறுகளின் ஒரு தொகுப்பையும் காணலாம்.

## EC2. பொருளாதாரம்

### 2.1. சாராம்சம்

இலங்கையில் பேரியல்புப் பொருளாதாரம் குறித்த திடீர் மாற்றங்களும், ஸ்திரநிலையின்மையும் உயர்ந்த அளவில் காணப்படுகின்றன. இவை கட்டமைப்புச் சமனிலையின்மைகளால் ஏற்படுவதோடு, மீண்டுவரும் அரசிறை மற்றும் வெளியக நடைமுறைக்கணக்கில் பற்றாக்குறைகள் என்பவற்றால் பிரத்தியட்சமடைகின்றன. இதன்விளைவாக, இலங்கை உயர்ந்த மட்டங்களிலான கடன், வெளிநாட்டு மூலதனம் உட்பிரவகித்தலில் பெருமளவுக்குத் தங்கிநிற்றல், வீழ்ச்சியடைந்து வரும் ஏற்றுமதிகள், வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பிரவாகங்கள் (FDI), நிலையான நாணயப் பெறுமதி வீழ்ச்சி மற்றும் உயர்வான வட்டிவீதங்கள் என்பவற்றால் பாதிப்புறுகின்றது. மனிதவள அபிவிருத்தியில் இலங்கை முன்னணியில் வெற்றியீட்டியபோதிலும், பிராந்தியங்களுக்கும், சமூகப் - பொருளாதாரக் குழுக்களுக்குமிடையில் வறுமை விகிதாசாரங்களில் கணிசமான வேறுபாடுகள் உள்ளன. வருமானத்தில் சமத்துவநிலையற்ற தன்மை தொடர்ச்சியாக நிலவுவது மேலுமொரு கரிசனை விடயமாகும். அத்தோடு, இலங்கை பரந்த வீச்சான விடயப்பரப்புகளில் பொருளாதார - வினைத்திறமையின்மைகளாலும் பாதிப்புறுகின்றது. உயர்வான, மோசமடையும் மட்டங்களிலான ஊழல் வினைத்திறனையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு இடையூறாகவுள்ளது. இந்த உள்நாட்டுக் கரிசனை விடயங்களுடன் உலகரீதியான அபிவிருத்திகளும் சேர்ந்துகொள்ளுகின்றன. இவை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற முக்கிய ஏற்றுமதிச் சந்தைகளில் குறைவான நுகர்வோர் கேள்வி, சர்வதேச ரீதியில் எண்ணெய் விலைகளில் அதிகரிப்பு, தொழிலாளர் அனுப்பிவைக்கும் பணச் சம்பாத்தியங்களுக்கு அபாயமேற்படுத்தும் மத்திய கிழக்கு குழப்பநிலைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

வெளியக அதிர்ச்சிகளுக்குப் பலியாவதை அதிகுறைவாக்கி, பேரியல்புப் பொருளாதார ஸ்திரநிலையைப் பேணுவதற்கு உள்நிலை மற்றும் வெளியகப் பொருளாதார ஸ்திரநிலையை ஈட்டிக்கொள்வது இன்றியமையாததாகும். உள்நிலை ஸ்திரமயப்படுத்தல் அரசிறை வருமான முயற்சிகளைத் திரட்டியமைப்பதன் மூலமும், மதிநிறைந்த நாணய மற்றும் பரிவர்த்தனைக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் சாதிக்கப்படலாம். வெளியக ஸ்திரநிலைப்படுத்தல்களுக்கு வழங்கல் பக்கத்தின் நெகிழ்ச்சியற்ற தன்மைகளுக்குத் தீர்வுகாணும் மறுசீரமைப்புகள் மற்றும் இலங்கையின் ஏற்றுமதிப் போட்டித்தகவில் அதிகரிப்பு என்பவை அவசியமாகும். வர்த்தகப் பங்காளர்களுடன் இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு ஈடுபாடுகளில் ஒரு பேருபாய அணுகுமுறையும், குழப்பமான உலகப் பொருளாதார அபிவிருத்திகள் மத்தியில் வழிகண்டு செல்வதற்காக ஏற்றுமதி வளர்ச்சி இயக்க உந்துவிசை, வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற்றுக்கொள்ளுதல், மற்றும் அணுகிப் பெற்றுக் கொள்வதும் அவசியமாகும். இலங்கையில் வறிய மக்களில் பெரும்பாலானோர் விவசாயத்தில் தங்கிநிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறங்களில் வாழுவதால், புதிய தொழில்நுட்பம் மற்றும் விவசாய நுட்பங்கள், மேம்பட்ட விரிவாக்கச் சேவைகள் மற்றும் விவசாய உற்பத்தி அடிப்படையிலான கைத்தொழில்களைத் தாபித்தல் போன்ற உற்பத்தித்திறன் மேம்பாடுகளினூடாக நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். ஊழலை அதிகுறைவாக்குவதற்கு முறையான சட்டவாக்கமும், அமுலாக்கமும் முக்கியமானவையாகும்.

அரசாங்கம் வியாபாரத்தொழில் குறித்த உலகரீதியான தரவரிசைப்படுத்தலில் தற்போதுள்ள 110 ஆவது இடத்திலிருந்து, 70 க்குக் கீழ்நிலை இடத்தை ஈட்டிக்கொள்ளக்கூடிய வகையில் தற்போதைய சவால்களுக்குத் தீர்வுகாணும் வகையிலான அர்ப்பணிப்புணர்வைக் காண்பித்தல், இதே காலப்பகுதியில் பொதுக்கடனை தற்போதைய 79.3% GDP யிலிருந்து 70% GDP ஆகக் குறைத்தால், பொருளாதார முதலீடுகளை அதிகரிக்கும் வகையிலும், ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரிக்கும் வகையிலும், வளர்ச்சியுற்று தற்போதுள்ள 4.5% த்திலிருந்து 2020 அளவில் 7% பொருளாதார வளர்ச்சி வீதத்தை ஈட்டிக்கொள்வது சாத்தியமாகும். இது அடுத்த படிகளை நடுத்தர வருமான அந்தஸ்திலிருந்து, உயர் நடுத்தர வருமான அந்தஸ்துக்குச் செல்வதற்கும், அறிவு அடிப்படையிலான, உயர் போட்டித்தகவுள்ள, சமூக-சந்தைப் பொருளாதாரத்தின்மீது கட்டியெழுப்பப்படும் இந்து சமுத்திரப் பணிமையமாவதற்கும் உதவிபுரியும்.

## 2.2. முக்கிய செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

அ. உள்நிலை ஸ்திரத்தன்மையை ஈட்டிக்கொள்ளும் வகையில் அரசிறை வருமானத் திரட்டியமைத்தல் முயற்சிகளை வலுப்படுத்துவதும், மதிநிறைந்த நாணய மற்றும் பரிவர்த்தனைவீதக் கொள்கைகளைப் பின்பற்றுதலும்.

ஆ. ஏற்றுமதிப் போட்டித்தகவை மேம்படுத்தும் வகையிலும், வர்த்தக உடன்படிக்கைகள் குறித்த பேருபாய அணுகுமுறை மூலமும், ஏற்றுமதிச் சம்பாத்தியங்களையும், வெளிநாட்டு நேரடி முதலீட்டுப்பிரவாகங்களையும் அதிகரித்தல். இது வெளியக ஸ்திரநிலையை ஈட்டிக்கொள்ள உதவும்.

இ. கிராமியத்துறையில் தொடர்ச்சியாக நிலவும் வறுமைக்குத் தீர்வுகாணும் வகையில், உற்பத்தித்திறன் மேம்பாடுகளினூடாக, நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்.

ஈ. வறிய குடும்பங்களுக்கான சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்களைச் சரியாக இலக்குவைப்பதை உறுதிசெய்வதனூடாக விரயச் செலவுகளைப் பகுத்தறிவுடன் குறைத்தல்.

உ. சமத்துவமின்மைக் கரிசனைகளுக்குத் தீர்வுகண்டு, வளர்ச்சியில் அனைவரையும் உள்ளடக்கும்வகையில், விசேடமாகப் பெண்களுக்கும், இளைஞர்களுக்கு அதிகரித்த வேலைவாய்ப்புகளை உருவாக்குதல். வளர்ந்துவரும் எண்ணிக்கையிலான சிரேஷ்ட பிரஜைகள் நிலைபேறான அபிவிருத்திக்குத் தமது பங்களிப்பைச்செய்யும் வகையிலும், அவர்களின் ஓய்வுகாலச் சமூகப்பாதுகாப்பு, காப்பேற்பாடுகளை மேம்படுத்தும் வகையிலும் அவர்களுக்கு மேலும் சிறப்பான வாய்ப்புகளை வழங்குதல்.

ஊ. பாரிய நட்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை (SOE) மீளாய்வு மீள்கட்டமைப்பு மற்றும் / அல்லது தனியார்மயப்படுத்தலுக்காகத் தொடரும் முயற்சிகளை முன்கொண்டுசெல்லுதல்.

எ. குறித்துரைப்பாக, ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துதல், வரி செலுத்துதல், ஆதனங்களைப் பதிவுசெய்தல், மற்றும் நாணயக்கடன்களைப் பெற்றுக்கொள்ளுதல் மூலம் பொருளாதார வினைத்திறனை அதிகரித்து, வியாபாரத்தொழில் காட்டிகளை மேம்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EC3. சூழல்

### 3.1. சாராம்சம்

நடவடிக்கை அவசியமான முக்கியமான சூழல் விவகாரங்கள் விரயப்பொருள் அகற்றுதல், சூழல், சௌக்கியம், காடழிப்பு, காடு தரங்கெடுதல், நீர் மற்றும் வளி மாசடைதல், கரையோர மற்றும் கடல்சார் வாழிடவியல் முறைமைகள் தரங்கெடுதல், காலநிலை மாற்றம், மற்றும் ஓசோன் படை நலிவடைதல் என்பவையாகும். நிரந்தரமான தீர்வுகளைக்காண்பதற்கு இவை பொருளாதாரம் மற்றும் சமூகத்துடன் சேர்த்து நோக்கப்படுதல் வேண்டும். சமனிலையான, அனைவரையும் உள்ளடக்கும் பசுமை வளர்ச்சியே (BIGG) அனைத்துமடங்கும் நிலைபேறான தீர்வாக அமையும். பசுமை வளர்ச்சியென்பது சூழல் இடர்வரவுகளையும், வாழிடவியல் பற்றாக்குறைகளையும் குறைப்பதாகும். பசுமை வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்குவதையும், சூழல் நிலைபேற்றுத்தன்மை, அதிகரித்த சமத்துவமின்மை மற்றும் வறுமை மூலம் ஈட்டிக்கொள்ளப்படாதிருப்பதை உறுதிசெய்வதற்காக குறித்துரைப்பான கொள்கைகளும், பிரயத்தனங்களும் அவசியமாகும்.

நாட்டிலுள்ள 82% ஆன காணிகள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ளன. 17.7% ஆனவை தனியாருக்குச் சொந்தமானவை. எவ்வாறாயினும், நிலமற்ற விவசாயிகள் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறுவதால், காடுகள் இப்பொழுது 29% ஆகக் குறைந்துள்ளன. காணிகளில் மூன்றிலொரு பங்கு மண்ணரிப்புக்குள்ளாகி, பல மாவட்டங்களில் மண்ணரிப்புண்ட காணி வீதாசாரம் கணிசமானதாகவுள்ளது. மிகவும் மோசமான மண்ணரிப்பு மலைநாட்டிலுள்ள மிகவும் சாய்வான நிலங்களிலேயே உள்ளது. மண்வளம் விவசாய நிலங்களில் உற்பத்தித்திறனைப் பாதிக்கின்றது. இது அனேகமாக வரண்ட வலயத்திலுள்ள 1.2 மில்லியன் ஹெக்டயார் நிலத்தை உற்பத்தித் திறனற்றதாகவும், மட்டுப்படுத்தப்பட்ட பாவனைக்குரியதாகவும் ஆக்கியுள்ளது. காடுகள் அழிப்பு அத்துமீறிய குடியேற்றத்தினாலும், தேயிலை மற்றும் வயல் பயிர்ச்செய்கையாலும், அகநிலையமைவு அபிவிருத்திக்காக நிலம் பயன்படுவதாலும், வீடுகள், கைத்தொழில்கள் மற்றும் அகநிலையமைவு நோக்கங்களுக்கு வெட்டுமரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வியினாலுமாகும். நிறுவன, சட்டவாக்க மற்றும் பங்கேற்பு அணுகுமுறையுடன் கூடிய ஒரு முழுமையான தீர்வே விதந்துரைக்கப்படுகின்றது. தற்போதுள்ள சட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டு, இந்த விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் வகையில் சகல நலன்பிரதிநிதிகளினதும் பங்கேற்பு இருத்தல் வேண்டும்.

நீர் மாசுபடுதல் விரயப்பொருட்கள் கொட்டுமிடங்களிலும், விவசாயப் பிரதேசங்களிலும், ஏரிகளிலும் ஏற்படுகின்றது. பல சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முயற்சிகள் விரய நீரை முறையாகச் சுத்திகரிக்காமல் வெளிவிடுகின்றன. வெள்ளநீர் கலத்தல், விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் கைத்தொழில் கழிவுகளிலிருந்து பாரமான உலோகப் பொருட்கள் பரவுவதாலும் நாட்டின் சில பகுதிகளில் பாதுகாப்பான குடிதண்ணீர் குறைந்துவருகின்றது. நீர்நிலைகளைச் சுத்தம்செய்வது ஆகுசெலவுமிக்க விடயமென்பதால், சகல மூலவளங்களிலிருந்தும் தண்ணீர் மாசுறுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை அவசியமாகும்.

பல உள்ளூராட்சி அதிகார சபைகள் திண்மக் கழிவுப்பொருட்களைத் திறந்தவெளிகளில் கொட்டுவது மண் மற்றும் நீர் மாசுபடுதலை ஏற்படுத்துகின்றது. விரயப்பொருள் குவியல்கள் நுளம்புகள் மற்றும் ஈக்களின் இனப்பெருக்கத்துக்கு இட்டுச்செல்வதால், இவை சுகாதாரத்தின்மீதான தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றன. திண்மப்பொருள் கழிவகற்றல் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பொருத்தமான அகற்றல் நிர்ணய இடங்களைத் தேடுதல், துப்புரவானமுறையில் பள்ளக்காணிகளை நிரவுதல், 3R நடைமுறைகளைப் பிரயோகித்தல், மற்றும் விரயமேற்படுத்தும் நடைமுறைகளைத் தடுப்பதற்கான பயனுறுதிவாய்ந்த கொள்கைகள் மற்றும் சட்டவாக்கம் என்பவற்றை உள்ளடக்குவனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுபட்ட வாழிடவியல் முறைமைகள் CKDU மற்றும் டெங்கு போன்ற பணச்செலவுமிக்க, உயிர்களையும் காவுகொள்ளும் பல நோய்களுக்குக் காரணமாகின்றன. இந்த விவகாரங்களுக்கு நிலைபேறான தீர்வுகளைக்கண்டறிவதற்கு பொருளாதார, சூழல், சுகாதார மற்றும் சட்ட அம்சங்கள் உள்ளடங்கும்வகையிலான சர்வதுறைச்சீல அணுகுமுறையொன்று அவசியமாகும்.

மோசமான தரத்திலான போக்குவரவு மற்றும் பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவம் நகர்ப்புறங்களில் வளி மாசடைவதற்கு இட்டுச்செல்லுகின்றது. உண்மையில், விசேடமாக கண்டிபோன்ற மாநகரங்களில், போக்குவரத்துடன் தொடர்புள்ள வளி மாசடைதல் மிகப்பாரதுாரமான ஒரு பிரச்சினையாகும். ஏனைய நாடுகளுடன் ஒப்பீடாக இலங்கையில் தீங்கு குறைவென்றபோதிலும், புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலமைந்த மின்சக்தி உற்பத்தி நிலையங்களின் வாயு வெளியேற்றங்கள் இந்த நிலைமையை மேலும் மோசமாக்குகின்றன. பொருத்தமான போக்குவரத்துத்தீர்வுகளும், smart grids பயன்பாடும் புதுப்பித்தகு சக்தி அடிப்படையிலான மின்பிறப்பாக்கமும் இக்கரிசனை விடயங்களுக்கான பயனுறுதிமிக்க தீர்வுகளாக அமையலாம்.

### 3.2. முக்கிய செயற்பாடுகள் குறித்த விதப்புரைகள்

அ. அழிவுகளுக்கு இலகுவில் பலியாகுந்தன்மையைக் குறைக்கும் வகையிலான அவசரமான குறுங்கால, நடுத்தவணை மற்றும் நீண்டகாலச் செயற்பாடுகளை (உதாரணம் - வரட்சிகள், வெள்ளங்கள், மண்சரிவுகள்) நடைமுறைக்கிடுவதும், காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கம் பெறுதலும்.

ஆ. மோட்டார் அல்லாத போக்குவரத்து, மின்சார வாகனங்கள் மற்றும் மின்சாரம் மூலம் இயங்கும் பொதுப் போக்குவரத்து முறைமைகள் உள்ளிட்ட வகையில் நிலைபேறான போக்குவரத்து முறைமைகளை அறிமுகஞ்செய்வதனூடாக பிரதான நகரங்களில் பாரிய போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக ஏற்படும் வளி மாசடைதலைத் தடுப்பதற்கு நேரகாலத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இ. காடழிப்பைக் கட்டுப்படுத்தவும், காடுகளை அதிகரிக்கவும், மண்ணரிப்பையும், மண் நலிவடைதலையும் தடுப்பதற்கும், மற்றும் மண்வளத்தை அதிகரிப்பதற்கும், பங்கேற்பு அணுகுமுறைகளை நடைமுறைக்கிடுதல்.

ஈ. சூழல் நட்புறவான கழிவுப்பொருள் அகற்றல் வழிமுறைகளை அறிமுகஞ்செய்தல்.

உ. வாழிடவியல் முறைமைச் சேவைகளைப் பாதுகாப்பதும், வாழிடவியல் முறைமை சௌக்கியத்தை மேம்படுத்துவதும், சகல துறைகளிலும், விசேடமாக கைத்தொழில், விவசாயம் மற்றும் கழிவுப்பொருள் அகற்றலில், சட்டங்களை மேலும் சிறப்பாக அமுல்படுத்துதலும், பிரமாணம் மற்றும் விலை நிர்ணயக் கொள்கைகளூடாக நீர் மாசுறுதலைக் குறைப்பதன்மூலம் மனித சௌக்கியத்தின்மீதான பாதகமான தாக்கங்களை (CKDU மற்றும் டெங்கு போன்றவை) குறைத்தல்.

ஊ. தேசிய மின்ஆற்றல் இணைப்புக்கான புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலமைந்த மின்சாரப்பிறப்பாக்கத்துக்குப் பதிலாக நவீன புதுப்பிக்கத்தகு சக்தியைப் பயன்படுத்துவதும், வரியை அகற்றி அல்லது வரியை அதிகுறைவாக்கி கைத்தொழில் மற்றும் வாணிகப் பிரயோகங்களில் புதுப்பிக்கத்தகு சக்திப்பயன்பாட்டை ஊக்குவிப்பதும் மற்றும் புதுப்பிக்கத்தகு சக்திமூலங்களினால் செயற்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் பொறிகளுக்கும், மின்சாரக் கார்கள் போன்றவற்றுக்கும் ஆதரவு வழங்குதலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எ. விரயத்தை இல்லாமற்செய்வதற்கும், மூலவளங்களை மீளப்பெற்றுக்கொள்வதை ஊக்குவிப்பதற்கும் மூலவளங்களைப்பயன்படுத்தும் சகல தொழில்முயற்சிகளிலும் சுற்றுவட்டத்தில் செல்லும் பொருளாதாரக்கோட்பாடுகளை நடைமுறைக்கிடுதல்.

ஏ. இரசாயனப்பசளைகளதும், விவசாய இரசாயனப்பொருட்களினதும் பயன்பாட்டைக் குறைத்து, சேதனப் பசளை மற்றும் உயிரியக்கவியல் விவசாய நடைமுறைகளைப் பயன்படுத்தி, நீண்டகாலச் சுகாதாரக்கேடுகளைத் தடுத்து, மண்ணின் சாதகமான தன்மைகளை மேம்படுத்துதல்.

## EC4. சமூகம்

### 4.1. சாராம்சம்

இலங்கையின் கடந்தகால சமூகத்துறை கொள்கைகளும், கணிசமான பகிரங்கத்துறை முதலீடுகளும் நாட்டில் குறிப்பிடத்தக்க சமூக அபிவிருத்திக்கு உதவின. எவ்வாறாயினும், ஜனத்தொகைப் பெருக்கம் ஒழுங்கற்ற பொருளாதார அபிவிருத்தி மற்றும் சூழல் வளங்களின் விவகாரங்களுக்கிடையிலான சிக்கலான இடைத்தொடர்புகளை அங்கீகரிக்கவேண்டிய அதேவேளையில், சமூகத்துறை விவகாரங்கள் அவற்றின் சொந்த முக்கியத்துவம் குறித்து அங்கீகரிக்கப்பட்டு, அவற்றுக்குத் தீர்வுகாணும்வகையிலான கொள்கைகளும், பேருபாயங்களும் அபிவிருத்திசெய்யப்படுதல் வேண்டும். அடுத்த 13 வருடங்களிலான SDG சாதனைகள் பொருளாதார மற்றும் சூழல் துறைகளைப்போலவே, சமூகத்துறை முன்னேற்றத்திலும் சமமான அளவில் தங்கிநிற்கும். இதுவிடயத்தில், தேசத்தின் மனிதவளங்களின் காத்திரமான முகாமைத்துவம் தீர்மானகரமான முக்கியத்துவத்தைப்பெறுகின்றது. தொழிலாளர்சந்தையில் தீர்வுகாணப்பட வேண்டிய பாரதூரமான பிரச்சினைகள் நிலவுகின்றன. நீண்டகாலநோக்கில், உழைப்பாளரின் அதிகரித்த வெளியேற்றம் நிலைபேற்றுத்தன்மையைக் கொண்டுவராமல், பொருளாதாரத்தையும், சமூகத்தையும் சேதப்படுத்தக்கூடும். புலம்பெயர் தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் முழுத்தேசமும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளிலிருந்தும், குறிப்பாக அவர்கள் அனுப்பிவைக்கும் பணங்களிலிருந்தும், கணிசமான அனுகூலங்களைப்பெற்றுக்கொள்ளும் அதேவேளையில், அதன் எதிர்மறையான விளைவுகளையும், குறிப்பாகத் திறன்படைத்த தொழிலாளர்களின் இழப்பையும், கூலி வீக்கத்தையும் நோக்குவது முக்கியமானதாகும். இவை உயர்வான உற்பத்தி ஆகுசெலவுகளையும், உழைப்பாளர் பற்றாக்குறையையும் ஏற்படுத்துகின்றன. கல்வி, திறன் அபிவிருத்தி, ஆராய்ச்சியும், புதிது புனைதலும், வேலைவாய்ப்பு, சமூகப்பாதுகாப்பு, இலகுவில் பாதிப்புறும் குழுக்களைப்பாதுகாத்தல், வருமான விநியோகம், உணவுப்பாதுகாப்பு போன்ற விடயப்பரப்புகளில் சான்று அடிப்படையிலான கொள்கைகள் அபிவிருத்தியடைவது அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். மேலே குறிப்பிடப்பட்ட ஆட்சிமுறை தொடர்பிலான விவகாரங்கள் குறித்தும் கொள்கைகள் அபிவி ருத்திசெய்யப்படுதல்வேண்டும்.

தற்போதைய நகர்ப்புற அடிப்படையிலான சேவைத்துறை ஆதிக்கத்திலிருந்து நாட்டின் பொருளாதாரத்தைப் பல்வகைப்படுத்தல் கிராமிய மற்றும் நகர்ப்புறப்பிரதேசங்கள் இரண்டிலுமே மேலும் சமநிலையான, உற்பத்தித்திறன்மிக்க வேலைவாய்ப்பை உருவாக்க உதவும். விவசாய மூலப்பொருட்களின் அடிப்படையிலான கிராமியக் கைத்தொழில்களின் ஊக்குவிப்பு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைப் பொறுத்தவரையில் தற்போதுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும்வகையில் எடுக்கப்படக்கூடிய முக்கிய நடவடிக்கையாகும். வருமானத்தில் சமத்துவமின்மையைக் குறைப்பதற்குப் படிப்படியான வருமான வரிசெலுத்தல், தனியார் போதனைகளைக் குறைக்கும் வகையில் பொதுக் கல்விச்சேவைகளின் மேம்பாடு, தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவச்செலவுகளைக் குறைக்கும் வகையிலான பங்களிப்புச்செய்யும் சுகாதாரக் காப்புறுதித் திட்டம், நம்பிக்கையான, நியாயமான ஆய்வுகள் மூலம் ஏழைகளுக்கும், இலகுவில் பாதிப்புறக்கூடியோருக்கும் போதிய வருமான ஆதரவு, பொதுமக்கள் போக்குவரத்துச்சேவைகளை மேம்படுத்துதல் என்பவை ஏனைய பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகளாகும். தேசிய ஐக்கியத்துக்கும், சமாதானத்துக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் விடாப்பிடியான இனத்துவப்பதற்றநிலைகள், பயனுறுதியுள்ள கல்வி, மொழி மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக இல்லாமற் செய்யப்படுதல் அவசியமாகும். பாடசாலைகள் மற்றும் ஜனசமூகமட்டத்திலான நிகழ்ச்சித் திட்டங்களினூடாகச் சமூக இசைவுநெருக்கம் முன்னேற்றப்படுதல் வேண்டும்.

### 4.2. முக்கிய செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

அ. படிப்படியான வரிவிதிப்பு மற்றும் உயர்வான சமூக முதலீடுகள் என்பனவற்றினூடாக வருமான சமத்துவமின்மைகளைக் குறைப்பதை நடைமுறைக்கிடுதல். இது சகலருக்கும் ஓர் உத்தரவாதமளிக்கப்பட்ட அதிகுறைவான குடும்ப வருமானத்துக்கும், சமூகப் பாதுகாப்புக்கும் இட்டுச்செல்லும்.

ஆ. அதிகரித்த வருமானத்தையும், வேலைவாய்ப்புப்பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில், பொருத்தமான கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட இடையீடுகளினூடாக அமைய வேலைகளை நோக்கிய அதிகரிக்கும் செல்நெறியையும், விதிமுறையற்ற துறை விரிவாக்கத்தையும் முகாமைத்துவம் செய்தல்.

இ. தேசிய மட்டத்திலும், ஜனசமூக மட்டத்திலும் ஓர் அனைத்துமடங்கும், பலமட்டங்களில் இடம்பெறும் மீளிணக்க நிகழ்ச்சித்திட்டத்தை வகுத்தமைத்து நடைமுறைக்கிடுதல்.

ஈ. வருமானப்பகிர்வு மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் சம்பந்தமாக, குறிப்பாக கிராமிய - நகர்ப்புற ஏற்றத்தாழ்வுகள் குறித்த, அதிகரித்த சமூக சமத்துவமின்மை நோக்கிய செல்நெறியைத் தடுத்துநிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உ. சுகாதாரக் கவனப்பராமரிப்பு, கல்வி, வாழ்வாதாரங்கள் மற்றும் போக்குவரத்தில் காணப்படும் பகிரங்க - தனியார் மற்றும் கிராமிய - நகர்ப்பறங்களிலான இடைவெளிகளைக் குறைப்பதனூடாக மேலும் ஒப்புரவான வாழ்க்கைச்சந்தர்ப்பங்களை உருவாக்குதல்.

ஊ. பல்வேறு இலக்குவைக்கப்பட்ட சமூகசேவைகளின் தொழில்சார் தரத்தையும், முனைப்பெல்லையையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, வறியவர்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் மனநோயாளர் போன்றவர்களின் ஓரங்கட்டல் மற்றும் சலுகை மறுப்பு என்பவற்றுக்கெதிராக அவர்களுக்கு அதிகாரவலுவூட்டுதல்.

எ. அரசாங்கத்தின் கீழ்மட்ட அடுக்குகளை, விசேடமாக உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகார வலுவூட்டும் குறைநிரப்பும் துணைநிலைக் கோட்பாடுகளைப் பலப்படுத்தி, ஆட்சிமுறையிலும், அபிவிருத்தியிலும் பிரஜைகள் பங்கேற்புக்கு வசதியளித்தல்.

ஏ. சட்டமின்மை, அதிகார துஷ்பிரயோகம், ஊழல் என்பவற்றைநோக்கிய செல்நெறியைத் திசைதிருப்பி, சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்தி, தனிநபர் பாதுகாப்பை உறுதிசெய்து, சகல மட்டங்களிலுமான பிரமாணப்படுத்தல் கருமங்களை வலுப்படுத்துதல். பால்நிலை அடிப்படையிலான வன்செயல்களை நிறுத்துவதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுச் சாராம்சம்

# ES

## ES. துறைகள்

### ES1. விவசாயமும், உணவும்

### 1.1. சாராம்சம்

மழைமூலமும், நீர்ப்பாசனத்தினூடாகவும் இடம்பெறும் விவசாயம் (மீன் தவிர்ந்த) 83% ஆன உள்நாட்டு உணவு வகைகளுக்கும், 25% ஆன இலங்கையின் ஏற்றுமதிகளுக்கும் வழிசெய்கின்றது. பிரதான ஏற்றுமதிப்பயிர்கள் (தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள்) விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் அதியுயர்வான பங்களிப்பை (35%) வழங்குகின்றன. இதற்கு அடுத்தபடியாக நெல் (29%) உள்ளது. சுமார் 25-30% ஆன ஜனத்தொகையினர் தொடர்ந்தும் பெருமளவில் விவசாயத்திலேயே தங்கியுள்ளனர்.

இப்போதிலிருந்து 2020 வரையிலான குறுகிய காலப்பகுதியை வைத்துநோக்குகையில், எமது பிரமான கவனம் உணவுப்பயிர்களிலேயே செறிந்திருத்தல் வேண்டும். உணவுப்பயிர்கள் பெருமளவுக்குப் பருவகாலங்களில் தங்கிநிற்கையில், பெருந்தோட்டப்பயிர்களும், அநேகமான சிறிய ஏற்றுமதிப்பயிர்களும் வருடம் முழுவதும் கிடைக்கக்கூடியவையாகும். பருவகாலப் பயிர்களைவிட மாற்றங்களுக்குப் பிரதிவினை காண்பிப்பதற்கு வருடம் முழுவதும் கிடைக்கும் பயிர்களுக்கு மேலும் கூடுதலான, நீண்ட காலப்பகுதி அவசியமாகும். அநேகமான பெருந்தோட்ட விவசாயம் முழுவதுமே ஈரலிப்பு வலயத்திலேயே இடம்பெறுகின்றது. எவ்வாறாயினும், உள்நாட்டு உணவு விவசாயத்தில் சுமார் நான்கில் மூன்று பங்கும், நெற்பயிர் விவசாயத்தில் சுமார் 90% மும் வரண்ட வலயத்தில் இடம்பெறுவதாகும்.

மாற்றமுறும் காலநிலைப்பாங்குகள், விசேடமாக மழைவீழ்ச்சி முழு விவசாயத்துக்குமே ஆகப்பெரிய இடர்வரவாகப் பரிணமித்துள்ளது. அடுத்த பெரிய இடர்வரவு கிராமிய இளைஞர், யுவதிகள் அதிகரித்தவகையில் விவசாயத்தில் ஈடுபட மனதின்றி இருப்பதால் ஏற்படும் உழைப்பாளர் பற்றாக்குறையாகும். இந்த இரு புதிய இடர்வரவுகளும் இணைந்தவகையில், இலங்கை விவசாயத் துறையின் நிலைபேற்றுத்தன்மைக்கு பாரதூரமான சவால்களாக விளங்குகின்றன. காணிகள் சிறு துண்டுகளாகப்பிரிவடைவதும், அதுகுறித்த விவகாரங்களும், தொடரும் காணிவளம் நலிவடைதலும் நீண்டகாலப்பகுதியில் அபிவிருத்தியுறும் ஏனைய இடர்வரவுகளாகும்.

இதன்பிரகாரம், தற்போதைய உணவுற்பத்தி இலக்குகளை ஈட்டிக்கொள்ளுதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றது. இந்த அச்சுறுத்தலுக்குத் தீர்வுகாண்பதற்கு பெருமளவு நீர் அவசியப்படும் விவசாயத்திலிருந்து, குறைந்த அளவு நீர் அவசியமான / வரட்சிக்குத் தாக்குப்பிடிக்கும் பயிர்கள் மற்றும் பயிர்வகைகள் விவசாயத்தை நோக்கிய நகர்வும், இயந்திரமயமாக்கலும் அவசியமாகும். அதேவேளையில், நீண்ட மதிப்புச்சங்கிலிகளுடன் பிணைப்புற்ற மக்கள் / விவசாயிகள் கம்பனிகளை உருவாக்குவதன்மூலம் சிறிய விவசாயிகளின் அளவு மட்டுப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.2. முகிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. நவீன தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தி, பருவகால மழைவீழ்ச்சியை மேலும் சிறந்தமுறையில் முன்னறிவுப்புச்செய்யவும், பாரதூரமான காலநிலை நிகழ்வுகள் சம்பந்தமாக நேரகால எச்சரிக்கைகள் வழங்கவுமான இயலுமைகளையும், ஆற்றல்களையும் மேம்படுத்துதல். இத்தகைய நேரகால எச்சரிக்கைகளுக்கு வேகமாகப் பிரதிவினைகாட்டும் வகையிலான நிறுவன ஏற்பாடுகளை அபிவிருத்திசெய்தல்.

ஆ. வரட்சிக்குத் தாக்குப்பிடிக்கும் பயிர்களையும் குறைந்த அளவு நீர், உடலுழைப்பு மற்றும் விவசாய, இரசாயனப்பொருட்கள் அவசியப்படும் பயிர்வகைகளையும் அபிவிருத்திசெய்து, இவற்றை ஏற்றுச்செயற்படுத்துவதற்கான ஊக்குவிப்புகளை வழங்குதல்.

இ. நீரைப் பாதுகாத்தல் மற்றும் புதிய தொழில்நுட்பப் பயன்பாடு சம்பந்தமாகவும், நடுத்தவணை மற்றும் நீண்டகால நோக்கில் பெறுமதிசேர்ப்பு மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்களிலும் விவசாயிகளுக்குக் கல்வியூட்டுதல்.

ஈ. குறைந்த அளவிலான நீர் அவசியப்படும் பயிர்களை உற்பத்திசெய்து, களஞ்சியப்படுத்தி, பெறுமதிசேர்த்து, இலாபகரமாகச் சந்தைப்படுத்தக்கூடியவகையில் விவசாயிகள் அளவுகுறித்த மட்டுப்பாடுகளை வெற்றிகொள்வதற்கு அவர்களுக்கு உதவுதல். இது பயனுறுதியுள்ள நாணயக்கடன் வழங்கல், உள்ளீடுகள் வழங்கல், களஞ்சியப்படுத்தல் மற்றும் காப்புறுதி என்பனவற்றை நிலைபேறான/ வர்த்தகரீதியில் பொருத்தமான முறையில் மேற்கொள்ள உதவும்.

உ. பாரிய பெருந்தொகையினராகிய நுகர்வாளர்களுக்கு மேலும் சிறந்த போஷாக்கு மற்றும் பொருத்தமான உணவுப் பழக்கவழக்கங்களிலான மாற்றங்கள் குறித்துக் கல்வியூட்டுதல், மாப்பொருள் மற்றும் சீனியைக் குறைந்த அளவிலும், பழங்கள், மரக்கறிகளை அதிக அளவிலும் நுகர்வது விவசாயத்திற்குத் தற்போது அதிக அளவிலான நீரில் தங்கிநிற்கும் நிலையைக் குறைப்பதில் பயனுள்ளதாக அமையக்கூடும்.

## ES2. கல்வி

### 2.1. சாராம்சம்

இலங்கையில் நிலவும் கல்விகுறித்த வேறுபடும் படிநிலைகள் ஆரம்பகால பிள்ளைப்பருவக் கவனப்பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE); பொதுக்கல்வி (பாடசாலைக்கல்வி), தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி மற்றும் பயிற்சி (TVET); மற்றும் மூன்றாம்நிலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வி என்பவற்றை உள்ளடக்குவனவாகும்.

3-5 வயதான சிறுவர்கள் ECCE ஐப் பெற்றுக்கொள்ளுகின்றனர். வருமானங்குறைந்த குடும்பங்களிலிருந்து இதில் பங்கேற்கும் சிறுவர்கள் குறைவாகவிருப்பதால், இது தொடர்ந்தும் தவறவிடப்பட்ட ஒரு வாய்ப்பாகவே உள்ளது. ECCE வழங்கல் சம்பந்தமான ஒரு தேசிய கொள்கையோ, முறைமையான சேவை விநியோகம் மற்றும் தரம் உறுதிப்படுத்தல் சம்பந்தமான ஒரு பேருபாயத்திட்டமோ இல்லாமை காரணமாகவும், பகிரங்க மூலவளங்களில் குறைவான முதலீடுகள் காரணமாகவும், தனியார்துறை நிதியளிப்பு மற்றும் வழங்கலிலேயே ECCE பெரிதும் விடப்பட்டிருப்பதும் தீர்மானகரமான விவகாரங்களாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக்கல்வியைப் பொறுநுத்தவரையில், நாடு முதனிலைக் கல்விப் படிநிலையிலிருந்து பல்கலைக்கழகக் கல்வியின் முதலாவது பட்டம்குறித்த மட்டம்வரை இலவசக் கல்வியை வழங்குகின்றது. எவ்வாறாயினும், நாடு முழுவதையும் நோக்கும்போது, சமமான கல்வி வழங்கலும், தரமான கல்வியைப் பெற்றுக்கொள்வதும் இல்லாத நிலையையே காணமுடிகின்றது. தற்போது மாணவர்கள் வேலைவாய்ப்புக்கோ அல்லது மேலதிக கல்விக்கோ பரந்த வீச்சிலான திறன்களை அபிவிருத்திசெய்து, காண்பிக்கக்கூடியவகையில், கல்விநெறிப் பாடவிதானங்களுள் திறன்கள் ஒன்றிணைக்கப்பட்டு, வைத்தமைக்கப்படுவதில்லை.

தேசிய மற்றும் சர்வதேசச் சந்தைகளுக்குத் திறன்படைத்த தொழிலாளர்களை உருவாக்கும் நோக்கில் அரசாங்கம் TVET துறையின் விரிவாக்கத்துக்கு கணிசமான அளவிலான பொது நிதிகளை முதலீடுசெய்கின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் இலவசமாக வழங்கப்பட்டபோதிலும், பயிற்சி வழங்கல், இறுதியில் பயன்படுத்துவோர் மற்றும் சந்தைக் கேள்விகளுக்கிடையில் பலவீனமான இணைப்புகள் காரணமாக அவர்களிடம் தேவைப்படும் தரமோ, சந்தை இயைபுநிலையோ இருப்பதில்லை. பாடவிதானங்கள் காலத்துக்கொவ்வாதவையும், வேலைப்பழக்கங்கள், உளப்பாங்குகள் மற்றும் ஆங்கிலமொழித் தேர்ச்சி என்பவை பலவீனமாகவும் உள்ளன.

மூன்றாம்நிலை மற்றும் பல்கலைக்கழகக் கல்வித்துறையிலான ஒரு பாரதுரமான விவகாரம் பகிரங்கத்துறைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினூடாக உயர்கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் நாட்டில் இல்லாமையாகும். மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் ஆற்றல் மட்டுப்பாடாகவிருப்பதே இதற்கான காரணமாகும். மேலும் பல்கலைக்கழகங்களில் பாடவிதானங்கள் மற்றும் பணிவிளைவு அடிப்படையிலான கற்பித்தல் முறைகள் / கற்றல் முறைகளில் பொருத்தமின்மையும், பட்டதாரிகளை ஈர்த்துக்கொள்ளும் தொழிற்சந்தை ஆற்றல் குறைந்த அளவில் வளரச்சியடைவதாலும், கல்வி வழங்கலுக்கும், தொழிலாளர்சந்தைக் கேள்விகளுக்குமிடையில் பொருந்தாத்தன்மை காணப்படுகின்றது. புதிய அறிவைப் பிறப்பிக்கும்வகையில், பல்கலைக்கழகங்களில் கண்டுபிடிப்புகள் மற்றும் புதிதுபுனைதலுக்குச் சாதகமான சூழல் காணப்படவில்லை.

கல்வித்துறை முழுவதும், நிலைமாறும், முரண்பாடான கொள்கைகளும், நடைமுறைகளும் காணப்படுகின்றன. இது கல்விக்கான நிதிப்பட்டியலை பல உப-துறைகளுக்கப் பிரித்துவழங்கதல் மற்றும் முறையே இந்த அதிகாரசபைகளிடையே தொடர்பாடலின்மை என்பவற்றால் ஏற்படும் விளைவாகும். மோசமான துறைசார் இணைப்புறவுகள் தவிர, உப-துறைகளிடையிலான (பாடசாலைக் கல்வி, தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி மற்றும் உயர்கல்வி) இணைப்புறவுகளும் பலவீனமாகவே உள்ளன. கல்விக்கான முதலீட்டில் ஒப்புரவற்ற விநியோகத்துக்கு கல்வியின் பல்வேறு உப-துறைகள் மத்தியில் முதலீடுகளில் வேறுபாடுகள் மற்றும் நிலையற்ற தன்மைகள், கல்வியில் மாறுபடும் முன்னுரிமைகள், கல்விக்கு, விசேடமாக உப-துறைகளுக்கு வழங்களை வழங்குவதற்கு ஒரு முறைமையான பொறிமுறை இல்லாமை என்பவையே காரணமாகும்.

## 2.2. முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. நாடு முழுவதும் உயர்தரத்திலான முன்பள்ளிக் கல்வியையும், சேவை விநியோகப் பொறிமுறைகளையும் உறுதிசெய்யும் அதேவேளையில், குறைந்த வருமானக் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு, பகிரங்க ECCE நிதியளிப்புச் சேவைகளையும் வழங்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. மேலுஞ்சிறந்தமுறையில் எடுத்துரைக்கப்பட்ட, பணிவிளைவு அடிப்படையிலான பாடவிதானத்தைத் தாபித்தல். இதில் திறன்கள் ஒன்றிணைக்கப்பட்டு, வைத்தமைக்கப்படுதல் வேண்டும். (புலனுணர்வுகளால் அறியுமாற்றல், மற்றும் சமூக-உணர்வுகள்சார் திறன்கள்). இது சகல சிறுவர்களும் வெற்றிகரமாகக் கற்பவர்கள், தன்னம்பிக்கைமிக்க தனிநபர்கள், பொறுப்புமிக்க பிரஜைகள் மற்றும் பயனுறுதியுள்ள வகையில் பங்களிப்பச்செய்வோர் என்னும் அடிப்படைக்குறிக்கோள்மீது கவனஞ்செலுத்துதல் வேண்டும்.

இ. ஆசிரியர்களின் தொழில்சார் தகைமை, தரநியமங்கள், மற்றும் நவீன கற்பித்தல் வழிமுறைகளில் கவனம் செலுத்துதல்.

ஈ. TVET துறையில் பயிற்சி வழங்குநர்கள், இறுதிப் பயன்பாட்டுநிலையங்கள் மற்றும் சந்தைக் கேள்விகளிடையே வலுவான உறவிணைப்புகளை ஏற்படுத்துதல்.

உ. பல்கலைக்கழகங்களினது, ஏனைய உயர்கல்வி நிறுவனங்களினதும் பாடவிதானங்களை பல்வகைமைப்படுத்தி, நவீனமயப்படுத்துதல். இது சமூக அபிவிருத்தியை மேம்படுத்தி, உள்நாட்டு மற்றும் சர்வதேச உழைப்பாளர் சந்தைகளின் தற்போதைய மற்றும் எதிர்காலக்கேள்விகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவும்.

## ES3 சக்தி

### 3.1 சாராம்சம்

இலங்கையின் சக்தி வழங்கல் காட்சிநிலை கடந்த 25 வருடகாலமாக பெருமளவிலான சுதேசத் தளத்திலிருந்து பெருமளவில் உயர்வான ஆக்கக்கூறுகளை இறக்குமதிசெய்யப்பட்ட புதைபடிவ எரிபொருட்கள் என்பதாகப் பாரிய மாற்றத்தை அடைந்துள்ளது. இது பாரிய தன்மையாகவுள்ள செல்மதி நிலுவைகள் மற்றும் புதைபடிவ எரிபொருட்களைப் பயன்படுத்துவதால் எழும் சூழல் பாதிப்பு விவகாரங்களென இருவகையான சவால்களுக்கு முகங்கொடுக்கும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது. எந்தச் சக்திவழங்கல் முறைமையினதும் பிரதான குறிக்கோள் பொருளாதாரத்துக்கு அதிகுறைவான ஆகுசெலவில் சக்தியை வழங்குவதாகும். அதேவேளையில் அது சூழல் மற்றும் சமூக மட்டுப்பாடுகளையும் கையாளுதல் வேண்டும். சக்திப் பயன்பாடு சக்தியை அதிகுறைவான ஆகுசெலவில் வழங்கும் இந்த நீண்டகாலக் குறிக்கோளை நிறைவேற்றும் வகையிலான முயற்சிகளைக் கொண்டிருந்தது. அதேவேளையில், அது பெற்றோலிய எரிபொருட்கள், வாயு எரிபொருட்கள், விசேடமாக நிலக்கரி மற்றும் சகல வடிவங்களிலுமான புதப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் ஒர் ஆரோக்கியமான சமனிலையுடன் கூடிய திட்டத்துக்காகவும் முயற்சி மேற்கொண்டுவந்துள்ளது. ஆகவே, விசேடமாக, விஞ்ஞானரீதியான, காத்திரமான நீண்டகால அடிப்டையிலான சக்தி பிறப்பித்தல் மற்றும் விரிவாக்கம் சம்பந்தமான திட்டம் உள்ளடங்கலாக, சகல திட்டங்களையும் நடைமுறைக்கிடுவது உயர்வான முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். இத்திட்டம் ஏற்கெனவே ஒரு கலவையான சக்திமூலங்களையும் பயன்படுத்தி, மின்சார உற்பத்தி நிலையங்களை அபிவிருத்திசெய்வதைக் கருத்திற்கொண்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைக்கிடுவதில் ஏற்படும் தாமதங்கள் (உயர்வான ஆகுசெலவுகள் மற்றும் நம்பிக்கைநிலை குறைவு என்பவை உள்ளிட்ட வகையில்) இடர்வரவுகளை அதிகரித்து, சக்திவலுத் துறையில் பாதகமான எதிர் அதிர்வுகளுக்கும் இட்டுச்செல்லும் எந்த மாற்றமும் பூரணமான பகுப்பாய்வின் பின்னரே ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர வேளைக்கேற்றவகையில் மேற்கொள்ளப்படுதல் ஆகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி விலைகள் பயன்பாட்டு முகாமைத்துவத்தில் மதியூகம் விரய நடைமுறைகளை இல்லாதொழிக்கும், இலகுவில் பாதிப்புறக்கூடிய குழுக்களைப் பாதுகாக்கும் சூழலைப் பாதுகாக்கும் மற்றும் உயர்வான வருமானங்களை ஈட்டும் கைத்தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சித்துறைகள் சம்பந்தமான கொள்கைக்குறிக்கோள்களுக்கு முறையாகச் சீராக்கம் செய்யப்பட்டவகையில் பொருளாதாரத்துக்கான, உண்மையான ஆகுசெலவைப் பிரதிபலித்தல் வேண்டும். DSM குறிக்கோள்கள் பகுத்தறிவுரீதியாக, முறையான கொள்கை இடையீடுகளுடன் கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்.

மின்வலு வழங்கல் சம்பந்தமான நம்புதகவு அனுப்பீடுகள் மற்றும் விநியோக அகநிலையமைவு குறித்த கிரமமான தரமுயர்த்தல்களுடன் உறுதிசெய்யப்படுதல் வேண்டும். விநியோக அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் முறையே தமது பிரதேசங்களில் நட்டங்களுக்கு வகைப்பொறுப்பு ஏற்பதோடு, மின்பிறப்பாக்க அனுமதிப்பத்திரம் வைத்தருப்போருக்குத் தேவையான இடங்களில் தரமுயர்த்தல்கள் மற்றும் வினைத்திறன் மேம்பாடுகளுக்கான பணிப்பாணைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இலங்கை ஐக்கிய நாடுகளின் "உலகை நிலைமாற்றம் செய்தல்: நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழச்சிநிரல்" பிரகடனத்தில் கைச்சாத்திட்ட ஒரு நாடு என்பதால் இது சக்தித் துறையில் வழமையான வியாபாரத்தொழில் நிகழ்வு என்பதற்கெதிராக கார்பன் வெளியிடல்களை 20% தினால் குறைப்பதற்கான அர்ப்பணவுணர்வைக்கொண்டுள்ளது. (24% நிபந்தனையின்றியும், 16% நிபந்தனைகளுடனும்). மேற்கூறிய அர்ப்பணவுணர்வை நிறைவேற்றும் வகையிலேயே ஆகப்பிந்திய LTGEP வரைவு அமைவுபெற்றுள்ளது. எவ்வாறாயினும், இக்கடப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் சக்தி வலுவைத் திட்டமிடுவோர் வலு முறைமையின் ஒரு துடிப்பான பகுப்பாய்வைச்செய்து, அண்ணளவாக 20% ஆன சக்திக்கேள்வி பாரிய நீரியல் மின்வலுச் சேர்ப்புகள் தவிர்ந்த புதுப்பிக்கத்தகு சக்தி மூலங்களூடாக வழங்கல் மேற்கொள்ள முடியும் எனத் தீர்மானித்துள்ளனர். எவ்வாறாயினும், இது பொருளாதாரத்துக்கு 153 மில்லியன் USD கள் செலவை ஏற்படுத்தும். முறைமை ஸ்திரநிலை பாதிப்புறாது மேலும் GHG வெளிவிடல்களைக் குறைப்பதாயின், மேலும் பாரதூரமான பொருளாதாரச்சுமை ஏற்படும். உதாரணமாக, நிலக்கரி அபிவிருத்தித்திட்டங்கள் அனுமதிக்கப்படாவிடில், திட்டமிடல் காலப்பகுதியாகிய 20 வருடங்களுக்கு, பொருளாதாரச்சுமை 1040 மில்லியன் USD ஆகவிருக்கும். இங்கு கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு LNG நிலையங்கள், மின் நிலையங்கள் அமைக்கப்படுதல் வேண்டும். ஆகவே, காற்று, சூரியசக்தி மற்றும் உயிரியல் கழிவுப்பொருட்களிலிருந்து சக்தி பிறப்பித்தல்போன்ற சுதேச புதுப்பிக்கத்தகு சக்தி மூலவளங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இது 153 மில்லியன் USD பொருளாதாரச்சுமையை ஏற்றுக்கொள்வதோடு, நியாயமற்ற கார்பன் குறைப்பு இலக்குகளை எட்டுவதற்கு எம்மீது சுமத்தப்படும் தணிப்புக் கடப்பாடு என்பதைவிட, சக்தி வழங்கலை இறக்குமதி செய்யப்படும் மூலவளங்களிலிருந்து சுயாதீனமாக்கும் வழிமுறையாகவே நோக்கப்படுதல் வேண்டும். நாம் சிலவேளைகளில் தீர்வுகாணக் கடினமான, பொருளாதாரச்சுமை மற்றும் தொழில்நுட்ப விவகாரங்கள்குறித்து, ஆழமாக அறிந்திருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் புதுப்பிக்கத்தகு சக்தி இலக்குகள் பூரணமான தொழில்நுட்ப-பொருளாதார மற்றும் நிலைபேற்றுத்தன்மை மதிப்பீடுகளின் பின்னரே அறிமுகஞ் செய்யப்படுதல் வேண்டும்.

துறை நிதியளிப்புத்தேவைகளில் அதிகரிப்பு மற்றும் அதிகரிக்கும் கடன்சுமை என்பவற்றின் மத்தியில், முறையான வரிக்கொள்கைகள்மூலமே செயற்பாட்டு நட்டங்களைச் சமாளிப்பதற்கான உள்நாட்டுக் கடன்பெறல்கள் அதிகுறைவாக்கப்படுதல் சாத்தியமாகும். அதேவேளையில், இலங்கை இன்னமும் ஒரு வளர்ந்துவரும் பொருளாதார நாடாகவிருப்பதால், வெளியக நிதியளிப்பு மூலமாக மாத்திரமே வெளியகக் கடன்சுமைகள் குறைக்கப்படுதல் வேண்டம். எவ்வாறாயினும், வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுப்பதற்கு. பொருளாதாரரீதியில் காத்திரமற்ற, தொழில்நுட்பரீதியில் நிரூபிக்கப்படாத முறைமைப் பயன்பாட்டின்மீது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமத்தப்படுதல் ஆகாது. அவசியமான முதலீடுகளுக்கு அரசாங்கம் அனுசரணை வழங்கும் அதேவேளையில், கடுமையான நிதியியல் ஒழுக்கசீலங்களும், பெற்றோலியம் மற்றும் வலுத்துறைகளிலான முறையான முகாமைத்துவமும் உறுதிசெய்யப்படுதல் வேண்டும்.

மன்னாரிலும், ஏனைய நம்பிக்கையூட்டும் பிரதேசங்களிலும் வாயு ஆய்வுகள் தொடர்வதற்கான உயர்வான முன்னுரிமைகள் வழங்கப்படுதல் வேண்டும். இது சக்தி ஆகுசெலவுகளைக் குறைத்து, வெற்றிகரமான விளைவுகளுக்கு இட்டுச் செல்வதோடு, நிலக்கரி மற்றும் / அல்லது பெற்றோலியம் எரிபொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் கார்பன் வெளிவிடல்களையும் பெருமளவுக்குக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்யும். எண்ணெய்ப் படிவுகளைக் கண்டுபிடிப்பது சர்வதேச ரீதியிலும் இலங்கையின் கடன்நம்புதகவை அதிகரிக்கும்.

### 3.2 முக்கிய செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

அ. பகுத்தறிவுரீதியான திட்டங்களை விசேடமாக விஞ்ஞானபூர்வமான, காத்திரமான நீண்ட தவணை வலுப்பிறப்பாக்க விரிவாக்கல் திட்டங்களை நடைமுறைக்கிடுதல்.

ஆ. நிலைபேறான சக்திவிலைநிர்ணயக் கொள்கைகளினூடாகவும், மற்றும் பொருத்தமான வெளியக நிதியளிப்புக் கேள்வி முகாமைத்துவத்தினூடாகவும் துறை அபிவிருத்திக்கான நிதிகளைத் திரட்டுதல், சக்திப் பாதுகாப்பு என்பவை முன்னுரிமை விடயமாகவிருத்தல் வேண்டும்.

இ. போதிய வலுமுறைமை நம்புதகவை உறுதிசெய்வதற்கு, வலுப்பரவல் மற்றும் விநியோக முறைமை கிரமமான முறையில் தரமுயர்த்தப்படுதல் வேண்டும்.

ஈ. காற்றும் சூரியசக்தி மற்றும் அழுகிய உயிரெச்சப்பொருட்கள் போன்ற சுதேச புதுப்பிக்கத்தக்க சக்தி மூலவளங்களை மதியூகத்துடன் அபிவிருத்திசெய்யும் அதேவேளையில் கார்பன் வெளிவிடல்களைக் குறைத்தல்.

உ. மன்னார் வடிநிலப்பகுதியிலும், வேறு இடங்களிலும் கடலோர எரிவாயு அபிவிருத்தி முயற்சிகளுக்கு உயர்வான முன்னுரிமை வழங்குதல். இது இறக்குமதிசெய்யப்பட்ட சக்தியில் தங்கியிருப்பதைக்குறைத்து, அன்னியச்செலாவணி ஆகுசெலவுகளைக் குறைத்து, தேசிய பொருளாதாரத்தின் கடன் நம்புதகவை வலுப்படுத்தும்.

ஊ. அபிவிருத்தியில் பாதிப்புறும் சாத்தியவளங்கொண்ட ஜனசமூகங்களுடன் அனைவரையும் உள்ளடக்கும் அர்த்தமுள்ள கலந்துரையாடலின் பின்னரே சகல சக்திக்கருத்திட்டங்களும் முன்செல்வதை அரசாங்கம் உறுதிசெய்தல் வேண்டும்.

## ES4 சௌக்கியம்

### 4.1 சாராம்சம்

அரசாங்கம் வழிநடத்தும் சுகாதார விநியோக முறைமையில் நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை சேவைகளில் கணிசமான அளவிலான சாதனைகள் ஈட்டப்பட்டுள்ளன. ஆயினும், ஒரு பரந்த வீச்சிலான நோய்களை முற்றாக ஒழிக்கும் வகையிலும், சமூகரீதியில் பரவாத நோய்கள் மற்றும் முதியோரின் ஏனைய சுகாதாரச் சவால்கள் போன்ற விடாப்பிடியான, பரிணமிக்கும் பல வித்தியாசமான சுகாதார விவகாரங்களுக்குத் தீர்வுகாண்பதற்கு மேலும் பல பிரயத்தனங்கள் அவசியப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தகாலத்தில் சுகாதாரக் கவனப்பராமரிப்பு முறைமையின் பிரதான பலமாக விளங்கியவை அதன் ஒப்புரவு, முறைமை வினைத்திறன், சிறப்பான சுகாதாரப் பணிவிளைவுகள் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் அரசாங்கத்துக்கும், குடும்பங்களுக்கும் ஏற்பட்ட குறைந்த ஆகுசெலவுகள் என்பவையாகும். அது வறிய மக்களுக்கு வியாதிகளின் நிதியியல் இடர்வரவுகளிலிருந்து பாதுகாப்பு வழங்கியது. சொந்தமாக மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினங்களில் பெரும்பகுதி செல்வந்தர்களான குடும்பங்களின்மீதே தாக்கஞ்செலுத்தியது. எவ்வாறாயினும், சமூகரீதியில் தொற்றா நோய்களின் அதிகரிப்புடன் இப்பாங்கு மாற்றமடைந்துவருகின்றது.

பிரதான பலவீனங்கள் விசேடித்த கவனப்பராமரிப்புக்கான ஒழுங்கற்ற முதலீடுபோன்ற விடயங்களின் அபிவிருத்தி முன்னுரிமைகள் பகுத்தறிவுடன் தீர்மானிக்கப்படாமை தற்போதைய தேவைகளுக்கேற்ற வகையில் சேவை விநியோக நோக்கெல்லை மாற்றமுற்றால் அதிகரித்த ஏற்பாடுகளுக்கான பரந்த அடித்தளத்தை ஆக்கக்கூடிய முதனிலைக் கவனப்பராமரிப்பு உதாசீனப்படுத்தப்படுதல், அதாவது; தனியார்துறை நிறுவனங்களை நாடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படும் மதியூகங்கொண்ட தனிநபர்களுக்கான சேவைகள் மற்றும் வசதிகள் குறித்த கோரிக்கைகளை வைத்தியசாலைச் சேவைகள் நிறைவேற்றுவதில்லை என்பவையாகும். இவை நீண்டகால நோக்கில் சௌக்கிய முறைமையை ஸ்திரநிலையற்றதாக்குவதோடு, அரசாங்க சுகாதார சேவைகளுக்கான அரசியல் ஆதரவையும் சீரழிக்கக்கூடும்.

நிதியளிப்பின்மை மீள்திசைமாக்கப்படுதலைத் தடுப்பதால், நாட்பட்ட தொற்றா நோய்களின் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நவீன தொழில்நுட்பங்களுடன் முன்னேறும் விடயத்திலும் எமது முறைமை தோல்வி கண்டுள்ளது. மேலும் சிறப்பான சுகாதாரக் கவனப்பராமரிப்பு வசதிகள், பதவியினரின் நுகர்வாளர்களை நோக்கிய சேவை அணுகுமுறை மற்றும் தொழில்நுட்பம் சாத்தியமாக்கும் நிறுவன நெகிழ்ச்சித்தன்மை என்பவை குறித்த நுகர்வாளர் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. அவசியப்படும் நிதியியல் ஆதரவின்றி, இந்தக் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய முடியாது.

### 4.2 முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. முதனிலைக் கவனப்பராமரிப்பை வழங்குவதற்கு (இடம்பெயர் ஆய்வுகூடங்களுடன்) சுற்றயல் வைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்யும் அதிகாரப் படிநிலை முறைமையொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும். இதன்மூலம் இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம்நிலைக் கவனப்பராமரிப்பு வைத்தியசாலைகள் சிக்கலான விடயங்களைக் கையாளக்கூடியதாகவிருக்கும்.

ஆ. வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் மற்றும் உபகரணங்களை வழங்கும் விடயத்தில் கணக்காய்வு, வகைப்பொறுப்பு மற்றும் ஒளிவுமறைவின்மையோடுகூடிய வழங்கல் ஏற்பாட்டைத் தாபித்தல்.

இ. முறையான துப்புரவு, சுகாதாரக் கவனப்பராமரிப்புத் தரநியமங்கள் மற்றும் வீதிப் போக்குவரத்து விபத்துக்களைத் தடுத்தல் என்பவற்றில் பொதுமக்களுக்குக் கல்வியூட்டுதல்.

ஈ. தொலைதூரப் பிரதேசங்களில் பணியாற்றுவதற்கான பொருத்தமான ஊதியங்களுடன் MOH பிரதேசங்களில் பயிற்சிபெற்ற பதவியினரை அதிகரித்தல். இது தாய்-சேய் மரணவீதங்களை மேலுங்குறைத்து, சமூகரீதியில் பரவும் நோய்களை அதிகுறைவாக்கி, நோயாளிகளை விசேடித்த அலகுகளுக்கு மாற்றஞ்செய்யும் நன்கு பயிற்சிபெற்ற அம்புலன்ஸ் சாரதிகளையும், உதவியாளர்களையும் வழங்க உதவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. இலத்திரனியல் வைத்திய அறிக்கைகளுக்கான ஒரு துடிம ஏற்பாட்டைத் தாபிப்பதோடு, பகிரங்க-தனியார் பங்குடைமைகளை அபிவிருத்திசெய்து, அரசாங்கத்தின்மீதான நிதிச் சுமையைக் குறைக்கும்வகையில் தேசிய சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துதல்.

## ES5 கடல்சார் மூலவளங்கள்

### 5.1 சாராம்சம்

இலங்கை அதன் நிலப்பரப்பைப்போன்று சுமார் ஒருமடங்கு அதிகமாகப் பிரத்தியேகப் பொருளாதார வலயத்தைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அதன் பங்களிப்பு இரண்டு வீதத்துக்கும் குறைவானதாகும். சமுத்திரங்கள் ஒவ்வொருவராலும் பகிரப்படுகின்றன. சமுத்திர வளங்களையும், சேவைகளையும் இவ்வாறு நினைத்தவாறு பெற்றுக்கொள்ளமுடிவது கடல்சார் வாழிடவியல் முறைமைகள்மீது, பாரிய அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. இவை அளவுக்கதிகமாக, மீன்பிடித்தல், அசட்டையான முறையில் மூலவளங்களைப் பிரித்தெடுத்தல் மற்றும் மாசுபடுத்தல் என்பவையாகும். 2009 அளவில் 57 வீதமான மீன்வளங்கள் பூரணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. அளவுக்கதிகமாகவும் உயிரியல் மட்டுப்பாடுகளை மீறும்வகையிலும் பெற்றுக்கொள்ளப்படும் கடல்சார் மீனினங்களின் வீதாசாரம் அதிகரித்துவருகின்றது.

மனிதர்களால் உற்பத்திசெய்யப்படும் காபனீரொட்சைட்டில் சுமார் 30 வீதத்தைச் சமுத்திரங்கள் உறிஞ்சிக்கொள்ளுகின்றன. கைத்தொழில்புரட்சியின் ஆரம்காலத்திலிருந்து சமுத்திரங்கள் அமிலமயமாக்கலில் 26 வீதம் அதிகரிப்புக் காணப்பட்டுள்ளது. நிலத்தை அடிப்படையாகக்கொண்ட மூலவளங்களிலிருந்து ஏற்படும் பெருமளவிலான கடல்சார் மாசடைதல் உயர்வான மட்டங்களை எட்டியுள்ளது. சமுத்திரத்தின் ஒவ்வொரு சதுர கிலோமீட்டர் பரப்பிலும் 13,000 பிளாஸ்டிக் கழிவுப்பொருட்கள் காணப்படுகின்றன.

கடல்சார் ஆய்வுகள் ஒரு முன்னுரிமை விடயமாகக் கணிக்கப்படுவதில்லை. இந்த விடயப்பரப்பில் ஆர்வமும், முதலீடுகளும் இல்லாதநிலையே காணப்படுகின்றது. கடல்சார் ஆராய்ச்சிகள் மற்றும் ஆய்வுகளுக்கான வசதிகள் வளர்ச்சியடைந்த நிலையிலேயே உள்ளன. சமுத்திர ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளுக்கான பூரண வளர்ச்சியுற்ற தேசிய நிறுவனம் எதுவுமில்லை. அளவுமீறிய வளச்சுரண்டல், சட்டவிரோதமான, தீங்கேற்படுத்தும் மீன்பிடி வழிமுறைகள் என்பவை மீன்வளங்கள் அருகிச் செல்வதற்கும், கடல்சார் சூழல் அழிவுக்கும் இட்டுச்சென்றுள்ளன. கடந்த மூன்று தசாப்தகாலமாக மூலவள மதிப்பாய்வொன்று இடம்பெறவில்லை. கடல்சார் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், நிலைபேறான மீன்பிடி மட்டங்கள்குறித்த விஞ்ஞானபூர்வமான தகவல்கள் எதுவுமில்லை.

இத்தகைய அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், கடல்சார் சூழல் பிரச்சினைகள் தணிப்பு, கடல்சார் மூலவளங்களின் நிலைபேறான பயன்பாடு என்பவற்றுக்கான முன்னுரிமை மிகவும் குறைவானதாகும். சமுத்திரங்களின் உயிர்-ஆதரவுப் பாத்திரம் மற்றும் அனைத்துமடங்கும் பொருளாதார மற்றும் மனிதவள அபிவிருத்திச்சூழமைவில் சமுத்திர விவகாரங்களில் கவனஞ்செலுத்துவதற்கான தேவை என்பவைகுறித்த விழிப்புணர்வு அதிகரித்துவருகின்றது. எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளை நிறைவேற்றும்வகையில் கடல்சார் மூலவளங்களைப் பயன்படுத்துவதற்குச் சர்வதேச ஒத்துழைப்பும், பேச்சுவார்த்தைகளும் அவசியமாகும். அனைத்துமடங்கும் சமுத்திரவியல் நிலைபேற்றுத்தன்மைக்காட்டிகள் தொகுதியொன்றை உருவாக்குவது கடல்சார் முறைமைகளின் தற்போதைய நிலையைக் கணிப்பீடுசெய்வதற்கும், தொடரும் செல்நெறிகளை அறிந்துகொள்வதற்கும், எதிர்கால ஏற்பாடுகள் மற்றும் நிலைபேறான சமுத்திர ஆட்சிகுறித்த தகவல்களை வழங்குவதற்கும் உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீலப் பொருளாதாரம்" அல்லது "நீல வளர்ச்சி" என்னும் பதம் உலகம் முழுவதும் பொதுவான கொள்கைப்பயன்பாட்டினுள் வலுவாக இடம்பிடித்துள்ளது. இலங்கை இந்தவிடயத்தில் ஒரு புறநடையாக இருக்கமுடியாது. "நீலப் பொருளாதார" எண்ணக்கரு சூழல் நிலைபேற்றுத்தன்மையை உறுதிசெய்யும் அதேவேளையில், பொருளாதாரவளர்ச்சி, சமூகத்தில் அனைவரையும் உள்ளடக்குதல், மற்றும் வாழ்வாதாரங்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு என்பவற்றை ஊக்குவித்து முன்னேற்ற முயலுகின்றது. உள்மையத்தில் அது சமுத்திரம்சார் துறைகள் மற்றும் செயற்பாடுகளினூடாக, சமூகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தி, சூழல் மற்றும் வாழிடவியல் முறைமைகள் தரங்கெடுவதைத் தடுப்பதைக்குறிக்கின்றது.

### 5.2 முக்கிய செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

அ. கடல்சார் ஆராய்ச்சியையும், சமுத்திர மூலவளங்களின் நிலைபேறான பயன்பாட்டையும் கூட்டிணைப்புச்செய்த, இலகுபடுத்தும் ஒரு குடையமைப்பாகச் செயற்படக்கூடிய, சமுத்திர ஆராய்ச்சியில் ஈடுபட்டு "கடல்சார் ஆராய்ச்சிகளின் உன்னதமாக மிளிரும் ஒரு நிலையமாக" அபிவிருத்தியுறக்கூடிய, மேம்பட்ட அகநிலையமைவுகளையும், மனிதவளங்களையுங்கொண்ட, நவீனத்துவம் வாய்ந்த கடல்சார் ஆராய்ச்சி நிறுவகமொன்றைத் தாபித்தல்.

ஆ. சூழல் நட்புறவான மீன்பிடி உபகரணங்களை ஊக்குவித்து, சூழல் நட்புறவு மீன்பிடி உபகரணங்களின் செயற்பாட்டுக்கு ஊக்குவிப்புகளை வழங்குதல்.

இ. கடல்சார் பாதுகாப்புப் பிரதேசவலையமைப்பை அதிகரித்து, இப்பிரதேசங்களைப் பயனுறுதியுள்ள வகையில் முகாமைத்துவம் செய்யும் ஏற்பாடுகளைச்செய்தல்.

ஈ. மீன்பிடித்துறைமுக அபிவிருத்தி அகநிலையமைவை அபிவிருத்திசெய்தல். பொருளாதார அபிவிருத்தி கருதி, டிக்கோவிட்ட மீன்பிடித் துறைமுகம்போன்ற உரிய அளவில் பயன்படுத்தப்படாத வசதிகளை ஊக்குவித்து முன்னேற்றுதல்.

உ. பாரதூரமாகத் தரங்கெட்ட வாழிடவியல் முறைமைகளையும், முக்கியமான வாழிடங்களையும் மீட்டெடுத்து, முக்கியமான உயிரினங்களைப் பாதுகாத்தல்.

ஊ. நீலப் பொருளாதாரத்திலிருந்து அதியுயர்வான பயன்களைப் பெற்றுக்கொள்ளும்வகையில், மீன்பிடித்துறைக்கும் அப்பாற்சென்று, மருந்துப்பொருட்கள் மற்றும் கனியப்பொருட்கள் உற்பத்தி, பொறுப்புமிக்க உல்லாசப்பிரயாண அபிவிருத்தி, கப்பற் போக்குவரத்து மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி என்பனவற்றுக்காகச் சமுத்திர அடிப்படையிலான மூலவளங்களை அபிவிருத்தி செய்யும்வகையில் விரிவாக்கங்களை ஏற்படுத்துதல்.

## ES6 போக்குவரத்து

### 6.1 சாராம்சம்

போக்குவரத்துத்துறை, இயக்கம், மற்றும் மக்களையும், பொருட்களையும் சென்றடைதலுக்கு உதவும் ஏனைய துறைகளோடு ஒன்றிணைக்கப்படுதல் வேண்டும். போக்குவரத்து என்பது, மூலவளங்களையும், வாய்ப்புகளையும், சந்தைகளையும் பெற்றுக்கொள்வதற்கு சமூகத்தின் சகல பிரிவினர்களுக்கும் அதிகாரவலு வழங்கி, உற்பத்தித்திறன் அதிகரிப்பு மற்றும் புதிய பொருளாதாரச் செயற்பாடுகளுக்கான ஒரு வழிவகையாக நோக்கப்படுதல் வேண்டும். அது வேலைவாய்ப்புகளின் ஒரு பிரதான வழிவகையாகவும் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகன இறக்குமதிகளுக்காக வருடந்தோறும் 200 பில்லியன் ரூபா ஆகுசெலவு ஏற்படுகின்றது. எரிபொருள் இறக்குமதியில் 300 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. வீதிகள் நிர்மாணத்தில் 200 பில்லியன் ரூபா செலவு ஏற்படுகின்றது. பகிரங்கப் போக்குவரத்தில் முதலீடுகள் குறைவடைந்தால், பல வெளியக விவகாரங்களை ஏற்படுத்தும்வகையில் தனியார் போக்குவரத்துச் சேவைகளில் தங்கிநிற்கும் நிலை ஏற்படுகின்றது. வறியமக்களுக்கான அணுகுவழிகள் குறைவடைந்து, செலவுமிக்கவையாகின்றன. வேளைக்கேற்ற வகையிலான காணி அபிவிருத்தி, மற்றும் மிதமிஞ்சிய, பிரமாணப்படுத்தல் இல்லாத போக்குவரத்துச்செயற்பாடுகளால் நகர்ப்புற மற்றும் கிராமியச் சூழல் தரங்கெடுகின்றன. தற்போதுள்ள செல்நெறி பொருளாதார, சமூக மற்றும் சூழல்ரீதியில் நிலைதகவற்றதாகும். அது உடனடியாகவே எதிர்த்திசைக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

பின்வரும் விடயங்களைக் கையாளும் வகையில் போக்குவரத்துக்கொள்கையை இணக்கம் செய்வதன்மூலம் இலங்கை 2030 இலட்சியத்தை ஈட்டிக்கொள்ளலாம்:

அ. போக்குவரத்து நெருக்கடிகள் (ஆ) பாதுகாப்புக் கரிசனைவிடயங்கள் (இ) எல்லைகளைக் கடக்கும்போது மோசமான திட்டவழங்கல்கள் (ஈ) சூழல் தாக்கங்கள் (உ) மோசமான பகிரங்கப் போக்குவரத்துச்சேவை (ஊ) நவீனமயப்படுத்தல் இல்லாமை (எ) உயர்வான சக்தி நுகர்வு

பின்வரும் விடயங்களூடாக கொள்கை நடைமுறையாக்கத்தை இலகுபடுத்தலாம்.

- 2018 இலிருந்து இக்கொள்கைகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிசெய்யும்வகையில் ஒரு நிலையியற்குழுவை உருவாக்குதல்.
- நிலைபேறான கொள்கைச்செயற்பாடுகளுடன் இணங்கும்வகையில் எதிர்காலப் பகிரங்க முதலீடுகளைக் கணிப்பீடுசெய்தல்.
- திருத்தப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமானமுறையில் சட்டவாக்கத்தைத் திருத்தி, 2018 இறுதியளவில் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்தல்.

## 6.2 முக்கிய செயற்பாடுகளுக்கான விதப்புரைகள்

அ. நிலைபேறான பௌதீகச்சூழலினுள் சகலரும் போக்குவரத்து வசதிகளைக் குறைந்த செலவில் பெற்றுக்கொள்ளும் நிலையை மேம்படுத்துதல்: 2030 அளவில் சேவையில் குறைபாடுகளுக்குத் தீர்வுகாணும் வகையில் ஒரு பிரயாணக் கணிப்பீட்டைப் பூர்த்திசெய்தல். பின்வரும் விடயங்களுக்கான அணுகுவழிகளை மேம்படுத்தும்வகையில் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்: (அ) சிறுவர்கள், பெண்கள், சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் (ஆ) தொலைதூரங்களில் வசிக்கும் ஜனசமூகங்கள் மற்றும் (இ) வறிய மக்கள் 2025 அளவில் 100,000 க்கு மேல் மக்கள் வாழும் ஒவ்வொரு நகரத்திலும் போதிய நடைபாதைகள், மிதிவண்டிப்பாதைகள், மற்றும் பகிரங்கப் போக்குவரத்து வழிமுறைகளைப் பெற்றுக்கொள்ளுதல் என்பவை போதியளவில் இருத்தல் வேண்டும். அதேவேளையில் போக்குவரத்துக் கனவளவுகளும் நகரத்தின் பௌதீக மற்றும் கலாசாரத்தன்மைகேற்றவகையிலான வாகனம் நிறுத்திவைத்தல் மட்டங்களிலும் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

ஆ. உயிர்களைப் பாதுகாத்தல் : இத்துறையிலான மூலதன முதலீட்டில் 5 வீதத்தைப் போக்குவரத்துப் பாதுகாப்பு மேம்பாடுகளுக்கு ஒதுக்கியளித்தல். பெண்கள் உள்ளிட்ட வகையில், போக்குவரத்தின்போது பாதுகாப்பு சமூகத்தின் ஓர் அடிப்படை உரிமையாகக் கருதப்படும்.



3-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்: 2010 இலிருந்து போக்குவரத்து அகநிலையமைவும், சேவைகளும் பின்வரும் விடயங்களுக்காகக் கணிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும். (அ) பௌதீக வளங்களின் பயன்பாடு (ஆ) பயனாளிகள் எண்ணிக்கை (இ) புதுப்பிக்கத்தகு சக்திப் பயன்பாடு (ஈ) சூழல் தாக்கங்கள் மற்றும் (உ) கிலோமீட்டருக்கு அதிகரிக்கும் எரிபொருள் நுகர்வைக் குறைத்தல்

(ஈ) தேசிய ரீதியிலும் வெளியுலகத்துடனும் தொடர்பிணைப்புகளை மேம்படுத்துதல்: பின்வரும் விடயங்களை ஈட்டிக்கொள்ளும் வகையில், 2018 அளவில் பேருபாயத் திட்டங்களுடன் பன்முக வடிவிலான போக்குவரத்து மற்றும் திட்டவழங்கல் வலையமைப்புகளை அபிவிருத்தி செய்தல். (அ) உள்நாட்டு விமானப் போக்குவரத்தை அபிவிருத்திசெய்தல் (ஆ) சர்வதேச விமானப் பயணங்களை மேம்படுத்துதல் (இ) ஏற்றுமதி ஏற்பாடுகள் மற்றும் துறைமுக அபிவிருத்தியை மேம்படுத்துதல்.

உ. தொழில்வாய்ப்பை திருப்தியேற்படுத்துவதாகவும், உற்பத்தித்திறன் மிக்கதாகவும் ஆக்குதல் : 2030 அளவில் இலங்கை அரசாங்கம் போக்குவரத்துத் தொழில்வாய்ப்பை விதிமுறையாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, கண்ணியமான வேலைநிலைமைகளை உருவாக்கும். போக்குவரத்துத்துறை இயைபுள்ள உள்நாட்டுப் பெறுமதிசேர்ப்பை ஊக்குவிக்கும் பேருபாயங்களை ஊக்குவிப்பதனூடாக பொருளாதாரத்தின் உந்துசக்தியாக மாற்றப்படும்.

ஊ. தாக்கமுறக்கூடிய பயனீடுபாட்டு ஜனசமூகங்களுடன் கலந்தாலோசித்தபின்னரே பாரிய கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

## ES7 நகர்ப்புற அபிவிருத்தியும், பௌதீகத் திட்டமிடலும்

### 7.1 சாராம்சம்

வரவிருக்கும் ஆண்டுகளில் இலங்கை தனது பொருளாதாரத்தில் ஓர் உயர்வான, நிலையான வளர்ச்சிவீதத்தை ஈட்டிக்கொண்டு, 2030 அளவில் ஓர் அபிவிருத்தியுள்ள தேசமாக பரிணமிக்கும் நோக்கத்துடன் செயலாற்றுகின்றது. மட்டுப்பாடுள்ள காணிவளங்களைக்கொண்ட ஒரு தீவாக விளங்குவதால், அது ஒரு திட்டமிட்ட பௌதீக அபிவிருத்தியை விருப்புத்தெரிவாகக் கொள்ளாதவரையில், அது இலக்குவைக்கும் பொருளாதார அபிவிருத்தி யதார்த்தமாகமுடியாது. இச்சூழமைவிலேயே தேசீயப் பௌதீகத் திட்டமிடலின் முக்கியத்துவம் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றது. பரந்தளவில் ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் எண்ணக்கருவாக்கத்தின் பிரகாரம், பொருளாதார அபிவிருத்தி தவிர்க்கமுடியாத வகையில் நகர்ப்புறமயமாக்கலுடன் இணைப்புற்றுள்ளது. சனத்தொகை வளர்ச்சி குறைவாகவிருந்தபோதிலும், கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையிலான கணிப்பீடுகள் (தற்போது சுமார் 20 வீதமானோரே குறிப்பிட்ட நகர்ப்புறப் பிரதேசங்களில் வாழ்ந்தபோதும்) சுமார் 40 வீதமானோர் நகர்ப்பற வசதிகளுடன், வாழும் நிலையை அனுபவிக்கும் மட்டத்திலிருந்து 2030 அளவில் இலங்கை சனத்தொகையில் 60 வீதத்துக்கு மேற்பட்டோர் "நகர்ப்புற" அந்தஸ்தை அனுபவிப்பர். படிப்படியான இந்த நிலைமாற்றம் காணி, நீர் மற்றும் ஏனைய மூலவளங்களுக்கான கேள்வியை அதிகரிக்குமென்பதால், ஒரு திட்டமிட்ட பௌதீக அபிவிருத்திக்கான தேவை துல்லியமாகின்றது.

இலங்கை உலகிலேயே பௌதீக அபிவிருத்திக்கான ஒரு தேசிய மட்டத்திலான திட்டத்தைக் கொண்டுள்ள சில நாடுகளில் ஒன்று என்றவகையில் பெருமைகொள்ளலாம். ஆயினும், 2007 இல் தயாரிக்கப்பட்ட தேசீயப் பௌதிகத் திட்டம் தற்போதைய சமூக - பொருளாதார மற்றும் அரசியல் சூழல் காரணமாக எழும் விவகாரங்களுக்குத் தீர்வுகாணமுடியாமையாலும் கொள்கை வகுப்போர் மத்தியில் விழிப்புணர்வின்மை காரணமாகவும் அதற்குரிய கவனத்தைப் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியப் பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் காலத்தின் தேவையைப் புரிந்துகொண்டு 2000 ஆம் ஆண்டின் பட்டினம் மற்றும் தேசத் திட்டமிடல் (திருத்தம்) சட்டத்தின் பணிப்புரையின் பிரகாரம் அரசாங்கத்தின் அபிவிருத்திக் குறிக்கோள்களை ஈட்டிக்கொள்ளக்கூடிய வகையில் இற்றைப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டம் நான்கு பரந்த கொள்கைகளின் அடிப்படையில் வகுத்தமைக்கப்பட்டுள்ளது.

1. தனிச்சிறப்பான நிலஅமைப்புகளுடன் தீர்மானகரமான காணி மற்றும் தொடர்புற்ற மூலவளங்களைப் பாதுகாத்தல்.

2. கிடைக்கக்கூடிய மூலவளங்களையும், அகநிலையமைவுகளையும் அதிசிறப்பான முறையில் பயன்படுத்துதல்.

3. உயர்வான வாழிடத்தன்மைகொண்ட பிரதேசங்களை நோக்கிக் குடியேற்ற அபிவிருத்திகளை வழிநடத்துதல்.

4. புதிய சாத்தியவளங்களை ஆய்வுசெய்தலும், வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதலும்.

இக்கொள்கைகளின் அடிப்படையில், திட்டம் ஐ.நா. முன்முயற்சியாகிய நிலைபேறான அபிவிருத்திக் குறியிலக்குகள், சர்வதேச வர்த்தகத்தின் அபிவிருத்தி, துரிதமாக பரிணமிக்கும் தொழில்நுட்பம் போன்ற உலக செல்நெறிகளுடன் இணைந்துசெல்லும் அதேவேளையில் காணிகள் தரங்கெடுதல், இயற்கை அனர்த்தங்கள், காலநிலைமாற்ற விளைவுகள் போன்றவற்றுடன் தொடர்புள்ள நடப்பு விவகாரங்களுக்கும் தீர்வுகளை முன்வைக்கின்றது. திட்டத்திலுள்ள பேருபாய முன்மொழிவுகள் தீவின் நொய்தான மத்தியமலைப் பகுதிகள், கடலோர வலயங்கள் மற்றும் ஏனைய இலகுவில் பாதிப்புறக்கூடிய நிலஅமைப்புகளின் பாதுகாப்பு மற்றும் பிரமாணப்பகுதியின் அபிவிருத்தியை உள்ளடக்குவதாகும். அத்துடன், நான்கு "நகர்ப்புறச் செல்வழிகளான" கொழும்பு-திருகோணமலை, காலி-திஸ்ஸமகாராமை, மட்டக்களப்பு - அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம்-கிளிநொச்சி, கண்டியிலும் அநுராதபுரத்திலும் இரண்டு "மெட்ரோ பிராந்தியங்கள்" மற்றும் ஒன்பது "பிரதான மாநகரங்களில்" உயர்வான மக்கள் செறிவுடன் எதிர்கால நகர்ப்புற அபிவிருத்தியை முன்னெடுத்துச்செல்லும் உபாயங்களும் இதில் உள்ளடங்குகின்றன. முதலீடுகளில் அதிசிறப்பான வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்கும், தற்போது நடைமுறை முதலீடுகளில் அதிஉயர்வான வருமானங்களை உறுதிசெய்வதற்கும் எதிர்கால அபிவிருத்தி அகநிலையமைவுகள் இந்தச் சட்டகத்தினூடாக இணைந்துசெல்லுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய அகநிலையமைவுத் திட்டங்களிலிருந்து எழக்கூடிய சாத்தியவள சனசமூகப் பதற்றநிலைகளை அதிகுறைவாக்கும்வகையில் நலன்பிரதிநிதிச் சமூகங்களுடன் இடம்பெறும் கலந்தாலோசனைகள் திட்டச்செயன்முறையின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக விளங்கும்.

## 7.2 முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. அரசுத்தலைவர் மட்டத்திலான இடையீடுகள்மூலம் தேசிய பௌதீகத் திட்டமிடல் கொள்கைகளைச் செயற்படுத்துதல்.

ஆ. தேசியப் பௌதீகத் திட்டம் குறித்தும், அதன் நடைமுறையாக்கநிலை குறித்தும் பொதுமக்கள் மத்தியில் மேலும் பரந்த, அடிக்கடி நிகழும் விழிப்புணர்வைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

இ. இயைபுள்ள துறைத்தேர்ச்சி, தொழில்நுட்பம் மற்றும் நிறுவன ஏற்பாடுகளை வழங்கி உள்ளூராட்சி அதிகாரசபைகளின் திட்டமிடல் மற்றும் நடைமுறையாக்கப் பிரிவுகளை வலுப்படுத்துதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் வரவு-செலவுத் திட்டங்களிலிருந்து நிதிகளை ஒழுக்கியளிப்பதில், உள்ளூர் அபிவிருத்தித்திட்டத்துடன் கருத்திட்டங்கள் இணங்கியொழுகுவது குறித்து கண்டிப்பான செவ்வைபார்த்தல்கள் இருத்தல் வேண்டும்.

உ. தேசீயப் பௌதீகத்திட்டத்தினுள் வருடாந்த மற்றும் காலாந்தர நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைக்கிடுதல்.

ஊ. அகநிலையமைவுத் திட்டங்களிலிருந்து எழக்கூடிய பதற்றநிலைகளை அதிகுறைவாக்கும் வகையிலான, நலன்பிரதிநிதிகள் சமூகங்களுடன் இடம்பெறும் கலந்தாலோசனைகள் திட்டமிடல் செயல்முறையின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியாக விளங்கும்.

## ES8 நீர்

### 8.1 சாராம்சம்

இலங்கை மத்திய மலைகளிலிருந்து சமவெளிகளுக்கும், 103 க்கு மேற்பட்ட ஆற்றுத்தாழ் நிலங்களுக்கும் நாலாபுறமும் வழிந்தோடும் பெருமளவிலான நீரைக்கொண்ட ஒரு நாடாகும். மிதமிஞ்சிய நீரைக்கொண்ட எந்த ஆற்றிலிருந்தும் புவியீர்ப்பின் உதவியுடன் நீரை அருகிலுள்ள பிரதேசங்களுக்குத் திருப்பிவிட முடியும். இது உயர்வான மட்டங்களுக்கு நீரைக்கொண்டுசென்று மேற்கொள்ளப்படும் நீரப்பாசன ஆகுசெலவுகளை இல்லாமற்செய்யும்.

தண்ணீர் வளம் இல்லாவிட்டால் இலங்கையில் தற்போது வகுக்கப்படும் பெருமளவிலான அபிவிருத்தித்திட்டங்களின் இலக்குகளை அடையமுடியாது. எவ்வாறாயினும், இயன்றவரையில் நடைமுறை மற்றும் எதிர்காலத்தேவைகளைக் கணிப்பீடுசெய்யும் பூரணமான தேசியமட்ட நீர்வளத் திட்டமிடல் செயற்பாடு இடம்பெறவில்லை.

சமீபத்திய கடந்தகாலத்தில் மழைவீழ்ச்சிப் பாங்குகள் மாற்றமடைந்துள்ளதோடு அடிக்கடி வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கு நிலைமைகள் நாட்டில் ஏற்படுகின்றன. எதிர்காலத்தில் கூடியவிரைவில் கூடுதலாக வரட்சிக்காலப்பகுதிகள் வரக்கூடுமென்பதைக் காட்டும்வகையில் “வரட்சி மற்றும் ஈரலிப்பு” பிரதேசங்களுக்கிடையிலான இடைவெளி அதிகரித்துச்செல்லுகின்றது. மகாவலித் தாழ்நிலத்தில் கிட்டும் மழைவீழ்ச்சி கடந்தசில வருடங்களாகப் படிப்படியாகக் குறைந்து செல்வதாகப் புள்ளிவிபரங்கள் காண்பித்துள்ளன. இவ்வாறாக, மழைவீழ்ச்சி குறைவடைந்து செல்வது மத்திய மலைகளின் வடக்கு - கிழக்குச் சரிவுகளிலேயே ஏற்படுகின்றது. எவ்வாறாயினும், மேற்குச் சரிவுகளில் அதாவது சப்பிரகமுவா, தென் மாகாணம் மற்றும் களுகங்கை, நில்வளகங்கை மற்றும் களனி ஆற்றுத் தாழ்நிலங்களில் இடம்பெறும் மழைவீழ்ச்சி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. காலநிலை அவதானிப்பு விஞ்ஞானிகள் புவி வெப்பமடைதல் எல்-நினோ, லா-நினோ, கடல்நீரோட்ட வெப்பநிலை மாற்றங்கள் மற்றும் நீர்மட்டங்களுக்குக் கீழான நிச்சயமற்ற நீரோட்டப் பாங்குகள் என்பவை காரணமாக நீண்டகாலக் கண்ணோட்டத்தில் வருடாந்த மழைவீழ்ச்சி குறைவடையுமென்று தெரிவிக்கின்றனர்.

நீர்ப் பயன்பாட்டை எதிர்காலத்தில் அதிசிறப்பான நிலையில் வைத்திருத்தல் உயர்வான முன்னுரிமை விடயமாகவிருத்தல் வேண்டும். மகாவலி தாழ்நிலப் பிரதேசத்தில் பெரிய அளவிலான அபிவிருத்தித்திட்டங்கள் எதிர்பார்க்கப்படும் கனவளவுகளிலான நீர் கிடைப்பதை உறுதிசெய்யும் கவனமான தீவிர ஆய்வுகளின் பின்னரே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட ஆற்றுப்பள்ளத்தாக்கில் 30 வருடகாலத்துக்கு நீர்த்தேவையைப் பூர்த்திசெய்யாத “ஆற்றுத் தாழ்நிலங்களிடையே நீரைத் திசைதிருப்புதல்” குறித்த எந்தத் தீர்மானமும் குறுகிய எதிர்காலத்தில் உணர்வுபூர்வமான விவகாரமாக மாறக்கூடும். 40 அல்லது 60 வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுத் தரவுகளுடன் மரபுரீதியாக "Unity Hydrograph" மற்றும் "PMF" என்பவற்றை உறுதிசெய்யும் பாரம்பரிய வழிமுறை எதிர்கால மழைவீழ்ச்சி முன்னறிவிப்புகளை மேலும் வலுப்படுத்துமா என்பது சந்தேகமாகும். இதற்கு மாற்றுவழியாக, கடந்த 10 வருட (அல்லது 05) கால மழைவீழ்ச்சிப் பதிவுகளுடனும், சில தத்துவமுறையிலான வெளிமூல ஊகங்களுடனும் செயற்போலி மாதிரியொன்றை நிகழ்த்துவது காலநிலை மாற்றங்களுடனான விளைவுகளின் வேறுபாடுகளை மேலும் யதார்த்தமான வழிகளில் விளங்கிக்கொள்ள உதவும். குடித்தல், மின்வலுப் பிறப்பாக்கிகள் மற்றும் கைத்தொழில் உபயோகம் என்பவற்றுக்கு மேலதிகமாக, ஆற்றுத் தாழ்நிலங்களுக்கிடையிலான நீர்த்திசைமாற்றங்களை அதிகுறைவான மட்டங்களில் வைத்திருப்பதும், கிடைக்கக்கூடிய நீர்நிலைகளின் கீழ் பயிர்ச்செய்கைகளுக்குப் பொருத்தமான பயிர்களை ஊக்குவிப்பதும் மதியூகமான விடயங்களாகும். நீரைச் சேமித்து, தேக்கிவைப்பதற்கு அவசர தேசிய முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

## 8.2 முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. மாகாண சபைகள், நீர்ச்சபை மற்றும் ஏனைய அதிகாரசபைகளின் ஆதரவுடன், சிறு குளத்தேக்கங்கள் மற்றும் புவியீர்ப்புமூலம் செயற்படும் குழாய்நீர் குறித்த "மினித் திட்டங்கள்" என்பவற்றுக்குப் பொருத்தமான பிரதேசங்களை இனங்காணும் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும்.

ஆ. மண்ணரிப்பைக் கட்டுப்படுத்தவும் மண்ணுள் நீர் புகுந்து, நிலத்தடி அடுக்குகளில் உறிஞ்சப்படுத்துவதை மேம்படுத்தும்வகையில் மலைச்சரிவுகளில் "நுண்ணியல்பு அணைகளை" நிர்மாணித்தல்.

இ. நீர் மாசடைதலைக் கட்டுப்படுத்துவதற்கு மத்திய சூழல் அதிகாரசபையின் ஆதரவுடன் தேசிய மட்டப் பொறிமுறையொன்றை ஆரம்பித்தல.

ஈ. நாடுமுழுவதும் சிதறலாகக் காணப்படும் சிறிய நீர்ப்பாசனக்குளங்களைப் புனரமைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பித்தல்.

உ. நிலத்தைத் தோண்டுதலைக் கட்டுப்படுத்துதல், வீட்டுத்தோட்ட நிலவமைப்பு, சிறு விவசாயம், தெருக்கள் நிர்மாணம் போன்றவை உள்ளடங்கலாக தாழ்நில முகாமைத்துவம்குறித்த சிறப்பான நடைமுறைகள்குறித்துக் கல்வியூட்டும்வகையில் முறையே உள்ளூர் அதிகாரசபைகளின் ஆதரவுடன் நாடளாவிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றுச் சராம்சம்

ET

## ET. ஊடறுக்கும் கருப்பொருட்கள்

### ET1 காலநிலை மாற்றம், அனர்த்தங்கள் மற்றும் வளியின் தரம்

#### 1.1 சாராம்சம்

காலநிலை மாற்றம் அதிகரித்த பசுமை இல்லத்தாக்கத்தினால் புவி வெப்பமடைவதன் விளைவென்று கூறப்படுகின்றது. வளியில் பசுமை இல்ல வாயுக்கள் அதிகரிப்பது (GHGs) புதைபடிவ எரிபொருட்கள் மற்றும் காடழிப்புப் போன்ற மனித நடவடிக்கைகளால் ஏற்படுவதாகும். அதிகரித்த வாயு வெளிவிடல்கள் பிரதானமாக மின்வலுப் பிறப்பாக்கம், போக்குவரத்து, கைத்தொழில்துறைகள், கழிவகற்றல் மற்றும் காடழிப்பு என்பவற்றால் நிகழ்வதாகும்.

இலங்கையின் சீதோஷ்ணமும், காலநிலையும், மாற்றமுற்றுள்ளதோடு, கடும் மழைவீழ்ச்சி, வெள்ளப்பெருக்குகள், மண்சரிவுகள், வரட்சிகள் மற்றும் மின்னல் தாக்கம் போன்ற அழிவுகள் நிறைந்த அனர்த்தங்கள் அதிகரித்துள்ளன. 2016 இல் இடம்பெற்ற வரட்சி நாற்பது வருடங்களில் சம்பவித்த மிக மோசமான நிகழ்வு என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. இதன்பின்னர், வரட்சிகளைத் தொடர்ந்து, கடுமையான மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்குகளும், மண்சரிவுகளும் ஏற்பட்டன. உலகரீதியான வெப்பமடைதல் தவிர்ந்தவகையில், பெருந்தோட்டங்களை நிர்மாணிப்பதற்கு மலைப்பிரதேசங்களைத் துப்புரவுசெய்தலும், மண்சரிவுகளுக்கான ஒரு காரணமாகின்றது. இத்தகைய அனர்த்தங்களின் விளைவாக, விவசாயப் பணிவிளைவும், நாட்டின் பொருளாதாரமும் மோசமாகப்பாதிப்புறுகின்றன. மேலும், வளி மாசடைதல், விசேடமாகப் போக்குவரத்து நெருக்கடிகள் காரணமாக வாயுக்கள் வெளியேறுதல், அதிகரித்த சௌக்கியம் குறித்த தாக்கங்களையும் கொழும்புக்கு அடுத்தபடியாக மிகப்பெரிய மாநகரமாகிய கண்டியின் சூழல் வெப்பநிலை அதிகரிப்புகளையும் ஏற்படுத்துகின்றது.

இலங்கை, பாரிஸ் உடன்படிக்கை மற்றும் மொன்றியேல் மரபாசார உடன்படிக்கை போன்ற சர்வதேச உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்துள்ளது. இவை GHGs மற்றும் ஓசோன் படையைக் குறைக்கும் வாயுக்கள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்கான வாக்குறுதிகளை வழங்குகின்றன. அது வாயு வெளிவிடல்களைக் குறைக்கும் இலக்குகளைக்கொண்ட, தேசியரீதியில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளையும் சமர்ப்பித்துள்ளது. இவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உயர்வான முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, நிபந்தனைத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் நடவடிக்கைகளை நடைமுறைக்கிடுவது அனர்த்தங்களின் கிரம ஒழுங்கை அதிகுறைவாக்குவதற்கும், நிலைபேறான சூழலைக் கட்டியெழுப்புவதற்குமான கடப்பாடாகும்.

வாகனங்கள் இறக்குமதிகுறித்த வலுவான கொள்கைத்தீர்மானங்கள், மின்சார மற்றும் கலப்பு வாகனங்களுக்கான வரி குறைப்புகள் என்பவை· விசேடமாகப் பொதுமக்கள் போக்குவரத்து வாகனங்கள் விடயத்தில் மிகவும் அவசியமானவையாகும். நிலைபேறான காணிப்பயன்பாடு நடைமுறைக்கிடுவதற்குக் கண்டிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு, காத்திரமற்ற, வேளைக்கேற்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் தடுத்தலும் வேண்டும். காலநிலை முன்னறிவிப்பு, நேரகால எச்சரிக்கை முறைமைகளை அபிவிருத்திசெய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் அனர்த்தங்களை ஏற்றுச் சமாளிப்பதற்கான சமூக ஆற்றலை மேம்படுத்துதல் என்பவை சம்பந்தமான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைகள் ஓர் அடிப்படைத்தேவையாகும்.

### 1.2 முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. விசேடமாக வறியமக்களையும், இலகுவில் பாதிப்புறக்கூடியவர்களையும் பாதுகாக்கும்வகையில், காலநிலைமாற்றத் தாக்கங்களுக்கு இசைவாக்கம் செய்துகொள்வது உயர்வான முன்னரிமையைப் பெறுதல் வேண்டும்.

ஆ. காடழிப்பு வெள்ளப்பெருக்குகள், மண்சரிவுகள் மற்றும் வரட்சிகள் என்பவற்றின் கிரம ஒழுங்குகளை மோசமடையச்செய்வதால் அதைக் குறைவாக்குதல் வேண்டும்.

இ. காத்திரமான கொள்கைத்தீர்மானங்கள், நிலைபேறான காணிப்பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் நேரகால எச்சரிக்கை முறைமைகள் என்பவை அவசரமாகத் தேவைப்படும் விடயங்களாகும்.

ஈ. சகல பிரஜைகள் மத்தியிலும் கல்வியும், விழிப்புணர்வை உருவாக்குதலும், விசேடமாகப் பாடசாலை மட்டத்தில முன்னுரிமையாகும்.

உ. வரட்சியின் நீண்டகால விளைவுகளுக்குத் தீர்வுகாணும்வகையில், தென்மேற்கிலிருந்து மிதமிஞ்சிய நீரை நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்துச்செல்வதற்கான கருத்திட்டங்கள் கவனமான ஆராய்ச்சிக்குப்பின்னர் அபிவிருத்திசெய்யப்படுவது அவசியமாகும்.

## ET2 ஒழுக்கநெறி விழுமியங்கள் மற்றும் பிரஜாவுரிமை

### 2.1 சாராம்சம்

தொழில்சார் குழுக்கள், அரசியல் மற்றும் வியாபாரத்தொழில் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் பகிரங்கப் பதவிகளை வகிப்போர் உள்ளிட்டவகையில், பொதுவாழ்வில் தரநியமங்களும், விழுமியங்களும் ஒரு பரந்த தாக்கத்தை ஏற்படுத்துபவையாகும். அவை ஒரு சமூகத்தில் ஒழுக்கநெறி விளைவுகளை ஊக்குவிப்பதற்கும், அதிகாரத்தைப் பொறுப்புணவர்வுடன் பிரயோகிப்பதற்கும் தீர்மானகரமான முக்கியத்துவம் கொண்டவையாகும். பலவருட காலமாக அதிகாரத் துஷ்பிரயோகமும், ஜனத்தொகையின் பல பிரிவுகளில் பொருளாதாரச் சலுகையின்மைகள் இருந்தபோதிலும், நுகர்வுவாத்தின் வளர்ச்சிச் சூழலும், நிறுவனங்களை அழித்து முக்கிய பதவிகளில் உள்ளோரின் விழுமியங்களையும் சிதைத்துள்ளது. இது அரச மற்றும் தனியார்துறைகளில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி, நாட்டின் அபிவிருத்தியைப் பாதிக்கும் பல தீர்மானகரமான விடயங்களில் பெரும்பான்மையினரான பிரஜைகளின் ஈடுபாடற்ற உணர்வுக்கு இட்டுச்சென்றுள்ளது. சிலநேரங்களில் வன்செயல்மிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றபோதிலும், சிவில் சமூகம் அனேகமான சந்தர்ப்பங்களில் பிரதிவிளைவு காண்பிப்பது பிளவுற்றுள்ளது. ஆயுத யுத்தமும், பிரதிவினை காண்பிப்பதில் சிவில் சமூகத்தில் முரண்பாட்டுத் தீர்வு உள்ளிட்டவகையில் ஆழமான துருவப்படுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது. அபிவிருத்தி முன்முயற்சிகளில் அரசாங்க - சிவில் சமூகப் பங்குடைமைக்குப் பதிலாக அனேக சந்தரப்பங்களில் பகையுணர்வும், பதற்றநிலைகளுமே காணப்படுகின்றன.

இலங்கையின் பல்வகைமையை வைத்துப்பார்க்கும்போது, மத அல்லது இனத்துவ அடையாளத்தின்மீது கட்டியெழுப்பப்படும் பரஸ்பர மரியாதை சாத்தியமற்றதொன்றாகும். வேறுபடும் மதக்குழுக்களுக்கு தனிவேறான மதப்பாடசாலைகளில் மதப்போதனைக்கு அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவளிக்கும் தற்போதைய நடைமுறை சர்வமதப் புரிந்துணர்வையோ, சகிப்புத்தன்மையையோ வளர்க்க உதவவில்லை. இதுவிடயத்தில் தனிவேறாக்கப்பட்ட இனத்துவப்பாடசாலை முறைமைகளும் உதவவில்லை. நாட்டின் அனேகமான பகுதிகளில் இருமொழி மற்றும் மும்மொழி ஆற்றல்நிலையை ஈட்டிக்கொள்வதில் ஏற்பட்ட தோல்வி, இக்கொள்கைக்கான உத்தியோகபூர்வ அங்கீகாரம் உள்ள நிலையிலும் தேசிய மீளிணக்கத்துக்கான ஒரு பாரிய தடையாகவே விளங்குகின்றது.

கடமையைப்புரியவேண்டியவர்கள் என்றவகையில் அரசாங்கப் பதவிகளில் உள்ளவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை அங்கீகரித்தலும் மற்றும் ஐக்கிய இலங்கையின் ஈடுபாடுள்ள குடிமக்களென்றவகையில் நல்லாட்சியின் பயனாளிகள் விடயத்தில் குடியுரிமையின் ஒரு புதிய மாதிரியை உருவாக்குதலும் தீர்மானகரமானதாகும். பகிரப்படும்போதே குடியுரிமையென்னும் எண்ணக்கரு அர்த்தமுள்ளதாகின்றது. தனிநபர்கள் ஒரேவகைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் என்று ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்போதே இது யதார்த்தமாகும். இலங்கையில் குடியுரிமை என்பது நாட்டின் இனத்துவ அல்லது மத ஆக்கக்கூறுகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்படாத, "இலங்கையர்" என்ற வகையில் மீள்புத்தாக்கம் பெறுதல்வேண்டும்.

## 2.2 முக்கிய நடவடிக்கைகளுக்கான விதப்புரைகள்

அ. ஒரு பயனுறுதியுள்ள பொதுமக்கள் தொடர்பாடல் பேருபாயத்தினூடாக ஓர் ஒற்றையாட்சி இலங்கையிலுள்ள பொதுசன விழுமியங்கள், ஒழுக்கவியல், மற்றும் குபுடியுரிமை உணர்வு என்பவற்றைச் சிறிதுசிறிதாக அறிவுறுத்துதல் வேண்டும். இது ஆலயங்கள், கோவில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் வேறுபட்ட நம்பிக்கைகளைக்கொண்ட மக்கள் கூடுமிடங்களில் இடம்பெறும் மத நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கலாம். சகல மதங்களும் ஊக்குவித்து முன்னேற்ற முனையும் பொதுவான உள்மைய விடயங்கள்மீதும், மற்றவர்கள்மீதான இரக்க விழுமியங்கள்மீதுமே இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் கவனஞ்செலுத்துதல் வேண்டும். இது கண்ணோட்டங்கள், மற்றும் நம்பிக்கைகளின் பல்வகைமைக்கு மதிப்பு, சகிப்புத்தன்மை, சமாதானவழிகளில் முரண்பாட்டுத்தீர்வு மற்றும் எமது சமூகத்தில் வன்செயல்களிலிருந்து சுதந்திரம் என்பவற்றை ஊக்குவித்து, முன்னேற்ற உதவும் இந்த அணுகுமுறை மத, அல்லது இனத்துவ மற்றும் ஏனைய அடையாளங்களின் அரசியல்மயமாக்கத்தையும், மதத்தின்பேரால் சீர்குலைவு மற்றும் எதிர்மறைச் செய்திகள் பரவுவதையும் தடுக்க உதவும்.

ஆ. இலங்கையில் குடியுரிமை உணர்வை மேம்படுத்துவதற்குக் கல்வியை ஒரு கைக்கருவியாகப் பயன்படுத்துதல். உலகளாவிய குடியுரிமைக் கல்வி போன்ற நிகழ்ச்சித்திட்டங்களை விதிமுறையான மற்றும் விதிமுறையற்ற கல்விமூலம் செயற்பாட்டு உணர்வூட்டி, பங்குடைமைகளையும், உரையாடலையும், ஒத்துழைப்பையும் கட்டியெழுப்ப உதவும்.

இ. ஜனசமூகங்களுடன் இணைப்புறவுகளை ஏற்படுத்தி கற்போரை யதார்த்த வாழ்வின் அனுபவங்களுடன் இணைக்கும் கற்றல் சூழல்களை உருவாக்கும் வகையிலான ஜனசமூக அடிப்படையிலான அணுகுமுறைகளை ஊக்குவித்தல் (பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்கள், ஜனசமூக அடிப்படையிலான செயற்பாடுகள் மற்றும் அன்னியமொழிக் கற்கைகள் போன்றவை) மேலே குறிப்பிட்ட அரங்குகள் ஜனசமூக உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் துடிப்பான, அறிவார்ந்த பங்கேற்பினூடாக குடியுரிமை உணர்வை மேம்படுத்த உதவுகின்றன.

ஈ. சர்வமத மற்றும் சர்வ இனத்துவப் புரிந்துணர்வுக்கான ஊக்குவிக்கும் இடையீட்டினூடாக பல்வகைமையைக் கொண்டாடுதலை உறுதிப்படுத்துதல். சமூக மற்றும் வரலாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி சிறிது சிறிதாக இளைஞர் மத்தியில் ஒரு விமர்சனரீதியான சுதந்திரமான, பொறுப்புணர்வுமிக்க மனோபான்மையை ஊட்டி, ஏனைய ஜனசமூகங்களின் மரபுகளைப் புரிந்துகொள்வதை ஊக்குவிக்கும். இதன்மூலம் ஒருவரின் மொழியை மற்றவர்கள் கற்றுக்கொண்டு, மற்றவர்களின் கொண்டாட்டங்களை அறிந்துகொண்ட, கலாசார, சங்கீத, இலக்கிய மற்றும் சமையல் அறிவு போன்றவற்றைப் பரிமாறிக்கொள்ள முடியும். அனேகமான இளவயது நபர்கள் பிரசன்னமாகவிருக்கும் மதக்கல்விக்கு ஊக்குவிப்பு வழங்கப்படுதல் வேண்டும். இது ஏனைய ஜனசமூகங்களின் ஆக்கபூர்வமான பண்புகளையும், மதவிவகாரங்களையும் பிரதிபலிக்கும். இது மத அடையாளங்களினூடாக பகிரப்படும் விழுமியங்களை மாணவர்கள் அறிந்துகொள்ள உதவும்.

உ. அரசியலமைப்புப்போன்ற அடிப்படை நியமங்கள் உள்ளிட்டவகையில் சகல வழிகளினூடாகவும் உறுதிப்படுத்தும்வகையில் அரசு இடையீட்டினூடாக சமத்துவ உரிமைகளை அங்கீகரிப்பதையும் மனிதஉரிமைகள், சகல கலாசாரங்கள் மற்றும் அடையாளங்களின் குறுக்காகக் கிட்டும் பொது விழுமியங்களின் தொகுதி என்பவற்றையும் குறிப்பதாகும். அரசியலமைப்பிலுள்ள உரிமைகள் சாசனம், அனைத்துலக மனிதஉரிமைகள், நாம் ஏற்றங்கீகரித்த சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் அரசு என்ற வகையில் கைச்சாத்திட்ட ஆவணங்கள் மற்றும் சகல நாடுகளையும் பிணிக்கும் சர்வதேச சட்டத்தின் வழமை நியமங்கள் என்பவற்றைக் குடியியல் கல்வி முக்கிய விடயங்களாகக் கொண்டிருத்தல் வேண்டும். இது வெறுமனே தத்துவப்போதனைகளாக அமையாமல் பங்கேற்பு நிகழ்வாக இருத்தல்வேண்டும். மாணவர்கள் தமது அன்றாட யதார்த்தத்தில் எந்தச் சூழ்நிலைகள் மனிதஉரிமைகளை ஈட்டிக்கொள்வதற்கு எதிரானவை என்பதை இனங்கண்டு, சமாதானமான, ஒத்துழைப்புள்ள, சிறந்த மாற்றத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தன்விருப்புடன் முன்வரக்கூடியவர்களாக இருத்தல்வேண்டும்.

## ET3. பால்

### 3.1 சுருக்கம்

பால் வேறுபாடு என்பது உடலியல் ரீதயாக உள்ள மாற்றங்களைக் கொண்டு சமூக ரீதியாக எடுத்துக் கூறப்பட்டாலும் அது உறவுகளில் பாகுபாடு, வெளியீட்டுகளில் சமச்சீரின்மை என்பவற்றை வியைவாக்கியுள்ளது. எனவே இது சமூக ரீதியாக கட்டியெழுப்பப்பட்ட பால் வேறுபாட்டு மனப்பாங்குகள், வேலைத்தளம், வீடு டின்பவற்றில் பால் ரீதியான செயற்பாடுகள், சொத்துப் பகிர்வு. வருமானம்,வளப் பயன்பாடு, உரிமைகள் போன்றவற்றில் ஏற்படுத்தய்ுள வித்தியாசமான தாக்கங்கள் குறித்து ஆய்வு செய்ய வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் பெண்கள் சம்பந்தமாக பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்பட்ட போதிலும், அவற்றில் இரண்டு குறிப்பிடத்தக்கவையாக காணப்படுகின்றன. அவை, அ) வறுமையில் பெண்மையாக்கம் மற்றும் பால் வேறுபாட்டிற்கமைய வித்தியாசமாக ஏற்படும் நிலைபேறான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரத்திற்கான அணுகல். ஆ) பெண்கள் யுவதிகளுக்கெதிரான வன்முறைகள் என்பனவாகும். இவை இரண்டுமே பெண்களின் தனிப்பட்ட வாழ்க்கை, சமூக, குடும்ப மற்றும் வேவைலைத்தள செயற்பாடுகளை வெகுவாகப் பாதிக்கின்றது. ஆகவே பால் சமத்துவத்தை எய்தப்பெற இவை இரண்டுமே நிவரத்தி செய்யப்படுதல் வேண்டும்.

இலஙகையில் ஒப்பீட்டளவில் ஊழியர் சந்தையில் பெண்களை விட ஆண்களின் அளவு குறிப்பிடத்தக்களவு அதிகமாகக் காணப்படுகின்றது. இது ஊழியர் சந்தை பால் இடைவெளியின்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச ரீதியில் இலங்கையை 28வது இடத்தில் இருக்கச் செய்துள்ளது. வேலை செய்யும் வயதடைந்துள்ளோரில் 35.9% பெண்கள் தொழிலில் ஈடுபடுவதுடன் 75% ஆண்கள் ஊழியர் சந்தையில் தொழிலில் ஈடுபடுவோராக உள்ளனர். இவ்வாறானதொரு பால் இடைவெளி கல்வித்துறையிலும் காணப்படுகின்றது. இவ்வளவு இளமானி மற்றும் மேற்பட்ட படிப்பைத் தொடரும் பெண்களின் அளவைக் குறிப்பதுடன் ஏனையவை இடைநிலைக் கல்வியுடன் (க.பொ.த.உ/த மற்றும் அதற்குட்பட்ட) நிறுத்தப்படுகின்றது. அத்துடன் பால் இடைவெளியானது பெண்களின் வருமானத்திலும் தாக்கத்தை செலுத்துகின்றது. இவ்வருமானம் சமச்சீரற்றுக் காணப்படுவதுடன் பெண்களை பொருளாதார ரீதியில் பாதுகாப்பற்றதாக்குகின்றது. அல்லது வறுமைக்குத் தள்ளுகின்றது. இப் பாரிய இடைவெளி வயதான பெண்களையும் பாதிக்கும். 60+ என்ற சனத்தொகை எதிர்பார்க்கை 2022ம் ஆண்டளவில் 17% இனால் அதிகரிக்கும். மேலும் 2026ம் ஆண்டளவிலான பெண்கின் வாழ்நாள் எதிர்பார்க்கை 82.5 ஆண்டுகளாக அமையும். ஆகவே இவர்களுக்கான ஓய்வூதியங்கள் போதுமானதாக பகிர்ந்தளிக்கப்பட முடியாமல் போகலாம். இளைஞர்களுக்கு ஈடான வருமானங்களைப் பற அவர்கள் அதிக நேரம் வேலையில் ஈடுபட நேரிடும்.

வகுக்கப்பட்ட கொள்கைகளில் உள்ள குறைபாடுகளானது யுவதிகளின் வேலைப்பலுவை அதிகமாக்கிவிடுகின்றது. அதாவது விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் (STEM) போன்ற துறைகளில் பெண்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு உதவக்கூடிய கொள்கைகளை வலுப்படுத்தல், முறைப்படுத்துவதற்கான முதலீடு, வீட்டுப் பாதுகாப்பு பொருளாதாரத்தை பாகுபடுத்தல் மற்றும் முன்னேற்றுதல், உறுதியான ஓய்வுப் பலன்கள், தாய்மை விடுப்பு, மற்றும் வேலைத்தளம் மற்றும் குடும்பங்களிலான பால் வித்தியாசக் கொள்கைகளை நீக்குவதற்கான பயனுள்ள திட்டங்கள் போன்றவற்றை ஏற்படுத்தலாம். குறைவான பெண் ஊழியர்கள் காரணமாக பெண்களின் குறைவான வருமான அளவு தொடர்ந்த வண்ணமேயிருக்கும்.

பெண்கனுக்கெதிரான வன்முறையும் அவர்களின் தனிப்பட்ட வாழ்வு மற்றும் முன்னேற்றத்தை வெகுவாகப் பாதிக்கும். உடல் மற்றும் உள ரீதியான தாக்கங்களின் காரணமாக ஆக்கவளமற்ற பொருளாதார நடவடிக்கைகளை ஏற்படுத்துவதுடன் பாலியல் ரீதியான மற்றும் உள்நாட்டு வன்முறைகளின் அதிகரிப்பு என்பன சுகாதார செலவீனத்தையும் பாதித்துள்ளது.

### 3.2. முக்கிய செயற்பாட்டு பரிந்துரைகள்

அ. முறைமைப்படுத்தலுக்கான கொள்கைகளை அமுல்படுத்தல், பிராந்தியங்களுக்கடையில் வீட்டுப் பாதுகாப்பை பாகுபடுத்தலும் முன்னேற்றலும், தனியார மற்றும் பொது-தனியார் பங்களிப்பு போன்றவற்றுடன் கவனிக்கப்படாத பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு வேலைகளை இனங்காணலுடன் அவற்றிற்குப் பெறுமதி சேர்த்தல்.

ஆ. ஆண் மற்றும் பெண்களுக்கான வாழ்க்கை மற்றும் வேலைச் சமநிலையை மேம்படுத்தல்.

இ. பெண்களின் STEM உட்பட ஏனைய பாடங்களில் இடைநிலை மற்றும் உயர் கல்வியை தொடர்வதற்கான கொள்கைகளை அறிமுகப்படுத்துவதுடன் அவர்களை தொழில்நுட்ப ரீதியிலும், புதிய ஆய்வுகள் மற்றும் தலைமைத்துவ ரீதயிலும் பயிற்சி பெறச்செய்து பொதுவான பொருளாதார முறைக்கு அவர்களை இட்டுச்சென்று அதிக வருமானத்தை ஈட்டச் செய்தல். இவ்வாறான முன்னேற்றங்கள் பால் இடைவெளியை வெகுவாகக் குறைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. போதுமான ஓய்வுப் பலன்களை அளிக்கக்கூடிய கொள்கைகளை அமுல்படுத்துவதுடன் முறையற்ற விதத்திலான ஓய்வூதிய சுரண்டலுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குதல்

உ. தேசிய ரீதியிலான போக்குவரத்து கொள்கையொன்றை கிராம-நகர ஒன்றிணைப்பை மாத்திரம் கருத்தில்கொள்ளாது பஸ் மற்றும் புகையிரதத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் தொல்லைகளை தடுப்பதற்காகவும் அறிமுகப்படுத்தல்.

ஊ. பல வருட ஆய்வுகள் மற்றும் கொள்கைகளின் ஆதாரங்களின் அடிப்படையில் சட்டசீர்திருத்தங்களை மேற்கொள்ளல். மேலும் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதைத் தடுப்பதற்கு சட்டங்களை வலுப்படுத்தல். மேலும் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை மேம்படுத்தல். குறிப்பாக VAW மற்றும் SGBV போன்றவற்றில்.

எ. துன்புறுத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை ஆதரிக்கும் வகையில் கொள்கைகளை அறிமுகப்படுத்தல். வேலைத்தளங்களில் இவ்வாறான துன்புறுத்தல்களை தடுத்துக் கொ்வதற்கான பயிற்சிகளை சுகாதார அதிகாரிகள் உட்பட ஏனைய குழு உறுப்பினர் உதவியுடன் வழங்குதல்.

## ET4. ஆட்சிமுறை

### 4.1 சுருக்கம்

முப்பது ஆண்டுகாள யுத்த முடிவானது சமாதானத்தை நிலைநாட்டவும் சர்வதேச தொடர்புகள் மற்றும் அபிவிருத்திகளை ஏற்படுத்தக்கொள்ளவும் உதவியாக அமைந்துள்ளது. பெரும்பான்மையான இலங்கையர்களின் வாக்கின்படி 2015ம் ஆண்டு புதிய அரசாங்கம் அமைப்பட்டது. சிறந்த ஆட்சிக்கான விதிமுறைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்தல், மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் மக்களின் நன்நலம், சமாதானம், முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி போன்றவற்றிற்கு உறுதுணையாக அமையும் என்ற மக்களின் நம்பிக்கையுடன் இவ்வரசாங்கம் நிறுவப்பட்டது. மத ரீயான பாகுபாடுகள், அரசியல் நம்பிக்கைகள், மற்றும் வேறு காரணிகளின் தாக்கமின்றி அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானம் மற்றும் முன்னேற்றம் கிடைக்கக்கூடியவாறான சிறந்த ஆட்சிக்கான எதிர்கால் நோக்கு இதன்மூலம் பெறப்பட்டது.

2015 அரசியல் பிரச்சாரத்தின்போது சிறந்த ஆட்சிக்கான சில தூண்கள் இனங்காணப்பட்டது. மேலும் அதற்கப்பால் சட்ட சீர்திருத்தங்கள், ஆட்சிக்குட்பட்ட மற்றும் சமூகங்களுக்கிடையிலான ஊழலின் தாக்கங்ளுக்குப் பதிலளித்தல் மற்றும் தடுப்பு முறைகள் மேற்கொள்ளல், அரசியல் தலையீடுகளை தடுப்பதற்காக நிறுவனங்களின் சீர்திருத்தம் என்பன மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான சிறந்த ஆட்சியின் தூண்கள் 2030ம் ஆண்டில் சமாதானம், முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான முறையான எதிர்பார்பபை விதைத்தன. இது பிரச்சினைகள் அற்ற பொருளாதார, சமூக மற்றும் நிலைபேறான முன்னேற்றத்திற்கான மக்களை முன்னிலைப்படுத்திய சிறந்த ஆட்சிக்குத் தேவையான கட்டமைப்பை ஏற்படுத்தித் தந்தது. இவை இலங்கையின் வெற்றிகரமான அரசாங்கத்திற்கான சர்வதேச ஒப்புதல்கள், வழக்கமான சர்வதேச சட்டங்கள், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உட்பட இலங்கையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உலகளாவிய கொள்கை ஆவணங்களுடனும் ஒத்திசைவதாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், வேறுபட்ட மக்கள் அமைப்பிற்கான தேவைகளை நிறைவேற்றுவதில் அரசியல் கட்சிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் காட்டும் பாகுபாடானது சிறந்த ஆட்சியின் எதிர்பார்ப்பிற்கு சவாலாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.2 முக்கிய செயற்பாடுகள் மற்றும் பரிந்துரைகள்

அ. மக்களுககு பயனுள்ள விதத்தில் சேவைகளை வழங்கக்கூடிய சுயாதீன மற்றும் உத்தியோக நிறுவனங்களின் உருவாக்கத்திற்கு துணைபுரிதல். மேலும் சிறந்த ஆட்சிக்காக இவ்வாறான நிறுவனங்களின் முக்கியத்துவத்தை அரசயில்வாதிகள் மத்தியல் எடுத்துக்கூறல்.

ஆ. அனைத்து மட்டங்களிலுமான (உ-ம்: மத்திய, மாகாண, மற்றும் உள்நாட்டு) பொதுசன நிறுவனங்கள்/முகவர்களுக்கான சிறந்த ஆட்சிக்கான உத்திகள் மற்றும் கட்டமைப்புகளை வடிவமைத்தல், அவர்களின் இலக்குகளை மறுவரையறை செய்தல், ஒவ்வொருக்குமான பொறுப்பகள், கடமைகள், பாத்தரிங்களை மீள் ஒழுங்கமைத்தல், மேலும் அரசியல் தலையீடுகளற்ற சுயாதீன ஒப்படைப்பு திணைக்களத்தினால் அவர்களுக்க அதிகாரமளித்தல்.

இ. சிறந்த ஆட்சிக் கட்டமைப்பிற்காகவும், சிறந்த பொதுசனத் துறை செயற்பாட்டிற்காகவும் சிறந்த நெறிமுறை மற்றும் நேர்மையைக் கொண்ட வேலைத்தளக் கலாச்சாரமொன்றை பராமரித்தல். பொதுசனத் துறை பணியாட்கள் நேர்மையுடன் சுயாதீனமாகச் செயற்பட்டு உயர் தரத்திலான முடிவுகளை நேர்மையாக மேற்கொள்ளும் முறையைப் பராமரித்து பொதுசனத் துறை மீதான மளக்களின் நம்பிக்கையையும், ஆர்வத்தையும் உறுதி பெறச்செய்தல்.

ஈ. மக்கள் தொடர்பான செயற்பாடுகளில் நிர்வாகத்தின் மீதான தவறான செல்வாக்குகளை தவிர்த்துக் கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் மற்றும் அதிகாரத்திற்கிடையிலான தெளிவான உறவை உறுதிசெய்து கொள்ளல். மேலும் அரசாங்க கொள்கைகள் மற்றும் உத்திகளின் தரிதமானதும் பயனுள்ளதுமான செயல்பாட்டை உறுதி செய்தல்.

உ. பொதுசனத் துறையை உயர் பயனுள்ளதாகவும் திறனுள்ளதாகவும் நடைமுறைப்படுத்தல். இதனை தனிப்பட்ட மற்றும் நிறுவன அளவிளான மேற்பார்வைகள் மூலம் செயற்படுத்தல் வேண்டும். செயற்பாட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல்.

ஊ. "சிறந்த விடயங்களை சிறந்த வழியில்" மரியாதையுடனும் அர்ப்பணிப்புடனும் மக்கள் இயற்கையாகவே மேற்கொள்ளக்கூடிய ஊக்குவிப்புக் கலாச்சாரம் ஒன்றை ஏற்படுத்தல். அனைத்து மட்டங்களிலுமான மக்கள் ஊழியர்களின் நேர்மை, நம்பிக்கை, மரியாதை, நேர்முகத்தன்மை, வேகம், வெளிப்பாடு மற்றும் நேரடியான தலைமைத்துவம் போன்றவற்றை ஊக்குவிப்பதுடன் கற்பித்தல்.

# ET5. புதிய கண்டுபிடிப்புகள்,தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை

## 5.1 சுருக்கம்

இலங்கையின் உயர் வருமானத்துக்கான அடித்தளமானது அதிக ஏற்றுமதிகளுடன் உலகளாவிய உற்பத்தி வலையமைப்புகளுடன் உறுதியான தொடர்பை பேணக்கூடியவாறும் உள்ள அறிவியல் சார்ந்த பொருளாதார முன்னேற்றத்தினால் மாத்திரமே அடையப்பெற முடியும். சூழலில் குறைவான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிலைபேறான முன்னேற்றத்திற்கு புதிய கண்டுபிடிப்புகளின் நிலைமாற்றம் அவசியமாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தனது அளவு, பன்முகத்தன்மை மற்றும் சுறுசுறுப்பான புதிய சூழல் போன்றவற்றிற்றின் அளவீடுகளைக் கொண்டு மூலதனமிட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்டுபிடிப்பாளர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர். இவை மாதிரி கணக்கெடுப்பு, தகவல் பரிசீலனை, தரமான ஆய்வுகள், வசதியான, வேகமான மற்றும் செலவு குறைந்த A/B பரிசோதனைகள் போன்றவற்றின் மூலம் பாவனையாளர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறான மற்றும் கண்டுபிடிப்பு நடவடிக்கைகள் முறையாக நடைபெறக்கூடிய சூழலை உருவாக்குவதன் மூலம் அடையப்பெறலாம். அரசாங்களம் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதை விடுத்து நடைமுறைகளை உருவாக்குவதன் மூலம் கண்டுபிடிப்பாளர்களின் கைகளில் ஆபத்தை கையாள்வதைப் பொருத்தமான இடத்தில் பிரயோகிப்பதை செயற்படுத்துகிறது.

### 5.2. முக்கிய செயற்பாட்டு பரிந்துரைகள்

அ. புதிய கண்டுபிடிப்புகளை பரிசோதிப்பதற்கான ஓர் இடத்தை உருவாக்குவதுடன், இவ்விடங்களில் தேவையான கூறுகளைப் பெறுவதற்காக தனியார் நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களை ஊக்கமளித்தல்.

ஆ. இலங்கையின் துணிகர முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதுடன் பாதுகாப்பாளர்கள் மற்றும் வேகப்படுத்துவோரின் எதிர்கால நோக்கை பாரிய நிறுவனங்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் கண்டுபிடிப்புகளுக்கான இடைவெளியை பெரிதுபடுத்தல்.

இ. குறுக்கு ஆக்க சிந்தனையாளர்கள் மற்றும் வெற்றிகரமான கண்டுபிடிப்பாளர்களுக்கான நிபந்தனைகள் மற்றும் வெகுமதிகளை அறிமுகப்படுத்தல் (அறிவுசார் சொத்து முறைமை உட்பட ஆனால் அதற்கு மட்டுப்படுத்தப்படாத)

ஈ. புதிய கண்டுபிடிப்புகளுக்க உகந்தவாறான சிந்திக்கும் ஆற்றல் வளர்ப்பு மற்றும் இலங்கை கல்வி முறை மற்றும் ஊடகங்கள் மூலமான சிந்திக்கும் திறன்.

## ET6. சர்வதேச தொடர்புகள்

### 6.1 சுருக்கம்

இலங்கை தனது சர்வதேச தொடர்புகளை சுயாதீனமாகவும் முறைமைப்படுத்தப்படாத வழியிலும் மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் இலங்கையை பாதுகாப்பானதாக்குதல், இருதரப்பு பயன்கள் மற்றும் பல்வகைப்பட்ட பங்குதாரர்களின் உதவியுடன் வளமாக்குதல் போன்ற குறிக்கோள்களைக் கொண்டே வெளிநாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றுகின்றது.

தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளியார்ந்த அபிவிருத்திகள், இலங்கையின் வெளிநாட்டுத் தொடர்புகளைப் பயனுள்ள விதத்தில் நிர்வகித்தல் என்பன இலங்கைப் பிராந்திய மற்றும் மக்களின் பொதுநலத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. உலகளாவிய சக்தியானது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நகர்த்தப்படுவதுடன் கடல் சார் சிறந்த பிரதேசம் ஆசிய சமுத்திரங்களின் அதன் மத்தியில் நிலைபெறுகின்றது. இந்நகர்வின் முக்கிய இடத்தில் இந்து சமுத்திரம் காணப்படுவதுடன் இதன் காரணமாக இலங்கை ஓய்வற்ற மற்றும் நெருக்கடியான வர்த்தக நிலையமாக காணப்படுவதுடன் இது இலங்கைக்கு வாய்ப்புகளுடன் சவால்கயைும் பெற்றுத் தருகின்றது. இலங்கைக்குப் பயனளிக்கக்கூடிய வகையிலான பயனுள்ள பிராந்திய ஒழுங்கைக் கண்டறியவும் அனைத்து நாடுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காகவும் இது வழங்கக்கூடிய நெகிழ்வுத் தன்மையையும் மாற்றப்படக்கூடிய தன்மையையும் பயன்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய மாநிலம் (IS), மற்றும் வெளிநாட்டு தீவிரவாதப் போராளிகள் (FTSs), இந்திய உப கண்டத்தின் அல்-கைதா உருவாக்கமும் அதன் அங்கீகரிப்பும் (AQIS), தீவிரவாதக் குழுக்களின் பரந்த அளவிலான சமூக வலைத்தள பாவனை, நாடுகளுக்கடையில் தகவல்கள் மற்றும் உளவுப் பகிர்வு போன்ற அண்மைய நிகழ்வுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வாறான நெருக்கடியான நிலைமைகளுக்கான தீர்வுகளை இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் காண்பதற்காக இதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களை ஆதரித்து ஏனைய நாடுகளுடன் இணைகின்றது. சர்வதேச மனித உரிமை வரைமுறைகள் மற்றும் தரங்களுக்கு உட்பட்டு தீவிரவாத செயற்பாடுகளை தடுக்கும் தொடர்ச்சியான சட்டரீதியான கட்டமைப்புகள் கருத்திள்கொள்ளப்பட்டுள்ளன.

## 6.2 முக்கிய செயற்பாட்டு பரிந்துரைகள்

அ. பிராந்தியங்களை இணைக்கக்கூடிய வகையிலான வளர்ந்து வரும் போக்குவரத்து மற்றும் பொருட் போக்குவரத்து மையம், மற்றும் பொருளாதார மையமாக சேவை வழங்கக்கூடியவாறு இலங்கையின் அமைவிட ஆற்றலை முன்னேற்றுதல்.

ஆ. பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய பொருளாதார இராஜதந்தர முயற்சிகளை தொடர்ச்சியாக வன்மையாக மேற்கொள்ளல், அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களைக் கவர்தல், இலங்கை மீதான சர்வதேச நாடுகளின் நேரான பார்வையின் பலன்களைப் பெற்றுக் கொள்ளல்.

இ. வெளிநாட்டுக் கொள்கைகளில் இலங்கையை முன்னிலைப்படுத்தியவாறான இந்து சமுத்திரத்தை மையப்படுத்திய பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்தல். நாட்டில் நடைமுறையில் உள்ள IORA இன் குறிக்கோள்களாக கடல்சார் கவனம் மற்றும் பாதுகாப்பு, கடல்சார்ந்த வளங்களின் பாதுகாப்பு, கடற்பயணச் சுதந்திரம், நீலப் பொருளாதாரத்தின் பயனைப் பெற்றுக் கொள்ளல் போன்றவை காணப்படுகின்றன.

ஈ. வெளிநாடுகளீல் இருக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை விருத்தி செய்வதற்கான சிறந்த மற்றும் அதிக பயனுள்ள சேவைகளை வழங்குதல். அத்துடன் ஆட்கடத்தல்களுடன் சம்பந்தப்பட்ட ஆவண மோசடிகளைக் குறைத்தல்.

உ. மனவர்க் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கான பேச்சுவார்ததை மற்றும் வசதிகளை ஏற்படுத்தல் மற்றும் இலங்கையின் புலம்பெயர்வு தொடர்பாக பரப்பப்பட்ட தவறான கருத்துகள் பற்றி கவனம் செலுத்தல்.

ஊ. வெளிநாட்டுக் கொள்கைகளுக்கான மைல்கல்லாக பரிஸின் காலநிலை மாற்றம் சம்பந்தப்பட்ட அர்ப்பணிப்பை இலங்கையின் காலநிலை மாற்ற பாதிப்பினைக் குறைப்பதற்காக நடைமுறையில் எடுத்தல்.

# ET7. வறுமை மற்றும் சமத்துவமின்மை

## 7.1 சுருக்கம்

வறுமைக்கோட்டிற்கு கீழ்பட்டோரின் சதவீதத்தை மொத்த சனத்தொகையில் (தலைகளின் எண்ணிக்கைப்படி) 6.7 வீதமாகப் பேணி இலங்கை குறிப்பிடத்தகளவு சிறந்த பதிவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய வறுமைக்கோட்எற்கமைய நாளொன்றுக்கு 1.99 அமெ. டொ என்ற வருமானத்தை என்ற அளவை 1.9 வீதமானோர் பெறுகின்றனர். எவ்வாறாயினும் இந்நிலையானது இயற்கை அழிவுகளால் பாதிக்கப்பட்டோர் உட்பட ஏனைய வறுமைகளால் பாதிக்கப்பட்டோர் மீது இச்சதவீதம் பிரதிபலிக்காது. சுகாதாரம், கல்வி, தங்குமிடம், நாகரீகமான தொழில்களின் மூலமான வருமானம், பயனுள்ள விதிமுறைகளுக்கான முதலீடு, பாதுகாப்பு மற்றும் நீதியில் அனைவருக்கும் சம அளவிலான நியாயம் போன்றவற்றை அணுகுவதற்கான ஆகக்குறைந்த தரத்திற்கான அணுகலின் குறைபாடு. வறுமையின் இவ்வாறான வடிவங்கள் சனத்தொகையில் கீழுள்ள 40வீதத்தினரைப் பாதிக்கும். எனினும் சமூக இழப்புகள், ஓய்வின்மை, உயர் தற்கொலை வீதம், ஊழலுக்கு அடிமைப்படுதல், பணம் பறித்தல், திருட்டு, குண்டர் தாக்குதல், குற்றங்கள், போதைப்பொருள் அடிமையாக்கம் விரிவுபடுதல், போதைப்பொருட்கள் மற்றும் வன்முறைகள் போன்றவை முழு சனத்தொகையையும் பாதிப்பதுடன் நாட்டின் சமூக சமநிலையை குழம்பச் செய்கின்றது.

52.6 வீதம் என்ற மொத்த வீட்டு வருமானத்தில் 20வீதமானது வசதி படைத்த வீட்டுகளுக்குச் செல்வதுடன் 20 வீதமான வசதி குறைந்தோர் 4.5 வீதம் என்னும் வீட்டு வருமாத்தைப் பகிர்வது வருமான சமத்துவமின்மையை பிரதிபலிக்கின்றது. அத்துடன் பிராந்திய வாரியாக கொழும்பில் தலைக்கு 1.4 வீதத்திலும் முல்லைத்தீவில் 28.8 வீதத்திலும் காணப்படும் வேற்றுமை சார்பு வறுமை பிராந்தியங்களுக்கு இடையிலும் காணப்படுவதைச் சுட்டிக் காட்டுகின்றது. இவ்விடயங்கள் 2030ம் ஆண்டில் அனைத்து விதமான வறுமையையும் நீக்கும் நிலைபேறான முன்னேற்ற இலக்குகளின் தேசிய எதிர்நோக்குப் பார்வையின் கவனத்தை ஈர்க்கும்.

கீழுள்ள 40 வீதமானவர்களின் வறுமைக்கு காரணமாக கட்டமைப்பு பிரச்சினைகள், மற்றும் சமூக அரசியல் மற்றும் நிறுவனப் பிரச்சினைகள் கைகாட்டப்படுகின்றன. இக்காரணிகள் 1) குறைந்த அளவிலான வசதி குறைந்தோர் பயன் பெறக்கூடியவாறு அமையப் பெற்ற துறைகளின் வளர்ச்சி 2) காரணிகளின் இயக்கத்துக்கான கொள்கை ஆதரவின் குறைபாடு 3) மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளின் விரிவுகளுக்கான அணுகலானது வசதி குறைந்தோர் மற்றும் அதற்கு அருகாமையில் உள்ளோருக்குக் குறைவாகக் காணப்படுதல். 4) கண்டுபிடிப்புகளின் அதிக விலை காரணமாக வசதி குறைந்தோரால் கொள்வனவு செய்ய முடியாதிருத்தல் 5) குறைந்த வருமானம் பெறுவோரின் வீட்டிலுள்ள உடல் மற்றும் உள ரீதியாக பாதிப்படைந்தோருக்கான போதிய சமூகப் பாதுகாப்பின்மை 6) வளர்ச்சிக்காக வளங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு மக்களுக்கு வழிகாட்டக்கூடிய முறைப்படுத்திய சட்ட ரீதியான உள்நாட்டுப் பொருளாதார மற்றும் சமூக நிறுவனங்கள் காணப்படாமை 7) வளர்ச்சிக்காக துறைகளுக்கிடையிலான தொடர்பு மற்றும் வலையமைப்பு காணப்படாமை போன்றவற்றை உள்ளடக்கியது.

இக்காரணிகளால் உள்ளார்ந்த வளர்ச்சியின் பின்தங்கிய நிலை, பயன்கள் சுரண்டப்படுதல், சமத்துவமின்மை வளர்ச்சி பெறல், உற்பத்திகளை மக்கள் அணுகுவதற்கான வாய்ப்புகள் குறைவடைதல், சிறந்த வருமானம் மற்றும் பரவுகையுடனான கொள்வனவு மற்றும் வர்த்தகம், மற்றும் ஆட்சியில் பொதுசனத்தின் ஈடுபாட்டின் குறைவு, தேசிய ரீதியலான பிரச்சினைகளுக்கு பொதுச்சம்மதம் போன்ற விடயங்கள் வறுமை நிலையில் தாக்கத்தை ஏற்படத்துகின்றன.

### 7.2 முக்கிய செயற்பாட்டுப் பரிந்துரைகள்

அ. பால் மற்றும் இளைஞர்களின் குறிப்பிட்ட கூறுகளைக் கொண்ட உள்நாட்டு மட்டத்திலான பெரிய அளவு பொருளாதாரத்துக்கு சாதகமான சிறிய அளவு பொருளாதாரத்தை உறுதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. தனிப்பட்ட மற்றும் நிறுவன ரீதியான உற்பத்தித் துறைகளின் கூட்டினை பிரதேச வாரியாக மாகாண மட்டம் முதல் தேசிய மட்டம் வரை ஏற்படுத்தல். வசதி குறைந்தோருக்கு பயனளிக்கும் வகையிலான உற்பத்தி மற்றும் சேவைகளின் வளர்ச்சி ஆற்றலின் வழங்கல் சங்கிலியை முன்னேற்றுதல். இது தேவைக்கு ஏற்றாற் போல் உள்ளீட்டை வழங்கும் முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இ. 2030ம் ஆண்டின் வறுமையற்ற இலங்கை என்ற தொனிப்பொருளை மையப்படுத்தி பொதுசன, தனியார், மற்றும் மக்கள் முகவர்கள் தமது நிகழ்ச்சிகளில் வறுமை ஒழிப்புக்கான மறுமொழியை வழங்குவதை உறுதி செய்தல். மேலும் 2030ம் ஆண்டு தூர நோக்கிற்காக ஒவ்வொரு தனி மனிதனும் நிறுவனமும் தனக்காகவும் பின் மற்றவர்களுக்குமாக செய்தவை பற்றி தகவல் எடுத்தல்.

ஈ. நாடுபூராகவுமான சுயநிர்வகிப்பு அபிவிருத்தி முறையை மக்களிடையே அறிமுகப்படுத்தி வசதி குறைந்த மற்றும் பின்தங்கிய சமூகத்தின் மக்கள் விவகாரத்துடனான குடிமக்கள் ஈடுபாட்டிற்கான பிரச்சாரங்களை அறிமுகப்படுத்தி அதனை வழக்கமாக புதுப்பித்தல்

உ. சிறந்த ஆட்சி மற்றும் நெறிமுறைகளை கற்பிக்கக்கூடிய உள்ளார்ந்த மற்றும் பதிலிக்கக்கூடிய சமூக நிறுவனங்களை மேம்படுத்தல். வசதி குறைந்தோர் மற்றும் வறுமை மற்றும் சமத்துவமின்மையால் பாதிப்புற்றவர்களின் எழுச்சிக்காக நேரடியாக சென்றடையக்கூடியவாறான சேவை நிகழ்ச்சிகளுக்கான வழியை ஏற்படுத்தல்.

ஊ. வசதி குறைந்த பெண்களை மையப்படுத்தி பால் ரீதியான நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான திறன் பயிற்சிகளை வழங்குதல்.

## ET8. நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் சமாதானம்

### 8.1 சுருக்கம்

நல்லிணக்கமானது உறுதியான அரசியல் மற்றும் பலதரப்பட்ட துறைகளின் தலையீடுகளின் மூலம் வெற்றிபெறச் செய்யப்படக்கூடிய சிக்கலான ஓர் நடைமுறையாகும். ஒரு தேசிய நல்லிணக்கச் செயற்பாட்டை அறிமுகப்படுத்தி, விரிவாக்கி உறுதிப்படுத்துவதற்கு அதிக பிரயத்தனம், வெற்றிகரமான அரசாங்க ஆணைகள் மூலம் விரிவுபடுத்தல் என்பன அவசியமாகின்றது.

தேசிய அரசாங்க நல்லிணக்கக் கொள்கையானது 2017 மே மாதம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. இக் கொள்கை இம்முயற்சியை வழிநடத்த கட்டமைப்புகளையும் விதிமுறைகளையும் நிறுவியது. அடிப்படையாக இந்நல்லிணக்கக் கொள்கை நிலைபெற, அனைத்துச் சமூகத்தினராலும் நம்பகமானதாக ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், சட்ட சீர்திருத்தத்தின் விரவான மற்றும் இடைத்தொடர்பான கூறுகளைச் சார்ந்ததாகவும் காணப்படும். நல்லிணக்கம் மற்றும் இடைநிலை நீதி, குறிப்பிட்ட இலக்குகள் மற்றும் நிறுவன வழிகாட்டுதல்கள் கொண்டு காணப்படும் அனைத்தும் சிறப்பானதாக தெரியினும் அவை நீண்ட காலமாக நிறைவேற்றப்பட்டவை. இவ்வாறான குறிவைக்கப்பட்ட முயற்சிகள் சட்டம், மனித உரிமை, சிறந்த ஆட்சி மற்றும் சிறந்த பொருளாதாரக் கொள்கைகள் போன்றவற்றின் விதிமுறைகளை மதிப்பதன் மூலம் எய்தப்பெற வேண்டும். இவை இன்றி இக்குறிக்கோள் தவிடுபொடியாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகளுக்கான அடிப்படைப் பகுதிகளாகவும் இடைக்கால மற்றும் நீண்ட கால நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டிய கண்டறியப்பட்டுள்ள பகுதிகள்: இளைஞர் வேலை வாய்ப்பின்மைப் போராட்டம், மேலும் பயனான, உள்ளகமான, வெளிப்படையான மற்றும் சமத்துவமான பிராந்திய நிறுவனத்திற்காக நிறுவனங்களின் சீர்திருத்தம், பால் சமத்துவத்தை மேம்படுத்தல், நிலத்தை மீள் அளித்தல் மற்றுமு் நலப் பயன்பாடு, மற்றும் மொழி உரிமை.

புதிய பாதுகாப்புச் சூழலில் இலங்கை முன்னைய நிலையில் அல்லாத, வளர்ந்து வரும் பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும். அதேநேரத்தில் முந்தைய சமூகப் பிரச்சினைகளுக்குக் காரணமான பாதுகாப்புப் பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடும். ஆகவே புதிய பாதுகாப்புக் கட்டமைப்புகள் பிராந்தியத்தின் அல்லது மக்களின் பௌதீக பாதுகாப்பிற்கு அப்பால் அமையப்பெற வேண்டும். மேலும் இலங்கை பயன்பெற்றுக் கொண்டிருக்கும் தேசிய பாதுகாப்பு நெறிமுறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

பாதுகாப்பும் நல்லிணக்கமும் நிலைபேறான முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக அமையக்கூடிய சமாதானத்திற்குப் பாதையமைக்கின்றது. பாதுகாப்பானது இருதரப்பு நம்பிக்கை, மதிப்பு, பொது மரியாதைகள் மற்றும் நெறிமுறைகளின் அடிப்படையில் அமைந்து நெகிழ்தன்மையான சமூகத்தை கட்டியெழுப்ப உதவுகின்றது. இவ்வாறான பாதுகாப்பு வெளியால் திணிக்கப்பட்ட, அதிகாரிகளால் தகாத முறையில் பயன்படுத்தப்பட்டு பயத்தையும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தக்கூடிய பாதுகாப்பை விட சிறப்பானதாகும். அதேநேரத்தில் அடிப்படை சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாத்தல், வெளியார்ந்த தாக்குதலில் இருந்து பாதுகாப்பளித்தல், இணையத்தள ஆபத்துகள், சூறையாடுதல் மற்றும் சமூகக் குற்றங்கள், மற்றும் எதிர்பாராத அனர்த்தங்கள் போன்றவற்றிற்காக குறிப்பிடத்தக்க அளவிலான சிவில் மற்றும் இராணுவ அதிகாரங்களின் தேசிய பாதுகாப்பு அவசியமாகின்றது.

முக்கிய பாதுகாப்பு பிரச்சினைகளின உள்ளடக்கம்: தீவிரவாதம் - இளைஞர், மார்க்கவாதிகள் மற்றும் நெறிமுறையாளர்கள் தீவிரவாதத்திற்கு அடிப்படையாக அமைகின்றனர். கடல்சார் பாதுகாப்பு – ஒரு தீவு நாடாக எமதுகடல் எல்லையைப் பாதுகாத்தல். பொருளாதாரப் பாதுகாப்பு – எமது நெருக்கடியான பொருளாதார கட்டமைப்பைப் பாதுகாத்தல். இணையப் பாதுகாப்பு - இணைய ஆபத்துகளுக்கெதிராக எமது கட்டமைப்பைப் பாதுகாத்தல். சுகாதாரப் பாதுகாப்பு – தொற்று நோய்கள் மற்றும் வைரஸ்களுக்கான காரணிகளில் இருந்து பாதுகாப்பு. சூழல் பாதுகாப்பு - இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகளால் நாட்டில் ஏற்படும் அனர்த்தங்களைக் குறைப்பதுடன் காலநிலை மாற்றத்துக்கான காரணிகளை கட்டுப்படுத்தல். சக்திப் பாதுகாப்பு – சுயாதீனமான சக்தியைப் பெறுவதுடன் எதிரகாலத்திற்கு நிலைபேறான சக்திப் பாதுகாப்பை வழங்குதல். மற்றும் நாடுகடந்து நடைபெறும் குற்றங்கள் - இலங்கையின் அனைத்துவிதமான ஆட்கடத்தல் மார்க்கங்களையும் ஒழித்தல்.

## 8.2 முக்கிய செயற்பாட்டுப் பரிந்துரைகள்

### நல்லிணக்கம்

அ. நல்லிணக்கத்துடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி நிரல்களான காணாமல்போனோர் சம்பந்தமான பயனுள்ள காரியாலமொன்றை நிறுவல், முன்னேற்றப்பட்ட ஈடுசெய்தல் முறை, உண்மை மற்றுமு் நல்லிணக்க ஆணைக்குழு, மற்றும் யுத்த காலத்தின் போதான பாரிய குற்றங்களுக்கான நம்பகமான நீதிமன்ற முறையொன்றை நிறுவுதல் போன்றவற்றின் தேவையை துரிதமாக நிறைவேற்றல்.



4-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. அனைத்து சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியவாறு சட்ட சீர்தருத்தங்களை ஏற்படுத்தல் அல்லது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய சமமான மாற்று அரசியல் இடவசதி போன்றவற்றை தெளிவாக எடுத்துக்கூறல்

இ. ஜனாதிபதி, மற்றும் அமைச்சர்களின் பூரண ஆதரவுடன் சீர்திருத்தங்கள் பற்றிய விளக்கங்களை மக்களிடம் சேர்ப்பதற்கு விரவான தொடர்பாடல் முறையொள்றை அறிமுகப்படுத்தல். பிரச்சினைகளை தீர்க்கவும், நல்லிணக்க வளர்ப்பிற்குமான நிகழ்ச்சித்திட்டங்களை ஏறபாடு செய்தல்

ஈ. வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசத்தில் இராணுவத்தால் பரிமுதல் செய்யப்பட்ட நிலங்களை முழுமையாக மீள் கையளிப்புச் செய்தல் அல்லது நட்டஈடு வழங்கல். சில பாதுகாப்பு நிலைமைகளுக்காக கட்டாயமாகப் பரிமுதல் செய்ய்ப்பட்ட பிரதேசங்களுக்கான பொருத்தமான நட்டஈடுகள் வழங்கப்படுவதுடன், அவற்றுக்கான நியாயமான விளக்கங்களை சட்டரீதியாக வழங்கல். இராயுவத்தால் பரிமுதல் செய்யப்பட்ட நிலங்களை மீள ஒப்படைக்கும் போது அவை தெளிவாக வெளித்தெரியக் கூடியதாகவும், பாகுபாடின்றியும், மேற்கூறப்பட்ட தொடர்பாடல் முறையை கொண்டமைந்ததாகவும் அமைய வேண்டும்.

உ. அரசாங்க செவைகளில் பால் சமத்துவத்தை விரிவுபடுத்துவதற்கான உடனடி முயற்சிகளை மேற்கொள்ளல், இது குறிப்பாக உயர் நிலைகளில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

## தேசிய பாதுகாப்பு

அ. உமது பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நிறுவப்பட்டுள்ள தேசிய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கான தேசிய பாதகாப்புக் கொள்ளை ஒன்றை ஏற்படுத்தல். (பிராந்திய, மற்றும் முப்படைத்துறை மற்றும் தனிநபர் பாதுகாப்பு)

ஆ. இலங்கை கடல்வழி பற்றிய விரிவான மேற்பார்வை முறையொன்றை ஏற்படுத்தல். நடைமுறையில் காணப்படும் கடல்வழி உளவுத்துறை, மேற்பார்வை, ஒருங்கிணைக்கப்பட்ட C3I (கட்டளை, கட்டுப்பாடு, தொடர்பாடல் மற்றும் உளவு) இன் திறன், கடல் மற்றும் வான் படைகளின் திறன் என்பன மதிப்பீடு செய்யப்படுவதுடன் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இ. நாடுகடத்தலுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களை குறைப்பதற்காக குடியேற்றங்கள் சம்பந்தப்பட்ட உறுதியான சட்டங்களை ஏற்படுத்துவதடன் எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தல். எல்லைப்பாதுகாப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான விரிவான பயிற்சியின் மூலம் இவை வலுப்படுத்தப்பட வேண்டும்.

ஈ. இலங்கை சட்டத்திற்குறப்பட்ட பாரிய அளவிலான வெளிநாட்டுத் திட்டங்கள் தொடர்பான பாதுகாப்பு கண்காணிப்பு முறையை ஏற்படத்தல். இக்கண்கானிப்பு வெளிநாட்டு பாரிய திட்டங்களினால் உள்நாட்டு உற்பத்தி மற்றும் சேவை திறன், தேசிய பொருளாதாரத்தின் நிலையான செயற்பாடு, அடிப்படை சமுதாய ஒழுங்கு, வாழ்வு முறை போன்றவற்றின் பாதுகாப்பில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அறிக்கையிடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. இலங்கையில் இணையம் சம்பந்தப்பட்ட குற்றங்களை மேற்பார்வை செய்ய இடை முகவர்கள் மற்றும் இணையச் செயற்பாட்டு கட்டுப்பாட்டு நிலைய உதவியுடன் தேசிய இணையப் பாதுகாபப்பு உத்திகளை அறிமுகப்படுத்தல். இணையப் பாதுகாப்பு உத்திக்காக பொருத்தமான அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் இடை முகவர் இணையப் பாதுகாப்புப் படையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

## ET9. இளைஞர் மற்றும் மாற்றுத் தலைமுறை நோக்கங்கள்

### 9.1 சுருக்கம்

இளைஞர் குடித்தொகையானது 3% கிராமம், நகரம் மற்றும் தோட்டப்புற பிரதேசங்களின் சனத்தொகையில் காணப்படுவதுடன் அவை சமமாகப் பரவியுள்ளது. 2012 சனத்தொகை மற்றும் வீட்டுமட்ட தகவல் கணக்கெடுப்பின்படி மொத்த சனத்தொகையில் 4.92 மில் (அண்ணளவாக 23 வீதம்) ஆனவர்கள் 2016 இடைப்பகுதியில் இவ்வயதினராகக் காணப்படுவர் என எதிர்பார்க்கப்பட்டது.

2014ம் ஆண்டில் வேலையற்ற இளைஞர்கள் 18.5 வீதமாகக் காணப்பட்டது. மேம்படுத்தப்படாத உயர்கல்வி முறை, உயர் கல்வி மற்றும் தனியார் துறையுக்கிடையிலான போதுமான தொடர்பின்மை, ஊழியர் சந்தைகக்கேற்றவாறான திறமைகளின் பொருந்தாமையின் விளைவு, போன்றவை இளைஞர்களின் தேசிய பங்கினை பெற்றுக்கொள்வதற்குத் தடையாக உள்ளன. இலங்கை அசரகல்வியும் தகனியார்துறை வேலை வாய்ப்புகளும் பொருந்தா நிலையிலுள்ளது. அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் தனியார் நிறுவனங்களில் குறைவாகவே காணப்படுகின்றன. பொறியியல் மற்றும் மருத்துவ துறையில் சித்தித பெறும் பட்டதாரிகள் வெளிநாடுகளில் தொழில்புரிய முனைவதால் உள்நாட்டிற்கான பொருளாதாரத்தின் அறிவியல் பங்கு வளர்ச்சி ஸ்தம்பிக்கப்படுகிறது. கணினத்துறை மற்றும் ஆடை உற்பத்தி துறை என்பனவே சர்வதேச ரீதியில் முன்னணியில் காணப்படுகின்ற துறைகளாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் இத்துறைகளுக்கான தேவைகளை நிறைவுசெய்வதற்கா கல்விமுறை பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மேலும் அவை பொருளாதார சுற்றுலா மற்றும் பச்சைத் ரொழில்நுட்பம் என்பவற்றையும் உள்ளடக்கும்.

காலநிலையின் எதிர்பாரா மாற்றங்களும் இலங்கை இளைஞர்களின் பொருளாதார மற்றும் வாழ்வாதார நிலைகளை பாதிப்படையச் செய்வதைப் போல இளைஞர்களையும் பாதிக்கச் செய்கின்றது. விவசாயம், தோட்ட வளர்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை என்பவற்றில் உள்ள குறைவான வேலை வாய்ப்ப மற்றும் குறைவான வருமானம் என்பவற்றால் இளைஞர்கள் அவற்றில் ஈடுபடுவது குறைவாகக் காணப்படுகின்றது.

இலங்கையின் சனத்தொகையானது மேல் மாகாணம் தவிர்த்து கிராமப்புறத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும் விவசாயத்தைக் கொண்டமைந்ததாகவும் காணப்படுகின்றது. அதேவேளை பெரும்பாலான இளைஞர்கள் கிராமப்புறங்களை விட்டு நிரந்தர அல்லது தற்காலிக வேலைகளுக்காக நகர்புறத்தை நோக்கி வருகின்றனர். இதில் பெரும்பாலானோர் அதிக வேலைவாய்ப்புகள் உள்ள கட்டுமானத் தொழிலை பெற்றுக் கொள்கின்றனர். அவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டாலும் அதனை அவர்கள் தமது பிரதான வாழ்வாதாரமாக மேற்கொள்வதில்லை. தமது பாதுகாப்பான வீட்டு உணவுத் தேவையை நிறைவேற்றிக் கொள்ளவே மேற்கொள்கின்றனர். இவ்வாறான நிலை விவசாயத்துறையில் நிரந்தரமான திறமையான வேலையாட்களைக் குறைப்பதுடன் கட்டுமானத் துறையில் நம்பகமான பொருத்தமான வேலையாட்களின் குறைபாடு ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித முன்னேற்ற அறிக்கையில் (2014) இளைஞர் முன்னேற்ற அறிக்கைப்படி இளைஞர்கள் தமது அரசியல் அறிவு மற்றும் ஆவேசம் போன்றவற்றால் மக்களால் அதிகம் கவனத்திற்கு உட்படுகின்றனர். மேலும் இலங்கையின் பிராந்திய, அதன் கொள்கைகள் சம்பந்தப்பட்ட, மற்றும் சமூகத்துடனான முன்னால் முடிவுகளில் அவர்கள் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை செய்துள்ளனர். பொருத்தமான அரச தலைமைத்துவமின்மை, தொடர்பாடலின்மை போன்றவை இளைஞர்களின் நிலைபேறற்ற முன்னேற்றங்களான வேலையின்மை, சமமான பொருளாதார பகிர்வின்மை, பேரழிவின் போதான மறுமொழியின் குறைபாடு மற்றும் குறைக்கும் முறைகள், உணவுப் பாதுகாப்பின்மை போன்றவற்றை உண்டாக்குகின்றது.

## 9.2 முக்கிய செயற்பாட்டுப் பரிந்துரைகள்

அ. இளைஞர்களின் வாழ்விற்கும் நாட்டின் மாற்றமடையும் ஊழியர் சந்தை தேவைக்கும் ஏற்றவாறான தரமான கல்வியை வழங்குவதுடன் திறன் விருத்திக்கு வழிவகுத்தல். இவ்வாறான மாற்றங்களுக்கு ஒத்திசைகின்ற மற்றும் கல்விப் பிண்ணனியுள்ள திறமையான, சுறுசுறுப்பான அதிகார இளைஞர்கள் மீது முதலீடுகளை மேற்கொள்ளல்.

ஆ. இளைஞர்களுக்குப் பாதுகாப்பான எதிர்காலத்தை ஏற்படுத்துவதற்காக விஞ்ஞானமும் அனுபவமும் கூறியதற்கு முரணாக அமையாதவாறான ஓர் நிலைபேறான முன்னேற்ற மற்றும் வளர்ச்சி மாதிரியை உருவாக்கல். இந்நிலமைக்குத் தீர்வாக சூழல் தொகுதியின் ஆற்றவளத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சுற்றுவட்ட பொருளாதார அபிவிருத்தி முறைமை பரநிதுரை செய்யப்பட்டுள்ளது.

இ. விவசாய தொழில் முனைப்பாளர்களுக்கு பதவி உயர்வளித்தல் உட்பட விவசாயத்துறையில் தொழிலை ஏற்படுத்த முனையும் இளைஞர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குதல். இதன்மூலம் சிறு அளவிலான விவசாய வர்த்தகத்தில் இளைஞர்கள் இணைவது தூண்டப்படுவதுடனட் முன்னேற்றமும் காணும்.

உ. தனியார் துறைகளுக்கு புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதில் தொடர்ச்சியான கவனத்தை செலுத்தவும் ஊழியர் சக்திக்கான இளைஞர் பங்கெடுப்புக்குத் தேவையான புதிய தொழில்நுட்பத்தைக் கண்டறியவும் மேம்படுத்தவும் தூண்டுதல் அளித்தல்.

ஊ. அரசாங்கத்தின் நிலைபேறான முன்னேற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இளைஞர்களின் செயலாக்கத்திறனை பயன்படுத்தல்.

எ. தனியார் மற்றும் பொதுப் பொருளாதார துறைகளில் யுவதிகளின் சமனான பங்களிப்பை உறுதி செய்வதற்கான அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றுச் சராம்சம்

# EV

## EV. 2030 முன்னோக்கு – சுரக்கம்

மேற்கூரப்பட்ட பிரதான பரிந்துரைகளை வெற்றிகரமாக செயற்ப்படுத்துவோமாயின் 2030 அளவில் இலங்கையானது ஒரு தன்னிறைவான மத்திய தரத்திற்க்கு மேற்ப்பட்ட வருமானமுடைய முன்னேற்றமடைந்த செழிப்பான பொருளாதாரம், பசுமையான சூழல் மற்றும் ஒற்றுமையான் அமைதியான ச்மூகத்தைக் கொண்டதாக மாறும் எனலாம்

### கொத்தணிகள்

### EV.C1 பொருளாதாரம்

இலங்கையானது தீர்மானிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்க்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் வலுவாக்கப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதாரத்துடன் இணைந்து கொள்வது தெளிவாக தெரிகின்றது. அதேவேளை நோக்கு 2025 இல் தீர்மானிக்கப்பட்ட வளர்ச்சியை அடைவதற்க்காக போதுமான அளவு பாதுகாப்பு வலைகளை ஏழைகளுகு வழங்குவதும் முக்கியமான நோக்காகும்

அத்தோடு வர்த்தகம் முதலீடு உழியர் சந்தைக் கொள்கை போன்றவற்றில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் கலந்துரையாடப்பட்டபடி மாற்றங்களை ஏற்ப்படுத்துவது பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைவதில் காணப்படும் தடைகளை அகற்ற முக்கியமானதாகும் இது 2030ல் அதிக மத்திய தர வருமானம் மற்றும் இந்து சமுத்திரத்தின் மையம் எனும் அறிவு சார் சூழல் சந்தைப் பொருளாதாரம் மற்றும் அதிக போட்டியான இலக்கினை அடைய உதவும்

### EV.C2. சூழல்

ஸ்ங் மற்றும் ஏனைய தேசிய பசுமைக் கொள்கைகளுாடாஜ தன்னிறைவு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் 2030ல் இலங்கையானது மாசற்ற தூய பசுமையான சூழல் மற்றும் உயர் வாழ்க்கைத் தரம் என்பவற்றை அடைய முடியும் இதற்க்காக சூழல் தன்னிறைவானது சமத்துவம் மற்றும் வறுமை ஒழிப்பு மூலம் அடையப்படவில்லை மாறாக மசுமை பசுமை வளர்ச்சி மூலம் தான் பெறப்பட்டது என்பதனை உறுதி செஇவதற்க்கான முயற்சிகள் மற்றும் கொள்கைகள் அவசியமாகின்றன்.

உடனடியாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரதான துறைகள் சுகாதாரம் திண்மக் கழிவு முகாமை விவசாயம் மற்றும் போக்குவரத்து என்பனவாகும்

2020ம் ஆண்டிற்க்கான நோகானது பொது சேவை மையங்களையும் தனியார் மையங்களையும் அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாக பிரதானமாக பாடசாலை சிறுவர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி மற்றும் ஊக்குவிப்பு மூலம் கொண்டு செல்வது மற்றும் 2030 நோக்கினை நோக்கிய ஆரம்பப் படிகளை எடுத்து வைப்பதுமாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EV.C3. சமூகம்

எம் நாடானது சூழல் மற்றும் சமூக பிரச்சினைகள் தேசிய சர்வதேச வளர்ச்சிக்கான அடையாலமாக்கப்பட்ட மாறிவரும் சர்வதேச கொள்கைமாற்றங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

இங்கு குறிப்பிட்ட அவ்வறான பிரச்சனைகளை வரி,மனித வள அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு பிணைப்பு சார்ந்த பொதுசனக் கொள்கைக்ளை ஆதாரமாக கொண்டே விளக்கமுடியும்

அரசின் தலையீடானது பல் துறை சார்ந்த வளர்ச்சிக்கு உதவுமாயின் 2025 இல் நாடானது பொருளாதார அபிவிருத்தியடைந்த சமூகப் பிணைப்பு மற்றும் சமத்துவம் சார்ந்த அரசியல் ரீதியாக பிணைக்கப்பட்ட நாடாக சமூக சமத்துவம் அமைதி சமாதான்ம் என்பவற்றை உறுதிப்படுத்த முடியும் அவாறான நிலைமையானது மக்களை நாட்டைவிட்டு வெளியேறாது சுதந்திரமான வாழ்ஹ்க்கையை வாழக்கூடியதாகவும் சிறந்த தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள கூடியதகவும் ஊக்குவிக்கும்

### துறை

## EV.S1. பயிர்ச்செய்கை மற்றும் உணவு

மக்களுக்கு போசாக்கினை பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறனான துறையாக தன்னிறைவான முறையில் விவசாயம் உருவெடுத்துள்ளது அத்தோடு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோரின் வாழ்க்கைத்தரமும் உஅர்த்தப்பட்டுள்ளது

பாரம்பரிய மாற்றம் பாரம்பரியமற்ற பயிர்களை உள்ளடக்கிய பழங்கள் காய்கறிகள் பூக்கள் மற்றும் ஏனையவற்றின் ஏற்றுமதி விவசாயமானது வளர்ச்சி மற்றும் பெறுமதிசேர் நனோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் மேற்க்கொள்ளப்படுமாயின் அது விவசாய அபிவிருத்தியில் பாரிய பங்களிப்பை வழங்கும்

இத் துறை நீண்ட காலம் நிலைத்திருக்க வர்த்தகத்திலுள்ள தொழில்நுட்ப தடைகளின் விழிப்புனர்வு மற்றும் ஃப்ட என்பன அவசியம்

## EV.S2. கல்வி

2030இல் உயர் மத்திய தர வருமான பொருளாதார நோகினைக் கொண்டிருப்பதால் தரமான அடிப்படைக் கல்வியை அனைவருக்கும் (முதியோர் கல்வி உட்பட) வழங்குவதோடு கல்வியின் பின்னான தொழில் வாய்ப்புக்களை ஏனைய நாடுகளில் காணப்படுவதைப் போலவே தொழில்நுட்பம் சார்ந்த பாடத்திட்டம் மற்றும் கற்ப்பித்தல் மூறைமை மூலம் மாணவர்களுக்கு வழங்க வேண்டும் அரசியக் தகமைகள் கொள்கை நிறுவுனர்கள் நொழில்நுட்பவியளாளர்கள் கல்வியளாளர்கள் ஒற்றுமையும் கடமையுணர்வுடன் கூடிய பங்களிப்புமே 2030ல் எதிர்ப்பாக்கப்படும் கல்வினிலையை அடைய உதவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### EV.S3. சக்தி

புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் வளர்ச்சி மற்றும் பாவனையாளர் பங்கெடுப்புடனான பரவலாக்கப்பட்ட மின் உற்பத்தி போன்றவற்றின் காரணமாக வலையமைப்பின் மிகக் கவனமான பரிமாற்றுகையும் பரவலாக்க நிர்வாகமும் அவசியமாகின்றது. சிறந்த மற்றும் நிலைபேறான முயற்சிகளின் செயற்பாடானது மின்சாரத்துறையில் புதுப்பிக்கத்தக்க சக்திக்கான முயற்சிகளை ஏற்படுத்தும். இதன்மூலம் பரந்த அளவிலான உற்பத்தியின் விநியோகத்திற்கு வசதியை ஏற்படுத்தல், சாதூர்யமான மின் விநியோகக் கட்டமைப்பு, சாதூர்யமான அளவீட்டு முறை மற்றும் தேவைகளின் நிர்வகிப்பு போன்றவை திட்டமிடப்பட்டுள்ளன.

### EV.S4. சுகாதாரம்

நாடளாவிய ரீதியில் தேசிய சுகாதார காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். பொதுசன தனியார் பங்குதாரர்களின் செல்வாக்கு அதிகரிகும் தர்மான நுகர்பொருட்களின் விநியோகத்தில் தெளிவான திட்டம் அமுல்ப்படுத்தப்படும் இலத்திரனியல் மருத்துவ முறை உருவாக்கப்படும்

### EV.S5. கடல் வளங்கள்

சமுத்திர சுகாதாரம் மற்றும் அபிவிருத்தியில் சமுத்திரத்தின் பங்களிப்பினை அதிகரிக்க அதிகரித்த விஞ்ஞான அறிவும் சமுத்திர தொழில்நுட்பமும் அவசியமாகும் கடல் சார் ஆய்வு உயிரற்ற வழங்களின் ஆய்வும் சமுத்திரம் சார் சுற்றாடல் துறை ஒழுங்கான திட்டமிடலின் பின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்

### EV.S6. போக்குவரத்து

அதிகரித்த போக்குவரத்து பயன்பாடு பாதுகாப்பு வினைத்திறன் மற்றும் நெருக்கடிக் குறைப்பு என்பன மூலம் நாட்டின் 2030 பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செஇவதற்க்கான இடம்பெயர்வுக்கான செலவினை பாதியாக குறைக்கலாம்.

### EV.S7. நகர அபிவிருத்தி மற்றும் பௌதீகத் திட்டமிடல்

தேசிய பௌதீகத் திட்டமிடலானது பிராந்தியங்களுக்கிடைப்பட்ட, பிராந்திய, மற்றும் உள்நாட்டு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை இனங்காணுவதற்கும், தெரிவு செய்வதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் பரந்த தேசிய மட்ட கொள்கை வழிகாட்டியாகக் கருதப்பட வேண்டும். சமூக பொருளாதார அபிவிருத்திக்காக சிறப்பான சேவையை வழங்கும் அனைத்தையும் ஒன்றாக அரசாங்கம் கருதுவதுடன் பய்னகளில் பாரியதை சமூகத்திடம் சேர்ப்பவை பற்றி அவதானம் செலுத்தலாம்.

### EV S8 நீர்

காலநிலை மாற்றம், வரட்சி அல்லது மழை ஆகியன இருந்தும், ஒவ்வொரு பிரசைக்கும் "தரமான குடிநீர் கிடைப்பதற்கான" வாய்ப்பு; "விவசாயத்திற்கான உறுதிசெய்யப்பட்ட நீர்",



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல், OFC மற்றும் வர்த்தகப் பண்ணைத்தொழில், "கிராமங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் நகரங்கள் ஆகியவற்றில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் "அடிப்படை துப்புரவேற்பாட்டு வசதிகளை வழங்குவதே நீர் துறையில் 2030 ஆம் ஆண்டு தொலைநோக்கிற்கான வழிகாட்டல் வரைபடத்தின் இறுதி இலக்காக அமையும்.

## (CROSS CUTTING THEMES) ஊடறுக்கும் தொனிப்பொருளட்கள்

### EVT1 காலநிலை மாற்றம், பேரிடர் மற்றும் காற்றின் தரம்

பொருத்தமான இசைவாக்கல் நடவடிக்கைகள்மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பாதுகாப்பற்ற தன்மையை குறைத்தல். மாசுறுதல் தொடர்புபட்ட சுகாதாரப் பிரச்சினைகைள் மிகவும் குறைக்கப்படும். நிலையுறுதிமிக்க காணிப்பயன்பாட்டு வழக்கங்கள், முன்கூட்டிய முன்னெச்சரிக்கை முறைமைகளை விருத்திசெய்தல், கூடிய காட்டுவளம் மற்றும் மரங்கள் ஆகியன நிலத்தில் நீரைத் தக்கவைப்பதை மேம்படுத்துவதோடு, அது நிலத்தினுள் ஊடுருவுவதை விருத்திசெய்து பேரிடரின் தாக்கங்களையும் குறைக்கும்.

### EVT2 ஒழுக்கநெறி, விழுமியங்கள் மற்றும் பிரசாவுரிமை

பயனுறுதிமிக்க ஒரு பொதுத் தெரடர்பாடல் உத்தியானது பொது விழுமியங்களையும், ஒழுக்கநெறிகளையும், ஓர் ஒற்றையாட்சி இலங்கைக்குள் வாழும் பிரசை என்ற ஓர் உணர்வையும் ஊட்டும். சமூக மற்றும் வரலாற்றுக் கல்வி இளம் மக்கள் மத்தியில் சுயேச்சையானதும் பொறுப்புமிக்கதுமான ஒருமனநிலையை ஏற்படுத்துவதோடு, ஏனைய சமூகங்களின் பாரம்பரியங்கள்பற்றிய புரிந்துணர்வையும் மேம்படுத்தும். சமஉரிமைகளை அங்கீகரித்தல்.

### EVT3 பால்நிலை

**60+** வயதுடைய மக்களின் தொகை 2022 ஆண்டிற்குள் 17 வீதத்தினால் அதிகரிக்கும் அதேவேளை, 2026 ஆம் ஆண்டளவில் ஆண்களின் சராசரி ஆயுள் 72.3 ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் பெண்களின் சாரசரி வாழ்வுக்காலம். 82.5 வருடங்களை எட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2022 வரை 35+ வயதுடையவர்களாகவிருக்கும் பெண்களின் மகப்பேற்று விகிதத்தில் ஓர் அதிகரிப்பும் முன்கூறப்படுகிறது. பெரும் உடல்நலம்சார் மற்றும் நீண்டகால பராமரிப்புச்செலவுகள் உள்ளிட்ட அதிகரித்த நிதிப் பாதுகாப்பின்மை. ஓர் ஒருங்கிணைந்த திட்டம் இளைப்பாற்று நன்மைகளைப் பலப்படுத்துவதோடு, மேலும் சிறந்த தொழில்களுக்காக 60+ வயதுப் பெண்களுக்கு மீள்திறனளிக்கிறது. இளம் பெண்களுக்குத் தொழில்நுட்ப மற்றும் தலைமைத்துவத் திறன்களில் பயிற்சியளிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் அவர்கள் சிறந்த வீதங்களிலான சம்பளத்தில் முறைசார் பொருளாதாரத்தில் பிரவேசிப்பதற்கு உதவும். ஓர் ஒன்றுபட்ட, ஒழுக்கநெறிமிக்க சமூகமும், பெரும் பொருளாதார உற்பத்தித்திறனும் அனைவருக்குமான சமவாய்ப்புகளில்தான் தங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**EVT4 ஆட்சி (Governance)**

பொதுத்துறையினால் நடத்தப்படும் நல்லாட்சிக்கான ஒரு வரைச்சட்டகம் அடிப்படைப் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு உதவுவதோடு, பயனுள்ள அமுலாக்கத்தையும் உறுதிப்படுத்தும். நன்கு வரைவிலக்கணப்படுத்தப்பட்ட முகாமைத்துவப் பொறுப்புகள், வகைகூறல், காத்திரபூர்வமான மூலோபாயத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயல் திட்டங்கள் மற்றும் சுயாதீன மேற்பார்வை ஆகியன பொதுத்துறைக்கான ஆட்சியின் முக்கிய அடிக்கற்களாகும். தனிமனித மட்டத்திலும், நிறுவனமட்டத்திலும் செலாற்றுகைக் கண்காணிப்பு மற்றும் மதிப்பிடல் முறைமைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கையிடல்மூலம் பொதுத்துறை அதிகூடிய பயனுறுதியோடும், வினைத்திறனோடும் நடத்தப்படலாம்.

**EVT5 புத்தாக்கம்,தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் (Innovation, Technology & Industry)**

வெற்றிகரமான புத்தாக்கவியலாளர்களுக்கான ஒரு வெகுமதியளித்தல் முறையைக்கொண்டு கருத்துக்களை ஒப்பிட்டு வளப்படுத்தலும், 2025 ஆம் ஆண்டிற்குள் வெற்றிகரமாக அமுல்படுத்துதலும் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ள கீழ் - மத்தியதர வருமான நாடுகள் மத்தியில் இலங்கையை முன்னிலைக்கு உயர்த்தும்.

**EVT6 சர்வதேசஉறவுகள் (International Relations )**

சர்வதேச நிறுவனங்களுடனும், இருதரப்பு நன்கொடையாளர் நாடுகளுடனும் இணைந்து செயற்படுவது அபிவிருத்திக்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவினைப் பெற்றுக்கெள்வதற்கான உறவை வலுப்படுத்தி விரிவுபடுத்தும். பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருளாதாரா இராஜதந்திர முன்னெடுப்புகளைப் பின்பற்றுவதனால், அபிவிருத்திச் செயற்பாடுகள் மேம்பாடடையும் அதேவேளை, அது, இலங்கைமீதான சிறந்த சர்வதேசக் கவனத்தைப் பயன்படுத்தி, வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வர்த்தகர்களையும் நாட்டிற்கு ஈர்க்கும்.

**EVT7 வறுமையும், சமத்துவமின்மையும்**

அரவணைப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூக நிறுவனங்கள் வருமானத்தை அதிகரிப்பதற்கு முதலீடுகளை முகாமைத்துவம் செய்வதில் முனைப்பாகச் செயற்படும். சமூகத்தினால் நிருவகிக்கப்படும் அபிவிருத்தியை மேற்கொள்ளும் சமூகங்களில் முக்கியமாகக் கவனம் செலுத்தும் நாடுதழுவிய குடியியல் கல்விப் பிரசார இயக்கங்கள் உள்ளூர் ஆட்சியை ஈடுபடுத்தும் விசேடமாக இனங்காணப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் பூர்த்தி செய்யப்படும் உள்ளடக்கத்தைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**EVT8 நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் சமாதானம்**

நல்லிணக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் முக்கிய நிலைமாற்று நீதிப் பொறிமுறைகளைத் தாபிப்பதற்கு உறுதுணைபுரியும். தேசிய நல்லிணக்கக் கொள்கைகளுக்கு மேலதிகமான கொள்கைகளும் செயல் திட்டங்களும் பெண்களுக்கெதிரான வன்முறைகள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு வலுவூட்டுதல், பெண்களின் முயற்சியாண்மை அபிவிருத்தி மற்றும், பால்நிலை ஒழுங்குமுறைப்படுத்தலை நிறுவனமயப்படுத்தல் முதலிய பிரச்சினைகளைக் கையாண்டு தீர்க்கும். இலங்கைக்கு நாட்டை எதிர்நோக்குகின்ற அச்சுறுத்தல் மார்க்கங்களோடு வளர்ச்சியுறக்கூடிய ஓர் உறுதியான பாதுகாப்பு மாதிரி அபிவிருத்தி செய்யப்படும்.

**EVT9 இளைஞர் பரம்பரைகடந்த கண்ணோட்டம்**

இலங்கையின் வாழிடவியல் முறைமையின் நடப்புத்திறனை அடிப்படையாகக்கொண்டு ஒரு சுழற்சி தேசியப் பொருளாதாரத்தை உருவாக்குவதோடு தொடர்புபட்ட துறைசார் தேசிய மூலோபாயங்களின் அடிப்படையிலான அரசாங்கச் செயற்பாடுகளும் தலையீடுகளும். சூழலியல் முறைமையை அடிப்படையாகக்கொண்ட அணுகுமுறையொன்றைப் பின்பற்றுவது பரம்பரைதாண்டிய சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தக்கூடிய இலங்கையின் இயற்கை வளங்களின் அறிவார்ந்த, வினைத்திறன்மிக்க, மற்றும், மூலோபாயம் மிக்க பாவனைக்கு இடமளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அறிமுகமும் மேலோட்டமும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிமுகமும் மேலோட்டமும்[2]

# I1

## I1. பின்னணி

ரியோ நகரில் நடைபெற்ற புவி தொடர்பான 1992 ஆம் ஆண்டு உச்சிமாநாட்டில் சர்வதேச சமூகம் நிலையுறுதிமிக்க அபிவிருத்திக்கான (SD) 2,500க்கும் மேற்பட்ட விரிவான பரிந்துரைகளை உள்ளடக்கிய நிகழ்ச்சிநிரல் 21 ஐயும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா வரைச்சட்டக சமவாயத்தையும் (UNFCCC) நிறைவேற்றியது. பத்து வருடங்களுக்குப்பின்னர், நிலையுறுதிமிக்க அபிவிருத்தி தொடர்பான 2002 ஜோகான்னஸ்பேர்க் உச்சிமாநாட்டில் (WSSD), 2000 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட 8 மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை (MDG) அங்கீகரித்தல் அடங்கலாக பின்தொடர் முன்மொழிவுகளை உலகத்தலைவர்கள் நிறைவேற்றினர். இருபது ஆண்டுகளுக்குப் பின்னர், 2012 றியோ+20 புவி தொடர்பான உச்சிமாநாட்டில், 2015 ஆம் ஆண்டிற்குப்பின்னரான பலதரப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை நோக்கிச் செயற்படுவதற்கு நாடுகள் இணங்கின. இந்த நடைமுறை காலப்போக்கில் 17 நிலையுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகள் சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் 2030 நிகழ்ச்சி நிரல் 2015 இல் ஐ.நா உறுப்பு நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் இட்டுச்சென்றது. இவ்வரைச்சட்டகத்தினுள், அனைத்து நாடுகளும் 2030 ஆம் ஆண்டிற்கான தமது தொலைநோக்கை நிர்ணயித்து, நிலையுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான வருடாந்த தேசிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் தேசிய 2030 தொலைநோக்கானது, 2017 ஜனவரி 02 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அத்தகையதொரு அறிக்கையைத் தயாரிக்குமாறு சனாதிபதி வல்லுநர் குழுவொன்றிற்கு (PEC) ஆணை வழங்கியபோது விளக்கியுரைத்த தொலைநோக்கிற்கு விளக்கமளிக்கவும் தெளிவுபடுத்தவும் முயலும் ஒரு மூலோபாய ஆவணமாகும். அத்தொலைநோக்கில், 2030 ஆம் ஆண்டிற்குள் இலங்கை செழிப்பானதும், போட்டித் தன்மைமிக்கதும், முன்னேற்றமடைந்ததுமான ஒரு பொருளாதாரத்தோடும் பசுமையானதும் செழிப்புறுவதுமான ஒரு சூழலோடும், அரவணைப்புத் தன்மைகொண்டதும் இணக்கமானதும், சமாதானமானதும் நீதியானதுமான ஒரு சமூகத்தோடும் ஒரு நிலையுறுதிமிக்க, உயர் நடுத்தர பொருளாதாரமாக மாறுவத்றகு எதிர்ப்பார்க்கின்றது. சனாதிபதியின் தொலைநோக்கை மேலும் விரிவாக்கி, உடனடுத்த 2020 மற்றும் 2025 ஆண்டுகளுக்கான நிலையுறுதிக் கண்ணோட்டங்கள் அடங்கலாக 2030 ஆம் ஆண்டிற்குள் அத்தகைய நிலையுறுதிமிக்க எதிர்காலத்தை அடைவதற்கான நடைமுறைச்சாத்தியமான வழித்தடத்தை இவ்வறிக்கை நிச்சயிக்கின்றது. PEC உறுப்பினர்கள் (பின்னிணைப்பு ஆ) மற்றும்

2 எழுத்தாளர் குழு – மொஹான் முனசிங்க (தலைவர்) மற்றும் ஜனாதிபதி நிபுணர் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவர்கள் அடங்கலாக இவ்வறிக்கைக்குப் பங்களிப்புச் செய்தவர்கள் (பின்னிணைப்பு அ) பலதரப்பட்ட நிலையுறுதிமிக்க அபிவிருத்தித் தொனிப்பொருள்களை நன்கறிந்தவர்களாவர். அவர்கள் இவ்வறிக்கையைத் தயாரிப்பதில் பலதரப்பட்ட தொழில்வாண்மைத்துவ நண்பர்களோடும் கலந்தாலோசித்து, ஓர் அரவணைப்பு நடைமுறையை பின்பற்றியுள்ளனர். அடுத்தகட்டத்தில், 2030 இல் இலங்கையின் தொலைநோக்கிற்கு உருவாகிவரும் பாதையின் பரந்த உரித்தாண்மையை உறுதிசெய்து, சம்பந்தப்பட்ட அனைத்து பங்கீடுபாட்டார்களோடும் மேலும் விரிவான, திட்டமிட்ட, நாடுதழுவிய கலந்தாராய்வுகளை நாம் பரிந்துரைக்கின்றோம்.

PEC அறிக்கை இலங்கையின் தற்போதைய நாட்டு நிலைமையையும் நிலையுறுதிமிக்க அபிவிருத்தி தொடர்பிலான வாய்ப்புகளையும், எதிர்கால முன்னுரிமைகளையும், 2030 க்கு முன்னர் இலட்சிய இலக்குகளை எய்துவதற்கான புதிய முன்னெடுப்புகள் மற்றும் தெரிவுகளையும் விளக்கமுனைகின்றது. நீண்டகாலத்திலான எதிர்காலம் நிச்சயமற்றதாகையால், நாம் இலங்கைக்கான நிலையுறுதிமிக்க வழித்தடத்தில் (சமமான, அரவணைப்புதன்மைகொண்ட, பசுமை வளர்ச்சிப்பாதை இதன்கீழ் விபரிக்கப்படுகிறது) கவனத்தைக்குவித்து, இந்தப் பாதையில் நாம் நிலைகொள்வதற்கு எமக்கு உதவும் மூலோபாயச் செயற்பாடுகளை இனங்காண்போம். 2020 வரை எதிர்காலத்திற்கான பாதை மிகவும் தெளிவாக உள்ளது; எனினும், 2025 மற்றும் 2030 ஐ நோக்கிய நாட்டின் முன்னேற்றத்தின்போது எதிர்பாராத மாற்றங்களும் புதிய காரணிகளும் தோன்றுமாகையால், அனுபவத்தை அடிப்படையாகக்கொணடு யதார்த்தபூர்வமாக இப்பாதையில் எதிர்கால செவ்வையாக்கல்கள் மேற்கொள்ளப்படவேண்டும். அரசாங்கத்திற்கும், சிவில் சமூகத்திற்கும், வர்த்தக சமூகத்திற்கும் வழிகாட்டல் வழங்குகின்ற அதேவேளை, சனாதிபதி அவர்களுக்கு அறியத்தருமுகமாகவும் மக்களுக்கு வலுவூட்டுமுகமாகவும் மூலோபாய தேசிய நிலையுறுதிமிக்க அபிவிருத்திப் பாதையை நாம் எளிமையானதும், தெளிவானதுமான ஒரு மொழிநடையில் விளக்க முனைகின்றோம்.

எமது ஆணையினாலும் கால மற்றும் வளப்பற்றாக்குறையினாலும் ஏற்படும் வரையறைகளை விளக்குவதும் முக்கியமாகும். முதலாவதாக, இவ்வறிக்கையானது, இப்பணியை ஏற்கெனவே நிறைவேற்றிவரும் அரசாங்கத்தின் ஏனைய கிளைகளின் பணிகளை மீண்டும் இரு முறை செய்வதைத் தவிர்க்குமுகமாக ஒரு விளக்கமான தேசிய அபிவிருத்தி திட்டமாக இருக்க எதிர்பார்க்கப்படவில்லை. மாறாத மற்றும் விரிவான ஒரு நீண்டகால எண்ணக்கரு வரைசட்டகத்திற்கு பொருந்தும் தற்போதுள்ள தேசிய, துறைசார் மற்றும் ஏனைய திட்டங்களையும், தரவுகளையும் நாம் பயன்படுத்துகிறோம். இரண்டாவதாக, குறிப்பாக அமுல்படுத்தும் பொறுப்பு எமக்கு வழங்கப்படவில்லை. எனினும், கடந்தகால மூலோபாயங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதில் நிலவிய வெற்றியின்மையானது, அத்தகைய கடந்தகால தோல்விகள், மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகளிலான குறைபாடுகள், அடுத்தடுத்து வந்த அரசாங்களினால் கொண்டுவரப்பட்ட தொடர்ச்சியான கொள்கை மாற்றங்கள், அமுலாக்கல் வரைச்சட்டகம், அதிகாரவாதம், பொறுப்புக்கூறல், திறன் வரையறை, வளப்பயன்பாடு ஆகியவற்றினால் ஏற்பட்டதா அல்லது வேறு தொடர்புபட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளினால் ஏற்பட்டதா என்பதுபற்றி ஒரு சில கருத்துக்களை எழுத நிர்ப்பந்திக்கின்றது. எமது அறிக்கை நடப்பு மற்றும் எதிர்கால கொள்கைகளையும், திட்டங்களையும் இனங்கண்டு, அமுலாக்கத்தை மேம்படுத்துவதற்கான கொள்கைகளையும்,நடவடிக்கைகளையும் பரிந்துரைசெய்கிறது. மூன்றாவதாக, ஒரு விரிவான பெரும் நிலைமைப் பகுப்பாய்வின்றி எளிமையான அடிப்படை முன்கூறல்களையே நாம் பயன்படுத்துகிறோம். எமது அடிடப்படை விடயம் 2030 வரை ஒரு 5% மொதேஉ வளர்ச்சி வீதத்தையும் 1% மக்கள் தொகை வளரச்சி வீதத்தையும், அனுமானிப்பதோடு, எமது பெறுபேறுகள் இந்த அடிப்படையைச் சுற்றியுள்ள பல விழுமியங்கள்மீது மிகவும் உறுதியானவையாக உள்ளன. மேலும், இடர் முகாமைத்துவம் தொடர்பாக மூலோபாய வழிகாட்டல் வழங்குமுகமாக சில முக்கிய சமபவங்கள் துறை மட்டத்தில் ஆராயப்படுகின்றன ( உ..ம்: விவசாயத்தைப் பாதிக்கும் மிகமோசமான இடர் சம்பவம்).

அறிக்கை பின்வருமாறு கட்டமைக்கப்படுகிறது. பகுதி 1 இன் எஞ்சிய பிரிவுகளில் நிலையுறுதிமிக்க அபிவிருத்தியின் அடிப்படை அம்சங்களை நாம் விளக்குகிறோம். அடுத்து, இலங்கையின் சூழமைவில் இந்தச் சிக்கலான தொனிப்பொருள் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பதை, பின்வரும் விரிவான மூன்று பிரிவுகளாகப் பிரித்து நாம் விபரிக்கின்றோம்:

1. பொருளாதார, சமூக மற்றும் சூழல் கொத்தணிகள்( அல்லது அம்சங்கள்)
2. துறைகள்
3. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

கொத்தணிகள், துறைகள் மற்றும் தொனிப்பொருள் ஆகிவற்றுக்கிடையிலான ஒருங்கிணைப்பு நடைமுறை விபரிக்கப்படுகிறது. நிலையுறுதிமிக்க அபிவிருத்தியின் பொருளாதார, சமூக மற்றும் சூழல் அம்சங்களிலிருந்தான கருத்துக்களுடன் பகுதி 1 நிறைவுபெறுகின்றது.

அடுத்து, பகுதி 2 துறைரீதியான பகுப்பாய்வுகளை விளக்குகிறது, பகுதி 3 ஊடறுக்கும் தொனிப்பொருட்களிடையே இணைப்பை ஏற்படுத்துகிறது. பகுதி 1, 2, மற்றும் 3 ஆகியவற்றினுள், ஒவ்வொரு கொத்தணி, துறை மற்றும் தொனிப்பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும் சம்பந்தப்பட்ட பிரிவுகள் தற்போதைய நிலை, முக்கிய பிரச்சினைகள் மற்றும் சவால்கள், சாத்தியமாகக்கூடிய நிவாரணங்கள் மற்றும் நன்மைகள் மற்றும் நிலவக்கூடிய எதிர்கால நிலைமைகள் ஆகியவற்றை விபரிக்கும். பிரதான பரிந்துரைகளும், முடிபுகளும் பகுதி 4 இல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இறுதியாக, பகுதி 5 பின்னிணைப்புகளையும், மேற்கோள் நூல் பட்டியலையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமும் மேலோட்டமும்

# 12

## 12. நிலையுறுதிமிக்க அபிவிருத்தி தோலைநோக்கு மற்றும் சம மற்றும் அரவணைப்பு பசுமை வளர்ச்சிப் பாதை

தொலைநோக்கு நடைமுறையை அலசி ஆராய்வதற்காக நிலையுறுதிமிக்க அபிவிருத்தியின் (SD)

முக்கிய அம்சங்கள் பொருளாதார, சமூக மற்றும் சூழல் அம்சங்களை இசைவாக்கும் SD முக்கோணத்தின் அடிப்படையில் பெட்டி 1.1 இல் விளக்கப்படுகின்றன. அத்தகையதொரு தொலைநோக்கை எய்துவதற்கான சம மற்றும் அரவணைப்பு பசுமை வளர்ச்சிப் பாதை (BIGG) யும் இப்பெட்டியில் விளக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சூழலில், 2030 விற்குள் நிலையுறுதிமிக்க அபிவிருத்திக்கான நடைமுறை BIGG பாதையில் நாம்:

(அ) முன்னேற்றமடைந்ததும், உறுதியானதும், செழிப்பானதும், ஓர் உயர்நத வாழ்க்கைத் தரத்தை வழங்குவதுமான பொருளாதாரம்;

(ஆ) தேசிய உயிர்த் திறனை விஞ்சிச்செல்லாத ஒரு சூழலியல் அடிச்சுவட்டுடன்கூடிய பசுமையானதும், மீட்சிபெறுவதுமான ஒரு சூழல்;

(இ) சமூகம், நல்லிணக்கம், அரவணைப்பு, அமைதி, பாதுகாப்பு மற்றும் நீதி ஆகியவற்றை மதிக்கின்ற ஒரு சமூகம்

ஆகியவற்றோடு உலகின் முன்னணியாளராக மாறுவதற்கு இலக்குவைக்கவேண்டும்.

இலங்கையின் தேவைகளுக்குப் பொருந்தக்கூடியதாக உரியவாறு முன்னுரிமைப்படுத்தப்பட்ட SDG முன்னோக்கிய நகர்வுக்கு உதவும் ஒரு கண்காணிப்பு வரைச்சட்டகமாகப் பயன்படுத்தப்படலாம். விசேட SDG மீதான பணிகள் நடைபெற்றுவருகின்றன, எனினும், அனைத்து சுட்டிகளையும், இலக்குகளையும் இனங்காண்பதற்கு சில காலம் பிடிக்கும்.

நடுவழி என்ற இலங்கைப் பாரம்பரியத்தைப் பின்பற்றி, நாங்கள் ஜனநாயக மற்றும் பன்மைத்துவ நிறுவனங்களின் அடிப்படையிலானதும். எமது தனிச்சிறப்பான விழுமியங்கள், மரபுரிமை மற்றும் சூழல் ஆகியவற்றைப் பாதுகாப்பதும்; சுதந்திரம், நீதி, சம வாய்ப்புகள் ஆகியவற்றிற்கு மதிப்பளிப்பதன்மீது கட்டியெழுப்பப்பட்டதுமான ஒரு மக்கள்-மைய மற்றும் திறந்த சமூக பொருளாதார முறைமையை நோக்கிச் செயல்படுகின்றோம். அற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியங்களையும் நடத்தையையும் பலப்படுத்துவது இன்றியமையாததாகும் (பெட்டி 1.1 ஐ பார்க்கவும்). நாட்டின் கடந்த கால் வளமான சமூக- கலாசாரத்தினால் உத்வேகம்பெற்று, மூன்று முக்கிய குழுக்களும் (அரசாங்கம், தனியார்துறை மற்றும் சிவில் சமூகம்) அரசாங்க, தனியார்துறை மற்றும் மக்கள் பங்காண்மையூடாக (4Pகள்) செயற்பட்டு சமநிலையானதும், ஒத்துழைப்புமிக்கதும் பயனுறுதிமிக்கதுமான வகிபாகங்களை ஆற்றுவதற்கு போதிய ஒழுக்கக் கட்டுப்பாடுடையவர்களாக இருக்கவேண்டும்.

**பெட்டி ஐ.1.** நிலையுறுதிமிக்க அபிவிருத்தி, சமநிலையானதும் அரவணைப்புத் தன்மைகொண்டதுமான பசுமை வளர்ச்சிப் (BIGG) பாதை மற்றும் அற விழுமியங்கள் ஆகியவற்றின் அம்சங்கம்

**நிலையுறுதிமிக்க அபிவிருத்திக் கோட்பாடுகள்**

நிலையுறுதிமிக்க அபிவிருத்தி (SD) எனும் பதம் 1987 இல் நிலையுறுதிமிக்க அபிவிருத்தி பற்றிய உலக ஆணைக்குழு (WCED, 1987) வின் அறிக்கையில் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையின்மீது கட்டியெழுப்பபப்பட்டு, **நிலையுறுதிமிக்க பொருளாதார** வரைச்சட்டகம் 1992 இல் றியோ டீ ஜெனீராவில் நடைபெற்ற புவி உச்சிமாநாட்டில் இலங்கையினால் முதலில் முன்மொழியப்பட்டு, முக்கிய பொருளாதார, சமூக, மற்றும் சூழல் அமசங்களை உள்ளடக்கி நிலையுறுதிமிக்க அபிவிருத்தி முக்கோணத்தை இசைவாக்குவது அதன் முதல் கோட்பாடாக நிறுவப்பட்டது. இந்த அணுகுமுறை பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரயோகிக்கப்பட்டதோடு, 17 நிலையுறுதிமிக்க அபிவிருத்தி இலக்ககுள் (SDG) மற்றும் 2015 இல் சர்வதேச ரீதியல் நிறைவேற்றப்பட்ட 2030 நிகழ்ச்சிநிரல் ஆகியவற்றிற்கு வழிவகுத்தது.




**உரு BI.1.1. நிலையுறுதிமிக்க அபிவிருத்தி முக்கோணம் மற்றும் மூன்று அம்சங்களுக்கும் இடையிலான தொடர்புகள்**

**மூலம்:** எம் முனசிங்க, 1992, சூழல் பொருளாதாரமும் நிலையுறுதிமிக்க அபிவிருத்தியும், பத்திரம் 1992 றியோ டீ ஜெனீரோ புவி உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு, உலக வங்கி வாசிங்டன் டீ சீ இல் சூழல் பத்திரம் இல.3 ஆக மீள் சமர்ப்பணம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SD முக்கோணத்தில் அடங்கியுள்ள பல்வேறு இலக்குளை இசைவாக்குவது இன்றியமையாததாகும். முக்கிய பொருட்கள் மற்றும் சேவைகளில் நுகர்வை அதிகரிப்பதன்வாயிலாக மனித சேமநலனை மேம்படுத்துவதற்கு பொருளாதாரம் முடுக்கிவிடப்பட்டுள்ளது. சூழல் அம்சம் இயற்கை முறைமைகளின் ஒருமைப்பாட்டையும் மீட்சிபெறும் வல்லமையையும் பாதுகாப்பதில் கவனத்தைக் குவிக்கின்றது. சமூக அம்சங்கள் தனிமனித மற்றும் குழு அபிலாசைகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் மனிதத்தொடர்புகளைச் செழுமைப்படுத்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது. வறுமை, சமத்துமின்மை, பசி, பிணி, சூழல் கேடுகள், முரண்பாடு போன்ற அழுத்தும் பிரச்சினைகள் முத்தரப்பு வரைச்சட்டகத்தினுள் தீர்க்கப்படவேண்டும். அரசாங்கம், தனியார்துறை மற்றும் சிவில் சமூகம் ஆகியோரே SD எய்துவதற்கு ஒத்துழைக்கவேண்டிய மூன்று முக்கிய பங்கீடுபாட்டாளர்களாவர்.

நிலையுறுதிமிக்க பொருளாதாரத்தின் இரண்டாவது கோட்பாடு எல்லா மட்டங்களிலுமான - தனிமனித, சமூக, நகர, நிறுவன மற்றும் தேசிய - முக்கிய செயற்பாட்டிற்கு வலுவூட்டுவதன்மூலம் அபிவிருத்தியை மேலும் நிலையுறுதிமிக்கதாக்க முயலுவதால் அதுவும் இலங்கைக்குப் பொருந்தும். எமது நாளாந்த வாழ்க்கையில் நிலையுறுதியற்றதாகத் தோன்றும் பல செயற்பாடுகளை முதலில் இனங்கண்டு அவற்றுக்கு இப்போது நிவாரணம் காண்பது (வலு அல்லது நீரைச் சேமிப்பது, கழிவுகளை மீள் சுழற்சிசெய்வது, மரம் நடுதல், நல்லிணக்கத்தையும் சுமுகநிலையையும் ஊக்குவித்தல் முதலியன) எளிதானதாகையால், இந்த படிப்படியான அணுகுமுறை மிகவும் நடைமுறைச் சாத்தியமானதாகும். மூன்றாவது கோட்பாடு, நிலையுறுதிமிக்க விழுமியங்கள், பல்துறை பகுப்பாய்வு, உலகளாவிய கருத்து, நீண்டகாலச் சிந்தனை மற்றும் பங்கீடுபாட்டாளர்களிடையேயான ஒத்துழைப்பு முதலியவற்றைப் பலப்படுத்தும் புத்தாக்கம் மற்றும் புதிய சிந்தனைகள் ஆகியவற்றின்வாயிலாக எமது மனதிற்குள் உள்ள தடைகளைத் தாண்டிச்செல்ல முயலுகின்றது. இறுதிக் கோட்பாடு தற்போதைய முறைகளையும், கருவிகளையும் பயன்படுத்தி அவசர நடைமுறைச்சாத்திய அமுலாக்கத்தை ஊக்குவிக்கின்றது.

**சமநிலை அரவணைப்புப் பசுமை வளச்சிப் (BIGG) பாதை**

1992 ஆம் ஆண்டிற்கு முன்னரான SD செயற்பாட்டாளர்கள் தனியொரு நடைமுறைச்சாத்திய ஒருங்கிணைந்த வரைச்சட்டகத்தினுள் நிலையுறுதித்தன்மைக்கான பல்வேறு சமூக மற்றும் சூழல் அணுகுமுறைகளை ஒருங்கிணைக்கும் சிரமமான பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டியிருந்தது. நிலையுறுதிமிக்க பொருளாதார வரைச்சட்டகம் இப்பிரச்சினையை ஆராய்ந்து தீர்ப்பதற்கு ஓர் இருகட்ட நடைமுறையைக் கடைப்பிடித்தது. (முனசிங்க, 1912):

1. முதலாவதாக, வறுமை – சமத்துவமின்மைமீது சமூக கவனக்குவிப்பை நிலைநிறுத்தும் அதேவேளை, சூழல்-பொருளாதார பெறுமதி முதலியவற்றைப் பயன்படுத்திப் பொருளாதார மற்றும் சூழல் அம்சங்களை ஒருங்கிணைக்கும் ஒரு "பசுமை வளர்ச்சி" **(GG)** பாதையை இனங்காணுதல்.

2. இரண்டாவதாக, பங்கேற்பு மற்றும் வறியோர்சார்பு கொள்கைகள்வாயிலாக **GG** பாதையில் சமூக அம்சத்தை அறிமுகப்படுத்தி பசுமை வளர்ச்சியை ஒரு சமநிலை அரவணைப்புப் பசுமை வளச்சிப் **(BIGG)** பாதையாக மாற்றுதல்.




5-CM 27932
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அதன் இயற்கை வளங்களை அளவுக்கதிகம் பயன்படுத்தாது, சுமுகமானதொரு சமூகத்தில் அனைத்துப் பிரசைகளுக்கும் கண்ணியமானதொரு வாழ்க்கைத்தரத்தை வழங்குவதற்கான அதன் முயற்சியில் BIGG பாதை இலங்கைக்கு மிகவும் பொருத்தமானதாகும். உரு Bl.1.2 கார்பன் வெளியிடுதல் (GHG) உதாரணத்தைப் பயன்படுத்தி பொருளாதார அபிவிருத்தியில் சூழல் இடரின் விசேட விளைவைக் காட்டி இந்த அணுகுமுறையை விளக்குகிறது. செல்வந்த நாடுகள் C எனும் புள்ளியில் உள்ளன (அதிக GHG வெளிவிடுதல் மற்றும் அதிக GNP தலா வருமானம்), வறிய நாடுகள் A எனும் புள்ளியில் உள்ளன (குறைவான GHG வெளிவிடுதல் மற்றும் குறைந்த GNP தலா வருமானம்). இலங்கை போன்ற இடைநிலை நாடுகள் B புள்ளியில் உள்ளன.

நாடுகளின் வகைகளுக்கேற்ப விரும்பத்தக்க நிலையுறுதிமிக்க அபிவிருத்திப் பாதைகள் வேறுபடும்:

- கைத்தொழில் நாடுகள் (ஏற்கெனவே பாதுகாப்பு எல்லைகளைத் தாண்டியுள்ளவை) GHG வெளிவிடுதலைக் குறைத்து, தமது அபிவிருத்தி முறைமைகளை பொருளாதார வளர்ச்சியிலிருந்தான கார்பன் வெளியிடுதலிலிருந்து விடுபடுவதன்மூலம் GHG வெளியிடுதலைக் குறைத்து எதிர்கால பசுமை வளர்சசிப்பாதை CE யை பின்பற்றவேண்டும்.

- நடுத்தர வருமான, எழுச்சியுறும் மற்றும் வறிய பொருளாதாரங்கள் கைத்தொழில்மய உலகின் கடந்தகால அனுபவங்களிலிருந்தும் தொழில்நுட்பப் பாய்ச்சலிலிருந்தும் பாடம் கற்று, BDE மூலம் (பாதுபாப்பு எல்லைக்குக் கீழே)சமநிலை அரவணைப்பு பசுமை வளர்ச்சி "குகை"யை நாடுவதற்கு புத்தாக்கமிக்க கொள்கைகளைப் பின்பற்றவேண்டும். வறிய அபிவிருத்தியுறும் நாடுகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் தேவைப்படும்.




**உரு** Bl.1.2. **அபிவிருத்திப் பாதையில் சூழல்-பொருளாதார வர்த்தகம் மற்றும் நிலையுறுதிமிக்க**
**அபிவிருத்திக்கான இலங்கையின் சமநிலை அரவணைப்பு பசுமை வளர்ச்சி** (BIGG) **சுரங்கப்பாதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூலம்:** "வளர்ச்சியை மேலும் நிலையுறுதிமிக்கதாக்குதல்" எனும் எம். முனசிங்க (1995) பத்திரத்தின் தழுவல், சூழலியல் பொருளாதாரம், 15:121-4_

உலகளாவிய அளவில் செல்வந்த நாடுகள் நுகர்வினதும் மாசுறுதலினதும் 80% ஐக் கொண்டிருப்பதனால், அவற்றின் நுகர்வில் ஏற்படும் சிறிதளவு வீழ்ச்சிகூட சூழல் சுமையை பயன்மிக்கவாறு குறைக்கவும் வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயரத்தவும் முடியும்.

இலங்கையில், நாம் அனைத்துவகை இயற்கை வள பயன்பாட்டிற்கும் பொருந்தும் - குறிப்பாக வலு, உணவு, நீர், தாதுப்பொருள் முதலியவற்றிற்குப் பொருந்தும் - ஒரு பொதுவான பசுமை வளர்ச்சிப் பாதையை நாடுகின்றோம். இப் பசுமை வளர்ச்சிப் பாதையானது, வறியோர்சார்பு, பங்கேற்பு நடவடிக்கைகளை சேர்த்துக்கொள்வதன்மூலம் சமநிலை அரவணைப்பு பசுமை வளர்ச்சிப் (**BIGG**) பாதையாகப் மாற்றப்படவேண்டும்.

**நிலையுறுதிமிக்க விழுமியங்களின் முக்கிய வகிபாகம்**

தற்போதிருக்கும் அறிவின் அடிப்படையில் SD யை நோக்கி உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமுடியும் என்பது உற்சாகமூட்டுவதாக உள்ளது. எனினும், எமது இலட்சிய 2030 தொலைநோக்கை அடைவதற்கு நீண்டகால அடிப்படையில் விழுமியங்களிலும், ஒழுக்கநெறிகளிலும் மேலும் அதிகமான அடிப்படை மாற்றங்கள் தேவைப்படும். ஏனெனில், துரதிஸ்டவசமாக இலங்கையிலும் உலகிலும் இன்று நிலவுவது, உரு BI.1.3. இல் காட்டப்பட்டவாறு விரும்பத்தகாத விழுமியங்களினால் உந்தப்படும் நிலையுறுதியற்ற முக்கோணமாகும்.




**உரு BI.1.3. தவறான சமூக விழுமியங்கள் நிலையுறுதியற்ற அபிவிருத்தியைத் தூண்டும்**

**மூலம்:** எம் முனசிங்க, 1992, சூழல் பொருளாதாரம் மற்றும் நிலையுறுதிமிக்க அபிவிருத்தி, றியோ டீ ஜெனீரோ புவி உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு, உலக வங்கி, வோசிங்டன் டீசீ இல் சூழல் பத்திரம் இல.3 ஆக மீள் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை, தன்னலம், ஊழல், சமத்துவமின்மை, வன்முறை, அநீதி மற்றும் சகிப்புத்தன்மையின்மை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒழுக்கநெறிதவறிய சமூக விழுமியங்கள் நிலையுறுதியற்ற கடன், விரயம் மற்றும் வறியவர்களின் கவலைமிகு அவலநிலையைப் பொருட்படுத்தாத செல்வந்தர்களின் அளவுகடந்த நுகர்வு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த பொருள்சார் அபிவிருத்திமீது தகுதிமீறி கவனம்செலுத்தும் பொருளாதார துர்அபிவிருத்திக்கு இட்டுச்சென்றுள்ளன. இது, அதிகரிக்கும் மாசுறுதல் மற்றும் இயற்கை வளங்களின் அழிவு ஆகியவற்றின் காரணமாக பெரும் சூழல் கடனைக் கட்டியெழுப்பியுள்ளது. நச்சுவட்டத்தைப் பூரணப்படுத்தும்வகையில், இயற்கை வளங்களின் பற்றாக்குறை சமூக முரண்பாடுகளுக்குத் தொடர்ந்து உரமூட்டி, மேலும் அதிக ஒழுக்கநெறிதவறிய நடத்தைக்கு ஊக்கமளிக்கும். இந்நடைமுறை, நிலையுறுதிமிக்க அபிவிருத்தி விருத்தியுறுவதற்கு தேவையான ஜனநாயக வாய்ப்பினை சுருங்கச் செய்துவிடும்.

2030 ஆம் ஆண்டில் நீண்டகால நிலையுறுதிமிக்க அபிவிருத்தியை அடைவதற்கு, எமது பிரசைகள் மத்தியில் மிக இளவயதிலிருந்து தொடங்கி ஒழுக்கநெறிசார், நிலையுறுதிமிக்க விழுமியங்களை ஊட்டுவதன்மூலம் இந்நிலையுறுதியற்ற வட்டத்தை தகர்ப்பது முக்கியமாகும். இந்நடைமுறையில் அரசாங்கம், வியாபாரம் மற்றும் சிவில் சமூகம் ஆகிய அனைத்திற்கும் ஆற்றுவதற்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

மூலம்: எம்.முனசிங்க (1992,2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமும் மேலோட்டமும்

# 13

## 13. கட்டமைப்பு முறிவு மற்றும் ஒருங்கிணைப்பு செயல்முறை

நிலையான அபிவிருத்தி என்பது சிக்கலானதும் அடிக்கடி பிழையாக விளங்கிக்கொள்ளும் விடயமாகும். இதன் பொருட்டு பிரச்சினைகளையும் தீர்வுகளையும் ஆராய்வதுடன் அதற்கான நடைமுறையின் தீர்வுகளையும் அறிந்து கொள்ள வேண்டும். எனவே பல வகைப்பாடாக நிலையான அபிவிருத்தி செயற்ப்பாடுகளை பிரித்து நோக்க வேண்டும். பிரிக்கப்பட்ட வகைப்பாடுகள் சில முன்வைக்கப்பட்ட வேலையில் நாம் பின்வரும் வகைகளாஇ தெரிவு செய்துள்ளோம்.


1.பொருளாதர சமூக மற்றும் சுற்றாடல் பரிமானங்கள்

2. முதன்மையான துறைகள்

3. முக்கிய குறுக்கு வெட்டு கருபொருள்

இம் மூன்று பரந்த வைகைபாடுகளும் ஒருங்கிணைப்புத்தொடர்பான பதிப்பீடும் இங்கு வடிவமைக்கப்பட்டுள்ளது 1.இம்மூன்று தொகுதிகள் அல்லது பரிமானங்கள் செங்குத்து நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஒவ்வொரு பரிமானதிலும் உள்ள முக்கியமான பிரச்சினைகளை அறிந்து கொள்வதன் மூலம் அத்துடன் இப் பிரச்சினைகளும் இம் ம் மூன்று கொத்துகளுடன் தொடர்புபடும் விளைவை மதிப்பீடு செய்து ஒருங்கிணைப்புடைய முதல் நிலையை சமர்பிப்போம்.

அடுத்து முதலாவது நிளையில் முக்கியத்துறை கூறப்பட்டுள்ளது. மற்றும் இம் மூன்று பரிமானதுடன் கூடிய சந்திப்பானது ஒருங்கிணைப்புடைய இரண்டாவது நிலை எவ்வாறு வெளிவருகின்றது என்பதை வெளிப்படுத்துகிண்ரது இறுதியாக முக்கிய குறுக்கு வெட்டு கருத்தானது சந்தித்துக்கொள்ளும் நிரல் மூலம் குறிப்பிடப்படுகின்றது என்பதுடன் அந்த துறையுடன் ஒன்று சேர்த்து இணைக்கப்படுகிண்றது- ஒருன்கிணைபுடைய மூன்றாவது நிலையை அடைந்துள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகமும் மேலோட்டமும்

# 14

## 14. ஸ்ரீலங்கா – சுருக்கமான கண்ணோட்டம்

ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பு 65,610 $km^2$, அதன் கடல் 489,000 $km^2$ க்கு விரிந்து கிடக்கின்றது. நாட்டின் பிரத்தியேக பொருளாதார வலையம் (EEZ) 437,000 $km^2$ பரப்பைக் கொண்டுள்ளது. 2,524 மீட்டர் வரை உயர்ந்துள்ள மத்திய மலைப் பிரதேசம் நாட்டின் பிரதான ஆறுகளின் தோற்றுவாயாக உள்ளது. சராசரியான வருடாந்த மலை வீழ்ச்சி வடமேற்கின் அரை-வறல் வலயத்தில் 1,000 மில்லி மீட்டரிலும் குறைவாக இருந்து மத்திய மலைநாட்டின் தென்மேற்கு சாய் நிலங்களில் 5,000 மில்லி மீட்டர் வரை மாறுபடுகின்றது. 1,500 மீட்டரிலும் உயரமான மலைநாட்டில் $15^0$C க்கும் $19^0$C க்கும் இடையிலுள்ளது. பல்வகை விவசாய –சூழலியல் பிரதேசங்கள் நாடு முழுதும் பரந்துள்ளது. இது சிறப்பான உயிர் பல்வகைமையை தோற்றுவித்துள்ளது. சூழல் தொகுதிகள் மழைக் காட்டிலிருந்து புல் நிலம் வரை வித்தியாசமானவையாக உள்ளன. மேலும் இங்கு ஆறுகள், ஈர நிலங்கள்- நன்னீர் நிலைகள், கடற்கரைச் சூழல் தொகுதி என்பனவும் இங்குள்ளன. ஸ்ரீலங்கா 3,800 பூக்கும் மரங்களையுடையது எனும் பெருமை பெற்றது. இவற்றில் 23 சதவீதம் இலங்கையில் மட்டும் காணப்படும் இனங்களாக உள்ளன. உலகில் உள்ள 18 உயிர்பல்வகைமைகளில் ஒன்றாக ஸ்ரீலங்காவை ஆக்குமளவுக்கு ஸ்ரீலங்காவில் மட்டும் காணப்படும் இனங்களை உயரளவு விகிதாசாரத்தில் கொண்டுள்ள சிறப்பான விலங்குப் பல்லினத் தன்மையை ஸ்ரீலங்கா மரபுரிமையாக கொண்டுள்ளது.

ஸ்ரீலங்கா ஜனநாயக சோசலிச குடியரசின் சட்ட மற்றும் நிர்வாக கட்டமைப்பு அதன் குடியரசு அரசியலமைப்பை அடிப்படையாக கொண்டது. நிர்வாக நோக்கில் ஸ்ரீலங்கா ஒன்பது மாகாணங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாகாணத்திலும் வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட மாகாண சபையை அதிகாரப் பகிர்வின் அலகாகக் கொண்டு மாகாணங்களுக்கு அதிகாரம் பகிரப்பட்டுள்ளது. சர்வசன வாக்குரிமை வழியாக ஐந்து வருட காலத்துக்கு என தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அரசின் தலைவராகவும் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார். பிரதான சட்ட அமைப்பான பாராளுமன்றம் ஊடாக பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களும் தெரிவு செய்யப்படுவர். அரசாங்கத்தன் நீதிக் கிளைக்கு பிரதம நீதியரசரும் உயர்நீதி மன்றமும் தலைமை தாங்குவர். அரசியலமைப்பின்படி அரசியலமைப்பு பேரவையும் பல சுயாதீன ஆணைக்குழுக்களும் அமைந்துள்ளன. அவை: தேர்தல் ஆணைக்குழு, பொதுசேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு, மற்றும் கணக்காய்வு சேவை ஆணைக்குழு நாட்டின் ஜனநாயக சட்டகத்தை பலப்படுத்தவும், பிரதான தேசிய நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதி செய்யவும் இந்த ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாட்டின் அரசியலமைப்பை சிறப்பாகவும், பலப்படுத்தவும் என அரசியலமைப்பு சீர்திருத்த செயன்முறை ஒன்று நடைபெறுகின்றது.

ஸ்ரீலங்காவின் சனத்தொகை 2015இல் 21 மில்லியனாகவும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 4.8 சதவீதமாகவும் இருந்தது. ஸ்ரீலங்காவின் தலா வருமானம் 1999இல் 825 அமெரிக்க டொலர்களாகவிருந்து 2000இல் 897 அமெரிக்க டொலராக சீராக அதிகரித்து இறுதியாக 2015இல் 3,926 டொலராகியது. இடையிலேயே பின்னடைவுகள் (உதாரணம்: முதல் தசாப்தத்தில் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீத வளர்ச்சியின் பின்னர் 2001இல் -1.3 சதவீத வளர்ச்சி) இருந்தபோதிலும் இது நடந்தது. இதன் காரணமாக ஸ்ரீலங்காவின் உலக பொருளாதார நிலை குறைந்த நடுத்தர வருமான நாடு என்ற வகையினுல் மேலே சென்றது. ஸ்ரீலங்காவின் வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) 2017ல் முதல் காலாண்டில் 76 மில்லியன் அமெரிக்க டொலரால் அதிகரித்தது. 2001லிருந்து 2017 வரை காலாண்டுக்கு 134 மில்லியன் அமெரிக்க டொலர் என்ற சராசரியை அடைந்த பின்னர் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் 2016இன் நாலாவது காலாண்டில் ஆகவும் கூடியதாக 636 மில்லியன் அமெரிக்க டொலர் 2001இல் இரண்டாவது காலாண்டில் ஆகவும் குறைவாக 20 மில்லியன் அமெரிக்க டொலரும் காணப்பட்டது. தயாரிப்பு மற்றும் சேவைத் துறைகளின் மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்புகள் தொடர்ந்து அதிகரித்து வந்தாலும், ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் தற்போதும் இயற்கை மூலவளங்களில் பெரிதும் சார்ந்துள்ளது. விவசாயம், காட்டுத்துறை, மீன்பிடி, சுரங்கத் தொழில் அகழ்வுத் தொழில் ஆகிய பிரதான இயற்கை மூலவளங்களில் தங்கியுள்ள துறைகளின் மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பு 1978இல் 33 சதவீதத்திலிருந்து 2000இல் 21 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. தலைக்கான சராசரி மின் நுகர்வு 2000இல் 258 kWh இலிருந்து 2014இல் 531 kWh ஆக அதிகரித்தது. 2015இல் வலுவின் பிரதான மூலங்களாக இருந்தவை: எரிபொருள் எண்ணெய் (46 சதவீதம்) நீர் மின்வலு (22 சதவீதம்) நிலக்கரி (24 சதவீதம்) மற்றும் மரபு சாராத புதுப்பிக்கத் தக்கவை (08 சதவீதம்).

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள் 1972 ஸ்டொக்ஹோம் உச்சி மாநாட்டுக்கு முன்னரே ஸ்ரீலங்காவில் தொடங்கப்பட்டு விட்டன. வருமானப் பங்கீட்டின் நீதியான பகிர்வுடன் நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கான தேசிய தந்திரோபாயங்களையும் திட்டங்களையும் ஸ்ரீலங்கா தொடங்கிவிட்டது. இருப்பினும் சனத்தொகையில் 25 சதவீதத்திலும் அதிகமானோர் (அண்ணளவாக 4 மில்லியன் மக்கள்) வறுமையில் வாழ்வதால் வருமானப் பகிர்வில் சில மோசமான முரண்பாடுகள் தோன்றியுள்ளன. ஒரு மரபு வழி விவசாயத்தின் அடிப்படையிலான சீவனோபாய மட்ட கிராமிய பொருளாதாரம் என்ற நிலையிலிருந்து ஸ்ரீலங்கா பன்முகப்பட்ட, வர்த்தக மயப்பட்ட பொருளாதாரமாக மாறியமையானது வேலையின்மை மற்றும் வறுமை ஆகிய வளர்ந்து வரும் பிரச்சினைகளை தீர்க்க விவசாயத்தில் பெரிதும் தங்கியிருந்த நிலையிலிருந்து விலகும் ஸ்ரீலங்காவின் முயற்சியை காட்டி நிற்கின்றது. கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் அதன் பொது முதலீட்டின் பெரும்பகுதியை அணைக்கட்டுக்களை அமைக்கவும், நீர்ப்பாசன வேலைகளை மேற்கொள்ளவும், பயிர்செய்கை பரப்பை 17 மில்லியன் ஹெக்டேயராக அதிகரிக்கவும், கைத்தொழில்களை நிறுவவும், உட்கட்டமைப்புகள் உறுவாக்கவும், நகர மையங்களை உருவாக்கவும் இவை மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைந்து வறுமையை குறைக்க ஒதுக்கியது. இருப்பினும் இந்த அபிவிருத்தி திட்டங்கள் இயற்கை மூலவளங்களின் தரக்கேடு மற்றும் முற்றான அழிவு என்பவற்றுக்கும் காரணமாயின. தொடரும் வறுமை, அதிகரித்துச் செல்லும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன சிக்கலான பிரச்சினைகளைக் கொண்டு வருகின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களில் தோற்றம் பெற்ற பிரதான சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் நிலம் தரங்கெடுதல், வளி மற்றும் நீர் மாசடைதல், ஆரோக்கியகேடு, உயிர் பல்வகைமையின் இழப்பு என்பன அடங்குகின்றன.

ஸ்ரீலங்காவின் எதிர்காலத்தில் உலக செல்நெறிகள், தொடர்ந்து செல்வாக்கு செலுத்தி வருகின்றன. உலக சமுதாயம் வறுமையை தீர்ப்பதில் சில முனனேற்றங்களை கண்டுள்ளது. ஆனால் தற்போதைய அபிவிருத்தி உபாயங்களை மட்டும் தொடர்தல் நிலைத்திருக்க கூடிய அபிவிருத்தியை எய்த போதுமானதல்ல. பூகோல நிதி நெருக்கடி முன்னேற்றத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தியிருக்கையில், பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றம் சமமின்றி இருந்து வருகின்றது. அதிகரித்து வரும் சுற்றுச்சூழலின் தரக்கேடு சமூகங்களின் மீது அதிகரித்து வரும் செலவுகளை – குறிப்பாக வறிய மக்கள் மீது ஏற்படுத்துகின்றது. பூகோலமயமாதல், அதிகரித்து வரும் அசமத்துவம், சனத்தொகை பரம்பலின் மாற்றங்கள் மற்றும் சுற்றுச்சூழலின் தரக்கேடு ஆகிய சவால்களை முற்கூட்டியே காட்டும் பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, சனத்தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான பிரதான செல்நெறிகளுக்கு ஏற்ப நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் மாற வேண்டியுள்ளது. இந்த செல்நெறிகள் ஒன்றின் மீது ஒன்று பல வழிகளில் செல்வாக்கு செலுத்துவதுடன் ஒன்றையொன்று வலுப்படுத்தவும் செய்து பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன. நகரமயமாதல் குறைவிவிருத்தி நாடுகளில் விரைந்து கூடி வருகின்றது. பூகோல மயமாதலும் நிதி ஒன்றினையும், நெருக்கடிகளிலிருந்து தொடர்ச்சியாக வரக்கூடிய பெரும் ஆபத்துகளுக்கு நாடுகளை முகம் கொடுக்க செய்வதுடன் அசமத்துவத்தையும் நிலைபெறச் செய்கின்றன. உணவு, போஷாக்கு மற்றும் வலுப்பாதுகாப்பு, நிலத்துக்கும் நீருக்குமான போட்டிமிக்க கேள்வியால் பயமுறுத்தப்படுகின்றது. மிக முக்கியமாக சுற்றுச்சூழல் தரங்குறைந்து போதல் நெருக்கடி நிலையை அடைந்துள்ளது. வணிகம் வழமை போலவே ஒரு தெரிவு அல்ல. மேலும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கு, 2015இன் 17 நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நோக்குகளுக்கான (SDGs) சர்வதேச ஏற்புடைமையாள் அங்கீகரிக்கப்பட்டவாறு உள்ளூர், தேசிய மற்றும் பூகோல மட்டங்களில் முழுமையான மாற்றம் தேவையாக உள்ளது.

அண்மைக்கால பூகோள அபிவிருத்திகளின் முன்னேற்றத்தால் நன்மையடைய ஸ்ரீலங்கா உற்சாகத்துடன் செயற்பட வேண்டியிருக்கும். முதலாவதாக உலக வர்த்தகம் மாறி வருகின்றது. வழமையாக வியாபாரத்தில் சம்பந்தப்படும் பொருட்களும் நிதிப் பாய்ச்சலும் பின்னடைந்து செல்ல எண்ம (digital) உற்பத்திகளும் சேவைகளும் விரைந்து வளர்கின்றன. புதிய தேவையான வர்த்தக கூட்டுகள் உருவாகி வருகின்றன. (உதாரணம்: *ICASA* - இந்தியா, சீனா, ஆபிரிக்கா, தென் ஆசியா அல்லது *BRICS* – பிறேஸில், ரஷ்யா, இந்தியா சீனா, தென் ஆபிரிக்கா). தொழில்நுட்ப மாற்றம் மூலவள பயன்பாட்டின் செயற்றிறனை முன்னேற்றினாலும் நுகர்வோர் கேள்வி வளர்ச்சி பிரதான இயற்கை மூலவளங்களை மேலும் அருமைத்தன்மை உடையனவாக்கும்.

இரண்டாவதாக, கூடுதலாக குழப்பவல்ல தொழில்நுட்பங்கள் வருகின்றன. இவற்றுல், எண்ம (big) தரவுகள், செயற்கை விவேகம், றோபோ இயல், முகிழ் தொழில்நுட்பம், முப்பரிமாண (3D) அச்சுப்பதித்தல், முன்னேறிய போக்குவரத்து முறைமைகள், உயிர் தொழில்நுட்பம் மற்றும் இவற்றின் சேர்க்கைகள் என்பன அடங்குகின்றன. நுகர்வுவாதம் மலிவான விதம்விதமான உற்பத்திகளை வழங்கி ஓங்கி வருகின்றது. ஆயினும் இது பூகோள இயற்கை மூலவள தளத்தில் நெருக்குவாரத்துக்கு காரணமாகியுள்ளது. கைத்தொழில் சூழல் தொகுதிகள் உருவாகுகையில் ஸ்ரீலங்காவிலுள்ள (தனியார் மற்றும் அரசாங்க) முயற்சியான்மைகள் உற்பத்திகள், நிரம்பலாளர்கள், பங்காளிகள், வாயப்புகள் மற்றும் வாடிக்கையாளர்களின் வலையமைப்பை மாற்றுவதன் மூலம் கூடுதல் கண்டுபிடிப்பு ஆற்றல் மற்றும் போட்டித்தன்மை உள்ளதாக வேண்டும்.

ஸ்ரீலங்கா உலகில் வியாபிக்கும் சமூக முரண்பாடுகளின் புதிய ஊற்று மூலங்களால் பாதிக்கப்படாதிருக்க முடியாது. பேரழிவை தந்த உள்நாட்டு யுத்தம் ஒன்றிலிருந்து மீண்டுள்ள நிலையில் தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்துக்கும் கூடுதல் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சியுடன் கொடுஞ்செயல்காரர்களுக்கு (கணணி குற்றச் செயல், சிறுவர் துஷ்பிரயோகம், பயங்கரவாதம் போன்ற) சமூகத்துக்கு தீங்கு செய்ய புதிய வழிகள் கிடைத்துள்ளன. இந்த நாட்டை காக்க சகல பங்குதாரர்களும் (அரசாங்கம், சிவில் சமூகம், வணிகங்கள்) தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒத்துளைக்க வேண்டிய தேவையுள்ளது. மேலும், நாம் உயர் நடுத்தர வருமான நாடாக மாறுகையில் வறுமையும், அசமத்துவமும் சமூக அமைதியின்மையை தொடர்ந்து உருவாக்கும். சமூக பாதுகாப்பு திட்டங்களில் உள்ள அதன் தனிச் சிறப்பு வாய்ந்த அநுபவத்திலிருந்து ஸ்ரீலங்காவின் சகல பிரசைகளுக்கும் ஒரு கண்ணியமான வாழக்கை தரத்தை வழங்கும் ஆற்றலை பெற்றுக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# C. பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு[3]

# C1

## C1. சமகால நிலைமை

ஸ்ரீலங்கா ஒரு கீழ் நடுத்தர வருமான நாடு. இது 2016ல் 3,835 அமெரிக்க டொலரை தலைக்குரிய மொத்த உண்ணாட்டு உற்பத்தியாக பதிவு செய்தது. மேலும், இது அடுத்த சில வருடங்களில் உயர் நடுத்தர – வருமான நாடாகும் நோக்கத்தைக கொண்டுள்ளது. மூன்று தசாப்தங்களாக சராசரியாக 5 சதவீதமாக வளர்ந்த ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் சண்டையின் பின்னரான 8.5 சதவீத வளர்ச்சியுடன் 2010 – 12 காலப்பகுதியில் புத்துயிர்பைக் காட்டியது. அது 2013 -16 காலப்பகுதியில் 4.5 சதவீத வீழ்ச்சியையும் பதிவு செய்தது. காலப் போக்கில் 2012 – 13இல் ஸ்ரீலங்கா ஒட்டுமொத்த வறுமை, தலைக் கணக்கெடுப்பில் கணிசமான வீழ்ச்சியுடன் 6.7 சதவீதமாக குறைந்தது. மனித அபிவிருத்தியில் ஸ்ரீலங்காவின் பாராட்டுத்தக்க சாதனை 2015 அளவில் மிலேனிய அபிவிருத்தி நோக்குகளில் (MDGs)[4] அதிகமானவற்றை அடைவதில் வெற்றி கண்டது. ஸ்ரீலங்கா 0.766 எனும் உயர் மனித அபிவிருத்தி சுட்டியை பெற்று "உயர் மனித அபிவிருத்தி" வகையினுல் சேர்க்கப்பட்டுள்ளதுடன் 188 நாடுகளில்[5] 73வது நாடாகவும் உள்ளது. சில புவியியல் மற்றும் காலநிலைத் தகவல் பெட்டி C1.1 இனுல் தரப்பட்டுள்ளது.

### பெட்டி C1.1. புவியியல், காலநிலை மற்றும் இயற்கை வளங்கள்

இலங்கையானது இந்து சமுத்திரத்தில் வங்காள விரிகுடாவின் தென்கிழக்குப் பகுதியில் 5° மற்றும் 10°வ அகலாங்கிற்கும் 79° மற்றும் 82°கி நெட்டாங்கிற்கும் இடையில் அமைந்துள்ள சிறிய தீவாகும். இலங்கையின் அதியுயர் புள்ளியாக பீதுறுதலாகலை கருதப்படுவதுடன் அது கடல் மட்டத்திலிருந்து 2,524m (8,281 அடி) உயரத்திலும் காணப்படுகின்றது. இலங்கையின் காலநிலையானது வெப்பமண்டல மற்றும் பருவகால காலநிலையைக் கொண்டிருப்பதுடன் சமுத்திரத்தின் மிதமான விளைவையும் கொண்டுள்ளது.

இலங்கையின் பிரதேசங்களுக்கிடையிலான வளிமண்டல வெப்பநிலை அகலாங்கு வழியேயன்றி பிரதானமாக உயரத்தின் வழியே மாற்றமடைகின்றது. மாதாந்த சராசரி வெப்பநிலை சூரியனின் பருவகால சிறிய அசைவின் அடிப்படையில் மாற்றமடைவதுடன் மழைவீழ்ச்சியும்

3 எழுத்தாளர் குழு – முழுமையான ஒன்றிணைப்பு – மொஹான் முனசிங்க
பொருளாதாரம் - சமன் கெலேகம (இணைத்தலைவர்), டுஷ்னி வீரக்கோன் (இணைத்தலைவர்), விமல் நானயக்கார, அசினி அபயசேகர, யோலாந்திகா எலபொல
சுற்றாடல் - ஹேமந்தி ரனசிங்க (இணைத்தலைவர்), சவித்ரி குணசேகர (இணைத்தலைவர்), எஸ். கோலம்பகே, பி. கணேஷமூர்த்தி, சுபாங்கி ஹேரத்.

4 Add MDG ref.

5 UNDP, மனித அபிவிருத்தி அறிக்கை 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் சிறித தாக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையின் வருடாந்த சராசரி வெப்பநிலையானது தாழ்நிலப் பகுதிகளில் சீரான மாற்றத்தைக் கொண்டுள்ளதுடன் உயர்நிலப் பகுதிகளில் சடுதியான வீழ்ச்சியைக் கொண்டுள்ளது. தாழ்நிலப்பகுதிகளில் 100m-150m வரையான உயரத்தின் வருடாந்த சராசரி வெப்பநிலை 27.5°C ஆகக் காணப்படுவதுடன் இது 26.5°C முதல் 28.5°C வரை மாற்றமடையும். உயர்நிலப் பகுதிகளில் உயர அதிகரிப்புடன் வெப்பநிலை சடுதியான வீழ்ச்சியைக் கொண்டிருக்கும். கடல் மட்டத்திலிருந்து 1,800m உயரத்திலிருக்கும் நுவரெலியாவின் வருடாந்த சராசரி வெப்பநிலை 15.9°C ஆகும். மாதாந்த சராசரி வெப்பநிலைகளின் அடிப்படையில் மிகவும் குளிரான மாதமாக ஜனவரி காணப்படுவதுடன், அதிக வெப்பமான மாதங்களாக ஏப்ரல் மற்றும் ஆகஸ்ட் மாதங்கள் காணப்படுகின்றன[6]. இந்த தனித்துவமான சிறப்பம்சமானது வெப்பக் கடலோரங்கள் முதல் மழைக்காடுகள் வரை சிறிய புவியியல் சூழலைக் கொண்ட பிரதேசங்களே சுற்றுலாப் பிரயாணிகளை கவருவதாகக் காணப்படுவது வெளிப்படையாகின்றது.

இந்து சமுத்திரம் மற்றும் வங்காள விரிகுடாவிலிருந்தான பருவகால காற்றுகள் மூலம் மழைவீழ்ச்சி நிர்ணயிக்கப்படுகின்றது. சில ஈரநிலப் பிரதேசங்கள் மற்றும் மத்திய மலைப்பிரதேசத்தின் காற்றுக்கெதிரான சரிவுகள் வருடாந்தம் 2500mm மழைவீழ்ச்சியைப் பெறுவதுடன் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளுக்கு அருகிலான காற்றுமறைவான சரிவுகள் சிறிய அளவிலான மழைவீழ்ச்சியையே பெறுகின்றன. இலங்கையின் பெரும்பாலான கிழக்கு தென்கிழக்கு, மற்றும் வடக்குப் பிரதேசங்கள் உலர் வலயமாகக் காணப்படுவதுடன், வருடாந்தம் 1,200mm முதல் 1,900mm இற்கிடைப்பட்ட மழைவீழ்ச்சியையே பெறுகின்றன.

இலங்கை 103 ஆறுகளைக் கொண்டுள்ளதுடன் அவற்றில் மிகப்பெரிய ஆறாக மகாவலி கங்கை 335km இற்குப் பரந்துள்ளது. இந்நீர் வழிகள் 10m அல்லது அதற்கும் மேற்பட்ட உயரத்திலுள்ள 51 இயற்கை நீர்வீழ்ச்சிகளின் உருவாக்கத்துக்கு பங்களிக்கின்றது. ஆறுகளுக்கு மேலதிகமாக சிறிய மற்றும் பெரிய அளவிலான நீர்ப்பாசன் நீர்த்தேக்கங்கள், அதிகளவான ஈரநிலப் பிரதேசங்கள், மற்றும் குறிப்பிடத்தக்களவான நிலத்தடி நீர் வளங்களும் காணப்படுகின்றன. இலங்கையில் இயற்கையாக அமையப்பெற்ற குளங்கள் காணப்படுவதில்லை. அனைத்தும் சக்தி உற்பத்திக்காகவும் நீர்பாசனத்திற்காகவும் நூற்றாண்டுகளுக்கு முன் மனிதனால் அமைக்கப்பட்டவையாகும். நீர் மற்றும் நிலத்துக்கான விகிதாசாரம் இலங்கையில் சதுர கி.மீற்றருக்கு 3 ha என்ற விகிதாசாரத்தில் காணப்படுகின்றது. இது உலகளவில் உயர்ந்த விகிதாசாரங்களில் ஒன்றாகக்

6. Steven M Newman and Hemanthi Ranasinghe, 2005, Country Environment Profile of Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படுகின்றது[7]. இலங்கையின் 260,000ஹெக். என்ற நன்னீர் வளமானது நாடுபூராகவும் அமைக்கப்பட்டுள்ள 155,000ஹெக் அளவிலான பெரிய சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வற்றாத நீர்த்தேக்கங்கள் மற்றும் தாங்கிகள், 100,000ஹெக் அளவிலான பருவகால தாங்கிகள் மற்றும் நாடுபூராகவும் சிதறியுள்ள 5000 வெள்ளச் சமவெளிகள் மூலமும் பேணப்படுகின்றது[8].

இலங்கையின் கடலோரமானது 1,585km நீளமுடையது. இலங்கை 200 கடல் மைல்களால் விரிவுபட்ட பிரத்தியேக பொருளாதார வலயத்தைக் (EEZ) கொண்டது. இது நிலப் பரப்பைப் போன்று அண்ணளவாக 6.7 மடங்கு பெரியது. கடலோரம் மற்றும் அருகாமையிலுள்ள நீர்நிலைகள் என்பன பவளப் பாறைகள், கடற்கரையோரங்கள், கழிமுகக் கடற்பாசிப் படுக்கைகள் போன்ற கடல்சார் சூழல்தொகுதி செழிப்பிற்குப் பெரும் பங்காற்றுகின்றன. மேலும் 45 கழிமுகங்கள், 40 உப்புநீரேரிகள் மற்றும் 7,000ஹெக் அளவிற்குப் பரந்த சதுப்புநிலங்களும் காணப்படுகின்றன. இலங்கை இல்மனைட், பெல்ஸ்பார், காரீயம், சிலிக்கா, காவோலின், மைக்கா, மற்றும் தோரியம் போன்ற வளங்கள் நிரம்பப் பெற்றுள்ளது. மன்னார வளைகுடாவில் பெற்றோலியம் மற்றும் வாயுவின் இருக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்துமாலயா சூழல் வலயத்தினுள் காணப்படுவதுடன் இலங்கை 25 உயிர்ப்பல்வகைமை நிலைய நாடுகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது. இலங்கையின் சிறிய அளவுடன் ஒப்பிடுகையில் ஆசியாவில் அதிக உயிர்ப் பல்வகைமை அடர்த்தியுடைய நாடாக இலங்கை காணப்படுகின்றது. இலங்கையின் தாவர விலங்குப் பல்வகைமையில் பெரும்பானமையானவை நாட்டிற்கே உரித்தானவையாகக் காணப்படுகின்றன (அதாவது, 3,210 பூக்கும் தாவரங்களில் 27 வீதமும், பாலூட்டிகளில் 22 வீதமும்). ஆசிய யானைகள், சிறுத்தை, சோம்பல் கரடிகள், தனித்துவமான சிறிய தேவாங்கு, ஒரு வகை மானினம், கபில முகமுடைய லங்கூர், அருகிவரும் காட்டுப் பன்றி, முள்ளம்பன்றிகள் மற்றும் இந்திய எறும்புண்ணிகள் போன்ற அதிகளவான சொந்த விலங்குகளின் வசிப்பிற்காக சில வனவிலங்குச் சரணாலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கை பாரிய சனத்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது (2016ம் ஆண்டு சதுர கி.மீற் இற்கு 325 பேர்). நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 1 முதல் 7 வரையானவை நேரடியாக சனத்தொகையுடன் தொடர்புபட்டுள்ளதால் சர்வதேச திட்டமிடலின்போது முக்கிய காரணியாக நோக்கப்படுகின்றது.

---

7 MOFE, 2001.

8 MOFE, 2002.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா பல விடயங்களில் கணிசமான முன்னேற்றங்களை அடைந்திருப்பினும் எட்டுதற்கு அரிதான நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நோக்கங்களை (SDGs) எய்துவதற்கு, இனிவரும் வருடங்களில் மிகுந்த கவனமும் இணைந்த எத்தனங்களும் தேவைப்படும் பல பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளுக்கு இப்போதும் முகம் கொடுக்கின்றது. பூகோள நோக்குகள் எனவும் அறியப்படும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நோக்குகள் வறுமைக்கு முடிவு கட்டவும் இந்த கிரகத்தை பாதுகாக்கவும் சகல மக்களும் சாந்தி மற்றும் செல்வச் செழிப்போடு வாழ்வதை உறுதி செய்யும் நடவடிக்கைக்கான சகலருக்குமான அழைப்பாகும். இந்த 17 நோக்குகளும் MDGs களின் வெற்றிகள் மீது அமைக்கப்பட்டன. ஏனைய முன்னுரிமைகளுக்கு இடையில் காலநிலை மாற்றம், பொருளாதார அசமத்துவம், கண்டுபிடிப்பு, நிலைத்திருக்கக் கூடிய நுகர்வு, சமாதானம் நீதி போன்ற புதிய விடயப் பரப்புகள் என்பன இவற்றுக்குள் சேர்க்கப்பட்டுள்ளன. நிலைத்திருக்கக் கூடிய நோக்குகளின் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதன்மை இந்த நோக்கங்களை SDGs அதன் மூன்று பரிமாணங்களின் பிரித்தெடுத்தலை பெரும் சவாலாக்கியுள்ளது.

இருப்பினும் பொருளாதார செழிப்பை அடைவதில் மிகவும் தொடர்புடைய நோக்கங்களை பெரும்படியாக இனங்கான முடியும். அவை SDG1 (கடுமையான ஏழ்மை இன்மை, வறுமையை அரைவாசியாக குறைத்தல்), SDG2 (பூச்சியப்பட்டினி), SDG8 (கண்ணியமான வேலையும் பொருளாதார வளர்ச்சியும்) SDG9 (கைத்தொழில், கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு), SDG 10 (வருமான அசமத்துவத்தை குறைத்தல்), SDG 17 (நோக்கங்களுக்கான பங்குடமை). SDGs க்கு தொடர்பான சகல செயற்பாடுகளையும் ஒன்றிணைக்க, நெறிப்படுத்த, கண்காணிக்க மிகவும் பலமானதொரு பொறிமுறை இருந்தாலொழிய 2030 அளவில் SDGs களை அடைவது மிகவும் கடினமாகலாம். நோக்குகளுக்கு இடையேயான இடைவெட்டும் தன்மை காரணமாக இது கடினமாகின்றது. ஸ்ரீலங்கா உயர் நடுத்தர வருமான நாடு எனும் அந்தஸ்து நோக்கி முன்னேறுகையில், அபிவிருத்தி விளைவில் நீதியை உறுதி செய்வதும் தேசிய வளங்கள் அளவு மீறி பயன்படுத்தப்படுதலையும் சூழல் தரங்கெடுதலையும் தடுப்பது முக்கிய நோக்கமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா பெருமளவிலான சுற்றுச்சூழல் விசனங்களுக்கு முகம் கொடுக்கின்றது. இவை பூகோள, பிரதேச, உள்ளூர் அளவிலானவை. காலநிலை மாற்றம், ஓசோன் படலத்தின் அழிவு போன்ற உலக சுற்றுச்சூழல் பிரச்சினைகள் ஸ்ரீலங்காவில் கடுமையாக உணரப்பட்டுள்ளன. பிளாஸ்ரிக் மற்றும் வேறு தீங்கான பொருட்களால் உண்டாகும் கடல் மாசடைதல் போன்ற பிரச்சினைகள் கணிசமான தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவை வறட்சிகள், வெள்ளம், கடும் காற்று என்பவற்றை உருவாக்கும் வானிலை, கடல் சூழல் தொகுதிக்கு தீங்கு, கடற்கரை மாசுகளால் நிரம்புதல் என்பவற்றுக்கு இட்டுச் சென்றுள்ளன. இவை உணவு உற்பத்தி, பௌதீக உற்கட்டமைப்பு சமூக நிறுவனங்கள் என்பவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்றன. உள்நாட்டு சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தொடர்பான விசனங்கள், காடழித்தல், மண்அரிப்பு, வேட்டையாடுதலால் வனராசிகளின் அழிவு, நகரமயமாதல், உயிர்பல்லினத்தன்மை குறைதல், கடற்கரை தரம் கெடல், நகர திண்ம கழிவு மற்றும் கைத்தொழில் கழிவுகள் அதிகரித்தல், கண்டபடியான கழிவு அகற்றல், நன்னீர் ஊற்று மூலங்கள் மாசடைதல், நகரத்து வளி மாசடைதல், பச்சைவீட்டு வாயு வளியில் சேருதல் என்பவற்றை அடக்கியுள்ளன.

SDGs ஒன்றோடொன்டு தொடர்புடையனவாயினும் சுற்றுசசூழலுடன் அதி கூடியளவில் பொருந்துகின்ற நோக்கங்களை பெரும்படியாக இனங்கான முடியும். அவை: SDG6(தூயநீர் மற்றும் சுகாதாரம்), SDG7(கட்டுப்படியாகக் கூடிய சுத்தமான வலு) SDG9(கைத்தொழில், கண்டுபிடிப்பு மற்றும் உட்கட்டமைப்பு) SDG 11(நிலைத்திருக்கக் கூடிய நகரங்கள், சமுதாயங்கள்) SDG12(பொறுப்புடன் கூடிய நுகர்வும் உற்பத்தியும்) SDG13(காலநிலை நடவடிக்கை) SDG14 (நீரின் கீழான உயிர்) SDG 15(நிலத்தில் வாழ் உயிர்) நோக்கங்கள் இடையிலான இடைவெட்டும் இடைவினைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமூக கண்ணோட்டத்தில் SDGs மீது உண்டாகி வரும் பூகோள அளவிலான ஒருமைப்பாடு அரசாங்கத்துக்கும் ஏனைய பங்குதாரர்களுக்கும் சில வாய்ப்புகளை வழங்குகின்றன. அவை பெருநிறுவன துறை, சிவில் சமூகம் மற்றும் வேறு நிறுவனங்களாகும். இவை சுற்றுச்சூழல் தொடர்பில் நிலைத்திருக்கும் தன்மை, சமூக ரீதியாக சமநீதி, நாட்டு மக்களுக்கான நீதியான எதிர்காலம் ஆகிய நோக்கங்களில் செயற்படும். இருப்பினும் SDGs களை நிறைவேற்றுதல், பொருளாதர வளர்ச்சிக்கும், சமூக சுற்றுச்சூழல் தவிர்க்க இயலாத பிரச்சினை எனபவற்றுக்கிடையே ஒரு நியாயமான சமநிலையை அவசியமானதாக ஆக்குகின்றது. சமூக நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில் தேசிய, பிராந்திய, உள்ளூர் மட்டத்தில் காணப்படும் சகல வடிவிலான அசமத்துவங்கள் போன்ற விடாப்பிடியாக நிலைத்துக் காணப்படும் சமூகப் பிரச்சினைகளை தீர்த்துவைத்தல் மிகவும் முக்கியமானது. இந்த அறிக்கையில் நாம், பிரதானமான சமூக விசனங்களையிட்டு பேசுகின்றோம். இந்த நாட்டில் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான நோக்கின் பிரிக்க முடியாத பகுதியாக சமாதானமான, ஒத்திசைவான, நீதியான, அரவணைப்புடைய சமூகத்தை நோக்கி வேலை செய்தல் உள்ளது என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிடுதல் வேண்டும். ஏற்கனவே தெரிந்தபடி, 2030 அளவில் நிலைத்திருக்கும் அபிவிருத்தியை அடைதல் எனும் இலக்கை கொண்டுள்ள தேசிய மற்றும் அதன் கீழ் மட்டங்களிலான அரச மற்றும் அரசு சாராத நடவடிக்கைகளில் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்புறுகிறது. மறுபுறத்தில் அவ்வாறான இலக்குகள் குறுகியகாலம் (2020) நடுத்தர காலம் (2025) நீண்ட காலம் (2030) என்ற கட்டங்களூடாக தொடர வேண்டும்.

இந்த அறிக்கையை கையாளப்பட்ட சமூக பிரச்சினைகள் தொடர்பில் அண்மை காலங்களில் சில முன்னேற்றங்கள் காணப்பட்டிருப்பினும் 2030 அளவில் இலக்குகளை அடைய நிறைய விடயங்கள் செய்யப்பட வேண்டியுள்ளன. குறித்துறைக்கப்பட்ட காலத்தில், இந்த அறிக்கையில் பேசப்பட்ட சமூக பிரச்சினைகள் தொடர்பிலான இலக்குகளை அடைய முடிவதற்கு பொருத்தமான கொள்கை ஏற்பாடுகளை மற்றும் தலையீடுகள் செய்யப்பட வேண்டும். எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் தீர்வுகள் என்னும் தலைப்பின் கீழ் இந்த அறிக்கையில் சட்டமாக தரப்பட்டுள்ளது.

பல்வேறு காரணிகளின் தாக்கத்தால் வறுமை சீராக குறைந்து வருவதாக உத்தியோக பூர்வ தரவுகள் காட்டுகின்றன. ஆயினும் 30 வருடங்களுக்கு மேலாக வருமான அசமத்துவம் இருந்து வருகின்றது. வேலையற்றோர் வீதம் சீராக குறைந்து ஊழியப்படையின் 4.5 சதவீதமாக உள்ளது. ஆனால் பயனுள்ள வகையில் வேலை வாய்ப்பு பெற்றவர்களில் பெரும்பான்மையானோர் சமயாசமய மற்றும் முறைசாரா துறைகளிலிலேயே ஈடுபடுகின்றனர். இந்த நிலைமை வருமான மற்றும் வேலைப் பாதுகாப்பின்மை மற்றும் இளைப்பாறல் நன்மைகள் போன்ற முறைசார் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிக குறைவாக இருப்பதால் வெளிப்படுகின்றது. வேலையை பொறுத்த வரையில் தீர்க்கப்பட வேண்டிய வேறு பிரச்சினைகள் உள்ளன. பெண்களிடையே குறைந்த வீதமான தொடர்ந்து காணப்படும் வேலைப்படை பங்குபற்றல் மற்றும் பெண்களின் வேலையின்மை வீதம் உயரளவில் தொடர்தல் என்பனவே அவையாகும். இளைப்பாறும் வயது கடந்த பின்னரும் கூடிய விதமான மக்கள் வேலை செய்தலை உணர்ந்து கொள்ளுதல் முக்கியமானது. சமூக பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைவாக இருப்பதனால் வேலை செய்ய வேண்டிய பொருளாதார மற்றும் சமூக அமுக்கங்கள் இருப்பதையே இது காட்டுகின்றது. பாடசாலையிலுருந்து வேலைக்கு மாறுதல் இளைஞரிடையே முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இதனை சிறப்பான அரசு கொள்கைகள் மற்றும் வேறு தலையீடுகளால் தீர்த்தல் வேண்டும். பல ஆண் இளைஞர்கள் முறைசாரா துறையில் அல்லது வெளிநாட்டில் வேலை தேடுவதற்காக பாடசாலையிலுருந்து இடையில் விளகுகின்றனர். இவர்களின் எதிர்காலம் வேலை மற்றும் தொடர்பான பிரச்சினைகளால் இருளாகவே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேலாக கிடை அசமத்துவம், (horizontal inequality) கிராமிய, நகர அசமத்துவம் போன்ற சமூக அசமத்துவத்தின் வேறு வடிவங்கள், சமூக அரசியல் நெருக்குவாரத்தை தொடர்ந்து உருவாக்குகின்றன. இவை சமூக அரசியல் உறுதியின்மைக்கு காரணமாகின்றன. கற்பனையான அல்லது உண்மையான இன சமய குழுக்களிடையே உள்ள அசமத்துவம் சமாதானத்தையும் சமூக அமைதியையும் பயமுறுத்தும் கழகங்களுக்கும் வன்முறைக்கும் இட்டுச் செல்கின்றன. தொடர்ந்து கொண்டேயிருக்கும் ஆளுகை தொடர்பான பிரச்சினைகள் நீதியை பெறுவதற்கான இலகுவான சமனான வழிகள் போதாமை, சட்டத்தின் ஆட்சிக்கு அமையாமை, பொறுப்புக் கூறுதல் மற்றும் வினைத்திறன் இன்மை, ஊழல், அதிகமாக காணப்படும் நோய்கள், சூழல் மாசடைதல் போன்ற பொது மக்களை பாதிக்கும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய நிறுவனங்களின் செயலின்மை, அதிகரித்து செல்லும் வாழ்க்கைச் செலவு, படுகடன் அதிகரிப்பு, சர்வதேச ஒப்பந்தங்களின் கீழான கடப்பாடுகளை நாடு நிறைவேற்ற தவறியமை ஆகியவற்ற அடக்கியுள்ளன. திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயன்முறையின் பகுதியாக எடுக்க வேண்டிய முக்கிய காரணி நல்லாட்சியாகும். அதே சமயம் வாண்மையாளர் மற்றும் வாண்மைத்துவ நிறுவனங்களின் செயலாற்றுகையை பாதிக்கும் அறநெறிப் பிரச்சினைகளும் மிக முக்கயமானவையகும். அறநெறி விதிகளை அமைத்துக் கொள்ளளும் அவற்றை வாண்மைத்துவ நிறுவனங்கள் கடைப்பிடித்தலும் சமூகத்துறை நோக்குகள் தொடர்பான எத்தனங்களுக்கு முக்கியமான உள்ளீடு ஆகும்.

மேலே கூறப்பட்ட பிரச்சனைகள் கூடுதல் விவரத்துடன் பரிகார நடவடிக்கைக்கான ஆலோசனைகளுடன் கீழே தரப்படுகின்றது. SDGs களில் பெரும்பான்மையானவை சமூகத்துறை சார்ந்தவை. இதனால் 2030 அளவில் SDGs களை நிறைவேற்றும் ஸ்ரீலங்காவுக்கான வாய்ப்பு, இந்த வரைவு அறிக்கையில் இனங்காணப்பட்டு கலந்துரையாடப்பட்ட சமூகம் சார் பிரச்சினைகளை எவ்வாறு நாம் கையாள்வோம் என்பதில் பெரிதும் தங்கியுள்ளது. வேறு விதமாக கூறினால் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள், சமூகத்தின் கீழ் தட்டிலுள்ள, புறந்தள்ளப்பட்ட மக்களை தானாகவே கசிந்து சென்றடையும் எனக் கருதிக்கொண்டு பொருளாதார அபிவிருத்தி நோக்குகளில் முழுக்கவனத்தையும் செலுத்துதல் பலன் தரமாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு

# C2

## C2. பொருளாதாரம்: கடும் பிரச்சினைகள், விளைவுகள், மற்றும் தீர்வுகள்

### 2.1 உறுதி நிலைப்படுத்தல்

#### 2.1.1. தற்போதைய நிலை, பிரச்சினையான விடயங்கள் மற்றும் பிரச்சினைகள்

ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் கட்டமைப்பு சமநிலை இன்மை காரணமாக கூடுதலான பேரண்டப் பொருளாதார குழப்பங்களையும் உறுதிப்பாடின்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனை மீண்டெலும அரசஇறை மற்றும் மீண்டெலும் செலவுக் கணக்கு என்பவற்றில் காணமுடிகின்றது. இவை நாட்டின் தேசிய செலவு, தேசிய வருமானத்தை விட கூடுதலாக உள்ளது என்பதையும் நாட்டின் வியாபாரம் செய்யக் கூடிய பொருட்கள் சேவைகளின் உற்பத்தி போதுமானதல்ல என்பதையும் சமிக்ஞை செய்கின்றன. இவ்வாறான பொருளாதாரங்கள் உயரளவான கடன், வெளிநாட்டு மூலதன பாய்ச்சலில் பெரிதும் தங்கியிடுதல், நாணயத்தின் பெறுமானம் தொடர்ந்து குறைதல் மற்றும் கூடுதல் வட்டி வீதம் என்பவற்றால் பாதிக்கப்படும்.

வெளியிலிருந்து வரும் பாதனங்களால் ஆபத்துக்கு உள்ளாகும் இயல்பை ஆகவும் குறைந்தளவுக்கு கொண்டு வரவும் பேரண்ட பொருளாதார உறுதி நிலையை பேணவும் நிலைத்திருக்கச் செய்யப்பட்ட நீண்ட கால வளர்ச்சிக்கான அடிப்படை முன்தேவைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பொருளாதார உறுதித்தன்மையை அடைவதற்கும் தேவையான எத்தனங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். உள்நாட்டு உறுதிப்பாடு அறசிறை பலப்படுத்தல் நடவடிக்கைகளாலும் புத்திபூர்வமான நாணய மற்றும் நாணய மாற்றுவீத கொள்கைகளை கடைப்பிடிப்பதனாலும் விலை உறுதியின்மையையும் உயர் வட்டி வீதத்தையும் விரைந்து நடக்கும் நாணய மாற்றுவீத விழ்ச்சியையும் ஆகக் குறைந்த அளவுக்கு கொண்டு வரலாம். பொருளாதாரத்துக்கான, உயர் ஏற்றுமதி வருமானங்களை உழைத்தலில் ஒரு முற்போக்கான முன்னேற்றத்தால் வெளி உறுதி நிலையை அடைதல் உதவப்படும். இதற்கு சர்வதேச சந்தையில் ஸ்ரீலங்காவின் ஏற்றுமதி போட்டித்தன்மையை அதிகரிக்கச் செய்வதற்கு நிரம்பல் பக்க இறுக்கங்களை இல்லாமல் செய்யும் நோக்கிலான சீர்த்திருத்தங்கள் தேவையாகும்.

#### 2.1.2 வரக்கூடிய சமூக சுற்றுச்சூழல் விளைவுகள்

- பேரண்ட பொருளாதார உறுதியின்மை வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் குறைக்கும். இதன் விளைவாக வாழ்க்கைத் தரமும் புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்களின் பொறுப்பான பயன்பாடு நோக்கிய முயற்சிகளும் பாதிப்புக்கு உள்ளாகும்.

- உயர் பணவீக்கம் போன்ற உறுதியின்மையின் குணங்குறிகள் செல்வந்தர்களுடன் ஒப்பிடுகையில் வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தில் கூடுதல் தீர்க்கமான தாக்கத்தை கொடுக்கும். இது சமூக சமநீதி இன்மைக்கு இட்டுச் செல்லும்.

- தாழ்மட்ட வளர்ச்சியும் குடும்பங்களின் வருமானமும் அடிப்படை தேவைகளை அடைவதற்கான வழியை தடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசிறை நெருக்குவாரத்தால் செலவினைகளை குறைத்தல அடிப்படை சமூக சேவைகள் மற்றும் வறியோருக்கான மற்றும் விளிம்பு நிலையில் உள்ளோருக்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகளை போதுமானதாக இல்லாமல் ஆக்குவதற்கு இட்டுச் செல்லும். பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக சகிப்புத்தன்மை என்பவற்றை தடுக்கும் பலவகையான மோதல்களை இது தோற்றுவிக்கவும் கூடும்.

- பொருளாதார உறுதியின்மையும் நெருக்கடிகளும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான இயற்கைவளப் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் விடயங்களிலிருந்து கவனத்தை திருப்ப முடியும்.

- பொருளாதார உறுதியின்மை, நீண்ட கால சுற்றுச்சூழல் சமூக பிரச்சினைகளில் போதிய கவனம் செலுத்தாமல் குறுகிய கால கொள்கை தீர்வுகளுக்கு கூடுதல் கவனம் செலுத்துவதற்கு இட்டுச் செல்ல முடியும். இது நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியின் இலக்குகளுக்கு பாதகமாகும்.

### 2.1.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- பலமான அரசிறை உருவாக்கும் நடவடிக்கைகள் மற்றும் புத்திபூர்வமான செலவினங்கள் ஊடாக கூடுதல் நிலைத்திருக்கக் கூடிய மட்டங்களை குறைந்த அரசிறை பற்றாக்குறை மூலம் அடைதல்.

- சகல அரசாங்க தொழில் நிறுவனங்களுக்கும் அபிவிருத்தி செய்திட்டங்களுக்கும் முறைமையான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகளை அறிமுகம் செய்க.

- கடன் நிலைபேறுமையை அடைவதற்கு பற்றாக்குறை நிதித்தேவையை நிரப்புவதற்கு கடன்படுதலில் தங்கியிருத்தலை படிப்படியாக குறைக்கவும்.

- விலைகள் மற்றும் நாணயமாற்றுவீத உறுதித்தன்மை, குறைந்த வட்டி வீத சூழல் என்பற்றை அடைவதற்கு அரசிறை மற்றும் நாணய கொள்கைகளிடையே முறையான ஒத்திசையை பேணுக.

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டை கவர்வதற்கு சாதகமான பேரண்ட பொருளியல் சூழலை உருவாக்குக.

- பண்டங்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி பரவலாக்கலை பன்முகப்படுத்துக.

## 2.2 கடன்

### 2.2.1 தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

உருவாகி விடும் சந்தை நியமங்களுக்கு அமைய அண்ணளவாக 80 சதவீதமாகவுள்ள ஸ்ரீலங்காவின் கடன் மற்றும் மொத்த உண்ணாட்டு உற்பத்திக்கு இடையிலான வீதம் உயர்வானது ஆகும். உண்ணாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கு இடையிலான பொதுப்படு கடனின் ஒட்டுமொத்த கூட்டமைவு அண்மைய வருடங்களில் கணிசமாக மாறாதிருப்பினும் வெளிநாட்டுக் கடன் கூட்டமைவில் வெளிப்படையான மாற்றம் ஏற்பட்டுள்ளது. சலுகை அடிப்படையில் அமையாத வெளிநாட்டுக் கடனின் பங்கு 2006இல் 7 சதவீதம் மட்டுமாகவே இருந்தது. இது 2016இல் 53 சதவீதமாக அதிகரித்தது. இந்த அதிகரிப்புக்கு காரணமாக ஸ்ரீலங்கா 2010இல் நடுத்தர வருமான நாடாக ஆகியதும் அதோடு கூடிவந்த குறைக்கப்பட்ட வெளிநாட்டு நன்கொடைகளும் சலுகை ரீதியான நிதிப்படுத்தலும் முக்கிய காரணங்களாயின. ஸ்ரீலங்கா சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்ப நாடு கஷ்டப்பட்டபோது இவ்வாறு ஆயிற்று. ஸ்ரீலங்காவின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவான கடன் நிலுவை பொருளாதாரத்தை கடன் பொறி ஆபத்துக்கு கொன்டு சென்றுள்ளது. ஸ்ரீலங்காவின் பெரும் சுமையாகவுள்ள கடன் பொறுப்பு பொருளாதாரத்தை கடன் பொறிக்குள் தள்ளும் ஆபத்துள்ளது. ஏற்கனவே உள்ள பாரிய வரவுசெலவுத்திட்ட சுமையை கடனுக்கான வட்டிக்கொடுப்பனவு மேலும் கூட்டியுள்ளது. பெருமலவான வெளிநாட்டுக் கடன், அரசிறையை பலப்படுத்தும் முயற்சிகள் தொடர்பில் நாணய மாற்றுவீத கொள்கை முகாமத்துவத்தை மட்டுப்படுத்துவதாக உள்ளது.

### 2.2.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- முதலீட்டாளரின் நம்பிக்கை மீது பாதகமாக தாக்கம் உண்டாவதால் அளவுக்கு அதிகமான அரசாங்கக் கடன் பொருளாதார வளர்ச்சி மீது பாதகமான தாக்கத்தை கொடுக்கும்.
- உயரளவான கடனைக் கொண்டிருத்தல் வெளித்தாக்கங்களால் பொருளாதாரம் பாதிக்கப்படும் ஆபத்தை உருவாக்குவதுடன், கடனின் கட்டமைப்பு மீதான நாணயமாற்று வீதத்தின் தாக்கம் வழியாக பொருளாதாரத்தை உறுதிப்படுத்தும் கொள்கைத் தெரிவுகளை மட்டுப்படுத்துகின்றது.
- கடன் கட்டுவதற்காக உள்நாட்டு அரசாங்க கடன்படுகை உயர் வட்டி வீதம் காரணமாக தனியார் முதலீடுகளை வெளிச்செல்ல வைக்கக்கூடும். உயர் வட்டி வீதம் புதிய வணிக முதலீடுகளை பின்னடிக்க வைக்கும்.
- கடன் நிலைத்திருக்கும் தன்மையை கையாள வரியை அதிகரித்தல் மக்களின் செலவளிக்கக் கூடிய வருமானங்களையும் வாழ்க்கைத் தரத்தையும் பாதிக்கும்.
- கடன் அதிகரிக்கும் போது அரசாங்கம் தனது வரவுசெலவு திட்டத்தின் கூடிய பகுதியை வட்டிக் கொடுப்பனவாக செலவளிக்கும். இதனால் அரசாங்க முதலீடுகளுக்கும் வேறு சமூகத்துறை செலவுகளுக்கும் கிடைக்கக் கூடிய நிதி மட்டுப்படுத்தப்படும்.
- உயரளவான கடன், கூடுதலான திரும்பத்திரும்ப வரும் நாட்டுக்கு கேடு விளைவிக்கும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவசர நிலைமைகளுக்கும் வினைத்திறன்மிக்க வகையில் துலங்குவதற்குகான அரசாங்கத்தின் களை அரசிறை வசதியை குறைக்கின்றது.

### 2.2.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்

- அரசிறையை பலப்படுத்தும் முயற்சிகள் ஊடாக ஒரு முதல்நிலை மிகையை உருவாக்க உண்ணாட்டு மூலதனங்களை திரட்டும் முயற்சிகளை மேம்படுத்தல்.
- ஸ்ரீலங்கா மூலதன சந்தையை மேம்படுத்தல் ஊடாக குறைந்தளவு ஆபத்துள்ள உண்ணாட்டு கடன் நோக்கி கடன் கட்டமைப்பை நகர்த்துக.
- கூடுதல் பலமுள்ள நிறுவனங்கள் மூலமும் அரசாங்க முதலீட்டு செய்திட்டங்களில் தாக்கவிளைவுள்ள பொருளாதார செலவு – நன்மை பகுப்பாய்வு மூலமும் கடன் முகாமைத்துவ முறைகளை மேம்படுத்துக.
- அரசாங்க முதலீட்டு செய்திட்டங்களை நல்ல முறையை தெரிவதனூடாக வெளிநாட்டு நாணயம் சம்பாதிக்கும் முயற்சியான்மைகளை உருவாக்கி வெளிநாட்டு கடன்படுதலை குறைக்கவும்.
- சேமிப்பு– முதலீடு இடைவெளியை நிரப்ப கூடுதல் நேரடி வெளிநாட்டு முதலீட்டை (FDI) கவர்க.
- விரயங்களை குறைக்கவும், ஊழலை அறவே இல்லாமல் செய்யவும்
- உற்பத்தி திறனை அதிகரிக்க தொழில்நுட்ப மாற்றங்களை ஊக்குவிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.3 பணவீக்கம்

#### 2.3.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையுள்ள விடயப்பரப்புகள்

விலை உறுதிப்பாடும், குறைவான பண வீக்கமும் தனியார் முதலீட்டை கவரக்கூடிய, பொருளாதார வளர்ச்சி ஏற்படக்கூடிய சுழலை ஏற்படுத்துகின்றன. இதனால் வேலைவாய்ப்பு உருவாக்கமும் உயர் வாழ்க்கைத் தரமும் சாத்தியமாகும். விடாப்பிடியான மற்றும் உயர் விரிவுத்தன்மையான அரசிறை (fiscal) நிலைமைகள் ஸ்ரீலங்காவில் உயர் மற்றும் அடிக்கடி மாறும் பண வீக்க நிலைக்கு இட்டுச் சென்றுள்ளன. இது தனியார் சேமிப்பையும் முதலீட்டையும் ஊக்கம் இழக்கச் செய்கின்றது. பூகோள அளவிலான பொருளாதார வீழ்ச்சி மற்றும் பண்ட விலைகளின் வீழ்ச்சி என்ற பிண்னனியில், ஸ்ரீலங்காவும் 2009இலிருந்து ஓரிலக்க பணவீக்க வீதத்தை பேணுவதில் வெற்றி அடைந்துள்ளது. பூகோல பொருளாதார நிலமைகள் மாறுகையில் இந்த சாதனைகள் பின்னடையலாம். இதனால் நீண்டகால விலை உறுதிப்பாட்டை உண்டாக்க ஒரு புத்திபூர்வமான நாணய கொள்கை நாட்டுக்கு தேவையாகின்றது. விலை உறுதிப்பாட்டை பேணுவது தொடர்பாக விழிப்புணர்வுள்ள சட்டகத்தை நோக்கிய நகர்வை ஏற்படுத்த நாணய அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள் ஒத்திசைவான எதிர்வு கூறக்குடிய நாணய கொள்கை கட்டகத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

#### 2.3.2 வரக்கூடிய சமூக சுற்றுச்சூழல் விளைவுகள்

- உயர்பணவீக்கம் பணத்தின் மெய்ப் பெறுமானத்தை குறைக்கின்றது. இதனால் கொள்வனவு சக்தியை, குறிப்பாக, வறிய மக்களின் கொள்வனவு சக்தியே குறைவடையும்.
- நிலையான வருமானம் உழைப்போர் குறிப்பாக ஓய்வூதியத்தில் தங்கியிருப்போர் பண வீக்கத்தால் மிக மோசமாக பாதிப்படைவர்.
- உயர்வான அடிக்கடி மாறுகின்ற பணவீக்கம் தனியார் முதலீட்டை குறைக்கவும் நாட்டின் வளர்ச்சி வாய்ப்புகளை தடுக்கவும் செய்கின்றது.
- விலையின் உறுதியின்மை ஒரு பொருளாதாரத்தின் திரிபுகளுக்கும் வளங்களின் தவறான ஒதுக்கீட்டுக்கும் இட்டு செல்லும்.
- நாணய மாற்றுவீதம குறைந்தாலொழிய மெய் நாணய மாற்றுவீத அதிகரிப்பு தொடர்பான ஏற்றுமதி போட்டித்தன்மையை உயர் உண்ணாட்டு பணவீக்கம் குறைத்துவிடும்.

#### 2.3.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், மற்றும் நடைமுறைப்படுத்தல்

- விலை உறுதிப்பாட்டை பேணுவதற்கு நாணய மற்றும் அரசிறை கொள்கைகள் இடையே, நெருங்கிய ஒத்திசைவை உறுதி செய்க.
- கேள்வி இழுவை அல்லது செலவுத் தள்ளுகை (demand pull or cost push) என்ற வகையில் வரக்கூடிய பணவீக்கத்தை பொறுத்து பொருத்தமான வழிகளை கையாள்க. இவற்றுள் நாணய கொள்கை இறுக்கம் (கேள்வி இழுவை) அல்லது பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தடையாக உள்ள நிரம்பல்பக்க மட்டுப்பாடுகளை அகற்றல் என்பனவும் அடங்கும். (செலவுத் தள்ளுகை).
- நாணய கொள்கையை வகுக்கும்போது நாணய அதிகாரிகளின் பிரதான விருப்புத்தேர்வாக விலை உறுதிநிலை இருப்பதை உறுதி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விலை உறுதிப்பாடு தொடர்வதற்கு பொருத்தமான கொள்கைகளை வகுப்பதில் நாணய அதிகாரிகளுக்கு தேவையான சுதந்திரம் இருப்பதை உறுதி செய்க

- மூலவளங்களின் தவறான ஒதுக்கீட்டைத் தவிர்ப்பதற்கு நிர்வாக ரீதியான விலைக்கட்டுப்பாடுகள் இறுதி வழியாக இருப்பதை உறுதி செய்க.

## 2.4 வட்டி வீதங்கள்

### 2.4.1 தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

பற்றாக்குறை நிதிப்படுத்தலுக்கான அரசாங்கத்தின் உயர் உள்நாட்டுக் கடன்படுதல் தேவையின் விளைவாக தனியார் முதலீட்டை தொய்வடையச் செய்யும் உயர் வட்டிவீதம் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை பின்தள்ளும் அளவுக்கு சென்றுள்ளது. அண்மையில் வெளிநாட்டு நிதிப்படுத்தல் கூடுதலாக தங்கியுள்ள நிலையில் நாணய அதிகாரிகள் பொருளாதார வளர்ச்சியைத் தூண்ட வட்டி வீதத்தை குறைக்க முயன்றுள்ளனர். ஆயினும் இது எதிர்பார்க்கப்படாத விளைவுகளையும் கொண்டு வந்தது. தனியார் நுகர்வு கேள்வியை தூண்டிவிடுதல், பேரண்ட பொருளியல் சமநிலையின்மையை மோசமாக்கல், அடிக்கடி சென்மதி நிலுவை கொடுப்பணவு நெருக்கடிக்கு இட்டுச் செல்லல், வட்டி வீதங்களுக்கு கடுமையான மேல்நோக்கிய மீள் சீர்ப்படுத்தல் என்பவயே அவையாகும். உயர் வட்டி வீதங்களும் அவற்றின் அடிக்கடி மாறும் தன்மையும் வணிகத்தில் பாதகமான தாக்கங்களை விளைவிப்பன. இந்த தாக்கம் குறிப்பாக நிதிக்கான வழிகள் நீண்டகாலமாக கணிசமான நெருக்குவாரத்தை கொண்டிருந்த சிறிய நடுத்தர முயற்சிகளில் காணப்பட்டது. இந்த தாக்கம், தமது நுண் முயற்சியாண்மைகளை நடத்துவதற்கு முறைசாரா நிதியங்களில் தங்கியிருந்த வறியோரின் நிதி தேவைகளை அநுசரிப்பதையும் தடை செய்கின்றது. இதனால் ஒரு பொருத்தமான வட்டிவீத முறைமையை அமைத்தல் மீதான கொள்கையின் உந்தல் பணவீக்க வீதத்தை குறைந்த ஓரிலக்க மட்டத்தில் பேணுவன நோக்கமாக கொள்ள வேண்டும். அதே சமயம் தனியார் முதலீடுகளை ஊக்குவிக்கும் வகையிலான மற்றும் சேமிப்பாளர்களுக்கு ஒரு நியாயமான வடடி வருமானத்தை பேணுவதாகவும் இருக்க வேண்டும்.

### 2.4.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- உயர் உண்மை வட்டி வீதங்கள் வீட்டுத்துறையினருக்கு சேமிப்பதற்கான ஊக்குவிப்பாக அமைகின்றது.

- உயர்வான அடிக்கடி மாறும் வட்டி வீத சூழலில் வறிய வீட்டுத்துறையினர் குறைந்த மட்ட நிதி அறிவு காரணமாக நட்டப்படலாம்.

- கடனுக்கான உயர்விலை வறியோர் மற்றும் நலிவுற்றோர் மீது கெடுதியான தாக்கத்ததை உண்டாக்கும்.

- கடனுக்கான உயர்விலைக்கு காரணமாகும் பொறுத்தமான பாதுகாப்பு முறைகள் இல்லாமை நலிவுற்றோரை ஆபத்தான கட்டத்தில் விடும்.

- உயர் வட்டிவீதம் ஸ்ரீலங்காவில் பெரிய முறைசாரா துறையின் வேலைவாய்ப்புகளின் மூலங்களான நுண், சிறிய நடுத்தர முயற்சியாண்மைகளின் (MSMEs) வணிக விரிவாக்கல் செயற்பாடுகளை ஊக்கமிலக்கச் செய்யும்.

- உயர் வட்டி வீதங்கள் வறிய விவசாயிகளுக்கு குறிப்பாக சீவனோபாயமாக பருவகால விவசாயத்தில் தங்கியிருப்போரையும் இயற்கை அனர்த்தங்களால் கூடுதலாக பாதிக்கப்படக்கூடிய பலவீனமான நிலையில் இருப்போரையும் நிதிக் கஷ்டங்களுக்கு இட்டுச் செல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.4.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- மேலும் சிறப்பான அரசிறை மற்றும் நாணய கொள்கை ஒருங்கிணைவு என்பவற்றால் ஆதரிக்கப்படும் அறிவுபூர்வமான நாணய கொள்கை சட்டகத்தை கடைபிடிக்கவும்
- சலுகை அடிப்படையிலான நுண்கடன் பெறும் வழிகளை மேம்படுத்துதல். மேலும் MSMEs (நுண், சிறிய, நடுத்தர முயற்சியான்மைகள்) களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்காக கொண்ட திட்டங்களை தொடக்கவும்.
- கிராமிய/ஏழை மக்களின் நிதி அறிவை முன்னேற்றுக
- வாடிக்கையாளர்களுக்கு நீதியான நடத்துகை கிடைப்பதை உறுதி செய்வதற்கு நாட்டின் வங்கி அல்லது வங்கிமுறை சாராத நிதி முறைமையின் மீதான நிதி ஒழுங்கு விதிகளை பலப்படுத்தி மேற்பார்வையையும் முன்னேற்றுக.
- இயற்கை அனர்தங்கள் அல்லது வேறு சம்பவங்களின் போது வறிய நலிவுள்ள மக்களின் நிதி கஷ்டத்துக்கு உதவும் சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் மற்றும் தேசிய ஆயத்த நிலை என்பவற்றின் வினைத்திறனை கூட்டுக. இது தொடர்பாக போதுமான சமூக பாதுகாப்பு வலை அமைப்புகளை வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நலன்புரி சபைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## 2.5 வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

### 2.5.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

விடாப்பிடியான வெளிநாட்டு நடைமுறை கணக்கு பற்றாக்குறையுடன் ஒப்பீட்டளவில் பலவீனமான செயற்படுகையை காட்டும் வகையில் ஸ்ரீலங்கா ரூபாவின் பெறுமதி வருடக்கணக்காக தொடர்ந்து குறைந்து வருகின்றது. பெரிய அளவிலான வர்த்தக மீதி வெளிநாட்டிலுள்ள ஸ்ரீலங்கா தொழிலாளர் அனுப்பும் அந்நிய செலவானியால் குறைக்கப்படுகின்றது. வெளிநாட்டுத் துறைப் பலவீனங்கள் நாடு வைத்திருக்கும் மிகவும் குறைவான உத்தியோக பூர்வ ஒதுக்கினால் புலனாகின்றது. இதன் ஒட்டுமொத்தமான விளைவு ஸ்ரீலங்கா நாணயம் பெறுமதி குறைதலாகும். இத்தோடு பொருளாதாரம் வெளிநாட்டு அழுத்தங்களாய் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் உள்ளது. இது சென்மதி நிலுவை கொடுப்பனவு மற்றும் நாணய பெறுமதி வீழ்ச்சி என்பன வழியாக தெரிய வரும். ஸ்ரீலங்காவின் தேக்க நிலையில் உள்ள ஏற்றுமதி செயலாற்றுகை மற்றும் தொழிலாளர் அனுப்பும் நாணயத்தில் அளவுக்கு அதிகமாக தங்கியிருத்தல் என்பன வெளிநாட்டு நாணய செயலாற்றுகை பிரதான பிரச்சினையாக உள்ளதை காட்டுகின்றது. வெளிநாட்டு கடன்களில் அதிகமானவை வெளிநாட்டு நாணயத்தில் உள்ளமை காரணமாக நாணயமாற்றுவீத மாற்றங்கள் கடும் பிரச்சினையாக்கியுள்ளது. இதனால் நாணயமாற்று வீதத்தில் ஏற்படும் பெரிய மாற்றங்கள் நாட்டில் கடன் - GDP விகிதத்தில் பாதிப்பு செய்வதாக உள்ளது. சென்மதி நிலுவை (BOP) நெருக்கடியையும் நியாயப்படுத்த முடியாத வெளிநாட்டு நாணயமாற்று வீத கொள்கை வழியாக வரும் பாரிய நாணய பெறுமதி இறக்கத்தை தவிர்க்கவும் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப மாற அனுமதிக்கப்படும் நாணய மாற்றுவீத கொள்கையை கடைப்பிடிப்பதுவே வழியாகும். இவ்வாறான கொள்கை நிலைப்பாடு சர்வதேச சந்தையில் ஸ்ரீலங்காவின் ஏற்றுமதியின் போட்டித்தன்மையை அதிகரிக்கும்.

### 2.5.2 பரிகாரங்கள், ஏற்பாடுகள், மற்றும் நடைமுறைப்படுத்தல்

- கூடுதல் பெறுமதி கொடுக்கப்பட்ட நாணய மாற்றுவீதம் நாட்டின் சர்வதேச ஏற்றுமதி போட்டித்தன்மையை பாதிக்கும். இதனால் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் என்பவற்றின் மீது பாதகமான விளைவை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேணமுடியாத நாணயமாற்று வீத கொள்கைகளும் கூடுதலாக மாற்றுவதும் ஸ்ரீலங்காவின் கடன் நம்பிக்கை தன்மை மீது முக்கிய தாக்கங்களை ஏற்படுத்தும்.

- திடீர் திடீரென மாற்றப்படும் கூடுதல் பெறுமதி கொடுக்கப்பட்ட நாணய மாற்றுவீதம் முதலீட்டாளர் நம்பிக்கையையும் ஏற்றுமதியையும் குழப்புவதுடன் பெருமளவான முதலீடு வெளியேறவும் காரணமாகும்.

- அதே விதமாக குறைந்த பெறுமதி கொடுக்கப்பட்ட நாணய மாற்றுவீதம், இயற்கை மூலவளங்களின் அளவு மீறிய பயன்பாட்டின் காரணமாக வரும் தார்பரியங்களுடன் ஏற்றுமதிகளின் அளவு மீறிய கேள்வியை தூண்டலாம்.

- குறைந்த பெறுமதி கொடுக்கப்பட்ட நாணய மாற்றுவீதம் இறக்குமதிகளின் உயர் விளைகளூடாக உள்நாட்டு பணவீக்க அமுக்கங்களை அதிகரிக்கும். பணக்காரர்களைவிட வறியோரை கூடுதலாக பாதிக்கும்.

### 2.5.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

- இயைந்துபோகும் நாணய மாற்றுவீத கொள்கை சட்டகத்தினுள் உறுதியான போட்டித்தன்மையுள்ள நாணய மாற்றுவீதத்தை பேணுக.

- நாணயத்தின் தேவைப்படாத திடீர் மாற்றங்களை நிவர்பிப்பதற்கான நாணய மாற்றுவீத கொள்கையை கடைப்பிடிப்பதற்காக நாணய அதிகாரிகள் வெளிநாட்டு நாணயமாற்று சந்தையில் தலையீடு செய்வதை மட்டுப்படுத்துக.

- ஸ்ரீலங்காவின் உத்தியோகபூர்வ ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு வியாபாரம் மற்றும் முதலீட்டு கொள்கைகள் ஊடாக ஏற்றுமதி வருமானங்களை அதிகரிக்கவும்.

- உத்தியோகபூர்வ ஒதுக்களை ஏற்படுத்த கடன் கருவிகளில் தங்கியிருக்கும் ஆபத்தை குறைப்பதற்கு கடன் உருவாக்காத வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல்களை தோற்றுவிப்பதற்கு கூடுதலாக வேலை செய்க.

## 2.6 வரவுசெலவு திட்ட பற்றாக் குறைகள்

### 2.6.1 தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையான விடயங்கள்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சராசரியாக 8 தொடக்கம் 10 வரையான விரிந்து செல்லும் தன்மைத்தான வரவுசெலவு திட்ட பற்றாக்குறையை ஸ்ரீலங்கா வரலாற்று ரீதியாக கொண்டுள்ளது. அண்மைய வருடங்களில் ஒட்டுமொத்தமான அரசிறை விளைவுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. 2009இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதமாக காணப்பட்ட பற்றாக்குறை 2014இல் 5.7 சதவீதமாக குறைந்தது. 2015இல் ஏற்பட்ட பின்னடைவின் பின்னர் அரசிறை பற்றாக்குறை 2016இல் மீண்டும் நிலைத்திருக்கக் கூடியவாறு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.9 சதவீதமாகியது. இத்தோடு இறை உருவாக்கலிலும் குறிப்படத்தக்க முன்னேற்றமும் இணைந்திருந்தது. தேவையான அரசாங்க செலவின் நிகழ்ச்சித் திட்டங்களை சாத்தியமாக்க நிலைத்திருக்கக்கூடிய இறை சீர்த்திருத்தங்கள் அவசியமானவை. கடன்படுதலில் அளவுக்கதிகமாக தங்கியிருக்காது இந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு இது முக்கியமானது. அதே சமயம், அறிவுபூர்வமான செலவின நடவடிக்கைகளை செயற்படுத்துவது அவசியமானது. குறிப்பாக இது நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைப் பொறுத்து கூடுதல் முக்கியமானது. குறைவாக உள்ள வளங்கள் முக்கியமான சுகாதாரம், கல்வி மற்றும் ஏழைகளுக்கான சமூக பாதுகாப்பு திட்டங்களுக்காக இது அவசியமானது. இவ்வாறான அரசிறை விருப்பத் தேவைகளை மாற்றி அமைப்பது –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைந்து வளர்ந்து வரும் முதியோர் சனத்தொகை சவால்களை ஸ்ரீலங்கா எதிர்கொள்கையில் கூடுதல் அவசரமாகும்.

**2.6.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் மீதான தாக்கங்கள்**

- தொடர்ந்து வரும் உயர் வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறை முதலீட்டாளர் நம்பிக்கையையும் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகளையும் குறையச் செய்யும். பேரண்ட பொருளாதார உறுதியின்மை மற்றும் உயரளவான கடன்படுகை என்பவற்றுக்கு இட்டுச் செல்லும்.

- திரும்பத்திரும்ப வரும் உயரளவான வரவுசெலவுத் திட்ட குறைபாடு, நாட்டின் நீண்டகால வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றின் மீது தாக்கம் செலுத்தும் - இயைந்து கொடுக்கக் கூடிய தன்மை அரசாங்க முதலீட்டுக்கான கிடைக்கக் கூடிய வாய்ப்பு என்பவற்றின் போதாமையை காட்டுகின்றது.

- தொடர்ச்சியான அரசிறை சமமின்மை, சுகாதாரம், கல்வி போன்ற சமூக நலன் திட்டங்களை அலட்சியப்படுத்துவதாக அமையும். இது வளர்ச்சி குறைதல், நாட்டுக்கான அபிவிருத்தி நன்மைகள் குறைதல் என்பவற்றுக்கு காரணமாகும்.

- கடுமையான அரசிறை குறைவுடன் தொழிற்படுகையில் வறிய மற்றும் நளிவுற்றோருக்கு போதுமான சமூக பாதுகாப்பை அரசாங்கத்தால் வழங்க முடியாதிருக்கும்.

- அரசிறை கொள்கையின் சமநீதி தாக்க விளைவுகள் - அது வரியமைப்பு அல்லது செலவுக் கொள்கை வழியாக வந்தாலும் இருக்கமான அரசிறை நிபந்தனைகளின் கீழ் தூர விலகிவிடும் விடயமாகும். இது சமூக அமைதியின்மைக்கு இட்டுச் செல்லலாம்.

**2.6.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

- வரி அறவிடுதலில் முற்போக்கு தன்மையை பிரதான கோட்பாடாக அமைத்துக்கொண்டு போதிய அரசாங்க இறையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும்.

- விரயமான செலவீனங்களை சீர் செய்க. இந்த சீர்படுத்தலில் வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள் மற்றும் மானியங்கள் வழங்கும் திட்டங்கள் தவறான இலக்கை சென்றடைவதை நிறுத்துவதும் அடங்கும்.

- தமது நிதி செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை புனரமைக்கவும். இதனால் மத்திய அரசாங்க நிதிகள் மீதான அழுத்தங்களை குறைக்கவும்.

- சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகள் மீதான தற்போதைய செலவு மீள்பார்வைக்கு உற்படுத்துக. மேலும் நோய்கள் பரம்பல் சார்ந்த, ஊழிய சந்தை சார்ந்த புதிதாக உருவாகி வரும் சவால்கலை எதிர்கொள்ள வேண்டிய செலவினங்களையும் சேர்த்துக் கொள்க. இது நிலைத்திருக்கக் கூடிய பெருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் தேவையானதாகும்.

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R & D) மற்றும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான சுற்றுச்சூழல் நட்பான கண்டுபிடிப்புகளுக்கு வரிச் சலுகை போன்ற சந்தை சார்ந்த ஊக்குவிப்புகளை வழங்குக.

- சமூக பாதுகாப்பு சட்டகங்களை மீள்பார்வை செய்க. சமூகத்திலுள்ள வறியோர் மற்றும் நலிவுற்றோருக்கான சமூக பாதுகாப்பு ஏற்பாடுகளை வழங்குவதில் சமூக நலன் சபை முக்கிய பங்களிப்பு செய்வதை உறுதி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.7 வியாபாரம்

### 2.7.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள்

மொத்த உண்ணாட்டு உற்பத்தியில் (SL) ஸ்ரீலங்காவின் ஏற்றுமதியின் பங்கு 1990களின் நடுப்பகுதியில் 13 சதவீதத்திலும் குறைவாக இருந்து 2016இல் 13 சதவீதத்திலும் குறைந்தது பெரும் விசனத்துக் உரியதான விடயம். பூகோள பொருளாதாரம் 2008/09 இலுருந்து பின்னடைந்த போது உற்சாகமில்லாத பொருளாதார வளர்ச்சியில் இது தாக்கத்தை உடையதாக இருந்தது. பூகோள அளவில் ஸ்ரீலங்கா உலக சந்தையில் 0.08 சதவீதத்தை கொண்டிருந்தது. இது 2014ல் 0.06 ஆக குறைந்தது. இதிலிருந்து அதன் பிரதான ஏற்றுமதிகளில் கூட அதன் போட்டியாளர்களிடம் தோற்றுவிட்டது என்பதை காட்டுகின்றது. ஆடைகள் மற்றும் தேயிலை போன்று ஏற்றுமதியின் முக்கிய துறைகளில் குறுகிப் போனதும், ஏற்றுமதியில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் எனும் நாடுகளுக்கும் குறுகிப்போனதும் ஸ்ரீலங்காவில் ஏற்றுமதி துறை தொடர்ந்து பின்னடய காரணமாகின்றன. காலப்போக்கில் உற்பத்திகளின் பன்முகப்படுத்தல் நடக்காது போனமை ஸ்ரீலங்கா உலக உற்பத்தி வலையமைப்பில் தன்னை இணைத்துக் கொள்ளாமையை காட்டுகின்றது. இது ஸ்ரீலங்காவில் பெறுமதி கூட்டிய உற்பத்தகளை ஏற்றுமதி செய்யும் ஆற்றலை மட்டுப்படுத்தியுள்ளது. ஒப்பீட்டளவில் ஸ்ரீலங்காவின் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் உயர்வான ஊழிய மற்றும் வலு செலவுகள், ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் ஆதரவான நிறுவனப் பொறிமுறை குறைவாக இருத்தலும், முக்கியமான பொருள் உற்பத்தி துறையினுல் வெளிநாட்டு நேரடி முதலீட்டை (FDI) கவரத் தவறியமை என்பவை உற்பட வேறு பிரச்சினைகளும், ஏற்றுமதியாளர்கள் முகங்கொடுத்த குறைபாடுகள் ஆகும். ஸ்ரீலங்காவின் உள்நாட்டு சந்தையின் சிறிய அளவின் பின்புலத்தில் உயர்வான மற்றும் நிலைத்திருக்கக் கூடிய நீண்ட கால வளர்ச்சியை ஸ்ரீலங்கா அடைவதாயின், நாடு தனது பொருட்கள் சேவைகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியை உருவாக்கவேண்டும்.

### 2.7.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- நுகர்வோரும் பரந்த வகையிலான பொருட்கள் சேவைகளை பெறக் கூடியதாக, அதுவும் குறைந்த விலையில் பெற வைப்பதனால் கூடுதலாக திறந்துள்ள வியாபார முறைமை நுகர்வோருக்கு நன்மை செய்யும்.

- இறக்குமதி பொருளால் வரும் போட்டி சில போட்டித்தன்மையில்லாத/ வினைத்திறன் அற்ற உள்நாட்டு கைத்தொழில்கள் அல்லது சில தொழில்களை பயமுறுத்தலாம் அல்லது (உதாரணமாக உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய்) போன்ற உற்பத்திகள் தப்பிப்பிழைத்திருக்க உதவிகள் தேவைபடுபவையாக ஆக்கலாம்.

- விவசாய பொருளாதாரத்திலிருந்து உற்பத்தித்துறை அல்லது சேவைப் பொருளாதாரமாக ஒரு பொருளாதாரம் மாறுகையில் கமத்துறையின் மேலதிக ஊழியத்தை உற்பத்தி துறையினுல் உள்வாங்க வேண்டி வரும்.

- நேரடி அவதானிப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் சுற்றுச்சூழல் தரக்கேட்டின் மீது நேரடியான பாதக விளைவு வியாபாரத்தினால் ஏற்படுவதில்லை எனக் கண்டுள்ளது. ஆயினும் வியாபாரத்தால் வரும் பொருளாதார வளர்ச்சி சில மறைமுக சுற்றுச்சூழல் பாதகங்களை உண்டாக்கலாம்.

### 2.7.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- பங்குதாரர்களுடன் தேவையான கலந்துரையாடலை நடத்தி ஒரு தேசிய வியாபார கொள்கையை உருவாக்கி செயற்படுத்துக. ஒரு தேசிய வியாபார கொள்கை ஏற்கனவே, அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் சர்வதேச வியாபாரம் அமைச்சினால் ஆக்கப்பட்டுள்ளது என்பது உற்சாகம் அளிப்பதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சலுகை ரீதியான விலைகள், விலக்கள்களை மட்டுப்படுத்தி வியாபார முறைமையை வெளிப்படைத்தன்மை வாய்ந்ததாகவும் எதிர்வு கூறக் கூடியதாகவும் எளிமைப்படுத்துக. இத்தோடு சேர்ந்து தீர்வையல்லாத கட்டணங்களை ஒன்றினைத்தல், வரி கணக்கிடுதலை சீராக்கல், சந்தையில் தேவையற்ற பொருட்களை குவித்தலுக்கு எதிரான நடவடிக்கை (anti-dumping), நட்டத்தை ஈடு செய்தல் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) ஒத்திசைந்து செல்லும் வியாபார பரிகாரங்களை நிறைவேற்றுதலும் வரவேண்டும்.

- இப்போதுள்ள ஒப்பந்தங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதுடன் எதிர்காலத்தில் வரக்கூடிய இந்தியா, சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுடனான வர்த்தக ஒப்பந்தகளில் கூடுதலான தந்திரோபாய அணுகுமுறைகளை கடைப்பிடிக்கவும்.

- வியாபாரம் தொடர்பான கொள்கைகளின் வெளியீடு, நிர்வாகம் என்பவற்றை முன்னேற்றுதல், ஏற்றுமதி, இறக்குமதி செயன்முறைகளை இலகுவாக்குதல், வியபாரத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை அதிகரித்தல், துறைமுகம் மற்றும் விமான நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரித்தல் (ICT) பண்டங்கள் வருமுன்னரே ஆயத்தங்களை செய்துவைக்கும் வழிவகைகளை விரிவுபடுத்தல் ஆகிய விடயங்கள் உட்பட வியாபார இலகுவாக்கல் ஒப்பந்தங்களை (TFA) அமுல் செய்க.

- நாட்டில் உள்ள ஆய்வு கூடங்களின் சான்றுப்படுத்தலையும் தர உறுதிப்படுத்தல் முறைமைகளையும் முன்னேற்றுக.

- விரிவடைந்து வரும் துறைகளில் கிடைக்க கூடிய கூடுதல் உற்பத்திறன் உள்ள வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள பயிற்சி மற்றும் வேறு வாய்ப்புகளை வழங்குக.

## 2.8 வெளிநாட்டு நேரடி முதலீடு

### 2.8.1 தற்போதைய நிலைமை, சமகாரல பிரச்சனைகள் மட்டும் பிரச்சினையான விடயங்கள்

கணிசமான ஊக்குவிப்புகள், வரிவிடுமுறைகள், விலக்குகள் கொடுத்த போதிலும் ஸ்ரீலங்கா வெளிநாட்டு நேரடி முதலீட்டைப் பெற கஷ்டப்படுகின்றது. வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) சராசரியாக மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் 1.0 -1.5 சதவீதமாக இருந்து வருகின்றது. இது மலேஷியா, தாய்லந்து போன்ற போட்டி நாடுகளைவிட மிகவும் குறைவானது. வெளிநாட்டு நேரடி முதலீட்டை குறைக்கும் அதிகூடிய பிரதான காரணங்களில் ஒன்றாக இருந்து வந்த மூன்று தசாப்தங்களாக நீண்டு வந்த யுத்தத்தின் முடிவின் பின்னரும் நேரடி வெளிநாட்டு முதலீட்டின் குறைவான செயலாற்றுகை முன்னேற்றம் காணவில்லை. 2015 – 2016இல் வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடு மொத்த உண்ணாட்டு உற்பத்தியின் 1.1 சதவீதமாக இருந்தது. இதன் பெரும் பகுதி மெய்மூலதனம், பொழுதுபோக்கு, மற்றும் கலப்பு அபிவிருத்தி திட்டங்களில்தான் காணப்பட்டது. ஏராளமான புவியியல் மற்றும் அமைப்பு ரீதியான சாதகங்களின் மத்தியிலும் யுத்தததுக்கு பின்னர் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உள்வருகை தடுக்கப்பட்டது. இதற்கான காரணங்களாக உண்ணாட்டு அரசியல் குழப்பங்கள், வியாபாரம் மற்றும் முதலீட்டு கொள்கைகளின் நிச்சயமின்மை, புதிதாக தோன்றிய சந்தைகளில் சர்வதேச மூலதனம் சென்றமை என்பவையாம். பின்னடைந்து வரும் ஏற்றுமதி துறையை மீட்பதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடு அவசியமாகின்றது. இது நிதிப்பாய்ச்சல் என்ற வகையில் மட்டுமன்றி தொடர்புடைய உள்ளீடுகளான அறிவு மற்றும் தொழில்நுட்ப இடமாற்றுகை, புதிய முகாமைத்துவ முறைகள் மற்றும் வேறு ஏற்பாடுகளுக்காகவும் தேவைப்படுகின்றது. மேலும், ஸ்ரீலங்காவின் நடுத்தர வருமான நாடு எனும் அந்தஸ்து நோக்கிய பயணத்தின் வெற்றி உயர்தர மூலதனங்களை கவர்வதில் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.8.2 வரக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள்

- சீரான நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) குறிப்பாக உற்பத்தித் துறையிலான முதலீடு கணிசமான உற்பத்தித் திறன் நன்மைகளும் தொழிலாளர் தர முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்லும்.

- நன்கு விருத்தியடையாத மாகாணங்களை நோக்கிய மூலதன ஊக்குவிப்புத் தந்திரோபாயங்கள், உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கத்துக்கும் தூண்டுதலாக அமையும். இந்த காரணங்கலால் பிராந்திய பொருளாதார சமநிலை இன்மை மற்றும் சமநீதி இன்மை ஆகிய பிரச்சினைகளை தீர்க்க வழிகோலும்.

- சர்வதேச நிறுவனங்கள் ஊடாக வெளிநாட்டு நேரடி முதலீடு தொழிலாளர் மீது பாதகமான தாக்கங்களை கொண்டு வரலாம். இதனால் ஊழிய தராதரம், சம்பளம் என்பவை தொடர்பில் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் முக்கியம் ஆகின்றன.

- வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான இடைவினைகள், வரக்கூடிய முதலீட்டாளர்களின் நோக்கங்களோடு எவ்வாறு பொருந்தும் என்பதை கூற முடியாது. சூழலை மாசுபடுத்தும் கைத்தொழில்களில் இருந்து வரும் முதலீட்டாளர்கள் கடுமை குறைந்த மாசடைதல் ஒழுங்கு விதிகள் காணப்படும் நாடுகளில் முதலீட முன்வருவர். "சுற்றுச் சூழல் அடைக்கள எடுக்கோள்" எனப்படும் இந்த ஆபத்துக்கு உட்படாமல் ஸ்ரீலங்கா இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த எச்சரிக்கை அவசியம்.

### 2.8.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- எதிர்கால கொள்கையின் நம்பகமான, ஒத்திசைவான செல்நெறிகளை முதலீட்டாளர்களுக்கு காட்டுவதற்கு ஒரு தேசிய கைத்தொழில் கொள்கையை உருவாக்குக. பரந்தளவில் சேவைகளை வழங்கும் "ஓரிடத்திலான வசதி" எனும் வகையில் முதலீட்டு சபையின் வினைத்திறனையும் அதிகரிக்க வேண்டும்.

- பசுமை வலு தொடர்பில் தொழில்நுட்பம் இடமாற்றத்தை அதிகரிக்கச் செய்வதற்கு வரக்கூடிய முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதனால் சுற்றுச் சூழல் தரங்கெடுதலை குறைப்பதற்கான கருவியாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலை பயன்படுத்துக.

- நாடு வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிக்க முயலும்போதும் தொழிலாளர்கள் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் உள்நாட்டு சம்பளம் மற்றும் ஊழிய தராதர சட்டங்களை நவீனமயப்படுத்தி அர்த்த பூர்வமாக அமுல் செய்க.

- கூடுதல் வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர்வதற்கு, விசேடமாக ஆசிய பிராந்தியத்தினுல் வர்த்தக தொடர்புகளை விரிவாக்குக.

## 2.9 வறுமை, அசமத்துவம் மற்றும் அரவணைப்பு வளர்ச்சி

### 2.9.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

1990 – 1991இல் 26.1 சதவீதமாக இருந்து 2012 – 2013இல் 6.7 சதவீதத்துக்கு குறைந்து வருமான வருமைக் குறைப்பில் ஸ்ரீலங்கா கணிசமான முன்னேற்றத்தை கண்ட போதிலும் பிரதேச ரீதியாகவும் சமூக-பொருளாதார குழுக்கள் ரீதியாகவும் கணிசமான ஏற்றத்தாழ்வு இப்போதும் உள்ளது. நலிவுற்ற மக்களில் கணிசமான வீதத்தினர் வறுமைக் கோட்டிற்கு சற்று மேல் நெருங்கி இருப்பது, இவர்கள் வறுமைக்குள் போய்விடக் கூடிய ஆபத்தை சுட்டுகின்றது. நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி நோக்கு (SDG1) இல் முன்மொழியப்பட்ட மோசமான வறுமை ஒழிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் சகலவிதமான வடிவிலான வறுமைக் குறைப்பு என்பவற்றுக்காக வருமான வறுமை (IP) என்பவற்றின் சேர்மானத்தை கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. பல்வரிமான வறுமை, வறிய மக்கள் ஒரே சமயத்தில் முகம் கொடுக்கும் கல்வி, சுகாதாரம், வாழ்க்கை நிலைமைகள் என்பவை தொடர்பிலான பல்வரிமாண தடடுப்பாடுகளை கருதுகின்றது. ஸ்ரீலங்காவின் சனத்தொகையில் 9.3 சதவீதமானோர் 2012-2013இல் வருமான வருமை (IP) அல்லது பல்வரிமான வறுமையை (MDP) அல்லது இரண்டுக்கும் முகம் கொடுத்தனர். இவ்வாறான வறிய மக்கள் வாழும் குடும்பங்களின் தலைவர்களாக, விவசாயம் சார்ந்த, விவசாயம் சாராத கூலியாட்கள், அல்லது விவசாய திறன் வாய்ந்த அல்லது அதோடு தொடர்பான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அல்லது வேலை செய்ய முடியாத மற்றும் கூடிய வயதானவர்களாக உள்ளனர். இவ்வகையானோர், ஆபத்துக் கூடிய உயர் வருமானம் தரக்கூடிய முதலீட்டு தீர்மானங்களை எடுக்கமுடியாதவர்கள். ஸ்ரீலங்காவில் தொடர்ந்து காணப்படும் வருமான அசமத்துவம் விசனத்துக்குரியதாக உள்ளது. ஆகவும் கூடிய வறுமையில் வாழும் 10 சதவீதமானோரின் வீட்டுத்துறை வருமானம் மீதான பங்கு 2 சதவீதம் மட்டுமே ஆகும். ஆனால் ஆகவும் கூடிய செல்வந்தர்களான 10 சதவீதத்தினரின் பங்கு 38 சதவீதம் உளளது. இதனால் வறுமை ஒழிப்பில் முன்னேற்றம் காணப்படினும், ஊழியப்படையில் கூடுதல் பெண்களை இணைத்தல் உட்பட ஸ்ரீலங்காவின் அரவணைப்புள்ள வளர்ச்சிக்காக இன்னும் பல செய்ய வேண்டியுள்ளன.

### 2.9.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் விளைவுகள்

- போதியதாக இல்லாத சேவைகள் (கல்வி, சுகாதாரம், நீர், ஆரோக்கியம்) அல்லது வேறு எந்த வடிவத்திலும் உள்ள வறியோர் மீதான பாகுபாடுகளுடன் சேர்ந்த விடாப்பிடியான வருமான அசமத்துவம் சமூக நெருக்குவாரத்துக்கு இட்டும் செல்லக்கூடும்

- வெவ்வேறு துறைகள், மாவட்டங்கள் அல்லது சமூக பொருளாதார குழுக்கள் இடையிலான வறுமை மட்ட வித்தியாசங்கள் சமூக அமைதியின்மை மற்றும் மோதல்களுக்கு இட்டுச் செல்லலாம்.

- ஆண்களின் 75 சதவீதமாக உள்ள ஊழியப்படை பங்கு பற்றுதலுடன் ஒப்பிடுகையில் 35 சதவீதமாக குறைவாக உள்ள பங்குபற்றுதல் வாழ்வாதாரம் மற்றும் வருமானம் என்பவற்றை பெறுவதற்கான வழிகளில் கணிசமான அசமத்துவத்தை நோக்கியுள்ளன.

- வேலை பெற்றுள்ளவர்களில் 60 சதவீதமானோர், சமூகப் பாதுகாப்பு குறைந்த அல்லது இல்லாத முறைசாராதுறையில் உள்ளனர்.

- விவசாயத்தில் ஈடுபட்டுள்ள வீட்டுத்துறையினர், தமது உற்பத்தியையும் வருமானத்தையும் பாதிக்கும் இயற்கை அனர்த்தங்களினால் ஆகவும் கூடியளவில் பாதிக்கப்படுபவர்களாக உள்ளனர்.

- இதுவே விவசாய சமுதாயங்கள் இடையே வறுமையும் நலிவும் உயர்ந்த அளவில் காணப்பட்ட பிரதான காரணமாகும்.

- உயிர் வாழ்வதற்காக சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய நடவடிக்கைகளான காடழிப்பு மற்றும் முறைகேடான விவசாய முறைகளில் ஈடுபட தனியாட்களை விடாப்பிடியான வறுமை நிர்ப்பந்திக்கின்றது.

- விரைவான வளர்ச்சி ஏற்படும்போது கூடுதல் வசதியுள்ளோர் அளவு மீறிய நுகர்வு மற்றும் சட்டவிரோத இயற்கை வளப் பயன்பாடு, பெரிய அளவிலான காடழிப்பு போன்ற நடவடிக்கைகளினால் சுற்றுச்சூழலுக்கு பாரிய தீங்கை விளைவிக்கலாம்.

- பொருத்தமான கொள்கைகள் இல்லாதவிடத்து பிராந்திய சமமின்மை தரமான கல்வி, சுகாதாரம், நீர் என்பவை கிடைப்பதில் மேலும் கஷ்டங்களை தோற்றுவிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.9.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்

- 80 சதவீதத்திலும் கூடுதலான ஏழைகள் கிராமிய துறையில் இருப்பதாலும் கிராமிய பொருளாதாரத்தின் பிரதான இயக்க விசையாக விவசாயம் இருப்பதாலும் கிராமிய வருமைய ஒளிப்பதற்கும் பட்டினியை இல்லாது செய்யவும் உணவு பாதுகாப்பை அடையவும் போசனையை முன்னேற்றவும் நிலைத்திருக்கக கூடிய விவசாயத்தை ஊக்குவிக்கவும்

- புதிய தொழில் நுட்பங்கள், கம நுட்பங்கள் என்பவற்றை புகுத்துவதாலும் முன்னேற்றகரமான விரிவாக்கல் சேவைகள் ஊடாக தேவையான ஆலோசனைகளை வழங்குவதாலும் விவசாயிகள் தமது உற்பத்தி திறனை மேம்படுத்தவும் அவர்களுக்கு உதவுவதில் போதிய கவனம் செலுத்தவும் மேலும் இதன் மூலம் விவசாய அடிப்படையிலான புதிய வேலை வாய்புகளை உருவாக்கக் கூடியாக இருக்கும்.

- விவசாயிகள் தமது உற்பத்திகளை இலகுவாக சந்தைப்படுத்துவதற்கு உட்கட்டமைப்பு மற்றும் சந்தை வசதிகளை முன்னேற்றுக.

- புதிய தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளை முழுமையாக பயன்படுத்துவதற்கு அனைவரையும் அரவணைத்து செல்லும் பொறுப்புகூறவல்ல நிறுவனங்களை பலப்படுத்துக.

- வீட்டுநுகர்வையும் ஏற்றுமதியையும் மேம்படுத்தும் உற்பத்திகள், பயிர்கள் மற்றும் சேவைகளை மேம்படுத்தவல்ல நிரம்பல் மற்றும் பெறுமதி அரசாங்க, தனியார் மற்றும் மக்கள் துறையின் பங்கு பற்றுதலை மேம்படுத்துக. இதன் மூலம் உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதிகளை ஊக்குவிக்கப்படும்

- அரசாங்க, தனியார், மக்கள்துறை பங்குபற்றலை மேம்படுத்துக. இதனால் உற்பத்திகளின் நிரம்பல் மற்றும் பெறுமதி முன்னேற்றம் காணும். இது உள்ளூர் நுகர்வையும் ஏற்றுமதியையும் அதிகரிக்கும்.

- சகல பிராந்தியங்களிலும் கண்ணியமான வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் விசேடமாக குறைந்த வருமானப் பிரிவிலுள்ள கிராமிய இளைஞர்களுக்காகவும், கிராமிய பெண்களுக்காகவும் உருவாக்கவும்.

- இறுக்கம் இல்லாத வேலை நேரங்களை அனுமதியுங்கள். வீட்டிலிருந்தே வேலை செய்யும் வசதிகளை வழங்குதல் பெண் ஊழியப்படை பங்கு பற்றலை அதிகரிக்கும்.

- பெண் ஊழியப்படை பங்குபற்றுதலை அதிகரிக்கும் நோக்கத்தில் மகப்பேற்று மற்றும் சுகவீன லீவு போன்ற சமூக பாதுகாப்பு நன்மைகளை விரிவாக்குக. மேலும் பொருத்தமான சிறுவர் பராமரிப்பு மையங்களை நிறுவுக. இதுவும் பெண் ஊழியப்படை பங்குபற்றலை அதிகரிக்கும்.

- வறியோருக்கான நிதி சேவைகளை பெறும் வழிவகைகளை முன்னேற்றுக. சுயவேலை வாய்ப்புகளை உருவாக்குக. சிறிய நடுத்தர (SMEs) முயற்சியான்மைகளுக்கு ஆதரவு வழங்குக.

- பொருளாதார வாய்ப்புகளில் துறைசார்ந்த அசமத்துவத்தை குறைக்க பிராந்திய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குக.

- சமூக பாதுகாப்பு திட்டங்களில் உதவிகள் சரியான ஆட்களை சென்றடைவதை உறுதிப்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.10 அமைப்பு ரீதியான சீராக்கம்

### 2.10.1 தற்போதைய நிலவரம் சமகால பிரச்சினைகள் மற்றும் பிரச்சினை உள்ள விடயங்கள்

அரசிறை மற்றும் நாணயக் கொள்கை தொடர்பில், பேரண்ட பொருளாதார துறை ரீதியிலான, உறுதிப்படுத்தல் முயற்சிகள், அமைப்பு ரீதியான சீர்ப்படுத்தல்களால் நிறைவு காணப்படுகின்றன. இது வியாபாரம், முதலீடு மற்றும் ஊழியம் எனபவற்றில் சட்டவழி தலையீடுகளை ஒழிக்கும் சீர்த்திருத்தங்களை இலக்காக கொண்டது. இதன் நோக்கம் நடுத்தர, நீண்டகால வளர்ச்சி இலக்குகளை அடைய உதவி செய்தல் ஆகும். ஸ்ரீலங்காவை பொறுத்த அளவில் 1970களில் தொடர்ச்சியாக வந்த சீர்த்திருத்தங்கள் 1990களில் வந்த சட்டவழி தலையீடுகளை ஒழித்தல் தொடர்பான சீர்த்திருத்தங்கள் என்பன செயற்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்னும் சொற்ப அளவிலான சீர்த்திருத்தங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. அவை ஊழிய சந்தைகள், அரசாங்க துறை சேவை வழங்கல், காணி சந்தைகள் மற்றும் நிறுவன ரீதியான சிறு சீர்த்திருத்தங்கள் போன்ற விடயங்களில் காணப்படும் வளர்ச்சிக்கான தடைகளை கவனித்தல் என ஆகும். குறுங்கால சீராக்கல் செலவுகள் காரணமாக அநேகமாக இவை அரசியல் ரீதியான சீர்த்திருத்தங்களாக உள்ளன. இவ்வாறான சீர்த்திருத்த முன்னெடுப்புகளால் நட்டப்படுவோரின் துயரை போக்குவதற்கு நட்ட ஈடுகளை வழங்க வேண்டிய தேவையும் உள்ளது. இது வெற்றி அளிக்க வேண்டுமாயின் ஒரு அமைப்பு ரீதியான சிர்த்திருத்த நிகழ்ச்சி திட்டத்திற்கான மக்களின் ஆதரவையும் கருத்தொற்றுமையும் உருவாக்க ஒரு கணிசான அரசியல் முதலும் தீர்மானம் எடுக்கும் ஆற்றலும் அவசியமாகின்றது. நடுத்தர வருமான பொறியில் விழுவதை தவிர்க்க வேண்டுமாயின் ஸ்ரீலங்கா ஒரு அமைப்பு ரீதியான சீர்திருத்த செயன்முறையை வடிவமைத்து நடைமுறைப்படுத்துவதில் தனது கவனத்தை வேண்டிய தேவை உள்ளது. நடுத்தர வருமான பொறி என்பது காரணி சந்தை மற்றும் நிறுவன ரீதியான பலவீனங்களின் வடிவில் வளர்ச்சிக்கான நிரம்பல்பக்க மட்டுப்பாடுகள் ஏற்படுகையில் ஒரு கட்டத்தின் பின்னர் நாட்டின் வளர்ச்சிக்கான உந்தம் பின்னடைதல் ஆகும்.

### 2.10.2 வரக்கூடிய சமூக மற்றும் பொருளாதார விளைவுகள்

- ஊழியச் சந்தையின் வினைத்திறன், திறன் அபிவிருத்தி போன்றவற்றை முன்னேற்றுவதற்கு அமைப்பு ரீதியான திருத்தங்களில் முன்னேற்றம் போதியளவு இல்லாவிடத்து, வளர்ச்சியில் மிகவும் பாதகமான விளைவு ஏற்படும். இதனால் நாட்டின் அபிவிருத்தி வெளித்தோட்டத்தின் மீதும் பாதகமான விளைவு ஏற்படும்.

- சீர்த்திருத்தங்கள் நடைபெறாத போது குறைவான விவசாய உற்பத்தி திறன் நகர கிராமிய அசமத்துவத்தை மேலும் அதிகரிக்கும்.

- கல்வி சுகாதாரம் போன்ற முக்கிய துறைகளில் அரசாங்க சேவை விநியோகத்தை முன்னேற்றுவதில் முன்னேற்றம் போதாமை பொருளாதார உற்பத்தி திறனை குறைக்கும். தற்போதுள்ள அரச நிதி மட்டுப்பாடுகளை மேலும் கூட்டிவிடும்.

- அமைப்பு ரீதியான சீர்த்திருத்தங்கள் அதிகரித்த வீட்டுத்துறை மானியங்கள் மற்றும் நலன்புரி சேவைகளின் பாதுகாப்பு இன்மையின் குறைப்புக்கு இட்டு செல்லும்.

- முறையாக முகாமைத்துவம் செய்யப்படாத அமைப்பு சீர்த்திருத்தங்கள் சமூக பொருளாதார நெருக்கடிக்கு இட்டு செல்வதோடு இப்போதுள்ள அசமத்துவத்தை மேலும் அதிகரிக்கும்.

- முதலீடு மற்றும் வியாபாரத்தின் தராளமயமாக்கல் நாட்டில் உள்ள வறியோரின் பெரும்பகுதியை கொண்டுள்ள ஸ்ரீலங்காவின் கிராமிய சனத்தொகையின் உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள், மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.10.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- ஸ்ரீலங்காவின் நாடு குறித்தான சமூக பொருளாதார நிலமைகளுக்கு பொருந்தும் வகையில சீர்த்திருத்தங்களை பொருத்தமான முறையில் வரிசைபடுத்தலிலும் உரிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவும்.

- சீர்த்திருத்த முன்னெடுப்புகள் பங்குதாரருடனான கலந்துரையாடல்களை கொண்டிருப்பதையும், குறைந்த பட்சம் குறுகிய காலத்திற்காவது மோசமாக பாதிக்கப்படக் கூடிய சனத்தொகை குழுக்கள் அல்லது தொழில் குழுக்களின் விசனங்களை கவனிப்பதாகவும் இறுப்பதை உறுதி செய்க.

- எதிர்பார்க்கப்படும் பொருளாதார வளர்ச்சியினால் வறிய மக்கள் நன்மையடைவதை உறுதி செய்ய பாதுகாப்பு ஏற்பாடுகளை சேர்த்துக் கொள்க.

- தற்போதைய முதனிலை உற்பத்தி ஏற்றுமதி பொருட்களை, பெறுமதி கூட்டிய பதனிடப்பட்ட உற்பத்தி பொருட்களுக்கு மாற்றுக. தற்போதுள்ள செல்லிடங்களை பணக்காரர் சந்தை நோக்கி திருப்புக. முதலீடுகளை விலை மற்றும் சந்தைப்படுத்தல் தலையீடகள் மற்றும் உள்ளுடு மானியம் என்பவற்றிலிருந்து விவசாய விரிவாக்கம், விவசாய நிதிகள், நீர்பாசன உட்கட்டமைப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பவை நோக்கி திருப்புக.

- விவசாய பதனிடலில் கொள்வனவு சக்தி சமநிலை(PPP)ஐயும் வெளிநாட்டு நேரடி முதலீடையும் (FDI)ஐயும் ஊக்குவிக்கவும். பூகோல பெறுமதி சங்கிலிகளில் சிறு தொழில் செய்போரை இணைக்கும் அமைப்புகளை ஏற்படுத்தவும் அமைப்பு ரீதியான ஏற்பாடுகளை செயற்படுத்துக.

- போட்டித் தன்மை சாதகத்தை இழப்பதை தவிர்ப்பதற்கு உள்நாட்டு ஊழியச் செறிவு கைத்தொழில்கள் சர்வதேச சந்தைக்கு கண்டபடி முகம் கொடுப்பதை தடுக்கவும்.

- ஆகவும் கூடிய தேவை உள்ளோருக்கான சமூகநலத் திட்டங்களில் இலக்கு துல்லியமாக இறுப்பதை உறுதி செய்க.

- நீண்ட காலத்தில், வறியோரிலிலிருந்து மனித முதலீட்டை கட்டியெழுப்புவதில் தரம் மற்றும் வினைத்திறன் உடைமை என்பவற்றில் முக்கய கவனம் செலுத்தி கல்வி மற்றும் சுகாதார சேவைகளில் முதலீட்டை அதிகரிக்கவும்.

## 2.11 பொருளாதார வினைத்திறன்

### 2.11.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்கா விசாலமான விடயப் பரப்புகளில் பொருளாதார வினைத்திறன் இன்மையாள் வருந்துகின்றது. மூலதன சந்தையின் வினைத்திறன் இன்மை, உயர்வான, அதிகரித்துச் செல்லும் அதிகரிப்பு முதலீடு வெளியீட்டு வீதம் (ICOR)[9] 2010-2015 கால இடைவெளியில் 3.8இலுருந்து 6.3க்கு அதிகரித்தனால் புலப்பட்டது. உயரளவில் உள்ள ஊழியச் சந்தை வினைத்திறன் இன்மையை உயரளவான பயனில்லாதா செலவுகள் (58.5 weeks of salary)[10] 58.5 கிழமைச் சம்பலம் குறைவாக உள்ள, பெண் ஊழியப்படையின் பங்குபற்றல் (36 percent versus 75 percent for men)[11] ஆண்களுக்கு 75 சதவீதம் எதிர் 36 சதவீதம், நெகிழ்ச்சி தன்மையில்லாத வேலையில் அமர்த்தும் - நீக்கும் நடைமுறைகள் என்பவற்றால் தெரிய வருகின்றது. பண்ட சந்தையின் வினைத்திறன் இன்மை உயர் வர்த்தக வரிகளும், குறைவாகவுள்ள - மேலும் குறைந்து செல்லும் வர்த்தகம் செய்யும் *Doing Business* சுட்டிகளாலும் உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான தொழில்நுட்ப தயார் நிலையும் அறிவும் (ஒரு மில்லியன் சனத்தொகைக்கு 0.8 காப்பு உரிம (patent) விண்ணப்பங்கள்)[12], விணைத்திறன் இல்லாத அரசாங்க பணித்துறை ஆட்சி மற்றும் சந்தை தோல்விகள் என்பனவும் உயர் வினைத்திறன் இன்மைக்கு பங்களிப்பு செய்துள்ளன.

ஓட்டுமொத்தமான வினைத்திறன் இன்மைக்கு பிரதான பங்களிப்பு செய்யும் காரணியாக அரசாங்க முயற்சியான்மைகளின் வினைத்திறன் இன்மை உள்ளது. 2015இல் உள்ளபடி, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த 55 அரச உடைமை வணிக முயற்சியான்மைகளில்16 நிறுவனங்கள் கணிசமான நிதிசார் தொழிற்பாடு நட்டங்களை அடைந்தன. அரசாங்க கொள்வனவு முறைமை உயரளவான கொடுக்கள் வாங்கல் செலவுகள் மற்றும் போட்டித்தன்மைக்கு எதிரான நடைமுறைகளையும் காட்டுகின்றது. 874,395 அளவில் உள்ள அரசாங்கதுறை ஊழியர்கள் தொகை (அரச படையினர் மற்றும் அரை அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றின் உப நிறுவனங்கள் தவிர்ந்த) 2006-2016[13] இடையில் 39 சதவீதத்துக்கு மேலாக அதிகரித்தது. பல ஊழியர்கள் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு தேவையான திறன்கள் குறைவாக காணப்பட்ட பல ஊழியர்களை கொண்டிருந்தமையும் வினைத்திறன் இன்மைக்கு பங்களிப்பு செய்தது.

9. ஒரு அலகு உற்பத்தி அடுத்த அலகு உற்பத்தியை ஆக்குவதற்கு தேவையான எல்லை முதலீட்டு மூலதனத்தை ICOR[9] அளவிடுகிறது. குறைவான ICOR பெறுமானம் பொருளாதாரம் வினைத்திறன் உடையது என காட்டுகின்றது. அதாவது கூடுதலாக ஒரு அலகை வெளியீடு செய்ய பொருளாதாரத்துக்கு குறைந்த முதலீடு தேவை என்பதை இது காட்டுகின்றது.

10 உலக பொருளாதார அரங்கம், 2017, பூகோல போட்டித்தன்மை அறிக்கை 2016-2017

11. குடித்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரம், 2017, ஸ்ரீலங்கா ஊழியப்படை ஆய்வு: வருடாந்த அறிக்கை 2015.

12. உலக பொருளாதார அரங்கம், 2017 பூகோள போட்டித்தன்மை அறிக்கை 2016-2017

13. குடித்தொகை மற்றும் புள்ளிவிவரம், 2017 அரசாங்க மற்றும் அரை அரசாங்கத்துறை வேலை வாய்ப்புகள் 2016 கணக்கெடுப்பு.

அரசுடமையான நிறுவனங்களை மீளமைப்பு செய்வதும் அரச துறை வேலைகளை அறிவுபூர்வமானதாக ஆக்குவதும் இவ்வாறான தடைகளை கவனித்து தீர்த்துவைக்க உதவும். ஆனால் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு கணிசமான எதிர்ப்பு உள்ளது.

### 2.11.2 வரக்கூடிய சமூக, சுற்றுச்சூழத் தாக்கங்கள்

- பொருளாதார வினைத்திறன் என்பதன் பொருள் - உற்பத்திக் காரணிகள், அவற்றின் அதிகூடிய பயனை பெறும் வகையில் ஒதுக்கப்படவில்லை என்பதையும் (ஒதுக்கீட்டு வினைத்திறன் இன்மை) என்பதையும் பண்டங்கள் மற்றும் சேவைகள் இயலக்கூடிய ஆகவும் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்படவில்லை (உற்பத்தி வினைத்திறன் இன்மை) என்பதையும் இதனால் சாத்தியம் ஆகியிருக்க வேண்டிய பொருளாதார வளர்ச்சியும் மற்றும் முன்னேறிய வாழ்க்கைத்தரமும் குறைக்கப்படுகின்றன என்பதையும் காட்டுகின்றது.

- வினைத்திறன் இல்லாத அரச நிறுவனங்கள் நிதிசார் வினைத்திறன் இன்மையை கொண்டு வரும். இது கூடிய நுகர்வோர் விலைகள் மூலம் இறுதியாக வெளிப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்க நிறுவனங்களின் முன்னேறிய வினைத்திறன், சமூகத்தின் வெவ்வேறு பிரிவினரிடையே சமநீதியான சேவைகளின் விநியோகத்திற்கு இட்டுச் செல்லும். உதாரணமாக 1996இல் வலுத்துறையில் கூடுதலான தனியார் துறை பங்குபற்றுதலை கொண்டிருந்த சீர்திருத்தங்கள் வலையமைப்பு மின்[14] பெறுதலுக்கான வழிவகைகளை அதிகரித்தது. தொலைத் தொடர்பு முகவர் நிறுவனங்களின் தனியார் மயமாக்கும் நுகர்வோருக்கு கூடுதல் சேவை கிடைக்க வழிசெய்தது.

- வினைத்திறன் மிக்க தனியார் வெளியீடுகளால் மட்டும், ஒரு பொருளாதாரத்தின் முழுக்கவனமும் இருக்குமாயின் (அதாவது அது சமூக செலவுகளை கவனத்தில் எடுக்க தவறுகின்றது). அளவு மீறிய நுகர்வும் இயற்கை வளங்கள் பூரணமாக அற்றுப்போதலும் நடைபெறும். மீதொடமுள்ள அனர்த்தம் பெருமளவு மழையால் உண்டாகும் வெள்ளங்கள், கூடுதல் அளவிலான சுற்றுச்சூழல் மாசடைவதும் இதற்கு சாட்சியாகும்.

### 2.11.3 பரிமாணங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- பகுதி நேர விலை உருவாக்கம், பெண்களுக்கான நெகிழ்ச்சித் தன்மையுள்ள வேலை வாய்ப்புகள், கிராமப்புறங்களில் வேலை உருவாக்கம் வீட்டு வேலையை பகிர்தல் தொடர்பான கலாச்சார நியமங்களை மாற்றியமைத்தல் போன்ற கூடுதல் பெண் ஊழியப்படை பங்கெடுத்தலை ஊக்குவிக்கும் தந்திரோபாயங்களை கடைப்பிடிக்கவும்.

- 1971இன் வேளையாளை வேலை நீக்கும் சட்டத்தை (TEWA) திருத்தம் செய்க. இதில் ஒளுக்காற்று நடவடிக்கை அல்லாத நீக்கத்துக்கான நட்ட ஈடு கணிப்பு முறை உலகிலேயே ஆகவும் கூடிய மூன்றாவது கூடிய நட்ட ஈடாக உள்ளது. (ஸ்ரீலங்கா வேலைகொள்வோர் சம்மேளனம் 2009) இவ்வாறான சட்டம் ஊழிய சந்தையின் போட்டித்தன்மையை கடுமையாக குறைக்கின்றது. நிலம், மூலதனம் போன்றவை நிலையானவை. இதனால் ஊழியம் உற்பத்திக் காரணிகளை ஆகவும் கூடிய நெகிழ்ச்சித் தன்மை வாய்ந்ததாக உள்ளது. இதனால் ஊழிய நெகிழ்ச்சித் தன்மை மற்றும் அசைவு என்பன கடும் சட்டங்கள், ஒழுங்கு விதிகளால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வது அத்தியாவசியமாகின்றது.

- வர்த்தகத்தின் செலவுகள், சிக்கல்களை கடுமையாக உயர்த்தும் பல வகையான மேலதிக கடடணங்களை ஆகவும் குறைந்த அளவுக்கு கொண்டு வருக.

ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)[14], 2015, ஸ்ரீலங்காவின் மின்துறையின் கணிப்பீடு: நாட்டு அறிக்கை

- வணிகம் செய்தல் *(Doing Business)* சுட்டிகளை குறிப்பாக ICOR குறைக்கக் கூடிய ஒப்பந்தங்களை செயற்படுத்தல், வரி செலுத்தல், சொத்துகளை பதிவு செய்தல், கடன்படுதல் தொடர்பாக சுட்டிகளை முன்னேற்றுக.

- குறிப்பிட்ட மட்டத்திலான உற்பத்தியை உறுவாக்க தேவையான முதலீட்டு தொகையை குறைப்பதற்கு மேலாக சரியான வகை முதலீட்டை கவர்வதில் முக்கிய கவனம் செலுத்தவும்.

- புதிய காப்புரிம சட்டங்களை ஆக்குதல் மற்றும் அறிவுச் சொத்து உரிமை கொள்கைகள் (IPR) உட்பட காப்புரிமங்களை வழங்குதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தல் என்பவற்றை ஊக்குவிக்கும் தந்திரோபாயங்களை பின்பற்றுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெருமளவு நட்டம் ஏற்படுத்தும் அரசுடமை முயற்சியாண்மைகளை மீளமைக்கும் அல்லது தனியார் மயப்படுத்தும் தற்போதைய முயற்சிகளை தொடர்க. அத்துடன் அரசுடமை நிறுவனங்களின் (SOEs) முகாமையாளர்களையும் பணிப்பாளர்களையும் அரசியல் அடிப்படையில் நியமனம் செய்யாமல் தகுதி அடிப்படையில் நியமனம் செய்க.

- முன்னேற்றமான சேவை வழங்கல் மற்றும் ஊழல் உற்பட்ட குறைக்கப்பட்ட கொடுக்கல், வாங்கல்- செலவுகள் என்பவைக்காக (SOEs) தவிர்ந்த அரசாங்க துறை சீர்திருத்தங்களை சேர்த்துக் கொள்க.

- (சூழல் மாசடைதல், வாகனம் மற்றும் குப்பை வரிகள் போன்ற) வெளிவாரிகளுக்கான (externalities) பொது மக்கள் விழிப்புணர்வு இயக்கங்களை நடத்தவும், முறையான விலை தீர்மானிக்கும் முறைமைகளை செயற்படுத்தவும். இதன் மூலம் பாதகமான வெளிவாரிகளை உள்வாங்குக.

- தற்போதுள்ள தொழில்படுகை வினைத்திறன் இன்மைக்கு தீர்வுகளை பெறவும் சேவை வழங்கலின் வினைத்திறனை அதிகரிக்கவும் மூலவளங்களை பயன்பாட்டுக்கு கொண்டு வருதல் மற்றும் இயலுமையை கட்டியெழுப்புதல் ஊடாக அரசாங்க முயற்சியான்மைகளில் E – ஆளுகையை அதிகரிக்கவும்.

- சேவை வழங்குதலின் வினைத்திறனை அதிகரிக்கும் புதிய முறைகளை கடைப்பிடிப்பதை மேம்படுத்துக. உதாரணமாக தனியார் துறையில் பங்கு பற்றுதலுடன், ரயில் சேவையினை மின்மயப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன போக்குவரத்து துறையில் மேம்படுத்தப்பட வேண்டும்.

- ஒரு வினைத்திறன் மிக்க இயலுமையை கட்டியெழுப்பும் பொறிமுறை ஊடாக அரசாங்க முயற்சிகளுக்கு நியமனங்களை செய்வதற்கான அனைத்தயும் உள்ளடக்கியதும் அர்த்தபூர்வமானதுமான சட்டகத்தை அபிவிருத்தி செய்க.

## 2.12 செய்திட்ட தயாரிப்பும் மதிப்பீட்டலும்

### 2.12.1 தற்போதைய நிலமையும் சமகால விடயங்களும் பிரச்சினைகளும்

மேற்கு பெருநகர அபிவிருத்தி திட்டம் தற்போதைய அரசாங்கத்தின் முதன்மையான அபிவிருத்தி முன்னெடுப்பாகும். 2030 அளவில் முழு மேல் மாகாணத்தையும் மாற்றியமைப்பதை நோக்கமாக கொண்ட பல பெரிய செய்திட்டங்களை கொண்ட முதலீட்டுக்கான பாரிய திட்டமாக இது உள்ளது. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து அரசாங்கங்கள் விரைவுபடுத்திய மகாவலி திட்டம் அது போன்ற பெரிய அளவிலான உட்கட்டமைப்பு திட்டங்களை முன்னெடுத்துள்ளன. இவற்றுள் அதிவேக வீதிகள், துறைமுகங்கள் விமான நிலையங்கள் வலு தொடர்பான செய்திட்டங்கள் அடங்கியிருந்தன. இவ்வாறான செய்திட்டங்களின் தயாரிப்பு மற்றும் மதிப்பீடு என்பன இரண்டு விதத்தில் முக்கியமானவையாக உள்ளன. இதற்கான சலுகை அடிப்படையில் இல்லாத வெளிநாட்டு பண கடன்களை மீளச் செலுத்த வேண்டிய நிலையில் பொருளாதார சாத்திய கூற்று மதிப்பீட்டை வெற்றிகரமாக தாண்டுதல் முதலாவதாகும். இரண்டாவது நாட்டின் இயற்கை வளங்களை பாதுகாக்கவும் நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியின் வெளியீடுகளை மேம்படுத்தவும் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீட்டை உறுதி செய்தல் ஆகும். உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்திட்டங்கள் நன்மையான மற்றும் தீமையான வெளியீடுகளை தந்துள்ளன. கடந்த கால அநுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுதல், செய்திட்டங்களை தெரிவு செய்வதற்கான நியமங்களை முன்னேற்றுதல், அவற்றை ஒழுங்கு முறையாக மதிப்பிட்டு வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தல் என்பவை முக்கியமானவை. இது உட்கட்டமைப்பு அல்லாத வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கும் பொருந்தும். பல்வேறு முகவரங்கள் அமைச்சுகளின் செயற்பாடுகளை இசைவுபடுத்தல், நடைமுறைப்படுத்தலில் பலவீனமாக இருந்து வருகின்றது.



7-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.12.2 வரக்குடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- செய்திட்டங்கள் சமூகத்தின் பொருளாதார நலனை அதிகரிப்பதை இலக்காக கொண்டவை. இது கட்டாயமாக சமூக விளைவு மதிப்பீட்டினால் (SIAs) அறியக் கூடியது. ஆயினும் தற்போயை சமூக விளைவு (SIA) மதிப்பீடுமுறை சமூக விசனங்களை பூரணமாக கவனிப்பதில்லை என்பதை சில செயற்திட்டங்களில் அவதானிக்கப்பட்ட குறைந்த அளவிலான ஏற்புடமையாள் தெரிய வந்துள்ளது.

- நன்கு திட்டமிட்டப்படாத, தெரிவு செய்யப்படாத செய்திட்டங்கள் கணிசமான சுற்றுச்சூழல் மற்றும் சூழல் தொகுதி கெடுதலுக்கும் சமூக அதிருப்பதிகளுக்கு காரணமாகும் சமுதாயங்களின் இடப் பெயர்வுகளுக்கும் இட்டுச் செல்கின்றது.

- நன்கு திட்டமிடப்படாத, நடைமுறைப் படுத்தப்படாத செய்திட்டங்கள் நாட்டுக்கு கணிசமான நிதி சார்ந்த நட்டங்களை உருவாக்கக் மூடியது. இது கடன் சுமையை மேலும் அதிகரிக்கும்.

- திட்டமிடலிலும் செயற்படுத்துவதிலும் சரியான இசைவு இன்மை பொருளாதார வினைத்திறன் இன்மைப்பு காரணமாகி மக்களுக்கு பொருளாதார நன்மைகள் இல்லாது செய்துவிடம்.

- செயல்திறன் இல்லாத நிறுவன பொறிமுறைகளும் பாதுகாப்பு முறைமைகளும் ஒழுங்கு முறையில் அமைந்த ஊழல் மற்றும் முறைகேடுகள் நடக்க வாய்புகளை ஏற்படுத்துகின்றன.

- ஸ்ரீலங்காவுக்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) செயன்முறையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலான அனுபவம் இருப்பினும் அங்கீகரிக்கப்பட்ட செய்திட்டங்கள் கூட, சுற்றுச்சூழல் விசனங்கள் காரணமாக இடையில் கைவிடப்பட்ட அல்லது தாமதிக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டுள்ளன. இவ்வாறான தாமதங்கள் நீண்ட காலத்தில் குறைவான வெளியீடு ஏற்பட காரணமாகின்றன.

## 2.12.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- தேசீய பௌதீக திட்டமிடல் கொள்கை (NPPP), SDGs மற்றும் தேசிய பொருளாதார கொள்கை (NEP) என்பவற்றை முதனிலை வழிகாட்டலாக கொள்ளும் தீர்மானம் எடுக்கும் அதிகார படியமைவு தொடர்பில் ஒரு தேசிய செய்திட்ட இனங்காணல் நியமத்தை ஆக்குக.

- NPPP, SDGs, மற்றும் NEP என்பவற்றின் தந்திரோபாய தேவைகளிலிருந்து பிறக்கும் வழிகாட்டல்களை அடிப்படையாக கொண்ட சகல பெரிய அரசாங்கத்துறை செய்திட்டங்களையும் இனம் காண்க.

- பொருத்தமான ஏற்பாடுகளால் NPPP, SGDs மற்றும் NEP பற்றி பொதுமக்கள் விழிப்புணர்வை உருவாக்குக.

- பரந்த நியமங்களுடன் இணைத்த பின்னர் NPPP, SDGs மற்றும் NEPகளின் தந்திரோதாய தேவைகளை தீர்த்து வைக்கும் தனியார் செய்திட்டங்களை ஊக்குவிக்கும்.

- தந்திரோபாயங்களை இனங்கான உதவும் அகலித்த பொருளாதார துறைகள் (SESA) மற்றும் தெரிவு செய்யப்பட்ட தொடர்பான விடயங்களுக்கான தந்திரோபாய சுற்றுச்சூழல் மற்றும் சமூக மதிப்பீட்டை மேற்கொள்ளுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செய்திட்ட அங்கீகார ஆவணங்களுக்கு அமைய நடைமுறைபடுத்தலுக்கு பின்னரான செய்திட்ட மேற்பார்வையை வலுப்படுத்துக.
- செய்திட்ட திட்டமிடல், அமுலாக்கல் நிதிசார் மேற்பார்வையை கொள்வனவு என்பவை தொடர்பில் நிறுவன பொறிமுறைகளை வலுப்படுத்துக.

## 2.13 ஊழல்

### 2.13.1 தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

பலவீனமான நிறுவன அமைப்புகளும் பலவீனமான சட்டத்தின் ஆட்சியும் வெளிப்படைத் தன்மை இன்மைக்கும் தீர்மானம் மேற்கொள்வதில் பொறுப்பு கூறும் தன்மை குறைவாக இருப்பதற்கும் வழி வகுக்கின்றது. இது நாட்டின் பொருளாதார முறைமைக்குள் உயரளவான ஊழல் இருப்பதனால் புலப்படுகின்றது. இது முதலீட்டாளர் நம்பிக்கையை குறைக்கின்றது. இதனால் நாடு உத்தம அளவிலும் பார்க்க குறைந்த மட்டத்தில் செயற்படுகின்றது. உள் நாட்டு ஊழல்கள் சமூக ஒருமைப்பாடு மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றின் மீது கூடுதல் முக்கியமான விளைவுகளை கொண்டுள்ளது. எந்தவொரு அபிவிருத்தி முயற்சியலும் ஊழலை கையாள்வதன் முக்கியத்தை அங்கீகரித்து SDG16, எந்த வடிவத்திலும் ஊழல் மற்றும் இலஞ்சத்தை குறைப்பதில் கடும் கட்டுப்பாட்டை வலியுறுத்தியுள்ளது. (இலக்கு 16.5) 2016இல் ட்ரான்பேரன்ஸி இன்ரநெஷனலின் சர்வதேசத்தின் ஊழல் அறிதல் சுட்டியில் ஸ்ரீலங்கா (176 நாடுகளுள்) 95ஆம் இடத்தில் வைக்கப்பட்டது. இந்த சுட்டி நாட்டின் அரசாங்கத் துறை எவ்வளவு தூரம் ஊழலானது என பார்க்கப்படுவதன் அடிப்படையில் நாடுகளை வரிசைப்படுத்துகின்றது. 0 (உயர்மட்ட ஊழல்) தொடக்கம் 100 (மிக சுத்தம்) வரையான அளவு திட்டத்தில் அந்த வருட சராசரியான 43இலும் மிக குறைவாக, ஸ்ரீலங்கா 36 புள்ளி பெற்றது. முன்னைய வருடங்களை விட மோசமாக நாடு செயற்பட்டது என்பதை இந்த சுட்டி காட்டுகின்றது. இது 2015இல் 37 ஆகவும் 2014இல் 38 ஆகவும் இருந்தது.

### 2.13.2 வரக்கூடிய சமூக சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- ஊழல் பொருளாதார வளர்ச்சியை திரிவு படுத்தும், தாமதிக்கும். திசை திருப்பும் ஆற்றல் கொண்டது.
- ஊழல் வறியோரை அரசாங்க சேவைகளிலிருந்து புறந் தள்ளி வறுமையை அதிகரிக்கின்றது.
- வறியோரிலிருந்து நிதி வளங்களை திசை திருப்புவதனால் சமூக உதவி திட்டங்களின் நல்ல வெளியீடுகளை பாழடிக்கின்றது. இதனால் அவர்களை மேலும் வறிதாக்கி நலிவுறச் செய்கின்றது.
- அநுபவம் சார்ந்த ஆய்வுகள் ஊழல் மற்றும் அரசாங்க சேவைகளின் தராதரம் என்பவையிடையே மறை இனைவு (negative) இணையை காட்டுகின்றது.

[15]குப்தாவும் ஏனையோரும். ஊழல் மற்றும் சுகாதார, கல்வி சேவைகளின் வழங்கள். ஊழலின் அரசியல் பொருளாதாரம் லண்டன்: Routledge. 2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சட்டவிரோத காடழிப்பு, அகழ்வுகள், வனராசிகள் வேட்டை மற்றும் இது போன்ற குற்றச் செயல்களின் பெருக்கத்தால் நிறுவனமையப்பட்ட ஊழல் சுற்றுச்சுழலின் நிலைத்திருப்புக்கு கணிசமான ஆபத்தை கொண்டுள்ளது.

- சட்டம் ஒழுங்கின் கேடு நீதி பெறுவதற்கான வழிமுறைகள் போதியதாக இன்மை என்பன சமூகத்தில் கணிசமான அமைதியின்மையை தோற்றுவிக்கலாம்.

### 2.13.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- சட்டத்துறை உட்பட நிர்வாகத்தின் சகல மட்டங்களிலும் நிதி மேற்பார்வையை வலுப்படுத்துக.

- கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தின் நேர்மையையும் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்துக.

- தகவல் பெறுவதற்கான உரிமை சட்டம் கணக்காய்வு சட்டம் சொத்து வெளிப்படுத்தல் போன்ற வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை மேம்படுத்துவதற்கு தேவைப்படும் சட்டங்களை கொண்டு வந்து நடைமுறைப்படுத்துக.

- அரசாங்க கொள்வனவு தொடர்பில் செயன்முறைகளை வலுப்படுத்தி ஒழுங்கு விதிகளை கடுமையாக கடைப்பிடிக்கவும்.

- ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்டத்தின் ஆட்சியை பிரயோகிக்வும்.

- ஊழல் மற்றும் மோசடிகளை விசாரிக்கும், கையாளும் பொறுப்புகள் கொடுக்கப்பட்ட முகவரகங்கள் மற்றும் நிறுவனங்களின் சுயாதீனத்தை பலப்படுத்துக.

- ஐக்கிய நாடு சமவாயத்தால் ஊழலுக்கு எதிராக செய்யப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் தனியார் துறையிலும் கூட கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்களை விரிவாக்க நடவடிக்கை மேற்கொள்க.

## 2.14 பூகோள ஆபத்துகளை முகாமை செய்தல்

### 2.14.1 தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினைக்குரிய விடயங்கள்.

கூடுதல் பூகோளமயப்பட்ட உலகில் ஸ்ரீலங்கா போன்ற சிறிய பொருளாதாரங்கள் - வர்த்தகம், நிதி மற்றும் ஊழியம் என்ற விடயங்களில் வெளிநோக்கி திசைமுகப்படுத்தப்பட்ட பொருளாதார கொள்கைகள் ஊடாக அபிவிருத்தி அடைவதற்கு கூடுதல் வாய்ப்பை பெற்றுள்ளன. இருப்பினும் 2007/08 பூகோள நிதி நெருக்கடியை தொடர்ந்து வந்த பல முன்னேறிய பொருளாதாரங்களின் நீண்ட கால பொருளாதார வீழ்ச்சி மற்றும் பலமான சந்தைப் போட்டியாளராக சீனா எழுச்சி பெற்றமை – அதிகரித்து வரும் ஜனரஞ்சக உணர்ச்சியின் மீட்சியையும் தேசிய பொருளாதார இறைமையை மீட்டெடுக்கும் முயற்சியையும் கண்டது. இதனால் கொள்கை நிச்சயமின்மைகள் உண்டான போதும் சீனா, இந்தியா போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் உண்டான உள்நாட்டு சீர் திருத்தங்கள் உந்தலினால் ஆசிய பிராந்தியம் உலக வளர்ச்சியின் அச்சானியாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஸ்ரீலங்காவை பொறுத்த வரையில் பூகோல அபிவிருத்தியின் சவால்களும் ஆபத்துகளும் பல் வகையின. இதற்கான காரணங்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற பிரதான ஏற்றுமதி சந்தைகளில் ஏற்பட்ட குறைந்த நுகர்வோர் கேள்வியும் -சர்வதேச சந்தையில் எண்ணெய் விலைகள் அதிகரிக்க உள்ளதை சமிக்ஞை செய்யும் பண்ட விலை அதிகரிப்புகள் - ஊழியர் பணம் அனுப்புகையால் கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு பணத்தின் வளர்ச்சியை தடுக்கும் மத்திய கிழக்கில் உள்ள குழப்பங்கள் என்பன உள்ளன. ஸ்ரீலங்கா அதன் குறைந்து செல்லும் ஏற்றுமதிகளை மீட்டெடுக்க முயற்சிக்கையில், வியாபாரர பங்காளருடன் இருபக்க, பிராந்திய, பல்பக்க ஒப்பந்தங்களை செயற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. இது ஏற்றுமதியின் வளர்ச்சி உந்தத்தை உறுதி செய்யவும் FDI யை பெற்றுக் கொள்ளவும் அவசியம். அப்போதுதான் உருவாகிக் கொண்டிருக்கும் குழப்பம் மிகுந்த உலக பொருளாதார நிலையில் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை கொண்டு செல்ல முடியும்.

### 2.14.2 வரக்கூடிய சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- உற்பத்தி செயன்முறையில் நுண்சிறப்பு தேர்ச்சி பெறுதல் சிறய மற்றும் நடுத்தர முயற்சியான்மைகளுக்கு கூடுதல் வாய்ப்பை உருவாக்குகின்றது. இதனால் இவை பூகோள பெறுமதி சந்தையில் இணைந்து கூட்டு வளர்ச்சிக்கான வாய்ப்புகளை முன்னேற்ற முடியும்.

- சேவைத்துறையின் வளர்ச்சி குறிப்பாக சேவைகளின் ஏற்றுமதிகள் கூடுதல் நெகிழ்வு உள்ள நல்ல - சூழலில் கூடுதலான பெண்கள் ஊழிய படையில் சேர வழி செய்யும்.

- ஸ்ரீலங்காவுக்கு இனி ஐக்கிய இராச்சியத்துகான முன்னுரிமை ஏற்றுமதி வாய்ப்பு கிடையாது. ஐரோப்பிய ஒன்றியத்தில் ஐக்கிய இராச்சியத்துக்கே ஆகவும் கூடிய ஸ்ரீலங்கா ஏற்றுமதிகள், GSP+ சலுகையின் கீழ் சென்றன. UK ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக உள்ளதே இதற்கான காரணமாகும்.

- சீனாவின் பொருளாதார மறுசீரமைப்பு வெளிநோக்கிய முதலீட்டு பாய்ச்சலை கொண்டுவரும். இது நகரப் பகுதிகளுக்கு அப்பால் ஸ்ரீலங்காவுக்கு வளர்ச்சிக்கான செழிப்பாக அமையக் கூடியதாக ஸ்ரீலங்கா மூலதனங்களை திருப்பும் வாய்ப்புள்ளது.

- பாரீஸ் ஒப்பந்தம் தொடர்பிலான தனது கடப்பாடுகளை அமெரிக்கா விலக்கிக் கொண்டமை சுற்றுச்சூழல் கடப்பாடுகள் தொடர்பான முழு ஒத்துழைப்பு சட்டத்தையும் குழப்பக் கூடும்.

- புதிய பிராந்திய மற்றும் பெரும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் உதாரணம்: (TPP) அதன் கடப்பாடுகளினுல் அமைந்த சுற்றுச்சூழல் நியமங்களை குறித்துரைக்கின்றன. அதே போல GSP+ பிராந்திய நிகழ்ச்சி நிரல்களின் கீழ் ஸ்ரீலங்காவுக்கான நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி தொடர்பான சுற்றுச்சூழல் நியமங்களும் கடைப்பாடுகளும் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.14.3 பரிகாரங்களும், ஏற்பாடுகளும், நடைமுறைப்படுத்தலும்

- ஐரோப்பிய ஒன்றியத்திலும் அமெரிக்காவிலும் தங்கியிருத்தலைக் குறைக்க ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களையும் நாடுகளையும் பன்முகப்படுத்துக. ஆசியப் பிராந்தியம் ஆகவும் கூடிய இயக்க சக்தி கொண்ட பிராந்தியங்களில் ஒன்றாகும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. இது ஸ்ரீலங்கா வெளித்துறையை வலுப்டுத்துவதற்கான கணிசமான சக்தியை கொண்டுள்ளது.

- ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் FDI கவரவும் ஆசிய பொருளாதாரங்களுடன் பொருளாதார பங்குடமை ஏற்றுமதிகளையும் கூட்டாதலையும் தேடிக்கொள்க.

- சீனாவின் ஒரு – பட்டி – ஒரு – பாதை நிகழ்ச்சித் திட்டம் (OBOR) போன்ற பிராந்திய முன்னெடுப்புக்களால் நன்மையடைவதற்கு வளரும் ஆசிய அயல் நாடுகளுடன் தொடர்புகளை விருத்தி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) போன்ற புதிய முகவரங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துக. இதனால் அபிவிருத்தி நிதியின் வெவ்வேறு வடிவங்களை பெறும் வழி கிடைக்கும்.

- புதுப்பிக்க முடியாத வலு மூலங்கள் மற்றும் எண்ணெய் போன்ற அடிக்கடி மாறும் நுகர்வோர் உற்பத்தி சந்தைகளில் ஸ்ரீலங்கா தங்கியிருத்தலை குறைக்கும் வகையில் "பசுமை தொழில்நுட்பத்தை" கண்டறிவதற்கு உள்நாட்டு முயற்சியான்மைக்கு பொருத்தமான சூழலை உருவாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு

# C3

## C3. சுற்றுச்சூழல்: முக்கியமான பிரச்சினைகள், தாக்க விளைவுகள் மற்றும் தீர்வுகள்

### 3.1 நிலம் தரம் குறைதல்

#### 3.1.1. தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையான விடயங்கள்.

ஸ்ரீலங்காவிலுள்ள நிலத்தில் அண்ணலவாக மூன்றிலொன்று மண் அரிப்புக்கு உள்ளாகின்றது. சில மாவட்டங்களில் அரிபடக்கூடிய வீதம் 10 சதவீதத்திலும் குறைவாகவும் ஏனைய மாவட்டங்களில் 50 சதவீதத்துக்கு கூடுதலாகவும் காணப்படுகின்றது. சந்தைப் பயிர்செய்கை (மரக்கறி, உருளைக் கிழங்கு) புகையிலை செய்கை முறையாக முகாமைத்துவம் செய்யப்படாத தேயிலை நாற்று வளர்ப்பு என்பன நடைபெறும் மலைநாட்டு சாய்நிலங்களில் கடுமையான மண் அரிப்பு ஏற்படுகின்றது. உலர் வலயத்தில் மழை நீரை நம்பி பயிர் செய்யப்படும் இடங்களில் நடைபெறும் விவசாய உற்பத்திக்கும் மண் அரிப்பு ஒரு பயமுறுத்தலாக உள்ளது. பெறுமதி மிக்க மேல் மண், மண் அரிப்புக் காரணமாக அற்றுப்போதலே கடந்த பல தசாப்தங்களாக பிரதான உணவுப் பயிர்கள் மற்றும் ஐந்து பெருந்தோட்ட பயிர்களின் விளைச்சலின் வீழ்ச்சிக்கு காரணமாக கூறப்படுகின்றது.

அகற்றப்பட்ட மண்ணில் ஒரு பகுதி ஆருகள் மற்றும் அருவிகள் வழியாக கடத்தப்படுகின்றது. இதனால் நீர் தேக்கங்களில் மண் சேர்வதுடன் நீரோட்டத்தின் கீழ் பகுதியில் வெள்ளம் ஏற்படுகின்றது. மேல் மகாவலி நீரேந்து பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய ஆய்வு சில ஆறுகளில் உயரளவிலான மண் படிவு இருப்பதை காட்டியுள்ளன. மண் படிதல் உலர் வலய சிறிய கிராம குளங்களிலும் நடைபெறுகின்றது.

இரத்தினக்கல் அகழ்வுக்காக நிலத்தை வெளியாக்குவது கடும் மண்ணரிப்பு மற்றும் மாசடைதலுக்கு காரணமாகியுள்ளது. இந்த மாசடைதல் அருவிகளின் அண்மையில் உள்ள பல்வேறு கனிய தட்டுகளால் அமைந்த பாறைகளை அள்ளிச்சென்று நிலத்தில் பரப்பி விடுகின்றது. கூடுதல் அளவிலுள்ள முறைசார (பதிவு செய்யப்படாத) சுரங்கங்கள், தொழிற்சங்கங்களை அமைத்துள்ள இரத்தின கற்கல் தோண்டுவோரின் அழுத்தம், சிறு சுரங்கங்களின் போதிய முதல் இன்மை மற்றும் இரத்தினக்கல் அகழ்வு கொள்கைகளில் ஒத்தியைவு குறைவாக காணப்படுதல் உட்பட பல காரணிகள் இரத்தினக்கல் அகழ்வு காரணமாக வரும் தரக்கேட்டை கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு தடையாகின்றன.

நிலைத்திருக்க முடியாத இயந்திரமயப்பட்ட ஆற்று மணல் அகழ்வு நாட்டின் தெதுரு ஓயா உட்பட ஆற்றுத் தொகுதியல் கடும் பாதிப்பை உண்டாக்குகின்றது. தெதுரு ஓயா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் தரமும் குறைந்து விட்டது. கட்டுப்படுத்தப்படாத மற்றும் பகுத்தறிவில்லாத மணல் அகழ்வு காரணமாக நிலக்கீழ் நீர் 12 – 15 மீற்றர் அளவுக்கு கீழே போய் விட்டது. நில்வளா கங்கையில் அளவு மீறிய அகழ்வும் பொது மக்கள் குடிநீர் உவராதல் ஆற்றங்கரைகள் பொறிந்து விழுதல் மற்றும் ஆற்று நில இழப்பு உட்பட பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களாக வளவே கங்கை வழியேயான ஆற்று மணல் அகழ்வு அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் நாட்டு மணல் அகழ்வு இந்த ஆற்றின் படுகையை மூன்று அல்லது நான்கு மீற்றரினால் ஆழமாக்கி விட்டது. சில இடங்களில் இது ஆறு மீற்றர் அல்லது அதினிலும் கூடிய அளவுக்கு கீழே போயுள்ளது.

[16]ஸ்ரீலங்காவில் பாலைவனமாதல் மற்றும் நிலம் தரங்கெடுதல் மீதான தேசிய அறிக்கை

மகாவலி ஆற்றின் நீரேந்து பகுதி பல்வகைத்தான சமுதாய, பொருளாதார நோக்கங்களுக்கு சேவை செய்ய வேண்டியுள்ள ஐந்து பெரிய நீர் தேக்கங்களுக்கு நீர் வழங்குகின்றது. இந்த நீர் தேக்கங்களில் வண்டல் சேர்தலும் தூர்ந்து போதலும் மிக உயர்வாக உள்ளதாக ஆய்வுகள் காட்டியுள்ளன. இந்த பகுதியில் அரசாங்கள் ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவம் மற்றும் மண் பாதுகாப்பு என்பவை தொடர்பில் பல செய்திட்டங்களை, நிகழ்ச்சி திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருப்பினும் இந்த முயற்சிகளில் அடைவுகள் எதிர்பார்ப்புகளை விடவும் மிகவும் குறைவாகவே உள்ளன. யுத்தம் காரணமாகவும் நீண்ட கால நன்கொடையாளர் உதவி காரணமாகவும் நிலத்தில் வாழும் உயிர் பல்வகைமை மற்றும் காடு இழப்பு என்பன அண்மையில் குறைந்துள்ள போதிலும் மண் தரங்கெடுதலின் இன்னொரு வெளிப்பாடான காடழிதல் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றது. பிரதானமாக சேனைப் பயிர் செய்கை, சட்ட விரோத மரம் தறிப்பு மற்றும் அத்து மீறல் காரணமாக காடுகளின் தரம் குறைந்து விட்டது.

வீட்டுத்துறை, கைத்தொழில் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றுக்கான வெட்டுமரம், மற்றும் மர உற்பத்திகளுக்கான கேள்வி காடழித்தலில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. 1993இல் 1000 பேருக்கான வருடாந்த அரிமர நுகர்வு 31$m^3$ என உத்தேசமாக மதிப்பிடப்பட்டது (MFE, 1995). இது மலேஷியா (216.9$m^3$) தாய்லந்து (67.4$m^3$), கொரியா (112$m^3$) மற்றும் அமெரிக்கா (485$m^3$) ஆகிய நாடுகளை விட இது குறைவாயினும் 1993இல் 0.544 மில்லியன் கன மீற்றர் நுகர்வு என்பதிலிருந்து 2020இல் 0.885 மில்லியன் கன மீற்றராக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 12,600 கணமீற்றர் அதிகரிப்பாகும். ஓட்டுப்பலகை மற்றும் மரத்திலாதன தளபாட பகுதிகளுக்கான கேள்வி ஆண்டுக்கு 2.8 சதவீத மற்றும் 3.5 சதவீதத்தால் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (MFE, 1995). ஸ்ரீலங்கா வனத்துறை பெரும் திட்டத்தால் எதிர்வு கூறப்பட்டப்படி, தற்போதைய போக்கு தடுக்கப்படாமல் மர இறக்குமதி ஊக்குவிக்கப்படாமல் போகுமாயின் ஸ்ரீலங்கா அரிமர தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

### 3.1.2 வரக் கூடிய சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள்

- விவசாய நிலங்களின் உற்பத்தி திறன் கெடுதலுக்கு காரணமாகும் மண் வளம் குறைதல்
- அளவுக்கு அதிகமாக ஆற்று மணலை அகழ்வதனால் வரும் உவர்தல் காரணமாக குறைந்த தரத்திலான பொது மக்கள் குடிநீரினால் சமுதாயங்கள் பாதிக்கப்படும்.
- கைவிடப்பட்ட அகழ்வு கிடங்குகளால் நோய்பரம்பல் உட்பட ஆரோக்கிய கேடுகள் உண்டாகும்.
- நீர் பிரிப்பு மேடுகளின் தரம் கெடுவதனால் உள்ளூர் அரிசி உற்பத்தியும் நீர் மின் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்படும்.
- மேல் மண் அற்றுப்போனதால் மலை நாட்டில் மரக்கறி செய்கைக்காக பசளை மண்ணை வாங்கி கொண்டுவர வேண்டியிருப்பதனால் சமூகங்களுக்கு கூடுதல் செலவு ஏற்படுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.1.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- நிலவள மூலவள முகாமையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது வகிபாகத்தை முறையாக நிறைவேற்றுவதற்கு அவற்றின் ஆற்றலை மேம்படுத்துக.

- கடமைகள் பொறுப்புகள் இடைவெட்டுவதை தவிர்க்கும் வயையில் நிறுவனங்களின் பணிகள், பொறுப்புகளை மீளமைத்து கொள்க.

- வெவ்வேறு நிதி மூலங்களிலிருந்து கிடைக்கும் நிதிகளை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கு ஒரு பொறிமுறையை ஆக்கவும், அத்தோடு சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தை பொறுப்பேற்க மாகாணசபைகளுக்கும் பிரதேச சபைகளுக்கும் உதவி வழங்குக. தமக்கு கொடுக்கப்பட்ட சுற்றுச்சூழல் தொடர்பான பொறுப்புகளை நிறைவேற்ற மாகாணசபைகளுக்கு வலுவூட்ட பொறுத்தமான உப தேசிய மட்ட நிறுவனங்களை அமைக்க வேண்டிய தேவை பற்றி ஆராயப்பட வேண்டும்.

- நிலம் தரங்கெடுதலை நிறுத்துவதற்கு பிரதேச சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்பவற்றின் பங்குபற்றலை அதிகரிக்கவும்.

- நிலம் தரம் கெடுதலை நிறுத்துவதற்கு தனியார் துறையை சேர்த்துக் கொள்ளத் தேவையான கொள்கை மற்றும் நிறுவன ரீதியான ஒழுங்குவிதி சட்டகங்களை ஆக்கிக்கொள்க.

- திட்டமிட்ட அபிவிருத்தியூடாக காடழித்தல் மற்றும் காடு தரங்கெடுதல் என்பவற்றை கையாள தற்போதைய முறைமையை அபிவிருத்தி செய்வதனால் நிலப் பயன்பாடு திட்டமிடல் செயல்முறையை மேம்படுத்துக.

- நிலம் தரங்கெடுதல் மற்றும் காடு சார்ந்த குற்றச் செயல்கள் தொடர்பாக தற்போது உள்ள சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அமுலாக்குக.

- குறைகளை நீக்கவும் சட்டங்களை கூடுதல் வினைத்திறன் உள்ளதாக்கவும் ஒத்திசைவாக்கவும் நிலம் தரம் கெடுதல் தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்க. சட்டங்களை கூடிய வினைத்திறன் உள்ளவை ஆகவும் இலகுவாக ஒருங்கிணைப்பு செய்யக் கூடியவையாகவும் ஆக்குக.

- காடுகளை எல்லையிடுக. மிக முக்கியமான நீர் பிரிகை மேடுகளை பேணுக.

- வனவியல் பெருந்திட்டத்தின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துக. சமுதாயம் மற்றும் தனியார் துறையின் பங்குபற்றுலுடன் காடுகளின் பல்வகைப் பயன்பாட்டையும் மேம்படச் செய்யும் வனத்துறை பெருந்திட்டத்தின் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துக.

- நாட்டை காடு நிறைந்தது ஆக்குக. நகரப்பகுதி, கிராமியப்புறம் உட்பட பொருத்தமான இடமெங்கும் காடுகளை வளர்க்கவும்.

- நகரங்களில் வெள்ள நீர்வடிகால் அமைப்பை பயன்படுத்துக.

- ஒரு நன்கொடை முகவரத்தின் நீண்ட கால பங்களிப்பை ஒரு குறிப்பிட்ட உப துறையில் ஊக்குவிக்கவும்.

- நீர் பிரிகை மேடு தரங்கெடுவதை நிறுத்த வினைத்திறன் மிக்க செய்திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் திட்டமிடுக. மண் பாதுகாப்பை மேம்படுத்துக. இவை நிலம் தரம் கெடுதலின் சமூக மற்றும் நிறுவனம் சார் காரணங்கள் பற்றிய விளக்கத்துடன் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.2. நீர் மாசடைதல்

#### 3.2.1. தற்போதைய நிலை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

மேல் தரை மற்றும் நில நீர் மாசடைதல், நகர குப்பை கொட்டப்படும் இடங்களிலும், உயர் உள்ளீட்டு விவசாய இடங்களிலும், களப்புகளிலும் சுனாமி பாதித்த இடங்களிலும் ஏற்படுகின்றன. கிட்டத்தட்ட சகல கைத்தொழில் கழிவு நீரும் சட்ட நியமங்களுக்கு ஏற்ப பதப்படுத்தப்பட்ட பின்னர் தரை மேல் நீர் நிலைகளில் விடுக்கப்படுகின்றன. மேலும் திண்ம மற்றும் திரவ கழிவு அருவிகள், எண்ணெய் சிந்தல் விவசாய இரசாயனங்கள், உப்பு நீர் என்பவை கலப்பதனால் நாட்டின் சில பகுதிகளில் பாதுகாப்பான குடிநீர் குறைந்து வருகின்றது.

#### 3.2.2. வரக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள்

- முகத்துவார மற்றும் கடல் நீரை அசுத்தப்படுத்தும் எண்ணெய் சிந்துதல்கள் மற்றும் வேறு காரணங்களால் மீன்பிடித்தல் மற்றும் சூழல் தொகுதியின் ஆரோக்கியம் என்பனவற்றுக்கு தடை ஏற்படுதல்
- பண்ணைகள் மற்றும் கைத்தொழில்களால் அனுமதியின்றியும் சரியான கவனம் இன்றியும் நிலத்திலிருந்து நீர் எடுக்கப்படுதல் மனித பயன்பாட்டுக்கான நல்ல தரமான நீர் பற்றாக்குறைக்கு இட்டுச் செல்லும்.
- நீர்நிலைகளை சுத்தம் செய்தல், மீன்பிடித்துறை சமுதாயங்களின் தொழில்குறைதல் உட்பட உயர் பொருளாதார சமூக செலவுகளை கொண்டுவரும்.
- வெள்ளம் போன்ற அனர்த்தங்களுக்கு இட்டுச் செல்லும் நீர் நிலைகளின் நீர் கொள்ளளவு குறைதல் உயரலவான மீட்டெடுப்பு செலவுக்கு காரணமாகும்.
- மாசடைந்த நீர் மற்றும் மண் காரணமாக ஆரோக்கியம் கெடுதல்
- அளவுக்கு அதிகமான இரசாயன பயன்பாடு மற்றும் மண்ணின் தரவீழ்ச்சி காரணமாக நீண்ட காலத்தில் விளைச்சல் குறைதல்
- விவசாயிகள் அளவுக்கு மீறிய விவசாய இரசாயனங்களை பாவிப்பதனால் நெல் மற்றும் விவசாய உற்பத்திகளின் உற்பத்தி செலவு அதிகரித்தல்.
- ஸ்ரீலங்காவில் விவசாய உற்பத்தியின் விளைச்சல் குறைதல் வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் உற்பத்தி செலவு அதிகமாக இருத்தல் என்பன உயர் அளவிலான இறக்குமதிக்கு காரணமாகும்.

#### 3.2.3. பரிகாரங்களும், ஏற்பாடுகளும் நடைமுறை படுத்தல்களும்

- மாசடைய செய்வோரிடம் செலவு அறவிடுதல் கொள்கையை கடைப்பிடிக்கவும்.
- மாநகர சபைகள் கழிவு கொட்டுவதற்கு பொருத்தமான இடங்களை இனங்காண்பதை உறுதி செய்க.
- தேசிய சுற்றுச்சூழல் சட்டம், மகாவலி அதிகார சபை சட்டம், நீர்பாசன கட்டளைச் சட்டம் என்பவற்றைப் போன்று நீர் நிலைகளில் ஒதுக்குகளை கடுமையாக நடைமுறைப்படுத்துக.
- கடல் நீர் நிலைகளின் மாசடைதல் என்ற ரீதியில் கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாதிப்புகள், தேசிய மூலவள பாதிப்புக் கணக்கீடு மற்றும் கட்டாய பொறுப்புகளின் முழுச் செலவு கணக்கீட்டை நடத்துக.
- கைத்தொழில்களில் பூச்சிய திரவ வெளியீட்டு முறைமையை ஊக்கப்படுத்துக, உற்சாகப்படுத்துக.

## 3.3. திண்ம கழிவு

### 3.3.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்காவில் ஒரு நாளில் உருவாகும் 6,400 தொன் திண்ம கழிவில் 2,680 தொன் கழிவை உள்ளூராட்சி நிறுவனங்கள் சேகரிக்கின்றன. மேல் மாகாணத்திலிருந்து சேகரிக்கப்படும் மொத்த கழிவு அண்ணலவாக 1,750 தொன் ஆகும். கொழும்பு நகரிலிருந்து மட்டும் 650 – 700 தொன் திண்ம கழிவு சேகரிக்கப்படுகின்றது. பொறியியல் ரீதியில் நிறுவப்பட்ட சுகாதார ரீதியான நிலம் நிரப்பு இடங்கள் இன்மையால் அநேகமான உள்ளூராட்சி சபைகள் சேகரிக்கப்பட்ட கழிவுகளை சேற்று நிலங்கள் மற்றும் வெறும் தரைகளில் கொட்டும் வழக்கத்தை கொண்டுள்ளன. சில கழிவு கொட்டும் இடங்கள் காலத்துக்கு காலம் திண்மப் படைகளால் மூடப்படினும் அநேகமான கொட்டும் இடங்கள் திறந்தபடி உள்ளன. மேலும் பல யானைகள் உட்பட பல காட்டு மிருகங்கள் இந்த கழிவுக் குவியலிருந்து தமது உணவை பெறுகின்றன. அருவருக்க வைக்கும் காட்சியாக இருப்பதற்கு மேலாக இவை இலையான் மற்றும் நுளம்புகள் பெருகும் இடங்களாகவும் உள்ளன. இவற்றினால் வரும் சுற்றுச்சூழல், சமூக பாதிப்புகள் தேசியளவில் பெரிதும் கெடுதியானவை. உள்ளூராட்சி நிறுவனங்கள் சேகரிக்கும் தின்ம கழிவுகள் வகைப்படுத்தப்படாமல் கலந்துள்ளமையால் பொருளாதார பெறுமதி இல்லாதவை. இதனால் திண்ம கழிவிலிருந்து மீட்கப்படும் மூலவளம் சொற்பமாக உள்ளது. மேலும் இந்த வகை மீட்பு சரியாக ஒழுங்கமைக்கப்படவும் இல்லை. மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் (Pilisaru) ஒண்றினைந்த திண்மக்கழிவு முகாமை நிகழ்ச்சி திட்டம் பல உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு கூட்டுப் பசளை தயாரிப்புத் தொழிற்சாலைகளை அமைக்க தொழில் ரீதியாகவும் நிதி ரீதியாகவும் உதவியது. கைத்தொழில் திண்ம கழிவுகளில் அநேகமானவை அதிகாரம் அளிக்கப்பட்டவர்களால் சேகரிக்கப்படுதின்றது. மீட்டெடுக்கக்கூடிய கழிவுகளில் அநேகமானவை மீளப் பயன்படுத்தப்படுகின்றன. அல்லது மீள் சுழற்சி செய்யப்படுகின்றன. ஆபத்தான திண்ம கழிவுகளில் பெரும் பகுதியான்மை புத்தளம் சீமெந்து தொழிற்சாலையால் பதனிடப்படுகின்றன. E கழிவு எனும் புதிய வகை கழிவு நாட்டில் இன்றும் பிரச்சினையாகவே உள்ளது. சேகரிக்கப்பட்ட E கழிவில் ஒரு பகுதி மீள் சுழற்சிக்காக ஏற்றுமதி செய்யப்படினும் சேகரிக்கப்படாத பெரும் அளவிலான E கழிவு வீடுகளிலும் வேலைத்தளங்களிலும் பரந்கு கிடக்கின்றது. மத்திய, மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் பெருமளவில் செலவு செய்த போதிலும் சமூகம் மற்றும் சூற்றுசூழலுக்கு நன்மை செய்து முன்னேற பெருமளவு இடம் இன்னும் உள்ளது. (உசாத்துனை: பேராசியர் ஹேமந்தி ரணசிங்க)

### 3.3.2. வரக்கூடிய சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள்

- கண்டபடியான கழிவு அகற்றல் முறைகளால் உருவாக்கப்படும் அசுத்தமான சூழலினால் நோய்கள் பரவும் சாத்தியம்.
- கழிவுக் குவியல் சரிதல் அல்லது அங்கு உருவாகும் வாயுக்கள் காரணமாக சொத்துகளுக்கும் உயிர்களுக்கும் ஏற்படும் அழிவுகள், இதனால் வரக்கூடிய அரசுக்கும் சமுதாயத்துக்குமான நட்டங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனித நுகர்வுக்கு ஏற்க முடியாத நீரை உருவாக்கும் வகையில் அருகில் உள்ள நீர் நிலைகள் கழிவுக் குவியல ஊரல் (leachate) நீரில் தொற்றை ஏற்படுத்தல்

- அருகில் வாழும் மக்களுக்கு உள அழுத்தத்தை கொண்டு வரும் நாற்றமும் மாசுபட்ட காட்சியும்

- வெள்ளம், வீடுகள் நீரில் மூழ்குதல், சொத்து அழிவு என்பவற்றுக்கு காரணமாகும் நீரோட்ட வழிகள் மறிக்கப்படுதல்

- நாட்டின் அவலட்சனமான தன்மை காரணமாக – விசேடமாக நகர பகுதிகளில் உண்டாகும் இத்தன்மையினால் சுற்றுலாத் துறை வருமானம் பாதிக்கப்படுதல்

- கலப்பு கழிவுகளுக்கு பெறுமதி இல்லை. இதனால் நாட்டுக்கு மூலவள இழப்பு உண்டாகுதல்

### 3.3.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தல்கள்

- தேசிய கழிவு முகாமைத்துவ கொள்கை மற்றும் மூலோபாயங்களை செயற்படுத்துக.

- Pilisaru (ஒன்றினைந்த திண்மக்களிவு முகாமைத்துவ நிகழ்ச்சி திட்டம்) இலக்குகள், நோக்கங்களை அடைய நடவடிக்கை எடுக்கவும்.

- மாநகர மட்டங்களில் மீள்சுழற்சி செய்தல், கழிவுகளை குறைத்தல் மற்றும் கழிவுகளை பற்றிய மீள் சிந்தனை என்பவை மீதான நாடளாவிய ரீதியான நிகழ்ச்சி திட்டங்களை மேம்படுத்துக.

- மீட்கப்பட்ட மூலவளங்களின் பொருளாதார பெறுமதியை அதிகரிக்கும் வகையில் பெரிய நகரங்களில் கழிவு வகைப்படுத்தும் மையங்களை உருவாக்குக.

- மீள்சுழற்சி அடங்கலாக சுற்றுச்சூழல் முகாமைத்துவத்தில் தனியார்துறையின் முயற்சிகளை இலகுவாக்குக.

- கழிவு ஒரு வளமாக மாறும் சுழற்சி பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும்.

- பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக்கின் பயன்பாட்டை வெறுக்கச் செய்க.

- பொருத்தமான இடங்களில் பொதியிடலுக்கு உக்கிப்போகக் கூடிய பிளாஸ்டிக்கை பயன்படுத்துக.

- ஆபத்தான கழிவுகளுக்கு முறையான சேகரிப்பு மற்றும் அகற்றும் முறைகளை பயன்பாட்டுக்கு கொண்டு வருக.

- மீள் பயன்பாட்டுக்கு கொண்டு வரக்கூடிய, மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய பொருட்களை சேகரிப்பதற்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்க.

- கைத்தொழில்களின் கூட்டு இருப்பு தத்துவத்தை பயன்படுத்தி கைத்தொழில்கள் தமது பயன்பாட்டுக்காக பிரிக்கப்பட்ட கழிவுகளை வாங்கக் கூடிய நாடளாவிய கழிவு பரிமாற்றல் ஏற்பாட்டை செய்க.

- கழிவு மீள்சுழற்சி பேட்டை ஒன்றை அமைக்கவும், சகல பிரதான மூலவள வகையிலான (பிளாஸ்டிக், கடதாசி, துணித்துண்டுகள், கண்ணாடி, கட்டட பொருட்கள், மரக்கழிவுகள் போன்ற) கழிவுகளை மீள்சுழட்சி செய்யும் கைத்தொழில்களை நிறுவுக. பல்வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான பொருட்களின் முறையான மீள்சுழற்சியை பிரபலப்படுத்துக. ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குக.

- கடைகளில் இலவசமாக பைகளை கொடுப்பதை தடை செய்க. இது தொடர்பில் சட்டங்களை வலுப்படுத்துக.
- தனியார் துறையிலுள்ள சிறிய கைத்தொழில்கள் மீள்சுழற்சி கைத்தொழில்களை நிறுவ ஊக்கம் அளிக்கவும்.
- சிறிய அளவு முன்னோடி செய்திட்டங்களை பயன்படுத்தி கழிவு முகாமையுடன் 3Rகளுடன் (மீள்பயன்பாடு, மீள்சுழற்சி, குறைத்தல்) தொடர்புபடுத்தி சமுதாயங்களிடையே கல்வியையும் விழிப்புணர்வையும் உருவாக்குக.
- பிரதான செயற்பாடுகளில் சமுதாயத்தினரை பயன்படுத்துவதால் அவர்களை கழிவு முகாமைத்துவத்தில் பங்கெடுக்கச் செய்யவும்.

## 3.4. அவசர பிரச்சினைகள் - நாட்பட்ட சிறுநீரக நோய், டெங்கு, சுற்றுலாத்துறை

### 3.4.1. தற்போதைய நிலைமை, சமகாலபிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

பல நூற்றாண்டுகளாக சுற்றுச்சூழலுக்கு அல்லது சமூகத்துக்கு கெடுதி செய்யாத நிலைத்திருக்கக் கூடிய விவசாய முறைமையை ஸ்ரீலங்கா பயன்படுத்தி வந்துள்ளது. இருப்பினும் கடந்த சில தசாப்தங்களாக விவசாய உற்பத்திகளை அதிகரிக்கும் நோக்கில் பாரம்பரிய விவசாயம், விவசாய இரசாயனங்களின் அடிப்படையிலான விவசாயமாக மாற்றப்பட்டது. இது கடுமையான சுற்றுச்சூழல் மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்றது. 2002 மற்றும் 2012இல் இரசாயன விவர கொத்தின்படி தலைக்குரிய விவசாய இரசாயன நுகர்வு 2002இல் 22kg ஆகவிருந்து 2012இல் 50kg ஆக அதிகரித்தது. இவ்வாறான இரசாயன செறிவு விவசாயமுறைகளால் உருவான விவசாயிகள் மீதான பிரதான தாக்கங்களில் ஒன்றாக நீண்டகால சிறுநீரக (CKDu) உள்ளது. சகல மக்களிடையேயுமான பொதுவான சிறுநீரக நோய் போலன்றி நாட்பட்ட சிறுநீரக நோய் (CKD) எமது விவசாய சமுதாயத்தினரை அழிக்கக் கூடும் அளவில் உள்ளது. மறுபுறத்தில் சமுதாயமும் உள்ளூராட்சி மன்றங்களும் சுற்றுச்சூழலின் சுத்தத்துக்கு போதிய கவனம் செலுத்தாமையாள் டெங்கு வடிவில் புதிய நோய்ப்பரம்பல் உருவாகி வருகின்றது. திண்மக்கழிவு முகாமை, தரம் அற்றதாகவும் நீர்நிலைகள் உடைபாடுகளை கொண்டவையாயும் உள்ள – ஏழை மக்கள் வாழும் இடங்களில் இந்த நோய் பரவிவருகின்றது. 2017இல் இந்த நோய் பெரிய அளவில் காணப்பட்டது. மேலும் 70,000க்கு மேற்பட்டோர் டெங்குவினால் பாதிக்கப்பட்டு 300 பேர் உயிரிழந்தனர். குடும்ப வருமானத்தில் நேரடித் தாக்கம் கொண்ட இந்த பெரும் பிரச்சினை சமுதாயங்களின் பொருளாதார நிலையை வீழ்ச்சியுற்றச் செய்யும். மேலும் இந்த தாக்கங்கள் நாட்டின் பிரதான வருமானத்தை தரும் சுற்றுலாத்துறை மீது பாதகமான தாக்கத்தை கொடுக்கும்.[17]

### 3.4.2 வரக்கூடிய சமூக பொருளாதார தாக்கங்கள்

- நோயின் காரணமாக வந்த மரணம், பாதிப்பு என்பன பாதகமான குடும்ப மற்றும் கலாசார விளைவுகளுக்கு இட்டுச செல்லும.
- நோயை முகாமை செய்ய அரசாங்கத்துக்கு பெரும் செலவு ஏற்படும்
- சுற்றுலாத்துறை வருமான இழப்பு
- விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் பயன்படக் கூடிய ஊழியப்படை குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3.4.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- ஊக்குவிப்புகள், தண்டங்கள் மற்றும் நியமங்களை பயன்படுத்தி சகலரும் தூய சுற்றுச்சுழலை பேணுவதை ஊக்குவிக்கவும்.
- நோய் முகாமைத்துவத்தை விட கூடுதல் வெற்றியை தரக்கூடிய நோய் தடுப்பை ஊக்குவிக்கவும்.
- CKDu பாதிக்கும் ஆபத்துக்கு முகம் கொடுக்கும் மக்களுக்கு விசேடமாக ஒரு ஆரோக்கிய காப்புறுதி திட்டத்தை அமுல் செய்க.
- நேரத்தோடு கண்டு பிடிப்பதற்கான சோதனைகளை மேற்கொள்ளுமாறு சமுதாயங்களுக்கு பரப்புரை செய்யுங்கள்.
- நோய் தடுப்புக்காக பொருத்தமான உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்க.
- நோய்த் தடுப்பு செயல்பாட்டில் பல பங்குதாரர்கள் இருப்பதனால் அனைத்து முறை அணுகு முறையை நோய்த் தடுப்பிலும், முகாமை செய்வதிலும் பயன்படுத்துக.

ஸ்ரீலங்காவில் நாட்பட்ட சிறுநீரக நோய் (CKD)[17] - சமகால ஆய்வு நியாயப்படுத்தல்: ஒரு மதிப்பாய்வு சுனேத்திரா காந்தி குணதிலக[1], S.சுனில் சமரதுங்க[2] மற்றும் றுவினி தக்ஸலா ரூபசிங்க

- தேசிய முக்கியத்துவம் மிக்க துறைகளில் புதிய ஆய்வுகளை மேற்கொள்ள ஆய்வு நிறுவனங்களுக்கு வசதி செய்து கொடுக்கவும்
- டெங்கு போன்ற நோய்களை தடுக்க, தமது சொந்த அயல் சூழலை முகாமை செய்ய சமுதாயங்களுக்கு கல்வி வழங்கவும், வலுவூட்டவும்

## 3.5. வளி மாசடைதல்

### 3.5.1. தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

நகர வாகன போக்குவரத்து மின் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றிலிருந்து வரும் புகையால் உண்டாகும் வளிமாசடைதல் சகல நகர பகுதிகளிலும் கடுமையாக சுற்றுச்சூழல் பிரச்சினையாக உள்ளது, ஆனால் இது கொழும்பு மற்றும் கண்டி போன்ற நகரங்களில் பெரும் விசனத்துக்கான பிரிச்சினையாகி விட்டது. அண்மையில் வாகன புகை காரணமாக கண்டியில் வளி மாசடைதல் மோசமாகி விட்டது. பல பகுதிகளில் வாகனங்கள் தொகை பல மடங்கு அதிகரித்து விட்டது. அவை வெளியிடும் புகை வளி மாசடைதலுக்கு ஆகவும் கூடிய பங்களிப்பை செய்துள்ளன. வாகனங்கள் வெளியிடும் வாயுக்களில் காபனோரொட்சைட(Carbon Monoxide) ஈரொட்சைட (Dioxide), சல்பர் ஆக்ஸைட்(SOx) நைட்ரஜன் ஆக்சைட் (Nox) ஹைட்ரோகாபர்ன், கரித்துகள் மற்றும் தூசிகள் உள்ளன. இந்த வாயுக்களில் சில புவி வெப்பமாதலுக்கும் வேறு சில அமில மழைக்கும் இன்னும் சில தொய்வு போன்ற சுவாச நோய்களுக்கும் காரணமாகின்றன. சில வெளியீடுகள் உழைக்கும் மக்களுக்கு கடுமையான நோய்களை கொண்டு வரக்கூடிய – புற்று நோயையும் கொண்டுவரக்கூடியதாகவும் உள்ளன. டீசல் வாகனங்களிலிருந்து வரும் புகைகள் விசேடமாக தீங்கானவை. இந்த வெளியீடுகள் குறைந்த தர டிசல் பாவனை, வாகனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழிநிலை மற்றும் அளவுக்கு அதிகமான பாரமேற்றுவதால் உண்டாகின்றன. மனிதர் மற்றும் வேறு உயிரினங்களுக்கு ஏற்படுத்தப்படும் தீய தாக்கத்துக்கு மேலாக, இந்த வாயு வெளியீடுகளில் அநேகமானவை, சாந்து, இரும்பு, உருக்கு, மற்றும் இறப்பர் போன்ற கட்டடப் பொருட்களை சேதப்படுத்துவதால், உட்கட்டமைப்புகளுக்கு நீண்ட காலத்தில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. வாகனங்கள் தவிர அனல் மின் நிலையங்களும் மேலே கூறிய வாயுக்களை பெருமளவில் வெளியிட்டு நிலைமையை இன்னும் மோசமடைய செய்கின்றன. கொழும்பு வளியின் தரம், கோட்டை ரயில் நிலையத்தை அண்மித்த பகுதி மற்றும் வானிலை அவதானிப்பு நிலைய வளாகம் ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகின்றது. சல்பர் டைஆக்ஸைட் மட்டம் WHO அனுமதித்த மட்டத்தை விட கூடுதலாக 1996 அளவில் காணப்பட்டது. அண்மையில் வாகன வாயு வெளிப்படுத்தலை சோதிக்கும் திட்டம் வாகனத்தின் தரத்தை உயர்த்தும் சில மாற்றங்களை செய்துள்ளது. மேலும் பெற்றோலிலிருந்து ஈயத்தை பிரித்தெடுத்தல் வளியில் ஈயப்புகை சேர்வதை தடுத்துள்ளது. இருப்பினும் ஸ்ரீலங்கா நகரப்பகுதிகளில் வளியின் தர நியமங்களை மேம்படுத்த செய்ய வேண்டியவை இன்னும் பல உள்ளன.

(உசாத்துணை: ஸ்ரீலங்காவில் சுற்றுச்சூழல் மாசடைதல்: O.A இலேபெரும அவர்களால் செய்யப்பட்ட மதிப்பாய்வு)

### 3.5.2. வரக்கூடிய சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள்

- உற்பத்தித்திறனையும் கைத்தொழிலின் போட்டித்தன்மையையும் குறைக்கும் ஆரோக்கியமற்ற, நோயுற்ற ஊழியப்படை உருவாகும்.
- சிறுவர் மற்றும் வறியோர் போன்ற நலிவுற்ற பிரிவினரின் ஆரோக்கியம் இன்மை காரணமாக ஆரோக்கிய செலவு அதிகரிப்பு
- வளி மாசடைதல் தொடர்பான நோய்களை மாற்றுவதற்கான செலவுகள் அதிகரிப்பு
- கரிப்புகை, தூசி மற்றும் அமில மழை காரணமாக முக்கியமான சுற்றுலாத்தலங்களும் வேறு கவர்ச்சிகளும் பாதிப்படைதல். இதனால் இவ்விடங்களுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் தொகை குறைத்தல்
- வளி மாசடைதல் காரணமாக விசேடமாக நகரங்களில் சுற்றுத்துறையிலிருந்து பெறப்படும் வருமானம் குறைதல்
- மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து வரும் வாயுக்களால் அமில மழை பெய்தலும் சில இடங்களில் தோட்டத்துறை பாதிக்கப்படலும்

### 3.5.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- சுற்றுச் சூழலை கூடுதலாக பாதிக்கும் புதுப்பிக்க முடியாத வலுக்களை படிப்படியாக நீக்கி, கூடுதல் புதுப்பிக்கத்தக்க வலு தொழில் நுட்பங்களை புகுத்துக.
- சகல புகை தள்ளும் இடங்களுக்கும் சுற்றுச்சூழல் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்துக.
- நவீன குறித்தொதுக்கப்பட்ட பஸ் ஓடு பாதைகள மோனோ ரயில் (mono rail) மற்றும் ஒற்றை தண்டவாள ரயில் (uni rail) அதிவேக வீதிகள், கார் தரிப்பிடம் என்பவை கொண்ட போக்குவரத்து முகாமைத்துவ வேலைத்திட்டம் ஒன்றை – மாற்று வேலை நேரம், வீட்டில் செய்யக்கூடிய வேலைப் பொறுப்புகள் எனபவற்றைப் பயன் படுத்தி அமுலாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறைந்த வட்டி அல்லது வட்டி இல்லாத கடன்கள் மூலம் நிறுவனங்கள் மாசடைதல் இல்லாத தொழிற்சாலைகள் கருவிகளை பயன்படுத்த வழி செய்க.

- மின் வாகனங்களை இறக்குமதி செய்ய தீர்வையற்ற இறக்குமதி வசதியை வழங்குக. பெற்றோல் மற்றும் டீசல் வாகனங்களுக்கு கூடுதல் வரி அறவிடுக.

- நாடு முழுதும், சூரிய சக்தியில் இயங்கும் வாகன மின்கலங்களுக்கு மின்னேற்றும் நிலையங்கள் அமைக்க வசதி செய்க.

- ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைகழகங்களுக்கு உயிர் எரிபொருள்/ ஐதரசன் வலு மற்றும் வேறு புதுப்பிக்கத்தக்க வலு மூலங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்த வசதிகள் செய்து கொடுக்கவும்.

- மண் எண்ணெய் மற்றும் திரவ பெற்றோலிய (LP) வாயு என்பவற்றுக்கு பதிலாக மீதேன் வாயுவை பயன்படுத்த தொழில்நுட்ப மாற்றுகைக்கு வசதி செய்து கொடுக்கவும்.

- மாட்டுப் பண்ணை மற்றும் வேறு விவசாயிகளுக்கு உயிர் வாயு தயாரிப்பு முறையை கற்றுக் கொடுக்கவும்.

## 3.6. சமநிலைப்பட்ட, அரவணைப்புள்ள, பசுமை வளர்ச்சி (BIGG) (இது அறிமுகம் மற்றும் மதிபபாய்விலும் கலந்துரையாடப்பட்டது., பெட்டி B1)

### 3.6.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்கா பொருத்தமான சகல பல்பக்க சுற்றுச் சூழல் ஒப்பந்தங்களையும் (MEAs) கையொப்பதாரியாக இருந்து வருகின்றது. மேலும் ஸ்ரீலங்கா கடந்த பல வருடங்களாக கட்டாயமான தேவைகளின் செயலாற்றுகைக்கு அப்பாலும் போயுள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் சமூக வாழ்வை முன்னேற்றவும் - தேசிய அபிவிருத்தியில் நிலைத்திருப்பு பிரச்சினைகளையும் சேர்த்துக் கொள்ளவும் பல செய்திட்டங்களை பொறுப்பெடுத்துள்ளது. ஸ்ரீலங்கா ஐக்கிய நாடுகள்(UN), ஐரோப்பிய ஒன்றியம்(EU), உலக வங்கி (World Bank) மற்றும் நிதி வழங்கும் முகவரங்களால் தொடக்கப்பட்ட சகல செய்திட்டங்களிலும் ஊக்கமான பங்காளியாக இருந்ததுடன் வெற்றிகரமான சாதனைகளையும் படைத்துள்ளது. ஸ்ரீலங்கா தன் கடந்த கால சாதனைகள் காரணமாக தென் ஆசிய நாடுகளின் அநேகமான பரீட்ஷார்த்த திட்டங்களிலும் பிரதான அபேட்சகராக ஐக்கிய நாடுகள் முகவர்களால் கவனிக்கப்பட்டது. தற்போது ஸ்ரீலங்கா திருப்திகரமான மனித அபிவிருத்தி சுட்டென் (HDI) பெறுமதியையும் சூழியல் தடம் (Ecological Fotprint (EF) வெளியீட்டில் குறைந்த புள்ளியையும் பெற்று ஒரு பெருமை மிக்க இடத்தை பிடித்துள்ளது. பொருளாதார அபிவிருத்தி திட்டங்களில் சில சிறு மாற்றங்களை செய்து இயற்கை வள அடிப்படையை பாதிக்காத முறையிலும் குறைவான EFயையும் பேணி ஸ்ரீலங்கா இன்னும் கூடுதல் உயர் HDI நிலையை பெறக் கூடியதாக இருக்கும். நிலையான வளர்சசி இலக்குகளுக்கான(SDGs) நாட்டின் முழு அர்ப்பணையை மற்றும் வேறு உருவாகி வரும் MEA க்கள் என்பன ஸ்ரீலங்காவின் நிலைத்திருக்கக் கூடிய நுகர்வு மற்றும் உற்பத்தி தொடர்பான EU நிதிப்படுத்திய SWITCH – ASIA செய்திட்டத்துக்குப் பெரும் ஊக்கத்தை வழங்கியுள்ளது. SWITCH ASIA செய்திட்டமானது ஒரு தேசிய கொள்கை ஆதரவு திட்டமாகும். SCP மீது ஒரு கொள்கையை ஆக்கிக் கொள்ள நாட்டுக்கு ஆதரவு அளிக்கும் தென் ஆசியாவில் உள்ள ஒரே ஒரு முன்னோடித் திட்டம் இதுவாகும். இவ்வாறாக இது SDG 12க்கு பங்களிக்கின்றது. வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் கீழ் SDGகளுக்கான அமைக்கப்படவுள்ள செயலகமும் VISION 2030 – Sri Lanka Next உம் 17 SDGகள் மற்றும் 2030 அளவிலான அவற்றின் இலக்குகளின் வினைத்திறன் மிக்க நடைமுறைப்படுத்தலுக்கான கருவை உருவாக்கும். இதன் மூலம் ஸ்ரீலங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்திருக்கும் வகையில் அபிவிருத்தி அடைந்த உயர் நடுத்தர வருமான நாடுகளில் ஒன்றாகி விடும்.

**3.6.2. வரக்கூடிய நன்மையான சமூக மற்றும் பொருளாதார தாக்கங்கள்.**

- முன்னேற்றகரமாக நல்வாழ்வுடன் திருப்திகரமான கூடிய மகிழ்ச்சியுள்ள சமுதாயம்.
- குறைந்த அளவிலான கழிவு உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழலுக்குள் அவை சேர்த்தலும்
- தேசிய செயற்பாடுகளில் ஈடுபாடுள்ள கூடுதல் கல்வி அறிவு பெற்ற இளைஞர்கள்
- தூய வளி மற்றும் நீர் மற்றும் ஆரோக்கியமான சூழல் தொகுதியுள்ள சுத்தமான மற்றும் பசுமையான சூழல்
- அனர்த்த ஆபத்து குறைப்பு (DRR) மற்றும் சுழற்சி பொருளாதார எண்ணக் கருக்கள் செயற்பாட்டில் இருப்பதனால் அமைப்பு முகாமைத்துவத்தின் செலவு குறைதல்
- புத்திபூர்வமாக பயன்படுத்தப்படும் மற்றும் பாதுகாக்கப்படும் இயற்கையான சூழல் தொகுதிகள் மற்றும் உயிர் பல் வகைமை அதிகரித்த சுற்றுலாதுறையூடாக பொருளாதாரத்துக்கு நன்மை செய்தல்
- சுற்றுச்சூழல் ரீதியாக நிலைத்திருக்கக் கூடிய தொழில்நுட்பங்கள் மற்றும் சூழல் (ECO) கண்டுபிடிப்புகளின் பிரயோகங்களின் வழியாக வரும் பசுமை உற்பத்திகளும் சேவைகளும்
- வளங்களின் வாழ்கை வட்ட முகாமைத்துவம், உற்பத்திகள் மற்றும் சேவைகள் காரணமாக கழிவில்லாத சமூகம் உருவாதல்
- சுற்றுசூழல் மற்றும் சமூக ரீதியாக சாதகமான நாடாக இருப்பதனால் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருதல்

**3.6.3. நடைமுறைப்படுத்தல்**

- தீங்கான சுற்றுச்சூழல் தாக்கங்களை குறைக்க – நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்தி BIGGஐ செயற்படுத்துக.
- சுற்றுச்சூழல் கல்வி மற்றும் SCPயுடன் 3R செயல்களையும் தரம்1 இலிருந்து பல்கலைக்கழகம் வரை அறிமுகம் செய்க.
- பாரபட்சம், பக்கச்சார்பு இன்றி தேவையானவிடத்து சுற்றுச்சூழல் ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துக.
- நிலைத்திருக்கக் கூடிய நுகர்வு மற்றும் உற்பத்தி கொள்கை மற்றும் உதவி கருவிகள், ஆயுதங்களை அறிமுகம் செய்க.
- உயர்செலவு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் சுற்றுச்சூழல் சுற்றுலாத்துறை மற்றும் வேறு வகை சுற்றுலாக்களை விருத்தி செய்க.
- பொறுப்புள்ள சமுதாய குழுக்களை உருவாக்குவதற்கு லேபல்கள், சேதனை சான்றுப்படுத்தல் மற்றும் இது போன்ற சந்தை அடிப்படையிலான கருவிகளை உருவக்குக.
- உற்சாகமாக பசுமை வளர்ச்சியில் ஈடுபட சமுதாய அடிப்படையிலான நிலைத்திருப்பு குழுக்கள்/சமூகங்களை நிறுவுக.



8-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு

# C4

## C4. சமுதாயம்: கடுமையான சமகால பிரச்சினைகள், தாக்க விளைவுகள் மற்றும் தீர்வுகள்

### 4.1. வறுமை மற்றும் அசமத்துவம் (இடைவெட்டும கருப்பொருளின் கீழும் பேசப்பட்டது)

#### 4.1.1. தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையான விடயங்கள்

முற்று முழுதான வறுமை, கடந்த பல தசாப்தங்களில் பெருமளவு குறைந்து விட்டது. இதனால் குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் சான்று அடிப்படையிலான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படும் இடத்து முற்று முழுதான வறுமையை ஒழித்தல் அடையக் கூடிய இலக்குத்தான். மறுபுறத்தில் வயது, பால்நிலை, வர்க்கம், இனத்துவம், சாதி, இயலாமை, வாழ்விடம் போன்ற காரணிகளின் அடிப்படையில் வருமான சமத்துவம் இன்மை, சமூக ஏற்றத் தாழ்வுகள் மற்றும் சமநீதியின்மை என்பவை இதே காலத்தில் கூடிய முக்கியத்துவம் வழங்கப்படுபவையாகிவிட்டன. இது கல்வி, சுகாதாரம், சமூகப் பாதுகாப்பு, நீதிக்கான வழி மற்றும் திறன்விருத்தி போன்ற முக்கிய விடயங்களில் கூடுதல் சமூக செலவுகள் ஊடாக வரிவிதிப்பு மற்றும் மீள் விநியோகம் தொடர்பான வினைத்திறன்மிக்க பொது கொள்கைகளை கடைப் பிடித்தலை அவசியமாக்கியுள்ளது.

#### 4.1.2. வரக்கூடிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

**இடைவினைகள்:**

**பொருளாதாரம்:** அசமத்துவமும் வறுமையும் பசுந்தரை தேடி நகரங்களும், வெளி நாடுகளுக்கும் குடி பெயரச் செய்கின்றன. இதனால் ஊழியர் தட்டுப்பாடு மற்றும் சம்பள வீக்கம் அடங்கலான பெரிய ஊழிய சந்தை இடப்பெயர்வை உண்டாக்குகின்றன. இவை மறுபுறத்தில் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை தாக்குகின்றன. வறுமை ஊழியத்தின் போஷாக்கு மற்றும் ஆரோக்கிய நிலையை தாக்குகின்றது. இது குறைந்த உற்பத்தி திறனுக்கும் வேலைக்கு செல்லாமைக்கும் காரணமாகின்றது.

**சுற்றுச்சூழல்:** வறுமை, அரசாங்க நிலம் மற்றும் ஈர நிலங்கள், காடுகள், ஒதுக்குகள் போன்ற சுற்றுச்சூழல் என்ற வகையில் முக்கியத்துவம் வாய்ந்த மூல வளங்களை அடாத்தாகப் பிடிக்க ஊக்குவிக்கின்றது. கிராமத்திலிருந்து நகரத்துக்கான குடி பெயர்வு திட்டமற்ற வகையில் நகர வளர்ச்சிக்கு காரணமாகின்றது. மேலும் இது சன நெருக்கடி, மற்றும் சுற்றுச்சூழல் மாசடைதலுக்கு இட்டுச் செல்கின்றது. திட்டமிடப்படாத அல்லது எழுந்தமானமான அரசாங்க மற்றும் தனியார் முதலீடுகள் கடுமையான சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு காரணமாகின்றன. முறையான ஒழுங்காக்கல் மற்றும் அனுமதி செயன்முறைகள் கடைப்பிடிக்கப்பட்டால் இது தடுக்கப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.1.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

விவசாய உற்பத்தி, விவசாய அடிப்படையிலான கைத்தொழில்கள் மற்றும் உற்பத்தித்துறை என்பவற்றை குறிப்பாக தந்திரோபாய ரீதியில் முக்கியமான பகுதிகளில் மேம்படுத்துவதனால் கிராமிய, பெருந்தோட்ட மற்றும் நகர பகுதிகளில் உற்பத்தித் திறன் வாய்ந்த வேலைகளை அதிகரிப்பது அவசியமானது. கிராமிய – நகர குடிபெயர்வை தடுக்க தூர உள்ள இடங்களில் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அரசாங்க, தனியார் முதலீடுகளுக்கு முன்னர் அனைத்தையும் உள்ளடக்கிய ஒழுங்குபடுத்தல் மற்றும் அனுமதி வழங்கல் செயன்முறைகள் வரவேண்டும். மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற பலவீனமாக உள்ள ஒழுங்குபடுத்தல் மற்றும் அனுமதி நிறுவனங்களை பலப்படுத்தல் இன்னுமொரு தேவையான நடவடிக்கையாகும். வாய்ப்புகளில் சமத்துவம் - பால்நிலை மற்றும் வயது சார்ந்து மாறுகின்றது. இந்த வகையில் பெண்கள் மற்றும் இளைஞரிடையே குறிப்பாக படித்தவர்களாயிருந்தும் பாதகமான நிலையில் உள்ளவர்களிடையே உள்ள வேலையின்மை ஒரு கடுமையான பிரச்சினையாகும். இது நிலைத்திருக்கக் கூடிய அரச தலையீடு மூலம் தீர்த்து வைக்கப்பட வேண்டியதாகும்.

## 4.2. அடிப்படை தேவைகளும் உரிமைகளும்

### 4.2.1. தற்போதைய நிலையும் பிரச்சினை உள்ள இடங்களும்

சுகாதாரம், கல்வி, வருமான ஆதரவு என்பவை கொடுக்கப்பட்ட போதும் சனத்தொகையின் ஒரு கணிசமான பங்கினர் போதிய உணவு, வாழ்விடம் ஆரோக்கிய கவனிப்பு, கல்வி மற்றும் நீதி போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்டுளளனர். இந்த பிரச்சினை வறியோருக்கான கூட்டு வீடமைப்பு, உணவு உற்பத்திக்கான காணித்துண்டுகள் சட்ட உதவி போன்ற – தேசிய, மாகாண, உள்ளூர் மட்டத்திலான – தேவையானவரை மட்டும் போய் சேரக்கூடிய உதவிகள் மூலம் தீர்த்து வைக்கப்படலாம்.

### 4.2.2. வரக்கூடிய பெருளாதார, மற்றும் சுற்றுச்சூழல் தாக்க விளைவுகள்.

இடைவினைகள்:

**பொருளாதாரம்:** ஏற்றுமதிகளுக்கும் மறுபுறத்தில் மக்களுக்கு தேவையான – குறிப்பாக குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு தேவையான அடிப்படை பண்டங்களின் உற்பத்திக்கும் இடையே ஒரு சமநிலையை பேண வேண்டியுள்ளது.

### 4.2.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

மக்களின் அடிப்படைத் தேவைகளை திருப்தி செய்வதன் முக்கியத்துவம் உணரப்பட வேண்டும். இந்த தேவைகளை திருப்தி செய்வதற்கு நேரடியாக பங்களிக்கும் முயற்சிகளுக்கு அரசாங்க கொள்கை ஆதரவளிக்க வேண்டும்.

## 4.3. சமாதானம் மற்றும் நல்லிணக்கம் (இடைவெட்டும் கருப்பொருட்கள் என்பதன் கீழும் எடுத்தாளப்பட்டது

### 4.3.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையுள்ள இடங்கள்

இனப்பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட வன்முறை நிறைந்த, நீண்டகால ஆயுதப் போராட்டம் 2009இல் முடிவுக்கு வந்த போதும் இனசமய முறுகல்கள் தொடருகின்றன, நாட்டின் ஒப்பீட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலான சமாதானத்தை பயமுறுத்துகின்றன. நல்லிணக்கத்தை மேம்படுத்த அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் சமகால முயற்சிகள் போதுமானதாக இல்லையெனத் தெரிகின்றது. 2009இல் ஆயுதப் போராட்டம் முடிந்த பின்னர் நிலைமாறு கட்ட நீதி தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பல கடப்பாடுகள் நிறைவேறாமல் உள்ளது. மோதல் இல்லாத சமூகத்துக்கான சமாதானத்தை கட்டியெழுப்ப - ஆயுதப் போராட்டம் முடிந்த நிலையில் - யுத்தம் ஏற்பட்டதற்கான மூல காரணத்தை தீர்ப்பது அவசியம். வடக்கு - கிழக்கு மற்றும் தெற்கில் வன்முறையால் பாதிக்கப்பட்டோர் என்ற வகையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்ள குறிப்பான தேவைகளை கவனித்தல் சமூக, பொருளாதார உறுதிப்பாட்டுக்கு அவசியமானதாக தெரிகின்றது. இவ்வாறான உறுதிப்பாடு பொருளாதார வளர்ச்சி மற்றும் SDG 16யை நிறைவேற்றவும் சர்வதேச சட்டம் மற்றும் உலக கொள்கை என்பவற்றுக்கு அமைய ஸ்ரீலங்காவின் ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்ற உதவும். பூகோள கொள்கை இந்த யதார்த்தத்தை கவனத்தில் கொள்கின்றது. மேலும் தேவையாயின் நாம் வேறு இடங்களில் பார்க்க வேண்டும். ஒப்பந்த கடப்பாடுகளுக்கு மேலாக ஐக்கிய நாடு மனித உரிமைகள் பேரவையின் 2015இன் 30/1, 2017இன் 34/1, ஐக்கிய நாட்டு மனித உரிமை பேரவையின் தீர்மாகங்கள், GSP+ சலுகையை ஐரோப்பிய சந்தைகளுக்கு மீள பெறுவதற்கு ஏற்றுக் கொண்ட கடப்பாடுகளும் உள்ளன. இந்த கடப்பாடுகளை நிறைவேற்றுதல் தேசிய ஒருமைப்பாடு, சமநீதி மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை பலப்படுத்தி கூடுதல் முதலீட்டையும் கவரும்.

**4.3.2. வரக்கூடிய பொருளாதார சுற்றுச்சூழல் தாக்கங்கள்.**

**இடைவினைகள்:**

**பொருளாதாரம்:** சமுதாயங்களிடையேயான நல்லிணக்க குறைவும் நாட்டில் வளர்ந்து வரும் இன சமய முரண்பாடும் பல மக்களின் மனதில் உறுதியின்மை மற்றும் நிச்சயமின்மை ஆகிய உணர்வுகளை தோற்றுவிப்பதுடன் நீண்ட கால பொருளாதார முதலீடுகளை ஊக்கமிழக்கச் செய்கின்றன. இந்த நிலைமை பல இளைஞர்களை வெளிநாடுகளில் வேலை தேடவும் வெளிநாடுகளில் வசிக்கும் ஸ்ரீலங்கா பிரசைகளை நாடு திரும்புவதையிட்டு சிந்திக்க விடாமல் தடுத்தும் விடுவதனால் திறன்பெற்ற ஊழியத்தை மீண்டும் ஸ்ரீலங்காவுக்கு வரவிடாது தடுத்து விடுகிறது.

**4.3.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்**

நிலைத்திருக்ககக் கூடிய பொருளாதார, சமூக அபிவிருத்தியை இலகுவாக்க அவசியமான சமாதான சூழலை உருவாக்குவதற்கு ஒரு ஒருங்கிசைவான நல்லிணக்க தேசிய நிகழ்ச்சித் திட்டம் மிக முக்கியமானதாகின்றது. அமைச்சரவை ஏற்கெனவே ஒரு தேசிய நல்லிணக்க கொள்கையை ஏற்றுள்ளது. ஒரு திட்டவட்டமான வேலைத்திட்டத்தின் ஊடாக அதை செயற்படுத்துவது தற்போதைய தேவையாக உள்ளது. இவ்வாறான ஒரு திட்டம் கல்வி, ஊடகங்கள், சிவில் சமூகம் மற்றும் அரசியல் கட்சிகள் என்பவற்றை அடக்கிய பல்துறை நிகழ்ச்சித் திட்டமாக அமைய வேண்டும். அரசாங்கத்தின் மும்மொழிக் கொள்கை கல்வி, அரச நிறுவனங்கள் மற்றும் அரச ஊளியர்களூடாக வினைத்திறன் மிக்க வகையில் செயற்படுத்த வேண்டும். மொழிப் பிரச்சினைக்கு மேலாக இன – சமய முரண்பாடுகள் மற்றும் பெருமளவில் காணப்படும் சமூக, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளும் தீர்க்கப்பட வேண்டும். ஐக்கிய நாடு மனித உரிமை குழு 30/1 தீர்மானத்துக்கு அமைய உருவாக்கப்படவுள்ள நல்லிணக்க பொறிமுறைகள் நல்லிணக்க பொறிமுறையின் மிக முக்கியமான பகுதிகள் ஆகும். அவற்றுள் காணாமல் போனோருக்கான அலுவலகம் (OMP), ஒரு பிராயச்சித்த அதிகாரசபை, உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) மற்றும் விசேட நிதிப் பொறிமுறை என்பனவும் அமையும். இவை நீதி, நல்லிணக்கம் மற்றும் சட்ட ஆட்சி என்பவற்றை மேலோங்க செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.4. சமூக அரவணைப்பு

### 4.4.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

கல்வி, அடிப்படை ஆரோக்கிய கவனிப்பு, மற்றும் வேறு சேவைகள் என்பனவை நாடு பொதுமக்களுக்கு வழங்கினாலும் சந்தை சக்திகள் பல விடயங்களில் அசமத்துவத்தை உருவாக்கியிருப்பதுடன் கணிசமான மக்கள் பிரிவின் மீது குறிப்பாக கிராமிய, தோட்டத்துறை மக்கள் மீது பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களை கொடுத்து வருகின்றது. இதனால், பல விளிம்பு நிலை மக்கள் பிரிவினரிடம் பொருளாதாரம் மற்றும் சமூக வாய்ப்புகள் தொடர்பில் தாம் ஒதுக்கப்படுவது போன்று உணர்கின்றனர். பல படித்த கிராமிய இளைஞர்கள் தாம் பாதகமான நிலையில் இருப்பதாக தொடர்ந்து உணர்கின்றனர். இவர்கள் தமக்குள்ள குறைபாடுகளை சகல விதமான எதிர்ப்புகள் மூலம் வெளிப்படுத்த முனைகின்றனர். ஆரோக்கிய கவனிப்பு, தரமான கல்வி, கண்ணியமான வேலை என்பவற்றை பெறும் வழிகள் அசமத்துவமாக தொடர்ந்து பகிரப்படுகின்றது. எனவே, இந்த நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

### 4.4.2. வரக்கூடிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

**இடைவினைகள்**

**பொருளாதாரம்:** தற்போதைய சேவைத் துறை மற்றும் துறைசார துறை, பாதுகாப்பான, செழிப்பான வாழ்வாதாரங்களை மக்களின் பெரும் பகுதியினருக்கு மறுக்கின்ற திரிபுபட்ட பொருளாதார அமைப்பை உருவாக்கி உள்ளன. முறைசாரா துறை தொழிலாளர்கள் அன்றாடம் வாழ்க்கைக்கு போதுமான வருமானத்தை உழைக்கக் கூடும், ஆனால் சமூக பாதுகாப்புகளை பெறுவதற்கான வழிமுறைகள் போதிய அளவில் இல்லாதிருத்தலும், சுகாதாரம் கல்வி மற்றும் போக்குவரத்தின் அதிகரித்த செலவுகளும் அவர்களுக்கு சமூக விலக்கிவைப்பு மற்றும் ஒப்பீட்டு ரீதியான மறுப்பு எனும் உணர்வைக் கொடுக்கின்றன.

**சுற்றுச்சூழல்:** சந்தை சக்திகளால் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட குழுக்கள், கவனமாக கையாளப்பட வேண்டிய விடயங்கள் உட்பட சுற்றுச்சூழல் மூலவளங்களை ஆக்கிரமிக்கின்றன.

### 4.4.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தல்கள்

சமூக பாதுகாப்பின்மை மற்றும் புறந்தள்ளல் ஆகிய பிரச்சினைகளை கவனிக்க போதிய நிதிப்படுத்தலால் உதவி அளிக்கப்படும் சான்று அடிப்படையிலான கொள்கைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

## 4.5. சமநிலைப்பட்ட, அரவணைப்பு உள்ள பசுமை வளர்ச்சி (BIGG) (இது அறிமுகம் மற்றும் சுருக்க குறிப்பிலும் பேசப்பட்ட விடயம், பெட்டி B1)

### 4.5.1. தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைக்குரிய விடயங்கள்

பொருளாதார வளர்ச்சி என வரும்போது திறன் பெற்ற, திறன் பெறாத ஊழியத்தை ஏற்றுமதி செய்தல் உட்பட நகர மையப்பட்ட – ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சியிலேயே தற்போதைய கவனம் உள்ளது. வினைத்திறன் மிக்க வேலை, திறந்த வெளி, தூயநீர், புதுப்பிக்கப்படக் கூடிய வலு, உணவு உற்பத்தி, பொதுமக்கள் போக்குவரத்து என்ற வழிகளூடாகவே பசுமை மற்றும் அரவணைப்புள்ள அபிவிருத்தியை முன்னெடுத்து செல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.5.2. வரக்கூடிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

**இடைவினை:**

**பொருளாதாரம்:** நிலைத்திருக்கும் தன்மை மற்றும் பசுமை வளர்ச்சியை அளவிடும் நியமங்களின் அடிப்படையில் பண்டங்களின் உற்பத்தியும் சேவைகள் வழங்களும் மதிப்பிடப்படலாம்.

**சுற்றுச்சூழல்:** பண்டங்களின் உற்பத்தி பசுமை வேலைவாய்வு என்பவற்றின் மேம்பாடு என்பன இயற்கையான மற்றும் செயற்கையான சுற்றுச்சூழலுடன் நேரடியாக தொடர்புபட்டது.

### 4.5.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

குறிப்பிட்ட புதுப்பிக்க முடியாத மூலப்பொருட்கள் மற்றும் வலு மூலங்களை கட்டம் கட்டமாக குறைத்து பதிலாக பசுமைப் பொருட்களை பயன்படுத்த வேண்டிய தேவைப்பாடு புதிய உற்பத்தி முறைகளையும் புதிய சேவை வழங்களையும் தொடக்கும் வாய்ப்புகளை தரும். இது முடிந்தளவு விரைவாக ஆராயப்பட்டு பயன்படுத்தப்படுவது தேவையாகின்றது. நாட்டின சகல பகுதிகளிலும் கைவிடப்பட்ட நிலையில் உள்ள பெரிய அளவிலான காணிகள் பசுமை மூலப்பொருட்கள், மூலிகைகள் மற்றும் உணவு உற்பத்தியை உயர்த்த முழுப்பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படலாம்.

## 4.6. சமூகநீதி = உரிமை அடிப்படையிலானது (அடிப்படைத் தேவைகளினும் மேலானது)

### 4.6.1. தற்போதைய நிலைமை, சமகால பிரச்சினைகள், பிரச்சினைக்குரிய விடயங்கள்

நாட்டிலுள்ள பல மக்களுக்கு ஒரு சீவனோபாய மட்ட சம்பளம் அல்லது ஆகக்குறைந்த வருமானம், அடிப்படை சமூக சேவைகளை பெறுவதற்கான வழிவகை, முறையான சட்ட சேவைகள் கட்டுப்படியாகாத போது சட்ட உதவி அல்லது தமது மனித உரிமைகள் மீறப்படுத்துமிடத்து நீதி என்பன கிடைக்காது உள்ளன.

### 4.6.2. வரக்கூடிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்.

**இடைவினைகள்:**

**பொருளாதாரம்:** பொருளாதாரத்தின் தொழிற்படுகைக்கு சட்டத்தின் ஆட்சியும் மிக அவசியமானவை. சமாதானம், ஒற்றுமை மற்றும் மனத்திருப்தி என்பவற்றுக்கான அடிப்படையான பிரதான காரணி சமூக நீதியாகும்.

**சுற்றுச்சூழல்:** முன்னர் குறிப்பிட்ட விடயங்களில் சில இங்கு பொருந்தும்

### 4.6.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அமைப்பில் பல இடைவெளிகள் உள்ளன. இவற்றை இனம்கண்டு தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.7. அரசியலமைப்பு சீர்த்திருத்தமும் அதிகாரப் பகிர்வும் (இது இடைவெட்டும் கருப்பொருட்கள் என்பதன் கீழும் பேசப்பட்டது.

### 4.7.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

பல விடயங்களில் மத்தியப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டை குறைக்க ஆட்சிப் பொறுப்புகளை மாகான மற்றும் உள்ளூர் ஆட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான அரசியலமைப்பு சீர்த்திருத்தங்கள் தேவை. நாட்டின், சர்வதேச ஒப்பந்தம் மற்றும் SDGகளின் கடப்பாடுகள் உள்ள பின்புலத்தில் அடிப்படை உரிமைகள் விடயத்தில் பல இடைவெளிகள் உள்ளன. உள்நாட்டு நீதிமன்றங்களின் சமூக பொருளாதார உரிமைகள் தொடர்பான நியாயாதிக்கம் இன்னொரு பெரிய பிரச்சினையாகும்.

### 4.7.2. வரக்கூடிய பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்

இடைவினைகள்:

**பொருளாதாரம்:** பொது வளங்களின் பாதுகாவலன் என்ற வகையில் அரசாங்கத்தின் கடப்பாடுகளுக்கு, அரசியலமைப்பு சீர்திருத்தம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இது முழு மக்களினதும் சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்த அவசியமானது. பொருளாதார சமூக அபிவிருத்தியை சமநிலைப்படுத்தவும் இது தேவையாகும்.

**சுற்றுச்சூழல்:** பலவீனான கட்டுப்படுத்தல் பொறிமுறைகள் சுற்றுச்சூழல் வளங்களின் துர்ப்பிரயோகத்துக்கு இட்டுச் செல்லும். இது பின்னர் சுற்றுச்சூழல் தரக்கேட்டுக்கும் உயிர் பல்வகைமை இழப்புக்கும் கொண்டு செல்லும்.

### 4.7.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

அடிப்படை உரிமைகள் மீதான அத்தியாயம், சர்வதேச ஒப்பந்த கடப்பாடுகள் மற்றும் SDGகள் தொடர்பான கடப்பாடுகளுக்கு அமைய பலப்படுத்த வேண்டும். சமூக பெருளாதார உரிமைகள் மீதான நீதி பெறுதலுக்கு ஏற்பாடுகள் அவசியமாகும். அரசாங்க நடவடிக்கைகளை கண்காணிக்கவும் அரசல்லாத வேறு செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்கவும் சுயாதீன குழுக்களை நியமித்து ஜனநாயக மற்றும் பொறுப்புக் கூறும் ஆளுகை பலப்படுத்த வேண்டும். இதே சமயம் சட்டமா அதிபர் அலுவலகம் மற்றும் பொது நிர்வாகம் உட்பட நீதித்துறை மற்றும் சட்ட அமுலாக்கல் முகவகரகங்களின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்படும். தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க விடயங்களில் வேலை செய்யும் அரசு மற்றும் அரசு சாராத நிறுவனங்களை பலப்படுத்தல் - சமாதானம் மற்றும் ஒற்றுமை என்பவற்றை இலகுவாக்கும். இது சகல பிரசைகளினதும் பாதுகாப்புக்கும் ஏனைய நலன்களுக்கும் முதல் தேவையாகும். குற்றச் செயல் விசாரணைகளில் சித்திரவதை பயன்பாடு முற்று முழுதாக அனுமதிக்கப்படாததாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்ம். பல நிறுவனங்களின் நல்ல முறையான செயற்பாட்டை கெடுத்துள்ள – சமூகத்தில் சமநீதியின்மையை பலப்படுத்தியுள்ள ஊழலை தொடர்புபட்ட நிறுவனங்களுக்கு சுயாதீனமான, வாண்மைமிக்க விசாரணைகள், வழக்குகளை நடத்த போதிய வளங்களை கொடுப்பதனால் ஒழிக்கலாம். ஊழல் தொடர்பில் விசாரிக்கப்படும் மற்றும் ஊழல் செய்தவராக குற்றம் காணப்பட்டவர்கள், அரசாங்க பதவியை வகிக்க அல்லது கோருவதற்கு தடை விதிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.8. சமூகபாதுகாப்பு

#### 4.8.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

சமூக பாதுகாப்பு போதிய அளவில் இன்மை ஒரு பெரும் சவாலாக உள்ளது. பெரும்பான்மையான மக்கள் இந்த பிரச்சினையுடன் நாளாந்தம் கூட போராட வேண்டியுள்ளது. ஒழுங்கான வருமானம் இன்மையாள் இளைப்பாற முடியாமல் உள்ளனர். பல வலுவிழந்தோர் வீதிகளில் பிச்சை எடுக்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். அல்லது உதவி கேட்டு வீடுவீடாக செல்கின்றனர். நல்ல முறையாக வடிவமைக்கப்பட்ட ஆரோக்கிய காப்புறுதி கொள்கையால் வறிய மக்கள் துன்பப்படுகின்றனர். போதியதாக இல்லாத அரச ஆதரவால் சிறுவர்களும் உணவு மற்றும் தேவைகளுக்காக பிச்சை எடுக்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர். பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பரவலாகக் காணப்படும் வன்முறை அவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளை பாதிப்பது மட்டுமன்றி அவர்களுக்கு கிடைக்க வேண்டிய வாழ்கை வாய்ப்புகளையும் மறுக்கின்றன. இது அதிகமாக சமூக பொருளாதார தள்ளிவைப்புக்கு இட்டுச் செல்கின்றது.

#### 4.8.2. வரக்கூடிய பொருளாதார, சுற்றுச்சூழல் தாக்கங்கள்

இடைவினைகள்:

**பொருளாதாரம்:** பொருளாதாரம் ஒழுங்கான வேலைகளை உருவாக்குவதில்லை. இதனால் மக்கள் மேலும் மேலும் முறைசாரா, மற்றும் சமயோசித்த வேலைகளுக்கு போக நிர்பந்திக்கப்படுகின்றனர். இவ்வாறானோர் நல்ல வேளையில் உள்ளோரின் அரைப்பங்கிலும் கூடுதலாக உள்ளனர். பெரும் கம்பனித்துறையின் கட்டமைப்பு இந்த குறைபாடுகளை நிவர்த்திக்கும் வகையில் புனரமைக்கப்பட வேண்டும்.

#### 4.8.3. பரிகாரங்கள், ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்கள்

முதியோருக்கு இளைப்பாற்று சம்பளம் வேலை வாய்ப்பு, வருமான பாதுகாப்பு, வலுவிழப்புக்கு உதவி, சிறுவருக்கான நன்கொடை மற்றும் தேசிய ஆரோக்கிய காப்புறுதி என்பன வழங்கப்பட வேண்டும். பெண்கள் மற்றும் பிள்ளைகளுக்கு எதிரான வன்முறைப் பிரச்சினையை தீர்க்க சட்ட அமுலாக்கல் மற்றும் தேசிய/குற்றச்செயல் நீதி முறைமை என்பவற்றால் வினைத்திறன் மிக்க ஏற்பாடுகள் செய்யப்பட் வேண்டும்.

### 4.9. கண்ணியமான வேலை

#### 4.9.1. சமகால நிலைமை, பிரச்சினைகள் பிரச்சினையுள்ள விடயங்கள்

வேலை வாய்ப்பு பெற்றோரில் கணிசமான பகுதியினர், கழிவகற்றல், கழிவு சேகரித்தல் பாரமான பொருட்களை ஏற்றி இறக்குதல் சுத்தம் செய்தல், சுரங்கத் தொழில், சுற்றுச்சூழல் சேவைகள் போன்ற அழுக்கான ஆபத்தான வேலைகளில் ஈடுபடுகின்றனர். அநேகமான மக்கள் இது போன்ற வேலைகளில் கல்வி மற்றும் வேறு தகைமைக் குறைவாக இருப்பதனால் போய்ச் சேர்கின்றனர். இருப்பினும் அவர்கள் செய்யும் பணி ஏனையோரின் நலனுக்கு மிக முக்கியமானவை. இதனால் அவர்களுக்கு நல்ல வேலைச் சூழலை உருவாக்கவும், அவர்களின் கௌவரத்தை அதிகரிக்கும் ஏற்பாடுகளை செய்யவும் வேண்டிய தேவை உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4.9.2. வரக்கூடிய பொருளாதார சுற்றுச்சூழல் தாக்கங்கள்

**இடைவினைகள்:**

**பொருளாதாரம்:** நாட்டின் பொருளாதாரத்தின் தற்போதைய கட்டமைப்பு எந்த சமூக நலன்களும் இல்லாத – ஒழுங்கில்லாத பாதுகாப்பற்ற வேலைகளில் தங்கியிருக்க பல மக்களை கட்டாயப் படுத்தியுள்ளது. எனவே, சமூக பாதுகாப்புடன் கூடிய கண்ணியமான வேலைகளை உருவாக்கும் வகையில் பொருளாதாரக் கட்டமைப்பு புனரமைக்கப்பட வேண்டும்.

**சுற்றுச்சூழல்:** மேலே விவரிக்கப்பட்ட வேலை, சுற்றுச்சூழல் தராதரத்தை பேணவும் சூழல் மாசடைதலை ஒழிக்கவும் முக்கியமானது. இக்காலத்தில் உடலினால் செய்யப்படும் பாதுகாப்பற்ற சிலவற்றை குறைக்க அல்லது இல்லாமலேயே செய்ய தொழில்நுட்ப தீர்வுகளின் அபிவிருத்தி மற்றும் இயந்திரப் பாவனை என்பவை உதவ முடியும்.

### 4.9.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தல்கள்

சுகாதாரம், பாதுபாப்பு தொழிலாளர் நலன் மீது இவ்வாறான வேலைகளின் தீய விளைவுகளை குறைக்க அல்லது அகற்ற தொழில்நுட்பம் மற்றும் நவீன வேலைக் கருவிகள், உபகரணங்கள் என்பன அறிமுகம் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார சுற்றுச்சூழல் சமூக நிலைத்திருப்பு

# C5

## C5. நிலைத்திருக்கும் தன்மை கண்ணோட்டம் - 2020 மற்றும் அப்பால்

### 5.1 பொருளாதாரம்

ஸ்ரீலங்காவின் சமகால கொள்கைச் சட்டகம் - "ஐந்து அம்ச திட்டம்: 60 மாதங்களில் ஒரு புதிய நாடு" 2015இல் அரசாங்கம் முன்வைத்த அபிவிருத்தி பற்றிய ஒட்டுமொத்த தொலை நோக்கால் வடிவமைக்கப்படுகின்றது. ஐந்து அம்ச திட்டத்தின் (FPP) கீழ் அபிவிருத்தியின் ஐந்து இலக்குகள் அடங்கியுள்ளவை.

(1) ஒரு மில்லியன் வேலை வாய்ப்புகள் உருவாக்குதல் (02) வருமான மட்டத்தை உயர்த்தல் (03) கிராமிய பொருளாதாரங்களின் அபிவிருத்தி (04) கிராமிய மற்றும் தோட்டத்துறைகள், நடுத்தர வர்க்கம் மற்றும் அரசாங்க ஊழியர் ஆகியோரின் நிலவுடமையை உறுதி செய்தல் (05) விசாலித்த மற்றும் ஒரு பலமான நடுத்தர வகுப்பை உருவாக்கல் [தேசிய திட்டமிடல் திணைக்களம் (DNP), 2016]. இந்த இலக்குகள் அரசாங்கத்தின் ஆகவும் பிந்திய "தொலைநோக்கு 2025" கொள்கை ஆவணத்தில்[18] மீள வலியுறுத்தப்படுகின்றது. இது செப்டம்பர் 2017இல் வெளியிடப்பட்து. இந்த நாட்டை கூடுதல் போட்டித் தன்மையானதாக செய்வதையும் சகல ஸ்ரீலங்கா பிரசைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் செய்வதற்கான சீர்திருத்த தொகுதிகளை குறித்துரைக்கின்றது. இந்த கொள்கை ஆவணங்களில் முன்வைக்கப்பட்ட இலக்குகள் SDGகளுடன் பல பொது தன்மைகளை கொண்டுள்ளன. இதன் காரணத்தால் இனி வரும் வருடங்களில் கணிசமான பொருளாதார முன்னேற்றத்தை சாதிப்பதற்கான வாய்ப்பை தன்னகத்தே கொண்டுள்ளது.

சமகால பொருளாதார நிலை மற்றும் பிரச்சினைக்குரிய விடயங்கள் (ஒவ்வொரு முக்கியமான பிரச்சினை என்பதன் கீழ் எடுத்தாளப்பட்டவாறு) மற்றும் அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சி நிரல் என்ற பின்னணியில் - குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்கு நாடு கடைப்பிடிக்க விரும்பும் பல நடவடிக்கைகளை DNP இனம் கண்டுள்ளது. இவற்றுல் அநேகமானவை தொலைநோக்கு 2025 ஆவணத்தில் பிரதிபலிக்கின்றன. அட்டவணை 1 பொருளாதார செழிப்பு மற்றும் தற்போதைய மற்றும் 2020இலும் அப்பாலும் வரக்கூடிய நிலைமை என்பவற்றுக்கான வெவ்வேறு சுட்டிகளுக்காக எடுக்கப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்ட குறுங்கால மற்றும் நடுத்தர கால நடவடிக்கைகளின் சுருக்கக் குறிப்பை (overview) தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1.அடைக்கூடிய பொருளாதார சுபிட்சம்

| குறிகாட்டி | முன்வைக்கப்பட்ட நடவடிக்கைகள் | 2016 இன் நிலை | 2020 இன் அடைவ |
|---|---|---|---|
| GDPயின் வளரச்சி | மரியாதைக்குரிய தொழில் உருவாக்க நிலை ஊக்குவித்தல் திறன் அபிவிருத்தி மூலம் தொழில் உற்பதியினை அதிகரித்தல். ஓய்வூதிய திட்டடத்தினை அபிவிருத்தி செய்தலும் ஒன்று சேர்த்தலும் (அனைத்து ரொழிலாளர்க்குமானது.) திறமையான தொழிளாலர்களை ஊக்குவித்தல்.புதிய சந்தையை விரிவுப்படுத்தல். | 4.4%<br>ஐ.அமெ டொலர் 3835 | 7%<br>ஐ.அமெ டொலர் 5797 |
| பொதுத்துறை முதலீடு | பொது சமூக பொருளாதார திட்டங்கள், அத்தோடு உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நேரடி முதலீடானது.நேரடியான உற்பத்தி மற்றும் இலாப நோக்குடைய வியாபாரர்களை கருத்திற் கொள்ளல். | GDP 5.2% | GDP 5.3% |
| துனியார் முதலீடு | | GDP 25.1% | GDP 25.8% |
| வரவு செலவு திட்டப்பற்றாக்குறை | அரசதுறை வருமானங்களை அதிகரிக்க வரி நிர்வாகத்தினையும அதனோடு இணைந்த துநையயளையும் மறுசீரமைத்தல். நியமன அரச செலவீனங்களை குறைக்கும் முகமாக வீனாக்கும் மற்றும் நேர்மையான விடயங்களை குறைத்தல், உற்பத்திகளை ஊக்குவித்தல்.விசேட மற்றும் சந்தை பல்வகைமை தன்மை | GDP இல் -5.4% | GDP இல் -3.5% |
| நடைமுறை கணக்கு மீதி | வேளிநாட்டு வர்த்தகத்துறை பொறுப்புக்கூறும் வகையில் நடைமுறைப்படுத்தல் ஏற்றுமதி இறக்குமதி சுங்கவரி தொடர்பில் பல்வகையான தளர்வுகள். மீள் திருத்தல் மற்றும் புதிய வெ.வி.ஒ.களைப் சக்திமிக்க முறையில் ஆசிய பொருளாதாரங்களில் உட்படுத்தல். | GDP இல் -2.4% ஏற்றுமதி அ.டொ 10 பில்லியன் | GDP இல் 2.2% ஏற்றுமதி பெறுமதி அ.அமா 20 பில்லியன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| குனுஐ வெளிநாட்டு நேரடி முதலீடு | வியாபார ஒழுங்குவழிகளை மற்றும் நடைமுறை சுற்றாடல் மேம்படுத்தல். மீள்வடிவமைக்கப்படட ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனங்களை வடிவமைத்தல்.<br><br>குறைந்த வரி மற்றும் ஏற்றுமதி இறக்குமதி சுங்கவரியுடன் கூடிய வகையில் வியாபார சுற்றாடலை எளிமைப்படுத்தல் மற்றும் வெளிபபடையான நிர்வாக ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளல்.<br><br>ஆடையாளப்படுத்தப்பட்ட மற்றும் தாமதங்களை அகற்றுதல் போன்ற சிக்கலான நிலைகளிலிருந்து கணிகுத்தகைக் காரர்களை இலகுப்படுத்தல். சிறு கைதொழில் ஏற்றுமதியாளர்களை ......................... இணைத்தல். | வியாபார தரம் 110 | ஆடையக்கூடிய தரம்7. ந்கு குறைவு |
| கட்டுமானப்பணிகள். | முறையான போக்குவரத்து வலையமைப்பினை உருவாக்கல் நகரங்களை மாநகரங்களை இணைத்தலும் ஒன்று சேர்த்தலும் பொருளாதார நிலைகளை மற்றும் கிராமிய தளங்களை அமைத்தல் | | சிறந்த பாதை வலைமைப்புக்கள். |
| | பொது போககுவரத்து பங்களிப்பு பிராயாணிகள் இடம்பெயர்வினை அதிகரித்தல். | 58% | 65% |
| புத்தாக்கம் | தொழில்நுட்ப மற்றும் ஆராட்ச்சி தொடர்பில் முதலீடுகளை அதிகரித்தல் | ரூபாய் மில் 3195 | ரூபாய் மில் 4961 |
| விவசாயம்<br><br>SDG 1<br><br>SDG 2<br><br>FPP 2 | தேசிய உணவு உற்பத்திட்டத்திற்காக முதலீடு,விவசாய பாரிய வலங்களை உருவாக்கல், பெறுமதி சார் அபிவிருத்தி சங்கிலினை உறுதிப்படுத்தல். விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரச் சபை உருவாக்கல், விவசாய நவீன மயப்படுத்தப்பட்ட அதிகாரச் சபையினை உருவாக்க அத்தோடு விவசாயினை மையப்படுத்திய பாரிய விவசாய, கூட்டுறவு நிவனங்களை உருவாக்குதல். தனியார் துறை பங்குப்பற்றுதலை மற்றும் அதனுடன் நவீனமையப்படுத்தப்பட்ட துறையினை முன்னெடுத்தல். | ரூபாய் மில் 11680 | ரூபாய் 18,135 |
| மீள் தன்மையுள்ள விவசாய நடைமுறைகள் | பலன் அளிக்கும் உற்பத்திகள் மற்றும் புதிய கலப்பினை கூடிய அறுவடையினை பெற்றுக்கொடுக்கும் உற்பத்தி இளஞர்களுக்கு மூதலீடுகளை மேற்கொள்ளல். | ரூபாய் மில் 2779 | ரூபாய் மில் 2976 |
| | விதை மற்றும் நாற்று வகைகளை கொண்டு விதை பயிர்ச்செய்யும் பண்ணைகளுக்கு முதலீ செய்தல் | ரூபாய் மில் 480 | ரூபாய் மில் 913 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்வரிகளை அதிகரித்தல், அரச இறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16 சதவீதமாக அதிகரித்தல், மிதக்கும் அந்நிய செலவாணி மாற்றுவீதத்தை அனுமதித்தல் ஆகிய முன்னைய உறுதிப்பாடுகளையும் தொலைநோக்கு 2025 மீள வலியுறுத்துகின்றது. இதற்கு மேலாக முன்னோக்கிய பொறுப்பு முகாமை தந்திரோபாய முறையுடன் தொடர்பு படுத்தி அரச இறை பலப்படுத்தல் முயற்சிகளூடாக கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதத்தை 2020இல் தற்போதைய 79 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக குறைக்கலாம் என கருதப்படுகின்றது. வர்த்தக சீராக்கள் நிகழ்ச்சி நிரலுடன் இணைந்து தற்போது இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனாவுடனான வர்த்தக பேச்சு வார்த்தைகள் தொடரும். இவற்றுள், உள்நாட்டு நிறுவனங்கள் மீதான போட்டியின் பாதகங்களை குறைப்பதற்கு தள்ளிவிடுதல் எதிர் (anti-dumping) சட்டங்களை அமுலாக்கலும் அடங்கும்.

சமகால பொருளாதாரத்தில் உள்ள நிச்சயமின்மைகளின் பின்னனியில் எதிர்காலம் பற்றிய விஞ்ஞான ரீதியான எதிர்வு கூறல்களை செய்வது பெரும் சவாலான காரியமாகும். விரும்பப்பட்ட இலக்கை அடையும் வகையில் சுட்டிகள் நகராதவிடத்து தேவையான பரிகார நடவடிக்கைகளை எடுப்பதும் முன்னேற்றத்தை கண்காணிப்பதும் முக்கியமானது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை எய்தும் வாய்ப்பை ஆகவும் கூடியளவுக்கு கொண்டு செல்ல உலக பொருளாதாரத்துடன் ஸ்ரீலங்கா தனது பெருளாதாரத்தை ஒன்றினைப்பது அத்தியாவசியமானது ஆகும். இதை பலப்படுத்தப்பட்ட வர்த்தகம் மற்றும் நிதி ரீதியான தொடர்புகள் மூலம் செய்யலாம். இதோடு கூட வறியோரையும் நலிவுற்ற பிரிவினையும் பாதுகாக்க போதிய ஏற்பாடுகளை செய்வதில் கவனம் செலுத்துதல் - தொலைநோக்கு 2025இல் கூறப்பட்டவாறு வளர்ச்சி அரவணைத்துப் போவதை உறுதி செய்யும் ஸ்ரீலங்காவை உயர் நடுத்தர வருமான நாடு என்ற நிலைக்கு உயர்த்த தேவையான உயர்ந்த அளவு பொருளாதார வளர்ச்சி வீதத்தை பெறுவதற்கு தடையாக உள்ளவற்றை அகற்ற – முன்னைய பிரிவுகளில் கூறப்பட்டதைப் போல - அரச இறை, வர்த்தகம், முதலீடு மற்றும் ஊழியச் சந்தைக் கொள்கைகள் ஆகியவற்றிலும் சீர்த்திருத்தங்கள் அவசியம். கூடுதல் யதார்த்தமான அடக்கமான 5 சதவீதம் என்பதை அண்டிய பொருளாதார வளரச்சிக்கு அமைய, மொத்த உண்ணாற்று உற்பத்தி தற்போதைய 81.3பில்லியன் அமெரிக்க டொலர் (2010இன் நிலையான விலைகளில்[20] USD79.7) என்பதிலிருந்து 2025 இல் USD124 பில்லியனாக அதிகரிக்கும். இது 2030இல் USD158 பில்லியன் ஆகும். இனி வரும் காலங்களில் மாறாத சனத்தொகை வளர்ச்சி வீதம் 1.1 என எடுத்துக் கொண்டால் ஸ்ரீலங்கா 2024இல் USD5000 எனும் தலைக்குரிய வருமானத்தை தாண்டும். இது 2025 அளவில் USD 5,285, 2030[21] அளவில் USD 6,386 ஆகும்.

இவ்வாறான வளர்ச்சிப் போக்கு 2025 இல் ஸ்ரீலங்காவை தென் கிழக்கு ஆசியாவின் தாய்லாந்து பசுபிக்கின் பிஜி, ஆபிரிக்க பிராந்தியத்தில் தென் ஆபிரிக்கா, தென் அமெரிக்காவில் கொலம்பியா போன்ற உயர் நடுத்தர வருமான நாடுகளுடன் ஒப்பிடக் கூடிய மட்டத்துக்கு கொண்டு செல்லும். 2030 இல் ஸ்ரீலங்காவின் தலைக்குரிய GDP, உயர் வருமான நாடுகள் தவிர்ந்த கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக்கில் உள்ள நாடுகளின் சராசரியை ஒத்ததாக ஆகிவிடும். அந்த நாடுகளில் உள்ள நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி பிரச்சினைகள், வரக் கூடிய நன்மை தீமைகள் என்பவை 2025 மற்றும் 2030இல் ஸ்ரீலங்கா முகம் கொடுக்க கூடிய பொருளாதார பிரச்சினைவகைகளை சுட்டிக் காட்டுவனவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.2. சுற்றுச்சூழல்

SDGsகள் மற்றும் வேறு தேசிய பசுமை கொள்கை நிகழ்ச்சி நிரல்களின் அமுலாக்கத்தின் காரணமாக 2030இல் ஸ்ரீலங்கா சூழல் மாசடைதல் இல்லாத சுத்தமான சுற்றுச்சூழலுடன் அதன் மக்களுக்கு உயர்தரமான வாழ்வு மற்றும் அரவணைப்புள்ள வளர்ச்சியை உடையதாக இருக்கும். பசுமை வளர்ச்சி அரவணைப்பு உள்ளதாகவும் பசுமை வளர்ச்சி அரவணைப்புடையதாக இருப்பதையும் சுற்றுச்சூழல் நிலைபேறுமை சமநீதி மற்றும் வறுமை ஒழிப்பு என்பவற்றை விலையாகக் கொடுத்து அடையப் பெறாததாக இருப்பதையும் உறுதிசெய்ய குறிப்பான கொள்கைகளும் எத்தனங்களும் தேவையாகும்.

சமூகரீதியாக சமநீதியானதாக சுற்றுச்சூழல் ரீதியாக வலுவானதாக சமாதானம், உறுதிநிலை உள்ளதான நிலைபேறான வளர்ச்சியை அடையும் தொலை நோக்குடன் இந்த நாடு ஒரு தேசிய நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்தி தந்திரோபாயத்தை நோக்கி முன்னேறுகின்றது. இதற்கும் மேலான முயற்சியாக – காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப இசைவாக்கத்துக்கும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பதற்குமாக ஸ்ரீலங்கா மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சினூடாக நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்காக நீல பசுமை (Blue Green) அபிவிருத்திக்கான தந்திரோபாயத்தை அண்மையில் ஊக்குவித்தது. ஸ்ரீலங்கா பல சுற்றுச்சூழல் முன்னெடுப்புகளையும் தானாகவே வகுத்துக் கொண்ட இலக்குகளையும் கொண்டுள்ளது. இவை நல்ல சாதனங்கள் ஆகும். விவசாயத்தை சேதனமாக்கல், 35 சதவீத மூடல் காடு உருவாக்கல், 2020 அளவில் மின்சாரத்தின் 20 சதவீதத்தை உருவாக்க புதுப்பிக்கக் கூடிய வலுவை பயன்படுத்தல் வீடுகளுக்கும் வர்த்தக கட்டடங்களுக்கும் சூரிய சக்தி மின் வழங்கல் (net-metering) நிகர மின் அளவீடு என்பவை அதிமேதகு ஜனாதிபதியின் முன்னெடுப்பால் வகுக்கப்பட்ட இலக்குகளுக்கு உதாரணமாகும். தேசிய மாகாண மற்றும் உள்ளூர்மட்டத்தில் கொள்கைகளையும் விதிகளையும் அமுலாக்கவென நிறுவப்பட்ட பல திணைக்களங்களும் நிறுவனங்களும் உள்ளன.

ஆயினும் மேற்கூறிய நோக்குகளை அடைவதற்கு தடையாக உள்ளவற்றை அடையாளம் கண்டு அகற்ற வேண்டும். திணைக்களங்கள் நிறுவனங்கள் இடையேயான பலவீனமான தொடர்பாடல், ஒத்திசைவு அடங்கலான பல பிரச்சினைகள் காரணமாக கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளை அமுலாக்கள் பலவீனமாக உள்ளது. இந்த பலவீனங்கள் நிதி, பௌதீக மற்றும் மனித வளங்கள் வீணடிக்கப்படுவதற்கு காரணமாகின்றன. எனவே திணைக்களங்கள் இடையிலான, நிறுவனங்கள் இடையிலான ஒத்திசைவை முன்னேற்றுவதற்கான ஒரு தெளிவான பொறிமுறையை இந்த நாடு விருத்தி செய்ய வேண்டும். இது கொள்கை சட்டகத்தை வினைத்திறனுடன் நடைமுறைபடுத்துவதற்கான முன் தேவையாகும். மேலும் பசுமை கொள்கைகள் திட்டங்களின் அமுலாக்கம், அபிவிருத்தி என்பவற்றில் பங்குதாரர்களின் கூட்டு, ஒத்துழைப்பு என்பவற்றை செயற்பட வைத்தல் அவசியமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[20]உலக வங்கி 2017 உலக அபிவிருத்தி சுட்டிகள். இந்த கணிப்பீடுகள் நியமான கூட்டு வருட வளர்ச்சி வீத வாய்ப்பாட்டின் அடிப்படையின் கீழ் செய்யப்பட்டது. எதிர்கால GDP மட்டம் $x(1+r)^n$ ஆள் தரப்படுகிறது. இங்கு x தற்போதைய தற்போதைய GDP மட்டம், r என்பது GDP வளர்ச்சி வீதம் மற்றும் n என்பது ஆண்டுகளின் எண்ணிக்கை.

தேசிய நிகழ்ச்சி திட்டங்களில் தனியார்துறை மற்றும் சிவில் சமூகத்தை உற்சாகமாக ஈடுபட செய்ய சகல அரசாங்க நிறுவனங்களையும் பயன் படுத்தும் தேவை உள்ளது. அதனை நிதி சார்ந்த, நிதிசாரா ஊக்குவிப்புகளால் செய்ய முடியும்.

சுகாதாரம், திண்மகழிவு முகாமை, விவசாயம், போக்குவரத்து என்பன உடனடிக் கவனிப்பு தேவையான முக்கிய விடயங்களாக உள்ளன. ஒரு ஆரோக்கியமான நாடாகுவதற்கு எமது சுற்றுச்சூழல் சுத்தமாக இருப்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். இது அதிகூடிய முன்னுரிமைக்கு உரிய விடயமாகி விட்டது. திண்ம கழிவு முகாமை நகரங்களில் ஒரு கடுமையான அவசரமான பிரச்சினை ஆகிவிட்டது. கழிவு உருவாகும் இடத்திலேயே அவற்றை வகை ரீதியாக பிரித்தெடுக்க சமுதாய அடிப்படை நிறுவனங்கள் (CBOs) மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் (NGOs)களின் ஆதரவை – விழிப்புணர்வு மற்றும் பயிற்சி ஊடாக பெற்று சமுதாயத்தை ஈடுபடுத்தல் - திண்ம கழிவு முகாமையில் பிரதான தந்திரோபாயமாக அமையப் போகின்றது. பங்குபற்றல் ஊடாக வரும் நம்பிக்கை திண்மகழிவு முகாமைத்துவத்தில் உதவிக்கு வருவதற்கு ஊக்கமளிக்கும்.

பிரித்தெடுக்கப்பட்ட கழிவுகளிலிருந்து மூலவளங்களை மீட்பதற்கான தொழில்நுட்பத்தை தனியார் துறையூடாக மேற்கொள்ளலாம். பிளாஸ்டிக், கடதாசி, இறப்பர், துணி, கண்ணாடி மற்றும் உலோகங்களை மீள் சுழற்சி செய்யும் நிறுவனங்களை தொடக்கவும் அல்லது தற்போதுள்ள நிறுவனங்களை பெருப்பிக்கவும், சிறிய நடுத்தர கைத்தொழில்களுக்கு (SMEs) ஊக்குவிப்பு மற்றும் (green credit) பசுமைப் புள்ளி வழங்குதல் வழிவகுக்கும். SMEகள் கூட்டெடு, உயிர்வாயு உற்பத்தி நிறுவனங்களை சிறிய அளவில் தொடக்கலாம். இது இரசாயன பசளைக்கு பதிலாக சேதனை உரத்தை பயன்படுத்த ஊக்கமளிக்கும். உயரளவு முதலீடு மற்றும் நிறுவ நீண்ட காலம் எடுக்கும் சுகாதார நிலம் நிரப்புகைகள் மற்றும் கழுவிலிருந்து வலு பெறும் செய்திட்டங்கள் போன்ற நீண்டகால தீர்வுகள் - வேறு வகை கழிவுகளுக்கு தேவையாயின் பின்னர் புகுத்தப்படலாம்.

பெறுநர்களுக்கு தரமான தீர்வை வழங்குவதில் சகல பங்குதாரரினதும் கண்ணோட்டங்களையும் சேர்த்துக் கொள்ளும் - வினைத்திறன் மிக்க பல்துறை அனுகுமுறையை CKDuயை இல்லாது செய்தல் அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்வை உறுதிப்படுத்தும் விவசாய இரசாயனங்கள் இரசாயன உரம் என்பவற்றுக்கு பதிலாக இயற்கை பசளை மற்றும் உயர் இயக்க கமத்தொழில் முறைகளை புகுத்துவது CKDu போன்ற எதிர்கால அனர்த்தங்களை நிரந்தரமாக ஒழித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேதனை விவசாயத்தின் இன்னுமொரு பெரிய நன்மை யாதெனில் அது விவசாய நடவடிக்கைகளால் வரும் நீர் மாசடைதலை குறைத்தலாகும். நீர் நிலைகளின் மாசடைதல் காரணமாக தீய விளைவுகளை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். கடந்த 15 வருடங்களுக்கு மேலாக தாமதப்பட்டுவிட்ட கழிவு நீர் வெளியீட்டு கட்டண முறை – வணிக நிறுவனங்கள் தமது நீர் நுகர்வையும் கழிவு நீர் வெளியேற்றுவதையும் குறைப்பதை உறுதிப்படுத்தும். சுத்தமான நீரின் பெறுமதி மற்றும் அதனை பாதுகாப்பதன் அவசியம் என்பவை தொடர்பாக பாடசாலை மட்ட விழிப்புணர்வு உருவாக்கம் எதிர்கால சந்ததியினர் கூடுதல் பொறுப்புணர்வுடன் நடக்கச் செய்யும்.

வாகன போக்குவரத்து வழி மாசடைதலுக்கு பிரதான பங்களிப்பை செய்கின்றது. பாரமற்ற ரயில் போக்குவரத்து முறை (LRT)களுடன் மாசடைதல் இல்லாத போக்குவரத்து நீண்ட காலத்தில் வாகன நெருக்கடியையும் வழி மாசடைதலையும் குறைக்கும். பெருநகர மற்றும் நகரங்கள் அமைச்சு தற்போதைய போக்குவரத்து கோலத்தை மாற்றுவதற்கான நீண்டகால திட்டத்தை கொண்டுள்ளது. பஸ்களுக்கான வேகமான தனி ஓடுபாதைகள் மற்றும் முக்கிய சந்திகளில் மேம்பாலங்களை அமைத்தல் போகிய குறுங்காலத் திட்டங்கள் வாகன போக்குவரத்து பிரச்சினை மற்றும் வளி மாசடைதலை குறைக்கும். தனியார் துறைக்கு வரிச் சலுகைகள் மற்றும் வேறு ஊக்குவிப்புகளை கொடுப்பதனால் மின் கார்கள் பயன் படுத்தல் மற்றும் சூரிய மின்கல மின்னேற்ற நிலையங்களை அமைத்தல் வழி மாசடைத்லை குறைக்கும். பல்வேறு நிதிசார்ந்த மற்றும் நிதிசாரா ஏற்பாடுகள் மூலம் சுவட்டு எரிபொருளை போக்குவரத்து, கைத்தொழில் மற்றும் மின் உற்பத்திக்கு பயன்படுத்துவதை குறைப்பதற்கான அரசாங்கத்தின் தந்திரோபாயங்கள் எமது வளியின் தராதரத்தை மேலும் மேம்படுத்தும்.

வர்த்தக பகுதிகளில், தற்போதுள்ள கைத்தொழில்கள், வீட்டுத் திட்டங்கள் மற்றும் கூட்டு ஆதனங்கள் என்பவற்றுக்கான UDA திட்டத்தின்படி வலய ரீதியான ஏற்பாடுகளை செயற்படுத்தல் வினைத்திறன் மிக்க நிலப் பயன்பாடுக்கான பிரதான தேவைகளாக இருக்கப் போகின்றன. அரசாங்க கட்டடங்களுக்கான பசுமை கட்டட வழிகாட்டல்கள், முன்மொழியப்பட்டுள்ள பசுமை அரசாங்க கொள்வனவுத் திட்டம், சூழல் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் என்பவற்றின் அமுலாக்கம், அரவைனைப்புள்ள சமுதாய ஈடுபாட்டுடன் பசுமை பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க போகின்றன.

எதிர்காலத்துக்கான சுற்றுச்சூழல் தொலைநோக்கு சுத்தமான மற்றும் பசுமை நாடாகும். வருங்கால பிரசைகளான சமகால பாடசாலை மாணவர்களின் பங்கேற்றம் மிக மிக முக்கியமானது ஆகும். விழிப்புணர்வை ஏற்படுத்தல், பயிற்சி, சுற்றுச்சூழல் தொடர்பான செய்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் அவர்களை மாற்றத்தின் சம்பியன்களாக வலுவூட்டும்.

2020 தொலைநோக்கு – அரசாங்கத்துறை, தனியார்துறை விசேடமாக பாடசாலை மாணவர்கள் உட்பட சகல குழுக்களையும், விழிப்புணர்வு, பயிட்சி, மற்றும் ஊக்குவிப்பு மூலமாக இணைத்துக் கொள்ளல் மற்றும் சகல செயல்களையும் 2030 தொலைநோக்கு நோக்கிய அடியாக முன்னெடுத்தல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5.3 சமூகம்

2020 மூன்று வருடம் மட்டும் தள்ளி உள்ளது. இவ்வளவு குறுகிய காலத்தில் தற்போதைய சூழலில் பாறிய மாற்றங்களை எதிர்பார்ப்பது யதார்த்தமானது அல்ல. மறுபுறத்தில் பொருத்தமான கொள்கை ஏற்பாடுகள் மற்றும் தலையீடுகள் தற்போதிலிருந்து அறிமுகம் செய்யப்பட்டு அமுலாக்கப்பட்டால் 2020 அளவில் கணிசமான முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது நியாயமானதாகும். மேலே பேசப்பட்ட சமூக பிரச்சினைகள் தொடர்பில் இது உண்மையானதாகும். மேலே பேசப்பட்ட பிரச்சினைகளை கவனிப்பதற்கு எமது அணுகு முறை பல் பக்கத்தினதாக இருக்க வேண்டும். வேறு விதமாக கூறினால் வித்தியாசமான பிரச்சினைகளை – திட்டமில்லாத பகுதி பகுதியான விதத்தில் அல்லாது – ஒரே தடவையில் கையாள கவனமாக முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

ஒரு தேசிய பல்-துறை வேலைதிட்டம் வடிவமைக்கப்பட்டு செயற்படுத்தப்படின் முன்னேற்றத்தை இந்த அறிக்கையில் பேசப்பட்ட சமூக பிரச்சினைகளுடன் தொடர்பான சுட்டித் தொகுதிகளின் அடிப்படையில் அளக்கப்படலாம், கண்காணிக்கப்படலாம். சமூகப் பிரச்சினைகளில் சில அமைப்பு ரீதியாக வேர் கொண்டுள்ளதால் இவ்வாறான பிரச்சினைகளுடன் தொடர்பான சமகால நிலைமையில் கணிசமான மாற்றத்தை 2020 அளவில் எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் அறிவுபூர்வமான கொள்கைகள் மற்றும் வினைத்திறன் மிக்க நடவடிக்கைகள் 2017இல் எடுக்கப்படின் 2025இல் இந்த சகல சுட்டிகள் தொடர்பில் கணிசமான முனனேற்றதை அடைவது சாத்தியமாகும். தகவலை பகிர்ந்து கொள்ளவும் பின்னூட்டல் நடவடிக்கைகளை எடுக்கவும் தொடர்புடைய சகல முகவரங்களையும் ஒன்றாக கொண்டுவரும் பல–முகவரக அமைப்பினால் கண்காணிப்பு மற்றும் முன்னேற்றத்தின் அளவீட்டை பெருமளவில் இலகுவாக்கலாம். இந்த அமைப்பு, இதற்காகவே நிறுவப்பட்ட ஒரு தேசிய செயலகத்தில் அமையும்.

சமூக பிரச்சினைகள் தொடர்பில் 2020 இல் சாதனை மட்டங்கள் தொடர்பான தரவுகளை வழங்குவது இயலாத காரியம். ஆயினும் கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி மற்றும் அவற்றின் நடைமுறைப்படுத்தலை தொடக்குதல் என்பவை தொடர்பில் அடுத்த மூன்று வருடங்களில் கணிசமான முன்னேற்றம் காணமுடியுமென எடுத்துக் கொள்வது நியாயமானது. இந்த தொடக்க நிலை நடவடிக்கைகள் மேலும் தாமதமின்றி எடுக்கப்படின் 2025 அளவில், சகல பிரச்சினைகள் தொடர்பிலும் நல்ல முன்னேற்றத்தை காண முடியும். உதாரணமாக ஆராய்ச்சி, அபிவிருத்தி சுகாதாரம் மற்றும் பொது போக்குவரத்து போன்ற மிக முக்கியமான துறைகளில் சமூக முதலீட்டை ஏற்றவகையில் அதிகரிப்பதுடன் முற்போக்கான வரி முறைமையூடான வருமான மீள் பகிர்வுக்கான நல்ல ஏற்பாடுகளை செய்யப்படின் 2025 அளவில் முழு வறுமையை ஒழிக்கலாம், அத்துடன் வருமான அசமத்துவத்தில் குறைப்பையும் செய்யலாம்.

பின்வரும் நிபந்தனைகள், அடுத்த தசாப்தத்தில் அல்லது அவ்வளவில் வரக்கூடிய சமூக பொருளாதார சுற்றுச்சூழல் நலன்களை உறுதிப்படுத்த உதவும். இதனால் ஸ்ரீலங்கா 2030அளவில் SDGsகளை அடைய இது உதவும். ஸ்ரீலங்கா தோற்றம் பெற்றுவரும் பூகோள அபிவிருத்தி கொள்கை தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக்கருத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும். இங்கு தேசிய மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் - தேசிய மற்றும் பூகோள தலையீடுகளுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரிமை விடயங்களாக ஏற்கப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தில் தெளிவாக இனம் காணப்பட்ட அந்த பிரச்சினைகள் சான்று அடிப்படையிலான அரசாங்க கொள்கைகள் ஊடாக மட்டும் வினைத்திறன் மிக்க முறையில் தீர்த்து வைக்கப்படலாம். இந்த கொள்கைகள் வரிவிதிப்பு, மனித வலு அபிவிருத்தி, ஆராய்ச்சியும் அபிவிருத்தியும், சுகாதாரம் போக்குவரத்து, சமூகபாதுகாப்பு, பால்நிலை சமத்துவம், சமூக ஒற்றுமை தொடர்பனவையாகும். அரச தலையீடுகள், பல்-துறை மற்றும் பல்வகை பங்குதாரர்கள் செயற்பாடு என்பவையூடாக 2025 அளவில் இவை மேற்கொள்ளப்பட்டால் நாடு பொருளாதார ரீதியில் கூடுதலாக அபிவிருத்தி செய்யப்பட்டதாக, சமநீதியுள்ளதாக, சமூக ஒற்றுமை உள்ளதாக, நீதியானாதாக அரசியல் ரீதியாக கூடுதலான ஒன்றிணைந்ததாக சமாதானம், நீதி, இன சமய ஒற்றுமை உள்ளதாக உருவாகும். இவ்வாறான நிலைமைகள் - கூடுதல் கவர்ச்சியுள்ள வேலைகள் கவர்ச்சியான விடயங்களை தேடி மக்கள் நாட்டைவிட்டு போக நிர்பந்திக்கப்படாமால் மனங்கொண்ட நல்ல வாழ்வை தமது நாட்டிலேயே வாழ ஊக்குவிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. துறைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

துறைகள்

# S1

## S. துறைகள்

### S1 விவசாயம் மற்றும் உணவு[9]

### 1. சமகால நிலைமை

ஸ்ரீலங்காவின் சனத்தொகை பிரதானமாக கிராமிய அடிப்படையிலானதாகவும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவாகவும் உள்ளது. மேல் மாகாணம் இதற்கு விதிவிலக்கானது. ஸ்ரீலங்காவின் பயிர் செய்கை – பயிர் வகை, விவசாய நிலத்தின் அளவு போன்ற அடிப்படைகளில் பலவிதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுள் மிகவும் பிரபலமான முறை பயிர் வகையில் வகைப்படுத்தலாகும். அது உண்னாட்டு உணவுப் பயிர்கள் சிறு ஏற்றுமதி பயிர்கள், பெரும்தோட்ட பயிர்கள் என்பவையாகும். அளவைப் பொறுத்த வகைப்படுத்தல் சிறு அளவிலான நிலம் பெரிய அளவிலான நிலம் என்பவற்றை கொண்டது. சிறிய அளவிலான நிலப் பயிர் என்பதனுள் அநேகமாக சகல பயிர்களும் அடங்குகின்றன. பெரிய அளவிலான பயிர் செய்கை என்பதில் தோட்டத்துறையின் ஐந்திலொரு பகுதியும் அவையோடு சேர்த்து பெரிய கரும்புத் தோட்டங்களும் மர முந்திரி தோட்டங்களும் அடங்குகின்றன. இருப்பினும் இன்னுமொரு வகையான விவசாய - சுற்றுச்சூழல் அடிப்படையில் ஈர நில வலய விவசாயம் உலர்வலய விவசாயம் எனவும் வகைப்படுத்தப்படுகின்றது. பெருந்தோட்ட விவசாயத்தில் கிட்டத்தட்ட முழுவதுமே ஈர வலயத்திலேயே உள்ளன. உள்நாட்டு உணவு விவசாயத்தில் நாலில் மூன்று பங்கும் நெற்பயிர் செய்கையில் கிட்டத்தட்ட 90 சதவீதம் உலர் வலயத்தில் உள்ளது. நெற்பயிரில் 70சதவீதம் சிறிய, நடுத்தர நீர்ப்பாசன தொகுதிகளால் நீர் பெறுகின்றன.

மழை மற்றும் நீர்பாசன நீரால் போஷிக்கப்படும் விவசாயம் உள்ளூர் உணவுத் தேவையில் (மீனைத் தவிர) 83 சதவீதத்தை பூர்த்தி செய்கின்றது. மேலும் இது ஸ்ரீலங்காவின் ஏற்றுமதியில் 25 சதவீதமாகவும் உள்ளது. குறைந்த பட்சம், சனத்தொகையில் 30 சதவீதம் விவசாயத்தில் தங்கியுள்ளது. பிரதான ஏற்றுமதி பயிர்கள் (தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் வாசைன திரவியங்கள் ஆகக்கூடிய அளவில் (35 சதவீதம்) விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்பு செய்கின்றன. இதற்கு அடுத்தப்படியாக ஸ்ரீலங்காவின் பிரதான உணவாக நெல் (25 சதவீதம்) உள்ளது. மீதி பழங்கள், மரக்கறி மற்றும் மந்தை வளரப்பு என்பவற்றால் பெறப்படுகின்றது.

### 2. கடுமையான பிரச்சினைகள், தாக்க விளைவுகள் தீர்வுகள்

#### 2.1. தற்போதைய நிலை, சமகால பிரச்சினைகள் பிரச்சினையான விடயங்கள்

##### 2.1.1. உருவாகி வரும் ஆபத்துகள்

மாறிவரும் வானிலை கோலங்கள், குறிப்பாக அண்மைக் கால மழை வீழ்ச்சிக் கோலம் முழு விவசாய துறைக்குமே பிரதான ஆபத்தாக உருவாகியுள்ளது, விவசாயத் துறையில் கடுமையான

---

9 எழுதுனர் குழாம்: அனுர ஏக்கநாயக்க (தலைவர்), ஜெரி ஜயவர்தன, S.R.K. அருப்பொல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியப் பற்றாக்குறையை தோற்றுவித்துள்ள – கிராமிய இளைஞர்களுக்கு விவசாயத்தில் ஈடுபட தயக்கம் அதிகரித்து வருதல் அடுத்த பெரிய ஆபத்தாக தோன்றியுள்ளது. இந்த இரண்டு புதிய பிரச்சினைகளும் இணைந்து விவசாயத்துறையின் நிலைபேறுமைக்கு பாரிய சவாலாக உள்ளன. விவசாய நிலம் துண்டாடப்படுதலும் தொடர்ந்து நிலம் தரம் கெட்டு வருதலும் நீண்ட காலமாக அதிகரித்து வரும் வேறு பிரச்சினைகளாகும். தொடரும் கிராமிய வறுமை, நீண்ட கால சிறு நீரக நோய்கள் உட்பட் ஆரோக்கிய கேடுகள் என்பவையும் இந்த சவால்கள் பட்டியலுக்கு சேர்க்கப்பட் வேண்டும்.

**2.1.2. காலநிலை மாற்றம்ஃவறட்சி**

இந்த தீவின் சராசரி வெப்ப நிலை கடந்த நூற்றான்டில் அதிகரித்துள்ளதெனவும் மழைவீழ்ச்சியில் வேறுபடுதல்கள் அதிகரித்துள்ளதாகவும் கால நில ஆய்வுகள் காட்டியுள்ளன. மொத்த மழை வீழ்ச்சியில் மாற்றமேற்பட்டுள்ளதா என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. வெப்ப நிலை மேலும் அதிகரிக்கும், ஈர வலயத்தில் மழை வீழ்ச்சி அதிகரிக்கும். உலர் வலயத்தில் மழை குறையும் என நீண்டகால உத்தேச மதிப்பீடுகள் உணர்த்துகின்றன.

2015 -17 காலப் பகுதியில் காணப்பட்ட தொடரான வறட்சிகளும் வெள்ளங்களும் விவசாயத்தை பெரிதும் பாதித்தன. 2015இல் கடுமையான வறட்சிகள், பெரும் மழை, வெள்ளங்களும் 2016இல் 40 வருடமாக காணப்படாத கடும் வறட்சியும் ஏற்பட்டது. இதனால் 2016 -2017 பெரும்போக விளைச்சல் குறைந்து. இது குறைந்த பட்சம் 35 சதவீத வீழ்ச்சியாகும். 2017 சிறுபோக காலத்தில் மொத்த பயிர்செய்கை சராசரியிலும் 50 சதவீதம் குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த சிறு போக காலத் தொடக்கத்தில் பெரிய நீர்த் தேக்கங்கள் தமது கொள்ளளவில் 29 சதவீதத்தையே கொண்டிருந்தன. ஸ்ரீலங்காவின் முழு ஈரவலயத்தையும் கடுமையாக பாதித்த மே 2017 வெள்ளம் உணவு மற்றும் உணவு சாரா விவசாயத்தில் வானிலை சம்பந்தமான தீய விளைவுகளை மேலும் மோசமாக்கியது. வட மாகாணம், வட மத்தி மாகாணம், வட மேல் மாகாணம் ஆகியவற்றில் வரட்சி தொடர்கையில் இந்த தீவிர வானிலையின் விவசாயம் மீதான ஒட்டுமொத்த தாக்கம் எவ்வாறு இருக்குமென தற்போதைய நிலையில் நம்பத்தகுந்த உத்தேச கணிப்புகள் இல்லை. ஓட்டுமொத்தமாக ஆகஸ்ட் 2017 தொடக்கத்தில் நீர்த்தேக்கங்களில் 18 சதவீத நீரே காணப்பட்டது. சந2முன்னைய வருடத்தில் இது 47 சதவீதமாக காணப்பட்டது. 2017/18 பெரும்போகத்தில் முழு பயிர்ச்செய்கைக்கு போதுமான நீர் இருக்குமா என்பது தெளிவாக தெரியவில்லை. இவ்வாறான தீவிர காலநிலை தோற்றப்பாடுகள் உணவு மற்றும் உணவு சாராத கணிசமான தாக்கங்களை விளைவிக்கும். இது தேசிய உணவு பாதுகாப்பிலும், வெளிநாட்டு நாணய சம்பாதிப்பிலும் பாதகமான விளைவுகளை தோற்றுவிக்கும். அதே சமயம், முற்றாக அல்லது பகுதி அளவில் விவசாயத்தை நம்பியுள்ள பெருமலவான குடும்பங்களுக்கு கடுமையான பாதிப்பை கொடுக்கும்.

ஸ்ரீலங்கா 1990 இல் அரிசியில் சுயதேவை பூர்த்தியை கண்டது. இதனால் கோதுமை இறக்குமதியில் ஒரு பகுதியை குறைக்கக் கூடியதாகவும் இருந்தது. எண்ணெய் பயிர்கள் (சோயா, நிலக்கடலை), வேர்ப்பயிர்கள் (மரவள்ளி, உருளைக்கிழங்கு வத்தாளை) மரக்கறிகள் (தக்காளி, வெங்காயம்) வாசனைத் திரவியங்கள் உட்பட வேறு பயிர்களின் உற்பத்தியும் கணிசமான அதிகரிப்பு காணப்பட்டது. இருப்பினும் வெள்ளம் மற்றும் வரட்சி அடிக்கடி வருதல் தணியாது தொடருமாயின் இந்த நிலைமை நிலைத்திருக்க முடியாது.

ஸ்ரீலங்காவுக்கான ஏப்ரில், மே மற்றும் யூன் 2017க்கான உத்தியோகபூர்வ மழைவீழ்ச்சி எதிர்வுகூறல் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கம்பஹா, புத்தளம், குருநாகல், கேகாலை, இரத்தினபுரி கண்டி மாவட்டங்களில் சராசரிக்கு குறைந்த மழைவீழ்ச்சியும் வேறு மாவட்டங்களில் அதே காலப்பகுதியில் சராசரியிலும் கூடிய மழை வீழ்ச்சியையும் எதிர்வு கூறியுள்ளது. இந்த எதிர்வுகூறல் தற்போது காணப்படும் பூகோள காலநிலைமைகள் மற்றும் உலகம் முழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்துள்ள பல்வேறு வானிலை மாதிரியுடுக்களின் அடிப்படையில் செய்யப்பட்டது. இந்த எதிர்வுகூறலுக்கும் உண்மையாக நடந்ததற்கும் இடையிலான பாரிய வித்தியாசம் ஸ்ரீலங்காவில் பருவகால வானிலை எதிர்வு கூறுதலில் உள்ள பெரும் சவால்களை காட்டுகின்றன.

### 2.1.3. ஊழியர் தட்டுப்பாடு

ஸ்ரீலங்காவின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கு விவசாயத்தில் தங்கியுள்ளது. ஆயினும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயத்தில் சேர்க்கப்பட்ட பெறுமதி 10 சத வீதத்திலும் குறைவானதே. ஸ்ரீலங்காவின் வறிய மக்களின் 85 சதவீதமானோர் - பிரதான பொருளாதார செயற்பாடாக விவசாயம் காணப்படும் கிராமியப் பகுதிகளில் உள்ளனர். வறியோரில் 45 சதவீதமானோர் 25 வயதிலும் குறைவானவர்கள். 2015 இல் ஒரு விவசாய தொழிலாளியின் சம்பளம் சேவை தொழிலாளியின் அரைப்பங்காகவும் கைத்தொழில் துறை தொழிலாளியின் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பகுதியாகவும் இருந்தது. ஸ்ரீலங்காவின் மொத்த வேலையின்மையில் 80 சதவீதம் கிராமியத்துறையில் உள்ளது. ஆயினும் உள்நாட்டு உணவு விவசாயம் பெருந்தோட்ட விவசாயம் மற்றும் சிறு ஏற்றுமதிப்பயிர்கள் அடங்கலான முழு விவசாயத்துறை கடுமையான ஊழிய பற்றாக் குறையால் கஷ்டப்படுகின்றது. வேலையின்மை கிராமிய இளைஞர்களிடம் ஆகவும் கூடிய அளவில் உள்ளது. முதன் முதலாக வேலை தேடுவோர் தமது அபிலாஷைக்கு அமைந்த இலட்சிய வேலைக்காக காத்திருப்பதாக தெரிகின்றது. விவசாயத்தின் மீதான இளைஞர்களின் ஆர்வமின்மை குறைந்த சம்பளம் என்பதற்கும் மேலான சிக்கலான காரணங்களைக் கொண்டது என்பது கவனிக்கப்பட வேண்டும்.

### 2.1.4. நிலம் தரம் கெடுதல்

ஸ்ரீலங்காவின் நிலத்தில் அண்ணலவாக மூன்றிலொரு பங்கு மண்ணரிப்புக்கு உற்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மண்ணரிப்பு ஆபத்துள்ள நிலம் 10 சதவீதத்திலும் குறைவாக சில மாவட்டங்களில் இருக்க வேறு மாவட்டங்களில் 50 சதவீதத்திலும் கூடுதலாக உள்ளது. மண் வளம் அற்றுப்போதல் நாட்டின் விவசாய நிலங்களின் உற்பத்தி திறன் இழப்புக்கு காரணமாகியுள்ளது என பொதுவாக நம்பப்படுகின்றது. மண் வளம் இழக்கப்பட்ட போதும் பயிர் விளைச்சல் குறையாதிருப்பதற்கு இரசாயனப் பசலைப் பாவனை காரணம் என கூறலாம்.

### 2.1.5. நில உடமை வகை

விவசாய கணக்கெடுப்பு (2002)க்கு அமைய ஸ்ரீலங்காவின் சிறு நிலங்களின் சராசரி அளவு 1946 – 2002 காலப் பகுதியில 1.3ha 0.47 ஆக 64 சதவீத வீழ்ச்சியை கண்டது. அண்ணலவாக 1.65 மில்லியன் சிறுநில விவசாயிகள் சராசரியாக 2ha யிலும் குறைந்த நிலத்தில் தொழிட்படுகின்றனர். இவர்கள் வருடாந்த உற்பத்தியில் 80 சதவீதம் பங்களிப்பு செய்கின்றனர். இவ்வாறான சிறுநில விவசாயம் தனியான பொருளாதார மற்றும் தீர்மானம் எடுக்கும் தனியன்கள் (entities) முதல், தொழில்நுட்பம், பெறுமதி சங்கிலி மற்றும் சந்தை வாய்ப்புகள் போதியளவு கிடையாமையால் அர்த்தமுள்ள வர்த்தக விவசாயத்தில் ஈடுபட முடியாதுள்ளன. உலர் வலயத்திலுள்ள அநேகமான விவசாய நிலங்களும் ஈர வலயத்திலுள்ள பல நிலங்களும் சிறு உரிமையாளர்களால் தற்காலிக அனுமதி பத்திரத்தின் அடிப்படையில் உரிமை பாராட்டப்படுகின்றன. பல வருடங்களாக அவ்வப்போது நில (consolidation) பலப்படுத்தல் மற்றும் வர்த்தக விவசாயத்தில் சந்தை சக்திகளை செயற்பட அனுமதித்தல் போன்ற விடயங்கள் காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் இவை வரக்கூடிய பாதகமான சமூக - அரசியல் தார்ப்பரியங்களையிட்டு பயத்தினால் பின்போடப்பட்டன. தற்போதைய அரசாங்கம் தற்காலிக அனுமதிபத்திரத்தின் அடிப்படையில் விவசாயம் செய்வோருக்கு முழுமையான காணி உரித்தை வழங்கும் விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. நிலம் தொடர்பில் சந்தை சக்திகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான செயற்பாட்டுக்கு மாற்றாக வேறு வகையான வினைத்திறன் மிக்க செயற்படுத்தக் கூடிய (land consolidation) முயற்சி செய்யப்பட்டன. பல்வேறு வடிவான கமக்காரர் சங்கங்கள் மற்றும் கமக்காரர் கம்பெனிகள் அமைக்கப்பட்டமை இதற்கு உதாரணங்களாகும். குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தால் பிடிக்கப்பட்டுள்ள அரசாங்க மற்றும் தனியார் காணிகள் சிவில் உரிமையாளர்களிடம் மீள கொடுக்கப்படுகின்றன.

### 2.1.6. வறுமை

ஸ்ரீலங்காவில் முழு வறுமை 2002 இல் 22.7 சதவீதமாக இருந்து 2012 – 13 இல் 6.7 சதவீதமாக குறைந்தாலும் ஸ்ரீலங்கா பிரசைகளில் கால் பங்கினர் ஏழ்மைக்கு அண்மையில் உள்ளனர். ஏழ்மைக்கு அண்மை என்பது தேசிய வறுமைக் கோட்டுக்கு மேல் (அண்ணலவாக US$1.5) ஆனால் நாள் ஒன்றுக்கு (US$2.50க்கு கீழ்) என வரையறுக்கப்பட்டுள்ளது. இது 2005 கொள்வனவு சக்தி சமவலுவின் (PPP) அடிப்படையில் கூறப்பட்டது. மீண்டும் மீண்டும் வரும் பயிர் அழிவுகள், இந்த ஏழ்மைக்கு அண்மையாளவர்களை இலகுவாக வறியோர் எனும் வகுதிக்குள் தள்ளிவிடும். சில இடங்களில் குறிப்பாக வடமாகாணத்தில் இற்றைவரை தொடர்ச்சியாக நான்கு நெற்பயிர் அழிவுகள் ஏற்பட்டுள்ளன.

## 2.2. வரக்கூடிய பொருளாதார, சமூக சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- நிலம் - கருத்தில் எடுக்கப்பட்ட காலப்பகுதியில் பயிரிடப்பட்ட நெற்காணி அளவு மாறாது. 1,100,000ha ஆக இருக்குமென எதிர்வு கூறப்பட்டிருக்கையில் வேறு பயிர் நிலங்கள் 367,000ha இலிருந்து 60 சதவீதம் அதிகரித்து 590,000ha ஆக அதிகரிக்கும். இதற்கு அமைய உணவுப் பயிர் செய்யப்பட்ட நிலம் 1,467,000ha லிருந்து 15 சதவீதம் அதிகரித்து 1,690,000ha ஆக அதிகரிக்கும். இந்த கூடுதலான 223,000 ha நிலம் எங்கிருந்து வரும் என்பது தெளிவாக இல்லை. இந்த மேலதிக நிலம் காடழிப்பு அல்லது வேறு நொய்வான சூழல் தொகுதிகளை துப்பரவு செய்தல் மூலம் பெறப்படுமாயின் சூழலுக்கு மிக மோசமான பாதிப்பு ஏற்படும்.

- நீர் - அண்மைய அனுபவங்களை கருத்தில் எடுப்பின், தற்போது பயிரிடும் நிலத்துக்கே போதிய நீர் கிடைக்குமா என்ற பிரச்சினை கிளம்பியுள்ளபோது மேலதிக பயிர் செய்கைக்கு மேலும் கூடுதலான நீரை எங்கிருந்து பெறுவது என்பது கேள்வியாகும்.

- ஊழியம் - தற்போதைய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டுடன் எதிர்பார்க்கப்படும் சகல நிலங்களையும் பயிரிட தேவையான ஊழியம் 27 சதவீதத்தால் அதிகரிக்கும். ஏற்கெனவே – விவசாயம் உட்பட சகல துறைகளிலும் உள்ள கடுமையான ஊழிய பற்றாக்குறை கட்டுமானம் விருந்தோம்பல் மற்றும் உற்பத்தித்துறைகளுக்கு ஊழியம் இறக்குமதி செய்யக்கோரும் அளவுக்கு உள்ளது. துறைமுக நகரம், மெகாபொலிஸ் மற்றும் வேறு நகர மையங்கள் போன்ற பாரிய உட்கட்டமைப்பு செய்திட்டங்கள் மற்றும் அதனால் வரும் நகர பொருளாதார செயற்பாடுகள் என்பன விவசாயத்துக்கு எனவுள்ள ஊழியத்தை மேலும் குறைக்கும்.

- மூலதனம் - தொழிற்படுகைக்கு கூடுதல் தனியார் மூலதனம் தேவைப்படும் என்பது தெளிவானது. அதே சமயம் நீர்ப்பாசனத்துக்கும் வேறு உட்கட்டமைப்புகளுக்கும் வேறு கூடுதலான அரசாங்க முதலீடு தேவைப்படும்.

- உற்பத்தித்திறன் - எதிர்பார்க்கப்படும் இந்த நிலைமையில் பயிர் உற்பத்தித்திறன் ஒட்டுமொத்தமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நெல் விளைச்சல் ஹெக்டேயருக்கு 4.26 தொன் (4.26t/ha) என்பிலிருந்து ஹெக்டேயருக்கு 5.81t/ha தொன்னாக உயரும். சோள விளைச்சல் 3.57t/ha என்பதிலிருந்து 5.0t/ha ஆக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கும். சமகால உயர் உள்ளீடு தொழில்நுட்பத்தின் கீழ் இது நடக்குமா என்பது பிரதான கேள்வியாக உள்ளது. அவ்வாறாயின் இது நிலம் மற்றும் நீர் மற்றும் மனித ஆரோக்கியத்தின் மீது பாதகமான விளைவுகளை கொண்டு வரும் விவசாய இரசாயன பாவனையை அதிகரிக்கும் என்பது பொருளாகும்.

- ஸ்ரீலங்கா இப்போது போலவே கூடுதல் நீர் மற்றும் ஊழியத்தில் தங்கியுள்ள விவசாயத்தில் தொடர்ந்து கவனம் செலுத்துமாயின், காலநிலை மாற்றம் மற்றும் பொருளாதாரத்தின் வேறு பகுதிகளில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் என்பவையும் சேர கீழ்காணும் பாதகமான விளைவுகள் சாத்தியமாகும்: விவசாயம் பொருளாதாரத்துக்கு சேர்க்கும் பெறுமதி குறையும், உணவு இறக்குமதி அதிகரிக்கலாம், உள்நாட்டு உற்பத்தியை விட இறக்குமதி உணவின் மீதான செலவு கூடுதலாக இருப்பின் உணவுச் செலவு அதிகரிக்கும், கிராமிய வறுமை அதிகரிக்கும். அத்தோடு பொதுவாக போசணையின் தரம் பின்னடையும்.

## 2.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைபடுத்தல்கள்

1. பருவகால மழை வீழ்ச்சி பற்றிய எதிர்வுகூறலை மேலும் நல்ல முறையில் செய்வதற்கான இயலுமை மற்றும் ஆற்றலை அதிகரிக்கவும், மேலும் தீவிர வானிலை பற்றி முன்கூட்டிய எச்சரிக்கையை வழங்கவும் இதற்கு ஆட்களை பயிற்றுவிக்கவும் மென்பொருள் மற்றும் வன்பொருள் (hardware) என்பவை உற்பட நவீன தொழில்நுட்பத்தை பெற்றுக்கொள்ளவும் முதலீடு தேவை. இந்த செயற்பாடுகளின் விளைவுகளை நடுத்தர மற்றும் நீண்ட காலத்திலேதான் எதிர்பார்க்கலாம். தேவையான தரவு சேகரித்தலுடன் பொருத்தமான எதிர்வுகூறல் மாதிரியுருக்களையும் விருத்தி செய்ய வேண்டும் என்பதே இதற்கான காரணம்.

2. வானிலை எச்சரிக்கை சமிக்ஞைகளுக்கு விரைந்து துலங்குவதற்கான நிறுவன ஏற்பாடுகளை விருத்தி செய்க. தொடர்புபட்ட சகல நிறுவனங்களும் வினைத்திறன் மிக்க வகையில் இணைந்து வேலை செய்ய வேண்டும். அவை இவ்வாறான தரவுகளை சேர்த்து எடுக்கவும் அவற்றை பகுப்பாய்வு செய்யவும் இவ்வாறான தகவல்களை விரைந்து விவசாயிகளுக்கும் வேறு பங்குதாரருக்கும் பரவச் செய்யவும் அவை அதி நவீன தகவல் தொழில்நுட்பத்தால் முழுமையாக மேல் உயர்த்தப்பட வேண்டும். இந்த செயற்பாடு குறுகிய காலத்தில் நன்மை அளிக்க முடியும்.

3. குறைவான நீர் தேவைப்படும் வறட்சிக்கு நின்று பிடிக்கக் கூடிய பயிர் இனங்களையும் பயிர் செய்கை கோலங்களையும் விருத்தி ஆக்குக. இவை விவசாயிகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். இதனையும் வினைதிறன் மிக்க விவசாய விரிவாக்கள் முறைகளையும் சாதிப்பதற்கு அரசாங்கத் துறையாலும் தனியார் துறையாலும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி (R&D) இல் தொடர்ச்சியாக உயர் முதலீடுகள் செய்யப்பட வேண்டும். முதலீட்டை ஊக்குவிக்கும் அமைப்பில் பொருத்தமான மாற்றங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். இதனால் நடுத்தர, நீணடகால விளைவுகள் சாத்தியமாகும்.

4. நீர் மீதப்படும் பயிர்செய்கை கோலங்களையும் கலாசார நடைமுறைகளையும் கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்கவும். இதற்கமைய கமச்செய்கை மானியங்கள் மற்றும் வேறு உதவிகள் சீர்ப்படுத்தப்பட வேண்டும். அண்மையில் உரமானிய முறை மாற்றப்பட்டது இதற்கு நல்ல உதாரணம் ஆகும். மானிய உரத்துக்கு பதிலாக பணத்தை கொடுப்பதால் அவர்கள் உரத்தை தாம் விரும்பிய அளவில் பாவிப்பதால் செயற்கை பசளையின் அளவுக்கதிகமான பாவனை கட்டுப்பாட்டுக்குள் வந்தது. குறைவான காப்புறுதி கட்டுப்பணம் மற்றும் மானிய விலை விதை என்பவற்றால் குறுகிய கால பயிர் இனச் செய்கை ஊக்குவிக்கப்படும். இந்த செயல் குறுகிய காலத்தில் பயன் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீர், ஊழியம், இரசாயனம் என்பவற்றை மீதப்படுத்தும் தொழில்நுட்ப தீர்வுகளை விவசாயிகளுக்கு வழங்குக. உதாரணமாக வரிசையில் விதைக்கும், களை அகற்றும் இயந்திரம், ஈரத்தை தக்க வைக்கும். மண்ணின் ஆற்றலை அதிகரித்தல், மழை நீர் சேகரிப்பு, சூரிய வலு பம்பிகளால் நுண் நீர்ப்பாசனம் என்பன கிடைக்கச் செய்ய வேண்டும். இதற்கு அறிவு, பொருத்தமான இயந்திரங்கள், கருவிகள் தேவைப்படும். இந்த செயற்பாடு குறுகிய மற்றும் நடுத்தரகால நன்மைகளை தர முடியும்.

6. நீரை மீதப்படுத்தல், விவசாயத்தில் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு பெறுமதி கூட்டல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவை தொடர்பில் விவசாயிகளுக்கு கல்வியூட்டுக. இதனால் நடுத்தர கால, நீண்டகால பயன் பெறலாம்.

7. அளவுத்திட்ட கட்டுப்பாடுகளை தாண்டி குறைந்த அளவு நீர் பயிர்களை விளைவித்து சேமித்து பெறுமதி கூட்டி இலாபகரமாக சந்தைபடுத்த விவசாயிகளை அணி திரட்டுக. இதனால் நல்ல முறையிலான கடன் வசதி, உள்ளீடு நிரம்பல், கலஞ்சியப்படுத்தல் மற்றும் காப்புறுதி என்பன நிலைத்திருக்கும் வகையிலும் வர்த்தக ரீதியாக ஏற்புடைய விதமாகவும் கிடைக்கலாம். அண்மையில் தொடக்கப்பட்ட "கிராமசக்தி" நிகழ்ச்சித் திட்டமும் மக்கள் கம்பனிகளும் அணிதிரட்டப்பட்ட தனியார் துறையுடன் வரர்த்தக பெறுமதிச் சங்கிலியால் ஒன்றினைக்கப்பட முடியும். இது விவசாயிகளுக்கும் தனியார் துறைக்கும் அரசுக்கும் வெற்றியாக அமையும் தீர்வைக் கொடுக்கும். விவசாய குழுக்கள், வர்த்தக பெறுமதி சங்கிலிகளில் வெற்றிகரமாக செயற்பட்ட பல செய்திகள் உள்ளன. இவை பிரதிசெய்யப்படலாம்.

8. விவசாயிகளுக்கும் கிராம மட்ட அலுவலர்களுக்கும் உடனடியாக வானிலை, பூச்சிகள் பெருக்கம் நோய் மற்றும் சந்தை நிலை பற்றிய தகவல்களை வழங்க தகவல் தொழில்நுட்பத்திலும் அதிகரித்துள்ள கைபேசி பாவனையிலும் ஏற்பட்டள்ள முன்னேற்றங்களை முழுமையாக பயன்படுத்துக. இந்த செயற்பாடு மூலம் குறுகிய காலத்தில் நன்மைகள் பெறப்பட முடியும். பல அதிசிறந்த விடய உதாரணங்கள் ஸ்ரீலங்காவில் உள்ளன.

9. சிறந்த போஷணை மற்றும் உணவு பழக்க வழக்கத்தில் பொருத்தமான மாற்றங்கள் என்பவை பற்றி நுகர்வோருக்கு அறிவூட்டுக. மாப்பொருள் மற்றும் சீனி குறைவான ஆரோக்கியமான உணவு நுகர்வு மற்றும் பழங்கள் மரக்கறிகளின் கூடுதல் நுகர்வு என்பன விவசாயத்துக்கு நீரில் அதிகம் தங்கியிருத்தலை குறைக்கும். இது நடுத்தரகால நீண்டகால அடிப்படையில் நன்மை தரும்.

மேலே கூறப்பட்ட ஒன்பது அம்ச வேலைத்திட்டம் பல வருடங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பேசப்பட்டு துண்டாடப்பட்ட முறையில் பகுதியளவில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் தேவைப்படுவது என்னவெனில் - வரக்கூடிய நன்மைகள் குறுகிய, நடுத்தர, நீண்டகால அடிப்படையில் பெறப்படுமாயினும் இவை யாவற்றையும் ஒன்றாக, ஒன்றினைந்த வகையில் நடைமுறைப்படுத்துவதில் உறுதியான அர்ப்பணமாகும்.

3 தொடக்கம் 6 வரையான மேற்கூறிய நடவடிக்கைகள் நீர்க்குறைவுக்கு தாக்குப்பிடிக்கும் தன்மை குறைந்த அதிக அளவு உள்ளீடு தேவையான பயிர் இனங்களைப் பயன்படுத்தி உயர்உள்ளீடு/உயர் வெளியீடு உபாயத்தை பயன்படுத்துவதில் தங்கியுள்ள தற்போதைய குறுங்கால/பருவகால இலாப உச்சப்படுதலுடன் ஒப்பிடுமிடத்து ஆபத்துக்களை ஆகக் குறைந்த அளவினதாக்கும் தந்திரோபாயங்கள் எனக் கருதப்படலாம். உயர் இலாபம் தரக்கூடிய காசுப்பயிர் செய்கை செயற்பாடுகள் 7-8 ஊடாக பண்ணைகளின் பயிர் கலப்புகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பண்ணை மட்ட இலாபங்கள் குறுங்காலத்திலும் அதிகரிக்கும்.

எந்த காலத்திலும் காணப்படும் பயிர்களுக்கான நீண்டகால அடிப்படையிலான நடவடிக்கை 3ஐ தவிர மேலே கூறப்பட்ட ஏனைய சகல நடவடிக்கைகளும் பெருந்தோட்ட விவசாயத்துக்கும் சிறு ஏற்றுமதி பயிர்களுக்கும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. நிலைபேறுமை கண்ணோட்டம் 2020 மற்றும் 2020க்கு அப்பால்

2017க்கான உள்நாட்டு அரிசி விளைச்சல் ஏழு மாதங்களிலும் சற்று கூடுதலான காலத்துக்கே போதுமானது என UN/WFP என்பன மதிப்பிட்டுள்ளன. இது 2016க்கு முந்திய தசாப்தத்தில் காணப்பட்ட சுயபூர்த்திக்கு அண்மித்த நிலைமையிலிருந்து பாரிய பின்னடைவு ஆகும். குடித்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவர திணைக்களத்தின் மொத்த் உணவு உற்பத்தியின் கணிப்பீட்டின்படி – தேயிலை விலை அதிகரித்த போதும் 2017இன் 2ஆம் காலாண்டில் 2.9 சதவீதத்தால் விவசாயத்துறை வீழ்ச்சி கண்டது.

2017/18 பெரும்போகமும் தொடரும் நீர் பற்றாக்குறையால் சராசரியை விட குறையுமாயின் ஆண்டு 2018 விவசாயத்துக்கு சாதகமானதாக அமைவது சாத்தியமில்லை. உலக உணவு திட்டத்திற்கு (WFP) அமைய கமக்குடும்ப கடன் கடந்த இரண்டு வருடங்களில் இரண்டு மடங்கு ஆகியுள்ளது. மேலும் முதல் பற்றாக்குறை விவசாயதுறைக்கு பாதகமான தாக்கத்தை கொடுக்கும். 2020 வருவதற்கு ஒரு வருட காலம் மட்டுமே உள்ளது. எனவே உள்ளூர் உணவு கிடைப்பனவு, போஷனை மற்றும் கம வருமானம் என்பன பற்றிய எதிர்பார்ப்பு உற்சாகம் அளிப்பதாக இல்லை.

**2025 – 2030**

முன்னர் கூறப்பட்ட இந்த ஐந்து அம்ச நடவடிக்கை சட்டகம் நடைமுறைப்படுத்துமாயின் ஒரு நிலைத்திருக்கக் கூடிய நல்ல விளைவு கிடைக்கும்.

2020க்கு பின்னர் வரக்கூடிய சாத்தியமான விவசாயத்துறை நடப்புகள், பொருளாதாரத்தின் ஏனைய அம்சங்களில் வரக்கூடியவற்றின் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும். GDPக்கு 10 சதவீத பெறுமதியை மட்டும் சேர்க்கும் விவசாயத்துறை பொருளாதாரத்தின் பிரதான விசையாக இருக்க முடியாது. இருப்பினும் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு உயர்தர வாழ்வை கொடுக்கும் அதே சமயம் மக்களுக்கு நிலைத்திருக்கும் வகையிலான கட்டுப்படியான போஷணை வழங்கும் கூடுதல் உற்பத்தித் திறன் வாய்ந்த துறையாக முடியும். பழங்கள், மரக்கறி வகைகள், பூக்கள் போன்ற பாரம்பரிய, பாரம்பரியம் அல்லாத ஏற்றுமதி பயிர்களைக் கொண்ட ஏற்றுமதி விவசாயத்தில் பயிர் வளர்ப்பதற்கும் பெறுமதி கூட்டலுக்கும் நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தபடுமாயின் இந்த துறைக்கு கணிசமான பங்களிப்பை செய்ய முடியும்.

முன்மொழியபட்டுள்ள மெகாபொலிஸ் அபிவிருத்தி மற்றும் வேறு நகர மையங்கள் மற்றும் அவற்றோடு சேர்ந்த பௌதீக உற்கட்டமைப்பு அபிவிருத்தி என்பன பொருளாதாரத்தின் அமைப்பு ரீதியான மாற்றத்தை விரைவுபடுத்தும். இதனால் வரும் விவசாயத்திலிருந்து ஊழியம் பெயர்தல், நொய்தலான சூழல் தொகுதி மீதான அழுத்தத்தை குறைப்பதோடு நிலத்தை பலப்படுத்தும். இது இயந்திர மயமாக்கலை ஊக்குவிப்பதோடு மூலதன செறிவையும் கூட்டும். அனைத்தையும் அடக்கிய பொருளாதார அபிவிருத்தியின் விளைவாக உண்டாகும் செலவளிக்கக் கூடிய வருமானத்தின் அதிகரிப்பு உயர் பெறுமான, குறைந்தளவு நீர் போதுமான பயிர்கள் நோக்கிய பன்முகப்படுத்தலை ஊக்குவித்து கேள்வியை அரிசியிலிருந்து பழங்கள், மரக்கறிகள், மீன், பண்ணைப் பொருட்கள் நோக்கி நகர்த்தும். ஆனால் இவை யாவும் தானாக நடக்க முடியாது. ஒரு நெறிப்படுத்திய மாற்றம் தேவையாகும். இல்லாதுவிடின் கிராமிய வறியோர் இந்த செயன்முறையால் வருந்துவர். இந்த துறையின் நிலை பேறுமைக்கு – வர்த்தகத்துக்கும் FTAகளுக்குமான தொழில்நுட்ப தடைகளினால் வரக்கூடிய தாக்கங்கள் பற்றிய உயர் விழிப்புணர்வு தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள்

# S2

## S2. கல்வி[10]

### 1. சமகால நிலைமை

ஸ்ரீலங்காவில் காணப்படும் கல்வியின் வெவ்வேறு கட்டங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- முன் பிள்ளைப்பருவ கவனிப்பும் கல்வியும் (ECCE)
- பொதுக் கல்வி (பாடசாலைக் கல்வி)
- தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி மற்றும் பயிற்சி
- மூன்றாம் நிலை மற்றும் பல்கலைக்கழக கல்வி

ECCE பிறப்பிலிருந்து 5 வயதுவரை ஆகும். பொது (பாடசாலை) கல்வி 5 வயது தொடக்கம் 18 வயதுவரை 13 வருட கல்வியை கொண்டது. தற்போது 5 தொடக்கம் 16 வயதுவரை கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2015இல் முன்மொழியப்பட்ட கல்வி சீர்த்திருத்தத்தில் அரசாங்கம் 13 வருட கட்டாய கல்வி எனும் கொள்கை தீர்மானத்தை எடுத்துள்ளது.

புதிய கொள்கை அமுலாக்கும்போது கட்டாயக் கல்வியை முடித்து பாடசாலையை விட்டு விலகுவோருக்கு தொழில்கல்வியும் பயிட்சிக்குமான மேலதிக வாய்ப்புகள் கிடைக்கும். இரண்டாம் நிலைக் கல்வியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வோர் உயர்கல்விக்காக பல்கலைக்கழகத்தில் அல்லது மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களில் சேர்வர்.

தற்போதைய கல்வி முறை பாடசாலை கல்வி, தொழில் கல்வி உயர் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி என்ற கட்டங்களை கொண்டிருக்கையில் இந்தக் கல்வி தொடரில் குறுக்கு இணைப்புகள் அவசியமானதாகும். இந்த இணைப்பு, கொள்கை ஆக்கம் மற்றும் திட்டமிடல் என வரும்போது விசேடமாக முக்கியத்துவம் பெறுகின்றது. நடைமுறைப்படுத்தலும் ஒரு ஒன்றினைப்பு செய்யப்பட்ட செயற்பாடாக இருக்க வேண்டும்.

### 2. கடுமையான பிரச்சினைகள் தாக்கங்கள், தீர்வுகள்

#### 2.1 முன் சிறுவர்பராய கவனிப்பும் கல்வியும் (ECCE)

ஸ்ரீலங்காவில், ECCE 3-5 வருட வயதுப் பிள்ளைகளால் பெறப்படுகின்றது. முன் சிறுவர்பராய கவனிப்பும் அபிவிருத்தியும் (ECCD) என்பது உள்ளூராட்சி அரசாங்க அதிகாரங்களால் வழங்கப்பட்ட பகிரப்பட்ட செயற்பாடாக உள்ளது. அதே சமயம் தனி ஆட்களாலும் சமய நிறுவனங்களும் NGOக்கள் மற்றும் INGOகள், வேறு (இலாபமில்லா) சேவை நிறுவனங்களும் நடத்தப்படுகின்றன. 17,023 ECCE மையங்களில் 29,341 ஆசிரியர்கள் இந்த நாட்டில் இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ECCE சகல இடங்களிலும் சமமாக பரவலாக அமையாததால் இது இழக்கப்பட்ட வாய்ப்பாக உள்ளது.

10 எழுத்தாளர் குழு: மதுர வேஹெல்ல (தலைவர்) ஜயந்த பாலசூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 2.1.1 சமகால நிலையும், பிரச்சினைகளும், பிரச்சினையான விடயங்களும்

முன் - ஆரம்பக் கல்வி மீதான கட்டுப்பாட்டு சட்டகமும் கொள்கையும் சேவை வழங்குனர்களால் சமமாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. இதனால் தரம் தொடர்பான பிரச்சினைகள் உள்ளன. அநேகமான நடுத்தர மற்றும் உயர்வருமான நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து முன்ஆரம்பக் கல்வியில் பங்குபற்றல் குறைவாகவே உள்ளது. ஸ்ரீலங்காவில் 60 சதவீதமான பிள்ளைகள் முன் ஆரம்பக் கல்வியைப் பெறுகின்றனர். இருப்பினும் குறைந்த வருமான குடும்பத்து பிள்ளைகளின் பங்குபற்றல் குறைவாகவே உள்ளது. மேலும் ECCE மீதான புள்ளிவிவரங்கள் புதுப்பிக்கப்படுவதில்லை.

முறைமையான சேவை வழங்கள் வாய்ப்பு இன்மை மற்றும் ECCEக்கான தர நிர்ணய பொறிமுறைகள் இன்மை அரசாங்க வளங்களின் மீதான குறைந்த முதலீடு, ECCE தனியார் துறை நிதிப்படுத்தலில் கூடுதலாக தங்கியிருத்தல் ஆகிய முக்கிய பிரச்சினைகள் உள்ளன.

#### 2.1.2 வரக்கூடிய பொருளாதார சமூக மற்றும் சுற்றுச்சூல் தாக்கங்கள்

இது பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நீதி என்பவற்றை உயர்த்துவதில் இழக்கப்பட்ட வாய்ப்பு ஆகும். சர்வதேச சான்றுகள் ECCEஇல் செய்யப்படும் முதலீடு உயரளவான திரண்ட நன்மையை கொண்டுவருவதாக காட்டுகின்றன. மேலும் இது பொருளாதார வளர்ச்சி மற்றும் சமநீதி ஆகியவற்றை மேம்படுத்தும். ஆகவும் கூடிய செலவு-நன்மை கொடுக்கும் வழியாகவும் உள்ளது.

#### 2.1.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

ECCEக்கான கூட்டு ஒழுங்காக்கல் பொறிமுறை மற்றும் முறையான சேவை வழங்கள் பொறிமுறை என்பவற்றை குறிப்பாக கூறும் தேசிய கொள்கை சட்டகம் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய ECCEக்கான தந்திரோபாய திட்டத்தை விருத்தி செய்க. இது தனியார் மற்றும் அரசாங்கத்துறையூடாக செய்யப்படலாம். இந்த கொள்கை சட்டகம் சேவை வழங்குதலின் தரத்தை உறுதி செய்வற்கு சீரான தரங்களின் அத்தியாவசியமான அம்சங்களை தெளிவாக தெரியப்படுத்த வேண்டும். ஒழுங்குப்படுத்தல் பொறிமுறை - சாத்தியமான சகல மாதிரியுருக்கள், தாக்க விளைவுள்ள ECCE ஆசிரியர் கல்வி மாதிரியுரு வளப்படுத்தும் தந்திரோபாயம், தனியார் துறை உதவி வழங்குனர்களை ஊக்குவிப்பதற்கான அரசாங்க பக்க தலையீடுகள் ஒழுங்கான தரவு சேர்ப்பு நடைமுறைகளுடன் வினைதிறன் மிக்க கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பொறிமுறை என்பவற்றை அடக்கியதாக இருக்க வேண்டும். ECCEஇல் சகல பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்வதை சாத்தியமாக்க சேவை வழங்கள் பொறிமுறை ஒரு நாடளாவிய ECCE வலையமைப்பை உருவாக்க வேண்டும். இதே சமயம் குறைந்த வருமான குடும்பங்களின் பிள்ளைகளுக்கு அரசாங்க நிதியில் ECCE சேவை வழங்க வேண்டும்.

### 2.2 பொது (பாடசாலை) கல்வி

#### 2.2.1 தற்போதைய நிலை, பிரச்சனைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்கா ஆரம்ப நிலையிலிருந்து பல்கலைக்கழக கல்வியில் முதல் பட்டம் வரை இலவச கல்வியை வழங்குகின்றது. ஒவ்வொரு பிள்ளைக்கும் பாடசாலை கல்வி கிடைப்பதை உறுதி செய்ய நாடு முழுதும், தேவையான வளங்களுடனான ஒரு பாடசாலை வலையமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இந்த பாடசாலைகளிலுள்ள சகல ஆசிரியர்களும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டு சம்பளம் வழங்கப்படுகின்றனர். இங்கு மாணவர்கள் பல நலன்புரி சேவைகளின் நன்மைகளை அனுபவிக்கின்றனர். இந்த நலன்புரி சேவைகளில் - இலவச புத்தகம், இலவச சீருடை, மதிய உணவு, பல் சிகிச்சை அடங்கலாக சுகாதார சேவைகள், புலமைப் பரிசில்கள் தேவையான மாணவர்களுக்கு பணவசதி மாணிய அடிப்படையிலான போக்குவரத்து என்பன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கும். விசேட கல்வி தேவைகள் (SEN) உள்ள மற்றும் இயலாமை உள்ள பிள்ளைகளுக்கு – நிலைக்குத்து சமநீதிக்கோட்பாட்டுக்கு அமைய சம வாய்ப்புகளை உறுதி செய்ய விசேட வசதிகள் வழங்கப்படுகின்றன. பிரச்சினையுள்ள விடயங்களில் சில பின்வருமாறு:

- நாடு முழுதிலும் சமதரமான கல்வி ஏற்பாடும் தரமான கல்வியைப் பெறும் வழிவகைகளும் பற்றாக்குறையாக உள்ளன. இவற்றுள் சேவைகள் வசதிகள் வழங்குவதில் ஏற்றத்தாழ்வு அதாவது சமநீதியற்ற ஆசிரியர் பகிர்வு, கற்பித்தலின் தரத்தில் வேறுபாடுகளுக்கு இட்டுச் செல்லும் சம தரங்கள் மற்றும் பயிற்சி இல்லாத ஆசிரியர்கள் காணப்படுதல், விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளுக்கும் உள சமூக ஆலோசனை தேவையான பிள்ளைகளுக்கும் போதுமான சேவைகள் வசதிகள் கிடையாமை, உயர் மட்ட கல்வி வாய்ப்புகளான கணிதம் மற்றும் விஞ்ஞான ஆய்வு கூடங்கள மற்றும் கவின்கலை கல்வி வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பவை சமமாக பகிரப்படாதிருத்தல் என்பன அடங்கும். ஒட்டுமொத்தத்தில் இந்த விடயங்களை திருத்துவதற்கான அரசாங்க நிதி பற்றாக்குறை உள்ளது.

- மாணவர்கள் வேலைவாய்ப்புக்கு அல்லது மேலும் கற்பதற்கு தேவையான பலவிதமான திறன்களை வெளிப்படுத்தவும் விருத்தி செய்யவும் கூடிய வகையில் திறன்களை கல்வியினுல் இணைக்கும் வகையில் கலைத்திட்டம் அமையவில்லை. மேலும் பாட நெறிகள் வேலை உலகுக்கு தொடர்பு இல்லாதாக காணப்படுகின்றன. வேலை வாய்ப்புக்கு தேவையான திறன்களின் தொகுதி ஆதரிக்கப்படுவதில்லை. பல தசாப்பதங்களாக கல்விக்கும் வேலை உலகின் தேவைக்கும் இடையே உள்ள பொருத்தம் இன்மை பல சமூக, பொருளாதார அரசியல் பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்து வருகின்றது. மேலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் போதிய அளவான கவனம் செலுத்தப்படுவதில்லை.

- இந்த நாட்டில் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வி சகலருக்கும் கிடைக்கின்றது, இருப்பினும் தரம் 11 வரையில் 12 சதவீதமான பிள்ளைகள் இரண்டாம் நிலை கல்வியை பூர்த்தி செய்வதில்லை. தரம் 11க்கு 88 சதவீதமானோர்தான் வந்து சேர்கின்றனர். ஏனையோர் இடை விலகி விடுகின்றனர். பெண்களுக்கான தப்பி வரும் வீதம் (SR) உயர்வாக (90 சதவீதம்) இருக்க ஆண்களுக்கான SR 86 சதவீதமகவே உள்ளது. இந்த நிலைமைக்கு வறுமை, போக்குவரத்து பிரச்சினைகள், உடல் நலம் சார்ந்த பிரச்சினைகள், இள வயது திருமணங்கள் வேலை உலகுக்கும் கல்வித் துறைக்கும் இடையில் சம்பந்தம் இன்மை, பரீட்சைமையமானதும் நூல் கல்வி சாதனையை முக்கியப்படுத்துவதுமான பாடசாலை கல்விமுறை தொழில் பயிற்சி மற்றும் தொழில்கல்வியை கற்க விரும்பும் மாணவர்களுக்கு வசதிகள் ஊக்குவிப்புகள் இன்மை, சில பகுதிகளில் சேவை வழங்களில் பல குறைபாடுகள் காணப்படுதல் என்பனவே காரணங்கள் ஆகின்றன.

- மாணவர்கள் கல்வியால் அடையும் நன்மைகள்[11] குறைவாக உள்ளமை முக்கிய பிரச்சினையாகும். இதற்கான காரணங்களாக – ஆசிரியரின் தராதரம் குறைவாக இருத்தல், மாணவர் மையப்படாத கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு முறைகள், பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் குறிப்பான தேவைக்கேற்பட்ட பயன்படுத்தக் கூடியவாறு நிதியை பாடசாலைக்கு நேரடியாக வழங்காமை – என்பன உள்ளன. இதற்கும் மேலாக மிக அதிகலவான கல்விசார் வேளைப்பளு, சோதனைகளுக்கு (தரம் 5 புலமைப்பரிசில் க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) பரீட்சைகள் மீதான கடும் அழுத்தம் என்பவை மாணவர்களை சாதாரண கலைத்திட்டத்திலிருந்து விலகச் செய்து பரீட்சையை நோக்கிய கல்விக்குத் தள்ளிவிடுகின்றது.

---

11 கல்வி அமைச்சால் ஆணை வழங்கப்பட்ட கொழும்பு பல்கலைகழகத்தின் தேசிய, கல்வி ஆராய்ச்சி (NEREC) நிலையத்தால் நடத்தப்பட்ட தரம் 4 மற்றும் எட்டில் (8) (2012 - 2016) மாணவர் மதிப்பீடு பற்றிய தேசிய மதிப்பீடுகளால் சான்றுப்படுத்தப்பட்டவை. சில கலைத்திட்டங்கள் கற்றல் மற்றும் கற்பித்தலில் நவீன போக்குகள் மற்றும் தேவைகளை பிரதிபலிக்கும் வகையில் இதுவரை வரையப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஸ்ரீலங்காவில் ஆசிரியர் நியமனம் தேசிய கல்விக் கல்லூரிகளில் பயிற்றப்பட்டவர்களுக்கும் கல்விமாணி (B.Ed) பட்டம் பெற்றவர்களுக்கும் வழங்கப்படுகின்றது. ஆயினும் எந்த வித ஆசிரியர் பயிற்சியும் பெறாத கலைமாணி (B.A) விஞ்ஞானமாணி (B.Sc) பட்டம் பெற்றவர்களும் ஆசிரியர் நியமனம் பெறுகின்றனர். இது கற்பித்தலின் தரத்தை பாதிக்கின்றது. மேலும் தேசிய கல்விக் கல்லூரிகளில் வழங்கப்படும் துறைசார் பயிற்சியும் குறைபாடு உள்ளது.

- பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு தகுதியுள்ள ஆசிரியரிகள் பற்றாக்குறை உள்ளது. இது மாணவர்கள் இருமொழி கல்வியை பெறும் வாய்ப்புகளை குறைப்பதாக உள்ளது.

- வசதிக்குறைவு, வளப்பற்றாக்குறை குறைவான சம்பளம் கஷ்டப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்கான ஊக்குவிப்புக்கள் இன்மை என்பன காரணமாக ஆசிரியர்களிடம் கிராமிய பாடசாலைகளில் வேலைசெய்ய தயக்கம் காணப்படுகின்றது.

- குடியியல் கல்விக்கு பாடசாலை கலைத்திட்டத்தில் போதிய கவனம் வழங்கப்படாமை இன்னொரு பிரச்சினையாகும். இந்த பாடத்தில் நீதி, பல்லின, பல்சமய ஒற்றுமை விழுமியங்கள் அறம் என்பன அடங்கியுள்ளன. இந்தப்பாடம் தரம் 9 வரைதான் கட்டாயமானதாக உள்ளது. 10, 11 தரங்களில் இது விருப்பத்தேர்வுக்குரிய பாடமாகின்றது. இந்த பாடம் தரங்கள் 12,13 இல் கற்பிக்கப்படுவதே இல்லை.

- ஸ்ரீலங்காவில் விசேட கல்வித் தேவையுள்ள மாணவர்களின் கல்விக்கென குறிப்பான சட்டம் ஏதும் இல்லை. விசேட கல்வித் தேவை (SEN) மீதான தேசிய கொள்கையை வகுத்துள்ள ஒரு கொள்கை ஆவணம் இதுவரை தயாரிக்கப்படவில்லை. விசேட கல்வித் தேவையுள்ள சகல மாணவர்களும் இந்த நாட்டில் இனங்காணப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. விசேட கல்வித் தேவையின் பரப்பு தொடர்பில் பல ஆசிரியர்களுக்கு மட்டுமட்டான அறிவுதான் உள்ளது. விசேட கல்விக்காக மட்டான மனித, நிதி வளங்கள், கருவிகளே உள்ளன. மேலும் விசேட கல்வித் தேவை பற்றி மறையான மனப்பாங்கும் நிறைய உண்டு. விசேட கல்வித் தேவையில் (SEN) பயிற்சி, வாண்மை விருத்தி என்பன போதிய தரத்தில் இல்லை. SEN தராதரமுள்ள ஆசிரியர்கள் வேறு திணைக்களங்களில் வேறு வேளைகளை பெற்றுச் செல்வதால் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. SEN ஆசிரியர்கள் தேவையைவிட 36 சதவீதம் குறைவாகவே உள்ளனர். SEN கல்வி வழங்குவதில் பொறுப்புக் கூறும் தன்மை மிக குறைவாகவே உள்ள கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் கண்காணிப்புகள் இன்மையாள் கல்வி முறைமையில் பொறுப்புக் கூறும் சட்டகம் நல்ல முறையில் செயற்படுவதில்லை.

- கொள்கை வகுத்தல் மற்றும் தீர்மானம் எடுத்தல் என்பன சான்று அடிப்படையில் இருக்க வேண்டும். ஆனால் எழுந்தமானமான செயற்பாடுகள் - குறுகிய கால நோக்குடன் பல கொள்கைகளை புகுத்துவதில் முடிந்துள்ளது. இவ்வாறாக இந்த SEN முறைமையின் உண்மையான தேவை ஆராயப்படாமல் கொள்கைகள் திணித்துள்ளது. இது நாட்டின் கல்வித்துறையின் நீண்டகால அபிவிருத்தியில் பாதகமான விளைவுகளை உருவாக்குகின்றது.

- தற்போது மீத்திறன் மாணவர்களை அடையாளம் காணவும் அவர்களின் தேவையை பூர்த்தி செய்யவும் முறையான பொறிமுறை இல்லை. இவர்களின் சிந்தனையும் கண்டுபிடிப்பும் பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும் அறிவு அடிப்படையிலான சமூகத்தை உருவாக்கவும் பெரிதும் தேவையாக உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டும். (Box S.2.1ஐ பார்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெட்டி S2.1. மீத்திறன் உள்ள மாணவர்களுக்கு என விசேட பாடசாலைகள் மற்றும் வசதிகள்**

பல நாடுகள் புத்தாக்க கல்வியை உயர்த்துவதற்கு முயற்சி செய்கின்றன. இதற்கான மாதிரியுருக்கள் ஆக்கப்பட்டும் வருகின்றன. பயன்படுத்தக கூடிய மாதிரியுருக்கள் காணப்படினும் அவை ஸ்ரீலங்காவின் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும். கண்டுபிடிப்புகளை நேரடியாக பாடசாலை கலைத்திட்டங்களில் சேர்ப்பது அவசரப்பட்ட காரியமாகவும் ஆபத்தானதாகவும் ஆகும். பரிசோதனைக்கான வாய்ப்பும் கண்டுபிடிப்பு கல்வியை சூழலுக்கு ஏற்ப மாற்றியமைத்தலும் தேவையாக உள்ளது. இரண்டாம் நிலைக் கல்வியில் பாடசாலை முறைமையினுள் பல்வேறு சிறப்புத் தேர்ச்சிகளையும் வித்தியாசமான அனுமதி நியமங்களையும் கொண்ட விசேட கலைத்திட்ட பாடசாலைகள் “Magnet Schools” களை உருவாக்க இடமளிக்க முடியும். இவை பல்வகைமையுடன் தனித்து இயங்குபவையாக இருக்கும். கம்பனிகளுடன் இணைப்பும் சிறிது நிதியையும் வழங்கக் கூடிய கைத்தொழில் சங்கங்களுடன் கூட்டாக தொழிற்படுவதும் சிறப்பாக இருக்கும். மூன்றாம் நிலை கல்வி மட்டத்தில் பல வகையான முன்னெடுப்புகளை தொடக்க முடியும். இவை மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் பல வருட காலத்தில் பெறப்பட்ட அனுபவத்தினால் நன்மை அடையலாம்.

வழங்கியவர்: றொஹான் சமரஜீவ

**2.2.2. வரக்கூடிய பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள்**

- கல்வியில் அசமத்துவம் காரணமாக பாதிக்கப்பட்ட பிள்ளைகள் சந்தைப்படுத்தக் கூடிய தகைமை இன்றியும் தொழில் சந்தையில் வேலைகளுக்கான தகுதியின்றியும் பாடசாலையை விட்டு நீங்குகின்றனர். இது இவர்களுக்கான தொழில் தெரிவுகளையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் சமூக அபிவிருத்தியையும் பாதிக்கின்றது.
- நாட்டில் காணப்படும் கல்வி தொடர்பான கிராம நகர அசமத்துவம் பாதிக்கப்பட்ட குழுவினருக்கு மனவழுத்தத்தை கொடுக்கின்றது. பாதகமான நிலையில் உள்ள மாகாணங்கள், பிராந்தியங்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடைய முடியாமலும் செழிப்பு இன்றியும் உள்ளன.
- நல்ல வளங்களுடனான பாடசாலைகளுக்கான கேள்வி பாடசாலை முறைமையில் பல ஏற்றத்தாழ்வுகளை தோற்றுவிக்கின்றது.
- அறிவு அடிப்படையிலான சேவைகளை வழங்கும் தேசிய மற்றும் சர்வதேச ஊழியச் சந்தையில் உள்ள பொருளாதார வாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கு ஆங்கிலத்தை பயன்படுத்த, பாடசாலையை விட்டு நீங்குவோருக்கு முடியாது இருத்தல்.
- கண்டுபிடிப்பு கலாச்சாரம் R&D நடைமுறைகள மற்றும் சான்று அடிப்படையிலான கொள்கைகள், நடைமுறைகள இல்லாமை பொருளாதார அபிவிருத்தியையும் முழு முறைமையின் முன்னேற்றத்தையும் தடுக்கின்றன.
- நாட்டின் எதிர்கால பொருளாதார, சமூக அரசியல் அபிவிருத்தி மற்றும் ஜனநாயகப் பங்குபற்றல் என்பவைக்குத் தேவையான மனிதவளத்தின் தரம் குறைதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிப் பிள்ளைகளுக்கான வசதிகள் மூலவளங்கள் போதிய அளவில் இல்லாமை, இவர்கள் இடைநடுவில் பாடசாலையைவிட்டு நீங்கி சமூக பிரச்சினைகளுக்கு காரணமாகின்றது.

- விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கான வலுவூட்டல் இன்மை, தேசிய அபிவிருத்தியில் அவர்கள் குறைந்த பங்களிப்பு செய்பவர்களாக ஆக்கிவிடுகின்றது.

- இளம் வயதில் அடிப்படை விழுமியங்கள், ஒழுக்க நெறிகள் மற்றும் நல்ல மனப்பாங்குகளை பெற்றுக் கொள்ள வாய்ப்பு இன்மை, இவர்கள் வளர்ந்த பின்னர் இவர்களால் சமூகத்துக்கு செய்யக்கூடிய பங்களிப்புகளை குறைத்து விடுகின்றது.

### 2.2.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- ஸ்ரீலங்காவின் கல்வி முறைமையில் காணப்படும் சமநீதியின்மை இடைவெளிகளை இனங்காண்க. சேவை வழங்களில் சமநீதியின்மையை நீக்க நடவடிக்கை எடுத்தல்

- நேர காலத்தோடு வேலை உலகில் சேர விரும்புவோரின் விருப்பத்தை திருப்தி செய்ய பாடசாலை கல்வியின் உயர் இரண்டாம் நிலைகல்விக்கு மாற்றாக, தொழில்நுட்ப, மற்றும் தொழில் கல்வி வாய்ப்புகளை அதிகரிக்கவும்.

- உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊழிய சந்தையில் காணப்படும் தற்போதைய மற்றும் எதிர்கால கேள்விகளை திருப்தி செய்வதற்கு கலைதிட்டத்தை பன்முகப்படுத்துக, நவீனமயப்படுத்துக. கற்றலை மேம்படுத்த நவீன தொழில்நுட்பங்களின் பாவனை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- அறிதல் மற்றும் சமூக, மனவெழுச்சி திறன்களை அடக்கிய விளைவு அடிப்படையிலான - நல்ல முறையில் வறையறுக்கப்பட்ட கலைத்திட்டத்தை நிறுவுக. சகல பிள்ளைகளும் வெற்றிகரமான கற்போர், சுயநம்பிக்கை உள்ளோர், நல்ல பங்களிப்பாளர் என்ற அடிப்படை நோக்கில் இந்த கலைத்திட்டம் அமைய வேண்டும். (சிங்கப்பூர் மற்றும் ஸ்கொட்லாந்தில் இவ்வாறு செய்யப்படுகின்றது).

- கலைத்திட்டத்தின் ஊடாக பலமான சமூக, கலாச்சார அடிப்படையை உருவாக்கும் கல்வி முறைமைகளை ஊக்குவிக்கவும். இதனூடாக பல்லின மற்றும் பல் சமய ஒற்றுமை ஊக்குவிக்கப்படும். மேலும் இது பலமான ஜனநாயக சமூக நீதி முறைமையுடன் ஒத்துப்போகும் சிவில் விழுமியங்கள் நன்னெறிகள் மற்றும் நடத்தை கோலங்களையும் ஊக்குவிக்கும்.

- சர்வதேச மொழிகள் (உதாரணம் ஆங்கிலம்) STEM பாடங்கள் முகியமான விஞ்ஞான பாடங்கள் (விஞ்ஞானம் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) வாண்மைசார் பாடங்கள் (மருத்துவம், பொறியியல், துணைமருத்துவம்) போன்ற பாடங்கள் வேலை வாய்ப்பு பெறுதலுக்கு உதவும்.

- பாடசாலை கல்விக்கும் மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வித் துறைகள் இடையே நிலைக்குத்தான மற்றும் கிடையான இணைப்புகளை பலப்படுத்துக. மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களின் அகன்ற வலையமைப்பை நிறுவுக.

- பாடசாலை முறைமையில் ஒழுங்கு முறையான தொழில் வழிகாட்டல் முறையை உண்டாக்கவும். இது மாணவர் தமது ஆற்றல்களை நேரத்தோடு இனம் கண்டு தமது அபிலாசைகளை விருத்தி செய்து பாடசாலை காலத்திலேயே நல்ல ஆலோசனையுடன் தமது கற்றலையும் தொழில் தெரிவுகளையும் மேற்கொள்ள முடியும். வேலை உலகின் உண்மையான கோலத்தை பிள்ளைகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். மேலும் அவர்களுக்கு கேள்வியுள்ள திறன்கள் எவை எனவும் விளங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வறிய குடும்பத்து பிள்ளைகளை இனம் கண்டு அவர்களுக்கு விசேட உதவி வழங்குக. போக்குவரத்து மாணியங்களும் வழங்கப்பட வேண்டும். உதவி தேவையானவவர்களை இனங்கண்டு மாணவர்களின் ஆரோக்கியம் பற்றி தொடர் நடவடிக்கைகளை எடுக்கவும். ஏற்கனவே உள்ள சத்துணவு திட்டத்தை வலுப்படுத்தவும். சுகாதார அமைச்சுடன் நல்ல ஒருங்கிணைவை ஏற்படுத்துக.

- ஆசிரியர்களின் வாண்மையை முன்னேற்றுக. ஏனெனில் பிள்ளைகளின் கற்றல் அதனால் அவர்கள் அடையும் நன்மை என்பவற்றை மேம்படுத்துவதில் கற்பித்தலின் தரம் பிரதான காரணியாகும். முறையான முன்சேவை ஆசிரியர் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி பெற்ற வாண்மைத்துவ ரீதியாக தகுதியுள்ளவர்களுகளை ஆசிரியர்களாக நியமிப்பதை உறுதி செய்க. இந்த நியமனங்கள் வழமை போன்றதாக அல்லது பாடசாலை அடிப்படையிலான நியமனமாக இருக்கலாம்.

- புதிய ஆசிரியர்களை பயிற்றுவித்தலை தரம் உயர்த்துக. இதன் மூலம் தொழில்நுட்பம் மற்றும் தரவுகளை பயன்படுத்தி கற்றல், கற்பித்தலை மேம்படுத்த இயலுமான ஆர்வம் மிக்க வாண்மையாளர்களாக இவர்களை உருவாக்கலாம்.

- கற்றலில் மாணவர்களின் செயன்முறைக் கல்வியை மேம்படுத்தும் நவீன கற்றல் கற்பித்தல் முறைகளை அதிகரிக்கவும். (உதாரணம் கண்டுபிடிப்பு, ஆராய்ச்சி மையப்பட்ட, ஒப்படை மையப்பட்ட முறைகள்)

- இரு மொழிக்கல்வி கொள்கை மற்றும் தொடர்பான கொள்கைகள் பற்றிய பொதுக்கொள்கையை வெளியிடுக. இதன் மூலம் இருமொழி ஆசிரியர்கள் தேவையான பயிற்சியை சேவைக்காலத்தில் அல்லது முன் சேவை காலத்தில் பெற்றுக் கொள்வது உறுதியாகும்.

- ஆசிரியர் அபிவிருத்தியின் தரம் மற்றும் நியமங்களை பேணுவதற்கு ஆசிரியர்களுக்கான ஒரு வாண்மைத்துவ பேரவையை அமைக்கவும்.

- தற்போதுள்ள ஆசிரியர் கல்விக்கான நிறுவன சட்டகங்களை முன்னேற்றுக. இதற்காக தேசிய கல்வியல் கல்லூரிகளை பட்டம் வழங்கும் மட்டத்துக்கு (NCoEs) தரம் உயர்த்தல், தேசிய கல்வியியல் கல்லூரிகள், தேசிய கல்வி நிறுவகம் (NIE) மற்றும் உள்நாட்டு பல்கலைக்கழகங்கள் இடையே தொடுப்புகளை ஏற்படுத்தல், ஆசிரியர் கல்வி மையங்களின் வலைமையப்பைப் பலப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் அவசியம். இதனால் ஒவ்வொரு கல்வி வலயத்திலும் ஆசிரியர்களுக்காள தொடர்ச்சியான வாண்மை அபிவிருத்தி (CPD) கிடைக்கும்.

- ஆசிரியர் வினைத்திறனை முன்னேற்ற – ஆசிரியர் அனுமதி பத்திரம் செயலாற்றுகை முறைமை – என்பவற்றை அறிமுகம் செய்க.

- தேசிய மற்றும் மாகாண பாடசாலைகள் இடையேயான ஆசிரியர் இடமாட்ட திட்டம் ஒன்றை செயற்படுத்துக. அதுவரை பாடசாலை குறித்த ஆசிரியர் நியமன கொள்கை அமுலாகும்.

- கஷ்டப் பிரதேச சேவையை ஊக்குவிக்கும் ஆசிரியர் ஊக்குவிப்பு முறைமைய ஏற்படுத்துக.

- வகுப்பறையில் கற்றல் விளைவுகளை எட்டுதலை முன்னேற்றுக. மேலும் மதிப்பீட்டை கலைத்திட்டத்துக்கு புறம்பான விடயமாக கருதாமல் கலைத்திட்டத்தின் முக்கியமான பகுதி ஆக்குக. மதிப்பீடு தொடர்பான தகவல் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கும் கலைத்திட்டத்தின் அபிவிருத்திக்கும பயன்படுத்தப்பட வேண்டும்.



10-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சர்வதேச பரீட்சைகளுடன் க.பொ.த (சா.த) க.பொ.த (உ.த) தகைமைகளை ஒப்பிட்டு மதிப்பிடுக.

- பாடசாலை கொடைகளை வழங்க ஒழுங்கு முறையான செயன்முறையை அமுலாக்குக.

- ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை ஆங்கில மொழி கலைத்திட்டம் மற்றும் பாடப்புத்தகங்களை தரம் உயர்த்துக.

- விசேட கல்வித் தேவை (SEN) உள்ள பிள்ளைகளின் கல்விக்கு என தனியான குறிப்பான சட்டத்தை ஆக்குக. இது கொள்கைகளுக்கான சட்டகத்தை வழங்கவும், அரவணைத்து போதலை மேம்படுத்தவும் மாணவர் பெற்றோரை வலுப்படுத்தவும் விசேட கல்வித் தேவைக்கான ஏற்பாடுகள் முறைமையை (SEN) கூடுதல் பொறுப்புக்கூறும் தன்மையினதாக்கவும் தேவையானதாகும். விசேட கல்வி தொடர்பான சட்டம் அரவனைப்புத் தன்மையின் பிரதான சுட்டியாகும்.

- விசேட கல்வித் தேவை தொடர்பான தேசிய கொள்கையை முன்வைக்கும் கொள்கை ஆவணம் ஒன்றைத் தயாரிக்கவும். இதில் விசேட கல்வி தேவைக்கான ஏற்பாடுகளுக்கான எதிர்கால மூலோபாயங்களும் அடங்கியிருக்க வேண்டும்.

- அரவணைப்பு கல்வி எண்ணக்கருக்கள், கற்பித்தல் மற்றும் கற்றல் செயன்முறைகள், கற்றல் சூழல் என்பவற்றை முன்னேற்றுக. அநேகமான பாடசாலைகள் அரவனைத்துச் செல்லும் கொள்கையில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதால் வினைத்திறன் மிக்க அரவனைப்பு தன்ம்மையை அதிகரிக்க மனித வழங்களை ஏற்படுத்தி கொடுக்கவும்.

- நிலைக்குத்தான சமநீதி கோட்பாடு மற்றும் போதுமை (adequacy) நியமங்கள் அடிப்படையிலான விசேட கல்வி நிறுவனங்களை வளப்படுத்துவதற்காக புதிய பொறிமுறைகளை அறிமுகம் செய்க. விசேட கல்வித் தேவை (SEN) அலகுகள் மற்றும் பாடசாலைகளுக்கான மனித மூலவளங்களையும் பௌதீக வசதிகளையும் வழங்குக.

- விசேட கல்வி தேவையுள்ள பிள்ளைகளின் (SEN) கல்வி உரிமைகள் தேசிய தரத்திலான கல்வி வாய்புகள், அவர்களின் கல்வி மற்றும் நலன் தொடர்பில் சமூக கடப்பாட்டை உறுதிப்படுத்தவும் ஒரு சமூக பட்டயத்தை விருத்தி செய்க.

- விசேட கல்வி தேவை வழங்குதலில் முன் சேவை பயிட்சியை முனனேற்ற தேசிய கல்விக் கல்லூரிகளின் "விசேட கல்வி தேவை" கலைத்திட்டத்தை தரமுயர்துக.

- தேசிய கல்வியில் கல்லூரியின் விசேட கல்வித் தேலை கலைத்திட்டத்தில் உள்ள மீத்திறன் உள்ள, திறமை வாய்ந்த பிள்ளைகளின் தேவைகளை இனங்கானவும் பூர்த்தி செய்யவும் பயிற்சிகளை சேர்த்துக் கொள்க.

- கல்வி முறைமையில் ஒட்டுமொத்தமான ஆளுகை அமைப்பை மீளமைக்கவும்.

- நடைமுறைப்படுத்தல் மட்டங்களுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கவும்.

- இந்த முறைமையில் சான்று அடிப்படையிலான கொள்கை மற்றும் திட்டமிடல் கலாசாரத்தை நிறுவுக.

- கொள்கை வகுத்தலுக்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடைமுறைகளை மேம்படுத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முறைமையான பொறுப்புக்கூறும் சட்டகத்தை அறிமுகம் செய்க.
- மீத்திறன் மிக்க மற்றும் திறமையான மாணவர்கள் பற்றி ஒரு கொள்கை கூற்றை விருத்தி செய்க. இதில் அவர்களை எவ்வாறு இனம் காணலாம், அவர்கள் தேவைகளை பூர்த்தி செய்யலாம் என விவரிக்கவும்.
- வெவ்வேறு மட்டங்களில் இளம் வாண்மையாளர்கள் விருத்தியை மேம்படுத்துக. (அது பாடசாலை, வலய, மாகாண தேசிய)

## 2.3 தொழில்நுட்பம் மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி

### 2.3.1 சமகால நிலைமை, பிரச்சினைகள், பிரச்சினையுள்ள விடயங்கள்

ஸ்ரீலங்காவிலுள்ள தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறை, தேசிய மற்றும் சர்வதேச ஊழியச் சந்தைக்கான திறன் பெற்ற உழியத்தை உற்பத்தி செய்வதில் முதல் நிலையில் உள்ளது. அரசாங்கம் TVET துறையின் விரிவுபடுத்தலுக்காக கணிசமான தொகை அரசாங்க பணத்தை முதலீடு செய்கின்றது. மேலும் அரசாங்கம் TVET நிகழ்ச்சித் திட்டங்களை இலவசமாக வழங்குகின்றது. இருப்பினும் TVET நிகழ்ச்சி திட்டங்களின் உயர்தர குறைவு மற்றும் ஊழியச் சந்தைப் பொருத்தப்பாடு இன்மை ஆகிய பிரச்சினைகள் உள்ளன. நிரம்பல் பக்க பயனாளிகளை பயிற்றுவதற்கும் சந்தை கேள்விகளுக்கும் இடையே இணைப்பு பலவீனமாக இருப்பது இதற்கான காரணமாகும். கலைத்திட்டங்கள் காலங்கடந்தவை, தரமும் கேள்விக்கு உரியது. வேலைப் பழக்க வழக்கங்கள், மனப்பாங்குகள் ஆங்கில மொழிப் புலமை மீதான தேர்ச்சி பலமானதாக இல்லை.

### 2.3.2. வரக்கூடிய பொருளாதார சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்கள்

- TVET இனால் கிடைக்கும் ஊழிய சந்தை நலன்கள் மிகவும் குறைவு.
- TVET துறையில் அரசாங்க முதலீடு பெருமளவிலானதாக இருப்பினும் புதிதாக தோன்றிவிடும் முயற்சியாண்மைகளில் வேலை பெறுவதற்கு T VET பயிற்சி பெற்ற ஊழியர்களின் தயார் நிலை குறைவாக உள்ளது.
- நாட்டில் உள்ள திறன் பற்றாக்குறை மற்றும் முறைசார் முறைசாரா வணிகத் துறையின் குறைவான உற்பத்தித் திறன்
- நாட்டினால் நெகிழ்சித் தன்மையுள்ள ஊழியர்களை உருவாக்க முடியாது உள்ளமையால் வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர முடியாமல் இருப்பது.

### 2.3.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல் தீர்வுகள்

- TVET துறை நிகழ்ச்சி திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டுக்காக ஒரு ஒழுங்குமுறையான பொறிமுறையை விருத்தி செய்க.
- TVET துறையில் குறிப்பாக - பயிற்சி நிரம்பலை கேள்வியுடன் பொருந்துவதாக ஆக்குவதற்கு நிரம்பல்பக்க இறுதிப் பயன்பாட்டாளர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் சந்தை கேள்விக்கும் இடையே பலமான இணைப்பை உருவாக்க ஆதரவு அளிக்கும்.
- தனியார் துறை ஈடுபாடுகளை TVET துறையில் ஊக்குவிக்கவும்.
- இளைஞர்களுக்கு உறுதியான தொழில் ஆலோசனை வழங்க ஒரு ஒழுங்கு முறையான தொழில் வழிகாட்டல் முறைமையை உருவாக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.4 மூன்றாம் நிலை மற்றும் பல்கலைக்கழக கல்வி

#### 2.4.1 தற்போதைய நிலை, பிரச்சினைகள், பிரச்சினையுள்ள விடயங்கள்

ஸ்ரீலங்காவில் பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வித்துறைகள் பிரதானமாக அரசுடமையாக உள்ளன. இதைவிட பல தனியார் உயர்கல்வி நிறுவனங்களும் உள்ளன. அவற்றில் பல வெளிநாட்டுப் பட்டங்களை வழங்கும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்தவையாக உள்ளன. அரசுடமை பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுடான உயர் கல்விக்கான கேள்வியை சமாலிக்க முடியாத நிலையில் நாடு உள்ளது. அரசாங்கத்திட்டம் பல்கலைக்கழக நுழைவுக்கான தகுதி பெறும் மாணவர் யாவரையும் இணைத்துக் கொள்ளும் வளங்கள் இன்மையே இதற்கான காரணமாகும். இது இந்த நாட்டின் கலிவித்துறையில் பாரிய பிரச்சினையாக உருவாகியுள்ளது.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புதிய அறிவு உருவாக்கம், கண்டுபிடிப்பு மற்றும் புத்தாக்கம் என்பவை தொடர்பான ஆராய்ச்சியில் பல்கலைக்கழகங்களில் பட்டதாரிகள் பயிற்றுவிப்பதில் போதுமான அழுத்தம் இல்லை. இவ்வாறான சூழலை தோற்றுவிக்கக் கூடிய வாண்மைத்துவ தகுதி மற்றும் அனுபவம் உள்ளவர்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதே இதற்கான காரணமாகும். ஊழிய சந்தைத் தேவையுடன் தொடர்பான பாட நெறிகளை வடிவமைக்க மற்றும் தொடங்க பல்கலைக்கழகங்கள் சீராக செயற்படாமையால் உயர் கல்வி ஏற்பாடுகளுக்கும் ஊழிய சந்தைக்கும் இடையில் பொருத்தப்பாடின்மை உள்ளது. சில கலைத்திட்டங்களில் மற்றும் கற்பித்தல் முறைகளின் இழிந்த தரம், மற்றும் வேலைத்தலத்தில் முன்னேற அவசியம் தேவையான ஆங்கில மொழிப்பயிற்சி தேர்விலும் சில திறன்களை முன்னேற்றுவதிலும் குறைவாக உள்ள சாதனைகள் என்பன சில சமகால பிரச்சினைகளாகும்.

#### 2.4.2 வரக்கூடிய பொருளாதார சமூக சுற்றுச்சூழல் தாக்கங்கள்

- படித்த இளைஞர்களின் வேலையின்மையை அதிகரிப்பதாக பட்டதாரிகளின் வேலையின்மை உள்ளது.
- தகுதி பெற்ற மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகள் இழக்கப்படல்
- பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் அபிவிருத்திக்கும் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் பற்றாக்குறையான பங்களிப்பு
- புத்தாக்கம் போதியளவு இன்மை
- பட்டதாரிகளின் அறிவு மற்றும் திறன்கள் ஊழியச் சந்தையுடன் பொருந்தாமையால் புதிய பட்டதாரிகளின் தரதத்தில் வேலை கொள்வோர் திருப்தியடையாமலும் நம்பிக்கை இன்றியும் இருத்தல்

#### 2.4.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல், தீர்வுகள்

- உள்நாட்டு மற்றும் சர்வதேச ஊழிய சந்தையில் தற்போதைய, எதிர்கால கேள்விகளை கவனத்தில் எடுக்க பல்கலைக்கழகங்கள் மற்றும் வேறு உயர்கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டத்தை பன்முகப்படுத்துக, நவீனமயப்படுத்துக.
- அரசாங்க துறை மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வி வாய்ப்புகளை விருத்தி செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயர்கல்விக்கான வாய்ப்புகளை விரிவாக்க அரசாங்க – தனியார் பங்குடமை நிகழ்ச்சித் திட்டங்களை (PPP)அதிகரிக்கவும்
- சர்வதேச நடைமுறைகளுக்கு அமைய பல்கலைக்கழக கற்பித்தல் மற்றும் கற்றல் தேவைகளை நவீனமயப்படுத்துக.
- வெளிநாட்டு உயர்பட்டங்கள் மற்றும் பயிற்சியூடாக தகுதி வாய்ந்த கல்விசார் ஊழியர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அநுபவங்களை கிடைக்கச் செய்க.
- ஒவ்வொரு பல்கலைக்கழகங்களிலும் ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைப் பிரிவுகளை அமைத்தும் கைத்தொழில்களுடன் நெருக்கமான இணைப்பை விருத்தி செய்தும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடைமுறைகளை மேம்படுத்தியும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கலாச்சாரத்தை நிறுவுக.
- உயர்கல்வியின் தரத்தையும் ஆங்கிலத் தேர்ச்சியையும் மேம்படுத்துக.
- யாருக்கும் விலக்களிக்காமல் சகல பல்கலைக்கழக சேவையணி அங்கத்துவர்களையும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களில் பங்கெடுக்க ஊக்கப்படுத்துங்கள்.
- ஆராயச்சிக்கு ஆதரவான பல்கலைக்கழக நிர்வாக கலாசாரத்தை வளர்த்தெடுக்கவும்.
- சகல பல்கலைக்கழக பீடங்களிலும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தின் வெளியீடுகளை ஊக்குவியுங்கள்.
- பல்கலைக்கழகங்களுக்கு கூடுதல் அதிகாரத்தையும் தீர்மானம் எடுக்கும் சக்தியையும் கையளிக்கவும்.

## 2.5 துறைகளிடையேயான தொடுப்புகள்

### 2.5.1 சமகாலநிலை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

பல்வேறு உபதுறைகளிடையே கல்வி என்ற விடயம் பிரிந்துள்ளதாலும் தொடர்பான அதிகாரங்கிளிடையே தொடர்பாடல் குறைவாக இருப்பதாலும் கல்வித்துறையில் ஒத்திசைவற்ற, முரண்பாடான கொள்கைகள், நடைமுறைகள் காணப்படுகின்றன. சமநீதியற்ற கல்விக்கான நிதி ஒதுக்கீடு – கல்வியின் வெவ்வேறு உபதுறைகளிடையே முதலீட்டில் மாறுபாடுகளுடன் ஒத்திசைவு இன்மையாலும், கல்வியின் முன்னுரிமைகளை மாற்றுவதாலும், கல்விக்கு விசேடமாக உபதுறைகளிடையே வளங்களை கொடுப்பதற்கான ஒழுங்கு முறையான பொறிமுறை இன்மையாலும் ஏற்படுவதாகும்

### 2.5.2 வரக்கூடிய பொருளாதார சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்கள்.

- கல்வித்துறையினுல் காணப்படும் உபதுறைகள் இடையேயான ஒத்திசைவு இன்மைகளும் முரண்பாடுகளும் கல்வித்துறையின் முழுமையான அபிவிருத்தி மீது பாதகமான விளைவை ஏற்படுத்தும்.
- நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும் ஒரு நீண்ட கால முதலீடாக கருதாமல் கல்வி மீதான முதலீட்டை ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய முதலீடாக மதிப்பீடு செய்வது நாட்டின் முழுமையான அபிவிருத்திக்கான திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்தின் மீது பாதகமான விளைவை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.5.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், தீர்வுகளை அமுலாக்கல்

- கல்வியின் உப துறைகளில் தொடர்பான அதிகாரிகளிடையே தொடர்பாடலை முன்னேற்றுக.

- உபதுறைகளிடையே (பாடசாலைக் கல்வி, தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வி, மூன்றாம் நிலை மற்றும் உயர் கல்வி) தொடர்பாடலை முன்னேற்றுக.

- கல்விக்கும் மற்றும் தொடர்பான துறைகளிடையேயும் இணையை ஏற்படுத்துக.

- கல்விக்கு வளமூட்டவென முறைமையான பொறிமுறையை அபிவிறுத்தி செய்க.

- கல்வி மீதான அரசாங்கத்தின் முதலீட்டின் விகிதாசாரத்தை கணிசமான உயர்துக

## 3. நிலைபேறுமைக் கண்ணோட்டம் - 2020 மற்றும் அப்பால்

கல்வித்துறைக்கான மூலோபாய பரிந்துரைகளின் நிலைபேறுமையை உறுதி செய்ய 2020க்கான குறுங்கால நடவடிக்கைகள் - 2025க்கு ஆன நடுத்தரகால செய்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2030க்கான நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை இனங்கண்டு ஒரு பெரும் திட்டத்தை விருத்தியாக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத் திட்டமூடாக நிதி மற்றும் வேறு மூலவளங்கள் கிடைப்பது முன்மொழியப்பட்ட பெரும் திட்டத்தின் அமுலாக்கத்துக்காக உறுதி செய்யப்பட வேண்டும்.

2030 அளவில் ஸ்ரீலங்காவை உயர் நடுத்தர வருமான பொருளாதாரமாக உருவாக்கும், ஸ்ரீலங்காவின் தொலைநோக்குக்கு அமைய கல்வி முறைமை, யாவருக்கும் (முதியோர் கல்வி உட்பட) தரமான கல்வியின் அடிப்படைத் தரத்தை வழங்குவதோடு நின்றுவிடாமல் மீத்திறன் மிக்க மாணவர்களுக்கு ஆகவும் பிந்திய தொழில்நுட்பம், கலைத்திட்டம் மற்றும் முன்னேறிய நாடுகளில் உள்ள கற்பித்தல் முறைகள் என்பவற்றை பயன்படுத்த மிகவும் செலவு கூடிய கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டும். இதனால் அரசியல் தலைமை, கொள்கை வகுப்பாளர், தொழில்நுட்ப ஆட்சியினர் கல்வியாளர் ஆகியோரின் ஒத்துழைப்பும் அர்பணிப்பும் 2030 அளவில் கல்வித்துறைக்கு என முன்மொழியப்பட்ட அதிநவீன நிகழ்ச்சி நிரலின் விளைவுகளை சாதிப்பதற்கு அவசியமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள்

# S3

## S3. வலு[12]

### 1. தற்போதைய நிலைமை

ஸ்ரீலங்காவின் வலுத்துறை பிரதானமாக சுதேச ஆரம்பநிலை வலு நிரம்பல் தளத்திலிருந்து இப்போது பிரதானமாக இறக்குமதி செய்யப்படும் ஆரம்ப வலு நிரம்பல் தளத்துக்கு மாறியுள்ளது. தொண்ணூறுகளின் நடுப்பகுதிக்கு முன்னர் உயிர்திணிவு, நீர்மின் மற்றும் இறக்குமதியான பெற்றோலியம் என இருந்த பிரதான ஆரம்பநிலை வலு மூலங்கள் இப்போது உயிர்திணிவு, நீர்மின், பெற்றோலியம் கரி என்பவற்றின் கலவையாகியுள்ளது. 47.3 சதவீதமாக இருந்த சுதேச உயிர்திணியின் பங்கு இக்காலப்பகுதியில் 38.8 சதவீதமாக குறைந்துள்ளது. (2005 – 2015 காலத்துக்கான ஆரம்ப நிலை வலு நிரம்பலுக்கான அட்டவணை S3.1ஐ பார்க்கவும்). 1979லிருந்து இந்த நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியம், கரி எனும் நாட்டின் ஆரம்பநிலை வலு நிரம்பல் நாட்டின் வெளிநாட்டு நாணயத்தின் இழப்பை நீண்ட காலத்துக்கு தொடரச் செய்யும். (உரு S3.1ஐ பார்க்கவும்)

கடந்த காலங்களில் தலைக்குரிய வலு நுகர்வு அதிகரித்து வரினும் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தின் வலு நுகர்வுச் செறிவு குறைவாக உள்ளது. அதாவது GDPயில் ஒரு மில்லியன் LKR உற்பத்தி செய்ய 0.46TJ வர்த்தகவலு பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறாக குறைந்த வலுச் செறிவு புள்ளிகளை பெற்று ஸ்ரீலங்கா திருப்தியோடு இருப்பதற்கு காரணம் சேவைத் துறைகளின் ஆதிக்கம், கைத்தொழில் மற்றும் விவசாய துறைகளின் விளைவுகளைவிட கூடுதலாக இருப்பதாகும். வரும் காலத்தில் வலுச் செறிவு எவ்வாறு மாறுபடும் என்பதை பொருளாதாரத்தில் வரக்கூடிய அமைப்பு ரீதியான மாற்றங்களில் தங்கியுள்ளது. அண்மையில் அபிவிருத்தியடைந்த பல நாடுகள் நாட்டின் வலுச்செறிவு அதிகரிப்புக்கு இட்டுச் செல்லும் கடுமையான கைத்தொழில் மயப்படுத்தல் பாதையை எடுத்தன எனும் யதார்த்தத்தையிட்டு ஸ்ரீலங்கா கவனியாது விட முடியாது.

### 2. கடும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

### 2.1. மின் உற்பத்தியின் அதிகரித்த செலவு

#### 2.1.1.சமகால நிலைமை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

மின் உற்பத்தியின் செலவு நுரைச்சோலை கரி அனல் மின் உற்பத்தி நிலையத்தின் இயக்கத்துடன் குறைந்தது. மின் உற்பத்தியின் சராசரி செலவு (மின் கொண்டு செல்லல் மற்றும் விநியோக செலவுகள் தவிர) 2013இல் kWh ஒன்றுக்கு 18.34LKR ஆக 25 சதவீத வீழ்ச்சியை கண்டது. இந்த நிலையில் 2015இல் அரசாங்கம் திருகோணமலை (சம்பூர்) மின் உற்பத்தி நிலையத் திட்டத்தை இரத்துச் செய்தது. 2016 இயங்கத் தொடங்குமென திட்டமிடப்பட்ட இத்திட்டம்

12 எழுத்தாளர் குழு ஷவி பெர்ணான்டோ(தலைவர்), திலக் சியம்பலாபிடிய, ஹர்ஷா விக்ரமசிங்க, றந்திக விஜயகோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குப் பிந்தியிருந்தது. இந்த இடைவெளியை நிரப்ப, சிறிய, மிகவும் வினைத்திறன் அற்ற டீசல் மற்றும் பார எரிபொருள்களில் இயங்கும் பல மின் உற்பத்தி சாதனைகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. பெரும் விளம்பரத்துடன் அரசாங்கம் காலாவதியாகவிட்ட எண்ணெய் எரிக்கும் மின் நிறுவனங்களுக்கான ஒப்பந்தங்கள் பற்றாக்குறையை நிரப்பவும் மின்வெட்டை தவிர்க்கவும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 2016இல் ஸ்ரீலங்கா பொது பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) இலங்கை மின்சார சபையின் (CEB) திட்டத்தில் ஒரு பகுதியை மட்டும் அனுமதித்தது. இதனால் டீசல் மற்றும் பார எண்ணெய் எரிக்கும் மின் உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டும் அனுமதி கிடைத்தது. இவ்வாறான மின் நிலையங்கள் விலை கூடுதலான எண்ணெயை பயன்படுத்துவன. இதனால் ஸ்ரீலங்கா மீண்டும் உயர் மின்விலை சகாப்தத்துக்கு மீளும் ஆபத்து உள்ளது. மின் விலைகள் அதிகரிக்கும் போக்கு ஏற்கெனவே தொடங்கி விட்டது. திரவ எரிவாயு (LNG) இறக்குமதி செய்வதற்கான முறைமையான அணுகுமுறை குறைபாடு உடையது. அரசாங்கம் கேள்வி கோரப்படாத முன்மொழிவுகளில் தங்கியிருக்கின்றது. இது கடந்த இரண்டு வருடங்களாக பயனளிக்கவில்லை. கரிக்கு பதிலாக டீசல் அல்லது வேறு எரி எண்ணெய்களை பயன்படுத்தலால் ஏற்படும் அதிகரித்த செலவு மாதாந்தம் அண்ணளவாக USD 40 மில்லியன் (6000 மில்லியன் ரூபா) என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த செலவின் தாக்கம் ஏற்கெனவே தொடங்கி விட்டது.

மின் உற்பத்தி விரிவாக்கல் செய்திட்டங்களில் முறையான விஞ்ஞான மதிப்பீடுகள் மட்டும் நடைமுறைப்படுத்தல் கோட்பாடுகளை கடைப்பிடிப்பதில் கடப்பாடு குறைவாக உள்ளது. பகுத்தறிவு அற்ற தர்க்கரீதியாக இல்லாத ஆலோசனைகள் தீர்மானம் எடுப்போருக்கு வழங்கப்படுதல் நீண்ட காலத்தில் பெரும் பாதகமானதாக அமையும்.

### 2.1.2. வரக்கூடிய தாக்கங்களும், பிரச்சினைகளும் விளைவுகளும்

**பொருளாதார:**

கரிக்கு சாதகமாக இருந்த வலுக்கலவை நிச்சயமாக டீசல் மட்டும் பார எரிபொருள் நோக்கி நகர்கிறது. அது பொருளாதாரத்தில் பெரும் கடுமையான செலவுகளை கொண்டு வரும்.

இந்த மின்உற்பத்தி தொகுதிகளை செயற்படுத்த தேவையான உயர் செலவு எண்ணெயை இறக்குமதி செய்ய தேவையான நிதியை திரட்டும் தேவை இருப்பதனால் இந்த உயர் செலவுகள் மின்கட்டனங்கள் மூலம் நுகர்வோருக்கு கடத்தப்படும்.

**சுற்றுச்சூழல் சார்ந்த:**

இறக்குமதி செய்யப்பட்ட மின்பிறப்பாக்கிகள் EIA க்கு அமையும் தேவையை தவிர்ப்பதால் இந்த தொகுதிகள் (இவற்றில் சில வாடகைக்கு பெறப்பட்டவை) மொத்தத்தில் உயர் அழவான வெளியேற்றங்களுக்கு காரணமாகின்றன. 300 MW சக்தி கொண்ட CEB யாள் கொள்வனவு செய்யப்பட்ட மின் உற்பத்தி தொகுதிகள் சுற்றுசூழல் நியமங்களுக்கு அமைய வேண்டும். ஆனால் இதனால் காபன் வெளியீடு பெரிய அளவில் குறையும் சாத்தியம் இல்லை. திரவ இயற்கை எரிவாய்வு (LNG) கிடைக்கப்படும் போது சுற்றுச்சூழல் சார்பான நன்மைகள் கிடைக்கும் என்பது அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆயினும் கரிமின் நிலையங்களும் உள்நாட்டு சுற்றுச்சூழல் நியமங்களுக்கு அமைய வடிவமைக்கப்படலாம்.

### 2.1.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- CEB யின் நீண்டகால அதிகுறைவான செலவு உற்பத்தி விரிவாக்கல் திட்டத்தை செயற்படுத்துக. தேவையெனில் வெளிநாட்டு நிபுனர்களால் குறுக்கு பரிசீலனை மற்றும் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படலாம் ஆயினும் மதிப்பாய்வின் பின்னர் அமுலாக்கத்தில் முழுதான கடப்பாடு இருக்க வேண்டும். இவ்வறான இரண்டு மதிப்பாய்வுகள் அண்மையில் நடத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விஞ்ஞானபூர்வமட்ட, ஆதாரமில்லாத ஆலோசனைகளை அரசாங்கத்துக்கு வழங்குவதை தவிர்க்க வேண்டும்.

## 2.2 உயரளவான, பகுத்தறிவற்ற மின் விலைகள் மற்றும் விலைக் கட்டமைப்பு

### 2.2.1 சமகால நிலவரம் பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்கா இந்த பிரதேசத்தில் உயரளவான மின் கட்டணம் அறவிடும் நாடு என அறியப்பட்டுள்ளது. ஒவ்வொரு நுகர்வோர் வனக்கும் ஏனைய நாடுகளின் விலைகளுடன் ஒப்பிடுகையில் ஸ்ரீலங்காவின் விலைகள் நடு வீச்சில் உள்ளதாக தெரிகின்றது. பொதுபயன்பாட்டு ஆணைக்குழு செலவுகளுக்கு ஒப்ப இலங்கை மின்சார சபை (CEB) வருமானத்தை பெறுவதற்கு தற்போதைய (2017) மின்விலைகள் 12 சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும். ஏனைய நாடுகளின் சராசரி மின் விலைகளுடன் ஸ்ரீலங்கா விலையை ஒப்பிடுவது அர்த்தமற்றது. ஏனெனில் கட்டண அறவீடு பல்வேறு தொழில்நுட்ப, வர்த்தக சமூக மற்றும் திரிபுகளில் தங்கியுள்ளது. கடந்த வருடங்களில், விசேடமாக பொது பயன்பாடு ஆணைக்குழு (PUCSL) வின் கட்டண முறை 2011இல் நடைமுறைக்கு வந்த பின்னர் - கட்டணங்கள் முழுமையான பகுத்தறிவான செயன்முறையூடாக சரியாக சமப்படுத்தப்பட்ட இல்லையாயினும் CEBக்கும் LECOவுக்கும் அனுமதிக்கப்பட்ட செலவுகளில் கூடுதல் வெளிப்படைத்தன்மை உள்ளது.

வெளிப்படைத் தன்மை பகுத்தறிவான கட்டண தீர்மானிப்பு முறை, கொள்கை, இலக்கை அடைவதற்கான திட்டம் என்பவற்றில் குறைபாடு உள்ளது. (இதற்கான வழிகளை (PUCSL) சட்டகம் ஏற்படுத்தி கொடுத்துள்ள போதிலும்). ஸ்ரீலங்கா பகுத்தறிவான வெளிப்படையான அறவீட்டு முறையை நோக்கி படிப்படியாக நகர வேண்டம். இதுவே எதிர்வு கூறக்கூடிய ஒரேயொரு நல்ல விளைவாக இருக்கலாம்.

### 2.2.2. வரக்கூடிய தாக்கங்கள் மற்றும் பிரச்சினையின் விளைவுகள்

**பொருளாதார:**

- பொருளாதாரத்தை இயக்கும் துறைகளை பாதிக்கும் உயர் விலைகள் பாதகமானவை. நிரம்பல் கைத்தொழில் அதன் செலவை மீள்கையில் நட்டங்களை ஆகக் குறைந்த அளவில் வைத்திருக்கும் வகையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**சமூக:**

- உள்நாட்டு மின் கட்டணங்கள் குறைந்த பாவனை பிரிவினருக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் குறைவாக உள்ளது. இதனால் ஒளியேற்றல், காற்றோட்டம், குளிரூட்டல் (ஓர் குறிப்பிட்ட அளவுக்கு) களியாட்டம் என்பவற்றில் அவர்களின் அடிப்படை தேவை குடும்ப வருமான எல்லைக்குள் பூர்த்தியாவது உறுதி செய்யப்படுகின்றது. பொதுமக்கள் கடைகளுக்கு போதல், பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புதல், வைத்தியசாலை சேவையை பயன்படுத்தல் என்பவற்றில் ஈடுபடுவதனால் இந்த சேவை வழங்குனர்களுக்கு விதிக்கப்படும் உயர் கட்டணங்கள் நுகர்வோருக்கு மறைமுகமாக கடத்தப்படுகின்றன. கிட்டத்தட்ட சமூகத்தின் சகல துறைகளும் இந்த திரிபுபடுத்தப்பட்ட விலைக் கட்டமைப்பினாலும் உயர் விலைகளாலும் பாதிக்கப்படும்.

**சுற்றுச்சூழல்:**

- உயர் விலைகள் - பெற்றோலியமாயினும் மின் ஆயினும் வலு மீதப்படுத்தலை ஊக்குவிக்கின்றது. இது ஒரு சாதகமாகன விளைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறத்தில் கேள்விப்பக்க முகாமைத்துவ (DSM) கருவியாகும் "பயன்பாட்டு நேர கட்டணம்" உச்சநேரத்தில் தேசிய மின் வலயமைப்பிலிருந்து மின் பெறுவதை குறைக்க வைக்கின்றது. இது சில ஹோட்டல்காரர்கள், கைத்தொழிலாளர் மற்றும் வரத்தக நிறுவனங்களை வினைத்திறன் அற்ற சிறிய டீசல் மற்றும் பெற்றோல் மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்த நிர்ப்பந்திக்கின்றது. இது உள்நாட்டு சுற்றுச்சூழலுக்கு பெரிதும் பாதகமானது. இது தற்போது பொருத்தமற்றதாகி விட்டது. ஏனெனில் மின்பிறப்பாக்கிகளுக்கான அமையச் செலவு சகல உச்ச நேர விலைகளையும் விட (TOU) கூடுதலாகி விட்டது. விருப்பத்துக்குறிய TOU கட்டனம் அதற்கு விதிவிலக்கானது. இதனால் இதனை அகற்றிவிடலாம். ஆனால் TOU தொடர்ந்து இருக்க வேண்டும்.

### 2.2.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- சகல நுகர்வோரும் செலவை பிரதிபலிக்கும். விலையை செலுத்தச் செய்யும் அரசாங்கத்தின் கொள்கை வழிகாட்டலை சாதிப்பதற்கு கட்டண சீர்த்திருத்தம் மற்றும் மீள் சமப்படுத்தல் என்பவற்றுக்கான ஒரு முறையான கட்டண அமைப்பும் வேலைத்திட்டத்தையும் ஏற்படுத்த மீண்டம் பேச்சுவார்த்தை நடத்த PUCSL, CEB மற்றும் LECOவை அநுமதிக்கவும் இதில் அரசாங்கம் சட்ட முறையாக அநுமதிக்கப்பட்டதற்கு மேலாக தலையிடக்கூடாது.
- கட்டணம் தீர்மானித்தல் - அர்த்தமுள்ள வகையில் சேரத்துக்கொள்வதற்கான ஸ்ரீலங்கா நிலைத்திருக்கக் கூடிய வலு அதிகாரசபை (SLSEA) யால் வரையப்பட்ட DSM முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

## 2.3 நிரம்பலின் நம்பகத்தன்மை

### 2.3.1 சமகால நிலைமை, பிரச்சினைகள் பிரச்சினையான விடயங்கள்

நிரம்பலின் நம்பகத்தன்மை ஒரு கடுமையான தேவை, விசேடமாக கைத்தொழில்களுக்கும் அபிவிருத்திக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கும் (FDI) கடும் தேவையானதாகும். மின் விநியோகத்தின் நம்பகத்தன்மை விநியோக மட்டத்தில் குறைவாக உள்ளது. மின் பிறப்பாக்கியின் செயலிழப்புக்கு மாறான நம்பகத்தன்மை வலையமைப்பு மட்டத்தில் குறைவாக உள்ளது. மின் கொண்டு செல்லலின் நம்பகத்தன்மை தேசிய அளவில் உயர்வாக இருப்பினும் கிராமிய மின் வழங்கள் திட்டங்கள் தொடர்பில் முன்னேற்றத்துக்கு இன்னும் இடமுண்டு. தேசிய அளவில் மின் விநியோக நம்பகத்தன்மையை அளவிடம் சுட்டிகளாக மின் சக்தி இழப்பின் நிகழ்தகவும் (Loss of Load probabilityயும்) N1 நியமங்களும் உள்ளன. இவை யாவும் ஏற்புடைய நியமங்கள் உள்ளே இருக்கின்றன. ஆயினும் மின் நிலையங்களில் அமைவிடத்தின் வழமையான இயல்புகளும் ஒரே இடத்தில் 900MW அடர்ந்து இருப்பதாலும் எதிர்பாராத நிலைமைகள், குறிப்பாக விடாப்பிடியான வானிலை காணப்படுமிடத்து உருவாகலாம். இவை எதிர்பார்க்கக் கூடியவை எனினும் ஏற்புடையன அல்ல. மின் விநியோகத்தை பொருத்த மட்டில் இரண்டு சுட்டிகள் உள்ளன. அவை தொகுதி சராசரி தடை மீள்திறம் சுட்டி (SAIFI) மற்றும் தொகுதி சராசரி தடை நீட்சி சுட்டி (SAIDI) என்பனவாகும். இவை மாதாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றன. இந்த காரணிகளும் ஏற்புடைய மட்டத்திலேயே உள்ளன. ஆயினும் சில மின் நிலையங்கள் கடுமையான சுட்டிகளை பெறுகின்றன.

எழுந்தமாக மின் உற்பத்தி திட்டங்களை அமுலாக்கல் மற்றும் நீர், காற்று சூரியன் என்பவற்றில் தங்கியுள்ள, நன்கு பதிந்துவிட்ட மின் உற்பத்தியாக்கம் என்பன சரியான திட்டமிடலின்றியும் பாதுகாப்பு ஏற்பாடு இன்றியும் இருப்பதோடு தீர்மானம் தொழில்நுட்ப வாண்மையாளர்களால் எடுக்கப்படாமல் அரசியல்வாதிகளால் எடுக்கப்படுவது அவதானிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.3.2 வரக்கூடிய தாக்கங்கள் மற்றும் பிரச்சினைகளின் விளைவுகள்

**பொருளாதார:**

- பொருளாதார வளர்ச்சிக்கு குறைவான நம்பகத்தன்மை ஒரு கடுமையான தடையாகும். திட்டமிட்டதோ, இல்லையோ உள்ளூர் மட்ட மின் விநியோக தடைகள் தீங்கானவை. இருப்பினும், T&D துறைகளில் பல செய்திட்டங்கள் இருந்தன. ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஜப்பானிய நிதிப்படுத்தலுடன் அவற்றை தொடர்ந்து முன்னேற்றுவது அவற்றின் நோக்கம். பொருளாதாரத்துக்கு கடுமையான தாக்கம் ஏற்படாது என்ற நம்பிக்கையில் இந்த முயற்சிகள் தொடர்கின்றன.

**சமூக:**

திடீரென ஏற்படும் மின்தடைகளால் பொது மக்கள் கஷ்டப்படுவர். அவ்வாறான தடைகள் பொது பயன்பாட்டில் மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்யும்.

**சுற்றுச்சூழல்:**

நம்பகத்தன்மை சுற்றுச்சூழல் மீது ஆகவும் குறைந்தளவு தாக்கத்தை விளைவிக்கக் கூடும். உள்ளூர் சுற்றுச்சூழலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் மின்பிறப்பாக்கியை – அவசர தேவைக்கென வாங்க முயலக்கூடிய பொது மககளால் இது பிளையாக விளங்கப்படவும் கூடும். இந்த மின்பிறப்பாக்கிகள் - அயலில் வாழ்வோருக்கு கடுமையான பிரச்சினையாக முடியும்.

### 2.3.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தல்கள்

திட்டமிடலிலிருந்து நடைமுறைப்படுத்தல் வரை தொகுதியின் முழு முகாமைத்துவத்தையும் செயற்படுத்துகையையும் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள், உயர்மட்ட ஆராய்ச்சி என்பவற்றில் ஆதாரமாக கொள்க. இந்த ஆய்வுகள் மின் உற்பத்தியில் புதுப்பிக்கத் தக்க வளங்களை அறிமுகம் செய்தல் தொடர்பில் தொடரச்சியாக பெறமுடியாத தன்மையை கவனத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும்.

## 2.4. பொருத்தமில்லாத மின் உற்பத்தி முறைகளின் கலப்பு மற்றும் குறைந்த செலவு மின் உற்பத்திக்கான தேவை.

### 2.4.1. தற்போதைய நிலைமை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

ஸ்ரீலங்கா 1995இல் தேவையான மின்சாரத்தின் 95 சதவீதத்தை நீர் மின் உற்பத்தி மூலம் பெற்றுக் கொண்டது. அடுத்து வந்த 20 வருடங்களில் மின் உற்பத்தி முறைமை – நீர் மின்வலு ஆதிக்க முறைமையிலிருந்து நீர் - அனல் கலப்பு முறைக்கு மாறியது. 2000ம் ஆண்டு தொடக்கம் அனல்மின் உற்பத்தியின் பங்கு 50 சதவீதத்திலும் கூடுதலாக இருந்து வந்தது. (சிறந்த நீர் மின் ஆண்டுகளாக இருந்த) 2010 மற்றும் 2013 ஆண்டுகள் இதற்கு விலக்கானவையாக இருந்தன. அனல் மின் உற்பத்திக்கு மாறுதல் தவிர்க்க முடியாததாக இருந்தது. குறைந்த செலவிலான கரி மின் உற்பத்தி தசாப்தங்களாக தாமதிக்கப்பட்டு எண்ணெய் எறிக்கும் மின் நிலையங்கள் கிட்டத்தட்ட மூன்று மடங்கு செலவிள் அமைக்கப்பட்டன.

(i) தனியிார் துறையை மின் உற்பத்தியில் அனுமதித்த (ii) புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களை பயன்படுத்தி சிறிய மின் நிலையங்களை தனியாரைக் கொண்டு அமைத்த முதல் நாடுகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா உள்ளது. அனல் மின் நிலையங்கள் மீதான சகல தனியார் முதலீடுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணெய் எரிக்கும் அனல் மின் நிலையங்களாக இருந்தன. இது 2002இலிருந்து மின்சாரத்தின் அளவு (load) வீழ்ச்சியை தூரத்தில் வைத்திருந்தது. ஆனால் உற்பத்தி செலவுகளை (மின் கொண்டு செல்லல், விநியோகம் தவிர்ந்த) ஒரு போதும் இல்லாதவாறு 2013 அளவில் ஒரு kWh மின் விலையை 18.34 ரூபா ஆக்கியது. கரியில் இயங்கும் மின் நிலையம் செயற்படத் தொடங்க kWh மின் விலை 12.67 ரூபாவாக வீழ்ச்சி கண்டது. (ஆயினும் புதிதாக கரியில் இயங்கும் மின் நிலையங்கள் அமைக்கப்படாததால்) 2017க்கான – எதிர்வு கூறப்பட்ட மின் உற்பத்தி செலவு kWh ஒன்றுக்கு 14.66 ரூபாவாக அதிகரித்தது. இதனால் மின் கட்டணத்தை 12 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டிய நிலைமை உருவாயினும் அவை 2017 வரை அதிகரிக்கப் படவில்லை.

நீண்டகால மின் உற்பத்தி முறைமையை திட்டமிடவும் அந்த திட்டத்தை அமுலாக்கவும் CEB சட்ட முறைகளை பின்பற்றிய போது மாறி மாறி வந்த அரசாங்கங்கள் தலையீடு செய்தன. தலையீடுகள் தொடர்கின்றன. பயன்படுத்த வேண்டிய எரிபொருள் வகை, பெரிய மின் நிலையங்களின் அமைவிடம் என்பன தொடர்பில் அரசாங்கங்கள் எழுந்தமானமான கொள்கை கட்டளைகளை கொண்டிருந்ததால் பெரிய மின் நிலையங்களை அமைக்க முடியாமல் போனதுடன் நெருக்கடிகள் வந்த போது குறுகிய கால தீர்வுகளை (டீசல் மின் நிலையங்கள்) செயற்படுத்த நேரிட்டது. அவசரப்பட்ட மின் ஒப்பந்தங்கள் 2001 இன் பின்னர் 2016இல் முதல் தடவையாக செய்யப்பட்டன. அவை இப்போதும் நடைமுறையில் உள்ளன.

### 2.4.2. வரக்கூடிய தாக்கங்கள், பிரச்சினையின் விளைவுகள்

**பொருளாதார:**

- சர்வதேச எரிபொருள் விலைகள் உறுதியாக இருக்கையில் ஸ்ரீலங்காவில் மின் உற்பத்தி செலவுகள் அதிகரித்துச் செல்கின்றன. மின் உற்பத்திக்கான டீசல் பயன்பாடு அதிகரித்துச் செல்வதே இதற்கு காரணமாகும். இது சென்மதி நிலுவை கொடுப்பனவை பெரிதும் பாதிக்கும்.

- பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு (PUCSL) இலங்கை மின்சார சபைக்கு மானியத்தை பெற்று கொடுக்கவோ அல்லது கட்டணத்தை அதிகரிக்கவோ முடியாதிருப்பதால் இலங்கை மின்சார சபை குறுகிய கால காசு தேவைகளுக்கு கடன் பெற வேண்டியிருக்கும். CEB யின் கடன் அதிகரிப்பு மின்துறையின் நொய்தலான நிதி சமநிலையை மேலும் மோசமாக்கும்.

**சமூக:**

- CEBயின் கடனை அதிகரித்தல் அல்லது மின் கட்டணத்தை அதிகரித்தல் இத்துறைக்கு மேலும் நட்டத்தைக் கொண்டுவரும். இறுதியாக இதை சமூகம் கொடுக்க வேண்டும்.

- CEBக்கு அரச வங்கிகள் கடன் கொடுப்பதனால் வேறு நல்ல முதலீடுகளுக்குப் பயன்படுத்தக் கூடிய மூலதனம் முடக்கப்படுகின்றது.

**சுற்றுச்சூழல்:**

கரி மற்றும் வாயு மூலம் இயங்கும் மின் நிலையங்களுக்கு பதிலீடாக அமையும் டீசல் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளூர் மட்டங்களில் சூழல் மாசடைதலை தோற்றுவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.4.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

அரசாங்கத்தின் தலையீடு இன்றி மின் உற்பத்தி செய்திட்டங்களை திட்டமிடவும் நடைமுறைப்படுத்தவும் மின் திட்டம் 2009இல் வகுக்கப்பட்ட செயல்முறையை கடைப்பிடிக்க CEBயை அனுமதிக்கவும். குறித்த காலத்தில் செய்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் உற்பத்திக்கான செலவுக்கு பொறுப்புக் கூறவும் CEBயிலிருந்து செயலாற்றுகையை கோருக.

## 2.5. வலு விரயம் மற்றும் நிரம்பல்பக்க இழப்புகளும்

### 2.5.1. தற்போதைய நிலைமை, பிரச்சினை, பிரச்சினையான விடயங்கள்

மின் கொண்டு செல்லல் மற்றும் விநியோக வலையமைப்பின் ஒவ்வொரு பிரிவிலும் இழப்புகளுக்காக இலக்குகளை வகுத்தத்துடன் விரிவான ஆய்வையும் PUCSL நடத்தியுள்ளது. மின் நிலையத்தின் நம்பகம் மற்றும் வினைத்திறனுக்கு மின் நிலைய ஊழியர் குழாமை பொறுப்பாக்கும் மின் கொள்வனவு ஒப்பந்தம் அல்லது அது போன்ற ஆவனம் இன்றி CEBயின் மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுகின்றன. சுயாதீனமான மின் உற்பத்தியில், கொடுப்பனவு மற்றும் தேசிய வலு அனுப்புகை என்பவற்றுடன் தொடர்புடையதாகையால், இப்படியான இலாப நோக்கு கம்பனிகளில் மின் நிலையத்தின் வினைத் திறன் முன்னேற்றம் அவசியமான தேவையாகும். PUCSL வெப்ப வீத சோதனைகளை நடத்துதல் தொடர்பில் குறிப்பான அறிவுறுத்தல்களை கொடுத்திருப்பினும் வெப்பவீத சோதனை சரியான கால இடைவெளிகளில் நடப்பதில்லை. மின் கொண்டு செல்லல் மற்றும் விநியோகம் என்பவற்றில் இழப்புகளை தேறிய மின் உற்பத்தியின் 7.5 சதவீதம் என்ற அளவுக்கு குறைக்கலாம். இது ஒரு அடையக்கூடிய இலக்கு. அனுமதிப்ப பத்திரம் பெற்றுள்ள சகலரும் (CEB மின் கொண்டு செல்லல், CEB மின் விந்யோகம் மற்றும் (LECO) தத்தம் வலையமைப்பிக் ஒவ்வொரு பிரிவிலும் குறித்த இலக்கை நோக்கி வேலை செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும்.

CEB மின் கொண்டு செல்லல் மற்றும் CEB மின் விநியோகம் என்பவை இடையே நட்டம் தொடர்பான விழிப்புணர்வு, கவனம் மற்றும் போதிய அளவில் இல்லாத விஞ்ஞான பகுப்பாய்வு என்பன இந்த பிரச்சினைக்கு இட்டுச் செல்லும் காரணங்களில் சிலவாகும். மின் கொண்டு செல்லல் மற்றும் விநியோகம் என்பவற்றுக்காக ஒழுங்குபடுத்தல் இலக்குகள் வகுக்கப்பட்டிருப்பினும் CEB அனுமதிப்பத்திரம் உடையமை இந்த இலக்குகளை கடைப்பிடிப்பதில்லை. அனுமதிக்கப்பட்ட வருவாய் மற்றும் வருமானம் என்பவை CEBயின் அனுமதி பெற்ற மின் கொண்டு செல்லல் மற்றும் மின் விநியோகம் என்பவற்றுக்கு இடையே பிரிக்கப்படாது இருப்பதுவே இதற்கான காரணம். LECOஇல் இருப்பது போல நல்ல செயலாற்றுகைகள் வெகுமதி அளிக்கப்டுவதோ அல்லது குறைவான செயலாற்றுகைகளை தண்டிக்கப்படுவதோ இல்லை. ஏனெனில் அனுமதிக்கப்பட்ட வருவாய்கள் வருட இறுதி இலாபத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுவதில்லை, வருட இறுதி இலாபங்கள் CEBயின் ஒவ்வொரு அனுமதிப்பத்திரம் உடையோராலும் அறிவிக்கப்பட வேண்டுமாயினும் இத நடப்பதில்லை.

### 2.5.2. வரக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் விளைவுகளும்

**பொருளாதார:**

மின் நிலையங்களிடையே காணப்படும் மிக உயரளவான இழப்புகளும் மற்றும் வலையமைப்பில் மின் கொண்டு செல்லல், விநியோகம் என்பவற்றின் போது ஏற்படும் அளவுக்கு மீறிய இழப்பும் வீண் விரயமாகும். இது மின்சாரத்துக்கான செலவை தேவையற்று உயர்த்தி விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூக:**

வலையமைப்பில் பெருமளவான மின் இழக்கப்படுவதாக சமூகம் நம்புகின்றது. அனுமதி பத்திரம் உடையோரும் பொது பயன்பாட்டு ஆணைக்குழுவும் (PUCSL) இதனை தெளிவுபடுத்தும் தகவலை வழங்க வேண்டும்.

**சுற்றுச்சூழல்:**

வலு இழப்பு தேலையில்லாத சுற்றுச்சூழல் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனை தவிர்ப்பது அவசியமாகும்.

### 2.5.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- இலங்கை மின்சார சபையின் மின் உற்பத்தி மின் கடத்தல், மின் விநியோகம் என்பவற்றின் நிதிகளை தனித்தனியாக ஆக்குக. இதனால் ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையமும் இழப்பு இலக்குகளை உற்பட பிரதான ஆற்றுகை சுட்டிகளுக்கு (KPIs) பொறுப்பாக்கப்படும்.

- ஊக்குவிப்பு வெகுமதிகள் இழப்பு இலக்குகள் அடங்களாக KPIsகளை அடைவதை அடிப்படையாக கொள்ள வேண்டும்.

## 2.6. புதுப்பிக்கத்தக்க வலுக்களின் விகிதாசாரத்தை (பங்கை) உயர்த்துதல்

### 2.6.1. சமகால நிலைமை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

மின் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்களிப்பை கணிசமாக கொண்ட நாடுகளிடையே ஸ்ரீலங்கா உயர் நிலையில் உள்ளது. புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கை உயர்த்துவது விரும்பக் கூடியதாயினும் அதற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி தார்ப்பரியங்கள் உள்ளன.

1980இல் முதனிலை வலு கலப்பில் ஸ்ரீலங்காவின் புதுப்பிக்க கூடிய வலுவின் பங்கு 75 சதவீதமாக இருநத்து. ஆனால் 2015 அளவில் இது 51 சதவீதமாக குறைந்து விட்டது. உயிர் திணிவின் நிரம்பல் மற்றும் பயன்பாடு என்பவற்றின் வளரச்சி, பெற்றோலியத்தின் விரைந்த வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் குறைவானது. மேலும் பெற்றோல் பாவனையின் விரைந்த வளர்சசி வீதம் போக்குவரத்துக்கு அதை பயன்படுத்தியதால் உண்டானது. மேலும் மின்சாரத்துக்கான அதிகரித்து வரும் கேள்வி – எணணெய் மற்றும் கரியால் வழங்கப்பட்டது. இதுவே தேசிய வழுக் கலப்பில் புதுப்பிக்கத்தக்க வளங்களின் பங்கு குறையக் காரணம். மின் உற்பத்தியில் 1980இல் 88சதவீதமாக இருந்த புதுப்பிக்கத்தக் வலுவின் பங்கு 2015இல் 49 சதவீதமாக குறைந்தது. ஒரு நல்ல நீர் கிடைத்த ஆண்டில் (உதாரணம்: 2013இல்) புதுப்பிக்கத்தக் வலுவின் பங்கு 60 சதவீதமாக உயர்ந்தது. உலகளவிலான ஆர்வம், மூலதன செலவு வீழ்ச்சி மற்றும் ஸ்ரீலங்காவின் சிறந்த வழங்கள் என்பவை ஸ்ரீலங்காவின் பங்குதாரர் இடையே ஆர்வத்தை உண்டாக்கின. புதுப்பிக்கத் தக்க வலு அடிப்டையிலான மின் உற்பத்தியின் பங்கை ஸ்ரீலங்காவில் அதிகரிப்பதற்கான ஆர்வம் உருவானது. சகல பெரிய நீர் மின்வலு நிலையங்களும் CEB மின் உற்பத்தி அனுமதிப்பத்திரத்தை உடையவை.

சிறு மின் உற்பத்தியாளர் நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைய 200 சிறு மின் உற்பத்தியாளர்கள் உள்ளன. இவர்கள் கட்டணம் அறவிடும் முறையின் கீழ் மின்வலை அமைப்புக்கு மின் வழங்குகின்றனர். குறைவான முதலீடு உயர் இயலளவு காரணி என்பவை காரணமாக, இவ்வாறான தனியார் மின் நிலையங்கள் 1996இலிருந்து - அமைக்கப்பட்ட மினி நீர் மின் நிலையங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008இலிருந்து – குறித்த தொழில்நுட்பம் சார்ந்த செலவுக்கேற்ப விலையுள்ள கட்டணமுறைகள் அறிவிக்கப்பட்ட பின்னர் காற்று, சூரிய ஒளி மற்றும் உயிர்திணிவு மின் நிலையங்கள் அமைக்கப்பட்டன. 2008இல் தேசிய வலுக்கொள்கையில் பெரிய நீர் மின்நிலையங்கள் தவிர்ந்த சகல புதுப்பிக்கத்தக்க வளங்களில் இருந்து 10 சதவீத மின்னை உற்பத்தி செய்யும் உயர் இலக்கு 2015இல் கால அட்டவணைக்கு ஒரு வருடம் முன்னரே எட்டப்பட்டது. இப்போது அது 11.4 சதவீதமாக உள்ளது. தற்போதைய நடைமுறைப்படுத்தல் முறை தொடருமாயின் மின்சாரத்துக்கான கேள்வி கூடுகையில் புதுப்பிக்கத் தக்க வலுவின் பங்கு குறையும். பெரிய அளவினா புதுப்பிக்கக் கூடிய வலு செய்திட்டங்களை பயன்படுத்தலும் கூறை மேல் பொருத்தும் சோலர் தட்டுகளை ஊக்குவிக்கும் உறுதியான நிகழ்ச்சி திட்டங்களும் NRE துறைக்கு வகுக்கப்பட்ட 20 சதவீத இலக்கை (2020 அளவில்) அடைவதற்கான திறவு கோலை கொண்டிருக்கலாம்.

2010இலிருந்து புதுப்பிக்கக்கூடிய வலு மூலங்களிலிருந்து மின் பிறப்பித்தலின் தேறிய அளவிடப்பட்ட இணைப்பு அனுமதிக்கப்பட்டது. வாடிக்கையாளர் தமது மின் உற்பத்தியை வலையமைப்புக்கு தொடுக்க அனுமதிக்கப்பட்டனர். மேலும் மிகையாக உள்ளதை அன்றாட அடிப்படையில் வங்கிப்படுத்தி எஞ்சியுள்ள வரவுகளை அடுத்த மாதத்துக்கு கொண்டு போகலாம். 2016இல் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி வாடிக்கையாளர்கள் தம்மிடம் உள்ள மிகையை kWh ஒன்றை 22 ரூபாவுக்கு விற்க முடியும். 2017 ஏப்ரில் அளவில் இவ்வாறான கூறைமேல் சூரிய PVயின் இயலளவு 80MWஐ எட்டியது.

தேசிய மின்வலையமைப்புக்கு கூடுதல் புதிய புதுப்பிக்கதக்க வளங்கலை இணைப்பதில் உள்ள பிரச்சினை சகல புதுப்பிக்கக் கூடிய வலு மூலங்களினதும் நிலையில்லாத – பருவகாலத்தோடு தொடர்பான தன்மைகளும் ஆகும். பருவகாலத்தில் சார்ந்துள்ள (தினம் தினம் மாறும் விட்டு விட்டு வரும் புதுப்பிக்கத்தக்க வலு மூலங்களுக்கு பருவ காலத்தோடு சார்ந்துள்ள தன்மையையும்) (விட்டு விட்டு வரும் தன்மையையும் எதிர்கொள்வதற்கு) ஒதுக்காக உள்ள உதவி ஏற்பாடு அவசியம். ஸ்ரீலங்காவின் புதுப்பிக்க முடியாத டீசல் மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளதால் அவ்வாறான தொழிற்படுகை ஆதரவு, கூடுதல் செலவுக்குரிய விடயமாக உள்ளது. மாறாத தனியான கரியால் இயங்கும் மின் நிலையங்கள் தொடர்ந்து தொழிற்படுவதால் மின்சாரம் சிக்கனமான மின் உற்பத்தி உறுதி செய்யப்படுகின்றது. மேலும் டீசல் மின் நிலையங்களும் புதுப்பிக்கத் தக்க வலு மின் நிலையங்களும் மின் வலையமைப்புக்கு உறுதிப்பாட்டை வழங்காது உறுதியின்மையை தோற்றுவிக்கின்றன. இவ்வாறாக மின் விநியோகத்தின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மை மேலும் இழக்கப்படுகின்றது. நுகர்வோருக்கான மின் விநியோகத்தின் ஒட்டுமொத்த நம்பகத்தன்மை மேலும் இழக்கப்படுகின்றது. நுகர்வோருக்கான மின் விநியோகத்தை பாதிக்காத முறையில் தனி மின் பிறப்பாக்கியிலிருந்து மீண்டுவரும் ஆற்றல் ஸ்ரீலங்காவுக்கு இல்லை. ஆனால் இது சிறு பொருளாதாரங்கள் தவிர ஏனைய நாடுகளில் உள்ளது. அடிப்படையான மின் வளத்தை தரும் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து பொருந்திப் போகும் மின் உற்பத்தி இன்றி புதுப்பிக்கத்தக்க வலு பெருமளவு சேர்க்கப்படின் நிலைமை மோசமடையும். உறுதிப்பாடு தொடர்பான பிரச்சினைகளுக்கு அப்பால் மின் தடங்களின் மின் கடத்தல் திறன் ஆற்றல் குறைவும் வலையமைப்பின் உப மின் நிலையங்களின் ஆற்றல் குறைவும் கூடுதல் புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை தேசிய வலையமைப்புக்கு சேர்ப்பதற்கு தடையாக உள்ளன. இவ்வாறான புதிய முறைகள் பெரும் செலவானவை. இதனால் இவை அநேகமான தனியார் துறை அபிவிருத்தியாளர்களின் ஆற்றலுக்கு அப்பால் உள்ளன. மேலும் புதுப்பிக்கதக்க மின்வலு தொகுதிகளின் - மின் வலையமைப்பின் உறுதிப்பாடு மற்றும் மின் சிக்கனம் நம்பகம் என்பன மீதான தாக்கங்கள் தொடர்பில் பரந்த அளவில் விளக்கமின்மைகள் உண்டு. இதனால் தேசிய மின் உற்பத்தி முறைமை மீதான புதுப்பிக்கக் கூடிய மின்னின் தாக்கங்கள் பற்றி மிகவும் கவனமான மதிப்பீடு அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.6.2. வரக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் விளைவுகளும்

**பொருளாதார:**

- புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்களிப்பை அதிகரித்தல், மின் வழங்குதலின் செலவு நம்பகம் என்பவற்றை பாதிக்காமல் இருப்பதை உறுதி செய்ய கவனமான முகாமைத்துவம் தேவைப்படும். சில புதுப்பிக்கத்தக்க வளங்களின் (நீர், காற்று மற்றும் உயிர்த் திணிவு) நிரம்பல்களின் பருவகாலம் சார்ந்த தன்மையும் விட்டு விட்டு கிடைத்தலும் (காற்று மற்றும் சூரிய ஒளி) நல்ல முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். இது ஸ்ரீலங்காவின் மின்கட்டமைப்பு 20வது நூற்றாண்டில் காணப்பட்ட நிச்சயமின்மை சகாப்தத்துக்கு மீண்டும் செல்லாதிருப்பதற்கு அவசியமானது. ஸ்ரீலங்கா 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க வலு அடிப்படையிலான மின் உற்பத்தி பிறப்பிக்கும் முறைமையில் இருந்த போது சில வருடங்களுக்கு ஒரு முறை மின் சக்தி குறைவு ஏற்படுவது வழக்கமாக இருந்தது. மின்சக்தி குறைப்பு 1974, 1979, 1983, 1987, 1992, 1996 2001 மற்றும் 2002 வருடங்களில் மேற்கொள்ளப்பட்டது. மின்சக்தி குறைப்பு மேற்கொள்ளப்பட்ட வேளையில் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சி கண்டது. மேலும் சில வருடங்களில் சிறிய டீசல் இயந்திர தொகுதிகளை வாடகைக்கு எடுப்பதன் மூலம் (1997, 1998, 1999, 2000, 2003, 2016, 2017) பெரும் செலவில் மின்வெட்டு தவிர்க்கப்பட்டது. இதன் மூலம் புதுப்பிக்கத்தக்க மின் மூலங்களின் நிச்சியமற்ற தன்மை தவிர்க்கப்பட்டது. மேலும் பெரிய மின் உற்பத்தி நிலையங்களின் தாமதங்களின் காரணமாக உண்டான பற்றாக்குறை நிரப்பப்பட்டது. இந்த செலவுகள் உயர் பொருளாதார செலவுகளுக்கு இட்டுச் செல்லும் வகையில் மின் நுகர்வோர் மீது கடத்தப்பட்டது.

- புதுப்பிக்கத்தக்க வலு சுதேசமானது. இதன் கூடுதல் பங்களிப்பு எரிபொருளின் உலக சந்தை விளைகளினால் பாதிக்கப்படுதலை குறைக்கின்றது. எனவே புதுப்பிக்க தக்க வளங்களின் பிரதியீட்டினால் சுவட்டு எரி பொருள் நுகர்வை படிப்படியாக குறைப்பதன் மூலம் நாட்டின் பெற்றோலிய இறக்குமதி செலவை குறைக்க முடியும். தற்போதைய நிலைமையில் புதிய புதுப்பிக்கத் தக்க வலுத்துறை (NRE) 25 பில்லியன் ரூபாய் எண்ணெய் இறக்குமதி செலவை மீதப்படுத்தியுள்ளது. சிலர், விலை அதிகமான புதுப்பிக்கத் தக்க வலு உபகரணங்களின் இறக்குமதிச் செலவு இவ்வாறான நன்மைகளை இல்லாது செய்து விடுகின்றது என கூறினும் SLSEA – புதுப்பிக்க தக்க வலு உற்பத்தி (NRE) , இந்த செலவுகளை 3 – 5 வருடத்தில் ஈடு செய்து விடுவதாக கூறியுள்ளது. எரிபொருள் சக்தியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களுடன் ஒப்பிடுகையில் சிறிய நீர் மின் தொகுதிகள் பல இடங்களில் உள்நாட்டு நிபுணத்துவத்துடன் அமைக்கப் படலாம். இது பிராந்திய அசமத்துவத்தை குறைக்கவும் உதவும்.

**சமூக:**

- கூடுதல் புதுப்பிக்கத் தக்க வலு சேரக்கப்படுவதை சமூகம் வரவேற்கின்றது. சிலர் 100 சதவீத புதுப்பிக்கத் தக்க வலு உற்பத்திக்காக பரப்புரை செய்கின்றனர். ஆயினும் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார மட்டுப்படுத்தல்கள் கவனமான அணுகுமுறையை வேண்டி நிற்கின்றன. மின் வழங்குதலின் நம்பகத்தன்மையை விட்டுக் கொடுக்காமலும் நுகர்வோர் மீது மேலும் மேலும் சுமைளை ஏற்றாமலிருக்கவும் இது அவசியமாகும். புதுப்பிக்தக்க வலுவின் பரந்து கிடக்கும் இயல்பு காரணமாக இவ்வாறான செய்திட்டங்களுக்கு நாடு முழுதும் பல இடங்களிலிருந்தும் கணிசமான நிலம் தேவைப்படும். சிறிய நீர், மின் மற்றும் காற்று மின் போன்ற சில தொழில் நுட்பங்களால் சமூகத்துக்கு கணிசமான தாக்கம் ஏற்படலாம். ஏனனில் இவ்வகை செய்திட்டங்கள் (நீர்) வழங்களை அனுபவிக்க முடியாது போதல் மற்றும் வேறு தொல்லைகளை (சத்தம், அமைப்புகளின் தாக்கம்) சமுதாயத்துக்கு கொடுக்கலாம். இதனால் NRE செய்திட்டங்களுக்கு (விசேடமாக சிறிய நீர் திட்டங்கள்) பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் எதிர்ப்பை காணக் கூடியதாக உள்ளது. எனவே மோதல்களை தவிர்க்கவும் மோசமாக பாதிக்கப்பட கூடியவர்களின் எதிர்ப்பை தவிர்க்கவும் பங்குதாரர்களுடன் பேசி செய்திட்டங்களை விளக்குதல் அவசியமாகும்.

**சுற்றுச்சூழல்:**

- வேறு உட்கட்டமைப்பு திட்டங்களுடன் ஒப்பிடுகையில் புதிய புதுப்பிக்கக் கூடிய வலு (NRE) திட்டங்கள் செயற்பட தொடங்கிய பின்னர் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவது இல்லை. ஆயினும் களிக்கப்படும் நிலைமையில் கணிசமான பிரச்சினைகளை எதிர்பார்க்கலாம். எனவே புதுப்பிக்கக் கூடிய வலுவின் (NRE) பங்கு அதிகரிக்கும் போது சுற்றுச்சூழலுக்கு நன்மை ஏற்படும். சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிய கவனமான ஆய்வின் பின்னரும் தொழில்நுட்ப, சமூக, அரசியல் பொருளாதார காரணங்களால் பல செய்திட்டங்கள் தொடரப்படாமல் உள்ளன.

### 2.6.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- மின் வலையமைப்பின் தொழில்நுட்ப பொருளாதார உறுதிப்பாட்டை நிலை நிறுத்த புதிய புதுப்பிக்க கூடிய வலுக்களுக்கும் வழமையான மின் உற்பத்திக்கும் இடையே நல்லதொரு சமநிலையை பேணுக. பெரிய மின் நிலையங்களும் (கரி மற்றும் R-LNG வலுவில் இயங்கும்) அமைக்கபடின் அரசாங்கத்தின் இலக்கான 20 சதவீத புதுப்பிக்கப்படக் கூடிய வலு என்ற இலக்கு அடையப்படக் கூடியது என்ற CEBயின் நீண்ட காலத்திட்டம், வேறு ஆய்வுகள் சர்வதேச மதிப்பாய்வுகள் உறுதி செய்துள்ளன. இதில் (பெரிய நீர் மின் நிலையங்கள்) சேர்க்கப்படவில்லை. எனினும் ஆய்வுகள், ஸ்ரீலங்கா, பெரிய மின் பிறப்பாக்கிகளின் மின் தடைக்கு எதிராக நின்று பிடிக்கும் நம்பக மட்டத்தை புதுப்பிக்கக் கூடிய வலு அடிப்படையிலான மின் உற்பத்தியின் சடுதியான அபிவிருத்தி நிலைமையில் அடையமாட்டாது என உறுதி செய்துள்ளன.

- இந்த சடுதியான அபிவிருத்தியானது மின் வழங்களின் உறுதிபாட்டு பங்களிப்பு செய்யாத டீசல் மற்றும் நீர் மின் நிலையங்கள் திட்டவட்டமான இயலுமையுடன் கூடுதல் புதுப்பிக்கத் தக்க வலுவின் ஒன்றினைப்புக்கான ஒரு திட்டத்தை தரக் கூடிய புதிய புதுப்பிக்கக்கூடிய மூலங்களை மற்றும் மின்னுக்கான கேள்வி என்பவை பற்றி கவனமாக ஆய்வு ஒன்றை செய்க. இவ்வாறான தகவலை தனியார் மற்றும் அரசாங்கம் ஆகியவற்றை இத்துறையில் முதலீடு செய்ய ஊக்குவிக்கும் புதிய புதுப்பிக்கூடிய ஒன்றினைப்பு திட்டம் ஒன்றை விருத்தி செய்ய பயன்படுத்தலாம்.

- புதிய புதுபிக்கக் கூடிய வலு (சேநு) மூலங்களிலிருந்து பிறப்பிக்கப்பட்ட மின்னை மின் மாற்றிகளுக்கு கொண்டு செல்வதற்கு மின் கொண்டு செல்வதற்கான உட்கட்டமைப்பை நன்கு முன்னேற்றுக. சேநு ஒன்றினைப்பு திட்ட நடைமுறைபடுத்தலை அடைவதற்கு அரசாங்கம் முதலீட்டை செய்ய வேண்டும். இவ்வாறான அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்கள் பெரிய அளவுத்திட்ட சேநு செய்திட்டங்களை மாதிரிவகையாக 100 ஆறு அளவில் ஆரம்பிக்கலாம். அது 20 சதவீதம் என்ற இலக்குக்கு தேவைகான அளவை பங்களிப்பு செய்யலாம்.

## 2.7 அதிகரித்துவரும் கடன் பட்டியல்

### 2.7.1 தற்போதைய நிலைமை, பிரச்சனைகள் பிரச்சினையான விடயங்கள்

இலங்கை மின்சார சபையின் (CEB) கடன் பட்டியல் கடந்த காலங்களில் கடுமையாக அதிகரித்துள்ளது. 2007 முடிவில் மூலதனத்தின் 34 சதவீதமாக இருந்து ஆகக் கூடிய அளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11-CM 27932

2012இன் முடிவில் மூலதனத்தின் 72.9 சதவீதமாகியது. 161.7 பில்லியன் ரூபா கடனை ஸ்ரீலங்கா அரசாங்கம் பங்காக மாற்றிய பின்னரும் 2016 முடிவில் 48.7 சதவீதம் என்ற அளவில் உயர்வாகவே உள்ளது. மின் உற்பத்தி மற்றும் மின் கொண்டு செல்லல், மற்றும் மின் விநியோகம் என்பவற்றை நீண்ட கால அடிப்படையில் விரிவாக்கும் திட்டம், 2025 அளவில் கடனை மூலதனத்தின் 65 சதவீதத்துக்கும் கூடுதலாக்கிவிடும்.

1990இல் அது ஸ்ரீலங்காவின் மின் தொகுதி பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. இந்த மாற்றத்தில் மின் உற்பத்தி கலப்பின் மாற்றமும் அடங்கும். 100 சதவீதமாக இருந்த நீர் மின், 50 சதவீதம் நீர் மின் ஆகவும் மீதி 50 சதவீதம் புதுப்பிக்கக்கூடிய மின்னாகவும் மாறியது. அண்மையில் 50 சதவீத மின், அனல் மின் ஆக உள்ளது. மின் தொகுதியின் நம்பகத்திலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மின்னின் அளவு குறைக்கப்படுதல் தவிர்க்கப்படல், இதனுல் வரும். மேலும் வீடுகளை மின்மயப்படுத்தலும் அதிகரித்துள்ளது. 1995இல் 45 சதவீத வீடுகளுக்கு மின் வழங்கப்பட்டது. இப்போது இது கிட்டத்தட்ட 100 சதவீதமாக உள்ளது. தேசிய வலுக்கொள்கை 2008இன் வலுக்கொள்கை மூலகங்களை எட்டுவதில் ஒன்றுக்கொன்று மிகை நிரப்பிகளாக உள்ள இந்த மாற்றங்கள் யாவும் தொழிற்படுதலின் செலவை கூட்டின அல்லது உட்கட்டமைப்பில் பாரிய முதலீடகளை வேண்டி நின்றன. அவை மின்சாரசபையால் (CEB) அதன் மின் விறபனை மூலம் கிடைத்த வருமானத்தால் இந்த செலவுகளை ஈடுசெய்ய முடியவில்லை.

2000இலிருந்து CEB மீண்டும் மீண்டும் நட்டத்தை அறிவித்தது. 2003, 2010, 2013, 2015, 2016 ஆகியவை விதிவிலக்காக இருந்தன. 2016இல் ஒரு kWh மின்னின் சராசரி விறபனை விலை 16.18 ரூபா ஆகவும் அதன் சராசரி விநியோக செலவு 17.37 ரூபாவாகவும் இருந்தது. இதனால் CEBக்கு 14.5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. 2000க்கு முன்னர் CEB ஒரு போதும் நட்டத்தை அறிவிக்கவில்லை[13]. உற்பத்தி செலவு அதிகரித்ததும் வீட்டுத்துறை வகுதிக்குள் வருவோரிடம் குறைந்த கட்டணம் அறவிட்டதும் CEB கொடுத்த மானியங்களை மீளப் பெற முடியாமல் போனதும இந்த நட்டத்துக்கு காரணங்கள் ஆகும்.

எண்ணெய்யால் வலுவூட்டப்பட்ட மின் உற்பத்தி முறைமையில் அதிகம் தங்கியிருந்தமை CEB எண்ணெய் விலையால் நலிவுற வைத்தது. எண்ணெய் விலைகளின் அதிகரிப்பும் அந்த அதிகரிப்பை நுகர்வோர் மேல் சுமத்த முடியாமல் போனமையும் சேர CEBயின் காசோட்டத்தில் கடும் நெருக்கடியை தோற்றுவித்தது. இதனால் CEBயில் லாபம் குறைந்தது. அரசாங்கத்திட்டம் பட்ட கடனை மீள செலுத்த முடியாமல் போனது. இதற்கும் மேலாக தொழிற்படும் மூலதனத்தை அதிகரிக்க வேண்டிய போதெல்லாம், CEB அதனை குறுங்கால் வர்த்தக ரீதியாக கடன்களால் நிதிப்படுத்தியது. இதனால் அதன் கடன் மேலும் அதிகரித்தோடு கடனை மீளச் செலுத்தும் அதன் ஆற்றலையும் அது பாதித்து. 2012இல் ஸ்ரீலங்காவின் முதலாவது கரியால் இயங்கும் மின்நிலையம் செயற்பட தொடங்கியது. இதனால் மின் உற்பத்திச் செலவு கணிசமாக குறைய CEBயின் காசோட்டம் முன்னேறி வரத்தக வங்கிகளிலிருந்து பெற்ற குறுங்கால கடன்களில் அதிகமானவற்றை மீளச் செலுத்த உதவியது. குறைவான செலவில் இயங்கும் மின் நிலையங்களை அமைப்பதனால் CEBயின் தற்போதைய கடன் சுமையை மேவிச் செல்லும் ஆற்றல் அதிகரிக்கும்.

கட்டணத்தில் உற்பத்தி செலவு பிரதிபலிப்பதை சாதிப்பதனாலும் அரசாங்கத்திடமிருந்து பெறவுள்ள மானியத்தை தெரிந்திருப்பதனாலும் மின் உற்பத்தி, மின் கடத்தல் மற்றும் விநியோகம் என்பவை தொடர்பில் ஒதுக்கப்பட்ட விடயங்களுக்கு அது செலவளிக்கப்படுவதை உறுதி செய்வதாலும் 2010இல் கட்டணம் ஊடாக உற்பத்தி செலவை கடத்தும் முறையை கடைப்பிடிப்பதனால் CEBயின் பல நிதிப்பிரச்சினைகள் தீரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் இந்த முறை கொண்டுவரப்பட்டு ஆறு வருடங்கள் கடந்த பின்னரும் க்டடணமுறை CEB மற்றும் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு என்பவற்றால் இன்னும் பூரணமாக செயற்படுத்துவதில்லை.

13 ஸ்ரீலங்கா வலு மீதி, ஸ்ரீலங்கா மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் சில்லறை கட்டணம் செலவை பிரதிப்பலிப்பதில் இருந்து பின் தங்கியே உள்ளது. மேலும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்க கூடிய மானியங்கள் தெளிவாக அறியப்படவில்லை.

இதனால் CEBயின் கடன் பட்டியல் அதிகரிப்பதற்கு காரணமாகும் பிரதான காரணிகள் ஆவன.

(i) மின் விநியோகத்தின் தரத்தையும் நம்பகத்தையும் அதிகரிப்பதற்காக மின் உற்பத்தி, மின் கடத்தல் மற்றும் விநியோக சொத்துக்களில் செய்யப்பட்ட பெரிய முதலீடுகளும், ஸ்ரீலங்காவின் சகல பகுதிகளுக்கும் வலையமைப்பினூடாக மின் கிடைக்க செய்ய மேற்கொண்ட முதலீடுகளும் (ii) மின் வழங்களுக்கான செலவுக்கும் பெறப்பட்ட வருமானத்துக்கும் இடையிலான குறை.

**2.7.2. வரக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் பின் விளைவுகளும்**

**பொருளாதார:**

- கடந்த காலங்களில் CEB பட்ட கடன்கள் ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தின் மீது சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை தோற்றுவிக்கின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களால் மின்துறை உட்கட்டமைப்பில் CEB செய்த முதலீடுகள் மின் வழங்களில் முன்னேற்றங்களை கொடுத்ததோடு வலையமைபபு மின் கிடைப்பனவையும் அதிகரித்துள்ளன. மேலும் இவற்றினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஸ்ரீலங்காவின் பொருளாதார வளர்ச்சி தூண்டப்பட்டது. தடைப்படாத, குறைந்த விளையிலான மின் கிடைப்பனவு வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கு சாதகமானது. மின் கிடைப்பதற்கான வசதிகளை விரிவுபடுத்தல் கிராமிய பொருளாதார அபிவிருத்திக்கு பல வகைகளில் உதவியுள்ளது.

- இருபக்க பல பக்க நிதி முகவரகங்களில் இருந்து ஆகவும் கூடிய கடன் பெறும் ஸ்ரீலங்கா நிறுவனமாக CEB இருப்பதனால் வேறு துறைகளுக்கு பிரச்சினைகளை கொடுத்துள்ளன. வேறு நிறுவனங்கள் கடன் பெறுதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடன்களை செலுத்த வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன, ரூபாயின் மதிப்பு குறைந்துள்ளது.

**சமூக:**

- பொருளாதாரம் போலவே CEB கடந்த காலங்களில் மேற்கொண்ட முதலீடுகளால் சமூகமும் பெறும் பயன் பெற்றுள்ளது. அவை: வாழ்க்கைத்தர உயர்வு, கூடுதல் வேலை வாய்ப்பு முன்னேரிய தொடர்பாடல் மூலம் சிறப்பான இணைப்பு தகவல் கிடைப்பு என்பவையாகும். இருப்பினும் சமூகம் இந்த நன்மைகளை மின் வழங்களுக்கு ஏற்படும் செலவை விட குறைந்த செலவிலேயே அநுபவிக்கின்றது, கட்டண முறையை பூரணமாக அமுல் செய்யாது விடின் செலவை விட குறைந்த விலையில் மின் வழங்க தேவையான மானியம் எவ்வளவு என அறிய முடியாது. இவ்வகையான தெரியப்படாத மீள செலுத்தப்படாத மானியம் - CEBயின் காசோட்டத்துக்குக்கும் அதன் கடன்களை மீள செலுத்த முடியாத நிலைமைக்கும் காரணமாகின்றது. CEB அரசாங்கத்திடம் பெற்ற கடனை மீளச் செலுத்த தவறினும் அரசாங்கம் சமூகத்திடமிருந்து அறவிட்ட வரிகள் மூலம் மின்சாரசபை பட்ட கடன்களை மீள செலுத்துகின்றது.

**சுற்றுச்சூழல்:**

CEBயில் பெரும் கடன்பட்டியல் அதன் முதலீட்டு ஆற்றலை குறைத்துள்ளது. இதனால் பல சமயங்களில் CEBயினால் மூலதன செறிவுமிக்க ஆனால் வினைத்திறன் மிக்க தெரிவுகளை முதலீடு செய்ய முடியாமல் போக அது குறைந்த மூலதனம் தேவைப்படும் வினைத்திறன் இல்லா திட்டங்களை தெரிவு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.7.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், மற்றும் நடைமுறைப்படுத்தல்

CEB வழங்கும் மின்சாரத்துக்கான உண்மையான செலவை மீளப்பெறுவது, தற்போதைய படுமோசமான நிலையிலிருந்து மீட்சி பெற அவசியமானதாகும். கட்டண முறையின் பூரண அமுலாக்கம் மின் வழங்களுக்கான செலவை மீளப்பெறுவதை உறுதி செய்யும். இதனால் கடனை மீள செலுத்தவும் வலுச் செலவுகளை சமாளிக்கவும் தேவையான பணம் கிடைக்கும். மேலும் கட்டண முறையால் சொத்துக்கள் மீதான உத்தரவாதம் அளிக்கப்பட்ட இலாபம், பெறுமானத் தேய்வுக்காக அனுமதிக்கப்பட்ட ஒதுக்கு என்பன புதிய முதலீடுகளின் மீதான செலவின் ஒரு பகுதியை ஈடு செய்ய பயன்படும். கடன் படுதலுக்கான தேவையை குறைக்கும். மேலும் CEBயின் மின் உற்பத்தி, மின் கடத்தல், மின் விநியோகம் ஆகிய தொழில்களில் ஒதுக்கப்பட்ட மூலதனம் அந்தந்த தேவைக்கு செலவளித்தலை உறுதி செய்தல் மற்றும் கட்டண முறையால் பரிந்துரைக்கப்பட்ட மொத்த நிரம்பல் கொடுக்கல் வாங்கல் கணக்கின் உருவாக்கம் என்பன ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய மானியம் எவ்வளவு என்பதை அறிய வைக்கும். மின் வழங்களின் செலவை கட்டண அறவீடு, அரசாங்க மானியம் மற்றும் இலாபம் என்பவை வழியாக மீளப்பெறுதல், நீண்டகால அடிப்படையில் CEBயை நிதிசார் நிலைபேறுமையை அடைய வைக்கும்.

## 2.8. தனியார் துறை முதலீட்டை முகாமை செய்தல்

### 2.8.1. தற்போதைய நிலை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

மின்துறையில் தனியார்துறை முதலீட்டை முகாமை செய்வதற்கு ஒரு நிறுவனம் சார்ந்த பொறிமுறை தற்போது இல்லை. ஜனவரி 1998இல் BOO/BOT/BOOT அடிப்படையில் வெளியிடப்பட்ட தனியார்துறை உட்கட்டுமான செய்திட்டங்களுக்கான கொள்வனவு வழிகாட்டல்கள் முதலீட்டு சபையின் உட்கட்டமைப்பு மூலதன பணியகம் (BII) மேம்படுத்தும் வசதிப்படுத்தும் உன்றினைக்கும் முகவரமாக செயற்படும் உற்கட்டமைப்பு மூலதன பணியகம் BII தற்போது இல்லை. இதனால் பிரயோகிக்க்கூடிய சட்டங்கள், கொள்கைகள் தற்சமயம் தெளிவாக இல்லை. நிறுவாக கட்டமைப்புகளும் வரையறுக்கப்படவல்லை. தனியார் முதலீட்டாளர்களால் நிதிப்படுத்தபடும்/ விருத்திசெய்யப்படும் BOO/BOT/BOOT திட்டங்களுக்கு கொள்வறை வழிகாட்டல்கள் 2006 தொடர்புறாது.

ஸ்ரீலங்கா நிலைத்திறுக்கக் கூடிய அதிகாரசபை (SLSEA) புதுப்பிக்கத்தக்க உப துறையில் முதலீடு செய்வற்கான வசதியாளராக – விசேடமாக பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் அனுமதியளித்தல் செயன்முறையை இலகுவாக்கும் வசதியாளராக செயற்படுகின்றது. முதலீட்டுசபை, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (PRDS) மற்றும் அண்மையில் உருவாக்கப்பட்ட நிதி அமைச்சின் அரசாங்க தனியார் பங்குடமை அலகு ஆகியன வலுத்துறையில் முதலீட்டை இலகுவாக்கும் வேறு பிரதான நிறுவனங்கள் ஆகும்.

ஸ்ரீலங்கா இலக்கம் 20 மின்சார சட்டம் 2009இன் கீழ் மின் உற்பத்தி துறை தனியார் முதலீட்டுக்கு வழி செய்கின்றது. குறித்த ஒரு முதலீடு 25 MWவிலும் அதிகமாயின் அரசாங்க பங்குடமையும் அவசியமாகும். இந்த சட்டம் மின் உற்பத்தி தொகுதி ஒன்றை கொள்வனவு செய்ய பகிரங்க விலை கோரலாக இருக்க வேண்டும் என கூறுகின்றது. மேலும் இது தொடர்பான கொள்வனவு வழிகாட்டல்கள் ஏற்கெனவே PUCSL இனால் வெளியிடபபட்டுள்ளது. பெற்றோலிய துறையில் PRDS மின் உற்பத்திக்கான உள்ளீடுகளை செய்வதற்கு கேள்வி கோருதலை செய்ய தயாராகின்றது. மின்னை விநியோகிக்கும் துறை (சாதரண உட்கட்டமைப்பு தவிர) பகுதியளவில் தாராளமயமாக்கப்பட்டுள்து. இது தனியார் முதலீட்டுக்கு திறந்துள்ளது. கட்டுப்படுத்தாளராக தொழிற்படும் பெற்றோலிய மூலவள அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சு, பெற்றோலிய துறையில் தனியார் முதலீட்டை இலகுவாக்குவதிலும் பங்களிப்புச் செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் நிதி தொடர்பில் பல்வேறு நிபந்தனைகள் இருப்பதுடன் தெளிவான கொள்கை இன்மையும் உள்ளது. இதனால் இவ்வாறான நிதி பெறுகை நாட்டுக்கு நன்மை அளிக்கும் விதமாக மின் உற்பத்தி தொகுதிகளை கொள்வனவு செய்யும் முறையை பெரிதும் ஆபத்தானதாக ஆக்க முடியும். தேசிய கொள்வனவு வழிகாட்டல்களும் இவ்வாறான தொகுதிகளின் கொள்வனவு, விலைக்கேற்ப பெறுமதி உள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இதனால் மின் உற்பத்தி திட்டங்களில் தனியார்துறை பங்கு பெறல் எதிர்பார்க்கப்படின் கொள்வனவு வழிகாடடல்கள் தற்போதைய நிலைக்கேற்ற திருத்தப்பட வேண்டும்.

### 2.8.2. வரக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் விளைவுகளும்

**பொருளாதார:**

தனியார் நிதியினால் மின்துறையை நிதிப்படுத்தல், மின்துறைக்கு நிதி தேடும் பொருப்பிலிருந்து அரசாங்கத்தை விடுவிக்கின்றது. இது பொருளாதாரத்தின் மீது நேரடியாக தாக்கத்தை உடையது. ஆகவும் கூடிய திறமான தொழில்நுட்ப ரீதியில் அதி சிறந்த மின் உற்பத்தி சாதனைகளுக்கு நிதி வழங்குவதில் நெகிழ்வுப்போக்கு இல்லாத – விரும்பத்தகாத பொருளாதார விளைவுகளை இது கொண்டுவரலாகாது.

**சமூக:**

- பயன்பாட்டின் நிபந்தனைகளுக்கு அமையும் குறைந்த செலவு திட்டமிடல் மற்றும் மின் தொகுதிக் கொள்வனவு செய்யப்படுமாயின் சமூகத்க்கு நிதி கிடைக்கும் வழி ஒரு பிரச்சினையாக இருக்குமா என்பது தெளிவின்றி உள்ளது. எவ்வாறாயினும் இவ்வாறான கொள்வனவுகளுக்கு போட்டியிடும் கேள்வி கோரல் மட்டுமே IPP அல்லது PPP பொறிமுறைகளின் கீழ் ஆகவும் குறைந்த கட்டணத்தை நிச்சயப்படுத்தும். இல்லாதுவிடின் உயர் கட்டணங்களால் சமூகம் பாதிக்கப்படும்.

**சுற்றுச்சூழல்:**

- முதலீடுகள் போட்டி முறையில் கேள்வி கோரியும் கொள்வனவு செய்யப்பட்ட தொகுதிகள் சகல சுற்றுச்சூழல் நியமங்களுக்கு அமைந்தும் இருப்பின் கணிசமான சுற்றுச்சூழல் பிரச்சினை ஏற்பட முடியாது.

### 2.8.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- கூடுதல் தனியார்துறை முதலீடுகளுக்கான வாய்ப்புகளை மின் துறையில் உருவாக்க வேண்டமாயின் இவ்வாறான முதலீடுகளை எந்த அடிப்படையில் கொள்வனவு செய்ய வேண்டும் என்பது தொடர்பில் தெளிவான கொள்கை இருக்க வேண்டும். அநேகமான முதலீடுகளை பெறுவதற்கான கட்டமைப்பு, வகை, கொள்வனவு செய்யப்படவுள்ள தொகுதியின் குறிப்பான விவரங்ள் என்பன போட்டிச் சூழலும் கூட ஒப்பிட முடியாதவை. முன் தொகுதிகளுக்கான தனியார்துறை நிதியைப் பெற முயற்சிகள் எடுக்கப்படும் போது கேள்வி கோரப்படாத முன்மொழிவுகளை கருத்தில் எடுக்கும் போக்கு பெரிய அளவில் உள்ளது. புதுப்பிக்கத்தக்க வலுத்துறை முதலீடுகளை இலகுபடுத்துவதில் SLSEAயின் வகிபாகத்தை பலப்படுத்தும் தேவையும் உள்ளது. கீழ் நோக்கிய பெற்றோலியதுறை முதலீடுகளில் முறைமையான கட்டுப்படுத்தும் ஏற்பாட்டை உருவாக்குதல் முதல் தேவையாகும்.

- தனியார் துறை பங்குபற்றுதலை கவர்வதற்கு கொள்வனவு வழிகாட்ல்களை பொருத்தமான முறையில் திருத்தம் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 2.9. மின் மற்றும் வலுத்துறையில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான பெரும் முதலீட்டுத் தேவை

### 2.9.1. சமகால நிலைமை, பிரச்சினைகள், பிரச்சினையான விடயங்கள்

மின் மற்றும் வலுத்துறையின் வளர்ச்சி நாட்டின் பொருளாதார வளரச்சியுடன் பிணைந்துள்ளது. மேலும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகாக பெருமளவு முதலீடும் பொதுவில் தேவைப்படும். முறையான மற்றும் நேர காலத்தோடான வலுத்துறை உட்கட்டமைப்பின் நடைமுறைப்படுத்தலை உறுதி செய்தல் - பொருளாதாரத்தை இயக்கவும் இவ்வாறன பெரிய அளவுத் திட்ட முதலீட்டுக்கு நிதி வழங்கவும் மிக முக்கியமானதாக அமைகின்றது.

மின்துறையில் மின்னுக்கான கேள்வி மற்றும் இயலளவு என்பன 2030 அளவில் கிட்டத்தட்ட இரட்டிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மின் உற்பத்தியின் விரிவு படுத்தல் மாத்திரமே சராசரியாக ஒவ்வொரு வருடமும் US$ 550M வீதம் அடுத்து 20 வருடங்களுக்கு தேவைப்படும் மின்கொண்டு செல்லல் மற்றும் விநியோக அபிவிருத்தி என்பவற்றுக்காக மேலும் முதலீடகள் தேவைபடுகின்றன. வேறு துறைகளின் தேவைகளுடன் சேர்ந்து இந்த முதலீடுகளை முன்னுரிமைப்படுத்தல் பொருளாதார போட்டித்தன்மையை விரிவாக்கவும் நாட்டின் நலனுக்கும் முக்கியமாகின்றது.

இயல்பாகவே மின்துறை முதலீடுகள் மூலதன செறிவானதாகவும் நீண்டகால பொருளாதார பயன்படு காலத்தை உடையனவாகவும் உள்ளன. ஏதேனும் தேவையில்லாத முதலீட்டு தாமதங்கள், கேள்வியை சமாலிக்கும் ஆற்றல் என்ற வகையில் மேலும் கூடுதலான கடுமையான பொருளாதார விளைவுகளை கொண்டு வரும். 2019இன் முடிவுவரை இந்த முதலீடுகள் உரு S3.2இல் காட்டப்பட்டு உள்ளன.




**உரு S3.2 2020 வரை மின்துறை முதலீடுகள்**

### 2.9.2. வரக்கூடிய தாக்கங்கள் மற்றும் பிரச்சனைகளின் விளைவுகள்

பொருளாதார:

- ஒப்பீட்டு ரீதியில் மின் மற்றும் வலுத்துறை முதலீட்டு தேவைகள் உயர்வானவை. இந்த முதலீடுகளின் வினைத்திறன் மிக்க முகாமை நாட்டின் பொருளாதார செயல் ஆற்றுகைக்கு நன்மை அளிப்பன. புதிய மின்வழங்கள் ஏற்பாடுகளுக்கு தேவையான நிதி அரசாங்க நிதிகள் மற்றும் தனியார் நிதி (சுயாதீனமான மின் உற்பத்தியாளர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IPP மற்றும் கூட்டு முயற்சி – JV) மற்றும் அரசாங்க தனியார் பங்குடமைகள் (PPP) என்ற வடிவங்களில் வரமுடியும். இந்த நிதி வழங்கள் உத்தியோக பூர்வ உதவி (ODA) ஏற்றுமதிக்கடன் உள்நாட்டு வர்த்தக கடன்கள் சலுகை அடிப்படையிலான கடன்கள், அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நன்கொடைகள் போன்ற வகைகளில் பெறப்பட முடியும். இந்த தெரிவுகள் தத்தம் நன்மை தீமைகளை வெவ்வேறு அளவில் கொண்டிருப்பினும் மூலதனத்தின் விலை மற்றும் மூலதனத்தின் நிதிசார் செலவு என்பன இறுதியாக அரசாங்க/ பொருளாதாரம் என்பவற்றால் நேரடியாக அல்லது மறைமுகமாக தாங்கப்படுபவையே. பொருளாதாரத்தின் வலுச் செறிவு கவனிக்கப்பட வேணடியது. வலுத்துறை செய்திட்டங்களின் பொருளாதார விளைவுகள் தொடர்பான கவனமான பகுப்பாய்வு மிக முக்கியமானது. ஏனெனில் நீண்டகால உறுதியை இவை பாதிக்கக்கூடும். மேலும் பிராந்தியத்திலுள்ள பொருளாதார போட்டித் தன்மையையும் கூட்ட முடியும்.

**சமூக:**

- வலுத்துறை மீதான முதலீடுகள் தேசிய பொருளாதாரத்தை நேரடியாக தாக்குவதனால் அது நாட்டின் அரசஇறை கொள்கையிலும் தாக்கம் செலுத்தும். இந்த துறை மானியத்துக்கு உற்படினும் இறுதியாக இது மக்களை பாதிக்கும். பெறப்பட்ட நன்மைகளும் பல்வேறு சமூக பிரிவுகளால் தாங்கப்படும் செலவுகளும் வலுத்துறையை முகாமை செய்வதில் முக்கியமானவை.

இந்த நாடு அநேகமாக 99 சதவீதம் (98.71 சதவீதம் ஜூன் 2016) மின்மயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு 6 மில்லியன் (2016 முடிவு அளவில் 5,964,194) நுகர்வோர் உள்ளனர். மின் சேவை நாட்டின் சகல பகுதிகளுக்கும் கிடைப்பதனால் அடுத்து வருவது சமூகத்துக்கும் தனி ஆளுக்கும் கட்டுப்படியாகும் தன்மையாகும். ஆகவும் குறைந்த பொருளாதார செலவு மற்றும் ஏற்புடைய நன்பகத்தன்மை என்பவற்றுடன் அபிவிருத்தி திட்டத்தை செயற்படுத்துதல் - நுகர்வோருக்கும் வேறு பங்குதாரர்களுக்கும் கடடுப்படியாகும் தன்மை மற்றும் சேவையின் நம்பகம் ஆகியவற்றை உறுதிப்படுத்தும்.

**சுற்றுச்சூழல்:**

- பெரிய அளவு திட்டத்திலான செய்திட்டங்கள் சூழல் மீது தாக்கம் செலுத்துவன. இதனால் இவ்வாறான தாக்கங்களை குறைத்தல் முக்கியமானது. மின் மற்றும் வலுத்துறை பூகோள சுற்றுச்சூழல் தாக்கங்களை விளைவிப்பின. இது உள்நாட்டு சுற்றுச்சூழலிலும் தாக்கத்தை செய்யும். பிரதான சவால்களால் ஒன்று யாதெனில் சுற்றுச்சூழல் பாதிப்பை குறைப்பதற்கான செலவு அத்தியாவசியமான வலுத்துறை செய்திட்டங்களுக்கு தேவையான மூலதன செலவுடன் சேர்க்கப்படுவதாகும். மின்துறையில் காபன் நீக்கம் வலு வடிவங்களுடன் ஒப்பிடுகையில் சிக்கல் குறைவானது ஆகும். இந்த துறையில் இவ்வாறான காபன் குறைப்பை அடைவதற்கு தேசிய அர்ப்பணிப்பும் சர்வதேச ஆதரவும் பாரிய பங்களிப்பு செய்கின்றன. ஆகவும் பிந்திய நீண்டகால மின் உற்பத்தி திட்டம் அடுத்த மூன்று வருடங்களுக்கு US$55 மில்லியன் மேலதிக செலவில் ஒரு வலுக்கலப்பு திட்டத்தை இனம் கண்டுள்ளது. இதில் குறைந்த காபன் தொழில்நுட்பங்களும் அடங்குகின்றன. உள்நாட்டு சுற்றுச்சூழல் பாதிப்பை குறைத்தல் என்ற வகையில் - கடுமையான சுற்றுச்சூழல் சட்டங்களை கொண்ட நாடு என்பதால் ஒவ்வொரு பெரிய அளவுத்திட்ட வலு செய்திட்டங்களும் இறுக்கமான சுற்றுச்சூழல் பாதிப்பு தாக்க மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### 2.9.3 பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- ஆகவும் கூடிய சிக்கனமான வினைத்திறன் மிக்க வழிமுறையை தெளிவான ஒத்திசைவான கொள்கை இலக்குகளுடன் மின்துறை அபிவிருத்திக்காக தெரிவு செய்க.
- வினைத்திறன் மிக்க உட்கட்டமைப்பு பயன்பாட்டுக்காக வலுச் சிக்கனமான மற்றும் வேறு DSM முறைகளை மேம்படுத்தக.
- முதலே தீர்மானிக்கப்பட்ட செய்திட்டங்களை நேர காலத்தோடு செயற்படுத்துக. ஒவ்வொரு தனி திட்டத்தாலும் பொருளாதாரம் உச்சப் பயன் பெறுவதை உறுதி செய்க.

## 2.10. குறைவாக உள்ள வலு வினைத்திறன் ஏற்பாடுகள்

### 2.10.1. சமகால நிலைமை, பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையான விடயங்கள்

மின்துறையில் மட்டுமின்றி, அனல் மின் மற்றும் போக்குவரத்து துறையிலும் நாட்டில் வலு வினைத்திறனுக்கான இயலுமை கணிசமாக உள்ளது. இந்த பிராந்திய நாடுகள் அநேகமானவற்றுடன் ஒப்பிடுகையில் வெற்றிகரமான EE&C முயற்சிக்கு தேவையான சகல மூலகங்களும் இந்த நாட்டில் உள்ளன. இந்த நாட்டில் வலுவினைத்திறன் மிக்க செய்திட்டங்களை செயற்படுத்தல் மிக குறைந்த மட்டத்தில் உள்ளது. மின் கொண்டு செல்லல் விநியோகத்தில் ஏற்படும் இழப்பு என்பன விதிவிலக்காகும். ஆயினும் பொருளாதாரத்தின் வலுச்செறிவு நீண்ட கால உறுதிப்பாட்டில் உள்ளது. ஒப்பீட்டளவில் குறைந்த அளவு வலுவுடன் இந்த நாடு கூடுதல் பொருளாதார விளைவை உற்பத்தி செய்கின்றது என்பதே இதன் பொருளாகும். பொருளாதாரத்தின் குறைந்து செல்லும் வலுச் செறிவின் போக்கு கீழே தரப்பட்டுள்ளது.




உரு S3.3. பொருளாதாரத்தின் வலுச் செறிவுகள்

கணிசமான காலமாக வர்த்தக வலுச் செறிவு, ஒரே மட்டத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான சாதகமான நிலைமை இருந்தும், இறுதி நுகர்வாளர் பிரயோகங்களில் வலு வினைத்திறனை மேம்டுத்த பாரிய இடமுண்டு. இந்த மீதப்படுத்தலுக்கான இடமுள்ளவையாக காணப்பட்டவை இடையே ஸ்ரீலங்கா நிலைத்திருக்கக் கூடிய வலு அதிகாரசபை (SEA) அண்மையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆய்வை நடத்தியது. அதில் முக்கியமான பங்கு உள்ளவற்ற அது அடையாளம் கண்டது. அட்டவணை 53.2 இல் அது காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை S3.2. 2020 அளவில் மின் விரயம் காணப்படும் இடங்களும் மின் சேமிப்புக்கான இடங்களும்.

| தொழில்நுட்பம் | 2020 அளவில் சேமிப்பு GWh |
|---|---|
| வினைத்திறன்மிக்க ஒளியூட்டல் | 549.1 |
| வினைத்திறன்மிக்க காற்றாடி | 298.2 |
| வினைத்திறன்மிக்க மோட்டார்கள் | 248.2 |
| வினைத்திறன்மிக்க குளிர் சாதனம் | 227.3 |
| மின் முகாமை முறைமை மற்றும் BMS | 212.2 |
| ஒளிர் விளக்கு அகற்றல் | 139.4 |
| வினைத்திறன்மிக்க வளி சீராக்கல் | 125.4 |
| பசுமை கட்டடங்கள் | 44.7 |
| வினைத்திறன்மிக்க பம்பிகள் | 43.4 |
| வேறு | 7.1 |
| **மொத்தம்** | **1,895.0** |

இவ்வாறான மின்வலு சிக்கன வாய்ப்புகள் அனல்வலு மற்றும் போக்குவரத்து வலு முறைமையிலும் உள்ளன. ஆனால் நம்பகமான தரவுகளும் இத்துறையில் ஒத்திசைவான கொள்கை இன்மையும் இந்த கலந்துறையாடலை மின் துறைக்கு மட்டும் மட்டுப்படுத்துகின்றது.

ஸ்ரீலங்கா நிலைத்திருக்கக் கூடிய வலு (SEA) அதிகாரசபை வலு வினைத்திறன் மற்றும் பேணுதல் (EE&C) திட்டங்களை அமுலாக்குவதில் பல தடைகளை இனம் கண்டுள்ளது. SEA EE&C பரப்பினுள் பல நிகழ்ச்சித்திட்டங்களை தொடக்கியுள்ளது. இது நன்கு விருத்தியாக்கப்பட்ட கொள்கை மற்றும் ஒழுங்கான முறைகளால் ஆதரிக்கப்படுகின்றது. ஆயினும் EE&C வேலைப் பொறுப்புகளை செயற்படுத்துவதில் பல தடைகள் உள்ளன. அவற்றை ஐந்து பிரதான கொத்தணங்களாக பிரிக்கலாம்.

I. கொள்கை மற்றும் கட்டுப்படுத்தல்
II. பொருளாதார மற்றும் நிதி சார்ந்த
III. நிறுவனரீதியாக மற்றும் தொடர்பு
IV. தொழில்நுட்பம் மற்றும் தகவல்
V. அறிவு மற்றும் முதலீடு

சுருங்கக் கூறின், பரந்த இயலளவு இருப்பினும் வலு வினைத்திறன் சந்தையில் தோல்வி எனப் பொருள்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### 2.10.2. வரக்கூடிய தாக்கங்கள, பிரச்சினைகளின் விளைவுகள்

**பொருளாதார:**

- குறிப்பிட்டவகை மின்பாவனையாளர்களுக்கு மின்சாரம் மலிவாக கிடைப்பதும், வினைத்திறன் மிக்க தொழில்நுட்பங்களின் உயர்விலையும் மின் பாவனையை வினைத்திறன் அற்றதாக்கியுள்ளது. நுகர்வோர் குறைவான வலு ஆற்றுகையுள்ள மலிவான கருவிகளை வாங்குகின்றனர். அவர்களால் நல்ல சாதனங்களை வாங்கி மின்னை மீதப்படுத்த முடியாது. கட்டனங்கள் குறைவாக இருப்பதால் அவர்களுக்கு மின் வினைத்திறனுள்ள விலைகூடிய சாதனங்களை வாங்குவதால் பெரிய அளவில் மின் செலவை மீதப்படுத்த முடியாது. ஆயினும் இதன் ஒட்டுமொத்த விளைவு கணிசமான பொருளாதார இழப்பு ஆகும். தற்போதுள்ள நிலைமை தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய அளவில் பாதிப்பை உருவாக்குகின்றது.

**சமூக:**

- ஸ்ரீலங்கா மின் நுகர்வோரில் அநேகமானோர் மாதம் ஒன்றுக்கு 90 kWhஇலும் குறைவான மின்னை நுகர்கின்றனர். இந்த பெரும்பான்மை குழுவுக்கு மின் உற்பத்திக்கான செலவிலும் பார்க்க மிகவும் குறைவான விலையில் மின் வழங்கப்படுகின்றது. இந்த குழு குறைந்த வருமான குடும்பமாக கருதப்படுகின்றது. இவர்களின் செலவளிக்கக் கூடிய வருமானம் மிக தாழ் நிலையில் அல்லது எதுவுமே இல்லை என இருப்பதனால் மின் வினைத்திறன் மிக்க சாதனைகளை வாங்க முடியாது. இதனால் அநேகமான குடும்பங்கள் இன்னும் ஒளிர் மின் குமிழ்களையே பயன்படுத்துகின்றன. இதனால் உச்ச நேர மின் கேள்வியில் பெரும் அதிகரிப்பு ஏற்படுகின்றது. ஆயினும் இந்த குறைந்த வருமான குடும்பங்களுக்கு கொடுக்கப்படும் கட்டண மானியமும் அகற்றப்படின் பெரிய அளவிலான சமூக குழப்பங்கள் ஏற்படும். இருப்பினும் இந்த குடும்பங்களின் வரவு செலவு திட்டத்தில் மின் செலவு மிகச் சிறிய தாக்கம் உள்ளதாகவே காணப்படுகின்றது. மேலும் இந்த மின்னுக்கான செலவு அவர்கள் தொடர்பாடல் மற்றும் களியாட்டங்களில் செலவளிக்கும் பணத்தின் ஒரு சின்ன பின்னமாகவே உள்ளது. முழு நாட்டிலும் வாழும் வாடிக்கையாளரின் மீடிறன் பரம்பல் ஜூலை 2014இல் இருந்தவாறு உரு S3.4 காட்டுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு S3.4 வெவ்வேறு பாவனை மட்ட வாடிக்கையாளர்கள் மீடிறன் பரம்பல் (kWh/மாதம்)

**சுற்றுச்சூழல்:**

- எந்தவொரு மூலவளத்தினதும் வினைத்திறன் மிக்க பாவனை சுற்றுச்சூழல் பொறுப்பை குறைக்கும் முயற்சியாகும். இதனால் வலு வினைத்திறன் - சர்வதேச - வலு முகவரத்தால் (IEA) “முதலாவது எரிபொருள்” எனக் கூறப்பட்டது. வலு வினைத்திறன் முதல் முன்னுரிமை உடையது என்பதே இதன் பொருள். பாதரசம் மாசு பயம் இருந்த போதும் CFL மின் குமிழ் ஊக்குவிப்பு உச்ச நேர மின் கேள்வியை 300MW ஆல் குறைத்தது. இது உச்ச மின் பிறப்பாக்கிளிலிருந்து வரும் காபனீரொட்சைட் ($CO_2$) வெளி வருகையை தவிர்த்தது. கழிக்கப்படும், காலம் கடந்த கருவிகளால் உண்டாக்கப்படும் கழிவுகளை கையாள மின் நிகழ்ச்சி திட்டங்களினுல் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் சேர்க்கப்படுமாயின் மின்துறையில் காணப்படும் கேள்வியின் வளர்ச்சியை நிறுத்துவதற்கான சுற்றுச்சூழல் ரீதியில் நன்மைமிக்க தலையீடாக வலு வினைத்திறனை எடுத்துக் கொள்ளலாம்.

### 2.10.3. பரிகாரங்கள், ஏற்பாடுகள், நடைமுறைப்படுத்தல்

- பெரிய அளவுதிட்ட EE&C முயற்சியை பயன்படுத்துவதற்கு இந்த தடைகள் ஒழுங்கு முறையான வகையில் அகற்றப்படவுள்ளன. EE&C சந்தையை திறந்துவிடும் ஆரம்ப நிலை கருவியாக நடவடிக்கைகளின் பொதியாக SEA இனங்காணப்பட்ட 8 பிரதான விசைகளில் ஒவ்வொன்றுக்கும் அகற்றல்தடைகள் தொடுக்கப்பட்டுள்ளன. நிகழ்ச்சி திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மூன்று சந்தை பிரிவுகளுக்கு சேவை செய்யவென இலக்காக்கப்படும். அவையானவை: கைத்தொழில் வர்த்தகம், வாழ்விடம்/சிறிய நடுத்தர நிறுவனங்கள்/ அரசாங்க துறைகள் முதல் இரண்டு சந்தை பிரிவுகள் பிரதானமாக பயன்படுத்தல்களால் சேவை செய்யப்படும். இது வலு சேவை கம்பனிகள் (ESCOs) வலுக் கணக்காளர்கள் மற்றும் நிபுனர் குழுமங்களின் கூட்டுடன் செய்யப்படும். குடியிருப்பு பெரிய அளவிலான குடியிருப்பு SEA அரசாங்க பிரிவு ஆகியவை SEA மின் உபகரண கட்டுப்படுத்தல் முயற்சிகள் ஊடாக நடைப்பெறும். இந்த நடைமுறைப்படுத்ததல் உபாயங்கள் வலு வினைத்திறனுக்கான பலமான சந்தையை உருவாக்க உதவும். மேலும் இது சந்தை அபிவிருத்தியை போஷிககும் ஒரு சூழல் தொகுதியையும் பேணிக் கொள்ளும்.

- இந்த ஒப்படையின் அவசரத்தன்மை ஊசலாட்டம் இல்லாத அரசியல் ஆதரவை பெற்றுக் கொடுப்பதில் வெற்றிகண்டது. இந்த திட்டத்தை Operation DSM என SEA பெயரிட காரணமான பல அலகுகளின் நெருக்கமான இசைவு படுத்தலையும் இந்த நிகழ்ச்சி திட்டம் ஜனாதிபதி செயலணி (PTF)ஆல் தலைமை தாங்கப்பட் தேசிய வழிகாட்டல் குழுவால் (NSC) வழிகாட்டப்படும். அத்தோடு நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ அலகால் (PMU) SEA உள்ளே செயற்படுத்தப்படும்.

- ODSM நெருக்கமான வலையமைப்பு ஆக்கப்பட்ட பல தனிமங்களின் கூட்டு முயற்சியாக இருக்கும். இவற்றின் இடையேயான தொடர்புகள் நன்கு அபிவிருத்த அடைந்த கொடுக்கல் வாங்கல் செயல்முறைமையால் TPS ஆளப்படும். இந்த TPS, உண்மையான வலு மீதி, மற்றும் - நல்ல கண்காணிப்பு அறிக்கையிடல், ஒப்பிட்டுப் பார்த்தல் (MRV) சட்டகம் என்பவற்றை உருவாக்க கிடைக்கும் நிதி என்பவற்றை கண்கானிக்கும். நவீன திறன் வலையமைப்பு, நவீன திறன் மின்மானி தொழில்நுட்பங்கள் TPS இல் அத்திவாரமக இருக்கும். மேலும் இது ODSMஇலுள்ள தன்னியக்க கேள்வித்துலங்கல் மூலகங்களின் கணக்கீட்டு அம்சங்களை இலகுபடுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.11. சுற்றுச்சூழல் சார்ந்த மற்றும் சமூக விசனங்கள் - காபன் வெளியீடு

#### 2.11.1. தற்போதைய நிலைமை, பிரச்சினைகளும், பிரச்சினையான விடயங்களும்

பொருளதாரத்தின் பிரதான இயக்கும் துறையான வலுத்துறை பூகோள மற்றும் உள்நாட்டு சுற்றுச்சூழல் மற்றும் சமூக தார்ப்பரியங்களின் மீதான கணிசமான தாக்கத்தை உடையது. இரண்டு தசாப்தங்களின் முன்னர் மிகவும் குறைவான காபன் நிலையிலிருந்து நாட்டின வலுத்துறை சுவட்டு அடிப்படை எரிபொருள் துறைக்கு படிப்படியாக மாறி வருகிறது. ஆனால் நீண்ட கால உபாயமாக அதன் பசுமைத் தன்மையை பேணுவதில் ஆர்வமாக உள்ளது.

ஸ்ரீலங்காவின் $CO_2$ வெளியீடு 2014இல் 16.74 மில்லியன் தொன் ஆக இருந்தது. பூகோள மொத்த காபன் வெளியீட்டில் 0.05 சதவீதமாக இருந்து. நாட்டின் காபன் வெளியீட்டின் 48 சதவீதம் போக்குவரத்து துறையிலிருந்தும் 41 சதவீதம் மின்துறையிலிருந்தும் வருகிறது. காபன் நீக்கத்தை பொறுத்து மின்சார துறை சிக்கல் குறைவானது. போக்குவரத்துத் துறை CEBயால் தொடக்கப்பட்ட காபன் வெளியீட்டை குறைக்கும பல நடவடிக்கைகளை கண்டுள்ளது. இது பொருளாதார செலவை உத்தம மட்டத்தில் பேணிக்கொண்டு இதனை செய்கின்றது. ஆயினும் இது செலவு கூடிய தெரிவாகும்.

#### 2.11.2. பரிகாரங்கள், நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்தல்

காபன் வெளியீடு மட்டம் பூகோள உலக நியமத்துடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருப்பினும் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப மாறுதல் அதனை குறைதத்தல் என்பவற்றுக்கு இட்டுச் செல்லும் பல கொள்கை நடவடிக்கைகளை காலநிலையால் அதிகம் பாதிப்படையக்கூடிய ஸ்ரீலங்கா கடைப்பிடித்துள்ளது. ஸ்ரீலங்காவின் GHG வெளியீடு பூகோள மொத்த வெளியீட்டின் 0.5 சதவீத்துக்கு மட்டுமே காரணமாக உள்ளது. கியோட்டோ ஒப்பந்தம் (non-Anex1) நாடுகளுக்கு கடைப்பாடு எதையும் விதிக்காவிடினும் ஸ்ரீலங்கா 2002இல் கியோட்டோ ஒப்பந்தத்தில் கைசாத்திட்டது. ஸ்ரீலங்கா SDG பற்றிய பாரீஸ் ஒப்பந்தத்திலும் கையொப்பமிட்டது.

- ஸ்ரீலங்கா காபன் வெளியீட்டை குறைக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த வகையில் அது உயர் வினைத்திறன் மிக்க அதிநவீன தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தது. உயர் வினைத்திறந் தொழில்நுட்பங்கள் மூலம் $CO_2$ வெளியீடு 12% - 16%இல் குறைக்கப்படலாம். எஞ்சியுள்ள பிரதான நீர் மின் உற்பத்தி செய்திட்டங்களை CEB தொடக்கியுள்ளது. ஆனால் அவை மிக உயர்வான மூலதன செலவை வேண்டுவன.

- LTGEPஇல் வேறு புதுப்பிக்ககூடிய வலுவின் பங்கு உத்தம அளவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இது 2020இலிருந்து 20 சதவீதத்திலும் கூடுதலான அளவில் பேணப்படுகின்றது. இது மின் உற்பத்தியினால் வரும் காபன் வெளயீட்டை குறைக்கும். அறிமுகம் செய்யப்படவுள்ள 3x200MW பம்பப்பட்ட களஞ்சிய மின் நிலையத்தின் அமைப்பு மற்றும் உயர் (ORE) என்பவற்றுடன் - மின் தொகுதியின் பசுமை நற்பெயர் நாட்டின் வலுப்பங்கில் 50 சதவீத அளவில் பேணப்படும்.

- பெப்ரவரி 2009இல் UNFCC மற்றும் கொயோட்டோ ஒப்பந்தமட்ட என்பவற்றுக்கு நியமிக்கப்பட்ட தேசிய அதிகாரசபை (DNA) என்ற வகையில் சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு (CDM) கொள்க வரைவு ஒன்றை விருத்தி செய்தது.

- CDM குறைவிருத்தி நாடுகளில் காபன் வெளியேற்ற குறைப்புத் திட்டங்களை அறிமுகம் செய்தது. இதன்படி அபிவிருத்தி அடைநது வரும் நாடுகள் சான்றுப்படுத்தப்பட்ட (காபன்) வெளியேற்ற குறைப்பு புள்ளிகளை (CER) சம்பாதிகக் முடியும். இதனை கைத்தொழில் நாடுகள் வாங்கி கொயோட்டா ஒப்பந்தத்தின் கீழ் தமது காபன் குறைப்பின் இலக்கின் ஒரு பகுதியாக காட்டலாம். ஸ்ரீலங்காவில் CDM செய்திட்டங்களை செயற்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறதான துறைகளாக வலு, கைத்தொழில், போக்குவரத்து விவசாயம், கழிவு முகாமை, வனத்துறை மற்றும் பெரும்தோட்டதுறை என்பன உள்ளன. இவற்றின் இடையே வலுத் துறை உச்ச அளவிலான ஆற்றலை கொண்டிருப்பதாக இனம் காணப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் முதலாவது CDM செய்திட்டம் 2005இல் UNFCCCஉடன் பதிவாகியது. அன்றிலிருந்து 2013 முடிவுவரை 17 செய்திட்டங்கள் பதியப்பட்டன. CEB Broadlands Hydro power Project எனும் ஒரு பெரிய அளவுத்திட்டமொன்றை பொறுப்பு எடுத்தது. இந்த செய்திட்டத்தினால் உண்டான காபன் வெளியீட்டு குறைப்பு கிட்டத்தட்ட வருடத்துக்கு 83 கிலோ தொன் $CO_2$ வுக்கு சமவலுவானது.

- ஸ்ரீலங்கா உலக வங்கியுடன் காபன் புள்ளி நிகழ்சசி திட்டத்தை தொடக்கியுள்ளது. அதன்படி NDC அலக்குக்கு மேற்பட்ட காபன் குறைப்பு உலக வங்கியின் காபன் பங்குடமை வசதிக்கு (CPF) மாற்றப்படும். CEB நம்பிக்கை பொறுப்பாளராக இருக்கும். எந்தவொரு தனியார் மின் உற்பத்தியாளரும் இந்த திட்டத்தில் சேர விரும்பினால் அவர் தனது காபன் புள்ளிகளை CEB ஊடாக மாற்ற வேண்டும். இவ்வகையில் பெறப்பட்ட காபன் வருமானம் புதுப்பிக்ககூடிய அபிவிருத்திக்காக தொழில்நுட்ப மற்றும் நிதித் தடைகளை தாண்ட பயன்படுத்தலாம். காபன் நிதி கொடுப்பனவை செய்ய விலை தீர்மானிக்கும் பல வித்தியாசமாக அணுகுமுறைகள் உள்ளன. NDC இலக்குகள், நாடு, துறை மற்றும் நாடுகள் இடையேயான தொடர்புகள் என்பன விலை தீர்மானிக்கும போது கருத்தில் எடுக்கப்படும்.

  பெறுமதியான சந்தை தொடக்கப்புள்ளி இல்லாததால் அதிகரிக்கும் செலவு பகுப்பாய்வு, முதலீட்டுப் பகுப்பாய்வு, பொருளாதார கணிப்பீடு மற்றும் ஏலம் என வழிகளில் விலை தீர்மானிக்கப்படும். நிர்வாக விலையீடல் முறையின் கீழான பொருளாதார மதிப்பீட்டு தெரிவு விவரமான தரவுகள் இன்றி மேற்கொள்ளப்படலாம். விலையானது வாங்குவோர் விற்போருக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்படும்.

## 3. நிலைபேறுமை கண்ணோட்டம் - 2020 மற்றும் அப்பால்

### 2020

புதுப்பிக்கக்கூடிய வலுத் தெரிவு எதிர்காலத்துக்கான வாய்ப்பை காட்டுகின்றது. தாரளமான சூரிய ஒளியுடன் ஆசீர்வதிக்கப்பட்ட ஸ்ரீலங்கா ஒரு வெப்ப வலய நாடு. இங்கு காற்று நடுநிலையான வேகத்தில் வீசும். தீவின் எவ்விடமும் கடலுக்கு அண்மையில் இருப்பதனால் எப்போதும் காற்று இருக்கும். விசேடமாக வடமேற்கிலிருந்து வடக்கு தொடர் நிலம் மற்றும் தென் கிழக்கு தொடர் நிலத்தின் கரைக்கு அண்மையில் கூடுதல் காற்று இருக்கும். மலைநாட்டில் வேகமான காற்று இருக்கும். அநேகமாக இது பருவகாலத்தை பொறுத்து இருக்கும். காற்று வீசாத காலமும் உண்டு. ஸ்ரீலங்காவில் உயிர்தினிவு அடிப்படையிலான மின் உற்பத்திக்கு பொருத்தமான விரைந்து வளரும் தாவரங்களை வளரக்கவும் முடியும். எமது குப்பையில் கூடுதலானவை சிதைவடைய கூடியன. இதனால் அதிலிருந்து வலு பெற முடியுமாயின் பயன்படக்கூடிய பிரபலமான முறை (anaerobic digestion) ஆகும்.

தனியார் துறையாலும் CEBயினாலும் சூரியவலு தட்டு, காற்று மிக சிறிய அளவில் உயிர் திணைவு என்பவை மூலமாக மின் உற்பத்தி செய்யப்படுகின்றது மேற்கொள்ளப்படும் வலு செய்திட்டங்களில் சிறிது விரயமும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலு நிலைமையை பொறுத்தவரையில் ஸ்ரீலங்கா ஒரு பசுமை நாடாக தொடர்ந்து இருக்க முடியும். அநேகமான எமது பெரிய மரபு ரீதியான மற்றும் சிறு அளவுதிட்ட நீர் வளங்கள் பூரணமாக பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு விட்டன. உயிர் திணிவு மற்றும் நீர் அடங்கலான ஆரம்ப நிலை வலு விநியோகத்தில் புதுப்பிக்க கூடிய வலுவின் பங்கு 1970இல் 80 சதவீதமாக இருந்து 2015இல் 48 சதவீதமாக ஆக குறைந்து விட்டது. இருப்பினும் ஆரம்ப நிலை வலு விநியோகத்தில புதுப்பிக்கத்தக்க வலுவின் பங்கில் பாராட்டக் கூடிய அதிகரிப்பு உள்ளதை கவனிக்க வேண்டும். இதன் பொருள் யாதெனில் குறிப்பிட்ட வகைகளில் பெயர்வு இருப்பினும் குறிப்பாக நகர வீட்டுத்துறை வலுக் கலவையில் இருப்பினும் நாடு புதுப்பிக்க தக்க வலு மூலங்களை பயன்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் கண்டள்ளது என்பதாகும்.

அதிகரித்துள்ள புதுப்பிக்கக் கூடிய வலுவின் பரம்பல் மற்றும் வாடிக்கையாளர் பங்களிப்புடன் கூடிய விநியோகிக்கப்படும் மின் உற்பத்தி என்பவற்றுக்கு மின் கொண்டு செல்லல் மற்றும் விநியோக வலையமைப்பு என்பவறறில் கவனமான முகாமைத்துவம் இருக்க வேண்டும். இதனால் சகல வாடிக்கையாளருக்கும் தரமான தொடர்ச்சியான மின் கிடைப்பது உறுதி செய்யப்படும். விலை மற்றும் வேறு ஊக்குவிக்பு சமிக்ஞைகளுக்கு துலங்கும் வலுவை முகாமை செய்யவும் சேமிக்கவும் வாடிக்கையாளரின் சுயவிருப்பு பங்களிப்பை உள்ளடக்கிய கேள்வி முகாமைத்துவ முன்னெடுப்புகளுக்கு முன்னேறிய மின் அளவீட்டுக்கான உட்கட்டமைப்பு தேவை. CEBயும் LECOவும் அதி நவீன திறன்மின் அளவீடு உட்கட்டமைப்பின் முன்னோடி நடைமுறைப்படுத்தல் தொடங்கிவிட்டன. அவை 2018, 2019இல் மேலும் பல பரிட்ஷார்த்த செய்திட்டங்களை நடைமுறைப்படுத்த உள்ளன. திறன் மற்றும் முற்கட்டணம் செலுத்திய மின்மாணிகள் 2018இலிருந்து வாடிக்கையாளர் கேட்குமிடத்து வழங்கப்படும். இதனால் வாடிக்கையாளர்கள் தமது சொந்த நுகர்வை பயன்பாட்டின் தலையீடு இன்றி அல்லது தலையீட்டுடன் தாமே கண்காணிக்கவும் முகாமை செய்யவும் முடியும்.

**2025 - 2030**

ஸ்ரீலங்காவின் தேசிய வலு கொள்கை மற்றும் உபாயங்கள் எனும் வரைவு இவ்வாறு கூறுகின்றது. "கடந்த தசாப்தத்தில் ஆரம்ப நிலை வலு விநியோகத்தில் புதுப்பிக்க கூடியவற்றின் பங்கை 55 சதவீதத்திலிருந்து உயர்த்தி அதை பேணவென கொள்கை தொடர்பில் முற்றுமுழுதான கருத்து மாற்றம் பற்றி சிந்திக்கப்படுகின்றது". இது பாரீஸ் ஒப்பந்தம் (COP21) மற்றும் நிலைத்திருக்ககசுடிய அபிவிருத்தி நோக்கங்கள் (SDG) என்பவற்றுக்கு அமைய விரும்பப்பட்ட தேசிய ரீதியாக (INDCs) அதிகரிக்கின்றது. ஸ்ரீலங்கா GHG வெளிவிடுவதை 20 சதவீதத்தால் குறைக்கும் கடப்பாட்டை கொண்டுள்ளது. (4 சதவீதம் நிபந்தனை அற்றது. 16 சதவீதம் நிபந்தனையுன் கூடியது).

2018/2037 LTGEPக்கு அமைய 2020 அளவில் காற்றால் 414MW சூரிய சக்தியால் 410MW உம் 2030 அளவில் காற்றால் 894MW சூரிய சக்தியாள் 1009MWஉம் அறிமுகம் செய்யப்படவுள்ளது. இதனால் மின்துறையில் மட்டும் GHG வெளியீட்டை 20 சதவீதத்தால் குறைக்கலாம்.

"அதிநவீன" திறன்மிக்க மற்றும் நிலைபேறுமை உடைய முன்முயற்சிகள் மின் துறையில் புதுப்பிக்க கூடிய வலு முன் முயற்சிகளை மிகை நிரப்பு செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள்

S4

# S4. சுகாதாரம்[14]

## 1. தற்போதைய நிலவரம்

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையானது பயனுள்ள சுகாதார சேவைகளை நியாயமான கட்டணங்களில் வழங்குவதா அறியப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தலைமையிலான சுகாதார சேவை வழங்கலானது நோய்த் தடுப்பிலும் நோய் தீர்ப்பிலும் குறிப்பிடத்தக்களவு சாதனைகளை மேற்கொண்டுள்ளது. ஆயுள் எதிர்பார்க்கை வீதத்தை அதிகரிப்பதிலும் குழந்தைகள் மற்றும் பிரசவ தாய்மார்களின் இறப்புக்கு காரணமான சில பொதுவான நோய்க் காரணிகளை மட்டுப்படுத்துவதிலும் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. நீரை சுத்திகரித்தல் மற்றும் துப்புரவு செய்தல், மலேரியா நோயினை மட்டுப்படுத்தல், இளம்பிள்ளை வாதம், யானைக்கால் நோய், தடுப்பூசிகள் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய நோய்கள், காசநோய், எச்.ஐ.வி/ எயிட்ஸ் நோய் பரவல் போன்றவற்றை தடுப்பதில் பாரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எவ்வாறாயினும், பரவலான நோய்களை ஒழிப்பதற்கு மேலும் அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் NCD (இருதய நோய், அதிக கால சுவாச நோய், இதிக கால சிறுநீரக நோய், அதிர்ச்சி, உளநலம், புற்றுநோய்) போன்ற தொடர்ச்சியாக வளர்ந்து வரும் நோய்களுக்கான தீர்வுகளைக் காணல் மற்றும் வயது முதிர்ந்தவர்களின் சுகாதார நிலை குறித்தும் அவதானங்கள் அதிகரிக்கப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் சுகாதார அமைப்பின் முக்கிய பலங்களாக அதன் நியாய முறை, அமைப்பின் செயற்றிறன், சிறந்த சுகாதார பலன், மற்றும் ஒப்பீட்டளவில் வீட்டிற்கும் அரசாங்கத்திற்கும் குறைவான கட்டண செலவு என்பன காணப்பட்டுள்ளன. வசதி குறைந்தோரின் பொருளாதார நிலை காரணமாக நோய் ஆபத்துகளில் இருந்து பாதுகாப்படைய முடியாது. அதிகபடியான செலவினங்கள் பண வசதி படைத்த வீட்டாளர்களின் மீது விழுகிறது. எவ்வாறாயினும், NCD யின் அதிகரிப்புடன் இம்முறை மாற்றமடைந்து கொண்டு செல்கிறது.

முக்கிய பலவீனம் உண்டாவது முறையான நிதி ஒதுக்கீடு இல்லாதபோதோ அல்லது அபிவிருத்திக்கான முன்னுரிமைகள் பகுத்தறிந்து வழங்கப்படாமல் இருக்கும் பட்சத்திலோ ஆகும். உதாரணமாக தனித்துவமான சுகாதார பாதுகாப்பு நிலைகளுக்கான பொருத்தமற்ற முதலீட்டைக் கூறலாம், தற்போதைய தேவைகளுக்கான கவனம் முறையாக வழங்கப்படுமாயின், அடிப்படை சுகாதார பாதுகாப்புடன் உண்டாக்கப்படும் பாரிய ஊக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது, தனியார் நிறுவனங்களில் உதவி நாட வற்புறுத்தப்பட்டவர்களுக்கான சேவைகளுக்கும் வசதிகளுக்கும் வைத்தியசாலை எவ்வித கோரிக்கைகளையும் முன்வைக்காது. காலப்போக்கில் இது சுகாதார அமைப்பை சீர்குலைப்பதுடன் அரசாங்க வைத்திய சேவைக்கான அரசியல் ஆதரவை குறைக்க ஏதுவாக அமைகிறது.

மேலும் இம்முறையானது முறையான முதலீடின்மை, மீள் நோக்கிலுள்ள இடையூறு என்பவற்றால் நீண்டகால தொற்றா நோய்களுக்கான நவீன சிகிச்சை முறைகளின் வேகத்திற்கு ஈடுகொடுத்து

---

14 எழுதுனர் குழாம்: P.A. குணரத்ன (தலைவர்), ருவைஸ் ஹனிபா, பாலித பண்டார, அஜித் அமரசிங்க, M.சமரவீர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லத் தவறியுள்ளது. சிறந்த சுகாதார வசதிகள், ஊழியர்களின் நுகர்வோர் சார்ந்த சேவை வழங்கல், மற்றும் தொழில்நுட்ப முறையிலான நிறுவன நெகிழ்வுத் தன்மை குறித்தான சேவை நுகர்வோரின் எதிர்பார்ப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ் இடைவெளி பொருத்தமான பொருளாதார உதவியின்றி நிரப்பப்பட முடியாது.

## 2. நெருக்கடியான பிரச்சினைகள், பாதிப்புகள், தீர்வுகள்

### 2.1 பிரச்சினைகளும் பிரச்சினையின் பகுதிகளும்

#### 2.1.1 பொதுமக்களுக்கான நிதி ஒதுக்கீடு மறுப்பு

நிதிப் பற்றாக்குறையானது மக்களின் கடன் சுமை அதிகரிப்பு, நாணய மாற்று வீதத்திலான

தொடர்ச்சியான அழுத்தம், மற்றும் சமூக செலவினங்களை அதிகரிப்பதில் அல்லது பௌதீக கட்டமைப்புகளுக்கான தேவைகளுக்கு நிதி ஒதுக்கீடு என்பவற்றின் அரசாங்கத்தின் இயலாமையை அதிகரித்துள்ளது. துரதிஷ்டவசமாக இந்நிலை இலங்கையின் பொது சுகாதார சேவைக்கான மிகக் குறைந்த நிதி ஒதுக்கீட்டிற்கு வழிவகுத்துள்ளது. இதனால் இச் சுகாதார சேவை வளர்ச்சியடைந்து வரும் வயதடையும் மக்கள், நோய் தொற்றியல், மருத்துவ முன்னேற்றம் என்பவற்றை முகம் கொடுத்து தன்னை தக்க வைத்துக் கொள்வதில் தவறியுள்ளது.

#### 2.1.2 நகர வைத்தியசாலைகளில் இடநெருக்கடி

குறைவான நிதி ஒதுக்கீடு மற்றும் முறையற்ற சுகாதார வளங்களின் பகிர்வுகளின் காரணமாக பெரிய வைத்தியசாலைகளில் நெருக்கடி மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு, சுகாதார பாதுகாப்பின் வசதி என்பன படிப்படியாக சரிவடைகின்றன என்பதை நாம் மனதில் இருத்தல் அவசியமாகும். நகர வைத்தியசாலைகளில் இடநெருக்கடியானது பணியாளர்களில் அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன் கட்டமைப்பில் உடைவையும் ஏற்படுத்தலாம். நோய் தவறாக இனங்காணப்படுதல், அலட்சியப் போக்கு என்பன நோயாளர்கள் வைத்தியசாலையில் நீண்ட நாள் தங்கி இருப்பதற்கு வழிவகுக்கும். தொற்று நோய்களின் அதிக பரவல், மற்றும் நோயாளர்கள் உகந்த அளவிலான பாதுகாப்பை பெறாமை என்பன ஒவ்வொரு நோயாளர்களின் மீதும் மருத்துவ குழுவின் குறைந்த நேர ஒதுக்கீட்டை ஏற்படுத்தும். நோயாளர்கள் மேலும் அதிக பொருத்தமான சிகிச்சைகளை நாடும்போது அவர்கள் அதிகபடியான செலவினங்களை தாங்கிக்கொள்ள உந்தப்படுகின்றனர். இது எதிர்மறையான அரசியல் விளைவுகளையும் கொண்டிருக்கும்.

#### 2.1.3 வயதான குடிமக்கள்

குறைந்த கருவுருதல் வீதத்தாலும் அதிக வாழ்நாள் எதிர்பார்க்கை வீதத்தாலும் இலங்கையானது வரும் தசாப்தங்களில் வேகமாக முதிர்ச்சியடையும் சமூகத்தையுடைய நாடுகளில் ஒன்றாக அங்கம் பெறும். இம்மக்கள் தொகை மாற்றமானது குடிமக்களின் வயதுக் கட்டமைப்பில் ஏற்கனவே பிரதிபலிப்பை ஏற்படுத்துவிட்டது. வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும் பிரமிட்டு வடிவான கட்டமைப்பிலிருந்து இது மாற்றமடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.1.4 நோய் முறைகளில் மாற்றமும் புதிய தழுவல்களுக்கான தேவையும்

தொற்று நோயிலிருந்து தொற்றா நோயாக மாற்றமடைந்து வரும் நோய் முறை காரணமாக ஒரு வேறுபட்ட முறையிலான சுகாதார முறையின் தேவைப்பாடு நிலவுகிறது. அதிக நாட்கள் தொடரும் நோய்களான நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இதய ஓட்டத்தடை, பக்கவாதம், நீண்டகால சிறுநீரக வியாதி, மற்றும் உளம் சம்பந்தப்பட்ட நோய்களாவன அதிக நோய்த்தாக்கம் உடையவை. இவற்றிற்கு முறையான கவனிப்புடன் தொடர்ச்சியான சிகிச்சைகள் அளிக்கப்படல் அவசியமாகிறது. இம்மாற்றத்திற்காக குடும்ப மற்றும் தனிப்பட்ட தடுப்பு உத்திகளை கொண்டிருப்பதும் அவசியமாகிறது. இவ்வாறான சுகாதார நிலைகளை நிர்வகிக்க பாரிய பாதுகாப்பு முறையும் முதன்மை நிலையிலான பாரிய சேவைகளும் காணப்படுல் வேண்டும். அவை முறையாக பரிந்துரை செய்யப்பட்ட தனித்துவமான பாதுகாப்பு, பயிற்சி மற்றும் சமூக கல்வி போன்றவை மூலம் ஆதரிக்கப்பட வேண்டும்.

### 2.1.5 முதன்மை பாதுகாப்பிற்கான போதுமான கவனம் இன்மை

அருகாமையிலிருக்கும் அடிப்படை நிறுவனங்களை புறக்கணித்து சிறிய அளவிலான நோய்களுக்கும் தனித்துவமான வைத்தியசாலைகளை நாடும் நோயாளர்களுக்கு சேவையை வழங்கும் அளவிற்கு தனித்துவமான வைத்தியசாலைகளை முன்னேற்றுவதில் இலங்கை வெற்றிகண்டுள்ளது. சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடு தனித்துவமான வைத்தியசாலை வசதிகளை முன்னேற்றுவதில பங்களிப்பு செய்கிறது. இதன் காரணமாக அடிப்படை வகை வைத்தியசாலை வசதிகள் குறைவாக முன்னேற்றப்படுவதுடன் மக்களிடையே கவர்ச்சியும் வசதியும் குறைவானதாக இவ்வை நோக்கப்படுகின்றன.

சுகாதார வளங்களின் முறையற்ற பகிர்ந்தளிப்புக்கு பன்முகப்படுத்தலும் ஒரு காரணமாக அமைந்துள்ளது. இதனால் தனித்துவமான சேவைகள் விரிடைந்ததுடன் அடிப்படை வகை சேவைகளுக்கான நிதி குறைவடைந்தது. தனித்துவமான சேவைகளுக்கான குறைவான மட்டுப்படுத்தப்படல்/பரிந்துரை என்பனவற்றின் காரணமாக அடிப்படை வகை சேவைகளை வழங்கும் வைத்தியசாலைகளை தவிர்த்து தனித்துவமான வைத்தியசாலைகளை மக்கள் நாடுகின்றனர். நீண்டகால நோய் நிலைமைகள் முறையாக சிகிச்சையளிக்கப்படாதவிடத்து ஒவ்வொரு தனிநபரும் தனது சுய முடிவின் பேரில் அதிக செலவினத்தை நாட எத்தனிக்கின்றனர்.

வருடாந்த சுற்றறிக்கை 2014 இன் படி மாநில சுகாதார பாதுகாப்பு மையத்தில் OPD சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை 55 மில்லியன் ஆக காணப்பட்டது. இது மாநில சுகாதார பாதுகாப்பு மையத்தில் அனுமகிப்படும் நோயாளர்களின் எண்ணிக்கையின் (4.9 மில்) பத்து மடங்கை விட அதிகமானதாகும். 95 வீதத்திற்கும் அதிகமான உள்நுழைவு நோயாளர்களின் பாதுகாப்பு மாநில அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படுவதுடன், வெளி நோயாளர்களின் பாதுகாப்பு தனியார் துறையுடன் பகிரப்படுகிறது. MOH வசதிகள் சராசரியாக 1000 நிறுவனங்களிடையே பகிரப்படுகின்றன. அதிகமான இலங்கையர்கள் பொது சுகாதார நிறுவனத்திலிருந்து 3km இற்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழ்கின்றனர். பெரும்பாலான வெளி நோயாளர்களுக்கான சேவைகள் அரசாங்க வைத்திய ஊழியர்களால் வழங்கப்படுகின்றன. மேற்கூறப்பட்ட 55மில் தொகை தனியார் நிறுவனங்களால் பரிசோதிக்கப்பட்டவர்களை உள்ளடக்கவில்லை (அண்ணளவாக 50மில்). மற்றும் பொது பயிற்சியாளர்களால் இவ் அளவு ஆண்டுக்கு அண்ணளவாக 15மில் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### 2.1.6 தாய் மற்றும் சிசு இறப்பு வீதம்

மற்றைய ஆசிய நாடுகளை விட முன்னேற்றமானதாக காணப்பட்டாலும் பிரசவ தாய் இறப்பு வீதம் தற்போதைய 100,000 பிறப்பிற்கு 30 இறப்பு என்ற வீதத்திலிருந்தும், சிசு




12-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பு வீதம் தற்போதைய 1000 பிறப்பிற்கு 11 இறப்பு என்ற வீதத்திலிருந்தும் மேலும் குறைக்கப்படல் வேண்டும். பழமையான நம்பிக்கைகள் மற்றும் உறுதியான விலக்கல்கள் பங்களிப்புச் செய்யும் காரணிகளாக இருக்கலாம்.

## 2.2 சிகிச்சைகள், நடவடிக்கைகள், நடைமுறைப்படுத்தல்கள்

பின்வருமாறு ஒரு படிநிலைக் கொத்தை உருவாக்குக.




பரிந்துரை செய்யப்பட்ட கட்டமைப்பானது சுகார பாதுகாப்புப் பிரிவின் பின்வரும் வகைகளைக் கொண்டிருக்கும்.

| வசதிகள் | வைத்தியசாலை வகைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | A | B | C | D | E | கு |
| | பிராந்திய | மாகாண | மாவட்ட | ஆதார | மத்திய மருந்தகம் | கிராமப் புறம் |
| இருதய அறுவை சிகிச்சை | * | | | | | |
| இருதய நோய் | * | * | * | | | |
| நரம்பியல் அறுவை சிகிச்சை | * | | | | | |
| நரம்பியல் நோய் | * | * | * | | | |
| புற்று நோயியல் | * | | | | | |
| சிறுநீரக நோய்த் தாக்கம் | * | * | * | | | |
| சிறுநீரகவியல் | * | * | * | | | |
| பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை | * | | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உறுப்பு மாற்று சிகிச்சைகள் | * | | | | | |
| பேசியோ-மக்ஸிலரி அறுவை சிகிச்சை | * | | | | | |
| IVF | * | | | | | |
| மனநல சிகிச்சை | * | * | * | | | |
| இரைப்பை குடல் சிகிச்சை | * | * | * | | | |
| எலும்பு நோய் சிகிச்சை | * | * | * | | | |
| கண் சிகிச்சை | * | * | * | * | | |
| கண், மூக்கு, தொண்டைக்கான சிகிச்சை | * | * | * | * | | |
| விபத்து மற்றும் அவசர பிரிவு | * | * | * | * | | |
| MRI | * | | | | | |
| CT ஸ்கேன் பரிசோதனை | * | * | | | | |
| ஆய்வுகூட சேவைகள் | * | * | * | * | * | |
| இரத்த வங்கி | * | * | * | * | | |
| பொது அறுவை சிகிச்சை | * | * | * | * | | |
| பொது மருந்து | * | * | * | * | | |
| குழந்தைகளுக்கான சிகிச்சை | * | * | * | * | | |
| மகப்பேறு மற்றும் பெண்களுக்கான நோய்கள் | * | * | * | * | | |
| கதிரியக்க சிகிச்சை | * | * | * | * | | |
| பற் சிகிச்சை | * | * | * | * | | |
| மயக்கம் | * | * | * | * | | |
| நுண்ணுயிரியல் | * | * | * | | | |
| திசு சிகிச்சைகள் | * | * | * | | | |
| தோல் நோய் | * | * | * | * | | |
| மனநல சிகிச்சை | * | * | | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தடயவியல் மருத்துவம் | * | * | * | | | |
| பக்கவாத பிரிவு | * | * | | | | |
| உடற்பயிற்சி சிகிச்சை | * | * | * | * | | |
| உட்சுரப்பியல் சிகிச்சை | * | * | * | | | |
| அம்பியூலன்ஸ் சேவை | * | * | * | * | * | |
| வெளி நோயாளர் பிரிவு | * | * | * | * | * | * |
| முதியோர்களுக்கான மருத்துவ சேவை | * | * | * | | | |
| மருந்தகம் | * | * | * | * | | |

- நாடு முழுவதும் சுகாதார சேவையின் தரநிலையை உயர்த்தி மாநிலத்துறை வைத்தியசாலைகளின் பயன்பாட்டை அதிகரிப்பதற்கு சுகாதார சேவைப் பிரிவுகள் அவற்றின் வசதிகள் மற்றும் நிபுணத்துவத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் ஒவ்வொரு பிரிவுக்கும் திட்டமான சேவை தொகுப்புகள் ஒப்படைக்கப்பட வேண்டும். மேலும் பரிந்துரை முறைமை, நோயாளர்களின் பதிவுகளை இலகுவான அணுகும் முறை, பயிற்சி, சமூக கல்வி, மற்றும் திறனை அதிகரிப்பதற்கான கணிணித் தொழில்நுட்பம் போன்றவை அறிமுகம் செய்யப்படுதலும் அத்தியாவசியமாகிறது.

- நோய் தீர்க்கும் முறையில் நடைமுறையிலுள்ள சுகாதார பாதுகாப்பு வசதிகளை மறுசீரமைப்பு செய்து பரிந்துரைகளுக்கும் பின்னூட்டல்களுக்கும் இடமளித்து தொடர்ச்சியான பாதுகாப்பை உறுதி செய்தல். இது வைத்தியர்களுக்கான வள ஒதுக்கீடு, அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு, ஆய்வுகூட பரிசோதனைக்கான வசதி போன்றவற்றை உள்ளடக்கியது.

- மேற்பார்வைக்கான கருவி முன்னேற்றப்பட்டு, முன் பரிசோதனை செய்யப்பட்டு அடிப்படை சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களின் மேற்பார்வைக்காக மாகாண சுகாதார அதிகாரிகளிடம் சங்கிலி தொடரில் அளிக்கப்படும்.

- பல்கலைக்கழக மாணிய் ஆணைக்குழு மற்றும் மருத்துவ பீடத்திடம் அடிப்படை பாதுகாப்பு தொடர்பான அவசியமான திறமைகளை வளர்ப்பது தொடர்பான கல்வி சீர்திருத்தத்தில் கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுத்தல்.

- அடிப்படை பாதுகாப்பு பிரிவுகளில் மலுருந்துகளின் இருக்கை தொடர்பாக உறுதி செய்து கொள்வதற்கு கண்காணிப்பு முறையொன்றை உருவாக்குதல்.

- அடிப்படை பாதுகாப்பு பிரிவில் உள்ள மருத்துவ உத்தியோகத்தருக்கு ஊக்கமளிக்கும் விதமாக ஓர் கட்டமைப்பை அறிமுகப்படுத்தல்.

- அடிப்படை பாதுகாப்பு பிரிவில் உள்ள மருத்துவ உத்தியோகத்தர்களின் தொழில் முன்னேற்றத்திற்கான பாதையை வடிவமைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லை தாண்டி ஆதரவளிக்கும் நுட்பமுறையை வளர்த்தல் - உயர் வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்கள் தம்மைச் சுற்றியுள்ள அடிப்படை சுகாதார பாதுகாப்பு வைத்தியசாலை வைத்தியர்களுக்கு சிகிச்சை முறை பயிற்சிகள் அளிக்கலாம்- தன்னம்பிக்கையை வளர்க்கவும் - சிறப்பான நோயாளிகள் பாதுகாப்பிற்கும் உதவும்
- சுத்தம் மற்றும் சுகாதார பாதுகாப்பு தரம் குறித்தான பொதுவான கற்கைகளை நடைமுறைப்படுத்தல்
- பொது இடங்களில் வயதானவர்களுக்கான பாதுகாப்பு வசதிகளையும் வயதானவர்கள் இலகுவாக கையாளக் கூடியதுமான சேவைகளை மேம்படுத்தல்.
- உள் மற்றும் வெளி நோயாளர்களுக்கான ஆய்வுகூட வசதியை மேம்படுத்தல்.

## 3. நிலைபெறக்கூடிய முன்னோக்கு – 2020 மற்றும் அதற்கு அப்பால்

2020ம் ஆண்டளவில் பயன்னபடக்கூடிய மற்றும் பயன்படாத பொருட்களுக்கான வெளிப்படையான கொள்வனவு முறையொன்று தரமான பொருட்களை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. மருத்துவ பதிவுகள் இலத்திரனியல் முறை மூலம் சேமிக்கப்படும். ஆபத்தான பொருட்களின் கட்டுப்பாடு நிர்வாகம் மற்றும் உபயோகம் அரசாங்கத்தன் வசமே காணப்படும். அனைத்து நோயாளர்களும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் பொது பயிற்சியாளரின் கீழ் பதிவு செய்யப்படுவர்.

2025-2030 காலப்பகுதியில், இருக்கக்கூடிய வளங்களின் உச்ச பயனைப் பெற்று, உச்ச செயல்பாட்டில் உள்ள வாடிக்கையாளரை மையப்படுத்திய நிலைபெறக்கூடிய தேசிய சுகாதார சேவை முறையொன்று அனைத்து இலங்கையர்களின் சுகாதார நிலை மற்றும் சிறந்த சுகாதார பலன்களையும் உறுதி கூடியவாறான ஓர் சேவையை இலங்கை நிலைநிறுத்தல் வேண்டும். தேசிய ரீதியிலான சுகாதார காப்புறுதி திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். மேலும் மக்கள் மற்றும் தனியார் கூட்டுப் பங்காண்மை அதிகரிக்கும். 2030 காலப்பகுதியில் அனைத்து இலங்கையர்களுக்கும் சர்வதேச தரத்திலான சிறந்த சுகாதார சேவையை இலங்கையின் எந்தப் பகுதியிலும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். அத்துடன் இலத்திரனியல் தொழில்நுட்ப உதவியுடன் நோயாளியின் சுகாதார நிலை பற்றிய ஆவணங்களை எந்நேரத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியும் ஏற்படுத்தப்படும். இது மாற்று மருத்துவ முறைகக்கான (ஆயர்வேத, ஹோமியோபதி, யூனானி, சித்த மருத்துவம்) சர்வதேச அங்கீகாரம் பெற்ற வசதிகளையும் சூழ்ந்திருக்கும். இதனால் மருத்துவத்திற்கான சுற்றுலா விஜயங்க்ள அதிகரிக்கும். பொது மற்றும் தனியார் துறையின் இணைந்த தேசிய சுகாதார பொருளியல் திட்டமானது அனைவருக்குமான மலிவான சுகாதார சேவையை உறுதி செய்யும். நிறுவனத்தின் தரத்திற்கு ஏற்றாற்போலான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பொருட்களின் தடையில்லா இருக்கையையும் இது உறுதி செய்யும். இதனால் சுகாதாரத்துக்கான நிலையான வளர்ச்சி இலக்கு நோக்குகள் 2030இல் சாத்தியமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துறைகள்

# S5

## S5. கடல் வளங்கள்[15]

### 1. தற்போதைய நிலை

முப்பரிமாண நிலையான வளர்ச்சிகளான – சமூக, பொருளாதார மற்றும் சூழல் வளங்களில் கடல் முக்கிய பங்கு வகிக்கின்றது. அத்துடன் ஒரு தீவு என்ற முறையில் இத்துறை நிலையான வளர்ச்சி நிரலில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சமுத்திரம் புவிப் பரப்பின் 70% இனை சூழ்ந்துள்ளது. மேலும் தொடர்புபட்ட பாரிய சுற்றுச்சூழலை இணைப்பதுடன் காலநிலை நிலைப்பு, ஒட்சிசன் உற்பத்தி, ஊட்டச்சத்து சுழற்சி, உணவுப் பாதுகாப்பு, கடரோப் பாதுகாப்பு போன்றவற்றிற்கு முக்கிய பங்காற்றுகின்றது. சமுத்திரத்தினால் வழங்கப்படும் சுற்றுச் சூழல் சேவைகளான போக்குவரத்து, மீன் மற்றும் நீர்நிலை உணவுகள், மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களின் பயன்பாடு, சுரங்கத் தொழில், புதிய மருந்துகளின் வளர்ச்சி, சுற்றுலாத்துறை போன்றவற்றிற்கிடையில் வளர்ச்சியடைந்து வரும் ஓர் சார்புநிலை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் பெரும்பாலான சேவைகள் சமுத்திரத்தின் ஆரோக்கியத்தில் தங்கியுள்ளது.

இலங்கையின் வளர்ந்துவரும் மக்கள் தொகையானது உயர் வீதத்தில் கடல் சார் உயிருள்ள, உயிரற்ற வளங்களின் இருக்கையில் தங்கியுள்ளது. 65% இற்கும் மேற்பட்ட விலங்குக் கொழுப்பை பெற்றுக் கொடுப்பதன் மூலம் மீன் மக்களின் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்கின்றது. மீன்பிடி மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கட்டமைப்புகளானது கடலோர பிரதேசங்களின் பிரதான பொருளாதார மூலமாக மாற்றம்பெற்றுள்ளது. மீன்பிடித்துறை 275,000 அளவிலான மக்களுக்கு நேரடியாக தொழில் வாய்ப்பை பெற்றுத்தந்துள்ளதுடன் அதே அளவான தொழில் வாய்ப்புகளை மறைமுகமாகவும் ஏற்படுத்தியுள்ளது. 2014இல் ஏற்றுமதி வருமானமானது மொத்த ஏற்றுமதியின் 2.4% ஆக காணப்பட்டது.

இலங்கை தனது நிலப்பகுதியையும் விட சராசரியாக 7 மடங்கு பெரியதான பொருாதார பிரத்தியேக வலயத்தை கொண்டுள்ளது. எவ்வாறயினும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்கு 2% இற்கும் குறைவானதாகவே காணப்படுகின்றது. கடல் வளங்கள் மற்றும் சேவைகளுக்கான இலவச அணுகலின் காரணமாக கடல்சார் சுற்றுச்சூழலின் மீது அதிக அழுத்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை அதிக மீன்பித்தல் முதல் பொறுப்பற்ற முறையிலான வள பிரித்தெடுப்பு சூழல் மாசிற்கு வழிவகுப்பது வரை நீடிக்கலாம். அண்ணளவாக 57% ஆன மீன் பங்குகள் 2009 ஆண்டளவில் முழுமையாக சுரண்டப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கடல் மீன் பங்குகள் அதிகமாக சுரண்டப்படுவதுடன் வெளியில் அவற்றின் உயிரியல் பாதுகாப்பு எல்லைகள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

சமுத்திரமானது அண்ணளவாக மனிதன் வெளியிடும் காபனீரொட்சைட்டின் 30% இனை தன்னுள் உறிஞ்சிக் கொள்கிறது. தொழில்புரட்சியின் ஆரம்பத்தின் பின் சமுத்திரம் அமிலமாதலானது 26% வீதத்தினால் அதிகரித்துள்ளது. நிலத்திலருந்து கடலை அடையும் குப்பைகள் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது, கடல் மாசு வீதம் அதிகரித்துள்ளது. சமுத்திரத்தின் ஒவ்வொரு சதுர கி.மீ. அடிக்கும் 13,000 பிளாஸ்டிக் குப்பைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. Halpern

15 எழுதுனர் குழாம்: கமல் ரனதுங்க (தலைவர்), ஆரியசீல விக்ரமனாயக்க, உபாலி அமரசிங்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

et al. (2012) என்பவறால் உருவாக்கப்பட்ட கடல் சுகாதார சுட்டி நிரலில் இலங்கை மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் 153வது இடத்தை குறைந்த சுற்றாடல் சுகாதார நிலையை சுட்டிக்காட்டிப் பெற்றது.

எவ்வாறாயினும் இவ்வச்சுறுத்தல்களுக்கு அப்பால் கடல் சார்ந்த சூழல் பிரச்சினைகளை மட்டுப்படுத்தலும் கடல் வளங்களின் நிலைபேறான முன்னேற்றமும் உபயோகமும் மிகக் குறைந்த முன்னுரிமையையே பெற்றுள்ளது. கடல் வாழ்வின் ஆதரிக்கவும், மனித மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு கடலுடன் தொடர்பான விடயங்களுக்கு அக்கறை செலுத்துவதற்குமான விழிப்புணர்வு வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. எதிர்கால தேவைக்கு உபயோகப்படும் கடல் வளங்கள் குறித்தான சர்வதேச ஆதரவும் பேச்சுவார்த்தையும் அவசியமாகிறது. கடல்சார் நிலைபேறுக்கான விரிவான அடிப்படை தொகுப்புகளுடைய காட்டிகள் கடல் சார் விடயங்களின் தற்போதைய நிலையை எடுத்துக் காட்டவும், நடைபெற்றுக் கொண்டிருக்கும் போக்குகளை கண்டறியவும், முன்னோக்கிய கடல் பாதுகாப்பு பற்றிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தவும் உதவியாக இருக்கும்.

"நீலப் பொருளாதாரம்" , "நீல வளர்ச்சி" என்ற வார்த்தைகள் பொது கொள்கை பாவனையில் உட்புகுத்தப்பட்டுள்ளது. இலங்கை இதற்கு விதிவிலக்கானதல்ல. "நீலப் பொருளாதாரம்" பொருாதார வளரச்சி, சமூக உள்ளடக்கல்கள், வாழ்வாதாரங்களை பாதுகாப்பது அல்லது முன்னேற்றுவது என்பவற்றை சூழல் நிலைபெறு தன்மையை உறுதி செய்வதுடன் வளர்ச்சியடைய செய்வதற்கான முற்சிக்குரிய செயலைக் குறிக்கின்றது. அதன் உள்ளடக்கத்தில் கடல் சார்ந்த துறைகள் மூலமான சமூக பொருளாதார வளர்ச்சியின் இணைப்பு நீக்கலை அது குறிக்கின்றது. மற்றும் சுற்றாடல் மற்றும் சுற்றுப்புற சீரழிவு நடத்தைகளையும் குறிக்கின்றது.

மேலும் கடலானது பாரிய ஆய்வுகூடமாக தொழிற்படுவதுடன் "நீல" உயிர்தொழில்நுட்ப முதலாகவும் தொழிற்படுகிறது. மருத்துவ ஆய்வு, உணவுச் சேர்க்கைகள், மருந்து மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கான மூலக்கூறுகளின் வரிசையாக இது காணப்படுகின்றது. கடலோர நீர் மணலையும் சரளைக் கற்களையும் வழங்குகின்றது, மேலும் உப்பு நீரை ஆவியாக்குவதன் மூலம் உப்பு பிரித்தெடுக்கப்படுகிறது. வெள்ளீயம், டைட்டேனியம், மங்கனீஸ் முடிச்சுகள், தங்கம், இரத்தினம் போன்றவையும் கூட ஆழமற்ற கடல் நீரிலிருந்து சுரண்டப்படலாம். மேலும் சமுத்திரங்கள் புதுப்பிக்கப்படக்கூடிய மற்றும் புதுப்பிக்கப்பட முடியாத சக்திகளின் முக்கியமான முதலாகும். இவை கடல் காற்றை வழங்குகின்றன, அத்துடன் சமுத்திர வெப்பம் மற்றும் அலைச் சக்தியை வழங்குகின்றன. மேலும் அவை அல்கா அடிப்படையாகக் கொண்டு ஹைட்ரஜன் உற்பத்திக்கு வசதியான சூழலை வழங்குகின்றது. சமுத்திர மற்றும் கடலோர பகுதிகளின் உயர் உபயோகமானது கடல் வழிப் போக்குவரத்தாகும். எந்தக் காலத்திலும் கடல் வழிப் போக்குவரத்து முறை மூலம் பொருட்களை கொண்டு செல்வதானது குறைந்த செலவில் அதிக தூரங்களுக்கு எடுத்து செல்லக்கூடிய சிறந்த முறையாகும். கப்பல் கட்டுமானத்துறை மற்றும் உலக வர்த்தக பாதைகள் ஒரே சமயத்தில் முன்னேற்றம் பெற்றன.

## 1. <u>நெருக்கடியான பிரச்சினைகள், தாக்கங்கள், தீர்வுகள்</u>

நெருக்கடியான பிரச்சினைகள் பின்வரும் மூன்று முக்கிய பகுதிகளில் உள்ளடக்கப்படுகிறது. அத்துடன் நிலைபேறான முன்னேற்ற இலக்குகளின் 14வது இலக்கான நீர்மட்டத்திற்கு கீழான வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டது.

1. கடல் மாசுபடுதல்
2. நிலைபேறான பயன்பாடு, கட்டுப்பாடு, பின்னடைவு மற்றும் ஆய்வு
3. கடல் வளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.1 கடல் மாசுபடுதல்

### 2.1.1 தற்போதைய நிலை, பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையின் பரப்பு

- கடலோர நீர் மாசு - இலங்கையின் கடலோர நீர்நிலையானது விவசாய இரசாயனங்கள்,பார உலோகங்கள், பிளாஸ்டிக், கதிரியக்க மூலயங்கள் போன்றவற்றால் பெரிதும் மாசுபட்டுள்ளது. பிரதானமாக நிலம் சார்ந்த செயற்பாடுகளைக் கூறலாம்.

- நற்போசணையாக்க நீர்மாசு – நற்போசணை மாசுக்களானது விவசாயம், தொழிற்சாலை, சாக்கடை நீர் என்பவற்றின் நீர் மேற்பரப்புகளில் உற்பத்தியாக்கப்படும் புரதங்கள் கடலோர நீரில் தேங்குவதனால் உருவாகின்றது. நற்போசணையாக்கம் கடல் நீரில் கலங்களை ஏற்படுத்தககூடிய மற்றும் நீரினுள் ஒளி ஊடுறுவலை தடுக்கக் கூடிய அல்கா பூக்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்துகின்றன. இவ்வாறாக அல்கா பூக்கள் விலகும்போது நீர் தாவரங்களில் உண்டாக்கப்படும் பக்றீரயாக்க் அதிகளவு ஒட்சிசனை உள்ளெடுத்து தாவரங்களை இறக்கச் செய்யும். இதனால் ஆழ் நீர் அடுக்குகளில் இறந்த வலயங்கள் உண்டாகும். சில அளவில் சிறியதான அல்காக்கள் ஆபத்தான அல்கா பூக்களை உருவாக்கலாம் (HAB) இவை பாரிய அளவில் உற்பத்தியாகும் போது மனிதன் மற்றும் விலங்குகளுக்கு ஆபத்தான விளைவை ஏற்படுத்தக்கூடிய டொக்ஸின் என்ற மூலப்பொருளை உருவாக்கும் திறனை அவை பெறுகின்றன.

- சமுத்திர வெப்பமடைதல் மற்றும் அமிலமாதல் - வளிமண்டலத்தில் தொடர்ச்சியான காபனீரொட்சைட் வெளியீட்டினால் சமுத்திர வெப்பமாதல் நிலைமை உச்சத்தை அடைந்துள்ளதுடன் அமிலமாவதால் அழுத்தங்களும் அதிகரித்துள்ளது. வெப்பநிலை அதிகரிப்பானது நீர் வெப்பநிலை மாற்றம், உறுதியான அடுக்கமைவுகள், கடல் நீர் மட்டம் உயர்தல், கடல் நீரோட்டங்களில் மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும். அதே நேரத்தில் வெப்பமாதல் மற்றும் அடுக்கமைவுகளின் அதிகரிப்பு என்பன கடலின் ஒட்சிசன் அளவைக குறைப்பதுடன் ஒட்சிசன் அற்ற பிரதேசங்களின் அவைக் கூட்டுகின்றது. குறிப்பாக சமுத்திர வற்றுப் பெருக்கு உள்ள இடங்களில் இது அதிகம் காணப்படும்.

  சமுத்திரம் அமிலமாதலானது மிக மெதுவாக நடைபெறுவதுடன் அதனை தடுக்கும் நடைமுறைகள் குறைவான விளைவுகளையோ அல்லது விளைவுகளை ஏற்படுத்தாமலோ உள்ளது. நெருக்கடியான நிலையிலான அமிலமாதல் அதிக அளவிலான கானீரொட்சைட்டின் வெளியீட்டால் உண்டாகிறது. இது கடல் நீரில் கலக்கும்போது நீர் வாழ் உயிரினங்களின் எலும்புகளில் உள்ள கல்சியம் காபனேற்றை அரிப்படையச் செய்கின்றது. இதனால் கடல் மற்றும் கரையோர நீர்நிலைகளில் காபன் கலப்படைவது குறித்தான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் குறுகிய காலத்தில் நாட்டின் முன்னுரிமை வழங்கப்பட்ட பிரச்சினையாக இது மாற்றப்பட வேண்டும்.

- கடல் குப்பைகள் - குப்பைகளை முறையாக நிர்வாகம் செய்யாத நாடுகள் மத்தியில் நாடாக இலங்கை ஐந்தாவது இடத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே கடல் குப்பைகள் தொடர்பான பிரச்சினையில் அதிகளவு கவனம் செலுத்தப்படல் வேண்டும். கடல் குப்பைகள் முறையான வழியில் கண்காணிக்கப்படாது இருப்பதுடன் அவற்றைப் பற்றிய தகவல்கள் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றன. பெரும்பாலான கடல் குப்பைகள் அரிதாக உக்கக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களாலேயே உருவாகின்றன. கடல் குப்பைகளின் பிரதான மூலமாக ஆற்று வடிநிலம், மீன்பிடி, மற்றும் குப்பை கொட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன காணப்படுகின்றன. மைக்ரோ அளிவிலான பிளாஸ்டிக் துணிக்கைகளின் பாரிய ஆபத்தாக அவை கடல் வாழ் மிதவை உயிரினங்களால் உட்கொள்ளப்பட்டு எமது உடலினுள் சமிபாட்டின் மூலமாகவும், திசுக்கள், உடல் திராவகங்கள் மூலமாகவும் சென்று உணவுச் சங்கிலியை சிதறடிக்கச் செய்வதாகும். இலங்கை கடல் குப்பைகளை ஓர் தனிப்பிரிவாக இன்னமும் வகைப்படுத்தவில்லை, அவை திட கழிவுகளாகவே வகைப்படுத்தப்படுகின்றன. முன் ஆய்வுகின்படி பெரும்பாலான கடல் குப்பைகள் நிலத்திலிருந்து ஆற்று வடிநிலத்தின் மூலமாக கடலை வந்தடைகின்றன. 95 வீதமான கடல் குப்பைகள் உள்நாட்டில் உருவாக்கப்படுவதோடு அவற்றில் 98 வீதமானவை பிளாஸ்டிக் ஆகும். சராசரியாக 55 வீதமான பிளாஸ்டிக்கானது பொதி செய்ய பயன்படும் பொருட்களாகவும், ஸ்டைரோபோம் கோப்பைகளாகவும், பொலித்தீன் பைகளாகவும், குடிபான போத்தல்களாகவும் காணப்படுகின்றன.

- கடலை ஆக்கிரமிக்கும் அந்நிய உயிரினங்கள் - அண்மைய ஆய்வுகளிகன்படி கண்டறியப்பட்டுள்ள உயிரினங்களில் 20ற்கும் மேற்பட்ட அந்நிய கடல் ஆக்கிரமிப்பு உயிரினங்கள் இலங்கை கடற்பர்பில் காணப்படுவதாகவும், குறிப்பாக அவை துறைமுகங்கள் அருகில் காணப்படுவதாகவும் அறியப்படுகிறது. இவை கப்பல்களின் மூலமாகவும், கப்பல் மேலோடுகளில் உள்ள உடைவுகளில் தேங்கியும் பரவலடைகின்றன.

- கப்பல் வாணிபம் மற்றும் மீன்பிடியினால் உண்டாகும் கழிவுகள் - குப்பைகளை பொறுப்பேற்கும் வகையிலான முறையான துறைமுக வசதிகள் இல்லாத காரணத்தினால் கப்பல் மற்றும் மீன்பிடிக் கப்பல்களினால் உண்டாக்கப்படும் அதிகளவான கழிவுகள் சட்டவிரோதமான முறையில் கொட்டப்படுகின்றன.

- அதிகபடியான எண்ணெய் கசிவுகளை கட்டுப்படுத்துவதற்கான முறையான தொழில்நுட்பத்தின் பற்றாக்குறை - இலங்கை கிழக்கு-மேற்கு வியாபார பாதைக்கு மிக அருகாமையில் காணணப்படுவதோடு கடலோர முக்கிய மென்மை மிகுந்த சுற்றுச் சூழலைக் கொண்டு காணப்படுகின்றது. இதனால் எவ்விதமான கப்பல் விபத்துகளும் குறிப்பிடத்தகளவு பாதிப்பை கடற்பரப்பிலும் கரையோரப் பரப்பிலும் ஏற்படுத்தலாம்.

- கரையோர அரிப்பு - இது கரையோரத்தில் திட்டமிடப்படாத/முறையான திட்டமற்ற மணல் அகழ்வினால் ஏற்படுகிறது. இவ்வாறு கரையோரத்திலும் ஆற்றங்கரைகளிலும் முறையற்ற அகழ்வினால் கடலுக்கான ஊட்டம் குறைவடைகிறது.

- பிராந்திய மற்றும் சர்வதேச இணைவு மற்றும் ஆதரவின் குறைபாடு – பெரும்பாலான கடல் சார்ந்த பிரச்சினைகள் சிக்கலானதாகவும் முறையாக புரிந்துகொள்ளப்படாததுமாக உள்ளது. ஆகவே கடல் குப்பை, அந்நிய உயிரினங்களின் பரவுகை போன்ற அபாயகரமான பிரச்சினைகளை எதிர்ப்பதற்கு மேலும் அதிக இணைவுகளும் ஆதரவும் அவசியமாகிறது.

### 2.1.2 தீர்வுகள், அளவீடுகள், நடைமுறைப்படுத்தல்

கடலோர நீர் மாசு

- கடல் மாசுபடுத்திகள் குறித்து கண்காணிப்பதுடன் அளவிடுதல். நாடு பூராகவும் காணப்படும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய கடலோர பகுதிகளுக்கான "blue flag" சான்றிதழை வாங்குவதன் மூலம் கடல் நீர் மாசு குறிது தொடர்ச்சியாக கண்காணித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அனைத்து வகையான மாசுபடுத்திகளையும் இனங்காண்பதுடன் அவை கடலை சேரும் வழியையும் இனங்காணல்

நற்போசணையாக்கம்

- மைய சிகிச்சை வசதிகளை ஏற்படுத்தல்
- ஊட்டங்களின் ஏற்றத்தை அளவிடலும் கண்காணித்தலும்
- கடலில் கழிவு நீரை கொட்டுவதை உடனடியாக தடை செய்தல். அவை சிகிச்சை முறைகளின் பின்னரே வெளியேற்றப்பட வேண்டும். இது கடல் சூழலுக்கு மாத்திரமல்லாது மனித சுகாதார முன்னேற்றத்திற்கும் உதவியாக அமையும்.

கடல் வெப்பமடைதல் மற்றும் அமிலமாதல்

- சதுப்பு நிலக்காடுகள், கடல் பாசிகள், முருகைக்கற்கள் என்பவற்றை பாதுகாத்து காபன் பிரிப்புக்கு உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் பங்களிப்புச் செய்தல்
- கியோட்டோ நெறிமுறைக்கு இணங்க காபன் வெளியீட்டைக் குறைத்தல்
- கடல் மற்றும் கடல்சார் சூழலின் காபன் உள்வாங்கிகளின் பாதுகாப்பிற்கும் மீள் உருவாக்கத்திற்குமான நிகழ்ச்சிகளை உருவாக்குதல்.

கடல் குப்பைகள்

- கொரியா போன்ற தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடைந்த கழிவு முகாமைத்துவத்தில் முன்னிலையில் உள்ள நாடுகளுடனான தொடர்பை விரிவுபடுத்தி பிரச்சினைகளை எடுத்துக் கூறல்
- திணமக் கழிவு முகாமைத்துவத்துக்கான ஒருங்கிணைந்த திட்டங்களை மீள் உபயோகம், மீள்சுழற்சி, கழிவிலிருந்து சக்தி போன்றவற்றுடன் மேம்படுத்தல்.
- "மாசுபடுத்திகளுக்கான கொடுப்பனவு உத்தி" மூலம் பிளாஸ்டிக் மீள்உபயோகம் /மீள் சுழற்சிக்கான நிதியினை உருவாக்கல். பெரிய அளவிலான பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் கழிவுகளை முகாமைப்படுத்தும் பொறுப்பை ஏற்க வேண்டும். இவ்வாறான நிதியுதவிகள் வளத்தின் திறனை அதிகரித்தல், மீள் உபயோகம், மீட்பு, மீள்சுழற்சி என்பவற்றுடனான திட்டங்களுக்கு ஆதரவளிக்கவும், கழிவுகள் நிலங்களில் நிரப்பப்படுவதை குறைப்பதற்கும் உபயோகப்பட வேண்டும்.
- பிளாஸ்டிக் காவனையை கட்டுப்படுத்தலும் பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக மாற்றுவழி ஒன்றையும் (பைக்கற்றாக்குதல் மற்றும் சுற்றுதல்) கண்டறிதல். புதிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் காரியாலய சூழலை ஒரு தடவை மாத்திரம் பாவனைக்கு எடுக்கக்கூடியவாறான பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையிலிருந்து விலக்குதல். அரசாங்க நிறுவனங்களின் அச்சிடுதல், அலங்காரம் போன்ற வேலைகளுக்கான பிளாஸ்டிக் பாவனையை ஊக்கப்படுத்தாமல் இருப்பதற்கான கொள்கைகளை ஏற்படுத்தல்.
- கழவுகளுக்கான மூலங்களை கண்டறிவதற்காக அடிப்படை ஆய்வுகளை மேற்கொள்ளல். கடல் குப்பைகளை சதுர கி.மீ அல்லது சதுர மீ. இற்கு இவ்வளவு பொருட்கள் என அளவிடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலை ஆக்கிரமிக்கும் அந்நிய உயிரினங்கள்

- கடலை ஆக்கிரமிக்கும் அந்நிய உயிரினங்கள் பற்றிய அடிப்படை ஆய்வுகளின் மூலமும் தொடர்ச்சியான அவதானங்கள் மூலமும் அவை பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளல். ஒருமுறை உருவாக்கப்படுமாயின் அது தடுக்கப்படுவது கடினமானதாகும். ஆகவே முற்கூட்டிய எச்சரிக்கையும் உடனடியான தீர்வுகளும் அவசியமாகின்றன.
- அந்நிய நீர்வாழ் உயிரினங்களின் பரவுகையை குறைப்பதற்காக கப்பலடி ஒட்டுயிரிகளின் கட்டுப்பாடு மற்றும் நிர்வகிப்பு தொடர்பான வழிகாட்டுதல்களை பினபற்றல். (கப்பலடி ஒட்டுயிரிகள் வழிகாட்டி) (IMO resolution MEPC.207(62))
  - IMO இன் நீர் நிலைப்படுத்தும் மாநாடு மற்றும் பாதிப்பான சிதிலமடைவதை கட்டுப்படுத்தும் மாநாடுகளில் கையொப்பமிடல்
- IMO நெறிமுறைளுக்கு இணங்க கப்பல் மேலோடு சுத்தம் செய்தல் தொடர்பான சர்வதேச கட்டுப்பாடுகளை வளர்த்தல்.

கப்பல் வாணிபம் மற்றும் மீன்பிடியுடன் தொடர்பான குப்பைகள்

- சர்வதேச தரத்திற்கு அமைவாக குப்பைகளை பெற்றுக் கொள்வதற்கான துறைமுக கட்டமைப்பொன்றை உருவாக்கல். உபயோகப்படுத்த முடியாத வலைகள் மற்றும் ஏனைய மீன்பிடி கியர்களை வீசுவதற்கான முறையானதோர் வசதி செய்து கொடுக்கப்படல் வேண்டும்.
- மீனபிடியில் ஈடுபடுவோருக்கம், கடலோடிகளுக்கும் முறையான கழிவு நிர்வாகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்

அதிகபடியான எண்ணெய் கசிவுகளை கட்டுப்படுத்துவதற்கான முறையான தொழில்நுட்பத்தின் பற்றாக்குறை

- அதிகபடியா எண்ணெய் கசிவுகளை முகாமைப்படுத்துவதற்கான கட்டமைப்பு, கருவிகள் மற்றும் பயிற்சிகளை மேம்படுத்தல்
- முதல் பதிலளித்தவர்களின் திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சிகளை முன்னேற்றல்
- தேசிய தற்செயலான எண்ணெய்க் கசிவு திட்டத்தை (NOSCOP) வலுப்படுத்தி செயற்படுத்தல்

கடலோர அரிப்பு

- கொள்கைகளை முன்னேற்றி, உறுதிப்படுத்தி, செயற்படுத்துவதோடு கடலோர கட்டுமானங்களுக்கும் மணல் அகழ்வுக்குமான கடுமையான கட்டுப்பாடுகளையும் சட்டங்களையும் ஏற்படுத்தல்.

பிராந்திய மற்றும் சர்வதேச இணைவு மற்றும் ஆதரவின் குறைபாடு

- இணைவுகளை வளர்த்துக் கொள்வதுடன் SAARC,SACEP,IMO,GLOBALLAST… போன்ற அமைப்புகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்.
- சர்வதேச இணைவுகளை அதிகரித்துக் கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2 நிலைபேறான பயன்பாடு, கட்டுப்பாடு, மீள் உருவாக்கம் மற்றும் ஆய்வு

### 2.2.1 தற்போதைய நிலை, பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைக்கான பகுதிகள்

கடல் வளங்களுடனான மனிதனின் சார்பானது வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. என்றாலும் உலகளாவிய ரீதியிலான கோரிக்கைகள், வழங்குதல்கள், பாதிப்புகள் மற்றும் ஆபத்துகள் என்பன சமனற்ற முறையில் பரவலடைந்துள்ளது. இவை அனைத்தும் மனிதன் மற்றும் இயற்கைவள துணை அமைப்புகளின் மீள் உருவாக்கம் மற்றும் தகவமைப்புத் திறனில் கடுமையான பாதிப்பை உண்டாக்கலாம். குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் இப்பாதிப்பை பெரிதும் காணலாம். ஆகவே கடலோரங்கள் அவற்றின் சமூகம், வளங்கள், இயற்கை வாழிடங்களுடன் கவனமாக நிர்வகிக்கப்பட வேண்டும். இதன்மூலம் அவை வெற்றிகரமான தகவமைப்பு உத்திகள் மூலமாக மீள் உருவாக்கத் திறனைப் பெற்றுக் கொள்ளும்.

கடல் மற்றும் கடல் வளங்கள் உயிரியல் பாகுபாட்டு ஆணைக்குழு (CBD 1992) இன் குறிக்காள் செயற்பாட்டுக்கு அமைவான அடிப்படை அணுகுமுறையினை பிரதிபலிக்க வேண்டும். சூழல் அமைப்பினை நிர்வகிக்கும்போது நிலம், நீர் வாழும் வளங்கள் என்பன ஒன்றாக ஒருங்கிணைத்து கருதப்படல் வேண்டும். இலங்கை கடல் மற்றும் கரையோர நிர்வாகத்தற்காக சூழலியல் முறை அணுகுமுறை ஒன்றை கையாளத் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பிரிவின் கீழ் கண்டறியப்பட்டுள்ள நெருக்கடியான பிரச்சினைகளாவன:

- ஒருங்கிணைப்பு மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடு – கடல் மற்றும் கரையோர நிர்வாகத்திற்காக இலங்கை பல விதிமுறைகயையும் நிறுவனங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இருப்பினும் அவை ஒன்றுடன் ஒன்று பிணைந்த கட்டளைகளாகவும், பொருத்தமற்ற ஒருங்கிணைப்புகளைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன. ஆகவே, அரசாங்கம் கடற்துறை சம்பந்தமான மத்திய கட்டுப்பாட்டுக் குழுவொன்றை உருவாக்குவதுடன் கடல் மற்றும் கரையோரம் சம்பந்தப்பட்ட நடைமுறையில் காணப்படும் கொள்கைகள் மற்றும் நிர்வாகம் பற்றி ஆய்வு செய்தல். இருந்தபோதிலும் கடல் விவகாரங்கடன் சம்பந்தப்பட்ட ஓர் அமைச்சு இலங்கையில் காணப்படுவதில்லை.
- ஒருங்கிணைந்த மற்றும் பலதரப்பட்ட சமுத்திர கட்டுப்பாட்டின் குறைபாடு – கடல் மற்றும் கரையோரத்தின் நிலைபேறான முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதலை கடல் இடம்சார் திட்டமிடல் அணுகுமுறை(MSP) மூலம் பெற்றுக்கொள்ளலாம். MSP ஆனது ஒரே நேரத்தில் சமூக, பொருளாதார, சூழல் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான உறுதியான ஓர் வழியாகும். இது இவ்விலக்குகள் பகுத்தறிவு மற்றும் விஞ்ஞான முடிவுகளின் அடிப்படையிலான நிறுவனப் பாவனைகள் மூலம் அடைந்துகொள்கின்றது. இவ்வணுகுமுறை சூழலியலாகவும், பகுதி சார்ந்ததாகவும், ஒருங்கிணைக்கப்பட்டதாகவும், தகவமைப்பானதாகவும், உத்தியானதாகவும், பங்கேற்புடன் கூடியதாகவும் காணப்பட வேண்டும். மேலும் MSP ஆனது ஒருங்கிணைந்த கடலோர நிர்வாகத்துடன் (ICM) இணைக்கப்பட வேண்டும். ICM மற்றும் MCP என்பன பயனுள்ள பல கொள்கைச் சட்டங்களை கரையோர மீள் உருவாக்க நோக்கத்தின் பிரச்சினைகள் மற்றும் பிரச்சினைக் காரணிகளை இனங்காணவும் தீர்வு காணவும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- குறைந்த மீள் உருவாக்கம் மற்றும் எளிதில் உடையக்கூடிய சூழல்முறை – மென்மையான சூழல் தொகுதிகளான பவளப் பாறைகள், சதுப்புநிலக் காடுகள், கடல் பாசிகள் என்பன அபாயகராமான சூழ்நிலையில் இருப்பதானது எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரம் மாற்றங்களுக்கு குறைவான எதிர்ப்பைக் கொண்டிருப்பதைக் காட்டுகிறது. குறிப்பாக பவளப்பாறைகள் எளிதில் உடையக்கூடியனவாகவும், வெளிறல், திணறல், நற்போசணையாக்கம், நோய்கள் போன்றவற்றின் எதிர்ப்பாலும் வேகமாக மறைந்து வருகின்றன.

- கடற் பாதுகாப்பு வலயங்கள் **(MPA)**- MPA க்களானது ஒரு நிர்வாக கருவியாக காணப்பட்ட போதிலும் சேகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தாட்சிகள் அவற்றின் பாதுகாப்பு நோக்கங்களை அடைந்து கொள்ள பலர் தவறுவதை சுட்டிக் காட்டுகின்றது. 2014 களில் இலங்கையின் MPA க்களின் எல்லைப்படுத்தப்பட்ட அளவு 1.3 வீதமாக காணப்பட்டது. பெரும்பாலான MPA க்கள் நிர்வகிக்கப்படாமலும், வள பிரித்தெடுப்பு மற்றும் குடியேற்ற சீரழிவுகள் தொடர்ச்சியாக குறைவின்றி இடம்பெறுகின்றது. MPAக்களின் பிரகடனம் மற்றும் நிர்வாகம் என்பன சூழலியல், சமூக பொருளாதார உண்மைத்தன்மை, அல்லது நீண்டகால நிர்வாக நிலைபேறு போன்றவற்றின் போதுமான அளவு கருத்தில் கொள்ளப்படாமல் இருக்கின்றன. நிர்வாகிகள் புதிய சட்டங்களை உருவாக்குவதிலும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை விரிவுபடுத்துவதிலுமே அதிக கவனத்தை செலுத்துகின்றனர். மாறாக ஏற்கனவே செயற்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கான விதிமுறைகளையும் நிர்வாகங்களையும் செயற்படுத்தலே பொருத்தமானது. தரம் குறைவான ஒழுங்கமைப்பு மற்றும் அரசியல் உதவிகளின் குறைபாடு காரணமாக வெற்றிகரமான வளப் நிர்வாகம் தடுக்கப்படுகிறது. MPA நிர்வாகிகள் நேரடியாக கடல் வளங்களில் தமது வாழ்வாதாரத்திற்காக தங்கியுள்ள கடல்வாழ் சமூகத்துடன் போராட வேண்டியுள்ளது. ஏற்கனவே இனங்காணப்பட்ட SAM தளங்களின் மீதான குறைவான செயற்பாடுகள் குறித்தும் அக்கறை செலுத்தப்பட வேண்டும். மேலும் ஒருங்கிணைக்கப்பட்ட அனைத்து விதமான முக்கியமான அடிப்படை தகவல்கள் ஒருமுகத்துடன் ஒன்றிணைக்கப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் உத்திகளை செயற்படுத்துவதற்கான நேர்மையான முயற்சி மற்றும் முன் எதிர்பார்த்த நோக்கங்களை அடைதல் என்பன திறம்பட்ட MPA நிர்வாகத்திற்கு அவசியமாகிறது. இது இலங்கையின் கடல் வளங்களின் நிலைபேறான உபயோகத்திற்கும் உதவிபுரியும்.

- முக்கிய சூழல்முறை மற்றும் உயிரினங்கள் பற்றிய புதிய விதிமுறைகளை ஏற்படுத்தல் /புதுப்பித்தல் - இலங்கை முக்கிய கடல் சுற்றுச்சூழல் மற்றும் ஆபத்திலுள்ள உயிரினங்கள் தொடர்பாக புதிய விதிமுறைகளை மேம்படுத்தவும் முன்னேற்றவும் வேண்டும்.

- போதுமான விஞ்ஞான அறிவு மற்றும் ஆய்வுத் திறன் காணப்படாமை – கடல் ஆய்வுகளுக்கு குறைவான முன்னுரிமை அளிக்கப்படுவதோடு அவற்றின் மீதான ஆர்வமும் நிதி ஒதுக்கீடும் குறைவாக காணப்படுகின்றது. கடல்சார் ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்குமான வசதிகள் அடிப்படை மட்டத்திலேயே காணப்படுகின்றன. அத்துடன் தேசிய நிறுவனங்களின் கடல்சார் ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய முழுமையான பங்களிப்பு அவசியமாகிறது. அவ்வாறான நிறுவனங்கள் மற்றைய பிராந்திய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் விரிவான இணக்கத்துடன் காணப்படுதல் அவசியமாகும். அத்துடன் அச்சர்வதேச நிறுவனங்கள் தனித்துவமானதாக காணப்படுவதுடன் வெளி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இணையக்கூடியவாறு இருத்தல் அவசியம். மேலும் இந்நிறுவனங்கள் முதுகலைத் தகுதியை பெற்றுத்தரக்கூடிய தீர்க்கமான ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் வழி செய்தல் வேண்டும். அறிவைப் பகிர்ந்து கொள்வதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. விஞ்ஞானிகள் தனித்து வேலை செய்ய முனைவதால் கடல் ஆய்வின் தரம் தடைப்படுகிறது. நிறுவன ஆணைகள் மற்றும் நடைமுறையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டக் கட்டமைப்புக்குமிடையில் குறிப்பிடத்தக்களவான ஓர் மேற்பொருந்துகை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்தினால் உருவாக்கப்பட்ட ஓர் கடல் சூழலின் அடிப்படைத் தகவல் வலைப்பின்னலை (MEBIN) முன்னேற்றுவதற்கான குறிப்பிடத்தக்களவு செயற்பாடுகள் நடைபெற்றவண்ணமுள்ளன.

- விழிப்புணர்வு மற்றும் சமுத்திர சூழற்தொகுதியை நோக்கிய மனப்பாங்கின் குறைபாடு:- எந்தவொரு கட்டமைப்பையும் விட சமுத்திர சூழற்தொகுதிக்கு குறைந்த முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. இலங்கை ஒரு தீவாய் இருந்தபோதிலும் பாடசாலை கலைத்திட்டத்தில் சமுத்திரத்தின் முக்கியத்துவம் மற்றும் சமுத்திர வளங்கள், சூழற்தொகுதி தொடர்பான போதுமான கவனம் செலுத்தப்படவில்லை.

- மட்டுப்படுத்தப்பட்ட திறமைகளும் இயலுமைகளும் நிர்வாகிகளுக்கிடையிலான திறன்களும்

  சமுத்திர சூழல் தொடர்பான அறிவும் திறமைகளும் உபாயத்தன்மை அபிவிருத்தியும் சமுத்திர வள முகாமைத்துவமும் தற்போது அபிவிருத்தி செய்யப்படாத பகுதியாகும்.

- சட்ட விரோத நில அபகரிப்பு

  அதிகமான கரையோர நிலம் சட்டவிரோதமாக அபகரிக்கப்படவதுடன் கடற்கரை பிரவேசம் தடுக்கப்படுகின்றது.

- உலக காலநிலை மாற்றமும் அதிகரித்து வரும் இயற்கை அழிவுகளும்

  காலநிலை மாற்றம் எதிர்மறையான தாக்கத்தை பிரதானமாக உயிரினங்கள் மீதும் உயிரின வகைகள் மீதும் ஏற்படுத்துகிறது. உள்நாட்டு சூழலில் அதன் பாதிப்பின் அளவு அறியப்படவில்லை.

- சர்வதேச விதிமுறைகள்

  இலங்கை சமுத்திரம் தொடர்பான ஒப்பந்தங்கள், மாநாடுகள், விதிகள் என்பவற்றின் பங்காளியல்ல.மற்றும் சமுத்திரம் தொடர்பான விதிகள் நாட்டுக்கு முக்கியத்துவமானவை என அடையாளம் காணப்படவும் இல்லை.இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் வெளி எல்லைக்கு அப்பால் 200nm EZ 1km ஆழம் வரை உபயோகிப்பதற்கான நிபந்தனைக்கு இடமளித்துள்ளது.

### 2.2.2 தீர்வுகள்,அளவீடுகள் மற்றும் அமுல்படுத்தல்கள்

**ஆளுகைக்கான ஒருங்கிணைப்பின் குறைபாடு**

- சமுத்திரம் அரசின் கீழ் உள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் Eg:-சமுத்திர மற்றம் மீன்பிடி அமைச்சு
- சமத்திர மற்றும் கரையோர சூழற்தொகுதி முகாமைத்துவத்துக்காக தேசிய மட்ட ஒருங்கிணைப்பு குழுவை உருவாக்கள்
- சமுத்திர மற்றும் கரையோர முகாமைத்துவம் தொடர்பான தேசிய மட்ட கொள்கைகளையும் மறுசீரமைப்புக்களையும் நடத்துதல்.
- நடைமுறையில் உள்ள சட்ட விதிகளையும் எதிர்கால திட்டங்களையும் நடைமறைப்படத்துவதற்கு அது தொடர்பான நிறுவனங்களின் திறனை பலப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் பலமட்ட சமுத்திர ஆழுகையின் குறைபாடு**

- பங்காளிகளின் பங்குபற்றளுடன் இலங்கையின் EEZ க்கான நிலநுகர்வு திட்டங்களையும் வலயப்படுத்துதலையும் தயாரித்தல்

**மேலும் உடையக்கூடிய சூழற்தொகுதியும் குறைந்த முனைப்பும்**

- காலநிலை மாற்றத்தினால் உயிரினங்கள் மற்றும் வாழ்விடங்களில்ஏற்படும் பாதிப்புகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளல்

- முக்கிய சூழல் தொகுதிகளை கவனமாக விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து குறைந்த மீள் உருவாக்கம் மற்றும் உடையக் கூடிய சூழல் தொகுதிகளுக்கான பிரதான காரணத்தை கண்டறிதல்.

- கடுமையாக தரம் குறைந்த சூழற் தொகுதியை மீள் நிலைப்படுத்தலுடன் பிரதான உயிரினங்களையும் வாழவிடங்களையும் பாதுகாத்தல்.

- சதுப்பு நிலங்களின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் நிலைபேறான பயன்பாட்டிற்காக புதிய கொள்கைகளை அறிமுகப்படுத்தலும் நடைமுறையில் உள்ள கொள்கைகளை மேம்படுத்தலும்.

**சமுத்திர பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள்**

- நடைமுறையில் இருக்கும் MPA க்களை மேம்படுத்துவதுடன் EEZ எல்லைக்கு உட்பட்ட புதிய MPA க்களை கண்டறிந்து பிரகடனப்படுத்தி MPA வலையமைப்பை விரிவுபடுத்தல்.

- MPA வலையமைப்பு எல்லையை 1000 $km^2$ இனால் அதிகரித்தல். இது GOM மிரிஸ்ஸ, காயிங்கேனி, வில்பத்து, சிறிய மற்றும் பெரிய அடித்தளங்கள், யாழ்ப்பாணக்குடாவையும் உள்ளடக்கும்.

- நடைமுறையில் இருக்கின்ற மற்றும் புதிய MPA க்களுக்கான நிர்வாகத் திட்டங்களை உருவாக்கல். இந்த நிர்வாக திட்டங்கள் பாறை சரணாலயம், வில்பத்து தேசிய பூங்கா, புறாத்தீவு தேசிய பூங்கா, சுன்டிக்கலம் தேசிய பூங்கா, ஆதாம் பாலம், விடத்தல் தீவு பகுதி போன்றவற்றை உள்ளடக்கும்.

- தற்போதைய பாதுகாப்பு மட்டத்தை அதிகரிப்பதன் மூலம் MPA யின் மீள் உருவாக்கத்தை அதிகரித்தல். இது சமுத்திர பாறை சரணாலய மேம்பாடு "இடது பக்க மீன் நிலைப்படுத்தல் வலயம்"இனையும் உள்ளடக்கியது. மேலதிகமாக கப்பல் விபத்துகளும் அவற்றைச் சுற்றியுள்ள பிரதேசங்களும் MPA க்களாக பிரகடனப்படுத்தப்படுவதுடன் தாவர மற்றும் விலங்கனங்களுக்கு சிறந்த பாதுகாப்பும் அளிக்கப்படல் வேண்டும்.

- கடல் சூழலுக்கான நிர்வாக உத்திக் கட்டமைப்புளையும் திட்டங்களையும் கடல்சார் வலயங்கைளை மையப்படுத்தி பலதரப்பட்ட பங்குதாரர்களுடன் இணைந்து உருவாக்குதலும் நடைமுறைப்படுத்துதலும்.

- முற்கூட்டிக் கண்டறியப்பட்ட SAM தளங்களை நடைமுறைப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கிய சூழல்தொகுதி மற்றும் உயிரினங்களுக்கான புதிய விதிமுறைகளை உருவாக்கல்ஃ சீரமைத்தல்**

- கடல் பாலூட்டிகளை பார்வையிடுவதற்கான நெறிமுறைகளை திருத்தியமைத்தலும் தனியார் வசமிருக்கும் மென்மையான கடல் சூழலில் காணப்படும் ஆமை வளர்ப்பிடங்கள், நீரடி காற்றுவழங்கி, நீர்விளையாட்டு மற்றும் கப்பல் பிரயாண தளங்களுக்கான புதிய விதிமுறைகளை அறிமுகப்படுத்தல்.

- திமிங்கிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிர்வகிப்பிற்காக தகவல் திரட்டும் நடைமுறையொன்றை அறிமுகப்படுத்தல்

**போதுமான விஞ்ஞான அறிவின்மை மற்றும் ஆய்வுக்கான திறனின் குறைபாடும்**

- முதுகலை தகைமையை பெற்றுத்தரக்கூடியவாறான கண்டுபிடிப்புகள் மற்றும் ஆய்வுகளை நடத்தக்கூடிய கடல்சார் நிறுவனமொன்றை நிறுவுதல். (இது இலங்கை சமுத்திர விஞ்ஞான நிறுவனம் எனப் பெயரிடப்படலாம்). இது மன்னேற்றப்பட்ட கட்டமைப்பையும் ஆய்வுகளுக்கான சிறந்த மனித வளத்தையும் கொண்டு "சிறந்த கடல் ஆய்விற்கான மையம்" என்றவாறு வளர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும் இந்நிறுவனம் கடல் ஆய்வில் வளர்ச்சியடையும் தொழில்நுட்பங்களுக்கான வசதிகளையும் ஒழுங்கமைப்புகளையும் பெற்றுத் தரக்கூடிய ஒரு நிறுவனமாக ஒரு குடையின் கீழ் செயற்படுதல் வேண்டும்.

- கடற்சூழல் தொடர்பான அடிப்படை தரவுத்தளம் ஒன்றை நிறுவுதலும் பராமரித்தலும்.

- கடல் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திக்கான தொடர்ச்சியான மற்றும் போதுமான நிதி ஒதுக்கீடுகளை உறுதி செய்துகொள்ளல். கடல் ஆய்வுகளுக்கான தேசிய நிதி ஒதுக்கீடானது அதிகரிக்கப்பட லேவண்டும்.

- கடல் ஆய்வுகளுடன் தொடர்புடைய முகவர்களின் உதவியுடன் ஆய்வுகளினதும் அபிவிருத்தியினதும் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளல்.

- தேசிய மற்றும் சர்வதேச நன்கொடையாளர்களுக்கு பொருத்தமான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு ஊக்கப்படுத்தல்

- நாட்டுக்கு இடையிலான பங்குதாரர்கள் மற்றும் MOU பங்குதாரர்களை அதிகரித்துக் கொள்ளல்.

- நூதனமான தொழில்நுட்பங்களை வேகமாக பகிர்வதற்கான உத்திகளையும் தேசிய நிறுவனங்களுக்கிடையிலான புதிய அறிவுகளையும் வளர்ச்சியடையச் செய்தல்.

**விழிப்புணர்வு மற்றும் சமுத்திர சூழற்தொகுதியை நோக்கிய மனப்பாங்கின் குறைபாடு**

- பொதுமக்கள் மற்றும் முக்கிய பங்குதாரர்களுக்கிடையிலான கடல் சூழல் சேவைவயின் நிலை பற்றிய தேசிய மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்பாடு செய்தல்.

- கடல் சூழல் சேவைகள் தொடர்பான சிறந்த மனப்பாங்கு மற்றும் அறிவை அபிவிருத்தி செய்வதற்கான பாடசாலை கலைத்திட்டத்தை முன்னேற்றுதல். சமுத்திரத்தின் சூழலியல், பொருளாதார சேவைகள் குறித்தான அடிப்படை சமுத்திர விஞ்ஞானத்தை அடிப்படை, நடுநிலை மற்றும், உயர் கல்வியுடன் இணைத்துக் கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டுப்படுத்தப்பட்ட திறமைகளும் இயலுமைகளும் நிர்வாகிகளுக்கிடையிலான திறன்களும்**

- கடல் சூழல் தொடர்பான அறிவையும் திறனையும் வளர்ப்பதற்காக பயிற்சி நிறுவனங்களின் கட்டமைப்பை முன்னேற்றுதல்
- கடல் வள நிர்வாகிகளுக்கான பயிற்சிகள் மற்றும் முதுகலைக் கற்கைகளை செயற்படுத்தல்.

**சட்ட விரோத நில அபகரிப்பு**

- சட்ட விரோதமான மணல் அவழ்வினை மட்டுப்படுத்துவதற்காக மாற்று நில வளங்களை பெற்றுக் கொடுத்தல்
- நடைமுறையில் உள்ள தேசிய சட்டத்தை பயனுள்ள முறையில் செயற்படுத்தல்.
- ரோந்து நடவடிக்கைகளுக்கான பலத்தை அதிகரிப்பதுடன் சட்டத்தை அமுலாக்கல்

**உலக காலநிலை மாற்றமும் அதிகரித்து வரும் இயற்கை அழிவுகளும்**

- பாதிப்படைந்த வாழ்விடங்களின் மீள் உருவாக்கத்திற்கு உடனடியான வழிவகைகளை செய்வதோடு முக்கியமான உயிரினங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள மேற்கொள்ளல்
- பாதிப்படையக் கூடிய கடல் சூழல் தொகுதிகள் பற்றிய தொடர்ச்சியான கண்காணிப்பையும் பதிவையும் மேற்கொள்ளல்
- முக்கிய பங்குதாரர்களின் உதவியுடன் பாதிப்படைந்த சூழல் தொகுதிகளுக்கான மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பை வழங்கல்.

**சர்வதேச விதிமுறைகள்**

- சர்வதேச விதிமுறைகள், மாநாடுகள், ஒப்பந்தங்கள், வழிகாட்டுதல்களை மதிப்பாய்வு செய்தலும் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்வதும். உதாரணம்: IMO இன் நீர் நிலைப்படுத்தல் மாநாடு, IMO கப்பல் மேலோடு பாதிப்பு தொடர்பான வழிகாட்டுதல்.
- முற்கூட்டியே கையொப்பமிடப்பட்ட மாநாடுகளை மதிப்பாய்வு செய்தலும் உறுதிப்படுத்தலும்.

## 2.3 கடல் வளங்கள்

### 2.3.1 தற்போதைய நிலை, பிரச்சினைகள் மற்றும் பிரச்சினையின் பரப்பு

- குறுகும் மீன் வளங்கள் - அதிகபடியாக சட்டவிரோதமான முறையிலும் பாதிப்பான முறையிலும் மேற்கொள்ளப்படும் மீனடிபிடியின் காரணமாக மீன்வளம் குறுகுவதோடு கடல் சூழலும் சீரழிவடைகின்றது. நீலைபேறான அளவிலான மீன்பிடி குறித்தான எவ்விதமான வள ஆய்வுகளும் கடந்த முப்பது வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லை. மேலும் இது குறித்தான எவ்வித விஞ்ஞான ஆய்வுகளும் காணப்படுவதில்லை. இருப்பினும் மீனபிடியை அதிகரிப்பதற்கான சில நடவடிக்கைகள் மேற்கொ்ளப்பட்டவண்முள்ளன.
- பிந்தைய அறுவடை நட்டங்கள் - இலங்கையில் பிடிக்கப்படும் 30 வீதத்திற்கும் மேற்பட்ட மீன்கள் பொருத்தமற்ற பின் அறுவடை காரணமாக அப்புறப்படுத்தப்டுகின்றன. இது மீனின் இருப்பைக் குறைக்கின்றது.



13-CM 27932

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மீன் பிடிப்பதற்காக சர்வதேச நீர் வலயங்கை உபயோகிப்பதற்கான வாய்ப்பில் சமத்துவமின்மை – வளர்ச்சியடைந்த நாடுகள் வெளி கடற்பரப்புகளிலும் மீன்பிடியில் ஈடுபட அனுமதி காணப்படுவதுடன் மற்றைய நாடுகளின் பொருளாதார வலயத்தினுள்ளும் இவ்வனுமதிகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

- விஞ்ஞான ரீதியாக திரட்டப்பட்ட நம்பத்தகுந்த மீன்பிடி தொடர்பான தகவல்களின் குறைபாடும் வள கணக்கெடுப்பின் குறைபாடும் - இறுதியாக வளக் கணகெடுப்பு 1978இல் மேற்கொள்ளப்பட்டது. ஆகவே தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடைந்த நாடுகளின் உதவியுடன் EEZ எல்லைக்குட்பட்ட ஒரு விரிவான வள கணக்கெடுப்பு சில வருடங்களில் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. NARA வினால் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான இணைவு மற்றும் உதவிகளுடன் இது வேகப்படுத்தப்பட வேண்டும்.

- நிலைபேறற்ற முறைகளில் நடைபெறும் கரையோர மீன்பிடி – செவடிபொருட் பாவனை, கலங்கிய நீர் மீன்பிடி, பொருத்தமற்ற வலைகள் போன்ற சட்ட விரோதமான மீன்பிடி முறைகள். மேலும் நிலைபேற்ற மீன் வள சுரண்டலை ஏற்படுத்தும் தேவையற்ற மீன்களின் பிடி முற்றாக தடை செய்யப்படல் வேண்டும்.

- மீன்பிடித் துறைமுகங்களின் குறைவான வசதியும் தரமும் - இலங்கையில் காணப்படும் பெரும்பாலான மீன்பிடித்துறைமுகங்களுக்கு அடிப்படை வசதிகள் கூட காணப்படுவதில்லை. மேலதிகமாக தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய மீன்பிடித் துறைமுகமான திக்கொட்டுவ துறைமுகம் பாவனை செய்யப்படாது உள்ளது.

- தேசிய பொருளாதாரத்திற்கான குறைவான பங்களிப்பு – EEZ ஆனது நிலப்பரப்பை விட கிட்டத்தட்ட ஏழு மடங்கு பெரிதானதாக இருந்தபோதிலும் தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பு வெறுமனே 1.8 வீதமாகும். மேலும் மீன் மற்றும் மீன் உற்பத்திகக்கான முறையான பெறுமதி அளிக்கப்படுவதில்லை.

- மீன்பிடி மோதல்கள்(வள பயன்பாட்டு மோதல்கள்) இந்திய மீனவர்களின் அத்துமீறலான நுழைவு மற்றும் சமுத்திரத்தின் கலங்கிய நிலையிலான செயற்பாடுகள் எமது வளங்களுக்கு வெளியான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. மேலும் கடற்பாசி இடைநிறுத்தம் எமது கடல் வளத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகின்றது.

- மீனவ கைத்தொழிளாலர்களுக்கு பொருத்தமான வருமானக் குறைவு – கைவினைஞ மீனவர்களுக்கான பொருத்தமான சந்தை முறையொன்று காணப்படுவதில்லை.

- மானியங்களை வழங்குவதற்கான முறையான வழிமுறைகள் காணப்படாமை – சில சமயங்களில் மானியங்கள் இலாபத்தை பெற்றுத் தரக்கூடிய பொருத்தமற்றவருக்கு வழங்கப்படுகின்றன. நெருக்கடியான நிலைமைகளில் வழங்கப்படும் மானியங்களானது நேரத்துடன் பிணைச்சு காணப்படும் அதேவேளை அவை விரிவடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ப்படுகின்றன.

- பாரிய சந்தைக் கேள்வியைக் கொண்டிருக்கும் கடல்சார் துறைக்கு பயிற்சியளிப்பதற்கான அதிக வளங்களை இலங்கை கொண்டுள்ளது. ஆகவேஈ கடல்சார், கற்பித்தல்களும், பயிற்சிகளும் வழங்கும் நிறுவனங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும்.

- கடல் சார்ந்த சுற்றுலாத் தளங்களான நீரில் மூழ்கி விளையாடும் இடம்(குறிப்பாக கப்பல்களிலிருந்து), சுழியோட்டம் மற்றும் கடல் சம்பந்தப்பட்ட ஏனைய விளையர்டுக்கள் வளர்ச்சியடையச் செய்யப்பட வேண்டும். இதற்கமைவாக சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் சிறப்பாக பயிற்சி பெறுவதற்காக விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டு முன்னேற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.3.2. **தீர்வுகள், அளவீடுகள், நடைமுறைப்படுத்தல்**

**மீன் வளம் குறுகுதல்**

- சட்டவிரோதமான மீன்பிடி உபகரணங்களை முற்றாக தடை செய்தல். அத்துடன் அவற்றின் இறக்குமதி மற்றும் அவை சம்பந்தப்பட்ட மூலப் பொருட்களின் இறக்குமதியை தடை செய்தல்
- சுற்றாடலுக்கு இணக்கமான மீன்பிடி உபகரணங்கள் பாவனையை ஊக்குவிப்பதுடன் அவ்வாறான உபகரணங்களை உபயோகிக்கும் மீனவர்களுக்கு சலுகைகள் வழங்கல்.
- மீனவர்களை பிரித்தெடுப்பு இல்லாத (வளங்களுக்கான குறைவான பாதிப்பு) அதிக வருவாயை ஈட்டித் தரக்கூடிய வழிகளான தோணிமர மீன்பிடி, சுற்றுலாப் பயணிகளுக்கான வழிகாட்டல் போன்றவற்றிற்கு ஊக்கப்படுத்தல்.
- விஞ்ஞான புரிதலுடனான மீன்பிடி சேமிப்பகங்கள் மற்றும் MPA க்களின் ஏனைய வடிவங்களை உருவாக்கல்.

**பிந்தைய அறுவடை நட்டங்கள்**

- பிந்தைய அறுவடை நட்டங்களை குறைப்பதற்கான விழிப்புணர்வுகள், பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளை வழங்குதல்.
- பிந்தைய அறுவடை நட்டங்களை 10 வீதத்தினால் குறைவடையச் செய்தல்
- பிந்தைய அறுவடை நட்டங்களை குறைப்பதற்கு மீன் ஏற்றுமதியை அதிகப்படுத்தல். அத்துடன் எமது ஏற்றுமதிகளில் அதிக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு மீன் உற்பத்திகள் சாத்தியமான உயர் தரத்தில் உற்பத்தியாக்கப்பட வேண்டும். சர்வதேச தரங்களையும் சிறந்த பயிற்சிகளையும் பின்பற்றுவது அவசியமாகும்.
- சூழல் தரமிடல், கண்டறிதல், தொடர்புபட்ட சான்றிதழ் திட்டங்கள் என்பன மீன் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலில் முக்கிய அங்கமாகி வருகின்றன. சூழல் தரமிடலானது சுற்றாடலின் மீதான உற்பத்தியின் குறைவான பாதிப்பை எடுத்துக் காட்டி வழங்கப்படும் "அனுமதிக்கான முத்திரையாகும்".
- சூழல் தரமிடலை ஏற்றுக் கொள்வதானது நிலைபேறான மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்பை அடைந்துகொள்ள உந்துதலாக அமைவதுடன் சந்தை, தொழில்துறை, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சமூகத்தின் கூறுகளை ஒன்றிணைக்கின்றது.

**மீன் பிடிப்பதற்காக சர்வதேச நீர் வலயங்கள உபயோகிப்பதற்கான வாய்ப்பில் சமத்துவமின்மை**

- UN இடம் வறுமையான மற்றும் சிறிய தீவுகளுக்கு அதிக பங்குகளை ஒதுக்குமாறு கோரிக்கை விடுப்பதன் மூலம் சர்வதேச நீர் வலயங்களில் மீன் பிடிப்பதற்கான அதிக வாய்ப்புகளை பெற்றுக் கொள்ளல்.

**விஞ்ஞான ரீதியாக திரட்டப்பட்ட நம்பத்தகுந்த மீன்பிடி தொடர்பான தகவல்களின் குறைபாடும் வள கணக்கெடுப்பின் குறைபாடும்**

- நிலைபேறான மட்டத்தை அறிந்துகொள்வதற்காக வளக் கணக்கெடுப்பை மேற்கொள்ளல்.
- ஒவ்வொரு மீன்பிடிக் கப்பலும் எதிர்வரும் வருடங்களில் தமது அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மீன்பிடி தகவலை வழங்குவது கட்டாயமாக்கப்பட வேண்டும். இதன் மூலம் சரியான மீன்பிடி தகவல்களை திரட்டக்கூடிய வழி கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலைபேறற்ற முறைகளில் நடைபெறும் கரையோர மீன்பிடி**

- பல்வேறு வகையான மீனபிடிகளுக்கு ஏற்றாற்போல் சுற்றாடல் பாதுகாப்பான சிறந்த கருவிகள்/முறைகளை விஞ்ஞான முறையாக ஆராய்ந்து கண்டறிதல்

- சலுகைகளை வழங்வதன் மூலம் அவ்வாறான கருவிகளை ஊக்கப்படுத்தல் (மீன்பிடி அனுமதிப்பத்திர கட்டணத்தை குறைத்தல்) வேறு முறைகளை ஊக்கப்படுத்தாது இருப்பதுடன் சுற்றாடலுக்குப் பாதிப்பான கருவிகளின் பய்ன்பாட்டை தடை செய்தல்.

- விஷமூட்டல், வெடிபொருட் பாவனை, பொருத்தமற்ற வலைகள், அடிப்பரப்பு மீன் பிடிப்பு போன்ற சட்ட விரோத மீன்பிடி முறைகளுக்கான சட்டத்தை கடுமையாக்குதல்.

**மீன்பிடித் துறைமுகங்களின் குறைவான வசதியும் தரமும்**

- மீன்பிடித்துறைமுகங்களின் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்

- திக்கோவிட்ட போன்ற பயன்படுத்தப்படாத மீன்பிடித் துறைமுகங்களை பொருளாதார முன்னேற்றத்திற்கு உபயோகப்படுத்தல்

- தேசிய மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை வசதிகளைப் பெற்றுக் கொள்ளவும், நிலம் வழியாகவோ காற்று வழியாகவோ அறுவடைகளை வேகமாக கொண்டு சேர்ப்பதற்கான வசதியைப் பெற்றுக் கொள்வதற்கும் ஊக்கப்படுத்தல்.

**தேசிய பொருளாதாரத்திற்கான குறைவான பங்களிப்பு**

- முந்தைய அறுவடை நட்டங்களை முன்னேற்றுவதன் மூலம் GDP இற்கான பங்களிப்பை அதிகரித்தல். மேலும் அதிக கடல் மீன்பிடியை குறிவைப்பதுடன் மீன் உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல்.

- சமுத்திரத்தை மையப்படுத்திய பொருளாதார சுற்றுலா மற்றும் பொறுப்பான சுற்றுலாக்கனை அபிவிருத்தி அடையச் செய்தல்.

- திமிங்கில மற்றும் கடல் சார்ந்த உயிரினங்ளை மையப்படுத்தி சூழல் சுற்றுலாவை மேம்படுத்தல். இது மீன்பிடியை விட அதிக வருமானத்தை தேசிய பொருளாதாரத்திற்குப் பெற்றுத்தரும். திமிங்கிலங்கள் மற்றும் பாறைத் திமிங்கிலங்கள் ஆண்டுதோறும் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகளைக் கவரும் ஆற்றலைக் கொண்டிருப்பதால், திமிங்கிலத் துடுப்பு மற்றும் கல்லீரல் எண்ணெய் பிரித்தெடுப்பை விட அதிக வருமானத்தை இச்சுற்றுலாத்துறை ஈட்டித்தரும்.

- அசையக்கூடிய திமிங்கிலங்களின் பாதுகாப்பின் புரிதலுக்கான குறிப்பாணை (MoU) ஓர் கையொப்பதாரர் ஆகுங்கள். CMS ஆனது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் நிகழ்ச்சியினால் உருவாக்கப்பட்ட அரசுகளுக்கிடையிலான ஓர் ஒப்பந்தமாகும். மாலைத்தீவு மற்றும் மற்றைய நாடுகளை உதாரணமாகக் கொண்டு இலங்கை சர்வதேச திமிங்கிலங்கள் பாதுகாப்பு மற்றும் பேணுகைக்கு ஆதரவளிக்க வேணடும். காரணம், பெரும்பாலான உயிரினங்கள் தமது ஆயட்காலத்தில் புவியியல் மற்றும் சர்வதேச எல்லைகளைக் கடந்து இனக்கலப்பில் ஈடுபடுகின்றன. ஆகவே அவற்றின் விரிவான எல்லைக்கு ஏற்றாற்போல் உலகளாவிய பாதுகாப்பு மற்றும் நிர்வாக அளவீடுகள் அவசியமாகின்றன.

**மீன்பிடி மோதல்கள்(வள பயன்பாட்டு மோதல்கள்)**

- சமூக அடிப்படையையும் உப நிர்வாகத்தையும் ஊக்கப்டுத்தல். ஒவ்வொரு கரையோரப் பிரதேசத்திலும் இருந்து குறைந்தது ஒரு முன்னோடித் திட்டத்யையாவது தெரிவு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உப நிர்வாக மீன்பிடித் தளங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்
- குறைந்த வருமானமுடைய மீனவ கைத்தொழிலாளர்கள் மற்றும் நிலப்பரப்பு மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு மாற்று முறையொன்னை அபிவிருத்தி செய்தல்.
- மீன்பிடி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளல். முக்கியமாக இந்தியாவுடனான பிரச்சினைகளை தீர்த்தல்.

**மீனவ கைத்தொழிளாலர்களுக்கு பொருத்தமான வருமானக் குறைவு**

சூழல் சுற்றுலாவிற்காக பாரம்பரிய மீன்பிடி கைத்தொழில்களையும், மீன்பிடி முறைகளையும் உபயோகித்தல். (குறிப்பாக கரையோர மீன்பிடி)

- சுற்றுச் சூழல் பாதுகாக்கப்படும் வகையிலும் முந்தைய அறுவடை நட்டங்களை குறைக்கும் வகையிலும் மீன்பிடிக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும், பயிற்சிகளையும் வழங்கல்.
- சுற்றாடல் பாதுகாப்பான உத்திகள் மூலம் பொருட்களை அதிக விலையில் விற்கும் கைத்தொழில் மீனவர்களுக்கான பிரிதான சந்தையை ஏற்படுத்தல் (முடிக்கப்பட்டது, பைக்கற்றாக்கப்பட்டது)

## 3. நிலைபேறான முன்னோக்கு = 2020 மற்றும் அப்பால்

இலங்கை மீன்பிடியைத் தவிர் கடல் வளத்தின் ஏனைய முழு ஆற்றல்களை இனங்காணத் தவறியுள்ளது. ஆகவே சமுத்திரம் எதிர்கால வளங்களை அடிப்படையாகக் கொண்டு உயர் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். இது நாட்டின் பொருளாதாரத்ஜ வளர்ச்சியடையச் செய்ய உதவியாக அமையும். எவ்வாறாயினு் நாடு நீல பொருளாதாரத்தின் மூலம் நன்மையடைய வேண்டுமெனின், முதலில் சமுத்திர ஆய்வு, கண்டுபிடிப்பு மற்றும் அபிவிருத்திக்கு முதலீடு இடப்படுதல் வேண்டும். அனைத்து சூழல் மற்றும் பொருளாதார சேவைகளும் எமது சமுத்திர சுகாதாரத்தை காத்துக் கொள்வதற்கான திறனிலேயே தங்கியுள்ளது. விஞ்ஞான அறிவின் வளர்ச்சி, ஆய்வுகளின் அபிவிருத்தி, கடல்சார் தொழில்நுட்பங்களின் பரிமாற்றுகை என்பன கடல் சுகாதாரத்தை அபிவிருத்தி அடையச் செய்ய முக்கியமாகின்றது. மற்றும் குறிப்பாக வளர்ந்து வரும் நிலையிலுள்ள சிறிய தீவுகளின் மற்றும் ஏனைய நாடுகளின் அபிவிருத்திக்கு சமுத்திரத்தின் பங்களிப்பை அதிகரித்துக் கொள்ள இது உதவும். நாம் எமது மகரையோர மீன் உற்பத்தியில் உயர்நிலையை அணுகிக்கொண்டிருக்கின்றோம். அத்துடன் தொழில்நுட்பமானது ஏற்றுமதிச் சந்தையை நோக்கமாகக் கொண்டு கடல் வளர்ப்பு மற்றும் மீன் சார்ந்த அலங்காரப் பொருட்கள் வர்த்தகம் என்பவற்றை வேகமாக அபிவிருத்தியடையச் செய்தல் வேண்டும். மேலும் கடலுணவு ஏற்றுமதி பெறுமதி சேர்க்கப்பட்டு அபிவிருத்தி செய்ய்ப்பட வேண்டும். இலங்கை நீல பொருளாதாரத்தின் மூலம் நன்மையடைய வேண்டுமெனின், நடைமுறையிலுள்ள மற்றும் அபிவிருத்தியில் உள்ள துறைமுகங்கள் பச்சை துறைமுகம் எண்ணக்கருவின்படி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

உயிரற்ற வளங்கள் குறித்தான அடிப்படைக் கற்கை, வள கணக்கீடு மற்றும் கண்டுபிடிப்புகள் அத்தியாவசியமாகின்றன. கடல் சார்ந்த சூழல் சுற்றுலாவானது கடல் பாலூட்டி பார்த்தல், சுழியோட்டம், நீர்மூழ்கி விளையாட்டுக்கள், மீன்பிடி விளையாட்டு மற்றும் ஏனைய நீர் சார்ந்த விளையாட்டுக்களுக்கான ஒழுங்கான நுட்பமுறைகள் ஏநபடுத்தப்பட்ட பின்னர் மேலும் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான சில நேரடி குறிப்புகளும் காணப்படுகின்றன. அதாவது, நீல காபன் மற்றும் உயிர்கனிமவளங்கள் போன்றவை எதிர்காலத்தில் விளைவுகளை ஏற்படுத்தலாம் - குறிப்பாக அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் வகையில் வாழ்வாதாரங்களில் கலத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள்

# S6

## S6. போக்குவரத்து[16]

### 1. தற்போதைய நிலைமை

1977 முதல் பெரும்பாலான மக்கள் சேவைகள் அரசாங்கத்தின் மூலமே நிறைவேற்றப்படுகின்றது. இதில் போக்குவரத்தும் உள்ளடங்குகின்றது. தாராளமயமாக்கப்பட்ட காலப்பகுதியில் தனியார் பஸ் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. பொருள் பரிமாற்ற போக்குவரத்து எப்போதும் தனியார் வசமே இருந்தபோதிலும் போக்குவர்த்துக் கட்டமைப்புகள் அரசாங்கத்தினாலேயே வழங்கப்படுகின்றது. தனியார் துறைமுக முனையங்களுக்கு அனுமதியளித்தல், விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுக்கான PPP ஏற்டபாடுகளை கண்காணித்தல் போன்ற அண்மைய முயற்சிகள் என்பன கொள்கை மாற்றங்களாகவே நோக்கப்படுகின்றன. 2005 முதல் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட முறை மூலம் பஸ் மற்றும் புகையிரத கட்டணங்களை நியாயமான முறையில் போக்குவரத்துச் சேவையை வழங்க முயற்சிக்கின்றது. மாணவர்கள், வலய உத்தியோகத்தர்கள் போன்றோருக்கு கழிவுத் தொகையில் போக்குவரத்து, மானிய அளவில் கிராமப்புறங்களுக்கான பஸ் சேவையும் நீண்ட காலம் நீடிக்கக்கூடிய ஓர் கொள்கை முறையாகும். இவற்றில் குறிப்பிடத்தக்கவாறு சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய என்பன 2004 முதல் நடைமுறையிலுள்ள போக்குவரத்து சேவைகளாகும். கிராமப்புற வீதி அபிவிருத்திகள் அடிப்படை சேவைகளுக்கான அணுகலை பல தசாப்தங்களுக்கு சாத்தியமாக்கியுள்ளது. அண்மைய வருடங்களில் அதிவேக பாதையின் கட்டுமானமானது நககரங்களுக்கிடையிலான போக்குவரத்தை மேம்படுத்துவதில் மைய நிலையத்தை கொண்டுள்ளது. அண்மைய கொள்கை முயற்சியாளர்கள் பஸ்ஸிற்கு முன்னுரிமையான பாதைகளை ஏற்படுத்துவதை உட்கொண்டுவந்துள்ளனர். அத்துடன் சஹசர திட்டத்தின் மூலம் பஸ்கள் மறுசீரமைக்கப்பட்டது. ஒளி வேக போக்குவரத்து, நீர் போக்குவரத்து, புகையிரத மின்சாரமயமாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் போன்ற புதிய நகர்புற போக்குவரத்து முறைகளை செயலாக்க முயற்சியாளர்கள் ஏற்படத்தியுள்ளனர். மோட்டார் வாகனங்களுக்கு அதிக வரி அறவிடப்படுவதனால், 2/3 பங்களன வாகனங்கள் 2 அல்லது 3 சக்கரங்களைக் கொண்டதா காணப்படுகின்றது. எரிபொருள் வித்தியாசமான விலைப் பெறுமானங்களைக் கொண்டிருப்பதுடன் பெற்றோலிற்கு டீசலினை விட அதிக வரி அறவிடப்பட்டு டீசல் வாகனங்களின் பயன்பாடு அதிகரிக்கப்படுகின்றது. இது நாட்டின் வருவாய்க்கான பிரதான மூலமாக காணப்படுகின்றது. "வாடகைக்கு" துறையானது மோசமடைந்த போக்குவரத்து முறையின் ஆதிக்கத்தில் அதிகளவான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன் வேலையற்றவர்கள் மற்றும் பாடசாலை விட்டு வெளியேறிவர்கள் என்று 700,000 இற்கும் அதிகமானவர்கள் முச்சக்கரவண்டி ஓட்டுதலில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்து துறையானது சிறந்த இயக்கத்தையும் உற்பத்தியின் மாறுபட்ட காரணிகளுக்கான அணுகலையும் வழங்குவதற்காக ஏனைய அனைத்து துறைகளுடனும் ஒருங்கிணைதல் வேண்டும். இப்பரிமாற்றல் உள்ளீடு மற்றும் வெளியீட்டை உள்ளடக்கிய மனித மற்றும் பொருட்களின் நகர்வை உள்ளடக்கியது. சீரமைக்கப்படாத நில பாவனை, சமூக கட்டமைப்பு

---

16 எழுதுனர் குழாம்: அமல் குமாரகே (தலைவர்), ரோஹான் சமரஜீவ, ஜகத் முனசிங்க, T.L. குணருவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பௌதீக கட்டமைப்பு போன்றவாறான போக்குவரத்து கட்டமைப்புகள் அபிவிருத்தி ஆற்றலை குறைவடையச் செய்யும். எஇலங்கையில், கொள்கை உருவாக்கம், திட்டமிடல், ஏனைய துறைகளுடனான ஒழுங்கு, முறைகளுக்கிடையிலான சமப்படுத்தப்பட்ட முதலீடுகள், நிர்வாகத்தின் நவீனமயமாக்கம் மற்றும் தொழில் துறைகள் போன்றன வளர்ந்துவரும் சாதாரண வருவாயுள்ள நாடுகளின் போக்குவரத்து துறையின் தேவைகளின் அளவை விட சீரற்றதாகவும் போதுமானதாக இல்லாமலும் காணப்படுகின்றது. மேலும் போக்குவரத்து சேவை தடுக்கப்படாத சேவையை அனைத்து துறையினருக்கும் வழங்காதபோது பொருளாதார முன்னேற்றமும் தடைப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இவை பெண்களுக்கான வளப் பயன்பாட்டிற்கான அனுமதி, உற்பத்தியை முன்னேற்றுவதற்காக வாய்ப்புகளையும் சந்தைகளையும் ஏற்படுத்தல் மற்றும் புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பவற்றை உள்ளடக்கியது. ஒரு மில்லியனிற்கு மேலான நேரடி ஊழியர்களுக்கான பணியை வழங்கும் ஓர் பாரிய துறைாகவும் போக்குவரத்துத் துறை மாற்றப்பட வேண்டும். இத்துறை மேலும் பெறுமதி சேர்க்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை கூறுகள் மற்றும் சர்வதேச ஆகாய வழி மற்றும் நீர் வழி போக்குவரத்துக்கான உள்ளீடுகளைப் பெற்று உருவாக்கம் பெறும் துறையாகவும் கருதப்படல் வேண்டும்.

**பழைய கொள்கைகள் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சிகள்**

வெளிப்படையான போக்குவரத்துக் கொள்கைகள் 1991 நொவெம்பர் 27ம் திகதி அமைச்சரைவையால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து கொள்கைகளுக்கு அடையாளமாக சொல்லலாம். இவ் ஆவணம் தேசிய போக்குவரத்து கொள்கைகள் எனப் பெயரிடப்பட்டதோடு 2009 என திகதியிடப்பட்டுள்ளது. இது அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் பல தசாப்தங்களாக சந்தையை மையப்படுத்தி செயற்பட்ட கொள்கைகளை பிரதியீடு செய்வதாக அமைந்தது. இதன் மேம்படுத்தப்பட்ட வடிவம் தற்போது நடைமுறையில் உள்ளது. எவ்வாறாயினும் எந்தவொரு முகவரும் இந்த இரு கொள்கைகளையும் பின்பற்றவோ செயற்படுத்தவோ இல்லை என்பது புலப்படுகின்றது. தற்போதைய பிரச்சினைகள் குறித்தான ஆய்வு அத்தியாயம் 3ல் விளக்கப்பட்டுள்ளதுடன் அவை பெரும்பாலும் இக் கொள்கைகளை செயற்படுத்துவதை புறக்கணித்ததினாலேயே ஏற்பட்டுள்ளது.

வெளிப்படையான கொள்கைகளின் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு மேலதிகமாக, அரசாங்கத்தின் போக்குவரத்துக்கான நிதி ஒதுக்கீடு சட்டபூர்வமாக அமைச்சரவை அல்லது பாராளுமன்ற அங்கீகாரத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது. சில சமயங்களில், கொள்கைகளானது திருத்தங்கள் என்ற முறையில் சில மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு பாராளுமன்றம் மற்றும் அரசிதழின் செயற்பாட்டுக்கு உபயோகிக்கப்பட்டது. எவ்வாறாயினும் இவை வேறுபட்ட முகவர்கள் மூலமாகவும் அமைச்சர்கள் மூலமாகவும் முன்மொழியப்பட்டவையாகும். ஒருங்கிணைந்த இயக்க நிர்வாகத்திற்கான ஒட்டுமொத்த அணுகலானது புறக்கணிக்கப்பட்டுள்ளது. இவை போக்குவரத்துத் துறையின் பொருத்தமற்ற மற்றும் மாறுபட்ட நோக்கத்திற்கான முதலீடுகளுக்கு வழிவகுக்கின்றது.

**தேவைகள் குறித்தான ஆய்வு**

வரலாற்று ரீதியான பயணியர்களின் இயக்கத்தேவை வருடத்திற்கு 4 வீதம் என்றவாறு வளர்ச்சியடைந்துள்ளதுடன் பொருட்களின் போகக்குவரத்து சுமாராக வருடத்திற்கு 3 வீதம் என்றவாறு அதிகரித்துள்ளது. இந்நிலையானது 5வீத பொருளாதார வளர்ச்சி வீதத்துக்குரிய நிலை மேலும் இது மேலும் அதிக வீதத்தில் வளர்ச்சியடையும். உலகப் போக்குகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் தனிநபர் இயக்கம் அதிகமானதாக காணப்படுகின்றது. இது கிராமப்புற வீதிகளின் விரிவு, சம அளவு விரிவான பாதைகளின் இணைப்பு மற்றும் குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து கட்டணம் போன்ற முற்கூட்டிய அபிவவிருத்தி நடவடிக்கைகளின் விளைவாகும். எதிர்வரும் வருடங்களில் பொதுசன போக்குவரத்தின் புறக்கணிப்பு, உயர் வருமானங்களுடனான இணைப்பு என்பவற்றினால் மோட்டார்மயமாக்கம் வேகமானக வளரடசடசி கண்ட போதிலும் அதற்கு இணையான வளர்ச்சி வீதி விரிவாக்கத்தில் காணப்படாது. நகரமயமாக்கலில் பிரயாணத்தூரங்கள் அதிகரிப்பதுடன் நெரிசலின் காரணமாக கதவுகளுக்கடைப்பட்ட வேகம் குறைந்து கொண்டு செல்கின்றது. விவசாய்ப் பொருட்கள் ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுவதுடன் உற்பத்தி மற்றும் கட்டுமான பொருட்களின் அசைவால் ஏற்றுமதிச் சந்தை நிரப்பப்படுகின்றது. இதனால் பொருட்களின் போக்குவரத்துக்கான தேவை பெரிதும் மாற்றம் கண்டுள்ளது. சர்வதேச போக்குவரத்தில் கொழும்பு துறைமுகமானது தெற்காசியவின் பரபரப்பு மிகுந்து துறைமுகமாக கருதப்படுகின்றது. 75 வீதமான கனவளவுகள் கப்பல் வழியாக நடைபெறுவதுடன் இது வருடாந்தம் 8 வீதத்தினால் அதிகரிக்கின்றது. ஆகாயவழிப் போக்குவரத்தானது வருடாந்தம் 12 வீதம் என்ற அளவில் தொடர்கின்றது. முக்கியமாக தூண்டப்பட்ட சுற்றுலாத்துறையின் மூலமும், 30 ஆண்டுகால யுத்தத்தின் காரணமாக இது தடைப்பட்டும் காணப்பட்டது.

**வழங்கல் பற்றிய ஆய்வு**

பயணிகள் போக்குவரத்துத் தேவைக்கான வழங்கல் பஸ் சேவையினால் ஆக்கிதமிக்கப்படுவதோடு தற்போதைய நிலவரப்படி 45 வீதமான பயணிகள் கி.மீ. ஐ பங்காகக் கொண்டுள்ளது. மோட்டார்மயாக்கப்படாத போக்குவரத்து சுமாராக 10 வீதமும், புகையிரத போக்குவரத்து 3 வீதமாகவும், தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்கள் மிகுதியான 42 வீதத்தையும் பங்கிடுகின்றன. பஸ் போக்குவரத்தானது இ.போ.ச. விற்குச் சொந்தமான 6000 பஸ்களாலும், மேலும் 20,000 பஸ்கள் தனிநபரினால் உரித்தாக்கப்பட்டு மாகாண மற்றும் தேசிய போக்குவரத்து அதிகார சபையின் விதிமுறைகளுக்கு இணங்கவும் நடைபெற்று வருகின்றது. 20-30 வீதம் வரையான வாகனங்களின் அதிக வழங்கலானது பொருத்தமற்ற எல்லைப்படுத்தப்படலால் உருவாகியுள்ளது. இதற்குக் காரணமான தரமற்ற உற்பத்தி தரத்தில் தேக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் விளைவாக மோட்டார்மயமாக்கப்பட்ட வாகனங்களுக்கு வருடாந்தம் 1-2 வீத பங்கு நட்டம் ஏற்படுகின்றது. புகையிரத சந்தைப் பங்கு நவீனமயமாக்கலின் குறைபாடு, போதுமான திறன் காணப்படாமை, வீதிப் போக்குவரத்துடனான குறைவான போட்டித்தன்மை என்பவற்றால் தேக்கம் பெற்றுள்ளது. பொருட் போக்குவரத்துகள் விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டும் பெரும்பாலும் தனியார் நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. வழங்கல் சங்கிலி அபிவிருத்தி செய்யப்படவில்லை. தேசிய மற்றும் சர்வதேச போக்குவரத்துகளில் திட்டத்தைச் செயல்படுத்துவதானது சிக்கல்களையும் குறைபாடுகளையும் கொண்டுள்ளது.

## 2. நெருக்கடியான பிரச்சினைகள், தாக்கங்கள், மற்றும் பிரச்சினைகள்

### 2.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

இலங்கையின் நிலைபேறான போக்குவரத்து முறைக்கு சவாலாக அமையும் நெருக்கடியான காரணிகள் இனங்காணப்பட்டு கலந்துரையாடப்பட்டுள்ளது.

#### 2.1.1 வேகமான மோட்டார்மயமாக்கல்

இலங்கையின் வீதி வலையமைப்புகளின் திறனானது வளர்ந்து வரும் வாகன வீதத்திற்கு நிலைபேறான அளவில் இல்லை. குறிப்பாக நகர்ப்புறங்களில் இந்நிலை காணப்படுகின்றது. அதிகளவான வரிகளின் மத்தியிலும் 200 பேருக்கு 1000 வாகனங்கள் என்றும், 2/3 பங்கினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு அல்லது முச்சக்கர வண்டி பாவனையாளர்கள் என்றும், புிய பதிவுகில் 8 வீத வளர்ச்சி வீதம் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. நடுத்தர வர்க்கத்தினரின் வளர்ச்சி மற்றும் தனியுரிமை வாகனமொன்றிற்கான தேவை என்பன இவ்வளர்ச்சியை அதிகப்படுத்துபவையாக உள்ளன. வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் இறக்குமதிக்கு வருடாந்தம் பொருளாதாரத்தின் 200 பில்லியன் ரூபாய் செலவிடப்படுவதோடு எண்ணெய் இறக்குமதிக்காக பொருளாதாரத்தின் 300 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்நிலைமை தனியார் போக்குவரத்தினை பொருளாதார ரீதியாக நிலைபேறற்றதாக மாற்றுகின்றது. அத்துடன் இவ்வளர்ச்சிக்கு அமைவாக வீதி முன்னேற்ற நடவடிக்கைளுக்காக அண்மைய ஆண்டுகளில் 200 பில்லியனிற்கும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குடிமக்களின் பொது போக்குவரத்திலான சார்புத்தன்மை அதிகரித்தாலும் பஸ் மற்றும் புகையிரத போக்குவரத்துக்கான நிதி ஒதுக்கீடு குறைவாக காணப்படுகின்றமையால் மக்கள் வேகமாக சொந்த வாகன உரிமையாளர்களாக மாறுகின்றனர். வாகன மற்றும் எரிபொருள் இறக்குமதியன் போதான வரிகள் நிலைபேறற்ற ஓர் சார்பினை நிதி நிர்வாகத்தில் தளம்பல் நிலையிலான வருவாயைக் கொண்டுள்ளது. தனிமனித வருவாய் அதிகரித்ததுடன் இரு மற்றும் முச்சக்கர வாகனங்களை கொள்வனவு செய்யும் வீதம் அதிகரித்துள்ளது. மேலும் இலாபகரமான வியாபாரமாக மாறிக்கொண்டு வரும் கவர்ச்சியயா கடன்தொகை திட்டங்கள் இச் செயற்பாட்டை மேலும் தூண்டியுள்ளது.

### 2.1.2 தரக்குறைவான நகர்புற இயக்கம்

சிறந்த தரமான போக்குவரத்து முறை காணப்படாமல் தனியார் வாகனங்களின் வளர்ச்சி அதிகரித்துச் செல்வதானது நகர்புற நெரிசலை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான நிலையில் உள்ளது. இது அனைத்து நகர்புறங்களிலும் நிலைபேறற்ற பொருளாதார வீழ்ச்சியை பிரதிபலித்துள்ளது. உதாரணமாக மேல் மாகாணம் தனது இயக்கத்துக்கான GDPயில் 12 வீதத்தை இழப்பதுடன் இதனைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலையிலுள்ளது. மேலும் இது 2020ம் ஆண்டளவில் 20 வீதமாக வளர்ச்சியடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. நகர்புற் பிரயாணங்களுக்கான கதவுக்கு கதவு இடைப்பட்ட வேகம் மணிக்கு 17கி.மீ. என்ற அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் பொதுசன் போக்குவரத்து மணிக்கு 12கி.மீ. எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வீதிப் பரப்பானது தரிப்பிட பரப்புடன் முறையாக ஒழுங்கமைக்கப்படவில்லை. இதனால் நடத்தலும் சைக்கிள் ஓட்டுவதும் கடினமானதாகவும் பாதுகாப்பற்றதாகவும் காணப்படுகின்றது. பொது சன போக்குவரத்து ஒவ்வொன்றுடனும் ஒருங்கிணைக்கபட்டிருக்காமலும் பாவிப்பதில் வசதியின்மையையும் கொண்டுள்ளது.

### 2.1.3 பொருட் திட்டமிடல் தரமின்மை மற்றும் வழங்கல் சங்கிலி நிர்வாகம்

கொள்வனவாளர் பொருட்களின் அனைத்து விதமான அசைவிற்கும் மற்றும் ஏற்றுமதி செயற்பாடிற்குமான வழங்கல் நிர்வாகம் பாரம்பரிய மற்றும் சொந்த முறைகளால் மேற்கொள்ளப்படுவதுடன் அவை வீணாக்கத்திற்கும், கால தாமதத்திற்கும், வாய்ப்புகள் தவறவிடப்படுவதற்கும் வழிவக்கின்றன. இவ்வாறான குறைபாடுகள் குறிப்பாக கிராமப்புறங்களின் விவசாய, சிறு கைத்தொழில் மற்றும் மீன்பிடியை இலாபமற்றதாகவும் நிலைபேறற்றதாகவும் மாற்றி வாழ்வாதாரத்தில் தாக்கத்தை செலுத்துகின்றன. சேமிப்பு, பைக்கற்றாக்கல், பெறுமதி சேர்த்தல் மற்றும் விநியோக்திற்கான நவீன வசதிகளையுடைய திட்டமிடல் மையங்கள் காணப்படுவதில்லை. பொருட்களின் போக்குவரத்திற்காக புகையிரதங்கள் பயன்படுத்தப்படுவதில்லை. உயர் அளவிலான செயற்பாடுகள் உள்ள சர்வதேச திட்டமிடலின்போது சில துறைமுகம் சார்ந்த பிரச்சினைகள் ஏற்றுமதிக்கான நேரத்தையும் செலவையும் நிலைபேறற்றதாக்குகின்றது. கொழும்புத் துறைமுகத்துக்கான மற்றும் துறைமுகத்திலிருந்தான நகரத்துக்குள்ளாலான பார ஊர்திகள் பயணம் போக்குவரத்து நெரிசலினால் நிலைபேறற்றதாகிறது. இதற்காக புகையிரதப் பாதைகள் உபயோகிக்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.1.4 வலயங்களுக்கிடையிலான போதிய இடைத்தொடர்பு இன்மை

இலங்கையின் பொருளாதாரம் 42 வீதமாக GDP யிற்கு பங்களிப்புச் செய்யும் மேல் மாகாணத்தையே சார்ந்துள்ளது. குடியேற்ற காலத்திலிருந்து மேல் மாகாணம் மையப் போக்குவரத்து நிலையமாகவும் திட்டமிடல் மையமாகவுமட காணப்பட்டபோது ஏனைய மாகாணங்கள் மற்றும் நகரங்கள் மேல் மாகாணத்துடன் சிறந்த இடைத்தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகவிருந்தது. தேசிய பாதை வலையமைப்புகள் அமைக்கப்பட்டு நூற்றாண்டுகள் ஆவதுடன் அவை மேலும் பாதுகாப்பானதாகவோ வேகமானதாகவோ காணப்படாது. இது கொழும்பை மையப்படுத்திய இடைத்தொடர்பை கொண்டிருப்பதுடன் உள்நாட்டு போக்குவரத்துக்குப் போதுமானதாக காணப்படவில்லை. அனைத்து மாகாணங்களையும் கொழும்புடன் இணைக்கும் அதிவேக வீதிக்கான அழுத்தம் காணப்படுகின்றது. இது பொருளாதாரத்தில் அதிக கடன் சுமையை ஏற்படுத்துவதுடன் மேல் மாகாணத்தில் அதிக நெரிசலை ஏற்படுத்தக்கூடிய நிலைபேறற்ற ஓர் திட்டமாகும்.

### 2.1.5 வீதி விபத்துகளின் அதிகரிப்பு

வீதி விபத்துகளினாலான இறப்புகள் அதிகரித்தவண்ணமுள்ளன. இவ்வாறான நிலைமைகளை கட்டுப்படுத்தக்கூடிய தரம் குறைவான கொள்கைகள் காணப்படுவதே இவற்றுக்கான காரணமாக அமைகின்றது. இது 3000 உயிர்களுக்காக பொருளாதாரத்தின் ஆண்டுதோருமான குறைந்தபட்ச ஒதுக்கீடு 40 பில்லியன் ரூபாய் ஆக காணப்படுகின்றது. இது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சி இரண்டிலும் நிலைபேறில்லாத் தன்மையைக் கொண்டுள்ளது. வாகனங்கள் மீதான அதிக வரியானது பாதுகாப்பான வாகனங்களை கொள்வனவு செய்வதிலிருந்து மக்களைத் தடுக்கிறது. இது பாதுகாப்புக் குறைவான வாகனங்களின் இறக்குமதிக்கு வழிவகுப்பதுடன், வீதியில் பாதுகாப்பிற்கான போதுமான வடிவமைப்புகள் காணப்படாமலும் பாதுகாப்பு நெறிமுறைகளுக்கான போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாமையினாலும் மேலும் பல காரணங்களாலும் உண்டாகின்றன.

### 2.1.6 சூழல் குறித்தான அக்கறை

உயர் வேக இயக்கமானது வளர்ந்துவரும் மிருதுவான சுற்றுச்சூழலை நிர்வகிப்பதில் நிலைபேறற்ற தன்மையை ஏற்படுத்துகின்றது. இயற்கை சூழலானது வளியின் தரம் குறைதல், வெள்ளம், மற்றும் கட்டுமானங்களினாலான நிலச்சரிவு மற்றும் குடியேற்றங்களின் விளைவு காரணமாக பாரிய அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளது. அதிக மட்டத்திலான ஒலி மாசு, வாகனங்களின் தரிப்புகளால் ஆக்கிரமிக்கப்படும் மக்களுக்கான இடப்பகுதி போன்றவை நகர்புற வாழ்வின் தரத்தை குறைக்கின்றன. ஆன்மீக செயற்பாடுகளுக்கான அமைதி, பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாத்துறை என்பன நகர்புறங்களில் நேரம் ஒதுக்கிடுவதை ஆபத்தானதாகவும் கவர்ச்சியற்றதாகவும் ஆக்கியுள்ளது. புறசகர் வீதிகள் பெரும்பாலும் போக்குவரத்து நெரிசலால் நிரம்புகின்றது. இது குடியேற்றவாசிகளின் வாழ்க்கைத் தரத்தைக் குறைப்பதுடன் குறிப்பாக குழந்தைகளுக்கு பாதையை பாதுகாப்பற்றதாக மாற்றுகின்றது. மேலும் வயதானவர்களை அசைவற்றதாக மாற்றுகின்றது. இது இலங்கையின் இயற்கைச் சிறப்புகளுக்கு முரணாக அமைவதுடன், சுத்தமான, அமைதியான மற்றும் பாதுகாப்பான சுற்றாடலுக்கான எதிர்பார்ப்பை சிதறடிக்கின்றது.

### 2.1.7 அசைய முடியாத மக்கள்

இலங்கையில் இயக்கத்துக்கான தெரிவுகள் அதிகரிக்கும் அதேவேளை ஊனமுற்றோர், முதியோர் மற்றும் சிறுவர்களுக்கான பொது வீதிகள் பயன்பாடு, பாதுகாப்பு மற்றும் வசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன குறைவடைந்துள்ளன. இது சமூக ரீதியாக நிலைபேறற்றது. மலிவான போக்குவரத்துச் சேவையின் குறைவானது குறிப்பாக கிராமப்புற மக்களுக்கான அடிப்படை சேவைகளான கல்வி மற்றும் சுகாதாரம் என்பனவற்றை அணுகுவதற்க கடினமாகவும் விலை அதிகமானதாகவும் ஆக்கியுள்ளது. தரமற்ற நிர்வாகம் மற்றும் பொதுப் போக்குவரத்தின் அதிக சனநெரிசல் என்பன பெண்களை வீட்டுடன் நிறுத்திவிடுவதுடன் அதிக பெறுமதியான மாற்றுவழிகளை நோக்கிச் செல்ல அவர்களைத் தூண்டுகின்றது.

### 2.1.8. அதிய வளப் பயன்பாடு

போக்குவரத்தானது இலங்கைப் பொருளாதாரத்துடன் இணைக்கப்படும் அதேவேளை வரையறுக்கப்பட்ட வளங்களின் நிலைபேறற்ற பாவனைக்கு இது வழியமைக்கின்றது. கடுமையான போக்குவரத்து கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நில ஆக்கிரமிப்பிலும், அடர்த்தியாக மக்கள் வாழும் நாடுகளின் வாழ்விடங்களிலும் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. கட்டுமான மூலப் பொருட்களான மணல் மற்றும் கற்பாறைகளின் சுரண்டலும் கேள்விக்குரியது. இலங்கை சக்திப் பரிமாற்றத்திறகாக நிலத்தடி சுவட்டு எரிபொருளையே உபயோகிக்கின்றது. இது இலங்கையின் போக்குவரத்துக்கான சக்திப் பாதுகாப்பை பாதிப்படையச் செய்கிறது. மேலும் நாடுபூராவுமான முச்சக்கரவண்டிகளின் அதிகரிப்பானது குறைந்த வெளியீட்டுடன் தொழிலாளர்களின் அதீத உறிஞ்லை விளைவாக்கியுள்ளது.

## 2.2 பாதிப்புகளுக்கான வாய்ப்புகள் மற்றும் பிரச்சினைகளின் விளைவுகள்

தற்போதைய இலங்கையின் தனிமனித வருமானம் அண்ணளவாக 4000 அமெ. டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கை ஒரு குறைவான வருமானமுள்ள நடுத்தர நாடாகும். அதாவது அதிகளவான குடும்பங்கள் இயக்கம், பொருட்களின் உபயோகம் போன்றவற்றிற்கு அதிக கோரிக்கைகளைக் கொண்டுள்ளனர். போதுமான இயக்கத்தை வழங்க முடியாத நிலைமையின் போது இலங்கை அபிவிருத்தியடைந்த வாழ்க்கைமுறையின் பாதிப்பு மேலதிக முன்கேற்றத்திற்கு தடையாக அமையக்கூடிய ஒரு வலையில் விழக்கூடிய சாத்தியம் ஏற்படுகிறது. இது பின்வரும் எளிய உதாரணத்தின் மூலம் விளக்கப்படலாம். வருமானம் அதிகரிக்கும் போது மோட்டார்மயமாக்கம் விளைவாகிறது, வெளியார்ந்த நெரிசல் அதிகரிக்கும்போது மேலதிக பொருளாதார வளர்ச்சிக்கு கட்டணங்கள் ஓர் தடையாக அமையும்.

### 2.2.1 பொருளாதார பாதிப்புகள்

போக்குவரத்தானது பொருளாதாரத்திற்கு பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் ஒரு துறையாக நோக்கப்பட வேண்டும். இத்துறை அதிக கட்டணத்தை அறவிடுமாயின், பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடையலாம். நகர்புறங்களில் ஏற்படும் நெரிசல் காரணமாக பொருனாதாரத்தில் பிரயோகிக்கப்படும் உந்தமானது மேல்மாகாணத்தின் GDPயின் 2020ம் ஆண்டளிவிலான இயக்க செலவினம் 20 வீத வளர்ச்சியைக் காட்டுவதால் தடைப்பட்டுக் கொண்டிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. தரமற்ற வழங்கல் சங்கிலி நிர்வாகம் மற்றும் பொருட் போக்குவரத்தின் திறன் குறைபாடு என்பவை பின்தங்கிய சமூகத்தின் குறிப்பாக விவசாய, மீன்பிடி மற்றும் சிறுகைத்தொழில் பொருளாதார வளர்ச்சியை தடைப்படுத்தும். பொதுசன போக்குவரத்து வாகனங்களின் குறைவான பயன்பாடு மற்றும் முச்சக்கர வண்டிகள் போக்குவரத்துக்கான செலவினத்தை அதிகரிப்பதுடன் இதன் விளைவாக வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கின்றது. விபத்துகளின் தாக்கங்கள் மற்றும் சூழல் தாக்கங்கள் என்பனவும் வருடாந்தம் 100 பில்லியன் ரூபாவாக கணக்கிட்பட்டுள்ளது. போக்குவரத்து சேவை நேரடியாக குறைந்தது மில்லியன் மக்களுக்கு தொழில்வாய்ப்பை ஏற்படுத்துமாயின் அது போதுமான ஆக்கவளம் கொண்டதல்ல. இலங்கை போக்கவரத்து சாதனங்களின் உற்பத்தி மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதியை மேற்கொள்வதை விடுத்து தனது சொந்த பாவனைக்காக இறக்குமதி செய்வதில் தங்கியிருப்பதை தொடர்கிறது.

### 2.2.2 நகர்புற வாழ்க்கை தரத்தில் உள்ள தாக்கங்கள்

உலக நாடுகளைப் போலவே இலங்கையிலும் நகர்புற குடிசனம் அதிபரிதத்துக் கொண்டே செல்கின்றது. நகர்ப்புற பகுதிகளை முதலீடு, சுற்றுலா, உற்பத்தி, வேலை வாய்ப்பு, மற்றும் வதிவிடங்களுக்காக கவர்ச்சிகரமானதாக மாற்றுவதற்கு நகர்ப்புற தரமான வாழ்க்கை அவசியமாகிறது. இலங்கை நகரங்கள் அதிகரிக்கும் போக்குவரத்து நெரிசல், நகர்ப்புற தரம்குறைந்த போக்குவரத்து முறைகள், தரமற்ற நடை பயண வசதி, சத்தம் மற்றும் திறந்த வெளிகளுக்கான அணுகல் மற்றும் போக்குவரத்தின் பாதுகாப்பு மற்றும் கவனம் போன்றவற்றால் அவதியுறுகின்றது. இலங்கையில் பொருளாதார ரீதியாக போட்டியுள்ள மற்றும் வாழத்தகுந்த நகரங்களை உருவாக்க முடியாமல் போனது தேசிய முன்னேற்றத்தின் பாரிய தடையாக கருதப்படுகினறது.

### 2.2.3 கிராமப்புற வாழ்கைத்தரத்தில் உள்ள பாதிப்புகள்

பெரும்பாலான இலங்கையர்கள் இன்றளவிலும் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றனர். இலங்கையர்கள் தமக்கான அடிப்படை சேவகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறும் பொருளாதாரத்திற்கு பயனுள்ள செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவாறுமான ஓர் இடத்தில் இருப்பைதையே விரும்புகின்றனர். இலங்கையில் விரிவான கிராமப்புற வீதி வலையமைப்புகள் காணப்பட்ட போதிலும், தரக்குறைவான பொதுசன போக்குவரத்து, குறைவான பராமரிப்புள்ள வீதிகள் காணப்பட்டு இச்சேவையகளை அடைவதில் சிரமம் இருந்தபோதிலும் சரியே. மேலும் கிராமப்புற உற்பத்திகளை கையாள்வதற்கான பொருத்தமான வழங்கல் சங்கிலி மற்றும் திட்டமிடல் முறைகள் காணப்படாமல் இருப்பது கிராமப்புற பொருளாதாரத்தை வளர்க்கச் செய்வதற்கான போதுமான வாய்ப்புகளை அளிப்பதில்லை. சேவைகளுக்கான அணுகலுக்கான வழியின் குறைபாடு பொருளாதாரத்தின் குறைவான வெளியீட்டைக் காட்டுவதுடன் கிராமப்புறங்களில் இருந்தான மக்களின் நகர்புறத்துக்கான அதிக இடம்பெயர்வுக்கு வழிவகுக்கின்றது.

### 2.2.4 சூழல் பாதிப்புகள்

இலங்கையின் சுற்றுச்சூழலானது உயிரியல் பாகுபாட்டு முறையில் சிறந்து விளங்குவதுடன் அதன் பௌதீக வசதிகளான வளர்ச்சி பெற்ற சூழல் பாரம்பரியங்களானது சூழல் பாதுகாப்பை மிக முக்கியமாக்குகின்றது. உயர் மக்கள் அடர்த்தியுடன் பெரிய அளவிலான போக்குவரத்து திட்டங்கக்களுக்கான நில ஆக்கிரமிப்புகள் பூரணமாக நியாயப்படுத்தப்படுவதுடன் அதிலிருந்தான தாக்கங்கள் முடிந்தளவு குறைக்கப்பட வேண்டும். இவற்றின் மீதாகன தாக்கங்கள் பெரிதும் உணரப்படுவது பாதிப்புடைய சமூக குழுக்களாலாகும். போக்குவரத்தானது அமைதியான சூழலில் அதன் சத்தமின்மை, பார்வை அழகியல் போன்றவற்றில் தாக்கத்தை செலுத்தி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாராட்டுதலில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை தனது போக்குவரத்துத் தேவைகளுக்காக புதுப்பிக்கப்பட முடியாத எரிபொருட்களின் இறக்குமதியிலேயே முற்றாக இதுவரை தங்கியுள்ளது. ஒரு குறிப்பிட்ட பங்குதாரரிடமிருந்து இலங்கையின் எரிபொருள் இறக்குமதிக்கான தற்போதைய விலைப்பட்டியல் மீதி 600 பில்லியனிற்கும் அதிகமான ரூபாவாக காணப்படுகின்றது. தொடர்ச்சியான உலகளாவிய எண்ணெய் வழங்கலின் நிச்சயமற்ற தன்மை காரணமாக சக்திப் பாதுகாப்பு மற்றும் புதுப்பிக்கப்படக் கூடிய எரிபொருட்கள் மீது கவனம் செலுத்துவது அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3 தீர்வுகள், அளவீடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

இப்பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்காக ஓர் கொள்கையின் அறிமுகப்படுத்தல்:

### 2.3.1 அணுகலை மேம்படுத்துவதுடன் இயக்கத்தை அனைவருக்கும் ஈடுகொடுக்கக் கூடியவாறு மாற்றுதல்

வாய்ப்புகளுக்கான அணுகலானது தனிமனித மற்றும் சமூகத்தின் சமூக-பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையாகும். வர்த்தகத்திற்கான அணுகல் மற்றும் தொழில்வாய்ப்புகளுக்கான அணுகல், சுகாதாரம் மற்றும் கல்வி என்பன அடிப்படை உரிமைகளாக நோக்கப்பட வேண்டி இருப்பதுடன் நாடுபூராகவும் ஒரேயளவான முறையில் தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். 2020ம் ஆண்டளவில் விசேட கவனங்கள் 1) சிறுவர்கள், பெண்கள், வயதானவர்கள், மற்றும் ஊனமுற்றோருக்கான அணுகலினை முன்னேற்றல்: 2)பின்தங்கிய சமூகம்: 3) மற்றும் வசதி குறைந்தோர் போன்றன மீது அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

போதுமான அணுகலின்மையால் எந்தவொரு சமூகமும் பாதிப்படைவதில்லை என்பதை உறுதி செய்வதற்கான ஓர் அரசாங்க இயக்க மதிப்பீடு 2019ம் ஆண்டு இறுதியளவில் போக்குவரத்து அமைச்சு மற்றும் மாகாண சபைகளினாலும் செய்து முடிக்கப்படவுள்ளது. 2030ம் ஆண்டளவில் பொருத்தான பொது போக்குவரத்து தீர்வுகள் அமைக்கப்படுவதுடன் அவ்வாறான சேவை வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். இது பொது போக்குவரத்து சேவைக்கான பொருத்தமான செலவு ஈட்டு திட்டத்தின் மூலம் பொருளாதார நிலைபேற்றுத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். இச்சேவை கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்கான கட்டமைப்புகளையும் விசேட அம்சங்களைக் கொண்ட வாகனங்களை அதிகரித்தல் என்ற தேவைகளை எதிர்பார்த்தவையாக உள்ளன.

### 2.3.2. உயிர்களைப் பாதுகாத்தல்

போக்குவரத்தின் போது சமூகத்திற்கான உயர் கவனம் மற்றும் பாதுகாப்பு சமூகத்தின் அடிப்படை உரிவமயாக நோக்கப்பட வேண்டும். குறிப்பாக மரணம் மற்றும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் விபத்துகள் குறித்து பூரண ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வாறான விபத்துகள் மீண்டும் நடைபெறாது இருக்க வழிசெய்தல் வேண்டும். வாகனங்களின் வடிவமைப்பிலும் கட்டமைப்பிலும் முன்னேற்றங்களை ஏற்படுத்தல், செயற்பாடுகள், பயிற்சிகள், விதிமுறைகள், கண்காணிப்பு மற்றும் பலப்படுத்தலின் மூலம் 2030ம் ஆண்டளவில் போக்குவரத்து மரணங்களை முற்றாக தடை செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2018ன் முடிவிற்கு முன்னால் அரசாங்கம் வீதி விபத்துகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி வழங்கும் முறையொன்றுக்கான உறுதியான மற்றும் தனித்துவமான நிறுவனமொன்றினை தனியார் துறை பங்களிப்புடன் நிறுவுதல் வேண்டும். அத்துடன் வேறுபட்ட போக்குவரத்து முகவர்களுக்கு மத்தியில் இக்கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதையும் உறுதி செய்துகொள்ளல் அவசியமாகிறது. போக்குவரத்துத் துறைக்கான பிரதான நிதி ஒதுக்கீட்டின் 5 வீதமானது போக்குவரத்து பாதுகாப்பு முன்னேற்றத்திற்காக 2020ம் ஆண்டு முதல் உபயோகிக்கப்பட வேண்டும்.

### 2.3.3 நிலைபேறான பௌதீக சுற்றாடலை உருவாக்கல்

நிலைபேறான மற்றும் வாழ்விற்குப் பொருத்தமான பௌதீக சுற்றாடலை உருவாக்கும் முகமாக, போக்குவரத்தின் மூலமான சமூகத்திற்கான எதிர்மறையான விளைவுகளை குறைப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமான மற்றும் பாதுகாப்பான மக்கள் பகுதி, அதிக நெரிசலிலிருந்தான பாதுகாப்பு, சத்தம், தூசு மற்றும் மாசு போன்றவற்றின் மீது அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும். 2025ம் ஆண்டளவில் 100,000ற்கு மேற்பட்ட பகல்நேர குடித்தொகையை கொண்டுள்ள நகரங்களுக்கான போக்குவரத்து மற்றும் நெரிசல் குறித்தான திட்டமொன்று உருவாக்கப்படும். இத்திட்டம் போதுமான நடைபாதை வசதி, சைக்கிளோட்ட வசதி மற்றும் பலதரப்பட்ட போக்கவரத்து முனைய மாதிரியைக் கொண்ட பொது போக்குவரத்து முறைகள், அத்துடன் நெரிசலின் அளவைக் கட்டுப்படுத்தல் மற்றும் வீதிக்குள் மற்றும் வீதிக்கு வெளியிலான நிலைபேறான அளவிலான தரிப்பிட வசதியைக் கொண்டு நகரத்தின் கலாச்சார குணாதிசயங்களை காப்பது குறித்தும் திட்டங்களைக் கொண்டிருக்கம். நடைபாதை வசதியானது சுகாதார நிலையை உறுதி செய்வதுடன் தொற்றா நோய்களளின் கட்டுப்பாட்டிற்கும் உதவும். வீதி மற்றும் புகையிரதப் பாதைகளின் கட்டுமானங்கள் ஊரின் அழகியல் மற்றும் பாரம்பரியத்தை பாதிக்கும் வகையிலுள்ள இடங்களில் அச்செயற்பாடுக்ள ஊக்குவிக்கப்படாமல் இருக்கும். மேலும் இவை எதிர்மறையான நகர்புற வெளிகளை உருவாக்கும். கிராமப்புற வீதி முகப்பு மற்றும் கட்டமைப்புகளை மேற்கொள்ளும்போது அங்கு வாழும் மக்களின் சுற்றாடல் தரம் பாதிப்படையாத வகையில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். 2020ம் ஆண்டு முடிவதற்குள் அரசு புதிய கட்டுமான வேலைகளில் நெரிசலின் விளைவு குறித்தான அறிக்கை கட்டாயமாக்கப்படவுள்ளதுடன் நகர வீதிகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலைளில் நெரிசல் குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. பொது போக்குவரத்து முன்னேற்றமானது நகர்புறங்களில் 2020 இற்குப் பின்னான குடியேற்றங்களை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டது.

### 2.3.4 இயற்கைச் சூழலைப் பாதுகாத்தல்

மென்மையான சுற்றுச்சூழலின் நிலைபேறிற்கு போக்குவரத்து பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது. சட்ட ரீதியாக வழங்கப்படும் சூழல் மதிப்பீடானது தொடரக்கூடிய தாக்கங்கள் மற்றும் குறைப்பதற்கான வழிகள் தொடர்பான ஆய்வைத் தரும். இம்முறை மேலும் விரிவாக்கப்பட்டு அனைத்து மாற்றுவழி போக்குவரத்து கட்டமைப்பு, தொழில்நுட்பங்கள், முறைகள் மற்றும் வடிவமைப்புக்ள குறித்தான முழு விபரத்தையும் தரக்கூடியதாக மேம்படுத்தப்படும். இதன் மூலம் மாற்று போக்குவரத்து முறைகளில் இயற்கை சூழலுக்கு குறைவான பாதிப்பை கொண்டிருப்பதற்கு அதிக வரவேற்பு அளிக்கப்படுவது உறுதி செய்யப்படும். இவ்வாறான கருத்தில் கொள்ளப்பட்ட விடயங்கள் மூலம் அச்செயற்பாட்டினால் மற்றும் ஒப்பீட்டினால் சூழலில் உருவாகும் பாதிப்புகள் வாழ்வாதார செலவினங்களின் உள்ளடங்கலுடன் கவனத்தில் கொள்ளப்படும். 2020 முதல் விசேட கவனங்கள் 1)பௌதீக வளங்களின் பாவனை 2) பயனாளிகளின் எண்ணிக்கை 3)2030ம் ஆண்டளவில் போக்குவரத்திற்காக குறைந்தது 50 வீதமான புதுப்பிக்கப்படக்கூடிய சக்தி வளத்தை அடைதல் 4) முன்வைக்கப்பட்ட திட்டத்தின் சூழல் தாக்கங்கள் மற்றும் அதன் மாற்றுவழிகளின் சூழல் தாக்கங்களும் அதே நேரத்தில் அதிகபடியான போக்குவரத்து நடவடிக்கை அதிக வாகன கி.மீ மற்றும் அதிகரித்த எரிபொருள் பாவனைகள் போன்றவற்றின் மீது செலுத்தப்படும்.

### 2.3.5 தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தொடர்புகளை ஏற்படுத்தல்.

போக்குவரத்து மற்றும் திட்டமிடல்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் விரிவுபடுத்துவது நிலைபேறான பொருளாதார நடவடிக்கை, சமூக மற்றும் கலாச்சார முன்னேற்றத்தின் அடிப்படை முன் நிபந்தனையாகும். சிறப்பான முறையில் அமையப் பெற்ற திட்டமிடல் மையங்கள் மற்றும் சந்தைகளின் மூலம் உள்நாட்டு உற்பத்திகள் மற்றும் கொள்வனவுகளை ஊக்கப்படுத்தும் போக்குரவத்து, திட்டமிடல் சேவைகளின் திறனான முன்னேற்றத்திற்காக விசேட கவனம் வழங்கப்படும். இவ்வாறான திட்டமிடல் வலையமைப்புகள் 2020ம் ஆண்டு முதற்கொண்டு வழங்கல் நிர்வாக சங்கிலியின் காலதாமதத்தை குறைத்தல், வீணாதல் மற்றும் பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகள் தவறவிடப்படுதல் போன்றவற்றைக் குறைத்து அதன் திறனை அதிகரிப்பதன் மூலம் பலதரப்பட்ட போக்குவரத்து முறைகளை ஒன்றிணைத்து அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். நகரங்களுக்கிடைப்பட்ட மற்றும் வலயங்களுக்கிடைப்பட்ட போக்குவரத்துச் சேவைகள் பயனர்களின் முறைகளுக்கான தெரிவு மற்றும் பலதரப்பட்ட போக்குவரத்து முறைகளின் முனைவுகளில் வசதியான முகைளுக்கிடைப்பட்ட ஒருங்கிணைவு எனபவற்றுடன் அபிவிருத்தி செய்யப்படும். இதற்கமைய உள்நாட்டு வான்வழிப் போக்குவரத்தானது அனைவருக்குமான திறந்த அணுகலை 2018ம் ஆண்டில் வழங்கும். சர்வதேச போக்குவரத்துக்கான நுழைவாயில்களான விமானநிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் தேவைகள் மற்றும் சந்தை நிலவரங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மேம்படுத்தப்பட்ட திறன் அளிக்கப்படும். இதற்காக உயர் நிலையிலுள்ள தொழில்நுட்பம் மற்றும் நவீனமயமாக்கம் உபயோகப்படுத்தப்படுவதன் மூலம் இலங்கைக்கு அல்லது இலங்கையிலிருந்தான பிரயாணங்களை ஆற்றலுடையதாகவும் வசதியானதாகவும் உறுதி செய்யப்படுவதுடன் உள்ளார்ந்த போக்குவரத்து வலையமைப்புகள் குறிப்பாக புகையிரதப் பாதைகள் முழுமையாக ஒருங்கணைக்கப்பட்டிருப்பதும் உறுதி செய்யப்படும். 2018ன் முடிவிற்கு முன் இலங்கை அரசாங்கம் 1) உள்நாட்டு வானவழிப் போக்குவரத்து 2)சர்வதேச வான் பயணங்களை முன்னேற்றல் 3)ஏற்றுமதி வசதிகளை முன்னேற்றுதல் மற்றும் துறைமுக முன்னேற்றம் என்பவற்றில் அபிவிருத்தியை ஏற்படுத்த உத்தேசித்துள்ளது.

**2.3.6 வேலை வாய்ப்புகளை பூர்த்தியானதாகவும் ஆக்கவளம் கொண்டதாகவும் மாற்றுதல்**

போக்குவரத்துத் துறை குறைந்தது ஒரு மில்லியன் மக்கள் தொகைக்கு நேரடி வேலை வாய்ப்பை வழங்குகின்றது. இவர்களில் பெரும்பாலானோர் சாரதிகள்,பாரம் ஏற்றுபவர்கள், சுத்தம் செய்பவர்கள், வாகனம் திருத்துபவர்கள், நடத்துனர்கள், ஊழியர்கள் என முறைசாரா வேலைகளில் உள்ளனர். அவர்களின் வேலை நிபந்தனைகள் வசதி குறைவானதாகவும் பெரும்பாலும் EPF/ETF மற்றும் பணிக்கொடை போன்ற சமூக தொகை பாதுகாப்பு அற்றவர்களாக காணப்படுகின்றனர். ஈக்கவளமும் குறைந்ததாகவே காணப்படுகின்றது. மேலும் பௌதீக சுற்றாடலும் பொதுவாக வேலை செய்வதற்கு உகந்ததாக காணப்படுவதில்லை. மேலும் ஆபத்துகளின் போதான பாதிப்புகள் அதிகமாக காணப்படுகின்றன. இவ்வாறான வேலைகளை அரசாங்கம் முறைப்படுத்த வேண்டியுள்ளதுடன், முறையான வேலை வரைமுறைகளை உருவாக்குதல் வேண்டும். இது அனைத்து ஊழியர்களினதுடம் பாதுகாப்பை . உறுதி செய்வதற்காக ஆபத்துகளின்போது தானியக்க முறையில் செயற்படுதல் போன்றவற்றை உள்ளடக்கும். இது 2030ம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்தப்படும். 2020 முதல் போக்குவரத்து துறை பொருளாதாரத்தின் இயக்கியாக மாற்றம் பெற வழிவகைகள் செய்யப்பட வேண்டும். இது இறக்குமதியில் தீவிரமாகத் தங்கியிருப்பதை விடுத்து உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட போக்குவரத்து சம்பந்தப்பட்ட உத்திகளுக்கு ஊக்கமளிப்பதன் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும்.

## 2.4 தீர்வுகள், அளவீடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

வேறுபட்ட வகையான பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தாக்கங்களை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட வேறுபட்ட வகையான ஆறு உத்திகள் குழுக்களாக்கப்பட்டு கீழே கலந்துரையாடப்பட்டுள்ளது.

### 2.4.1 மோட்டார்மயமாதலை நிர்வகித்தல்

வேகமான மோட்டார்மயமாக்கமானது பொருளாதாரம், நகர வாழ்வியல் மற்றும் சூழலை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்கால மோட்டார்மயமாக்கத்தின் நிர்வாகத்தை தீவிரமாக்குதல் குறிப்பாக நகர்புற போக்குவரத்து நெரிசலின் அளவை கட்டுப்படுத்தல்.

- வாகன இறக்குமதியன் போதான வரியினை பாதை உபயோகத்திற்கான வரியாக மாற்றுதல் மற்றும் அதன் பொருளாதார போட்டித் தன்மையை போக்குவரத்து நெரிசல் கட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ள நகர்புறங்களில் இக்கட்டணங்கள் இலத்திரனியல் முறைமையாக அறவிடுதல் மூலமாக செயற்படுத்தல்.

- எரிபொருட்களின் வித்தியாசான விலை மாற்றங்களை தொடராது இருத்தல்.

### 2.4.2 பஸ் போக்குவரத்தை இயக்கத்தின் முதுகுத் தண்டாக மாற்றுதல்

அடர்ந்த மக்கள் தொகையைக் கொண்ட நாடுகளில் பஸ் போக்குவரத்துச் சேவையை முன்னேற்றுவதானது அதிக செலவானதும் அதிக உத்திகளுடன் மேற்கொள்ளப்பட வேண்டிய ஓர் செயற்பாடாகவும் உள்ளது. சிதறிக் காணப்படும் குடியேற்றங்களாலும், மோசமான போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்துவதற்காகவும் பாதை வெளி தழறம்பட பயன்படுத்தப்படுவது இநநிலைமை உண்டாகக் காரணமாக அமைகின்றது.

- கண்டி பிரதேசத்தில் மேற்கொள்ள்ப்பட்ட சஹசர வேலைத்திட்டத்தின் முடிவுகளிற்கு அமைய, அரசாங்கம் 3 மாதகால அவகாசத்தினுள் பஸ் சேவையின் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைவதற்கான ஓர் திட்டத்தை உருவாக்கும். இது 1) வீதியின் மேலதிக போட்டித்தன்மையை கட்டுப்படுத்தல் 2) இ.போ.ச மற்றும் தனியார் பஸ் சேவைகளின் முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு நிர்வாகம் 3) பஸ்களை நவீனமயமாக்கல், கட்டுப்படுத்தல், டிக்கெட் வழங்கும் முறை, தகவல் முறை மற்றும் ஏனைய துணைக் கட்டமைப்புகள் 4) தொடர்ச்சியான உயர் தரமான பஸ் போக்குவரத்தை உறுதி செய்வதற்கான உறுதியான கட்டுப்பாட்டு நிறுவனங்களை 2020ம் ஆண்டளவில் உருவாக்கல் போன்ற கொள்கைகளை உள்ளடக்கியிருக்கும்.

### 2.4.3 புகையிரதத்தின் சிறப்புப் பயனை அடைதல்

புகையிரதப் பாதைகளின் அபிவிருத்தியானது இலங்கையின் நீண்டகால போக்குவரத்து தீர்வுக்கு சாத்தியமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்மூலம் உயர் திறனும், குறைவான வெளியார்ந்த மற்றும் சூழல் தாக்கங்களும் ஏற்படுகின்றன.

- முறையான புகையிரத வலையமைப்பின் அபிவிருத்தியினை அமுல்படுத்துவதன் மூலம் 2030ம் ஆண்டளவில் பயணிகள் மற்றும் பொருடகளுக்கான போட்டிகரமான நவீன போக்குவரத்து தெரிவாக இதனை மாற்றியமைக்கலாம்.

- புகையிரதப் போக்குவரத்தின் முக்கிய போட்டிகரமான பகுதிகளான 1)நகர்புற பயணிகள் 2) நெடுந்தூர கடுகதி பயணிகள் 3) மொத்த நெடுந்தூர பொருட் போக்றுவரத்து சந்தைகள் மீது கவனத்தை செலுத்தல்.

- 2020இல் 1)முழு நாட்டையும் இணைக்கும் வகையில் புகையிரத வலையமைப்பை அபிவிருத்தி செய்து நீண்டகால இயக்கத் தேவைகளான கண்டி, ஊவா, மேல் மற்றும் சபரகமுவ மாகாங்களுக்கான புகையிரதப் பாதை விரிவு போன்றவற்றிற்கான போக்குவரத்திற்கு மாற்று முறையொன்றாக உபயோகித்தல் 2)மின்சாரம் மற்றும் ஏனைய கட்டமைப்பு முன்னேற்றங்களின் மூலம் நம்பகத்தனமையையும் பிரயாண வேகத்தையும் அதிகரித்தல் 3)இலத்திரரனியல் டிக்கட் வழங்கல், குளிரூட்டல், முன்னேற்றப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையங்கள், பஸ் மற்றும் முச்சக்கர வண்டிகளுடனான ஒருங்கிணைந்த சேவை, தரிப்பு மற்றும் ஓட்டுதல் வசதி போன்றவற்றின் மூலம் வாடிக்கையார் சேவையை நவீனமயப்படுத்தல் 4)முன்னேற்றப்பட்ட பொருட் போக்குவரத்து குறிப்பாக அதிக அளவான நெடுந்தூர பொருட் போக்குவரத்து 5) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைகளுடனான இணைவு 6) ஏழ்மையானவர்களுக்கு பொருத்தமா வகையிலும் சந்தை பெறுமானங்களுக்கு ஏற்ற வகையிலும் விலைகளை திருத்தியமைத்தல் 7)வாஎக்கையாளர் சேவையின் உள்ளார்ந்த நிர்வாக நடவடிக்கையையும் தரத்தையும் அபிவிருத்தி செய்தல் போன்றவற்றிற்காக நிதி ஒதுக்கிடுவதற்கு வலியுறுத்தல்

### 2.4.4 செலவு குறைந்த நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளை நிர்மாணித்தல்

- இலங்கையானது அடர்ந்த வீதிகளைக் கொண்டது. அதன் எதிர்கால வீதி நிர்மாண நடவடிக்கையானது பலதரப்பட்ட போக்குவரத்து முறைகளின் வலையமைப்பிற்கு உட்பட்டு சிறந்த முறையில் தொடர்புபட்டதாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

- மேற்கூறப்பட்ட பலதரப்பட்ட போக்குவரத்து முறைகளின் முன்னேற்ற உத்திகளின் ஓர் அங்கமாக 2018ம் ஆண்டின் முடிவிற்கு முன்னதாக 10 வருட தேசிய வீதி அபிவிருத்தி திட்டமொன்றை உருவாக்குதல்.

- இவ்வாறான திட்டம் முக்கியாமான வலியுறுத்தல்களை 1)தற்போதுள்ள வீதி வலையமைப்புகளின் பயன்பாடு மற்றும் நிர்வாகத்தை முன்னேற்றல் 2) பலதரப்பட்ட போக்குவரத்து முறைகளின் முன்னேற்ற உத்திகளின் ஓர் அங்கமாக புதிய பாதைகளுக்கான திட்டமிடலானது வர்த்தக நகரங்களுக்கிடையிலான வேகான தொடர்பை ஏற்படுத்தும் 3) பஸ் போக்குவரத்து சேவைகளுக்காக இடைவெளியை வீதியில் முக்கியமாக்குவதுடன் பலதரப்பட்ட முறைகளின் செயற்படுத்தலுக்கான போதிய இடைவெளி காணப்படுவதை உறுதி செய்தல் 4) வீதி பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் 2030ம் ஆண்டளவில் பூச்சியப் பார்வை நோக்கத்தை அடைதல் 5)நகர்புற வீதிகளில் தேசிய பாதைகளில் வீதித் தரிப்பினை நீக்குதல் அல்லது தடை செய்தல் குறித்தான விதிமுறைகளை உண்டாக்கல் 6)வீதி கட்டுமானம் மற்றும் உபயோகத்தின் போதான சூழல் பாதிப்புகளை குறைப்பதற்கான நடவள்க்கை எடுத்தல் 7) தேசிய பாதைகளை சூழவுள்ள வாழ்வியல் மற்றும் பௌதிக சூழலின் தரத்தை பராமரித்தல் 8)முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக மாற்று வழிகளுடனான ஒப்பீடுகள் முழுமையாக தொழில்ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உறுதி செய்யப்படுதல் 9) பேரழிவுகளில் இருந்து மீளும் திறன் 10) நகரங்களின் தரத்தில் எவ்விதமான பாதகமான தாக்கங்கம் இல்லை என்பதை உறுதி செய்துகொள்ளல் மற்றும் 11) புதிய வீதிகள் திட்டமிடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பங்குதாரர்களுடனான ஆலோசனை அளவீட்டுகளை உடபடுத்திக் கொள்ளல் போன்றவறில் ஏற்படுத்தும்.

### 2.4.5 தடையற்ற இயக்கத்தை வழங்கல்

பாவனையாளர்களுக்கு இயக்கம் தேவைப்படுவதுடன் அதற்கான வழிமுறை இரண்டாம் பட்சமாக உள்ளது. ஆகவே, ஒரு பலதரப்பட்ட போக்குவரத்து வலையமைப்பு மற்றும் அவற்றிற்கிடைப்பட்ட தடையற்ற ஒருங்கிணைப்பானது நாட்டின், வலயத்தின் மற்றும் நகர்புறங்களுக்குள் பாரிய நிலைபேறான ஓர் அபிவிருத்தியாக 2030ம் ஆண்டில் காணப்படும்.

- பலதரப்பட்ட போக்குவரத்து முறையின் அபிவிருத்தியின் அமைப்பில் போக்குவரத்து கட்டமைப்பு அபிவிருத்தியைச் செய்வதுடன் அதன் செயற்பாடுகளை தேசிய, வலய மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-CM 27932

நகரங்களுக்கிடையில் அமுலாக்கல். முக்கியமான வலியுறுத்தல்கள் 1) பலதரப்பட்ட போக்குவரத்து முறையின் முன்னேற்றமானது நகரங்களிலும் நகர்புறங்களிலும் தரிப்பிட மற்றும் ஓட்டுமான வசதிகள் அடங்கலாக முன்னெடுக்கப்படல் 2) வேறுபட்ட முறைகள் மற்றும் செயற்படுத்துவோருக்கிடையில் இலத்திரனியல் டிக்கட் வழங்கல் முறைகள் 3) அவ்வாறான வசதிகளை முன்னேற்றும் நோக்கில் தனியார் துறைகளுடனான கூட்டை அபிவிருத்தி செய்தல் 4) உடனுக்குடனான நடவடிக்கைகளின் கட்டுப்பாட்டு மையத்தினை தடுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்காக நிறுவுதல் 5) பயணியருக்கான உடனுக்குடனான தகவல்களை சுற்றுலா திட்டமிடலுக்காகவும் முடிவுகளை எடுப்பதற்காகவும் வழங்கல். 6) பயணிகள் பிரயாணத்தை பிற்சேர்த்துக் கொள்ளவும் தொடர்புகளை வழங்கவும் பிரயாணத் துறையுடன் இணைவை ஏற்படுத்தல். 7) இவ்வாறான கட்டமைப்பை தேசிய ரீதியில் நிர்வகிக்கக் கூடிய உறுதியானதொரு நிறுவனத்தை ஏற்பத்தல் போன்வற்றிற்கு வழங்கப்படும்.

### 2.4.6 சிறந்த வழங்கல் சங்கிலி மற்றும் திட்டமிடல் மையங்களை உருவாக்கல்

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான பொருட்களின் அசைவிற்கான தரமற்ற வழங்கல் சங்கிலி மற்றுமு் பொருத்தமான திட்டமிடலின்மை என்பன பொருளாதாரத்கைக் கட்டுப்படுத்தியுள்ளது. இத் திறமின்றிய நிலை 2020 முதலான தேசிய போக்குவரத்து மற்றும் திட்டமிடல் திட்டத்தின் தொடர்ச்சியான தலையீட்டின் மூலம் இல்லாமலாக்கபடும்.

முக்கியமான வலியுறுத்தல்கள் 1)விவசாயம், மீன்பிடி மற்றும் சிறு கைத்தொழில் போன்ற வித்தியாசமான வேறுபட்ட கிராமப்புற உற்பத்திகளுக்காக வழங்கல் சங்கிலி நிர்வாகத்தை கற்றல் 2) திட்டமிடல் மையங்கள், சேமிப்பு இடங்கள், பெறுமதி சேர்க்கும் வசதிகள், பொதி செய்தல் மற்றும் கையாள்தல் போன்றவற்றின் அபிவிருத்தியை வசதியாக்கல். இது வீணாதல் மற்றும் பாதிப்படைதலைக் குறைத்து சந்தைகளுக்கான உயர் தரமகன பொருட்களை விநியோகித்து அதிக வருவாயைப் பெற உதவும். 3) உற்பத்தியாளர்களுக்கும் கொள்வனவாளர்களுக்குமான வழங்கல் சங்கிலி தகவல் பரப்பு முறை 4) அவ்வாறான வசதிகளை ஏற்படுத்துவதற்கான தனியார் பங்களிப்பு மற்றும் 5) நீர் மற்றும் ஆகாய வழிப் போக்குவரத்துக்கான சர்வதேச நுழைவாயிலை தொடர்புபடுத்தும் திட்டமிடல் மையம் ஒன்றின் அபிவிருத்தி. இது வீதி மற்றும் புகையிரதப் பாதை ஆகிய இரண்டையும் உபயோகித்து குறிப்பாக கொழும்பு- திருகோணமலை மற்றும் கொழும்பு ஹம்பந்தோட்டை பகுதிகளை இணைக்குமாறு அமைதல் போன்றவற்றிற்கு வழங்கப்படும்.

வான்வழிப் போக்குவரத்துத் துறையானது தடையற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொடர்புகளுக்கான திறனான வழியைத்தரும் போக்குவரத்தின் ஓர் ஒருங்கிணைந்த துறையாக கருதப்பட வேண்டும். இவை உலக தரமானதாகவும், போட்டித்தன்மையான விலையுள்ளதாகவும் லெதரப்பட்ட நவீன முறைகளைக் கொண்டமைந்ததாகவும் காணப்பட வேண்டும். விமானத்துறையானது உள்நாட்டு விமானசேவை போன்ற உள்நாட்டுத் துறையினை ஊக்கப்படுத்தல் அவசியம். வலயங்களிலான வான்வழி சந்தைகளின் வளர்ச்சி பொருனாதார அபிவிருத்திக்கு உபயோகப்படல் வேண்டும். சர்வதேச துறைகங்கள் இதேபோல் பொருட் திட்டமிடலுக்கான இடங்களாக காணப்படுவதுடன் அவற்றின் சிறந்த திறனானது இலங்கைப் பொருட்களுக்கான அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருகின்றது. கிழக்கு மற்றும் மேற்கு போக்குவரத்தின் வளர்ச்சி மற்றும் இந்தியாவின் நுகர்வுச் சந்தையின் வளிர்ச்சி என்பவை கப்பல்துறை வியாபாரங்களுக்கு பெறுமதி சேர்ப்பவையாக அமையப்பெற வேண்டும். இது அதிக கப்பல் கோடுகளைக் கவர்தல், தகவல் பரவும் வழியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நடைமுறைகள் மற்றும் வர்தக வசதிகளுககான விதிமுறைகளின் மறுசீரமைப்பு என்பவற்றால் செய்யப்படக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5 நடைமுறைப்படுத்தல் செயல்முறை

### முதலீட்டை சமநிலைப்படுத்தல்

2017ம் ஆண்டின் முடிவிற்கு முன் GoSL ஆனது அனைத்து போக்குவரத்துத் துறை திட்டங்களையும் ஆய்வுகளையும் 10 வருட தேசிய பல்தரப்பட்ட போக்குவரத்து முறைகளுக்கான உத்தித் திட்டமிடல் ஒன்றில் உள்ளடக்க வேண்டும். இத்திட்டமானது வேறுபட்ட போக்குவரத்து வலையமைப்புகளான நெடுஞ்சாலை, புகையிரத வீதிகள், பஸ் போக்குவரத்து, வான்வழிப் போக்குவரத்து போன்றவற்றிற்கு வித்தியாசமான அபிவிருத்தி உத்திகளைக் கொண்டிருக்க வேண்டும். இது ஒரு அரசியலட கொள்கையாக காணப்படுவதுடன் போக்குவரத்துத் துறை கட்டமைப்பு மற்றும் சேவைக்கான மக்கள் முதலீடானது ஒவ்வொரு வரவு செலவுத்திட்டத்தின் போதும் கொள்கை நடைமுறைக்காக ஏற்படுத்தப்பட்ட வரிசையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

தேசிய திட்டமிடல் திணைக்களம் 2018 முதல் போக்குவரத்துத் திட்டங்களுக்கான செயலாக்கக் கற்கைகள் சுயாதீனமாக மதிப்பீடு செய்யப்பட்டும், செலவுக்கான பயன் உறுதி செய்யப்பட்டும், பொருளாதார நடைமுறைப்படுத்தல்க் சிறப்பாக விளங்கப்பட்டுள்ளதும், அதன் வெளியார்ந்த தாக்கங்னகள் முழுமையாக குறைக்கப்பட்டும், தேசிய பெறுமதி சேர்த்தல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி விரிவாக்கப்பட்டும், போட்டிகரமான ஏலத்தின் மூலம் ஒப்பந்தங்கள் அளிக்கப்படுவதையும் தெரிந்துகொள்ளும். கருத்து நிலையிலுள்ள நிதி வழங்கலுக்கான திட்டமானது ஏனை போக்குவரத்து மாற்று வழிகளின் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டியிருப்பதுடன் அதற்குரிய நிறுவனங்களும் மாற்றுத் திட்டங்களை முன்வைப்பதற்கு அழைக்கப்படுவர். நிலைபேறு மற்றும் ஏனைய பேரழிவின் பின்னான மீள் உருவாக்கம் பற்றியும் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். அனைத்து போக்குவரத்து துறைகளிலும் தனியார் துறை முதலீடானது ஊக்குவிக்கப்படும். எவ்வாறாயினும் இது போன்ற அரச அங்கீகாரம் பெறவிருக்கும் அனைத்து திட்டங்களும் பொருளாதார நம்பகத் தன்மை பற்றி கவனமாக ஆராய்வதுடன், நீண்ட கால மக்களின் அர்ப்பணிப்பு மற்றும் அங்கீகாரம் பற்றியும் கவனம் செலுத்துதல் வேண்டும். பொருளாதார அமைச்சானது இதற்குரிய சுற்றறிக்கை, ஊழியர்கள் மற்றும் நிதி ஒதுக்கீட்டை 2018 ஜனவரியில் ஆரம்பிக்கும்.

### திருத்தப்பட்ட சட்டங்கள்

சட்ட ரீதியாக செயற்படுத்தப்படும் நடவடிக்கைகள் இவ்வாறான கொள்கைகளுக்கு அமைவாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக பொருத்தமான சட்ட ரீதியான திருத்தங்களை சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் முகவர்களும் உருவாக்குவர். இது அரசாங்கத்தின் கொள்கையாகும். இதற்கான அதிகாரமானது கட்டாயமனதுடன் மாறாதது.

போக்குவரத்து நிறுவனங்களின் நிர்வாக முன்னேற்றங்களுக்கான நடவடிக்கைகள் கொள்கையில் இல்லாத செயற்பாடுகளின் தலையீட்டைக் குறைப்பதன் மூலம் மேற்கொள்ளப்படும். மற்றும் வருடாந்தம் சிறந்த நிர்வாகிகளின் செயற்பாடுகள் குறித்தான மதிப்பீடு 2018ம் ஆண்டின் இறுதியில் மேற்கொள்ளப்படும். சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் வருடாந்த திட்டங்களை கொள்கை செயற்பாட்டு அமைச்சிற்கு சமர்ப்பிப்பதன் மூலம் சட்ட சீர்திருத்தங்களை தொடர்ந்து மேற்கொண்டு UN இன் பரந்த நிலைபேறான முன்னேற்றத்திற்கான நோக்கத்தை அடையும் வகையில் நடவடிக்கைகள் மற்றும் அதிகாரங்களை உறுதி செய்வர். மேலும் தீர்வுகள் கொள்கைகக்கு உட்பட்டு நடைபெறும். போக்குவரத்துத் துறையின் நடவடிக்கைகளுக்கு பொருப்பான அமைச்சு சட்ட சீர்திருத்தங்களை மேற்கொண்டு அதனை 2018ம் ஆண்டு முடிவிற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறை சார்ந்த நிபுணத்துவத்தை அபிவிருத்தி செய்தல்**

போக்குவரத்தின் திட்டமிடல், வடிவமைப்பு, செயற்பாடு மற்றும் நிர்வாகம் என்பவற்றிற்கு சிறப்பான திறமைகள் காணப்பட வேண்டும். இவ்வாறான செய்றபாடுகளுக்காக அவசியமாகும் பல்வேறுதரப்பட்ட மனிதவளங்களின் கல்வி மற்றும் திறன்களை அரசாங்கம் வரையறுக்கின்றது. உயர் திட்டமிடலுக்கும் நவீனமயமாக்கல் நடவடிக்கைளுக்கும் தொழில் ரீதியில் தேர்ச்சி பெற்றவர்கள் மீது கவனம் செலுத்தப்படும். வாரியங்களில் பதவி பான்ற உயர் நிர்வாகப் பதவிகளுக்கு பொருத்தமான துறை சார்ந்த சிறப்புத் தேர்ச்சிகளும் வழங்கப்படும். அரசாங்கம் போக்குவரத்து துறையின் நிதி ஒதுக்கீட்டின் பாகங்களை மனிதவள அபிவிருத்தி, 2020ல் ஆரம்பிக்கும் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு ஒதுக்கிடும்.

**எடுத்துக் கூறப்பட வேண்டிய தீர்வுகள், பிரச்சினைகள் மற்றும் தாக்கங்கின் சுருக்கம்**

| | தீர்வுகள் |
|---|---|
| நோக்கங்கள் | • அணுகலை மேம்படுத்தல் மற்றும் அசைவினை மலிவானதாக்குதல்<br>• உயிர்களைக் காத்தல்<br>• நிலைபேறான பௌதீக சூழலை உருவாக்கல்<br>• இயற்கைச் சூழலை பாதுகாத்தல்<br>• உலகத்துடனான சர்வதேச தொடர்பை வலுப்படுத்தல்<br>• ஆக்கவளம் மற்றும் நிரப்பத்தகு வேலை வாய்ப்புகளை உருவாக்கல் |
| உத்திகள்/தீர்வுகள்/ அளவீடுகள் | • மோட்டார்மயமாக்கலை நிர்வகித்தல்<br>• பஸ் போக்குவரத்தை பேர்குவரத்தின் முதுகுத்தண்டாக மாற்றுதல்<br>• புகையிரத சேவையின் உச்ச பயனை அடைதல்<br>• சிறந்த நெடுஞ்சாலைகள் மற்றும் வீதிகளை அமைத்தல்<br>• தடையற்ற இயக்கத்தை வழங்கல்<br>• திட்டமிடல் மையங்களுக்கு சிறந்த சிறந்த வழங்கல் சங்கிலியை உருவாக்கல் |
| நடைமுறைப்படுத்தல்கள் | • கொள்கைகளை திறனுள்ளதாக ஆக்குதல்<br>• சட்ட சீர்திருத்தங்கள்<br>• துறை நிறுவனங்கள் அபிவிருத்தி |

3. <u>நிலைபேறான முன்னோக்கு – 2020 மற்றும் அப்பால்</u>

வழமையான செயற்படுத்தல்கள் 2020ம் ஆண்டளவில் இலங்கையின் போக்குவரத்துத் துறையை அதிக நிலைபேறற்ற நிலைக்கு மாற்றக்கூடிய நிலையிலுள்ளது. நகர்புற நெரிசலானது GDPயின் 20 வீதத்தை ஆக்கிரமிப்பதுடன் வளிமண்டல மாசு, வீதி விபத்துகள், சக்தி கடத்தல் மற்றும் உபயோகத்தின் போதான வீணாதல் என்பன தொடர்ச்சியான ஒரு வீதத்தில் வளர்ச்சியடைந்து கொண்டு செல்லும். இவ்வளர்ச்சி நிவர்த்தி செயய்யப்படாதுவிடின் இவை பாரய பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் 2025ம் ஆண்டளவில் கிராம, நகர இரு இடங்களையும் வாழ்வதற்குப் பொருத்தமற்ற சூழலாக மாற்றியமைத்துவிடும். பொருளாதார நடவடிக்கைகளில் தாழ்வு மற்றும் உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த இடம்பெயர்வுகளின் விளைவாக இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக சமநிலையை குறைந்து கொண்டு செல்ல அசைவிற்கான பொருளாதார செலவினம் தக்க வைக்கப்படுவது காரணமாகும். எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட தலையீட்டுத் திட்டங்கள் மூலம் இவ்வாறான எதிர்பாராத நிலைகள் முற்கூட்டியே தடுக்கப்படுவதுடன் நாட்டை மேலும் உயரந்த ஓர் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லும். இவ்வளர்ச்சியானது 2030ம் ஆண்டளவில் இயக்கத்துக்கான செலவை பாதியாக குறைப்பதுடன் சமூகத் தொடர்புகளை அதிகரித்து சுற்றாடல் தாக்கங்களையும் 1/3 பங்காக குறைத்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைகள்

# S7

## S7. நகர்புற முன்னேற்றம் மற்றும் பௌதீக திட்டமிடல்[17]

### 1. தற்போதைய நிலை

ஓர் நிலைபேறான பொருளாதார எதிர்காலத்திற்காக, இலங்கை தனது ஊழியர்களின் பலத்துடன் முன்னேற்றப்பட்ட ஆக்கவளத்தின் மூலமாக தேசிய பொருளாதாரத்தை உயர்த்துதல் வேண்டும். மேலும் விரிவுபடுத்தப்பட்ட மற்றும் பலப்படுத்தப்பட்ட ஏற்றுமதிகள் மூலமான வருமானங்கள், மேம்படுத்தப்பட்ட சர்வதேச முதலீடுகளின் கவர்ச்சி போன்றவையும் இதற்கு துணை புரியும். அவ்வாறான நிலையைப் பெற அரசு பல முனைகளுடன் செயற்படுதல் வேண்டும். முதலாவதாக, பிராந்திய துறையின் திறனானது குறைவான மட்டத்தில் இருக்கும் ஓர் நிலையில் தேசிய மற்றும் சர்வதேச நேரடி முதலீடுகளுக்கு பொருத்தமான ஒரு சூழலை அரசு ஏற்படுத்த வேண்டும். பிராந்தியங்கள் மற்றும் உலக அளவில் காணப்படும் போட்டித் தன்மைகளுக்கு இடையில், நாட்டின் பௌதீக மற்றும் சமூக-அரசியல் சூழல் இலங்கையில் முதலிடுவதால் ஒப்பீட்டளவில் இலாபம் வழங்கும் முதலீட்டாளர்களுக்கு கவர்ச்சிகரமானதாக அமையப்பெற வேண்டும். இரண்டாவதாக, தேவையான பௌதீக, சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகளை நீண்டகால அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மற்றும் உச்ச பயனை பெறுவதற்காக மேம்பாடு செய்தல். வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல் தேவைகளின் மூலமாக அபிவிருத்தியடையும் நவீனமயாக்கம் காரணமாக இலங்கை வேகமாக செயற்பட்டு மிகப் பொருத்தமான பொருளாதார மற்றும் திறன் உத்திகளை தெரிவு செய்து அதன் கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்தல் வேணடும். மூன்றாவதாக, பொருத்தமான அதிகக் கல்வித் தகைமையுள்ள பயிற்சியளிக்கக் கூடிய ஊழியர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கல் வேண்டும். வளர்ச்சியடைந்து வரும் மூன்றாம் நிலைக் கல்வியின் காரணமாக அதிக இளைஞர்கள் விவசாயம் மற்றும் ஏனைய கைத்தொழில்களில் இருந்து விலகி இருப்பதால் இலங்கை எதிர்வரும் தசாப்தங்களின் வேலை வாய்ப்புகளுக்காக உயர் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பான துறைகளை வளர்ச்சியடையச் செய்வது அவசியமாகிறது. இதுவரை, மற்றைய பிராந்தியங்கள் மற்றும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பெற்றுள்ள பௌதீக வளங்கள்,பெறுமதி சேர்ப்பு, பொருள் அபிவிருத்தி மற்றும் போக்குவரத்து சேவைகள், தரைத்தோற்ற அனுகூலமான அமைவு என்பனவே இலங்கையில் நீண்ட காலத்திற்கான நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கு ஏதுவான காரணிகளாக அமைகின்றன. மேற்கூறப்பட்ட வசதிகளை வளரும் மற்றும் நிலையான சமூக கொருளாதார அபிவிருத்திக்கு ஏற்றவாறான பௌதீக சூழலை உருவாக்குவது திட்டமிடுபவர்களினதும் கொள்கை உருவாக்குபவர்களினதும் பாரிய சவாலாக உள்ளது.

இலங்கையானது வேகமாக நகரமயமாகும் நாடாக காணப்படுகின்றது. தனது மக்கள் தொகையில் 70- 80 வீதமான மக்களின் நகரமயமாக்கம் எதிர்பார்க்கப்படுகின்றது. நகர்புற வசதிகளுக்கான வசதி, நகர்புற வாழ்க்கை முறை மற்றும் நகர அபிலாஷைகளை 2030ம் ஆண்டளவில் அடைய எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரிக்கும் நகர்புற குடிசனத்திற்கான வளங்களின் சிறந்த பயன்பாட்டுடன் சிறந்த திட்டமிடலால் பௌதீக சூழல் அபிவிருத்தி செயய்ப்பட

17 எழுதுனர் குழாம்: ஜகத் முனசிங்க (தலைவர்), சுமித் சமரதுங்க, குமரகுரு சுகிர்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்தோடு இலங்கை இயற்கை வளங்களால் நாடு பூராகவும் வளம் பெற்று இருப்பதுடன், திட்டமிடப்படாத பௌதீக அபிவிருத்திகள் காடுகளை உருவாக்குகின்றன. கரையோரங்கள் மற்றும் சமவெளிகள் மனிதர்களின் தொடர்ச்சியான ஆத்துமீறல்களால் குழப்ப நிலைக்கு உள்ளாகின்றது. நில அபிவிருத்திக்கான தேவையை பூர்த்தி செய்வதுடன் அவற்றின் இருப்பைப் பாதுகாக்கும் விதத்தில் திட்டமிடுவது பௌதிக திட்டமீட்டாளர்கள் எதிர்நோக்கும் சவாலாக உள்ளது.

**இலங்கையின் நகரமயமாக்கல் போக்கு**

2012 கணக்கெடுப்பின்படி, 20.4 மில்லியன் மொத்த சனத்தொகையில் 20 வீதத்திற்கும் குறைவான மக்களே நகர்புறங்களில் வாழ்கின்றனர். இவை நகராட்சி மற்றும் நகர சபைகளின் அதிகார வரம்புக்கு உட்பட்ட பிரதேசமாக கூறப்படுகின்றது. இன்னமும் அதன் வெளித்தோற்றம் மற்றும் நிலத்தன்மைகளுக்கு இடையில் தவறான தொடர்பு காணப்படுவதுடன், பெரும்பாலான நகரசபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்கள் வெளித்தோற்றம் மற்றும் செயற்பாடுகிளில் நகரமாக கருதப்படுகின்றன.

மொறட்டுவை பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஓர் சுயாதீன ஆய்வின்படி மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை தனிப்பட் நகரமயமாக்கலைக் கொண்டுள்ளது. மேலம் வழக்கமான புரிதல் மற்றும் நகரமயமாதல் செயற்பாட்டிலும் வித்தியாசத்தைக் கொண்டுள்ளது. வழக்கமான நகரமயமாதல் முறையான மக்கள் நகரத்தை நோக்கி குடியமர்வதற்கு மாறாக நகரமய வசதிகள் மக்கிளிடம் கொண்டு சேர்க்கப்படுகின்றது. மேலும் நகர்புற வாழ்க்கைமுறை மற்றும் அபிலாஷைகள் நியமிக்கப்பட்ட நகரங்களில் இருந்து விலகி ஈருந்தாலும் மக்களால் வேகமாக உள்ளளெடுக்கப்படுகின்றது. இதனூடாக நகரமயமாக்கலானது ஓர் உடனடியான நிகழ்வு அல்ல என்பதையும் அது தொடர்ச்சியான மாறுதல்களின் சேர்க்கை என்றும் தெரிநந்து கொள்ளலாம். குறிப்பிட்ட நேரத்தில் மக்களின் நகரமயமாக்களின் அளவுகள் நேரத்திற்கு ஏற்றாற்போல் மாற்றமடையும். இது தொடர்ச்சியானது. அத்துடன் தற்போதைய நிலவரப்படி 50 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் 60 வீதத்திற்கும் அதிகமாக நகரமயமாக்கப்பட்டுள்ளனர். அவை மொத்த நிலப்பரப்பின் சராசரியாக 12 வீதத்தில் செறிந்துள்ளது. தற்போதைய ஆய்வுகளின்படி 2030ம் ஆண்டளவில் மக்கள் தொகையின் 80 வீதமானவர்கள் 80வீதம் நகரமயத்திற்கு உட்படுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இது நாடுபூராகவும் பரவலடையும். இநடத சிக்கலான நகரமயமாக்கலை உள்வாங்கி இதனை சுகாரமான முறையில் முன்னேற்றுவது இலங்கை பௌதீக திட்டமிடளாார்களின் ஓர் பாரிய சவாலாக உள்ளது.

**தேசிய பௌதிகத் திட்டமிடல்**

நாடுபூராகவூான திட்டமிடப்பட்ட அபிவிருத்திக்காக, தேசிய திட்டமிடல் கொள்கை 2007ல் முறைப்படுத்தப்பட்டு 2011ல் செயற்படுத்தப்பட்டது. தேசிய பௌதீகத் திட்டமிடலின் செயற்பாட்டின் இக் கொள்கையினை தேசிய திட்டமிடல் ஆணையகம் தேசிய மற்றும் பிராந்திய அளவிலான ஆணைக்குழுக்கள், அரச மற்றும் அரசல்லாத முன்னேற்று முகவர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களின் ஆலோசனைகளுடன் மேம்படுத்தப்படுகிறது. நாடடின் நிலம், நீர், சமுத்திரம், மனித வளத்துடன் தொடர்பான பாதுகாப்பு, தேர்வு மற்றும் நிலைபேறு தொடர்பான பிரச்சினைகளுக்கான பௌதீக அபிவிருத்தி குறித்து திட்டமிடலானது விரிவான வழிகாட்டுதலை வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நெருக்கடியான பிரச்சினைகள், தாக்கங்கள், மற்றும் தீர்வுகள்

### 2.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

#### 2.1.1 தரைத்தோற்ற சீரின்மை

இலங்கை அண்மையில் சுனாமி, நிலச்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற பல பேரழிவுளுக்கு முகம்கொடுத்துள்ளது. மொத்த நிலப்பரப்பின் சுமார் 20 வீதமான மலையோரப் பிரதேசங்கள் நிலச்சரிவு அபாயத்தில் இருப்பது தெரியவந்துள்ளது. மேலும் 5வீதமான கடல் மட்டத்திலிருந்து ஒரு மீற்றர் உயரத்திலுள்ள கரையோர பிரதேசங்கள் கடல்கட்ட உயர்வு மற்றும் ஏனைய காலநிலை மாற்றங்களுக்கு முகம்கொடுத்துள்ளது. மொத்த சனத்தொகையில் 20 வீதமானவர்கள் இவ்வலயங்களில் வாழ்கின்றனர்

நடைமுறையில் இருக்கும் அபிவிருத்தி வகைகளின்படி கடந்த தசாப்தங்களில் இவ்விரு வலயங்களிலுமான குடியேற்றம் வளர்ந்து செல்வது தெரியவருகிறது. அத்துடன் நகரமயமாக்கத்தின் கடந்த 50 வருடங்களுக்கும் மேற்பட்ட காலத்திலான முதலீடுகள் இவ்வலயங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வபிவிருத்திகள் இவ்வலயங்களுக்கு பல வகைகளிலல அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒருபுறம் இப்பிரதேசங்களின் குறை தாங்குதிறன் காரணமாக இவ்வபிவிருத்திகளினால் சுற்றாடல் சீரழிவு அதிகரிக்கப்படுவதுடன், மறுபுறம், பேரழிவு நிலைகளின்போது குடிசன மற்றும் சொத்துகள் அதிக பாதிப்புக்குள்ளாகின்றன.

### 2.2 இடம்பெறக்கூடிய தாக்கங்கள் மற்றும் பிரச்சினைகளின் விரளைவுகள்

- வளங்களுக்கான அணுகலின் குறைபாடு காரணமாக அவற்றின் உச்ச பயன்பாடு பெறப்டுவதில்லை. ஆகவே வளங்களின் பொருத்தமற்ற பயன்பாட்டிற்கான செலவீனம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதிக பயன் கொண்ட வளங்களான கவர்ச்சிகரமான கடல், தாராளமான வனப் பிரதேசம் மற்றும் அழகியல் தளங்கள், நாடுபூராகவும் உள்ள சிறப்பாக பயிற்றுவிக்கப்படக்கூடிய மனிதவளம், பல்வேறுபட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படக் கூடிய குறைவான பயன்பாட்டில் உள்ள அல்லது பயன்பாட்டில் இல்லாத நிலங்கள் என்பன பொருத்தமற்ற வளப்பயன்பாட்டிற்கான உதாரணங்களாகும்.

- நாட்டில் சிதறடிக்கப்பட்ட வகையிலான குடியேற்றப் பரம்பலானது வீதிகள், சேவைகள் போன்ற பௌதீக காரணிகளை ஏற்படுத்துவதிலும் பராமரிப்பதிலும் அதிக செலவினத்தை ஏற்படுத்தும். உலக வங்கி (2015) அறிக்கையின்படி இலங்கை பரந்த வீதி வலையமைப்புகளைக் கொண்ட நாடாக காணப்பட்ட போதிலும் அவை முறையாக பராமரிக்கப்படாமல் உள்ளது. பரவிய குடியேற்றங்களுக்கான போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான செலவினங்களும் அதிகமாக உள்ளன.

- எதிர்கால நோக்கு மற்றும் முழுமையான திட்டமிடலின் குறைபாடு காரணமாக பௌதீக சுற்றாடல் அபிவிருத்தி நகர்புற அபிவிருத்திக்காக பொருத்தமற்ற இடங்களில் அதிக முதலீட்டை ஏற்படுத்தியுள்ளது. இது சிதறல் நிலையிலான குடியேற்ற நிலையை அதிகப்படுத்தியுள்ளது. சிதறலுக்கு மேலதிகமாக அதிகமாக வடிவமைக்கப்பட்ட தீர்வுகள் மற்றும் செலவுக் குறைப்பு தொடர்பான கவனயீனம் மற்றும் அதிக ஆக்கவள மாற்றுவழிகள் குறிப்பாக போக்குவரத்துக் கட்டமைப்பு அபிவிருத்தி என்பன பொருத்தமற்ற வளப்பயன்பாட்டின் இன்னுமோர் வடிவமாகும்.

- வாய்ப்புகளுக்குமான விலையும் உள்ளது. ஒருபுறம், ஒரு திட்டம் தயாராக்கப்பட்டு சிறந்த திறன் பயன்பாட்டின் மூலம் சிறந்த வாய்ப்புகள் எதிர்பார்க்கப்படுதல், திட்டத்தில் உள்ள தவறுகள் காரணமாக இத்திட்டங்கள் காலதாமதமடையலாம் இதன்மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்பட்ட சிறந்த வாய்ப்புக்ள தவறவிடப்படலாம். மறுபுறம், திட்டமானது சமனான மற்றும் நசமநிலையான அபிவிருத்தியை அடைய எத்தனித்தாலும், தவறுகள் சில சமூகங்களின் நன்மைகளை பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பைத் தடுப்பதன் மூலம் பாதிப்டையச் செய்கின்றது.

- அதிகப் பயன்பாடு மற்றும் இணக்கமற்ற பாவனை என்பன செலவு சீரழிவினை ஏற்படுத்தும். மென்மையான சுற்றாடல் தாகுதிகளின் அதிக பயன்பாடு மற்றும் அவற்றின்திறனுக்கு மேலான பாவனை போன்றன பொதுவாக காரணிகளாகும். உதாரணமாக, நிலப்பகுதியில் நகர்புற அபவிருத்திக்காக சதுப்புநில, ஆற்றோர மணல் அகழ்வு , நில அகழ்வு, தளபாடங்களுக்காகவும் விவசாயத்திற்காகவும் காடுகள் அழிக்கப்படுதல் என்பவற்றைக் கூறலாம். இவை கடலோரங்கள், மலையோர அழகியல் பிரதேசங்கள் போன்ற சில சூழற்பகுதிகளிலும் காணக்கிடைக்கின்றது. பொருத்தமற்ற பாவனைகள் பெரும்பாலும் நகர அபிவிருத்தி, தோட்ட மற்றும் கைத்தொழில் பிரதேசங்கள் போன்ற இடங்களில் காணலாம். தேவையானது எது, காணப்படுவது எது என்ற குழப்பதினால் அதிகாரிகள், விதிமுறையாளர்கள் மற்றும் சமூக வாசிகளுக்கிடையிலான குழப்பங்கள் அதிகரிக்கின்றன.

- அதிக பயன்பாடு மற்றும் பொருத்தமற்ற பயன்பாடு பௌதீக சுற்றாடலில் திருத்திக் கொள்ள முடியாத பல செலவினங்களை ஏற்படுத்துகிறது. இது சமூகத்திலும் மேலும் பொருளாதார அளவிற்கும வளர்ச்சியடைகிறது.

- திட்டமிடப்படாத அபிவிருத்தி நடவடிக்கைகள் கடந்த காலங்களில் பாரிய உயிர் மற்றும் உடமைச் சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இவை திறனற்ற நிலை, நெருக்கடிகள் மற்றும் ஏனைய வெயளியார்ந்த குறிப்பாக நாள்தோறுமான நகர்புற வாழ்விலான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நடைமுறையில் இருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக குழப்பங்கள், மாசு மற்றும் மக்கள் தொல்லைகள் என்பன உருவெடுத்துள்ளன. இது நகர மற்றும் கிராமப்புற வாழ்க்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்துடன் சூழல் தரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

- செலவிற்கு அப்பால் இவ்வாறான அபிவருத்திகள் மக்கள் மத்தியில் ஏமாற்றத்துடன் நம்பிக்கை இழப்பையும் ஏற்படுத்தும்.

**திட்டமிடப்பட்ட அபிவிருத்திகளின் நடைமுறைப்படுத்தலிள் உள்ள இடைவெளிகள்**

2007 முதல் தேசிய திட்டமிடல் கொள்கை நடைமுறையில் இருந்தபோதிலும், இலங்கை இதுவரை பௌதீக சுற்றாடலில் வெற்றிகரமான் திட்டமிடப்பட்ட அபிவிருத்தியைக் காட்டவில்லை. பெரிய மற்றும் சிறிய அளவிலான தற்காலிக அபிவிருத்திகள் நாடுபூரகவும் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பிரதான காரணமாக நோக்கப்படுவது தேசிய மட்ட திட்டமிடலுக்கும் அதை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் செயற்பாட்டிற்கும் இடைப்பட்ட இடைவெளியாகும்.

திட்டமிடப்பட்ட ஓர் வேகமான அபிவிருத்தியை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி திணைக்களம் (UDA) நிறுவப்பட்டதுடன், மாறாத அதிகாரங்கம் நகரத்தின் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான திட்டமிடலும் செயற்படுத்தும் உரிமையும் வழங்கப்பட்டது. 246 பிரதேசங்கள் நகர அபிவிருத்தி பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அது சார்ந்த சட்டமுறைகளின் அடிப்படையில் 40 பிரதேசங்களுக்கு மாத்திரமே முழுமையான அபிவிருத்தித் திட்டங்கள் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை முன்னோக்கு திட்டங்கள் இன்றி காணப்படுவதுடன் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய போதிய அக்கறையின்றி முன்னேற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தால் தயாராக்கப்பட்ட திட்டங்கள் குறித்தான போதிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் காணப்படுவதில்லை. மற்றும் நாட்டின் பௌதீக அபிவிருத்தி குறித்தான இவ்வாறான திட்டங்களுக்கான முக்கியத்துவமம் பற்றிய வழிகாட்டுதல்களின் குறைபாடு என்பன் தொடர்ச்சியான இணக்கமின்மைக்கு காரணிகளாகும். பொது மக்களின் விழிப்புணர்வு முன் ஆய்த்தம், தயார்நிலை என்பன போதுமான அளவில் காணப்படுவதில்லை. சில குழுக்களிடமே இவை காணப்படுகின்றன. புதிய திட்டங்களின் செயற்படுத்தல் குறித்தான பங்குதாரர் சமூகத்துடனான ஆலோசனைகள் விழிப்புணர்வையும் இணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடிய ஓர் வழிமுறையாகும். மேலும் பொதுமக்களின் பொது பொறுப்புகள் மற்றும் பகிரப்பட்ட குடியுரிமையை வலுப்படுத்தவும் இது உதவும்.

இணக்கமின்மைக்கு மேலதிகமாக வேறுபட்ட அபிவிருத்தி முகவர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பில் உள்ள குறைபாடு என்பனவும் பின்னடைவிற்கான முக்கிய காரணிகளாகும். பிரசித்தமான மேற்கோளிட்டுக் காட்டக்கூடிய வேறுபட்ட முகவர்களினால் மேற்கொள்ளப்படும் பாதை தோண்டுதலானது வேறுபட்ட சேவைகளில் தங்கியிருப்பது அனைத்து பகுதிகள் மற்றும் அபிவிருத்தி முகவர்களுக்கிடையில் செல்லுபடியாவதாகவும் காணப்படுகின்றது. இதற்கான ஒரு காரணமாக குறைவான ஒருங்கிணைப்பு காணப்படுவதுடன் இலங்கையின் பெரிய அளவிலான அபிவிருத்தி கட்டமைப்புளுக்கான நிதி உதவி வெளிநாட்டு அரசாங்கத்தாலும் சர்வதேச கடன் முகவர்களாலும் வழங்கப்படுகின்றது. முழுமையான திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைந்த செயற்பாடு என்பன துண்டு துண்டான நிதி ஒதுக்கீடு, கடன் தொகை மீது விதிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் பொருட் கொள்வனவில் உள்ள தடை போன்றவற்றால் கடினமானதாக காணப்படுகின்றது.

ஒருங்கிணைந்த அபிவிருத்தியில் காணக்கூடிய மற்றுமொரு தடையானது சமனான அதிகாரப் பதவிகள் அனைத்து அபிவிருத்தி முகவர்களாலும் அனுபவிக்கப்படுவதாகும். தற்போதைய நிறுவன படிநிலை குறித்தான தெளிவு காணப்படாமையாகும். நடைமுறைபடபடுத்தும் முகவர்களினட செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுக்கு அமைய அவர்கள் வரிசைப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான முறையொன்றின் குறைபாடு காரணமாக அரச அதிகாரங்களுக்கு ஏறப் தாமாகவே முன்னுரிமைகளை உருவாக்கிக் கொள்கின்றனர். இந்நிலையை விளக்குவதற்காக பல உதாரணங்கள் முன்வைக்கப்படலாம். மத்திய மாகாணத்தின் சதுப்துநிலங்களில் வீடமைப்புத் திட்டம், நலச்சரிவு அபாயம் அதிகமுள்ள ஊவா மற்றும் சபரகமுவ மாகாண நிலங்களின் பாதுகாப்பு அவ்வாறானதொரு உதாரணமாகும். மென்மையான சுற்றாடல் தொகுதிகளைக் கொண்ட பிரதேசங்களிற்கூடான நெடுஞ்சாலை கட்டமைப்பும் இதற்கான ஓர் உதாரணமாகும்.

**சாத்தியமான தாக்கங்கள்**

- தற்காலிகமான அபிவிருத்திகளானது சிறிய மற்றும் பெரிய திருத்தமுடியாத பாதிப்புகளை இயற்கை சுற்றாடல் அமைப்பு மற்றும் மனித உயிர்கள் மற்றும் சொத்துக்களில் ஏற்படுத்தியுள்ளது.
- திட்டமிடப்படாத மற்றும் ஒருங்கிணைக்கப்படாத அபிவிருத்திகளால் அனைத்து விதமான வளங்களையுமட வீணடிப்பதுடன் முதலீட்டிற்குப் பொருத்தமான விளைவு பெறப்படுவதில்லை.

**காணப்படும் தேசிய கொள்கைகளின் வரையரைகள்**

தேசிய பௌதிக திட்டம் உள்ளிட்ட நடைமுறையிலுள்ள திட்டங்கள் தற்போதைய அபிவிருத்திகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான வரையரைகளைக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலுள்ள தேசிய பௌதீகத் திட்டமிடலானது பர்து வருடங்களுக்கும் முற்பட்ட காலப்பகுதிக்குப் பொருத்தமானவாறு நிறுவப்பட்டது. ஆகவே இது இன்றைய நிலைமைக்கு ஏற்றாற்போல் உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

நடைமுறையில் உள்ள தேசிய பௌதீக் திட்டம் அதன் "மத்திய மென்மைப் பிரதேசத்தின்" இனங்காணல், "கரையோரப் பிரதேசம்", மற்றும் "வனவிலங்குத் தாழ்வாரம்" போன்ற முன்னோக்குக் கூறுகளின் எதிர்காலத்திற்கான பாதுகாப்பிற்காக கருத்தில்கொள்ளப்பட வேண்டும். மேலும், எதிர்கால நகர அபிவிருத்தியை நகர்புற மையங்களின் படிநிலைப்படி, ஐந்து பெருநகரங்களில் ஏற்படுத்துவதற்கான திட்டம், நாட்டிற்குள் அனைத்து இடங்களுக்குமான அணுகலுக்கான தேவையை எடுத்துக்கூறல் போன்றவற்றை முக்கியமாக குறிப்பிடலாம்.

எவ்வாறாயினும் இத்திட்டம் சில வரையறைகளைக் கொண்டிருப்பதுடன் தற்போதைய அரசாங்கத்தின் முன்னுரிமைகளுடன் சில முரண்கபாடுகளைக் கொண்டுள்ளது. அதேநேரத்தில், பரிந்துரை செய்யப்பட்ட ஐந்து பெருநகரங்களுக்கான செல்லுபடித்தன்மை வேகமாக திரட்சியடையும் தற்போதைய நகரமய முன்னேற்றத்தினால் கவனிப்பற்றுக் காணப்படுகின்றது. இது வெகு சீக்கிரமே மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். பாரிய அபிவிருத்தித் திட்டங்களான நெடுஞ்சாலை அபிவிருத்தி, நவீன புகையிரதப் பாதை, விமான நிலையங்கள் மற்றும் பெரிய நகரங்கள் போனறவற்றின் செயலாக்கம் வளக் கட்டுபாட்டுப் பொருளாதாரமுள் இலங்கையில் கேள்விக்குரியதே. மேற்கூறப்பட்ட வரையறைகளை தாண்டும் அதேநேரம், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட சவால்களான நிலச்சரிவு வாய்ப்புள்ள பிரதேசங்களின் அதிகரிப்பு, காடாக்குவதன் தேவை, மற்றும் வளரும் ஆற்றல் மற்றும் வாய்ப்புகளான காற்றுச் சக்தி,கடல் வளம், பெற்றோலியம் மற்றும் வாயு சேமிப்பு போன்றவற்றைக் கையாள்வதற்கான உத்தியும் மேற்கொள்ளப்பட வேண்டும். உலகளாவிய ரீதியில் மாற்றமடையும் அரசியல் நிலவரங்கள் மற்றும் வர்த்தக முறைகள் என்பன தேசிய பௌதீக திட்டமிடல் கொள்கையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

## 2.3 தீர்வுகள், அளவீடுகள், நடைமுறைப்படுத்தல்கள்

- கூறப்பட்ட நிலையிலிருந்து வெளிவருவதற்கான வழியாக அமைவது நடைமுறையிலுள்ள தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையை மேம்படுத்துவதாகும். இதற்காக அதிகளவான கற்கைகளும், தொடர்ச்சியான ஆழமான ஆய்வுகளும், நிபுணத்துவம் பெற்றோரின் பரந்த அளவிலான ஆலோசனைகளும், அபிவிருத்திக் குழுக்களும் ஆர்வலர் குழுக்களும் அவசியமாகின்றது.

### 2.2.1 இலக்குகளின் நடைமுறைப்படுத்தல்

**குறுகிய கால இலக்குகள் (20520-25)**

1) பொருதாரத்தின் தடையின்றிய வளர்ச்சிக்கான வெளியார்ந்த கட்டமைப்புகள், இலங்கையர்களுக்கு நாட்டினுள் அதிக தொழில் மற்றும் வியாபரத்திற்கான வாய்ப்பு, அபிவிருத்திக்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள ஈர்த்தல்

2) சிறந்த பயன்பாட்டை உறுதி செய்யும் பௌதீக அபிவிருத்தி மற்றும் கிடைக்கக்கூடிய நிலம் மற்றும் கட்டமைப்புகளின் திறனான பயன்பாடு மற்றும் அவை நாட்டின் இயற்கை வளத்திற்கு உட்பட்டு அமைக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) நீர், நிலம், மற்றும் ஏனைய வளங்கள், இயற்கைச் சூழல், கலாச்சார சூழல், பாரம்பரியம் மற்றும் வாழ்வாதாரத்தில் நீண்டகால நிலைபேறற்ற தன்மையை ஏற்படுத்தாத அபிவிருத்திகள்

**இடைக்கால இலக்குகள் (2025-30)**

1) தேசிய பொருளாதாரத்தை பாரம்பரிய முறையிலிருந்து உயர் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகளுடன் தொடர்புடைய துறையாக மாற்றுவதற்கான வசதிகளைப் பெறக்கூடிய வெளி. மற்றும் அதிகரிக்கப்பட்ட சர்வதேச வர்த்தகம்

2) புதிய வாய்ப்புகளுக்கான தேடலுக்கான அபிவிருத்தியை மேற்கொள்வதும், நிலம், கடல், வாழ்வாதாரங்களில் கண்டெடுக்கப்படாத வளங்கின் தேடலும்

3) முதலீட்டிற்கும் வர்த்தகத்திற்கும் அதிக கவர்ச்சிகரமான பௌதிக சூழல்

**நீண்டகால இலக்குகள் (2050)**

1) நாட்டின் நிலம், நீர்,கடல் மற்றும் ஏனைய வளங்களின் நிலைபேறான பயன்பாடு விவசாயம், பாரம்பரிய கைத்தொழில்கள், கலாச்சார சூழல் மற்றும் பயிற்சிகளைப்

2) காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அழிவின் போதான மறுமொழி

3) நாட்டினுள் சமநிலைப்பட்ட அபிவிருத்தி. இவ்வபிவிருத்தி சமநிலை, வாய்ப்புகள், வளங்களுக்கான அணுகல் போன்றவற்றை வழங்க வேண்டும்.

**2.2.2 நெருக்கடி மற்றும் தனிப்பட்டவற்றின் பாதுகாப்பு**

எதிர்கால பௌதிக அபிவிருத்திகளை பொருளாதாரமயமாக்குவதற்கு இலஙடகையிடம் காணப்படக்கூடிய மிகச்சிறந்த முறையானது அதன் இயற்கை வளம், நீர்வளம், மற்றும் தனிப்பட்ட இயற்கைச்சூழலில் தங்கியிருப்பதாகும். தற்போதுள்ள சூழல் தொகுதிகளை முன்னேற்றுவதும் பாதுகாப்பதும் தேசிய பௌதீக திட்டமிடலின் வழிகாட்டுதலுக்கான உத்தியாகப் பயன்பட வேண்டும். இதற்கமைவாக பின்வருவன பிரதான காரணிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

- மைய மிருதுவான பகுதிகள் - (msn இலிருந்து 300மீ இற்கு மேற்பட்ட பிரதேசங்கள்) இதன் தற்போதைய இயற்கை அமைவின்படி அனைத்துப் பெரிய ஆறுகளுக்கும் மிருதுவான புவியியல் உருவ அமைப்பிற்கும் அளிப்பது நெருக்கடியாக உள்ளது. இப்பகுதகளின் பாதுகாப்பானது பெரிய ஆறுகளின் நீர்ப்பிடிப்புக்குட்பட்ட பெரிய அளவிலான அபிவிருத்திகளை மட்டுப்படுத்துவதுடன் இருக்கின்ற குடிகளின் மேலதிக வளர்ச்சியைத் தடுக்கின்றது.

- கரையோர மிருதுவான பகுதிகள் - (CCDSL இனால் கரையோரப் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்கள்) இவை உயிரியல் பல்வகைமைப் பாதுகாப்பிற்கு நெருக்கடியாக இருப்பதுடன் சுற்றுலா மற்றும் மீன்பிடி போன்ற அதனுடன் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளுக்கும் நெருக்கடியாக அமைகின்றது. கரையோரப் பாதுகாப்பானது தற்போதைய குடியமர்வின் மேலதிக விரிவை திசைதிருப்புவதுடன் ஏனைய அபிவிருத்திகளையும் முடக்குகின்றது. இதில் சுற்றுலாத்துறை சம்பந்நதப்பட் அபிவிருத்திகள் மாத்திரமே விதிவிலக்கானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தற்போதுள்ள காடுகள், வன வளங்கள், சரணாலயங்கள், நீர்பிடிப்புகள் போன்றவை உயிர் பல்வகைமைக்கு மிக அத்தியாவசியமாகின்றன. மேலும், வாழ்வாதாரங்கள், அவற்றுடன் சம்பந்தப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றிற்கும் அத்தியாவசியமாகிறது. இவற்றைப் பாதுகாப்பதற்காக எதிர்கால பௌதிக திட்டமிடல் அபிவிருத்திகள் அவ்வாறான அமைப்புகள் மீதான போதியளவு மென்மையான அணுகலுடன் திட்டமிடப்பட வேண்டும்.

### 2.2.3 கிடைக்கக் கூடியவற்றின் உகந்த பயன்பாடு

இலங்கையின் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார நிலையின் கீழ், கிடைக்கக்கூடிய வளங்கள் மற்றும் தற்போதைய கட்டமைப்புகளின் உகந்த பயன்பாட்டைப் பெறுவது அத்தியாவசியமாகிறது. பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகிறது:

- நாட்டினுள் 66,000 சதுர அடி நிலப்பரப்பு காணப்படுகின்றது. இதில் சுமார் கால்பங்கானது நிலச்சரிவு, வெள்ளம் போன்றவற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளதுடன் அபிவிருத்திக்காக புவியியல் ரீதியாக பொருத்தமானதாகக் காணப்படுகின்றது. அவற்றின் அமைவிடங்கள், அவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் சேவைகளை வழங்குவதற்கான செலவு, தற்போது அவற்றின் பயன்பாடடின் அளவு, அந்நிலங்களின் உகந்த பயனை அடைவதற்கு தீவிரமாக்கப்பட்ட அபிவிருத்திகள் அவசியமாகின்றன.

- அண்மைய ஆண்டுகளில் இலங்கை கட்டமைப்பு அபிவிருத்திக்காக அதிக முதலீட்டை மேற்கொள்கின்றது. உதாரணமாக நெடுஞ்சாலை அபிவிருத்தி, நீர் வழங்கல், சக்தி மற்றும் வலு சம்பந்தமான அபிவிருத்தியை கூறலாம். இவ்வாறான பெரும்பாலான முதலீடுகள் கடனின் மூலமே நிறைவேற்றப்படுவதுடன் இக்கடன் தொகைகள் தேசிய கடனாக மாற்றப்படுகிறது. அவற்றின் திருப்பிக் கொடுக்கும் காலம் பெரும்பாலும் 20-30 வருடங்கள் வரை நீடிக்கின்றது. இதனால் புதுத் திட்டங்களில் முதலிடுவதற்கு மாறாக கிடைக்கக்கூடிய மற்றும் முன் திட்டமிடப்பட்ட திட்டங்களான நெடுஞ்சாலைகள், அதிவேக வீதிகள், புகையிரத பாதைகள், நீர் விநியோகம் மற்றும் கழிவு நீர் கட்டமைப்பு போன்றவற்றின் உச்ச பயனைப் பெறுவதுடன் அவை திறனான அபிவிருத்திக்கு அத்தியாவசியமாகிறது.

- இடங்கள் அடிப்படையில், நிலம் மற்றும் கட்டமைப்பின் பயன்பாடு, அத்துடன் பாதுகாப்பின் அடிப்படையில், பாவித்த நிலங்களின் பயன்பாடு புதிய நிலங்களின் பயன்பாட்டை விட அதிகம் வரவேற்புக்குரியது. இதனடிப்படையில், தீவிர முன்னேற்றங்களான வெளிகளின் பெருக்கம்,வசதிகள் போன்றவற்றிற்கு ஏதுவான நடைமுறையில் உள்ள குடியேற்ற அமைவிடங்கள் பொருத்தமான உத்தியாக நோக்கப்படுகின்றது. எதிர்கால நகர முனன்னேற்றங்கள் நிர்வகிக்கக்கூடிய ஓர் வரையறுக்கப்பட்ட பிரதேசத்திற்குள் காணப்பட வேண்டும். மேலும் இவை மேலதிக பரந்த நிலப்பரப்புக்குப் பரவுவதைத் தடுக்க வேண்டும்.

### 2.2.4 மனித வாழ்விடங்களின் முன்னேற்றமடைந்த "வாழ்வு முறை"

உலகின் மற்றைய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களும் வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக இருப்பதுடன் அனைத்து இடங்களும் வாழ்வதற்கு சமனான அளவு பொருத்தமானதாக காணப்படுவதில்லை. சழல இடங்கள் காலநிலை மாற்றங்களைக் கொண்டமைந்துள்ளது. உதாரண்மாக வெப்பநிலை மாற்றம், மழை அளவுகள், பேரழிவு நிலைமைகள் போன்றவை எதிர்கால குடியேற்றறங்களுக்குப் பொருத்தமற்ற நிலையை ஏற்படுத்துகிறது. அதே நேரத்தில் சில பிரதேசங்கள் மனிதனின் அடிப்படை வசதிகளான உணவு மற்றும் நீரைப் பெறுவதிலும் கடின நிலையை கொண்டிருக்கின்றது. தேவைகளுக்கு மேலதிகமாக பௌதீக மற்றும் சமூக கட்டமைப்புகள், சேவைகள் மற்றும் அணுகல்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடின நிலையும் கொண்டு காணப்படுகின்றது. காலநிலை நிலைமைகள், இயற்கை அமைவுகள், மற்றும் சேவை அனுகலஎகளை கருத்தில் கொண்டு இடத் தெரிவை மேற்கொள்ளும்போது அது அதிக செலவீனத்தைக் கொண்டிருப்பதுடன், இலங்கைக்காக தயாரிக்கப்பட்ட பௌதிக திட்டங்கள் வெற்றிகரமானதாகவும், நிலைபேறானதாகவும் காணப்படும்.

### 2.2.5 "திறன்"களின் கண்டறிவு மற்றும் "உபயோகத்தின்" விரிவு

இலங்கையின் பெரும்பாலான அதிக திறனுடைய இயற்கை வளங்களின் பயன்பாடு அதன உச்ச திறனிற்காக மேலும் முன்னேற்றப்பட வேண்டும். அவ்வாறான ஓர் வளமாக கடல் வளம் காணப்படுவதுடன் அது இந்து சமுத்திரத்தின் 25,000 கி.மீ சதுர பரப்பிற்கு மேற்பட்ட விரிவான சமுத்திர வெளியானது பிரத்தியோ பொருளாதார வலயமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மீன்கள் மற்றும் சில கணிமங்கள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான வளங்கள் கடலினுள்ளேயே உபயோகிக்கப்படாமல் காணப்படுகின்றன. காற்று, கடலலை, பெற்றோலியம் மற்றும் வாயு சேமிப்பு போன்ற பல்வேறுபட்ட வளங்களை கடல் தன்னகத்தே கொண்டுள்ளது. பெரும்பாலானவை இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக் கூடிய திறனைக் கொண்ட உள்நாட்டு தளங்கள் திட்டமிடப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். பிரசித்தி பெற்ற இடங்களைத் தவிர்த்து மிகவும் சிறிய அளவினராலேயே அறியப்பட்ட பரந்த பிரதேக வெளியொன்று காணப்படுகின்றது. ஈகவே அவை அவற்றின் திறனுக்கு அமைவாக கண்டறியப்படவில்லை.

மனித வளம், குறிப்பாக வித்தியாசாமான கல்வி அளவுகளையும் திறமைகளையும் கொண்ட இளைஞர் குழுவானது நிலைபேறான அபிவிருத்திக்கு ஓர் வளமாக கருதப்படுகின்றது. மக்கள் தொகையின் அடிப்படையில் இவை பயனுள்ள ஒரு வழியில் குறித்த காலத்திற்குள் உபயோகிக்கப்படாதுவிடின் இது "குடிசன ஈவுத் தொகையை" விளைவாக்குவதுடன், இலங்கை பிராந்தியத்தில் எதிர்கொள்ளும் போட்டிகரமான பயனைப் பெறுவதை மீண்டும் ஒருமுறை இழந்துவிடும்.

### 2.2.6 உத்திக் கொள்கைகள்

#### 2.2.6.1 இடம்சார் உத்திகள்


இந்த உபாயத்தில் உத்தேசிக்கப்பட்ட பாதகாக்கப்பட்ட மத்திய உடையக் கூடிய பிரதேசம் கரையோர பாதகாப்பு வலயமும் காட்டுப்பரதேசமும் சுமாராக ⅓ நிலப்பரப்பை உள்ளடக்குகின்றது. இவ்வலயங்களுக்கிடையிலான பௌதீக அபிவிருத்திகள் தற்போது இருக்கின்ற சட்ட ரீதியான உதவிகளுடன் கடுமையான வழிகாட்டல்கள் விதிகளைக் கொண்டு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சனத்தொகை குறைப்பு உபாயத்தின் மூலம் இந்த பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும். இப்பிரதேசங்களில்ல் உள்ள 2 சந்ததிகளில் இருந்து பெரியளவிலான ஒரு கவர்ச்சி உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது பொருளாதார அபிவிருத்தி வலயங்கள் கவர்சிகரமான தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல் தாங்கக் கூடிய வீடமைப்பு மற்றும் கூடிய நன்மை தரக் கூடிய வாழக் கூடிய சுற்றாடல்களை உருவாக்கும்.

பிரதான 4 நகரங்களை ஒருங்கமைப்பதற்கு முக்கிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.பிரதான மெற்றோ பிரதேசங்கள் மற்றும் 9 பிரதான நகரங்கள் இவ்வறிக்கையின் வேறொரு இடத்தில் குறிப்பிடப்பட்ட 3 அடிப்படைகளுடன் பிரதான வினைதிறனான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார நுழைவாயில்கள் நாட்டின் பொருளாதாரத்துக்கு மிகப்பெரியபங்களிப்பைச் செய்கின்றன. பிரதானமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு பொருட்கள்  அத்துடன் இறக்குமதியை ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட உலக வழங்கள் வலையமைப்பு கொழும்பு திருகோணமலை ஹம்பந்தோட்டை சர்வதேச 3 துறைமுகங்கள் நோக்கிய மூலதனமிடல் மற்றும் சிறிய துறைமுகங்களான ஒழுவில் யாழ்ப்பாணம் என்பவற்றுக்கு மூலதனமிடல் இவைகள் மூலதனங்களாக கவர்கின்ற மூலமாகவும் வேலை வாய்ப்புக்களை உருவாக்குகின்றதாகவும் இருக்கும்




### 2.2.6.2 குடியேற்றங்களை வழங்குதல் (ஏ3. 5 படம்)

பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நகர்பிரதேச அபிவிருத்தி ( விவசாயம் சாராத ) திட்டங்கள் பிரதான பங்கு வகிக்க வேண்டும். அவ்வாறே நகதர் சாராத பிரதேசம் தொடர்பாக மிகக் கூடிய மக்கியத்துவம் காட்டப்பட வேண்டும்.

இதற்கேற்ப சனத்தைாகையின் நகர பங்கீடு( நகர வசதிகளையும் வபழ்க்கை முறைகளையும் அனுபவிப்பதற்காக நகர் புறங்களில் தொழில் செய்யும் சனத்தொகை ) அடுத்து வரும் 30



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண'டுகள் 70 –80 சதவீத மலவில் அடைய வேண்டிய தேவை உள்ளது.

குடியிருப்பு முறைமையின் வெற்றிகரமான அமுல்படுத்தல் பிரதான மூல காரணிகளில் தங்கியுள்ளது.

1) வேலை வாய்ப்பு மற்றும் வியாபார வாய்ப்புகளின் அமைவிடம் ( பிரதானமாக சேவை துறை ) தொழில்படையில் நுழைகின்ற அடுத்த சந்ததியினருக்காக

2) வீடு மற்றும் நகர உட்கட்டமைப்பு கிடைக்கக் கூடியதாக இருத்தல் ( விஷேடமாக் நீர் விநியோகம் பொதுப் போக்குவரத்து ) குடியிருப்பு அபிவிருத்திகளுக்கு பொருத்தமான இடங்களில்சாதாரன விலைகளில் நகர உட்கட்டமைப்பு

3) உயர்தரமுள்ள சமூக உட்கட்டமைப்பு கிடைக்கக் கூடியதாக இருத்தல் (விஷேடமாக ஆரம்ப இடைநிலைப்பாடசாலைகள் )

இப்பகுப்பாய்வின் முடிவுகளின் படி அதிகமான அனுகூலமான பிரதேசங்கள் உட்கட்டமைப்பின்கிடைப்பனவும் பாதை புகையிரதப்பாதைகள் மற்றம் சூழல் நிலையான தன்மை என்பன் மத்திய சமவெளிகளிலும் கொழும்பு திருகோணமலைக்கு இடையிலும் மத்திய உயர்நிலத்தின் வடக்கு நோக்கிய பகுதிகளிலும் காணப்படுகின்றன.

சனத்தொகை 70 --80 சதவீதம் அளவில் 80] மேலான நகர வசதிகளையும் பெருகின்ற மட்டமாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது வாழ்க்கை முறையிலும் வாழ்க்கை தரத்திலும் உறுதிப்படுத்தப்டுகின்றது.

இசசனத்தொகைக்கு வெளியில் உள்ள ஆகக்குறைந்தது 80] மானோர் பிரதான நகர நுழைவாயிலுக்கு ஒருமுகப்படுத்தப்படுகின்றனர். மேற்றோ வலயங்கள் மற்றும் பிரதான நகரங்கள் கட்டமைப்புகளக்கிடையில் அடையாளப்படத்தப்பட்டுள்ளன. இவ்வாறான ஒருமுகப்படுத்தப்படல் மூலதன மடையிலான நுழைவாயில்களை சந்திப்பதற்கான அதிகாரத்துவம் விஷேட உயர்தரமான நகர வசதிகளையம் விமர்சன ரீதியான அவர்களுடைய நீண்ட நிலையான தன்மையையும் கொண்டதாக உள்ளது.

பிரதான 2 துறைமுகங்களின் அனுகூலங்களை மூலதனப்படுத்துவதற்காக போக்கவரத்து உட்கட்டமைப்பு மற்றம் விரும்பக் கூடிய வாழ்க்கை நிலைமைகள் எதிர்கால சனத்தொகைக்கான நியாயமான பங்கீடு ^ சுமாராக 30 - 35] )கொழும்பு திருகோனமலைக்கிடையில் எள்ள ஒர நுழைவாயிலுக்கிடையில் இருக்கின்ற நிலத்தின் காணியில் குடியமர்த்தபட வேண்டும்

இந்த நகர நுழைவாயில்கொழும்பு மெற்றோ பிரதேசம் கொழும்பை சுற்றியள்ள பல நகர பிரதேசங்கள் 4 மில்லியன் அலவில் வீடுகளை வழங்கக் கூடிய மிகப் பெரிய குடியேற்றத்திட்டங்களாக அமையும். அடுத்த பெரிஜய ஒருமுகப்படுத்தல்களான நீர்கொழும்பை மையமாகக் கொண்ட உத்தேசிக்கப்பட்ட 5 பிரதேசங்கள் ( 1000000 ) குருநேகல ( 1000000 ) தம்புள்ள (5000000 ) திருகோணமலை (1000000 ) இதனூடாக நகர சனத்தொகை 1—2 இலட்சத்துக்கும் இடைப்பட்டது .மற்றும் சிறிய நகரங்கள் மேலும் 3 பிரதான குடியேற்றத்திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன.யாழ்ப்பாணத்திலிருந்து கிழிநொச்சி வரையிலான வடபிரதெசத்திலும் தென் பகுதியில் காலி மாத்தறை ஹம்பந்தோட்டைக்கிடையிலும் எம்பிலிபிட்டிய உற்பட கிழக்கில் மட்டக்கலப்பின் ஊடாக வாழைச்சேனையிலிருந்து அம்பாறை வரைக்கும்

இவ்வொவ்வொரு திட்டங்களிலும் 1½ மில்லியன் மக்களை குடியேற்ற எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடமத் s.5 2050 இல் உத்தேசிக்கப்பட்ட சனத்தொகை பங்கீட்டு மாதிரி (பிரதேச செயலாளர்பிரிவுகளில் சனத்தொகை & இந்தப் பின் புலத்தினல் இலத்திரனியல் புகையிரத சேவைகள் அலுத்கமையிலிருந்து கொழும்பு ஊடாக திருகோணமலைக்கும் திருகோணமலை ஊடாக ஹபரனைக்கும் 2030 அளவில் உருவாக்கப்படம். தென் பகுதி அபிவிருத்தியை இலகுடுத்துவதற்காக தற்போது காணப்படும் அலுத்கமையிலிரந்து மாத்தறை வரையான புகையிரத சேவையை பெிவலிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. கிடைக்கின்ற பிரேரணைகளக் ஏற்ப இச்சேவை மாத்தறையிலிருந்த ஹம்பந்தொட்டை வரை விஸ்திரிக்கப்படலாம். வடக்கில் 2025 அளவில் கிளிநொச்சிக்கும் காங்கேசன்துறைக்குமான புகையிரதசேவை தீவிரப்படுத்தப்பட வேண்டும். கிழக்குப் பதியில் 2025 அளவில் வாழைச்சேனைக்கம் மட்டக்களப்புக்கும் இடையிலான புகையிரத சேவை அபிவிருத்தி செய்யப்படும். அதே வேலை கல்மனை ஏடாக அம்பாறை வரை அந்த சேவை போதிய வரை நீடிக்கப்படவும் வேண்டும். ஏனைய கிடைக்கக்கூடிய வலையமைப்புகளும் சேவைகளும் பிரதேசங்களகிகடையிலான போக்கவரத்து சேவைகளை இலகுபடுத்துவதற்காக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

அதிவேக பாதைகள் ஒப்பீட்டளவில் அதிக செலவுடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளாகும். ஆனால் இடங்களக்கிடையில் விலைவான தொடர்பாடலை இவை இலகுபடுத்துகின்றன. தற்போது செயற்பாட்டிலுள்ள திட்டங்ளின் படி கொழும்பு மாத்தறையையும் ஹம்பந்தொட்டை வரையிலான நீடிப்பையம் இதுகொண்டுள்ளத. அபிவிருத்தி பிரதெசங்களை உள்ளடக்கிய இடங்களக்கிடையில் நகர்வுகளின் பங்களிப்பினை இலகு படுத்துவதற்காக குருநாகலையின் ஊடாக கொழும்பிலிருந்த தம்புள்ளை வழைர தொடர்புபடுத்தப்படுகின்றது. நுகர்வு மாதிரிகம் எதிர்கால நகர பிவிரத்தியை நொக்கிய எறியங்களம் தற்போதைய செயற்பாட்டிலுள்ள அதிவேக பாதை செயற்றிட்டங்களை குறிக்கின்றது. பேயர்களின் அடிப்படையில் கொழும்பு ஹம்பந்தொட்டை. கொழும்பு தம்புள்ள . அவுட்டர் சேகியுளர் ரோட் என்பன் 2030 க்க நெருங்கிய கிடைக்கக் கூடிய நிலைமைகளக்கு ஏற்ப விருத்திகள் கணிக்கப்படும். புகையிரத சேவையின் விரைவான அபிவிருத்திகள் 2030 ல் அதிவேக பாதைகளின் வசதிகளை மேலுயர்த்துவதற்கான காரணியாக குறிப்பிடப்படுகின்றது.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு, முதலீட்டு இடங்களின் உத்தியாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் எதிர்கால நகர்புற அபிவிருத்தியை நிலைபேறான திசைக்கு இட்டுச் செல்லவும் ஒன்பது பிரதான நகரங்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, புத்தளம், பொலன்னறுவை, நுவரெலியா, மகியங்கனை, வெள்ளவாய மற்றும் இரத்தினபுரி என்பவையே அந்நகரங்களாகும். இவ் ஒவ்வொரு நகரமும் 100,000-200,000 வரையான மக்களுக்கு இடமளிப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 2.2.6.3 கட்டமைப்பு முன்னோக்கு (படம் S3.6)

சமூக மற்றும் பௌதீக நிலைபேறான முன்னோக்கிற்கு பிரதான மூன்று அம்சங்கள் கருத்தில்கொள்ளப்பட்டுள்ளன:

1) பௌதிக மற்றும் சமூக கட்டமைப்புகளுக்கான அணுகலும் மலிவுமே எதிர்கால நிலப் பயன்பாடு மற்றும் குடியேற்ற பரவல் முறையையும் தீர்மானிக்கும் முக்கிய அங்கங்களாக உள்ளன. ஆகவே, கட்டமைப்பு முன்னோக்கிற்கான முன்செயற்பாட்டு உத்திகள் காணப்படுகின்றன.

2) பெரிய அளவிலான நகர அபிவிருத்தி மற்றும் கட்டமைப்புகள் அவற்றின் முன்னோக்கிற்காக பாரிய முதலீட்டைக் கொண்டிருக்கின்றன. ஆகவே, குறைவான விரிவுபடுத்தல் மற்றும் விரிவுகளின் மூலம் இருக்கக்கூடிய கட்டமைப்புகளின் உயர் பயன்பாடு அவசியமாகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்திலுள்ள மாற்றம் காரணமாக, நாளாந்த நடத்கைள் மற்றும் தேவைகளுக்கான வசதிகள் என்பன திட்டத்தின் எதிர்பார்த்த காலத்தை விட குறைவான காலத்தில் மாற்றம் பெறலாம். ஆகவே அனைத்து முதலீடுகளும் குறித்த அளவான ஆபத்தைக் கொண்டுள்ளது. அதாவது வளங்களின் பொருத்தமற்ற பாவனை எதிர்பார்த்த விளைவை தராமல் இருக்கும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு, முன்மொழியப்பட்ட நகர்புற தாழ்வாரங்கள் மற்றும் மெட்ரோ நகரங்களானது கட்டமைப்பு மற்றும் வசதிகளின் பாரிய செறிவுகளாக காணப்படுகின்றது.

அனைத்து முறைகளிலும் புகையிரதப் போக்குவரத்தானது போக்குவரத்துக்கான பொருளாதார இலாபமான முறையாக உள்ளது. நான்கு நகர்புற தாழ்வாரங்களில்புகையிரத சேவையானது மிகுந்த கவர்ச்சிகரமான ஓர் முறையாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான கருதுகோளை அடைந்துகொள்வதற்கு புகையிரத வலையமைப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது கட்டாயமாக உள்ளது. அளுத்கம மற்றும் பொல்கஹவெல புகையிரதப் பாதையை மின்சாரமயமாக்குவது புகையிரத முன்னேற்ற பாரிய திட்டத்தின் மூலம் முற்கூட்டியே முன்மொழியப்பட்டுள்ளது. இது முன்மொழியப்பட்ட கிழக்கு- மேற்கு வாழ்வாரத்தை நிறைவுபடுத்தும். இதனை மேலும் முன்னேற்ற 2015ம் ஆண்டளவில் இந்த மின்சாரமயமாக்கப்பட்ட புகையிரத சேவை குருநாகலை வரை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். புகையிரத முன்னேற்ற பாரிய திட்டதில் குருநாகலையை தம்புள்ள ஊடாக ஹபறனயுடன் தொடர்புபடுத்தும் திட்டமும் முன்மொழியப்பட்டுள்ளது. இத்திட்டமானது அதிக ஆதரவைப் பெற்றுள்ளது. இந்நீளம் மற்றும் ஹபறன மற்றும் திருகோணமலைக்கான புகையிரதப் பாதையை 2030ம் ஆண்டளவில் மின்சாரமயமாக்கி வேகமான புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். இதனால் கிழக்கு-மேற்கு தொடர்பு மேம்படுத்தப்படும்.






15-CM 27932
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு S 3.5 2050 இல் பரிந்துரைக்கப்பட்ட உத்தேச சனத்தொகை பங்கீட்டு மாதிரி (மாவட்ட அடிப்படையிலான சனத்தொகை அளவு)

பிராந்தியங்களுக்கடையிலான தொடர்பை மேமபடுத்தவும், வேகமான செயற்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளவும் காணப்படுகின்ற அதிவேக வீதிகள் முன்னேற்றப்படுவதோடு பிரதான நகரங்களும் முன்னேற்றப்பட வேண்டும்.

நகர்புற வாழ்வியல் முன்னேற்றத்திற்கு திறனுள்ள, மலிவான, நம்பத்தகுந்த பொதுசன போக்குவரத்து ஒரு முக்கிய காரண்யாக அமைகின்றது.

எமது நகர்புறங்கள் மேலதிக தலையீட்டினால் மேலும் கவர்ச்சியானதாக காட்டப்படலாம். குறிப்பாக பாதசாரகளுக்கான விதிமுறைகள் மூலம் இதனை செயற்படுத்தலாம். போக்குவரத்து நெரிசல், முறையற்ற தரிப்புகள் மற்றும் விபத்துகள் போன்ற தற்போதைய இலங்கையின் பிரச்சினைகளில் இருந்து மீள நகர்புற மக்கக்கு சிறப்பானதொரு முறையாக நடத்தலும் சைக்கிளோட்டுதலும் காணப்படுகின்றது. இந்நிலை மாற்றம் பெற திட்டமிடுபவர்கள் மற்றும் கொள்கை நடைமுறையாளர்களுக்கிடையில் மனப்பாங்கு மாற்றமொன்று உருவாதல் அவசியமாகிறது. தற்போதைய முன்னுரிமை வாகனங்களுக்கு வழங்கப்பட்டுள்தற்கு மாறாக முன்னுரிமைகளின் அளவீட்டின்படி பாதசாரிகளை மையப்படுத்திய அபிவிருத்திகளை மேற்கொள்வது எதிர்கால் நகர திட்டமிடலின் பிரதான நோக்கமாக காணப்பட வேண்டும். ஒவ்வொரு காலநிலை மாற்றத்திற்கும் ஏற்றாற்போல் பாதசதரிகள் பகுதி பொருத்தமான வடிவமைப்புகளைக் கொண்டமைதல் அவசியமாகிறது.

தேசிய மட்டத்தில், குடிமக்களின் நகரமயமாக்கல் மற்றும் வாழ்க்கைமுறையின் மாற்றம் அதிகரிப்பதுடன் அதற்கேற்றாற்போல் மறுசீரமைப்புகளுக்கான தேவைகளும் அதிகரிக்கின்றன. WHO விற்கு அமைய இதுவே சுகாதாரமான நாட்டின் தேவையாக இருப்பதுடன் இது சுகாதார சேவைக்கான செலவினத்தையும் குறைக்கும் என தெரிவித்துள்ளது. 1000 மக்களுக்கு ஒரு ஹெக்டேயர் என்பது நியமமான தரநிலையாகும். இது நகர முன்னேற்றத்திட்டங்களில் குறைவாக காணக்கடைக்கும் அம்சமாகும். இருப்பினும், பாரிய அளவிலான திறந்த வெளியின் மக்கள் மறுசீரமைப்புக்காக ஏற்படுத்தப்படும் நில விரிவானது ஒரு சவாலாகக் காணப்படுவதுடன் நகர்புறங்களில் நிலப் பற்றாக்குறை மற்றும் அபிவிருத்தியினாலான அழுத்தம் என்பவற்றை ஏற்படுத்துகிறது. கால்வாய் ஒதுக்கீடு, நதி வங்கிகள், சதுப்பு நிலங்கள், மற்றும் குறிப்பிடத்தக்கவாறான வசதிகளைக் கொண்ட கடற்கரையோர பிரதேசங்கள் போன்ற புதிய அணுகுமுறைகள் மற்றும் அவற்றின் பராமரிப்பு என்பன மக்களுக்கான திறந்த வெளிகளை வழங்குவதில் உள்ள கடினத்தன்மையை இல்லாமல் செய்ய உதவும். அதேநேரத்தில் அண்டை மட்டத்திலான பரந்த வீதி வெளிகளை வழங்குதல். இவ்வாறான வெளிகள் சிறுவர் விளையாட்டுப் பகுதி, ஒன்றுகூடல் வெளிகள் போன்றவற்றிற்குப் பயய்னபடுவதுடன் மக்கள் திறந்த வெளிகளை வழங்கக்கூடிய மாற்றுவழியாகவும் காணப்படுகின்றது. அத்துடன் இது அண்டை அல்லது தெருக்களுக்கிடையிலான நெருக்கத்தை ஏற்படுத்தும்.

**படம் S3.6 2050 முன்மொழியப்பட்ட கட்டமைப்பு வடிவம்**

### 2.3 நடைமுறைப்படுத்தல்

#### 2.3.1 பொதுவான உத்திகள்

மேற்கூறப்பட்ட உத்திகளின் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கு பின்வரும் அளவீடுகள் அவசியமாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) தேசிய பௌதிக திட்டமிடல் கொள்கையை செயற்படுத்துவதற்காக மாநிலத் தலைவர் அளவிலான தலையீடு

2) தேசிய பௌதிக திட்டமிடல் மற்றும் அதன் செயற்பாடுகளின் நிலை குறித்தான மக்களுக்கான பரந்த தொடர்ச்சியான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

3) பொருத்தமான நிபுணத்துவம், தொழில்நுட்பம் மற்றும் நிறுவன அமைப்புகளுடன் தேசிய ஆணைக்குழுக்களின் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் பிரிவை வலுப்படுத்தல்

4) திட்டங்களின் முடிவு பற்றிய உள் ஊர் அபிவிருத்தி திட்டத்தற்கான உறுதிசெய்தல் கண்டிப்பாக்கப்பட வேண்டும். இதற்கான நிதிகள் தேசிய, மாகாண, மற்றும் உள் ஊர் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கிடப்படும்.

5) தேசிய பௌதிக திட்டமிடலுக்குட்பட்ட வருடாந்த நடைமுறைப்படுத்தல் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்

## 3. நிலைபேறான முன்னோக்கு – 2020

முன் கூறப்பட்டதுபோல் சுகாதாரமான சமூக பொருளாதார அபிவிருத்திக்கு திட்டமிடப்பட்ட பௌதிக அபிவிருத்தி அவசியமாகிறது. நிலைபேறான பௌதிக அபிவிருத்தியை அடைவதற்கு முன்மொழயப்பட்ட மேம்படுத்தப்பட்ட தேசிய பௌதிக திட்டத்தின் நடைமுறைப்படுத்தலானது தேசிய பௌதிகத் திட்டத்திற்கான சபையின் உத்திரவின் கீழ் செயற்பட வேண்டும். இது தலைவர், சம்பந்தப்பட்ட அமைச்சர்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டு நிறுவனங்களின் தலைமையில் இயங்குகின்றது. தேசிய பௌதிகத் திட்டமானது பரந்த தேசியமட்ட கொள்கை வழிகாட்டியாக இனங்காணல், தெரிவு மற்றும் பிராந்திய மற்றும் பிராந்தியங்களுக்கு இடைப்பட்ட மற்றும் உள்ஊர் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கான போன்றவற்றிற்காக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். திட்டங்களை அமுல்படுத்தும் போது அரசு, முழுவதில் சிறந்த சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை வழங்கக்கூடியதற்கு முன்னுரிமை வழங்குவதுடன், சமூகத்திற்கு அதிக பலனைப் பெற்றுத் தரக்கூடியது எது என்பது பற்றியும் கவமன் செலுத்தும். அரசு தனது அவசர தேவைகளுக்காக நடைமுறையில் உள்ள சில திட்டங்களையும் மறுபரிசீலனை செய்யும். மற்றும் எதிர்பார்க்கக்கூடிய விரும்பத்தகாத பாதிப்புகள் குறித்து திட்டமிட்ட, நிலைபேறான, போற்றப்படக் கூடிய ஓர் அபிவருத்தியை நாட்டில் மேற்கொள்ளும்.

உயர் முன்னுரிமை திட்டங்களான அதிவேக நெடுஞ்சாலை மற்றும் புகையிரத சேவை ஆரம்பத் திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் அதிக காலதாமதத்தை ஏற்படுத்தாமந் 2025ம் ஆண்டிற்குள் ஆக்கம் பெறுவதுமாய் காணப்பட வேண்டும். இது எதிர்கால குடியேற்ற முன்னேற்ற அபிவிருத்திக்கான அடித்தளத்தை இடவும் தேசிய மற்றும் சர்வதேச வாய்ப்புகளுக்கான ஈவுகளுக்கு மேலான மூலதனத்தை இடவும் உதவியாக அமையும். பாரி கட்டமைப்பு அபிவிருத்தியின் பிற்படுத்தல் காரணிகளுக்கு மேலாக அதன் முடிவானது நாடடின் பௌதிக இயற்கைத் தன்மையில் சீரான ஓர் மாற்றத்தை ஏற்படுத்தும். இதன்மூலம் திட்டமிடப்பட்ட நகர அபிவிருதி மற்றும் குடியேற்ற பரவல் முறையின் ஆரம்ப கட்டங்கள் 2030ம் ஆண்டளவில் அடையப்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள்

S8

# S8. நீர்[18]

## 1. தற்போதைய நிலை

இலங்கையானது குறைவற்ற நீர் வளத்தைப் பெற்றுள்ளது. மத்திய மலைகளில் ஊற்றெடுத்து 103 ஆற்று வடிநிலங்களாக இவை ஓடுகின்றன. இந்நதிகள் அதிகளவான நீரைக் கொண்டுள்ளதுடன் இந்நீரானது அருகிலுள்ள உலர் பிரதேசங்களுக்கு புவியீர்ப்பு, செலவீனமற்ற பாசனம் என்ற முறைகள் மூலம் திசை திருப்பப்படலாம். இலங்கையில் திட்டமிடப்பட்டுள்ள அனேகமான திட்டங்கள் நீர்வளம் போதியளவு கிடைக்காவிடின் தனது ஆநாக்கத்தை அடைந்துகொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படும். முழுமையான நீர்மட்டம் குறித்தான திட்டமிடல் நடவடிக்கையொன்று தற்போதைய மற்றும் எதிர்கால தேவைக்காக உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

அண்மைய கடந்த காலங்களிலான மழைவீழ்ச்சி முறை மாற்றம் பெற்றுள்ளது. வறட்சி மற்றும் வெள்ள நிலைமைகள் அடிக்கடி ஏற்படுகின்றன. "உலர் முதல் ஈரம்" வயையான காலப்பகுதி அதிகரிப்தானது எதிர்வரும் காலங்களில் வறட்சி நிலை ஏற்படலாம் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. மகவெளி ஆற்று வடிநிலத்துக்கா மழைவீச்சி ஆண்டுதோறும் குறைந்து செல்வதாக ஆய்வறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன. இந்த மழைவீழச்சித் தாழ்வு பெரும்பாலும் மத்திய மலைத்தொடரின் வடகிழக்குப் பகுதியிலேயே பெருமளவு காணக்கிடைக்கின்றது. அதாவது குறிப்பாக வடகிழக்கு மற்றும் கவமத்திய மாகாணங்களில். எவ்வாறாயினும் மேற்குச் சரிவுகளுக்கான அதாவது, சபரகமுவ, தெற்கு மற்றும் களுகங்கை, நில்வலா மற்றும் களனி ஆற்றுவடிநிலங்கள் குறிப்பிடத்தக்களவு அதிக மழைவீச்சியைக் கொண்டுள்ளது. வானிலை ஆய்வாளர்களின் கருத்துப்படி உலக வெப்பமாதலின் காரணமாக நீண்டகால மழைவீழ்ச்சி குறைவடைவை எதிர்பார்க்கலாம் என கூறியுள்ளனர். El – Nino, La- Nino மற்றும் கடலிலுள்ள மாற்றம், தற்போதைய வெப்பநிலை, மற்றும் நிச்சயமற்ற ஓட்டமுறை போன்றனவும் இதற்கான காரணங்களாகும்.

மழைவீழ்ச்சியின் நிச்சயமற்ற நிலை காரணமாக "நீர் முகாமைத்துவ முறை" ஒன்று பங்குதாரர்களுக்கான நீர் ஒதுக்கீட்டிற்காக அறிமுகப்படுத்தப்பட வேண்டும். புதிய மென்பொருளான Hydro Mmeteorological Information Systems" (HMIS) நீர்பிடிப்புகளில் இருந்தான நீர்ப் பாய்ச்சலை பயனரின் தேவைக்கேற்றவாறு ஒருங்கிணைப்பதில் உதவும்.

மேலும், உயர் மீள்வழங்களுடைய துறைகளில் மக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு ஊக்கப்படுத்தப்பட வேண்டும். அதாவது வர்த்தக விவசாயம், விவசாயப் பெருளாதார சுற்றுலா, சிறு நீர்பரப்பு மற்றும் உள் நில மீன்வளர்ப்பு என்பவற்றை உதாரணமாகக் கூறலாம்.

எவ்வாறாயினும் "பொதுச் செயலகம்" ஒன்றை நிறுவுவதற்கான வீசெட கவனம் செலுத்தப்பட வேண்டும். இது அனைத்து திணைக்களங்களையும் முன்னிலைப்படுத்துவதோடு, நீர்த் துறை அபிவிருத்தியில் தீர்மானங்களை எடுக்கவும், நீர் பாவனை, திட்டமிடல் போன்ற அனைத்தும்

---

18 எழுதுனர் குழாம்: S R K அருப்பொல (தலைவர்), சரத் காமினி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதலி நிறைவேற்றப்பட வேண்டும். பல முகவர்களின் தற்போதைய தலையீட்டினால் நீர்வள முகாமைத்துவம் குறைந்த தரத்தைக் கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் நீர்பாவனைக்கான தேர்வுமுறை அதிக முன்னுரிமை பெற்று விளங்கும். எதிர்பார்க்கப்படும் நீரின் அளவு மகாவலி ஆற்றுவடிநீரில் காணப்படவதை உறுதிசெய்த பின்னரே அங்கு பாரிய அளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வுகள் குறைந்தது எதிர்வரும் 30 வருடங்களுக்கான நீர் தேவையை சம்பந்தப்பட்ட ஆற்றுவடி நீர் பூர்த்தி செய்யாதவிடத்து "மாற்று நீர் திருப்பல்" இல் எடுக்கப்படும் முடிவுகள் மிக முக்கிய பிரச்சினையாக எதிர்வரும் காலங்களில் காணப்படும். 40 முதல் 60 வருடங்கள் பழமையான தகவல்களைக் கொண்டு "அலகு நீர் வரைபு" மற்றும் "PMF" முடிவுகளை எடுத்தலும் எதிர்கால மழைவீழ்ச்சிகளை எதிர்பார்ப்பதும் சந்தேகத்துக்கிடமானவையாகவே உள்ளன. மாறாக கடந்த 10 (அல்லது 05) வருடங்களளிலான மழைவீழ்ச்சித் தரவுகள் மற்றும் சில கோடபாட்டு ரீதியான ஆய்வுகளும் தற்போதைய காலநிலை மாற்றங்களுக்கு உகந்ததான மழைவீழ்ச்சி மாற்றத்தை மேலும் நம்பத்தகுநத முறையில் வெளிப்படுத்தும். மாற்று நீர் திருப்பலை கட்டுப்பாடான குறைத்து இருக்கும் நீரின் அளவை அறிந்து அதற்குரிய ஆற்றுவடி நீர்களின் மூலம் விவசாயத்திற்கு பொருத்தமான பயிர்களை ஊக்கப்படுத்தலானது விவேகமான ஒரு முடிவாக அமையும். குடித்தல், சக்தி, கைத்தொழில் உபயோகம் போன்ற மேலதிகப் பயன்பாடுகளுக்கும் நீர்வளம் கவனத்தில் எடுத்துக் கெள்ளப்பட வேண்டும். நீர் சேமிப்பு குறித்தான அவசரமான தேசிய முன்னுரிமை ஒன்று உருவாக்கப்படுதல் வேண்டும். "தேசிய நீர் பாவனை பாரிய திட்டம்" ஒன்றை முடிந்தளவு வேகமாக உருவாக்குவதுடன், இலங்கையின் நில மற்றும் நிலத்தடி நீரை பயன்படுமாறு எடுத்துக்கொள்ளல்.

## 2. நெருக்கடியான பிரச்சினைகள்

### 2.1 கைவிடப்பட்ட கிராமப்புற சிறு தாங்கிகள்

#### 2.1.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

கிராமப்புற விவசாயமானது பெரும்பாலும் வயல் விவசாயத்திலும் சமவெளிப் பயிரிடலிலுமே அதிகம் கவனம் செலுத்துகின்றது. பெரும்பாலான கிராமப்புற தாங்கிகள் பராமரிப்புக் குறைவாலும் வரண்டலினாலும் கைவிடப்பட்டுள்ளன.இது விவசாயத்திற்கான நீர் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறான பெரும்பாலான தாங்கிகள் கமநல திணைக்களத்தினாலும், உள் ஊர் அதிகாரிகளினாலும் கண்காணிக்கப்படுகின்றது. மேலும் சிலவை நீர்ப்பாசன திணைக்களத்தாலும் மகாவலி அதிகார சபையாலும் கண்காணிக்கப்படுகின்றது. இத்தாங்கிகளின் சீரமைப்பானது குடிநீர் மற்றும் நீர்பாசனத்துக்கான நீரை அதிகரிப்பதுடன், நிலத்தடி நீர் அட்டவணையையும் மேம்படுத்துகிறது. மற்றைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் நிதியை விட மிகக் குறைவான நிதி இவ்வாறான தாங்கிகளுக்காக ஒதுக்கப்படுவதால் இவற்றின் மறுசீரமைப்பு முன்னுரிமையை இழக்கிறது.

#### 2.1.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- விவசாயத்தின் கைவிடப்பட்ட நிலை காரணமாக GDPயிலும் விவசாயி வருமானத்திலும் மறையான தாக்கங்கள் கொண்டிருத்தல்
- விவசாய குடும்பங்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி
- சமூக அமைதியின்மையின் காரணமாக வேலை ஈடுபாடு குறைவதுடன் தனிமைப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலத்தடி நீர் அட்டவணை குறைவடைவதால் காட்டுப்பகுதிகளில் தாக்கம் ஏற்படல்
- மேற்பரப்பு நீர் சேமிப்புத் தாங்கிகள் கைவிடப்பட்டமையால் உள் ஊர் வாசிகள், பறவைகள் மற்றும் வலங்குகளுக்கான நீர் போதியதாக இன்மை

### 2.1.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- தாங்கிகளின் மறுசீரமைப்புக்காக போதுமான நிதியை உள ஊர் அதிகாரிகளுக்கு வழங்குவதுடன் மறுசீரமைப்பை விவசாயிகளின் உதவியுடன் மேற்கொள்ளல்.
- தாங்கிகளின் மீள் உருவாக்கத்திற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதற்காக நாடு பூராகவும் நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்
- விவசாயியின் பங்களிப்புடன் தாங்கிகளின் எதிர்கால பராமரிப்புக்கான திட்டங்களை வகுத்தல்.
- பயிர்மாற்று முறைகளை அறிமுகம் செய்வதுடன் காலநிலை மாற்றங்களை தாக்கப்பிடிக்கும் உத்திகள் குறித்தான நிகழ்ச்சித் திட்டத்தை ஏற்படுத்தல்

## 2.2 யாழ்ப்பாண தீபகற்பத்தில் நீர் குறைபாடு

### 2.2.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

யாழ்ப்பாண தீபகற்பத்தில் தனிமனதனுக்கான நீரின் அளவும் தரமும் அதிக விரும்பத்தகாத நிலையில் உள்ளதுடன் இது குடிநீர் மற்றும் விவவசாயத்திற்கான நீர் என்பவற்றில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மண் மணல் தனமையுடையதாக காணப்படுவதுடன் கடல நீரின் கலப்பு காரணமாக ஊடுறுவல் தன்மை அதிகரித்துள்ளது. நிலத்தடி நீரின் உப்புத்தன்மை மிக அதிகமாகவும் உறுதியாகவும் காணப்படுகின்றது. நிலத்தடி நீரின அதிகபடியயா உறிஞுஞ்சலானது கடல் நீரை கலக்கச் செய்யும்.

### 2.2.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- யாழ்ப்பாண தீபகற்பத்தில் வாழும் மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீருக்கான செலவினத்தைக் கொண்டுள்ளதுடன் குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் இதனால் பாதிப்படைகின்றன.
- யாழ்ப்பாண விவசாயத்திற்காக அதிகளவு கிணற்று நீர் உறிஞ்சப்படும்போது அதனுடன் கடல் நீர் கலக்கப் பெற்று விவசாயப் பயிர்கள் பாதிப்படைகின்றன.
- வலிமையான நீரை அருந்துவதால் சிறுநீரக பாதிப்புகள்
- விவசாய தொழில் வாய்ப்புகளின் குறைவினால் குறைவான வருமானம், வறுமையின் அளவு அதிகரிக்கப்படல் மற்றும் சமூக அமைதியின்மை
- போதிய மேல் மண் வளர்ச்சி காணப்படாததால் மண்ணரிப்பு உண்டாதல், மண் ஆவியாதல், காற்று ஈரப்பத தரம் குறைதல் இதனால், உலர் வளிமண்டலம்

### 2.2.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- தீபகற்பம் பூராவும் பரவிக் காணப்படும் சிறு அளவிலான தாங்கிகளின் (சுமார 600) மறுசீரமைப்புக்கான வாய்ப்புகளை ஆய்வு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஈரப் போர்த்தல் முறையை அறிமகம் செய்வதன் மூலம் தாங்கி அடிகளை மூடி ஊடுறுவலைக் கட்டுப்படுத்தல்
- சிறுநீரக பாதிப்புகளைக ' கட்டுப்படுத்த எதிர்ச்சவ்வூடு பரவும் தாவரங்களை அறிமுகம் செய்தல்
- கனகராயன் ஆறு சங்கமிக்கும் இடமான இரணைமடு சிந்தலின் திறனை ஆய்வு செய்தல்
- நன்னீரை சேமிப்பதற்காக உப்பு நீரேரிகளை தனிமைப்படுத்தல் உப்பு நீரேரிகளில் கடல் நீர் உட்செல்வதைத்த தடுத்தல்
- ஆறுமுகத்தின் திட்டமான “யாழ்ப்பாணத்தின் ஆறு” திட்டததை மறு பரிசீலனை செய்து அதனை தற்பாதைய தவைகளுக்கு ஏற்றாற்போல் மாற்றியமைத்தல்
- வடமாறாச்சி உப்பு நீரேரியின் நீர்வள அபிவிருத்தி குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகிறது. குறிப்பாக குடிநீர் வசதி
- மழைக்காலங்களில் நீர் வழிந்தோடுவதற்கான மீள்நிரப்பு நீர்நிலைகளுக்கான பொருத்தமான இடங்கள் பற்றி ஆய்வு செய்தல்

## 2.3 பாரிய நீர் முதல்களில் நீரின் தரத்தின் சீரழிவு

### 2.3.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

கிட்டத்தட்ட அனைத்து நிலமட்ட நீர் முதல்களும் பாரியளவில் மாசுபட்டுள்ளன. இது 103 ஆற்றுவடிநீர், நீர்த்தேக்கம், குளங்கள் தாங்கிகள் போன்ற மேலும் பல முதல்களை உள்ளடக்கியது. நீர் மாசுபடுத்தல் செயற்பாடு குறித்தான வலுவான சட்டங்கள் காணப்படுவதில்லை. நடைமுறையிலுள்ள விதிமுறைகளும் பலன் குறைவானதாக காணப்படுகின்றது.

### 2.3.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- நீரின் தரம் குறைந்து சல்வதுடன் அதனை சுத்திகரித்த அதிக செலவினங்கள் மேற்கொள்ளப்பட் வேண்டியுள்ளது. இறுதி பயனாளருக்கு அந்த செலவு பரிமாற்றுவதில் சிக்கல்
- மாசாக்கிகள், விஷவாயுக்கள், தரம் குறைந்த நீர் என்பன சமூக சுகாதாரத்தைப் பாதிப்பதுடன் குறைந்த வருமானமுள்ள குழுமத்தில் மேலதிக சிக்கலைத் தோற்றுவிக்கின்றது.
- அலகா வர்ச்சி நீர்நிலைகளை பாதிப்படையச் செய்யலாம்
- குறைவான நீர்பாசனத்தின் காரணமாக பயிர் அறுவடையில் வீழ்ச்சி

### 2.3.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- நீர் மாசடைதலைக் குறைப்பதற்காக மத்திய அதிகார சபையின் உதவியுடன் தேசிய ரீதியான பொறிமுறையை செயற்படுத்தல்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிக மாசு உண்டுபண்ணுபவர் மீது கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு சிறப்பு "சிறப்புப் பணிப்படை" யினை பொருத்தான அதிபார சபை அங்கீகாரத்துடன் அமைத்து ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் திண்ம திரவ கழிவுகளைக் கொட்டி மாசுபடுத்துவோரைக் கண்டறிதல்.
- ஒதுக்கீடுகளில் சட்டவிரோதமான அத்துமீறல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல்
- காலத்துக்குக் காலம் நீரின் தரம் குறித்து விரிவான ஆய்வுகளை நீர்நிலைகளில் மேற்கொள்ளல்.

## 2.4 நீர்பிடிப்பு அரிப்பு கட்டுப்பாடு

### 2.4.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

நீர்பிடிப்பு அரிப்பானது நீர்த்தேக்கத்தின் திறனை வெகுவாகப் பாதித்துள்ளதுடன் மலைப்பாங்கான பிரதேசங்களில் மண்சரிவையும் அதிகப்படுத்தியுள்ளது. கட்டுப்பாடற்ற கட்டுமாகனங்கள், அகழ்வாராய்ச்சி, காட்டுப் பகுதி சீரழிவு என்பன இதற்கு பிரதான காரணிகளாக அமைகின்றன. இது நிலத்தின் வளத்தைக் குறைப்பதுடன் பயிர்களுக்குப் பொருத்தமற்ற மண்ணாக நிலத்தை மாற்றிவிடுகிறது. மென்மையான பிரதேசங்களில் கட்டுமானங்களை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத்தவும் அதிகாரிகள் அதிக கவனத்தை செலுத்துவதில்லை.

### 2.4.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- நீரின் அளவு குறைவடைவதானது நீர்சக்தி உருவாக்கம், விவசாயம், குடிநீர் என்பவற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- நீர் குறைவு முக்கியமாக நகர்புறங்களில் குறைந்த சுகாதார சுட்டியை ஏற்படுத்துவதுடன் நகர திட்டமிடல் மற்றும் நகர விவரிவிற்கும் தடையாக அமைகிறது.
- நகர்புறங்களில் மண்சரிவு அபாயம்
- காடுகளுக்கு பாதிப்பு மற்றும் நிலச்சரிவு மற்றும் மண்ணரிப்பினால் நீரின் தன்மை மாற்றம்.

### 2.4.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- சிறிய அணைகளை மலைச்சரிவுகளில் அமைப்பதன் மூலம் மண்ணரிப்பை தடுத்தல் மற்றும் நீரின் உட்புகுதலைெ வளர்த்து துணை மண் படிநிலைகளுக்கு உறிஞ்சுதலை வழங்கல்.
- பொருத்தமான கட்டுப்பாட்டு மையங்களின் உதவியுடன் கட்டுப்பாடுகளை வலுப்படுத்தல்
- நாடுபூராவுமான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை பொருத்தமான உள் ஊர் அதிகார சபையின் உதவியுடன் செயற்படுத்தி நீர்நிலை நிர்வாகத்திற்கான சிறந்த பயற்சிகளை வழங்கல். அகழ்வாராய்ச்சி கட்டுப்பாடு, வீட்டுத் தோட்ட அமைப்பு, சிறிய அளவிலான விவசாய வீதிகள் அமத்தல் போன்றவை உள்ளடக்கப்படலாம்.
- மீண்டும் காடாக்கல் செயற்பாட்டை பொருத்தமான கழிவு நீர்த்திட்டம், கட்டுப்படுத்தப்பட்ட பூச்சிக்கொல்லிப் பாவனை செயற்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.5 மழைநீர் விவசாயத்தின் பயன்பாட்டுக் குறைவு

### 2.5.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

பருவகால மழையிலுள்ள மாற்றம் மற்றும் அவற்றின அதிகரத்த தீவிரம், உலர் ஈரத்துக்கான கால அளவிலுள்ள நீட்சி மற்றும் நீண்டகால வறட்சி என்பன தற்போது அதிகமாக முகம்கொடுக்க நேரிடும் நிகழ்வுகளாகும். இந்நிகழ்வு எதிர்காலத்திலும் தொடரும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் மழை நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்கான "குறைந்த செலவிலான பொருத்தமான தொழில்நுட்பம்'' கிராமப்புறங்களில் குறைவாகக் காணப்படுகின்றது.

### 2.5.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- உள்நாட்டு நீர்பாசனத்தின் விலை அதிகரிப்பு காரணமாக கைவிடப்பட்ட உள்நாட்டு விவசாயம்
- தேசிய நீர்வழங்கல அதிகார சபைக்கு விவசாயத்திற்கான குடிநீரை வழங்குவது அதிக செலவுள்ளதாக அமைகின்றது.
- பாலைவனமாதலின் காரணமாக வேலைகளில் ஈடுபடுவதற்கான குறைந்த வாய்ப்பும் சமூக அமைதியின்மையும் உருவாகுதல்.
- வெற்று நிலங்களின் உயர் மண்ணரிப்பு மற்றும் நிலச்சிரவுக்கான பாதிப்புகள்

### 2.5.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- வீட்டுமட்டத்திலான விவசாயத்திற்கு சொட்டுநீர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தல். இதற்காக மேல்நிலைத் தாங்கிகள், சூரியசக்திப் பம்பிகள், மற்றும் பொருத்தமான தாங்கிகளை மழைநீரைச் சேமிப்பதற்காக உபயோகப்படுத்தலாம்
- உள் ஊர் அதிகார சபையின் உதவியுமடன் முறையான திட்டமிடலுடன் கிராமப்புறங்களில் மழைநீர் விவசாயத்தை ஊக்கப்படுத்தல்
- வீட்டுத்தோட்டங்களை ஊக்கப்படுத்தல்
- வீட்டு மட்டத்திலான குடிநீரின் தரத்தை பராமரிப்பதுடன் சுத்திகரிப்பு வசதிகளை வழங்குதல்
- செயற்பாட்டு செலவுகளைக் குறைப்பதற்காக சூரிய பம்பிகளுடன் மேல்நிலைத் தாங்கிகளை பொருத்துதல்

## 2.6 விவசாயக் கிணறுகள் மற்றும் குழாய்க் கிணறுகளின் பாவனை

### 2.6.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

நீர்பாசனங்கள் வழங்கமுடியாத வறட்சி காலங்களில் மேட்டுநில பயிர்களுக்கு நீர் வழங்குவதற்காகப் பயன்படக்கூடியவாறு தற்போதுள்ள விவசாய கிணறுகள் மறுசீரமைக்கப்பட வேண்டும். மாற்றுவழிகள் எதுவும் கிடைக்காத சமயத்தில் குழாய் கிணறுகளின் பாவனையை நாட வேண்டும். ஆய்வாளர்கள் கருத்துப்படி அதிக கனியங்களுடனான நீர் சிறுசீரக பாதிப்பை ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 2.6.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- விவசாய நடவடிக்கைகள் கைவிடப்படுதல் மற்றும் குறைந்த வருவாயுடைய தொழல்களில் ஈடுபடுவதானது அமைதியின்மையை ஏற்படுத்தலாம்.
- நிலமட்டத்தில் உள்ள நீர் வறட்சிக் காலங்களில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படலாம் எனினும் அதிக நீர் பம்பலானது நீர் அட்டவணையில் பாதிப்பைச் செலுத்தலாம்

#### 2.6.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் விவசாயக் கிணறுகளை உருவாக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி எதிர்கால வறட்சிக் காலங்களில் அதன்மூலம் பயனடைதல்
- சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அதிகாரங்களுக்கிடையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமான்றை உருவாக்கலும் அதற்குரிய மாவட்டங்களுக்கான சில திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- "தோண்டப்பட்ட கிணறுகள்,சூரியப் பம்பிகள்,மேல்நிலைத் தாங்கிகளுக்கான" தொழில்நுட்ப உதவியை வழங்குதல். அத்தொழில்நுட்பங்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் காணப்படும் வளங்களுக் அமைவாக ஏற்படுத்தப்படல் வேண்டும்.
- கைவிடப்பட்ட விவசாயக் கிணறுகள், தோண்டப்பட்ட கிணறுகள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை மறுசீரமைத்தல்

## 2.7 நீர்ப் பாவனையின் குறைபாடு

### 2.7.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

மேம்படுத்தப்பட்ட நீர்ப் பயன்பாடானது பெரும்பாலான விவசாய மற்றும் நீர்பாசசன திட்டங்களில் உள்ளடக்கப்படுவதில்லை. வயல்களில், OFCகளில், மற்றும் வீட்டு அளவிலான தோட்டத்திலும் மேம்படுத்தப்பட்ட நீர்ப்பவனையானது 40வீதமான தற்போதைய தேவையை சேமிப்பதுடன் இச்சேமிப்புகள் மேலதிக நிலங்களுக்கு நீர்பாசனத்திற்காக உபயோகிகப்படலாம். பங்தாரர்களுக்கிடையிலான விழிப்புணர்வின் குறைபாடு, நீர்பாசன பிரச்சினைகளில் கால்வாய்த் திருப்பப் புள்ளிகளின் அளவீடு குறித்தான குறைவான அறிவு, பொருத்தமற்ற பயிர்கள் பயன்பாடு, மணல் நிலங்களுக்கு விவசாயத்திற்காக நீர் பாய்ச்சப்படுதல், குறைவாக பராமரிக்கப்படும் கால்வாய்கள் போன்றவை நீர் பாவனைக்கான திறமின்மையை ஏற்படுத்தும்.

### 2.7.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- நீர் நேமிப்பு வசதிகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பிற்காக செலவினங்களில் அதிகரிப்பு
- கொள்வனையாளர்கக்கு நீர் அதிக செலவுள்ளதாகுதல்
- அதிகமாக சேமிக்கப்பட்டுள்ள நீரானது குடிநீரக்காகவும் நீர்பாசனத்திற்காகவும் பகிரப்படலாம்
- நீரின் மேம்படுத்தலானது வறட்சியான பகுதிகளுக்கு நீரை வழங்க போதுமான அளவை சேமிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.7.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- விவசாயத்துறை, மகாவலி அதிகார சபை, நீர்பாசன திணைக்களம் என்பவற்றின் உதவியுடன் நீர்பாசனத்தில் நீர் பயன்பாட்டு திறனை அதிகரிப்பது குறித்தான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தல்
- சொட்டுநீர் நீர்பாசனம், பாரிய நீர் ஒதுக்கீட்டை ஊக்கப்படுத்தல்
- "கறைந்த கால அறுவடை"யுள்ள பயிர்களின் செய்கையை விவசாயிகளிடத்தில் ஊக்கப்படுத்தல். இது வறட்சிக் காலங்களில் நீரை சேமிக்க உதவும்
- வறட்சியைத் தடுப்பதற்காக R&D ஊக்கப்படுத்துவதுடன் சில மாதகால பயிர் வகைகள் அபிவிருத்தி
- விவசாயத்திற்கு அவளவிடப்பட்ட அளவில் நீரை வழங்கி ஒதுக்கீடு குறித்தான அளவைக் கண்காணித்தல்

## 2.8 குடிநீர் பிரச்சினைகள்

### 2.8.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

நகரமயமாதல் மற்றும் தொழில்துறைக் கழிவுகள் நீர்நிலைகளை அடைதல் போன்றவற்றால் நீரின் தரம் வெகுவாக குறைந்து செல்கின்றது. இது பகுதியாக கிராமப்புறங்களுக்கான நீர் வழங்கலுக்கான குறைந்த முன்னுரிமை அளிக்கப்படுதல் மற்றும் சிறிய மற்றும் செலவு குறைந்த செலவிலான திட்டங்களை அமுல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை துறை சார்ந்த அதிகார சபைகள் வழங்கத் தவறியுள்ளமையுமே காரணிகளாக காணப்படுகின்றது. வறட்சி மற்றும் வெள்ளத்தின் நிச்சயமற்ற மாறுதல்களின் காரணமாக தேசிய நீர் வழங்கல் திட்டத்திற்கு மேலதிகமாக உள் ஊர் மட்டத்திலான நீர் சேமிப்பிற்கான உடனடித் தீர்வு எடுக்கப்படல் அவசியமாகிறது. அத்துடன் உயர் தொழில்நுட்ப இழப்புகள் மற்றும் பருக்ககூடிய நீர் அமைப்பில் உள்ள நீர் திருட்டு என்பன நீர்க்குறைபாட்டை மேலும் உக்கிரமடையச் செய்கின்றன.

நகரத் திட்டமிடல், தொழில்துறை வலயங்கள், துறைமுகங்கள் போன்ற இடங்களுக்கு தொழில் மற்றும் குடிநீர் போன்ற இரு தேவைகளுக்குரான நீர் வழங்கலுக்கு சம முன்னுரிமை அளித்தல் வேண்டும். நகர அபிவிருத்தித் திட்டங்கள், வைத்தியசாலைகள போன்றவற்றிற்கான வர்த்தக நீர் வழங்கலுக்கான அடுத்த 50 வருடத்திற்கான தேவையின அளவை ஒரே தடவையில் மட்டிடல் வேண்டும். ஆகவே, துறைசார்ந்த அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களுடன் சிறந்த பேச்சுவார்த்தையை பராமரித்தல் அவசியமாகிறது.

பொலொன்னறுவை, அநுராதபுரம் மற்றும் வடமேல் மாகணங்களில் காணப்படும் சுகாதாரப் பிரச்சினைகளான CKDU போன்றவை எதிர்காலத் திட்டமிடலில் கவனம் செலுத்தப்பட வேண்டும். வறண்ட பிரதேசங்களில் மழை நீரை குடிநீருக்காகப் பயன்படுத்த ஊக்கப்படுத்துவது குறைந்த செலவிலான ஒரு முறையாகும். அத்துடன் CKDU விற்கான பிரதான காரணி கண்டறியப்பட வேண்டும். வயல் வெளிகளின் கழிவுநீர் குடிநீருடன் கலப்பது தடுக்கப்பட வேண்டும் - தேசிய நீர் வழங்கல் இதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

அனைத்துப் பெரிய ஆறுகளிலும் நீரின் தர மதிப்பீடு மற்றும் கண்கானிப்பு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய நிலவரப்படி குடிநீரானது 45% ஆக காணப்படுவதுடன் இது 60% ஆக 2020ல் முன்னேற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. NWSDB ஆனது நீர் மற்றும் கழிவு நீருக்கான முக்கிய முகவராகும். NWSDB ஆனது தேசிய நீர் வழங்கலில் 35% தை ஒழுங்கமைத்து வழங்குவதுடன் ஏனைய நிறுவனங்களான தேசிய ஆணைக்குழுக்கள், சமூக நீர் திட்டமிடல்கள் போன்றவை மிகுதியான 10% மக்களுக்கு நீர் வழங்குகின்றது.

குடிசன உயர்வு மற்றும் நகரங்களுக்கான இடம்பெயர்வின் அதிகரிப்பு என்பன காரணமாக நீர்த் தேவையும் அதிகரிப்புக்கு உட்படும். அதே நேரத்தில், கட்டுப்பாடற்ற மனிதனின் இயற்கை மீதான மாற்றம், தொழில்துறை கழிவு வெளியேற்றம், திட கழிவு கொட்டும் பகுதிகில் இருந்து வழிந்தோடல், வீடுகள், உணவகங்கள், நிறுவனங்களிலிருந்தான கழிவு நீர் வெளியேற்றம் போன்றவை நீர் மதல்களை மாசுபடுத்திய வண்ணம் உள்ளன.

காலநிலை மாற்றமும் குடிநீர் தேவைக்காக காணப்படுகின்ற நீர் முதல்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நீர்த் துறையில் காணப்படுகின்ற பிரதான பின்னடைவானது நீர்நிலைகள் விரிவாக்கத்திற்கான குறைவான முதலீடாகும். பொதுவாக ஒரு வீட்டிற்காக 0.5மி. ரூபாய் நிலைபேறான நீர் வழங்கலுக்கு அவசயமாகிறது. மக்கள் குழாய் வழி நீரை எதிர்ப்பார்ப்பதுடன் இது மலிவான நீர் வழங்கல் முறையாக காணப்படுகின்றது (வீடொன்றிற்கான ஒழுங்கமப்பின் முதலீடு 20,000 முதல் 25,000 வரை). 60% ற்கும் மேற்பட்ட NWSDB கொள்வனவாளர்கள் 310/மாதம் என்ற அளவிற்கும் குறைவான தொகையை செலுத்துவதுடன் மாதம் ஒன்றிற்கு 15 தொன் என்ற அளவில் நீரைப் பயன்படுத்துகின்றனர். மாற்று நீர் வழங்கல் முறைகளான பம்பி வசதிகளுடன் ஆழமற்ற கிணறுகள், நம்பத்தகுந்த தரமான நீர்முதலிலிருந்தான நீரைக் கொண்டுவந்து சேர்க்கும் முறை என்பன அதிக விலையுயர்ந்த வழிகளாக காணப்படுகின்றன. இது மாதாந்தம் 3000- 6000 ரூபாய வரை வேறுபடும். சில மக்கள் மாதாந்தம் 10-15மீ$^3$ நீரைத் தருவித்துக் கொள்ள மாதாந்தம் 10,000 ரூபாய அளவிலான தொகையை செலயிடுகின்றனர்

மழைநீர் சேமிப்புத் திட்டமானது அத்தியாவசியமாக காணப்படுவதுடன், நாட்டில் தொடரும் நீண்ட வறட்சி காரணமாக கொள்வனவாளர்கள் குடிசீர், சமையல், மலசலகூட தேவை போன்றவற்றிற்காக 10-15மீ $^3$ நீரை சேமித்து வைக்க வேண்டிய நிலையிலுள்ளனர். மழைநீர் சேமிப்பு முறைக்காக ஒரு குடும்பத்திற்கு தலா 100,000 முதல் 150,000 வரையான தொகை முதலீடாக செலவிடப்பட வேண்டும். புதிய கொள்வனவாளர்களை அவர்களின் நீர்த் தேவைக்காக மழைநீர் சேமிப்புத்திட்டததை பரிந்துரை செய்வது சிரமமாக உள்ளது. காரணம் அவர்கள் NWSDB இலிருந்நதான நகர மற்றும் நகரமற்ற பிரதேச மக்கள் குறைந்த செலவில் தரமான, நம்பத்தகுந்த நீர் வசதியைப் பெறுவது பற்றி அறிந்துவைத்துள்ளதாகும் ( ஆரம்ப மூலதனம் 20,000 ஆக் காணப்படுவதுடன் மாதாந்த கட்டணம் 310 ரூபாவிலும் குறைவாக காணப்படுதல்) மழைநீர் சேகரிப்புத் திட்டம் குறித்தான நிகழ்ச்சித் திட்டங்களை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பாக CKDU பாதிப்புள்ள பிரதேசங்களில்.

குறைவான பண மீளப் பெறலானது மற்றுமொரு பின்னடைவாகும். அரசு (O&M) மற்றும், புனர்வாழ்வு செலவினங்கள்களுக்காக NWSDB மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கு நீர்க் கட்டணத்தை அதிகரிக்க அனுமதியளிக்கவில்லை. குறைவான (O&M) நிதி மற்றும் சேவையின் தரம் சீர்குலைந்ததாலும், சிறந்த நீர் வழங்கல் மூலம் சிறந்த சுகாதார நிலையை அடைவதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறைவான தரமுடைய மூலப் பொருட்க் மற்றும் குறைவான தரமுடைய குழாய் வலையமைப்புகினாலும் பெரும் நீர்க் கசிவுகள் ஏற்படுகின்றன. திறனான நீர் வழங்கல் திட்டத்தற்கான நிதி ஒதுக்கீடுகள் குறைவாக உள்ளன. இது, நீர் முதல் தெரிவு, வீதி வரிப்படங்கள், குடிபெயர்வு போக்குகள் பற்றிய தகவல்கள், நடைமுறையிலுள்ள திட்டமிடல்கள், ஆற்று அளவத்திட்ட நிலையங்களின் குறைபாடு, தற்போதைய நீர் முதல் குறித்தன மதிப்பீடு.EIA ஆய்வுகள், நீர் முறைகள் ஆய்வு, நெருக்கடியான கட்டமைப்புகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் ஒதுக்கீடு, மண் ஆய்வுகள், NBRO அனுமதி போன்றவை இதில் உள்ளடங்கும்.

நீர் வழங்கலுக்கான தரமான பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவும் குறைவாக உள்ளது. NPA வழிகாட்டுதல் மீதான தடைகள் மற்றும் போதிய நிதி ஒதுக்கீடு இன்மையினால் நீர் வழங்கலுக்கான தரமான பொருடகள் மற்றும் சேகைளின் கொள்வனவு நிலைபேறற்றுக் காணப்படுகின்றது. முழுமையான பொருளாதார நன்மையானது தற்போதைய கொள்வனவு முறை, குறிப்பான மின் மற்றும் பொறியியல் பொருட்களான பம்பிகள், மின்தோற்றிகள், மோட்டார்கள், நீரியல் வால்வுகள், குளோரினேற்றிகள், சிகிச்சை கருவிகள், நீர் அளவீட்டுக் கருவிகள், குழாய்கள மற்றும் தொடர்புபடுத்திகள் போன்றவற்றினால் எதிர்பார்த்த அளவில் அடையப்படவில்லை.

### 2.8.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- சுகாதார நிலைகளில் பாதப்பு குறிப்பாக குறை வருமானமுள்ள குழுக்களில் பெரும் பாதிப்பு
- குறைந்த வருமானமுடைய குடும்பங்கள் பயன் பெறக்கூடியவாறான குறைந்த கட்டணத்திலான "சிறிய திட்டங்கள்".
- தாங்கிகளில் நீர் சேமிப்பு அதிகமாகும் போது நீர் அட்டவணை அதிகரிப்பதுடன், தாவர வளர்ச்சி மற்றும் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு ஏற்படும்.
- இரசாயன கலப்புகள் கொண்ட நீரானது CKDU , சிறுநீரக கற்கள், மற்றும் பல் சம்பந்தமான நோய்களை ஏற்படுத்தும்.

### 2.8.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- மாகாண சபை மற்றும் டீனைய திணைக்களங்களின் உதவியுடன் சிறிய அளவிலான குளம் மற்றும் "சிறிய திட்டங்களுக்குப்" பொருத்தமான இடங்களைக் கண்டறிய நாடுபூராவுமகாள பரந்த வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல். மாகாண சபை உதவியுடன் சிறி குளங்கள் மற்றும் "சிறிய திட்டத்துக்கான" பொருத்தமான இடங்களை தெரிவு செய்து கிராம அளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு புவியீர்ப்பிலான குழாய் நீர்த்திட்டங்களை அமுல்படுத்தல்.
- குறிப்பிட்ட பிரதேசங்களுக்குப் பொருத்தமான வடிவமைப்புகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப வசதியை தேசிய நீர் வழங்கல் ஆணைக்குழு வழங்குதல்
- அரசு போதுமான நிதி ஒதுக்கீட்டை மேற்கோள்ளல்
- நீர் வழங்கலின் தொழில்நுட்ப திறனை அதிகரிப்பதுடன் கட்டணங்களை விதிதிதல் மற்றும் மீளப் பெறல் முறைகளை முன்னேற்றுதல்
- குடிநீர் பிரித்தெடுக்கப்படும் பகுதிகளில் வயிலவெளிகளின் கழிவுநீர் கலப்பதைத் தடுத்தல்
- CKDU பாதிப்புள்ள பிரதேசங்களில் மழைநீர் பாவனையை ஊக்கப்படுத்தல்
- குடிநீர் மட்டுமல்லாது அனைத்து நீர் முதல்களினதும் நீர் தரம் குறித்தான ஆய்வை அடிக்கடி நடத்துதல்
- இரசாயனப் பசளைகள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின பாவனையை கட்டுப்படுத்துவதுடன் விவசாயிகளை இது குறித்து அறிவூட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- CKDU மற்றும் ஏனைய சுகாதார தாக்கங்களைக் கொண்ட பிரதேசங்களுக்கான நீர் வழங்கலை குழாய் முறை மூலம் ஏற்படுத்தல் சிறிய அளவிலான குளங்களை கட்டுதல்
- கிடைக்கக் கூடிய நீர்வளம் பற்றிய ஆய்வை நாடுபூராகவும் மேற்கொள்வதுடன், பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான நீர் தேவையை பற்றி ஆய்வு செய்தல்
- உற்பத்தியாளரின் தொழிற்சாலை அமைவிடம் குறித்தான முன் தகைமை பொருளின் தரத்திலும் பாவனையாளர் செயல்திறனையும் அடிப்படையாகக் கொண்டது.
- பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களுடனான நீண்டகால பங்குத்தொடர்பு, அதாவது, தேசிய உற்பத்தியாளர்கள், கட்டமைப்பாளர்கள், முகவர்கள் (SIERA தொலைத்தொடர்பிற்காகவும் Lanka Transformer இ.போ.ச விற்காகவும்) போன்றோர்
- தொழிற்வாலை அமைவிடம் குறித்தான உற்பத்தியாளர்கள் முன்தகைமை முக்கிய பொருட்களின் கொள்வனவில் கவனம் செலுத்தல், உதாரணமாக EXIM சீன வங்கியினால், இந்தியா, தென்கொரியா வினால் வழங்கப்பட்ட சுத்தமான பொதிகள்
- கட்டுமானத் துறையில் உள்ள திறமையான ஊழியர்களின் குறைபாட்டை எடுத்துக் கூறுவதற்கான அளவீட்டு முறை. தொழில்துறை, ஒப்பந்ததாரர்கள், வர்த்தக அரங்கு, திறன் அபிவிருத்தி அமைச்சு போன்றோரின் உதவியுடன் பயிற்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல். இது மற்றைய துறைகக்கும் பொருந்தும்.
- நீர் வழங்கல் துறை திட்டமிடல் தகவல்களை ஊக்கப்படுத்தல்
- தரமான, அதிக, விசேட பரவுதல்களுடைய நீர்வளங்களின் கண்டுபிடிப்பு
- வேறுபட்ட நிலைமைகளுக்கான தேவை நிலையங்களின் தேவைக்கான வழிகாட்டுதல்
- (M&E) பொருட்கள், நீர் கட்டமைப்பு, உள்ளெடுப்பு, பரவலின் கடத்தல், குழாய வழிகள், வயது, திறன், மற்றும் பெயரைக் கொண்ட வால்வுகள் போன்றவற்றின் சொத்து நிர்வாகத் தகவல்
- நடைபாதைகள் மற்றும் படிகளை உள்ளடக்கிய வீதி வரைபடம்
- நீர்க்கட்டமைப்பு, உள்ளெடுப்பு,WTP,நீர்த்தேக்கங்கள், பாலங்கள் போன்ற இடங்களை அறிந்து கொள்ளல்
- போட்டியான பாவனையாளர்களுக்கிடையிலான நீர்வளப் பகிர்வின் முறையிலுள்ள குறைபாடு (நீர்பாசனம், சக்தி, விவசாயி, மறுசீரமைப்பு)
- வருவானமற்ற அதிக நீர்வளம்
- கசிவுகளினால் இழப்பு. குறைவான தரமுடைய குழாய்கள் மற்றும் கட்டுமானங்களிகாலான கசிவுகள்
- நீர் மானிகளின் குறைவான தரம்- இது கொள்வனவுப் பிழையாகும். தாங்கும் ஆற்றலுக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும். முன்தகைமை பெற்ற உற்பத்தியாளர்கள் அவசியமாகின்றனர்.
- சட்டத்துக்கு முரணான குழாய் நீர் கட்டுமானங்கள். இவ்வாறான கட்டுமானங்களால் உள்ளார்ந்த கசிவுகள் அதிகாவதுடன், கட்டணங்களும் அதிகமாக அறவிடப்படும்
- NRW குறைவிற்காக மாற்று அளவீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- NRW கூறுகளின் பாவனைத் தடுப்பு
- தரமான பொருட்களின் கொள்வனவு
- குழாய் அமைக்கும் முறைகளை முன்னேற்றுதல் (வீட்டு தொடர்புகள் மற்றும் 63mm PVC வழிகள்)
- வீட்டுத் தொடர்புத் திட்டத்திற்கான பொருட்கள் மற்றும் சேவைகளிற்காக PPP முறையை அறிமுகப்படுத்தல்
- சட்டத்திற்மு முரணான குழாய் அமைப்புகளைக் கண்டறிவதற்காக கட்டணத் திட்டம், மக்கள் பங்களிப்பு போன்ற உத்திகளை கையாளதல்
- தரமான பொருட்களின இருக்கையை உறுதி செய்வதற்காக குழாய் அமைப்பு மற்றும் பொருட்களுக்கான விதிமுறைகளை அறிமுகஞ்செய்தல்
- மழைநீர் விவசாயத்திட்டம்
- இலங்கையில் மழைநீர் விவசாயத் திட்டத்தை ஊக்கப்படுத்துவதற்குப் போதுமான வசதி காணப்படாமை
- மழைநீர் முறையின் பயன்கள் சந்தைப்படுத்தப்பட வேண்டும். மழைநீர் குடிப்பதற்கும் பொருத்தமானது.
- பாரிய் திட்டங்கள் பொதுசனத் துறைகளில் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் வீட்டளவில் கண்டறியப்படல்
- நடைமுறையில் இருக்கும் வெளிநாட்டு முதலீட்டு திட்டங்களுடன் இருக்கும் நிதியினைக் கொண்டு மழைநீர் விவசாயத்தை மேம்படுத்தல்
- NWSDB ஆனது தனது திட்டமிடலின் 5 வீதத்தை கிராமப்புற நீர்வழங்கல் முறைக்காக ஒதுக்குவதற்குத் திட்டமிட்டுள்ளது. இது மழைநீர் விவசாயத்திற்கு கைகொடுக்கலாம்

## 2.9 கிராமப்புற பாடசாலைகளில் கழிப்பறைக்கான நீர்வசதி உட்பட சுகாதாரம்

### 2.9.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

கிராமப்புற பாடசாலைகளில் தேசிய நீர்ப் பயன்பாடானது உடனடியாக விருத்தி செய்யப்பட வேண்டும். குடிநீருக்கான போதிய குழாய் நீர் வசதியின்மை மாணவர்களுக்கிடையில் சுகாதார பிரச்சினையை ஏற்படுத்தும் பாரிய காரணியாக உள்ளது.

### 2.9.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- குடிபாவனை மற்றும் கழிப்பறைக்கான போதிய நீர்வசதியின்மை போன்றவை மாணவர்கள் மத்தியில் தொற்று நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணமாக உள்ளது.
- சிறுவர்களின் சுகாதார தாழ்வானது நகர்புற வாழ்க்கைத் தரத்தைப் பாதிப்பதுடன் பெற்றோரின் வருவாய் ஈட்டு முறையையும் முடக்கவிடுகிறது.
- போதுமான சுகாதார வசதியின்மையானது சுற்றாடலின் தரத்தை வெகுவாகக் குறைக்கினறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### 2.9.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

பாடசாலை மாணவர்களுக்கடையே பரவிவரும் சுகாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முறையான நீர்வழங்கல் திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். இதற்காக மழைநீர் சேமிப்பு, தோண்டப்பட்ட கிணறுகள், மேல்நிலைத் தாங்கிகள், சூரியப் பம்பிகள் என்பவற்றை உபயோகிக்கலாம்.

### 2.10 தேசிய மட்டத்திலான சுகாதார அபிவிருத்தி

#### 2.10.1 தற்போதைய நிலை மற்றும் பிரச்சினைகள்

வேறுபட்ட துறைகளில் சுகாதார முன்னேற்றத்துக்கான தேசிய மட்ட அவதானம் அவசியமாகிறது. தற்போது பெரும்பாலான நகரங்கள் நகரத்திற்குப் பிரவேசிக்கும் மக்களி சுகாதார தேவையை நிறைவு செய்வதற்குப் போதுமான கட்டமைப்பைக் கொண்டிருப்பதில்லை. பஸ் தரிப்பிடங்கள், புகையிரத நிலையங்கள், பூங்காக்கள், வர்த்தக நிலையங்களை இதற்கான உதாரணமாகக் கூறலாம். "தேசிய கொள்கை"க்கு அமவாக பொருத்தமான சுகாதார வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படுவதுடன் அவற்றின் பராமரிப்புக்காக ஒரு சிறு அளவை ஒதுக்கீடு செய்தல் அவசியமாகும்.

நிறுவனங்களில் நிதி ஒதுக்கிடும்போது சுகாதாரத்திற்காக மிகக்குறைந்த அளவு நிதியே ஒதுக்கப்படுகின்றது. ஈகவே தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு முன்னேற்ற நடவடிக்கையின்போதும் சுகாதாரத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலான கொள்கை முடிவுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு நகர அபிவிருத்தி நடவடிக்கையும் அருகாமையிலுள்ள நீர் வழங்கல் மற்றும் சுகாதார முறைகளை கவனத்தில் கொள்ளாது செயற்படுவது தடுக்கப்பட வேண்டும். மேலும் முழுதான பராந்திய நோக்குடன் செயற்படுதல் வேண்டும். முன்னோக்காளர்கள் மற்றும் ஏனை துறை சார்ந்தவர்களி ஆய்வு முடிவுகள் சேகரிக்கப்பட்ட பின் கிராமப்புற் மற்றும் தோட்டப்புற சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

#### 2.10.2 எதிர்பார்க்கக்கூடிய சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் தாக்கங்கள்

- சுற்றுச் சூழல் தரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும்
- தொற்றுநோய்கள் பரவும்
- சுற்றாடல் அழகு குறைவடைவதுடன் நிலம் பெறுமதி இழப்பு மற்றும் சுற்றுலா பயணிக் வருகை குறைவு

#### 2.10.3 தீர்வுகள், அளவீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள்

- பெரிய நகரங்களில் தேசிய முன்னுரிமையுடன் பொது சுகாதார வலையமைப்பு வழிகள் மற்றும் சிகிச்சை முறைகள் அமுல்படுத்தப்பட வேண்டும். எதிர்வரும் 30/50 வருட கழிவு முகாமைத்துவ தேவையை நிறைவேற்ற இது அவசியமாவதுடன் புது சுகாதார வசதிகள் புதிய வலையமைப்புடன் இணைக்கப்பட வேண்டும்.
- தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைக்காக நடைமுறையிலுள்ள நகர சுகாதார சேவைகள் முன்னேற்றப்பட வேண்டும். மேலும் கழிவுகள் இயற்கைக்கு விடுவிக்கப்படுவதற்கு முன்னர் முறையான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மக்களிடமிருந்து கழிவுகள் முறையான சிகிச்சைகள் இன்றி இயற்கைக்கு விடப்படாமல் இருப்பதை உறுதி செய்தல். மாசுபடுத்துபவர்களிடம் தண்டப் பணம் அறவிடப்பட வேண்டும்.

## 3. நிலைபேறான முன்னோக்கு – 2020 மற்றும் அப்பால்

### 2030 முன்னோக்கு

அனைத்துக் குடிமக்களுக்குமான "தரமான குடிநீர்", காலநிலை மாற்றத்திற்கு முகம்கொடுத்தல், வறட்சி அல்லது மழை, விவசாயம், வயல், OFC, மற்றும் வர்த்தக விவசாயத்திற்கு போதுமதன நீர் வழங்கல் போன்றவற்றின் அணுகலுக்கான அடிப்படை நோக்கங்களை வழங்கல். கிராமங்கள் தோட்டப்புற மற்றும் நகரவாசிகளுக்கான அடிப்படை சுகாதார வசதியை வழங்கலானது நீர் துறையின் இறுதி நோக்காகக் காணப்படும்.

### 2020

2030ற்கான பாதையில், 2018 முதல் 2020 வரையான காலப்பகுதியில் CKDU வினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மற்றும் ஏனைய ஆகுமான இடங்களில் மழைநீர் சேமிப்பை ஊக்கப்படுத்தல்; குடிநீர் மற்றும் விவசாயத்திற்காக சிறு தாங்கிகளை புணரமைத்தல்; யாழ்ப்பாணத்தில் நீர்நிலைகளில் மீள்நிரப்பை ஏற்படுத்தல் போன்றவற்றை உள்ளடக்கும். மற்றைய படிகளில் குடிநீருக்காகவும் ஏனைய சிறு விவசாயத்திற்காகவும் ஆழமான கிணறுகளை சுத்தப்படுத்தலும் மறுசீரமைத்தலும் இடம்பெறும். மேலும் மாகாண அதிகார சபைகள் மற்றும் இதற்குரிய அரச முகவர்களின் உதவியுடன் கிராமப்புற மற்றும் தோட்டப்புற பாடசாலைகளின் சுகாதார நிலையை மேம்படுத்தல் என்பது அமையும். தேவையான தகவல்கள் மற்றும் வேலையை அறிந்துகொள்வதற்காக உடனடியான கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட வேண்டியதுடன் போதுமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 2025

அபிவிருத்திப் பாதையின் இரண்டாவது பாகம் 2020 முதல் 2025 வரை காலப்பகுதியில் முறையான திட்டமிடல் மற்றும் கொள்கைத் தீர்மானங்கள் 2030ன் நோக்கங்கனை அடையும் முகமாக ஏற்படுத்தப்பட வேண்யிருப்பதுடன் போதுமான நிதி ஒதுக்கீடு மற்றும் சமூகப் பொருளாதாரத்தில் குறைவான தாக்கத்தை செலுத்தக்கூடியவாறும் காணப்பட வேண்டும்

நிலமட்ட மற்றும் நிலத்தடி நீர் என்பவற்றின் பயன்பாட்டை மேம்படுத்தல், மற்றும் நீரின் தரத்தை பராமரிப்பதற்கான அளவீடு போன்றவற்றைக் கொண்ட "தேசிய நீர்ப் பாவனை பாரிய திட்டம்" ஒன்றின் உருவாக்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

2025ம் ஆண்டில் நீர்த் துறையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அரச முகவர்களின் ஒன்றிணைப்புடனும் "நீர் முகாமைத்துவத்துக்கான தேசிய செயலகம்" அமைக்கப்பட வேண்டும். இது நீர்த் துறை சம்பந்தமான கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்கான தளமாக அமையும். நோக்கங்கள் மக்கள் தொகையின் 65 வீதமானவர்களுக்கு நீர் வழங்கல், குழாய வலையமைப்பை அபிவிருத்தியடையச் செய்தல், RO நடுகை போன்ற முறைகளை அமுல்படுத்தல், மழை நீர் சேமிப்பு, போதுமான நிதி ஒதுக்கீடு, பொள்வனவுத் திட்டம், தலைநகரங்களில் கழிவுநீர் முகாமமைத்துவம், கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களின் சுகாதார மேம்பாடு என்பவற்றை உட்ளடக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



16-CM 27932

திட்டமிடப்பட்ட பாரிய வேலைகளுக்கடையில், தற்போதைய 45% ஆக உள்ள குடிநீர் எல்லையை 60% ஆக NWSDB மற்றும் தேசிய அதிகார சபைகளுடன் இணைந்து முன்னேற்றுதல். NCP , NWP யிற்கான நீர் விநியோகம் விரிவுபடுத்தப்படும். 900MCM/ஆண்டு இனை NCPயிற்கும், 100MCM/ஆண்டு இனை NWP யிற்கும் திசை திருப்பல்.

**2030**

அபிவிருத்திப் பாதையின் முடிவிலான 2030ல் நாடுபூராகவும் உள்ள 90 வீதத்திற்கும் மேற்பட்ட நீர்தாங்கிகள் அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்பினால் மீள் உபயோகத்திற்கு எடுக்கப்படும். சிறிய. நடுத்தர அளவிலான தாங்கிகளின் சேமப்பிலான இழப்புகள் குறைக்கப்படும். WHO குடிநீர் முதல்களுக்கான தரப்படுத்தலுக்கு அமைவாக ஆறு மற்றும் நீர்நிலைளின் தரம் பேணப்படுவதுடன், விவசாயத்திற்கு உகந்ததாகவும் இது மாற்றப்படும். 65வீதமான மக்களின் குடிநீர்த் தேவை குழாய்வழியாக மற்றும் ஏற்பாடு செய்யப்பட்ட வளங்களான RO நடுகை மூலம் வழங்கப்படும். மிகுதி 35 வீதமானது மழைநீர் சேமிப்பின் மூலம் நிறைவேற்றப்படும்.

"தற்கால மென்பொருள் பாவனை" களின் உதவியின் மூலம் "விவேகமான நீர் ஒதுக்கீடு" என்ற முடிவுகளை ஆதரிக்கும் செயற்பாடு "நீர் முகாமைத்துவத்துக்கான தேசிய செயலகம்" இனால் நீரப்பாசனம்,விவசாயம், குடிநீர், மற்றும் நீர்ச்சக்தி என்பவற்றிற்காக நீர் ஒதுக்கீட்டினை 2030ல் மேற்கொள்ளும்.

2030ற்கு அப்பால் மாற்று நீர்வழித் திருப்பம் நடைபெறாது. மாறாக, "தேசிய நீர்ப் பாவனை பாரிய திட்டம்"ஆனது காணப்படுகின்ற மேலதிக நீர் அடுத்த 50 வருடங்களுக்குப் போதுமானது என்று தெரிவிக்கின்றது. ஆனால் ஆற்றுவழிகளில் நீர்ப்பாவனை அபிவிருத்திகள் மேம்படுத்தப்படும். பொருத்தமான விவசாயப் பயிர்கள், குடிநீர் தேவை மற்றும் தொழிற்சாலை தேவை என்பவற்றுடன் காணப்படும் நீரின் அளவு மற்றும் மழைவீழ்ச்சி என்பன ஒத்திசையும் வகையில் இது மேற்கொள்ளப்படும்.

கிராம மற்றும் நகர்புறங்களில் குழாய் நீருக்கு மாற்றமாக மழைநீர் சேமப்பானது துணை ஆதரவான பொருளாதார முறையாகப் பயன்படுத்தப்படும். குறிப்பாக CKDU வினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நீரின் தரம் மழை நீர், சிறிய தாங்கிகள், ROநடுகைகள் போன்றவற்றின் மூலம் தேவையான இடங்களில் உறுத செய்யப்படும். அனைத்து விவசாய நடவடிக்கைகளுக்குமான நீரின் தேவைப்பாடு 2030ம் ஆண்டளவில் அளவிடப்படுவதுடன் வர்த்தக விவசாயத்திற்காக விலை குறிக்கப்பட்டு அறவிடப்படும். எவ்வாறாயினும் வயலுக்கன நீர் துணை ஆதரவளிக்கப்படுவதுடன் "பெறுமதி" என்ற காட்டியின் மூலம் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் செலவை ஏற்படுத்தும்.

அனைத்து நிலத்தடி நீர்நிலைகளும் தகவல் திரட்டுக்காக மதிப்பீடு செய்யப்படும். தேவைப்படும்போது நிலமட்ட நீரிற்கு மாற்றாக அந்நீரின் தரம் மற்றும் அளவு கொடுக்கப்படுவதற்காக இது மேற்கொள்ளப்படுகின்றது.

பெரும்பாலான தலைநகரங்களிலுள்ள கழிவுநீர் நடுகைகள் மேம்படுத்தப்படுவதுடன் அரசாங்கக் கொள்கைக்கு அமைவாக புதிய நகரத் திட்டமிடல்களில் கழிவு முகாமைத்துவத்தின் மறுசீரமைப்பு மற்றும் கட்டுமானத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும். 2030ற்கு அப்பால், முறையான கழிவு நிர்வாகத்திற்கான அணுகல் கிடைக்கப்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T1

## T1. காலநிலை மாற்றம், அனர்த்தங்கள் மற்றும் வளியின் தூயநிலை.[19]

### 1. தற்போதைய நிலை

காலநிலை மாற்றம் எல்லாவற்றிற்குமான ஒரு பொதுவான பிரச்சினையாக இருக்கிறது. ஏனெனில் பல வழிகளிலும் பல்வேறு விகிதாசாரங்களிலும் (இதன்) பாதிப்புகள் உணரப்படுவதாக இருந்த போதிலும் அது முழு உலகையும் பாதிக்கின்றது. வளிமண்டலத்திலுள்ள (CO2) காபனீரொட்சைட்டு, (CH4) மெதேன், (N2O) நைதரசன் ஓர் ஒட்சைட்டு, (HFC) ஐதரோபுளோரோ காபன், (HFC) குளோரோ புளோரோ காபன் , (SF6) கந்தகம் ஹெக்ஸா புளோரைட்டு (PF6) ஹெக்ஸா புளோரோ பொஸ்பேற்று, (NF3) நைதரசன் முப்புளோரைட்டு போன்ற அதிகரித்த பச்சை வீட்டு வாயுக்களுடனான அதிகரித்த பச்சை வீட்டுத் தாக்கத்தின் விளைவாக பூகோள வெப்பமாதலுக்கு இம்மாற்றம் காரணமாகிறது. பிரதானமாக மனித செயற்பாடுகளின் காரணத்தினால் ஒன்று சேர்ந்த அதிகளவிலான பச்சை வீட்டு வாயுக்கள் (GHGs) வளிமண்டலத்தில் இருக்கின்றன. விருத்தியடைந்த இவ்வுலகில் தொழில்மயமாக்கலினதும் அளவுக்கதிகமான எரியும் புதைபடிவ எரிபொருட்களினதும் விளைவாக பெருந்திரளான தற்போதைய பச்சை வீட்டு வாயுக்கள் (GHGs) இருக்கின்றன. மறுதலையாக கூறுவதாயின், காலநிலை மாற்றத்தின் தீங்கான விளைவுகள் பிரதானமாக இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படுகின்றன.

காலநிலை மாற்றமானது மனிதன் மற்றும் இயற்கையான உயிரியல் சூழல் ஆகிய இரண்டையும் பல பாதகமான வழிகளில் பாதிக்கின்றது. காலநிலை மாற்றமானது பலத்த மழை, திடீர் வெள்ளப்பெருக்குகள், வரட்சிகள், இடி மின்னலுடன் கூடிய புயல்கள், மீண்டும் மீண்டும் ஏற்படும் கடுமையான சூறாவளிகள் போன்றவை பாரிய காலநிலை மாற்றத்தை ஏற்படுத்தும் பூகோள வெப்பமாதலின் விளைவுகளாகும். வளியின் தூய நிலை குறிப்பாக நகர்ப்புறங்களிலும், தொழிற்சாலைப் பகுதிகளிலும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு வழிசமைக்கும் நிலைக்கு மாற்றமடைந்திருக்கிறது.

பொருளாதார விருத்திக்கும் பச்சை வீட்டு வாயுக்களின் (GHGs) வெளியேற்றங்களிற்கும் நேரடித் தொடர்பு காணப்படுகிடறது. மின் உற்பத்தி, போக்குவரத்து, தொழிற்சாலைத் துறைகள், கழிவகற்றல் மற்றும் காடழிப்பு ஆகியவற்றிலிருந்து பிரதானமாக அதிகரித்த மாசுக்களின் வெளியேற்றம் காணப்படுகிறது. குளிரூட்டலிலும், குளிர் பதன தொழிற்றுறையிலும் பயன்படுத்தப்படும் பெரும்பாலான மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கை தொழிற்சாலை வாயுக்களும், பல பிற தொழிற்சாலைகளினதும் மிக சக்திவாய்ந்த பச்சை வீட்டு வாயுக்களும் (GHGs) உள்ளன. மேலும் அவை வளிமண்டலத்தில் வெளியிடப்படுகின்ற போது பூகோளம் வெப்பமாதலை மிக மோசமான நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

---

19 எழுதுனர் குழாம்: W.L. சுமதிபால (தலைவர்), ஆரியரத்ன ஹேவகே, ஹசுல விக்ரமசிங்க, ஷிரோமனி ஜயவர்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாற்றம் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு பதிலளிப்பது குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான ஒரு முக்கிய சவாலாக மாறியிருக்கின்றது. புவி வெப்பமாதல் காரணமாக எழுகின்ற நீர்ச் சக்கரத்தின் ஒழுங்கின்மையும், அதனுடன் தொடர்புபட்ட காலநிலை மாற்றமும் விவசாயத்துறையிலும் பல பிற துறைகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. சுகாதாரம், விவசாயம், நீர் மின் உற்பத்தி, மற்றும் பல்லுயிர்த்துறை போன்றவற்றில் பிரச்சினைகளை தோற்றுவிக்கும் வகையில் அதிக மழைவீழ்ச்சி, வெள்ளங்கள், மண்சரிவுகள், வரட்சிகள் மற்றும் மின்னல்கள் ஆகியன அதிகரித்திருக்கின்றன. காலநிலை மாற்றமானது ஒரு நீண்ட கால நிகழ்வாகும். மேலும் தீங்கான விளைவுகளை எதிர்கொள்வதற்கு அபிவிருத்தித் திட்டங்கள் மாற்றீடு முனைப்புகளை அதிக முன்னுரிமையாக கண்டிப்பாக உள்ளடக்க வேண்டும். தனிநபர் மாசுபடுத்தல்கள் உலகின் சராசரி அளவில் தாழ்நிலையில் இருந்த போதிலும் கூட, காலப்போக்கில் சில குறைப்பு முயற்சிகள் அவசியமாக்கப்படும். மிக உயர்ந்த அளவிலான சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதார தாக்கங்களை ஏற்படுத்தும் அதிகரித்த இயற்கை அனர்த்தங்களை வெற்றி கொள்ள குறுங்கால செயற்றிட்டங்கள் அவசியமாகின்றன.

காலநிலை எதிர்வு கூறல்களுக்கிணங்க நோக்குகையில் அதிக உணவு உற்பத்தி நடைபெறும் இலங்கையின் வடகிழக்கு உலர் வலயம் மிக வரட்சியடையும்.

40 வருடங்களில் 2016 ஆம் ஆண்டின் வரட்சி மிக மோசமான ஒரு நிகழ்வாக அறிவிக்கப்படுகிறது. 2017 ஆம் ஆண்டின் போது மழைவீழ்ச்சி சாதாரண அளவிலும் குறைவானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது விவசாய உற்பத்தியிலும் நாட்டின் பொருளாதாரத்திலும் நேரடியான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

காலநிலை மாற்றம், வாநிலை மற்றும் அவற்றுடன் தொடர்புற்ற இயற்கை அனர்த்தங்கள் இலங்கையில் ஒரு நெருக்கடியான சிக்கல்களை ஆக்கியிருக்கின்றன. மேலும் அது படிப்படியாக அதிகரித்தவண்ணம் இருந்து கொண்டிருக்கிறது. வருடாந்தமோ அல்லது அடிக்கடியோ ஏற்படுகின்ற வெள்ளங்களாலும், மண்சரிவுகளாலும் தொடரும் வரட்சி மூலம் வழங்கப்படுகின்ற நிவாரணத்திலும், நிதி உதவியிலும் ஒரு சிரமம் இருக்கிறது. அனர்த்தங்கள் உலக மாற்றங்களுக்கு ஏதுவாக முடியும். ஆனால் உள்நாட்டு விளைவுகள் இச்சூழ்நிலையை தீவிரமாக்குவதற்கு ஏதுவாகிறது. பொருத்தமற்ற திட்டமிடல் செயன்முறை காரணமாக காலநிலை மாற்ற அம்சங்கள் கவனத்தில் கொள்ளப்படாதவிடத்து இவைகளில் சிலவும் உள்ளன. மேலும், சிரமங்களை வெற்றி கொள்வதற்கும், அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்குமான திட்டங்களைத் தீர்மானிப்பதற்கு திட்டமிடலிலும், தீர்மானங்களை மேற்கொள்வதிலும் உள்ளவர்கள் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலப்பகுதியில் எப்படி காலநிலை மாற்றமடையும் என்பதை அவசியம் அறிந்து கொள்ள வேண்டும். அதிக மழைவீழ்ச்சி, வெள்ளங்கள் மற்றும் மண்சரிவுகள் முதலானவற்றின் தாக்கங்களைக் குறைப்பதற்கு குறுங்காலத்திலும் (03 நாட்கள் வரை) நடுத்தர காலத்திலும் (03 முதல் 06 நாட்கள் வரை) நியாயமான மற்றும் நம்பகமான எதிர்வு கூறலைப் பெறுவதற்கு அவ்வாறான எதிர்வுகூறல் திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டியிருக்கின்றன. நம்பகரமான உப பருவகாலக் கணிப்பிலிருந்து பருவகாலக் கணிப்பு வரையிலும் (10 முதல் 30 நாட்கள்), நீண்ட கால எதிர்வுகூறல் (30 நாட்களுக்கு அப்பால்) வரையிலுமான எதிர்வு கூறல்கள் விவசாயத்திற்காகவும், நீர்மின் உற்பத்திக்காகவும் மற்றும் நீர் வினியோகத்திற்காகவும் அவசியமாகின்றன. நிலையான பொருளாதார மற்றும் உட்கட்டமைப்பு திட்டமிடலுக்கான எதிர்கால காலநிலைக் கணிப்புகள் மிக முக்கியமாவையாக உள்ளன. இவ்விடையத்தில் வருடாந்த மழைவீழ்ச்சி, கடல்மட்ட உயர்ச்சி, வெப்பநிலை ஏற்ற - இறக்கம், கடலரிப்பு போன்றவற்றின் மீதான எதிர்வு கூறல் மிக முக்கியமானதாக இருக்கும். "ரேடார்", "டோப்லர் ரேடார்" உயர் துல்லிய முகில் படங்கள், தூசுப் படலங்களின் கண்காணிப்புகள், உள்நாட்டு மற்றும் வெளி காட்சிகளில் இருந்து திரட்டப்பட்ட தரவுகள் போன்ற வசதிகள் குறுங்கால எதிர்வுகூறலுக்காக உபயோகமானதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இலங்கை போன்ற தீவுகளுக்காக தயார்செய்யப்பட்ட நல்ல எதிர்வு கூறல் மாதிரிகள் காலநிலை எதிர்வுகூறல்களுக்கு அவசியமானதாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இத்துறையில் (வானவியல், சமுத்திரவியல், நில அமைப்பியல் மற்றும் வளிமண்டலயியற்பியல்) விஞ்ஞானிகள் மற்றும் ஆய்வாளர்கள் போன்றோரின் குளாம் ஒன்றை விருத்தி செய்வது இப்பணியில் வெற்றி பெறுவதற்கு அவசியமானதாக இருக்கிறது.

காலநிலை மாற்றம் ஓர் உலகளாவிய பிரச்சினையாகும். இது தொடர்பான பல்வேறு சர்வதேச மாநாடுகளும் உடன்படிக்கைகளும் அமுலில் உள்ளன. இலங்கை இவ்வாறான ஒப்பந்தங்களின் பாங்களியாக ஆகியிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு மாநாட்டின் கீழ் உள்ள காலநிலை மாற்றம் (UNFCCC) மீதான பரீஸ் உடன்படிக்கையானது வெப்பநிலை உயர்ச்சியை $2^0$ செல்சியஸில் அல்லது $1.5^0$ செல்சியஸில் கட்டுப்படுத்துவதற்கான மட்டுப்படுத்தலையும் மாற்றீடையும் வலியுறுத்துகிறது.

எரி சக்தி, போக்குவரத்து, தொழில்துறை, விவசாயக் கழிவுகள் மற்றும் வனவியல் துறை போன்றவற்றிலிருந்து மாசுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு இலங்கை அதனுடைய தேசிய ரீதியாக உறுதிப்படுத்தப்பட்ட பங்களிப்புகளை($NDC_s$) சமர்ப்பித்திருக்கிறது. விவசாயம், சுகாதாரம், நீர் வழங்கல் முதலான துறைகளில் மாற்றீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். "மொன்றீல்" நெறிமுறையின் கீழும் மற்றும் நேரடியாகத் தொடர்புபட்ட SDG13 இல் முன்மொழிவதற்கு தயார் செய்யப்பட்ட செயல் திட்டங்களின் கீழும் மற்றும் காலநிலை மாற்றத்தில் மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் ஏனைய குறிக்கோள்களுமான அனைத்து தேவைப்பாடுகளையும் இலங்கை நிறைவேற்றியிருக்கிறது.

## 2. நெருக்கடியான பிரச்சினைகள், விளைவுகள் மற்றும் தீர்வுகள்.

### 2.1 கண்டி மாநகரில் வளி மாசுபாடு.

#### 2.1.1. தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

ஒரு துரிதமான வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு நாட்டில் இருக்கிறது. மக்கள் சனத்தொகையும், வருமான மட்டங்களும் மாற்றமடைந்திருக்கின்றன. இது பாதையில் அதிகமான வாகனங்களுக்கு வழி சமைத்திருக்கின்றது. "இல்ல பெரும" இற்கு அமைவாக 2001, 2002 ஆம் ஆண்டுகளில் நாளந்த அடிப்படையில் 20,000 இற்கும் அதிகமான வாகனங்கள் கண்டி மாநகரில் நுழைந்துள்ளது. தொடர்ச்சியான 03 உச்ச மணித்தியாலங்களுக்கான போக்குவரத்துச் செறிவின் அளவில் ஒரு மணித்தியலத்திற்கு 2640 வாகனங்கள் வீதமான இலக்கை எட்டியுள்ளது. (M.A. இலங்கசிங்க மற்றும் R. சாந்தினி) அனுமதிக்கப்பட்ட இலங்கைக்கான தரங்களின் வளியின் தூய தரத்தில் ($NO_2$) நைதரசன் ஈர் ஒட்சைட்டு, ($SO_2$) கந்தக ஈர் ஒட்சைட்டு மற்றும் ($O_3$) ஓசோன் வாயுக்களின் செறிவு முறையே 14 வீதத்தினாலும், 41 வீதத்தினாலும் 28 வீதத்தினாலும் அதிகரித்துள்ளதாக "இலப்பெரும எட் அல்" இனால் 2006 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. பாதை வலையமைப்புக்களை அதற்கான முறையில் பேணுவதற்கு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அது போன்றே போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மலைகளாலும், மலைத்தொடர்களாலும் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் அமைந்துள்ள கண்டி மாநகரம் கொழும்பிற்கு அடுத்ததாக உள்ள இரண்டாவது பெரிய நகரமாகும். நகரினுள் நுழையும் வாகனங்களின் எண்ணிக்கையில் படிப்படியான அதிகரிப்பு இருந்தவாறே இருந்து கொண்டிருக்கிறது. கண்டி நகரில் பாதையில் தேங்கி நிற்கும் வாகனங்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசுக்களின் வெளியேற்றங்களினால் அதி செறிவான வளி மாசுக்கள் வளி மாசடைதலுக்கு இடங்கொடுத்திருக்கின்றன. வாகனங்களால் வெளியேற்றப்படும் வாயுக்களில் (CO) காபனோரொட்சைட்டு, ($CO_2$) காபனீரொட்சைட்டு, கந்தக ஒட்சைட்டுக்கள், நைதரசன் ஒட்சைட்டுக்கள், ஐதரோகாபன்கள், புகைக்கரி மற்றும் தூசுக்கள் உள்ளடங்குகின்றன. இவ்வாயுக்களில் சில பூமி மண்டலம் வெப்பமாதலுக்கும் அமில மழைக்கும் பங்களிப்பு செய்கின்றன. ஏனையவை புற்றுநோய்களை உண்டுபண்ணுதல், சுவாச நோய்கள், மற்றும் ஏனைய கடுமையான சுகாதாரப் பிரச்சினைகளை உண்டாக்குதல் போன்றவற்றால் மனிதனின் ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. தரம் குறைந்த எரிபொருள் எரிவதன் மூலம் உண்டாகும் டீசல் வாகனங்களின் மாசு வெளியேற்றங்களும் மற்றும் பொருட்களையும், மனிதனையும் ஏற்றி இறக்கும் போக்குவரத்துத் துறைகளில் உள்ள மோசமான வாகனங்களின் நிலைகளும் சமூக, சூழல் மற்றும் பொருளாதார பிரச்சினைகளை உண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றன. அதிக எண்ணிக்கையான வாகனங்கள் பாதையில் உள்ள போது சன நெரிசலான நேரங்களில் (அலுவலகம் மற்றும் பாடசாலை) வளி மாசடைதல் தீவிரமடைந்திருக்கின்றது. எதிர்பார்க்கப்படும் வருடாந்த சனத்தொகை வளர்ச்சி 0.9 சதவீதத்திலும், பொருளாதார வளர்ச்சி வீதம் 5 சதவீதத்தாலும் இருப்பதுடன் விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய பரிகாரத் தீர்வுகள் முன்கூட்டியே வைக்கப்படாவிட்டால் இப்பிரச்சினை தீவிரமடையும்.

### 2.1.2. நிகழக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் விளைவுகளும்.

#### பொருளாதாரம்

தேங்கியுள்ள போக்குவரத்தும், நகரினுள் நுழையும் அதிகரித்த வாகன எண்ணிக்கை தொகையிலிருந்து வெளியேற்றப்படும் மாசுபாடும் அதிகரித்திருக்கின்றன. சிறிய நடுத்தர அளவான நிறுவனங்கள் காரணமாக வளர்ச்சியடைந்த தொழில் துறை சார்ந்த நிலையான ஆதாரங்கள் அதிகரித்த வளி மாசடைவிற்கு பங்களிப்புச் செய்கின்றன. அதிகரித்த மாசடைதல் காரணமாக சுகாதாரம் (ஆரோக்கியம்) பாதிக்கப்படுகின்ற போது, தொழிலாளர்களது செயல் திறன் குறைக்கப்படும். அத்தோடு அவர்களது உற்பத்தித் திறனும் குறைவடையும். இந்நாட்டினுடைய சுகாதார மசோதா நாட்டின் பொருளாதாரத்தை பாதித்துக் கொண்டு அதிகரிக்கும். உல்லாசப் பிரயாணிகளின் வருகைகள் வீழ்ச்சியடையும். மற்றும் சுற்றுலாத்துறை காரணமாக உள்ள வருமானமும் சரிவடையும்.

#### சமூகம்

- மாசுபாடு பள்ளத்தாக்கில் தேங்கி இருக்குமிடத்து, அதிகரித்த வளி மாசடைதல் காரணமான சுகாதாரப் பிரச்சினைகள் பாரிய அபாயங்களாக உள்ளன.
- சுற்றுப்புற வெப்பநிலையில் உயர்வு வெக்டார் எலும்பு நோய்களை அதிகரிக்கின்றன. மத செயற்பாடுகளுக்காகவும், பருவகாலத் திருவிழாக்களுக்காகவும் கண்டி நகருக்கு வரும் மக்களை இது அசௌகரியப்படுத்துகின்றது.
- கூடுதலான நெருக்கடிகளை உண்டாக்கிக் கொண்டு பதுளை, தம்புள்ள மற்றும் பொலநறுவை பகுதிகளிலிருந்து புற்றுநோய், இருதய பிரச்சினைகள் போன்றவற்றிற்காக அதிகமான மக்கள் கண்டி வைத்தியசாலை மற்றும் பேராதனிய வைத்தியசாலையை தரிசிக்கிறார்கள்.

#### சுற்றுப்புறச் சூழல்

- தேங்கியுள்ள போக்குவரத்தும், நகரினுள் நுழையும் அதிகரித்த வாகன எண்ணிக்கை தொகையிலிருந்து வெளியேற்றப்படும் மாசுபாடும் அதிகரித்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நகரின் அபிவிருத்தித் திட்டங்கள் காரணமாக இயற்கையான சுற்றுப்புறச் சூழல் மாற்றமடைந்திருக்கிறது. "உடவத்தகெல" மற்றும் வேறு சிலவகை போன்ற ஒரு சில காட்டுப் பகுதிகள் மாத்திரம் எஞ்சியிருக்கின்றன.

- சுற்றுச் சூழலிலுள்ள மலைப்பாங்கான பகுதிகளில் திட்டமிடப்படாத மனித குடியேற்றங்கள் இயற்கை நிலக் காட்சியில் சுற்றுச் சூழல் சீரழிவு உண்டாக்கப்பட்டிருக்கிறது.

- சமூகத் தாக்கங்களைக் கூட கொண்டுள்ள நகரத்தின் புராதன நினைவுச் சின்னங்களையும் வளி மாசடைதல் பாதிக்கின்றது.

- வெப்பநிலை அதிகரிப்பு உயர் வெப்பநிலைக்கும் உயர் ஈரலிப்பிற்கும் ஏற்ற பல்லுயிர்களை அவற்றின் விழ்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

- "1500 அடிகளுக்கு மேல் அபிவிருத்தி இல்லை" என்ற விதிமுறைக்கு இணங்காததும் சரிவுகளின் நெடுகே ஒன்றாகக் பல வீடுகள் கட்டப்படுவதும் மண்ணரிப்பையும் மண்சரிவுகளையும் உண்டாக்கியிருக்கின்றது.

- காற்றுப் பதனாக்கல் உபகரணங்கள் (HFCs, HCFCs போன்ற கசிவு) காரணமாகவும் உணவகங்களிலிருந்து வரும் பூரணமாக எரியாத காபன் காரணமாகவும் மாசடைதலை அதிகரிக்கும் பல விடுதிகளை கண்டி நகரம் கொண்டுள்ளது.

### 2.1.3. பரிகாரங்களும் நடவடிக்கைகளும் அமுலாக்கலும்

- நகரத்தில் நுழையும் வாகனங்களைக் கட்டுப்படுத்தும் முறைகளைக் கண்டறிதல்.

  வாகனங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நகரத்தில் நுழையும் வாகனங்களில் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது ஒரு முறையாக இருக்கும்.

- நகரினுள் சூழலுக்கு இணக்கமாக போக்குவரத்து முறையை ஏற்படுத்தல். (துவிச்சக்கர வண்டி, LPG வாயு அல்லது மின்சாரத்தில் இயங்கும் பொதுப் போக்குவரத்து)

- நகர எல்லைகளுள் மாத்திரம் குறைந்த புகை வெளியேற்றத்தைக் கொண்ட வாகனங்களை அனுமதித்தல். (உதாரணமாக: மின்சார மற்றும் ஹைப்றிட் வாகனங்கள்)

- மின்சார வாகனப் பாவனையாளர்களுக்கும், வழங்குனர்களுக்கும் சலுகைகளை வழங்குதல். மேலும் சூரிய சக்தி போன்ற புதுப்பித்தல் சக்தியைக் கொண்டு இயங்கும் சார்ஜிங் நிலையங்களை ஏற்படுத்தல்.

- நகரினூடாகச் செல்லும் வாகனங்களுக்கு மாற்று வழிப் பாதைக்கும், நகரின் மத்திக்கு வரும் வாகனங்களைத் தவிர்ப்பதற்கும் வசதிகளை வழங்குதல். இது வாகன நெரிசலை எளிதாக்கும்.

- நகரின் வெளியே பொருத்தமான இடங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழிற்சாலைகள் நிறுவப்பட வேண்டும்.

- அனைத்து காற்றுப் பதனாக்கல் மற்றும் குளிராக்கல் முறைகளில் குறிப்பாக விடுதிகளிலும், உணவகங்களிலும் சுற்றாடலுக்கு இணக்கமான வாயுக்களைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

- பேருந்துகளுக்கும் ஏனைய பெரிய வாகனங்களுக்கும் அர்ப்பணிக்கப்பட்ட பாதைகளை வழங்குதல். மேலும் ஒரு காரில் ஒரே நேரத்தில் பலர் பயணிக்கக் கூடிய முறையை ஊக்குவிப்பதற்கு முன்னுரிமைப் பாதைகளை நிறுவுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நகரில் போக்குவரத்தைக் குறைப்பதற்கு மாற்று வேலை நேரங்களுக்கான ஏற்படுத்தல்.
- வைத்திய சிகிச்சைகளுக்காக கண்டி நகருக்கு பயணிக்கும் பெரும் எண்ணிக்கையான மக்களைத் தடுப்பதற்கு சுற்றியுள்ள மாவட்டங்களில் வைத்தியசாலை வசதிகளை விருத்தி செய்தல்.
- பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு ஊக்கமளிப்பதற்கு நகர்ப் புற தோட்டங்களை மேம்படுத்தல். கண்டியன் வீட்டுத் தோட்டங்களை விருத்தி செய்தல். குளிரான வெப்பநிலைகளை வழங்குதல். மண்ணரிப்பை தடை செய்தல்.
- காடழிப்பையும் மலைச்சரிவுகளில் வீடமைப்பதையும் தடைசெய்தல். பொருத்தமான இடங்களில் மிகவும் நிலையான அடுக்கு மனை குடியிருப்பு வீடமைப்புகளை வழங்கல்.

## 2.2 காலநிலை மாற்ற விளைவுகள் - உலர் வலயத்தில் மோசமடைந்து வரும் வரட்சி

### 2.2.1. தற்போதைய நிலையும் சிக்கல்களும் பிரச்சினைகளும்

இயற்கையானதும் மனிதனால் உண்டாக்கப்படுவதுமான காரணங்கள் காலநிலை மாற்றத்திற்கு பொறுப்பாக இருக்கின்றன. புவி மண்டலம் வெப்பமடைதலுடன் தொடர்பான உலகளாவிய வளிமண்டல சுழற்ச்சி மாற்றங்கள் ஒரு பாரிய அளவிலான செல்வாக்கைக் கொண்டுள்ளன. உள்நாட்டு மாற்றங்களும் ஒரு நேரடித் தாக்கங்களைக் கொண்டுள்ளன. நீர்ப்பிரதேசப் பகுதிகளும் ஆற்றுப் பள்ளத்தாக்குகளும் வரட்சியடைதல், நீர்த்தேக்கத்தில் குறைவு, பசு ஞ்செடி கொடிகள் குறைவு, நடைபாதை சாலைகளின் அதிகரிப்பு, பின்னல் வரிசைக் கற்கள், கொங்கிறீற்றுக் கட்டிடங்கள் போன்றவற்றிற்கு வழிசமைக்கும் காடழிப்புகள் காரணங்களாக இருக்கின்றன. பாரியளவிலான அபிவிருத்தித் திட்டங்களுக்காக மலைகளை அகற்றுதல், மண், கிரவல், கருங்கற்கள் போன்றவற்றை அகற்றுதல் மூலமாக நிலத்தின் பௌதீகக் கட்டமைப்பானது பிராந்தியங்களின் நுண்காலநிலையை மாற்றியிருக்கிறது. இலங்கையின் தென்மேற்குப் பகுதி அளவுக்கதிகமான மழையைப் பெறும் எனவும் வடகிழக்கு நீண்ட காலத்தில் வரட்சியான பகுதியாக ஆகும் எனவும் எதிர்வுகூறப்படுகிறது. தரையில் நீர் கசிவதற்கு இடங்கொடுக்காத வடிகான் அமைப்பு மற்றும் கட்டுமானங்கள் தரைகீழ் நீர் மீழ்நிரம்பும் திறனை குறைக்கிறது.

பாரிய அளவில் நெல் உற்பத்தி உள்ளிட்ட விவசாயம் உலர் வலயத்தில் செயற்படுத்தப்படுகிறது. உலர் வலயத்தில் வருடம் தோறும் ஏற்படும் தொடர்ச்சியான வரட்சிகள் பல வருடங்களாக விவசாயத்திற்கு பேரழிவை ஏற்படுத்தியிருக்கின்றன. மேலும் விவசாயிகள் பொருளாதார மற்றும் சமூக அரங்கில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். விவசாயத்திற்கும், மனித மற்றும் விலங்குகளின் நுகர்வுக்கும் நீர் இப்பிரதேசங்களில் பற்றாக்குறையாக உள்ளது. பிரதானமாக விவசாய சமூகத்தின் வாழ்வாதாரம் இப்பிரதேசத்திலும் நாட்டிலும் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றபோது நாட்டிற்கு உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட வேண்டியிருக்கும்.

2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 51561 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 208,000 பேர் பல மாவட்டங்களில் நிலவுகின்ற வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆய்வு அறிக்கைகளுக்கு இணங்க 69,678 பேர் கிழக்கு மாகாணத்திலும், 8,600 பேர் வட மாகாணத்திலும், 8,422 வடமேல் மாகாணத்திலும், 10,000 இற்கும் அதிகமான மக்கள் சப்ரகமுவ மாகாணத்திலும், 23,000 குடும்பங்களைச் சேர்ந்த 110,350 பேர் வடமத்திய மாகாணத்திலும் வரட்சி காரணமாக நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர். மார்ச் மாதத்தில் அடுத்தடுத்து வருகின்ற வறட்சி பல மாவட்டங்களில் சுமார் 951,597 பேரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்புக்குள்ளாக்கியது. 95,334 பேர் கிழக்கு மாகாணத்திலும், 428,181 பேர் வடமாகாணத்திலும், 133,198 பேர் வடமேல் மாகாணத்திலும், 101,498 பேர் சப்ரகமுவ மாகாணத்திலும், 7,660 பேர் வடமத்திய மாகாணத்திலும், 185,726 பேர் மேல் மாகாணத்திலும் நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர்.

### 2.2.2. நிகழக்கூடிய தாக்கங்களும் பிரச்சினையின் விளைவுகளும்.

**பொருளாதாரம்**

- தற்போது விவசாயத்துறை GDP இல் ஏறக்குறைய 18% பங்களிப்புச் செய்கின்றது. மேலும் 70% கிராமப் புற மக்கள் விவசாயத்தை அவர்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். நீடித்த வறட்சியானது குறைவான உணவு உற்பத்தி, வேலைவாய்ப்பின்மை, குறைவான நீர்மின் சக்தி உற்பத்தி போன்றவற்றிற்கு வழிவகுக்கும்.
- பற்றாக்குறையான அன்னியச் செலாவணியைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றன.
- நாட்டின் பொருளாதாரம் மீது பாரிய சுமை வைக்கப்படும் பொழுது கிராமப்புற மக்களது பொருளாதாரம் நேரடியாகப் பாதிக்கப்படும்.

**சமூகம்**

- தூண்டப்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் குறைந்த உணவு விநியோகம் (அளவு, தரம் ஆகிய இரண்டிலும்) குழந்தைகளின் வளர்ச்சியிலும், ஆரோக்கியத்திலும் ஒரு தாங்குதிறனை வைத்திருக்கும்.
- பெரும்பான்மையான கிராமப்புற மக்களின் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.
- நீர் பற்றாக்குறை மற்றும் சுகாதார வசதிகளில் பற்றாக்குறையும் நோய்கள் ஏற்படுவதற்கு வழி வகுக்கும்.
- அதிகமான வெப்பம் காரணமாக ஏற்படும் உயிரிழப்புக்கள் (குறிப்பாக சிறுவர்கள் மற்றும் முதியவர்கள்) கவலைக்குரிய விடயமாக இருக்கிறது.
- உணவு மற்றும் நீர் போன்றவற்றை தேடி மனித குடியேற்றப் பகுதிகளினுள் நுழையும் காட்டு விலங்குகளால் யானை மனித மோதல்கள், குரங்குகள் தோட்டங்களில் தாவரங்கள் மற்றும் உணவுகள் போன்றவற்றை அழித்தல் முதலான மனித – விலங்கு மோதல்கள் ஏற்படும்.
- நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும், வெளிநாட்டிற்கும் வேலை தேடி ஒரு பெற்றோரால் செல்லப்படுவது குடும்ப அலகுகளினுள்ளும் சமூத்தினுள்ளும் மொத்தமாக சமூகப் பிரச்சினைகளை உருவாக்குகின்றது.
- நீண்ட கால வரட்சியும், பயிரிடக்கூடிய நிலமும் விடாப்பிடியாக மறுக்கப்பட்டால்,

  உலகின் சில பாகங்களில் காலநிலையால் பாதிக்கப்பட்ட அறிக்கை செய்யப்பட்ட அகதிகள் பிரச்சினை இங்கே எழலாம்.
- ஏழை விவசாய சமுதாயத்திற்கும் பணக்கார சமூகத்திற்கும் இடையிலான வருமான இடைவெளியை அதிகரிப்பது நாட்டின் நிலையற்ற தன்மைக்கும் சமூக அமைதியின்மைக்கும் வழிவகுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றுப்புறச் சூழல்

- நீண்ட கால வறட்சி பல்லுயிர்கள் மாற்றமடைவதற்கு காரணமாக அமையும். மேலும் குறிப்பாக சில தாரவ விலங்கு, இனங்கள் பாதிக்கப்படும்.
- வளர்ச்சி வீதம் குறைவடையும். மேலும் காடுகளின் உற்பத்தி மற்றும் ஏனையவற்றின் உற்பத்தி தாமதப்படுத்தப்படும்.
- ஈரலிப்பை தக்கவைத்துள்ள ஈரப்பதனுள்ள காடுகளின் வீழ்ச்சி அந்த ஈரப்பதனுள்ள காடுகளுக்கே உரித்தான நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்களுக்கும், முக்கிய இனங்களுக்கும் பாதகமான விளைவை ஏற்படுத்தும்.
- வறட்சி நீர்நிலைகளிலும், தெளிப்பு மண்டலங்களிலும் ஒரு சுருங்களை உண்டாக்குகின்றுத. இது பல்லுயிர்களின் இழப்பிற்கு காரணமாகிறன்றது.

2.2.3 **தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்:2.2.3தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப் படுத்தல்:**

- நகர்ப்புற பகுதிகளில் கூட வனப்பகுதிகளை உருவாக்குவதன் மூலம் பச்சைப்பரப்பை அதிகரிக்க முடியும். இயன்ற அளவு காடுகளை அதிகரிப்பதன் மூலம் நீர்த் தேக்கங்களை பாதுகாக்க முடியும்.
- நதியோர பகுதிகளில் காடழிப்பினை தடுக்கும் வகையில் கடுமையான சட்டத்தை செயல்படுத்துதல் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட வலயங்களில் ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்காமல் இருத்தல்.
- சாலைகள், வீடு மற்றும் தொழில்துறையின் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது சுற்றாடல் நேய பச்சை பயன்பாடு ∴பச்சை வளர்ச்சியைப் பின்பற்ற வேண்டும்.
- இயந்திர வழிமுறைகள் மற்றும் பழங்கால "எல்லங்க" முறையை அதாவது சிறிய தொட்டிகள் கட்டப்பட்டு ஒன்றாக இணைக்கப்படுகின்ற முறைமையை விரிவுபடுத்தல் போன்ற சுற்றுச்சூழல் நேய வழிகளில் நீண்ட காலத்திற்கான நீர் அறுவடை மற்றும் சேமித்து வைத்தல் ஆகியவற்றை அதிகரித்தல்.
- குறுகிய கால பயிர்களை பயன்படுத்தி விவசாயத்தில் நீர் முகாமையை மேம்படுத்துதல், குறைந்த அளவு நீர் தேவைப்படும் வகைகளை அறிமுகம் செய்தல் மற்றும் பொருத்தமான , சாத்தியமாகத்தக்க இடங்களில் சொட்டு நீர் பாசன அமைப்பினை அறிமுகம் செய்தல். இந்த அமைப்புகளின் செயல்பாட்டிற்கு சூரிய சக்தியைப் பயன்படுத்தலாம்.
- வேளாண் கிணறுகள் கட்டப்பட முடியும், ஆனால் நீர் சேகரிக்கப்பட வேண்டிய நீர் அளவு ஆய்வு செய்யப்பட்டு முகாமை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் நீர் அட்டவணையானது பாதிப்படையாது.
- நிலத்தடி நீரை மீள்நிரப்ப நடவடிக்கை எடுத்தல்.
- சமூகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஏற்கப்பட்ட நடவடிக்கைகள் சமூக பங்குபற்றலுடன் மற்றும் சமத்துவமான, பிரிவினை அற்ற விதத்தில் நலன்கள் சமூகங்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.3. காலநிலை பாதிப்புகள் - தீவின் தென்மேற்கு பகுதியில் திடீர் வெள்ளங்களும் நிலச்சரிவுகளும் ஏற்படுதல்.

### 2.3.1. தற்போதைய நிலை, பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள்

பூகம்பம் மற்றும் நிலச்சரிவுகள் உலகளாவிய காலநிலை மாற்றத்திற்கு காரணம் என்றாலும், உள்ளூர் நடவடிக்கைகள் பல சிக்கல்களுக்கு வழிவகுத்திருக்கின்றன. தற்காலிக மேம்பாட்டு திட்டங்கள், நீண்ட கால நிலையான திட்டமிடல் இல்லாததால் சிக்கல்கள் உள்ளன. திட்டப்பணியில் EIA செயல்முறை போன்ற சுற்றுச்சூழல் அம்சங்களுக்கு குறைந்த முக்கியத்துவம் கொடுத்து நீண்ட காலத்தின் பின்பு அது பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. தற்போதுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை கவனத்திற்கொள்ளாமையானது அங்கீகாரமற்ற கட்டிடங்கள் உருவாகி அது வடிகால் முறையைத் தடுப்பது, நீர்ப்பிடிப்புச் சதுப்பு நிலங்கள் உட்பட நிலங்களை நிறைத்தலுக்கு வழிவகுத்துள்ளது. மண் அகழ்வு,மண் மற்றும் சரளைக்கல் மற்றும் உலோகங்களை அகழ்தலால் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு அதிகரித்துள்ளது. சில பகுதிகளில் நுண் காலநிலையை மாற்றிவிட்டது. மலைப்பாங்கான பகுதிகளை அகற்றுவது (தேயிலை பயிர்ச்செய்கை போன்றன) நீர்ப்பாசன பகுதிகளில் ஏற்படும் முக்கிய பேரழிவுகளுக்கு காரணமாகும்.

பெரும்பாலான நகர்ப் புறங்களுக்கும் நகரங்களுக்கும் புயல் நீர் வடிகால் அமைப்பு இல்லை இது வழிந்தோடும் நீரை தடுத்து வெளப்பெருக்கையும் நீர் தேங்கி நிற்பதையும் ஏற்படுத்தகின்றது புளத்சிங்ஹல பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவின் பிரதான காரணங்களில் ஒன்று இறப்பர் விலை மலிவடைந்ததால் சில இடங்களில் நீண்ட காலமாக இருந்த இறப்பர் மரங்கள் பிடுங்கப்பட்டு அதற்குப் பதிலாக தேயிலையைநட்டமையானது பெரும் மண் அரிப்பு மற்றும் நிலங்களில் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தியுள்ளது,

உலகளாவிய மற்றும் உள்ளூர் காலநிலை மாதிரிகளின் படி, நாட்டின் தென்மேற்கு பகுதியானது காலநிலை மாற்றம் காரணமாக அதிக அளவு மழை வீழ்ச்சியைப் பெறும். அதிக அடர்த்தி மழை,திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் வழக்கமான அம்சமாக மாறி வருகின்றன. நாட்டின் தென்மேற்கு பகுதிமத்திய மலைகளின் மேற்குப் பகுதிகளும் உள்ளடங்கலாக பருவ காலங்களில் தென்மேற்கு பருவமழை மற்றும் இரண்டுக்கும் இடைப்பட்ட பருவ மழைக்காலங்களிலும் சராசரி மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. இருப்பினும், சில பகுதிகளில் அசாதாரண உயர்ந்த மழைவீழ்ச்சி நிகழ்வுகள்பேரழிவுகளுக்கு இட்டுச்சென்றன.மேலும் இது ஒரு வருடாந்திர நிகழ்வாக மாறிவிட்டது,இது பெரும்பாலும் புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் காரணமாக ஏற்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு மே மாதம் வெள்ளத்தால், பின்னர் மண்சரிவால் 24 மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதன் விளைவாக 93 பேர் உயிரிழந்தனர் மற்றும் 58,000 வீடுகள் சேதமடைந்தன (MDM, 2016). மார்ச் மாதத்தில் காணப்பட்ட வறட்சியின் பின்னரான அதிக மழை காரணமாக நாட்டின் மேற்குப் பகுதியில் நீர் மட்டங்கள் அதிகரித்து 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி இவ் அனர்த்த நிகழ்வானது ஏற்பட்டது,

மார்ச் மாதத்தில் கடுமையான மழை காரணமாக, 2017 ஆம் ஆண்டு மே மாதம் 25 ம் தேதி நாட்டின் தென்மேற்கு நீர்மட்டங்களில் ஏற்பட்ட மழை காரணமாக இந்த பேரழிவுகளின் அதிர்வெண் திரும்பியது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தரவரிசைகளின்படி தென்மேற்குப் பிரதேசங்களில் 12 மணித்தியாலங்களுக்குள் நமுனுதான (619 மி.மீ.), புளத்தசிங்கல் (419 மி.மீ), மொறவகா (406 மிமீ) மற்றும் வலஸ்முல்ல (437 மிமீ) அதிக மழை வீழ்ச்சி காரணமாக களு கங்கை, நில்வாலா நதி ,ஜின் கங்கையில் வெள்ளம் ஏற்பட்டதைத் தொடர்ந்து 15 மாவட்டங்களில் 717,622 மக்கள் பாதிக்கப்பட்டு,. 212 இறப்புக்கள் அறிவிக்கப்பட்டன, மேலும் 2,313 வீடுகள் முழுமையாக அழிந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.3.2. பிரச்சினையினால் ஏற்படத்தக்க சாத்தியமான தாக்கங்கள் மற்றும் விளைவுகள்

**பொருளாதாரம்**

•பாரிய வெள்ளம் குறிப்பாக நாட்டின் மேற்கு பகுதியில் ஒரு வழக்கமான நிகழ்வாக மாறிவிட்டது. 2016 ஆம் ஆண்டில் கடுமையான வெள்ளம் ஏற்பட்டது இதன் காரணமாக நாட்டின் மேற்கு பகுதியில் அதிக சேதம் ஏற்பட்டது. 2017 ம் ஆண்டு மே மாதம் பொழிந்த கடுமையான மழை காரணமாக இலங்கையின் தென்மேற்குப் பகுதியின் பெரும்பகுதி அழிந்தது. இந்த நிகழ்வானது 300 க்கும் மேற்பட்ட இறப்புக்கள் மற்றும் ரூபாய் பில்லியன் கணக்கில் பொருளாதார சேதங்களையும் ஏற்படுத்தியது. நாட்டின் வடகிழக்கு பகுதிகளில் கூட திடீர் வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டு விவசாய உற்பத்தியினை சேதமாக்கி பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பை உருவாக்குகின்றன.

**சமூகம்**

இந்த பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை இது பாதித்துள்ளது. அன்புக்குரியவர்கள் மற்றும் சொத்துக்களின் இழப்பு அழிவையும் மற்றும் கவலையையும் ஏற்படுத்தி சமுதாயத்தை திணற வைக்கிறது. அவர்கள் அழிந்து வருகின்ற சமூகத்தின நிச்சயமற்ற எதிர்காலத்தையும், ஸ்திரத்தன்மையையும் எதிர்கொள்கின்றனர். சுகாதார பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன. பரவும் நோய்கள் அதிகரித்துள்ளது. டெங்கு நோயாளிகள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெரும்பான்மையான மக்கள் தங்கள் கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு அவர்கள் வாழ்வதற்கு சரியான இடம் இல்லாமல் அல்லது வருமானம் இல்லாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

**சுற்றாடல்**

- சுற்றுச்சூழல் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.அதனை மீட்டெடுக்க பல ஆண்டுகள் எடுக்கும். மேலும் உயிரியல் மற்றும் பௌதீக அமைப்புகள் மீண்டும் அசல் நிலைக்கு மீளாது.
- பல பகுதிகளில் மண் அரிப்பு ஏற்பட்டுள்ளது மற்றும் வளமான மேற்பரப்பு மண் கழுவிச் செல்லப்படுகிறது, இந்த இடங்களில் பயிரிடத்தக்க மண்ணைக் மீள உருவாக்குவதற்கு கொண்டுவருவதற்கு கணிசமானளவுகாலம் எடுக்கும். புதிய நிலப்பரப்பு வானிலை, காலநிலை மாற்றம் ஆகியவற்றால், ஒரு மாறுபட்ட சூழல் உருவாக்கப்படும்.

### 2.2.3 தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்:

- சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு மதிப்பளித்து அதனை பின்பற்றல்.
- நீண்ட காலம் நீடிக்கும் வளர்ச்சித் திட்டமிடல் மீது அதிக கவனம் செலுத்துவது அவசியம். மேம்பாட்டுத் திட்டங்களானது சுற்றுச்சூழல் மற்றும் தற்காலிக அபிவிருத்தி திட்டங்கள் குறைக்கப்பட்டு அவற்றையும் உள்ளடக்கி திட்டமிடல் வேண்டும். பெரிய அளவிலான அபிவிருத்திஅல்லது உள்கட்டமைப்பு திட்டங்களால் பாதிக்கப்படும் சமூகங்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். இத்தகைய திட்டங்களுக்குத் தணிக்கை நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால நலன்களை வெளிப்படையான மற்றும் பாகுபாடற்ற முறையில்சமூகங்களுக்குள் உள்ளீடு செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுற்றுச்சூழல் அம்சங்களைப் பொறுத்தவரை அனைத்து இயற்கை வள பிரித்தெடுத்தலானது ஒரு நிலையான முறையில் செய்யப்பட வேண்டும். அங்கீகரிக்கப்படாத கட்டிடங்கள், சாலைகள் மற்றும் அனைத்து பிற முன்னேற்றங்களும் நிறுத்தப்பட வேண்டும். நடைபாதை கட்டுமானங்களில் இடையிலான கற்கள் இடுதலைத் தவிர்த்தல் மற்றும் புல்வெளிகளை இடுதலை ஊக்குவிக்க வேண்டும்.

- அனர்த்த தயார்நிலை தொடர்பில் முக்கிய முடிவுகளை எடுக்க உப பருவகால கணிப்புக்கள் மிக முக்கியமானவையாகும். கடுமையான உயர் தாக்கத்தை ஏற்படுத்தும் வானிலை (வறட்சி, வெள்ளம், கடுமையான மழைவீழ்ச்சி நிகழ்வுகள்) ஆகியவற்றின் சாத்தியக்கூறுகள் பற்றிய எச்சரிக்கைகளை வழங்குவதற்கு முன்னரான எச்சரிக்கை முறைமை மேம்படுத்தலானது (மிக குறுகிய அளவிலான கணிப்பும் உள்ளடங்கலாக) மனிதாபிமான திட்டமிடல் மற்றும் பேரழிவுகளுக்கு பதிலளிப்பதன் மூலம் உயிர் மற்றும் சொத்துக்களை பாதுகாக்க உதவும்.

- வினைத்திறனான முறையில் நிர்வகிக்க மற்றும் அனர்த்த அபாயங்களை எதிர்கொள்வதற்கான சமூக இயலுமையை மேம்படுத்தல்.

- சமூக அனர்த்த தடுப்பு சங்கங்களை உருவாக்கல் மற்றும் சமூகங்களின் அனர்த்த முகாமைத்துவ இயலுமையை மேம்படுத்தும் வண்ணம் சமூக அனர்த்த தடுப்பு திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

### 3. நீண்டகால முன்னோக்கு – 2020 மற்றும் அதற்கப்பால்

மக்கள் தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை பொருளாதார வளர்ச்சியுடன் அதிகரிக்கும். கண்டி, கொழும்பு, மற்றும் பிற முக்கிய நகரங்கள் மற்றும் நகரங்களுக்குள் நுழையும் வாகனங்கள் கட்டுப்படுத்தப்பட்டு பூஜ்ஜியம் அல்லது பூஜ்ஜியத்தை அண்மிய புகை வெளியேற்றும் வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படுமாயின் 2020 ஆம் ஆண்டில் நகரில் வளி மாசடைதலானது பூஜ்ஜிய நிலையை அடையும். அத்தகைய மாசடைதலால் ஏற்படும் மக்களின் சுகாதார பிரச்சினைகளும் குறையும்.

ஆரோக்கியமான தொழிலாளர் மற்றும் அதிக திறன் அல்லது வெளியீட்டுடன் அரசாங்க சுகாதாரம் தொடர்பான மசோதா குறைக்கப்படும், காடுகள் மற்றும் வேலை வழிகளால், வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலா பயணிகளின் அளவு அதிகரித்து பொருளாதார வளர்ச்சியுடம் அதிகரிக்கும். கண்டி உட்பட உள்ள நகரங்கள் சுற்றுச்சூழல் நேய நகரங்களாக மாறும். கண்டிய வீட்டு தோட்ட அபிவிருத்தி மண் அரிப்பைத் தடுக்க உதவும். மலைப்பகுதியில் வீடமைப்புக்களை தவிர்த்தலானது மண் சரிவு போன்ற பேரழிவுகளை குறைக்க உதவும்.

அதிகரித்த காடுகள் நீர் தங்குதலைத் மேம்படுத்தி நிலத்தினுள் நீர் ஊடுருவலை விருத்தியடையச் செய்யும். ஆவியாதலானது நீராவியாதலாக மாறும். இது வறட்சியைத் தவிர்த்து இயற்கையான காற்றுச் சீரமைத்தல் இயல்பினை உருவாக்கும். பண்டைய கால நீர்ப்பாசன மற்றும் நீர் முகமைத்துவத்தை அதாவது வேறுபட்ட அளவிலான அடுக்குத் தொட்டிகளை ஒனறிணைக்கும் முறைமையைக் திட்டமிடல் செயன்முறைக்குள் அறிமுகம் செய்தால், வறட்சிக் காலங்களில் கூட வாழ்தல் சாத்தியமாகும். விவசாயிகள் சொட்டு நீர்ப்பாசன முறைகளை பயன்படுத்தி குறுகிய கால பயிர்செய்கைகளை செய்வதன் மூலம் தேவையான அளவு போஷாக்கினைப் பெற்றுக் கொள்வதுடன், அவர்களின் நிதி நிலமைகளைப் பேணிக் கொள்ளவும் முடியும். மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் இப்போதிலிருந்தே முறையான வழிமுறைகளைக் கைக் கொண்டு அமுல்படுத்தப்படுமானால் 2020 ஆம் ஆண்டினை அடைகையில் வறுமையானது முகாமை செய்யத்தக்க ஒரு அளவுக்கு வந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான விஞ்ஞான ரீதியான திட்டமிடல் மற்றும் மரங்களை அதிகரித்தலானது வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுவதைத் தடுக்கும். நடைமுறையில் இருக்கின்ற , உருவாக்கப்பட இருக்கின்ற விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை பிறழ்வின்றி அமுல்படுத்துதல் மூலம் அதிகாரமளிக்கப்படாத கட்டடங்கள், ஆற்றை அண்டிய பகுதிகளில், ஏலவே ஒதுக்கப்பட்ட, மற்றும் கால்வாய்கள், நீர்நிலைகளை அண்டிய பகுதிகளில் உருவாக்கும் கட்டமைப்புக்கள் போன்றவற்றை குறைத்தல் மூலம் 2020 ஆம் ஆண்டு ஆகுகையில் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுவதைப் பாரியளவு தடுக்க முடியும். மணல்,மண் மற்றும் சரளைக்கல் மற்றும் உலோகங்களை அகழ்தலைக் கட்டுப்படுத்துவது மற்றும் முகாமை செய்வதன் மூலம்பாரியளவு சுற்றாடல் பிரச்சினைகளையும், சுகாதாரத்துக்கு தீங்கு ஏற்படுத்தும் விடயங்களையும் தடுக்க முடியும். இத்தகைய செயற்பாடுகளால் அனர்த்தங்களால் ஏற்படும் தாக்கங்களை 2020 ஆம் ஆண்டளவில் குறைத்து விட முடியும். எதிர்கால சந்ததியினரின் வளமான எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு சிறு வயதிலிருந்தே அவர்களுக்கு கல்வி மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தேவை காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T2. நெறிமுறைகள், பெறுமதிகள் மற்றும் குடியுரிமை[20]

## 1. தற்போதைய நிலை

நிலையான வளர்ச்சிக்கான அதிநவீன திட்டங்களை நாம் எடுத்தாலும், இறுதியாக, வெற்றியளிக்கும் அல்லது அத் திட்டங்கள் யாருக்காக உருவாக்கப்பட்டதோ அல்லது யாரால் அவை அமுல்படுத்தப் பட வேண்டியுள்ளதோ அவர்கள் மீதே தங்கியுள்ளது. ஊழல், அசாதரணமற்ற மற்றும் மேலோட்டமான சமூக மதிப்புகள்,பொறுப்பற்ற நடத்தைகள்போன்றன இது இலக்குகளை அடைய தவருவதற்கு காரணமாக அமைந்துள்ளது. வழமையாக அத்தகைய நடவடிக்கைகள் சமூகக்கட்டமைப்பை மாற்றுதல், சட்ட முறைமையை கடினமாக்கல், தண்டனைகளை அமுல்படுத்தல், ஊக்கமளித்தல்போன்ற எதிர்மறையான விளைவுகளை கையாளும் வழிவகைகளாகும். ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் இருந்த போதிலும், விரும்பிய இலக்குகள் அடையப்படவில்லை.கருத்துக்கள், உணர்வுகள், மனப்பான்மை,மற்றும் பங்குதாரர்களின் நடத்தைகளில் சில அடிப்படை மாற்றங்கள் அனைத்தும் நிகழ வேண்டும் என்பது தெளிவாகிறது.

இத்தகைய விடயங்கள் மற்றும் விரும்பிய இலக்கினை உணரும் வகையிலும், இவ்விரு சிக்கல்களுக்கும் நிவாரணமளிக்கும் விதமாக நடவடிக்கைகள் முன்மொழியப்படும்.

(1) பெறுமதிகள் மற்றும் நெறிமுறைகள் மற்றும் (2) இலங்கைக் குடியுரிமை மற்றும் அடையாளம்

## 2. நெருக்கடியான சிக்கல்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

### 2.1. நெறிமுறையுடைய, ஒழுக்க விழுமியங்கள் இன்மையால் விரும்பத்தகாத நியாயப்படுத்த முடியாத நடத்தைகள் உருவாதல்.

#### 2.1.1. தற்போதைய நிலை, பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள்

தொழில்முறை மற்றும் வர்த்தக நடத்தை மற்றும் பொதுமக்கள் ஒழுக்கநெறிகளின் நியமங்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் வணிக தலைவர்கள், பொது அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் போன்ற தொழில்முறை குழுக்களின் நடத்தையை பாதிக்கும் இவை சமுதாயத்தில் நெறிமுறை விளைவுகளை மேம்படுத்துவதில் முக்கியத்துவம் வாய்ந்தவை. நெறிமுறைக் குறியீடுகளின் தன்னார்வத்துடன் ஏற்றல் மற்றும் அவற்றை ஒழுகி நடத்தல் மிக முக்கியமாகும். அநேக மக்கள் ஈடுபடுகின்றவியாபார பரிவர்த்தனைகள் மற்றும் பிற நடவடிக்கைகள் போன்ற முறைசாரா பொருளாதாரத்தில் கூட மக்களின் வாழ்க்கையின் தரத்தை பாதிக்கும்நெறிமுறை தரநிலைகள் குறைவாகவோ அல்லது இல்லாமலும் இருக்கிறது.

20 எழுதும் குழு: அசங்க திலகரட்ன (தலைவர்), சாவித்ரி குணசேகர, சிறி ஹெட்டிகே, மனோ தித்தவெல்ல, மோகன் முனசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.1.2. இப்பிரச்சினையின் தாக்கங்கள் மற்றும் விளைவுகள்.

அறிமுகத்தில் காட்டப்பட்டுள்ள விரும்பத்தக்க நிலையான வளர்ச்சி முக்கோணத்திற்கு முரணாக (பெட்டி B.1 இல் படம் B.1.1), நவீன இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் மோசமான மதிப்புகளின் விளைவாக நிலையற்ற முக்கோணத்தினை உருவாக்கியுள்ளது. சுருக்கமாக பெட்டிB.1 இல் படம் B.1.3 இல் குறிப்பிடப் பட்டுள்ளது.

**சமூகம் சார்ந்தவை**

தற்போதைய சமூக பெறுமதிகள் பேராசை, சுயநலம், ஊழல், சமத்துவம் இன்மை, வன்முறை, நீதி இன்மை மற்றும் அகம்பாவம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டவையாகும். ஏதேனுமொரு சமுதாயத்ின் அங்கத்தவர்கள் அவர்களின் நெறிமுறை மற்றும் ஒழுக்கத்தை இழக்கும் போது அவர்களின் குடும்ப வாழ்க்கையிலும், சமூக தொடர்புகளிலும் முறிவை ஏற்படுவதுடன், சட்டம் மற்றும் ஒழுங்கில் பாதிப்பு மற்றும் குற்றச் செயல்களை அதிகரிப்பதுடன், விரும்பத்தகாத நடத்தைகளையும் ஏற்படுத்துகிறது.

**பொருளாதாரம்**

- சரியான நெறிமுறை மற்றும் தார்மீக மதிப்பீடுகளின் குறைபாடு காரணமாக நேர்மையான வழிகளால் உருவாகும் பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் குறைகின்றன மற்றும் குறைந்த மனவலிமை மற்றும் உற்பத்தித்திறனை ஏற்படுத்துகிறது. மக்கள் அநாவசியமான மற்றும் தவறான வழிகளில் எளிதான பொருள் ஆதாயங்களைப் பார்க்கிறார்கள். அக் காரணத்தினால், இளைஞர்கள் கல்வி அல்லது தொழிற்பயிற்சி கல்வியை தொடர்வதில்லை, மாறாக குறைந்தபட்ச திறமைகளைக் கோரும் வேலை வாய்ப்புகளைத் தேர்ந்து எடுக்கின்றனர்.
- சோம்பேறித்தனம், முடிவுகளை அடைவதற்கு விருப்பம் இன்மை, குறைந்த எதிர்பார்ப்புக்கள் போன்ற தனிநபர் குணவியல்புகள் உற்பத்தித் திறனையும், பொருளாதார முன்னேற்றத்தையும் தடுக்கிறது.

**சுற்றாடல்**

வறிய பொருளாதாரம் மற்றும் குறைந்த அளவிலான சமூகத் தொடர்புகளானது கழிவகற்றல் பிரச்சினைகளை ஏற்படுத்தி சுற்றாடலை மாசுபடுத்துவதுடன் நோய்களையும் பரப்புகிறது. ஒருவர் தனது சுற்றாடலை சுத்தமாக வைத்து பராமரிக்கின்றாரோ இல்லையோ அல்லது சுற்றாடல் மற்றும் இயற்கை தொடர்பில் கவனம் கொள்வதும், கொள்ளாமையும் அவர்களின் கலாச்சாரம் மற்றும் குணவியல்புகளிலேயே தங்கியுள்ளது.

**மூல காரணங்கள்**

கல்வியின்மை மற்றும் போதிய அறிவின்மை என்பனவே இதற்கான பிரதான மனித காரணிகளாக அமைகின்றன. கல்வியின் முக்கியத்துவத்தை மறுக்க எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை மேலும் அது ஒரு வளமாகும். மற்றும் அறிவே முடிவானதாகும். மனிதர்களிடம் இக் காரணிகள் இருந்தாலும் இல்லாவிடினும் கூட அவர்களின் நடத்தை தவறானதாகவே இருக்கிறது. இது வேறு ஏதோ ஒன்று அவர்களிடம் இல்லை என்பதையே உணர்த்துகிறது.

அவர்களிடம் இல்லாதது எதுவெனில் செய்வதற்கான விருப்பம், சரியானதும் பொருத்தமானதும், நன்மையளிக்கக் கூடியதும்,ஒழுக்க நடத்தைகள், அனுதாபம், உணர்திறன், சக உணர்வு,பரந்த மனப்பாங்கு, கருணை, பரிவு போன்ற தார்மீக உணர்வு இன்மை தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



17-CM 27932

### 2.1.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்கம்

ஒழுங்கமைக்கப்பட்ட மதத்தின் எதிர்மறையான அம்சங்களைத் தவிர, மத போதனைகள் தற்போதைய பிரச்சினையைத் தீர்க்க ஒரு சிறந்த வழியாகும். பெரும்பான்மை மக்கள் ஒரு மதத்தினால் அடையாளப் படுத்தப்படும் ஒரு நாட்டில்,பரந்த வெகுஜன இயக்கங்களின் ஆதரவாளர்களில் தார்மீக உணர்வை உண்டாக்குவதற்கு இவ் அமைப்புககளின் இயலுமையை ஆராய்வது பயன் உடையதாய் அமையும்.

இலங்கையில் முக்கியமாக பௌத்த மதம், இந்து மதம், கத்தோலிக்க சமயம், கிறிஸ்தவ மதம், புரொடெஸ்டானிஸம் மற்றும் இஸ்லாம் சமயம் ஆகிய 5 மதங்கள் காணப்படுகிறன. பௌத்த மதமானது கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து நீண்ட கால வரலாற்றினைக் கொண்டுள்ளது. மேலும் பௌத்த மதமே இத் தீவின் பிரதான மதமாகவும், கலாச்சார விழுமியங்களையும் வடிவமைத்தும் உள்ளது. 70.19 வீதமான மக்கள் பௌத்த சமயத்தையும், 12.6 வீதமான மக்கள் இந்து சமயத்தையும் 6.1 வீதமான மக்கள் புரொடெஸ்டானிஸத்தையும் 9.7 வீதமான மக்கள இஸ்லாம் சமயத்தையும் பின்பற்றுகின்றனர்.

தற்காலத்தில் மக்களுக்கு பொதுவான ஒழுக்கம், நெறிமுறைகள் குடியுரிமைப் பெறுமதிகள் என்பவற்றை மதத்தினை ஒரு ஊடகமாகக் கொண்டே திணிக்க வேண்டும். உண்மையிலேயே, மார்க்கமாக இருக்கும் நபர்கள் எல்லாம் ஒழுக்கமான, நெறிமுறையுடன் கூடியவர்கள் என்று அர்த்தமில்லை. அனைத்து மதங்களாலும் பரப்பப் பட்ட, பரப்பப் படக் கூடிய நெறிமுறைகள், ஒழுக்க விழுமியங்களின் கோவை ஒன்றை அடையாளங் காணுதல் அவசியமாகும். மேலும் அப் பெறுமதிகளைமக்களுக்கு ஊட்டும் வகையில் வளங்கள் திரட்டப்பட வேண்டும்.

இலங்கையில் எதிர்காலத்தில் மதங்களுக்கிடையே போட்டியோ அல்லது மற்ற மதங்களை விட ஒரு மதம் வெற்றி அடைதல் போன்ற எதுவும் நிகழாது. ஆதைவிட எல்லா மதங்களும் ஒற்றுமையுடன இருந்து தங்களை பின்பற்றுபவர்களை பேணும்போது சமயங்கள் மற்றும் தனிப்பட்ட பிரஜைகள் இடையே என்பவர்களது எல்லா சமய நம்பிக்கைகளும் முன்னேற்றமடையச் செய்கின்றது. இது எல்லா மதங்களையும் ஒன்றாக்கி குறைப்பதற்கோ மதங்களை கலக்கவோ அல்லது மதங்கள் வித்தியாசமானதாக இருக்க பொதுவான ஒரு இலக்குகளின் தொகுப்பை உருவாக்கி சமாதானமான,புரிந்துணர்வுடன் கூடிய சமூகத்தை உருவாக்கும் வகையில் வழிகாட்டப்படலாகும்.

எனவே கீழ் கூறப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட முடியும் :

- மதக் கற்கைகள் மற்றும் கோட்பாடுகளை தற்போதைய சமூக பிரச்சினைகளுக்கும் சிக்கல்களுக்கும் பொருந்தும் வகையில் கற்பித்தல் , பொருள் கோடல் செய்தல்.

  மத வழிகாட்டிகள் பழைமையானதாக இருந்தாலும் அவை அறிவார்த்தமானவை. அவற்றை தற்போதைய தனிப்பட்ட மற்றும் சமூக பிரச்சினைகளுக்கு ஏற்ப பொருள் கோடல் செய்ய வேண்டும். இது ஒவ்வொரு மதத்திலும் உள்ள நிபுணத்துவம் கொண்டோரால் செய்யப்பட வேண்டும். குறிப்பாக பாவம் (“பின்” மற்றும் “பவ” அல்லது நன்மை மற்றும் தீமை (பௌத்த சமயம்) அல்லது ஹராம் (இஸ்லாம்) போன்ற மீள அர்த்தமளிக்கப்படல் வேண்டும். இதனால் பாரம்பரிய சமய பட்டியலில் இல்லாத பல சமூக விரோத செயல்கள் (ஏனையோரை மதிக்காமை, சுயநலமான நடத்தை, பொது இடங்கள் மற்றும் சொத்துக்களை மாசு படுத்தல்)ஆனால் பாவமாக கருதப்படுகின்ற விடயங்கள் மற்றும் சமூகத்துக்கு பயனளிக்கத்தக்க நன்னடத்தைகள் ஆனால் பாரம்பரிய சமய பட்டியலில் நன்மைகளாக (“பின்”) இல்லாத ( தெரியாதவர்களுக்கும் உதவுதல்,மற்றவர்கள் தொடர்பில் கரிசணையுடன் செயற்படல், பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல் போன்றன) விடயங்கள் முறையாக அர்த்தம் வழங்கப்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்டகால முன்னோக்கு – 2020 மற்றும் அதற்கப்பால

**தியானம்:** தியானத்தை வழக்கப்படுத்திகொள்வது ஆழ்ந்த உள்புற மாற்றத்துடன் தொடர்புடையது என்பது உண்மையாக இருந்தாலும் அன்றாட வாழ்க்கையின் எல்லா முக்கிய அம்சங்களிலும் தியானத்தை கருத்தில்கொள்வது ஒரு பயனுடையதானது என்று பரந்தளவில் உணரப்பட்டு வருகின்றது. கருத்தில் கொள்வது வெறுமனே கவனமாக இருப்பது மட்டுமல்லாமல் அதில் சுற்றாடல் மற்றும் எல்லா உயிர்வாழ்வனவற்றுடன் இரக்க உணர்வுடன் நடந்து கொள்ளுதல் என்பன அடங்கும். மிகவும் பயன்தரக்கூடியதாக அமைந்துள்ள இன்னொரு முறை தியானம் "கருணையை நேசித்தல்" மெத்தா போராட்டம் மற்றும் வன்முறை என்பனவற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு சமுதாயத்திற்கு மெத்தா ஒரு பயன்தரக்கூடிய மாற்று மருந்தாக அமைந்துள்ளது.

சமய வழிப்பாட்டு அமைப்புகள் / துறவி மடங்கள்/ கிறிஸ்தவ ஆலயங்கள் /பள்ளிவாசல்கள் என்பனவற்றால் நடத்தப்படும் சமய நிகழ்ச்சிகள் இன்னொருவரது சுற்றுச்சூழல்களை மாசுபடுத்தாது ஒருவருடைய குப்பைகளை எல்லாரும் ஒழுங்குமுறையாக அப்புறப்படுத்துதல், சுற்றாடலுடன் தொடர்புடைய வழிகளை நடைமுறைப்படுத்தி பொறுப்புடன் பயன்படுத்துதல் என்பதுடன் சுற்றாடல் தொடர்புடைய வழிகளுடன் வாழுவதை கடைபிடித்து அதிக குப்பைகள் குவிக்காமல் எவ்வாறு தவிர்ப்பது மற்றவர்களுக்கு எவ்வாறு கருணை காட்டுவது மற்றும் சமயத்துடன் ஒன்றித்திருப்பது என்பதற்குமுன் மனிதநேயத்துடன் வாழ்தல் என்பன பற்றிய அன்றாட விவகாரங்கள் என்பன பற்றிய விவகாரங்களில் பங்குபெருவோர்களுக்கு நல்ல அணுகுமுறை மற்றும் நடத்தைகள் என்பனவற்றைப்பற்றி பாடம் புகட்டுவதற்கான வழிகளாக அமையலாம்.

மக்கள் நடத்தை மற்றும் சிறப்புத்தகைமைகள் என்பனவற்றில் செய்யக்கூடியவைகள் மற்றும் செய்யக்கூடாதவைகள் எவை என்பனவற்றை அடையாளம் காணுதல் அவசியம். நிலமைகள் மற்றும் வழக்கப்படுத்திக் கொள்வதற்கான பயிற்ச்சிகள் என்பனவற்றை அனுசரித்து மக்கள் நடந்து கொள்கின்றார்களா என்பதனை நிச்சயப்படுத்திக்கொள்ள ஒரு சட்டம் போன்ற ஒரு அம்சம் அரசாங்கத்தால் எடுக்கப்படுதல்.

இத்தகைய தன்மைகளின் நடவடிக்கைகளை அமுழ்படுத்தல் சமய தலைவர்களிலேயே பெரும்பாலும் தங்கியுள்ளது. அரசாங்கம் வெளிவாரியாக உதவி வழங்குவதாக இருந்தபோதிலும் இந்தப்பணி மக்களிலேயே தங்கியுள்ளது. எவ்வழியிலாயினும் அரசாங்கம் நிலமைகளை உணர்ந்து சமயவிளக்கங்களின் மாறுபடுத்தல்கள் பற்றி சமய தலைவர்களுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க முயற்ச்சி எடுக்கக்கூடும். வாழ்க்கையின் அன்றாட கடுமையான உண்மைகள் என்பனவற்றோடு தொடர்புடைய மற்றும் சமய பயிற்சிகள் என்பனவற்றின் நிலமைகளின் உண்மைகளை அறிந்து கொள்ளும் ஆற்றல்கள் மற்றும் பொதுவான நம்பிக்கைகள் மற்றும் ஒற்றுமையான இணைக்கப்பாடு என்பனவற்றை மேம்படுத்தும் வேறுபட்ட சமயங்களுடன் தொடர்புகள் என்பன ஊக்குவிக்கப்படவேண்டும்.

## 2.2 சிறிலங்கா குடியுரிமை மற்றும் அடையாள கண்டுபிடிப்பு என்பனவற்றின் தளர்வான அர்த்தம்

2.2.1 தற்போதய நிலை, விளைவுகள், மற்றும் பிரச்சினைகள்.

அரசாங்கம் எல்லா நாட்டுப்பற்றுடைய படைகளை சட்டம், கொள்கை மற்றும் ஆர்வம் என்பனவற்றால் இலங்கையில் தீவிரமான குடியுரிமை என்ற சொல்லை ஆராய பலப்படுத்தும்.

தேசிய சகவாழ்வுக்கு அத்தியஅவசிய தேவையாக மொழி மற்றும் இணங்கல் ஒரு சமயத்திற்கு மேல் உள்ளவை என்பனவற்றை அடையாளம் கண்டு இலங்கையில் தீவிரமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுரிமை என்ற எண்ணம் மற்றும் இலங்கையர் என்பதற்கான அர்த்தம், இலங்கையர் என்ற அடையாளத்தை பலப்படுத்துதல், நாட்டின் வெவ்வேறான பண்பாட்டு ஒற்றுமையுடன் வாழும் நம்பிக்கை மற்றும் மரபுரிமை என்பன மூலம் அடையாளம் காணும்

குடியுரிமை என்பது ஒரு பொதுக்கருத்து அது நபர்களை ஒரேவகையைச் சேர்ந்த அங்கத்தவர்களாக ஒருவரை ஒருவர் அடையாளம் கண்டால் மாத்திரம்தான் குடியுரிமை என்று சொல்வதில் அர்த்தம் உண்டு.

சில நபர்கள் தங்களை மற்றவர்களைவ விட உயர்ந்தவர்கள் அல்லது அவர்கள் மற்றவர்களுக்கு தாழ்ந்தவர்கள் என்று கருதும்போது குடியுரிமை என்ற பந்தங்கள் நலிவடையும்.

குடியுரிமைக்கு சமமான உரிமைகள் மதிப்புகள் உள்ள எல்லா மக்கள் மத்தியில் பரஸ்பர அடையாளம் காணல் தேவையாக உள்ளது.

ஒரு இன அடையாளம் அல்லது சமயத்தால் கட்டப்பட்டிருந்தால் பலவித மக்கள் வாழும் இலங்கை மற்றும் எந்த ஒரு நவீன நாட்டிலும் பரஸ்பர அடையாளம் காணுதல் சாததியமற்றதாக அமையும்.

இனம் மற்றும் அடையாளத்தில் காட்டப்பட்ட நாடுகள் தங்கள் நாட்டில் உள்ள சிறுபான்மை யினரை தவிர்க்க முடியாமல் ஒதுக்குகின்றார்கள். அத்துடன் அயல் நாடுகளுடன் அடிக்கடி கலகங்களை விளைவிக்கின்றார்கள்.

இலங்கையில் குடியுரிமை சமயம் அல்லது இனம் என்பனவற்றின் அம்சமாக விபரிக்கபடாமல் "இலங்கையர்" என்று புதிதாக அமைக்கப்படவேண்டும்.

"இலங்கையர் என்பதன் அர்த்தம் வெவ்வேறான கலாச்சாரம் என்பன எங்களில் இருந்தபோதிலும் நாம் அனைவரும் சமமான உரிமைகளை அனுபவிக்கின்றோம் என்பதாகும்.

ஆகவே இலங்கையர் குடியுரிமையை வலுவடையச் செய்ய இரண்டு தேவைகள் உள்ளன.

(1) வெவ்வேறான கலாச்சார பண்பாட்டை கொண்டாடுதல்

(2) சம உரிமைகளை அடையாளம் காணுதல்.

பலவித வேறுபட்ட இனங்களை கொண்டாடுவது என்பதன் அர்த்தம் அரசாங்கம் பலவித மதங்கள் மற்றும் பலவித இனங்களின் பாராட்டு தங்களை ஊக்குவிக்க ஒவ்வொரு சாத்தியமான முயற்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். இந்த விடயத்தில் கல்வி மிகவும். இன்றியமையாததது. ஆனால் அது எண்ணங்களில் வெறும் மாற்றமாக இருக்கமுடியாது.

அதற்கு தீவிரமான பங்களிப்பு மற்றும் பயிற்ச்சியை ஊக்குவிப்பது தேவையாக உள்ளது.

பெரும்பாலான இளம் மக்கள் சமூகமளிக்கும் சமய விளக்கவுரைகள் ஏனய சமூகம் மற்றும் சமய நம்பிக்கைகளின் உண்மையான சிறப்பு பண்பை பிரதிபலிக்க ஊக்குவிக்கப்படவேண்டும். சமய கண்டுபிடிப்புகளில் உள்ள பகிர்ந்து கொள்ளப்பட்ட உயர்வாக கருதப்படுபவைகள் மாணவர்கள் கண்டறிய உதவுவதுடன் அது பரஸ்பர கௌரவம் மற்றும் சகிப்புத்தன்மை என்பனவற்றின் அடிப்படை அம்சங்களை கற்பிக்க வேண்டும். முக்கியமாக சமய விளக்கவுரைகள் சமயபாகுபாடுகள் அடக்குமுறை மற்றும் சகிப்புத்தன்மை என்பனவற்றிற்கு அரசாங்கம் ஒத்தாசை வழங்கி வெவ்வேறான சமய பிரிவுகளுக்கு புறம்பான சமய பாடசாலைகளில் சமயத்தை கற்பிக்க வழங்கும் ஒத்தாசையான தற்போதய நடைமுறை பலவித வித்தியாசமான சமய நம்பிக்கையை விளங்கிக்கொள்வதற்கோ அல்லது சகிப்புத்தன்மை என்பனவிற்கு உதவுவதாக தோன்றவில்லை. இந்த விவகாரத்தில் தனியாக பிரிக்கப்பட்டுள்ள பாடசாலை அமைப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. நாட்டின் மேன்மைக்காக எல்லா சமுதாயங்களின் பங்களிப்புகளை புரிந்து கொள்ள ஒவ்வொருவரது பண்பாடு இசை இலக்கியம் மற்றும் சமையல் அறிவு என்பனவற்றின் அறிவுகளை பரிமாரச் செய்தல். இரு மொழி மற்றும் மூன்று மொழிகளில் தேர்ச்சி என்பனவற்றை நாட்டில் பல பகுதிகளில் அடைய தவறுவதால் இந்த கொள்கைக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரம் இருந்தும் இது ஒரு தேசிய இணக்கப்பாட்டிற்கு ஒரு பாரிய தடையாக உள்ளது.

இளைஞர்கள் மத்தியில் முக்கியமான சுகந்திரமான மற்றும் பொருப்பான தெளிவாக சிந்திக்கும் ஒரு மனப்பாங்கை புகட்ட முக்கியமாக வரலாற்று ரீதியிலான கல்வி முயற்ச்சி செய்ய வேண்டும். எங்களது குழப்பங்கள் நிறைந்த சிக்களான கடந்த காலத்தில் உண்மையில் என்ன நடந்தது என்பதனை இலங்கையர்கள் ஏற்றுக்கொள்வார்கள். என்று ஒரு சொற்ப வருடத்தில் நிச்சயப்படுத்துவது கடினமாகும் ஆனால் சாத்தியமாவது என்னவென்றால் கலகங்கள் தலைதுாக்க இருந்த செயல்கள் மற்றும் முக்கியமான சொற்ப நேரங்கள் என்பனவற்றை அடையாளம் காணுதலாகும் குற்றச்சாட்டில் கவனம் செலுத்தாது எங்களது பழய அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள இது உதவும்.

சமஉரிமைகளின் அங்கீகாரம் என்பதன் பொருள் பற்றி அரசாங்கம் எல்லா வழிகளிலும் மனித உரிமைகள் என்பது எல்லா பண்பாடுகள் மற்றும் அடையாளங்கள் கொண்ட ஒரு பொதுவான உயர்வான மதிப்பீடல்கள் என்ற அடங்கியுள்ள மற்றும் அடிப்பட வழமையான நிலைகள் கொண்ட அரசியலமைப்பு என்பனவற்றின் மூலம் வலியுறுத்திக் கூறவேண்டும்.

**குடியியல் விளக்கம்**

மனித உரிமைகளின் உலகலாவிய விளம்பர அறிவிப்பு மற்றும் அரசியல் யாப்பில் உள்ள உரிமைகள் மசோதா என்பனவற்றை புரிந்து கொள்ளும் ஆற்றலின் ஒரு முக்கிய அம்சமாக அமையவேண்டும். இது கொள்கை கோட்பாடுடன் மட்டும் அமையக் கூடாது. ஆனால் இதில் பங்குகொள்ளும் மாணவர்கள் மனித உரிமைகள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் உள்ள உண்மையான பிரச்சனைகளை அறிந்துகொள்ளும் வல்லமை இருக்க வேண்டும். சமாதானமான ஒத்துளைப்பு நல்கும் மற்றும் ஒழுங்கான மாற்றம் என்பனவற்றை அடையும் நோக்கத்திற்காக தொண்டாற்ற மற்றும் அதில் ஈடுபட திறமையுடையவராக இருக்க வேண்டும்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி கற்பித்தல் என்பனவற்றின் விளைவு உரிமைகள் மற்றும் பல்வேறுபட்டவைகளை உள்ளடக்கியுள்ளவற்றை ஏற்றுக்கொண்ட பாராட்டாக அமையவேண்டும். அறிவியல் முக்கியமான ஆராய்வுகள் மற்றும் தங்களது எண்ணங்களே சரி என்ற மனப்பாங்கிற்கு பாராட்டுதலுடனான சந்தேகமனப்பாங்கு மற்றும் விவேகமான வாதம் மற்றும் அறிவாற்றலுடைய பணிவு மனப்பான்மை என்பனவற்றை கற்பிக்கின்றது. தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பனவற்றின் சிறந்த அபிவிருத்தியுடன் இணைந்து உள்ளது. இது நன்மைக்கு ஒரு வலிமையாக அமையக்கூடும்.

சுகந்திரத்தின்பின தொடர்ந்த சகாப்தத்தில் இலங்கையில் உடல் நலம் பற்றிய தகவல்களை விளக்கமாக அறிந்து கொள்ளும் கொள்கை திட்டம் மற்றும் வெவ்வேறான பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை நிலையின் பிண்ணணிகள் இருந்தபோதும். முக்கியமாக எல்லா பிரஜைகளும் அடையக்கூடிய கல்விச் சேவைகள் என்பனவற்றில் இலங்கை நன்மை அடைந்துள்ளது.

நாட்டின் ஆரோக்கிய மகிழ்ச்சி போன்ற நிலமைக்கு பங்களிப்பதற்கு பொருப்பாக உள்ள நேர்மையுடன் சேவை மனப்பாங்குடன் பங்களிக்கும் ஆளணி மற்றும் தொழில்வல்லுணர்கள் என்பவர்களின் செல்வாக்குடனான மதிப்பீடல்களுடன் இந்த எளிதில் அணுகக்கூடிய வழியான சமஉரிமை நீதி இணைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசசேவை நீதித்துறை மற்றும் ஏனய நிறுவகங்கள் அல்லது தனியார் துறை என்பனவற்றில் இணைந்தவர்கள் பொதுவாக இந்த உயர்வான கருத்து மதிப்பீடல்களுக்கு இணங்க வேண்டும். மற்றும் இதற்கு இணக்கம் கொள்ள தவருபவர்கள் சமுதாயத்தின் மறுப்புகள் அடங்களாக விளைவுகளை சந்திக்க நேரிடும். இலஞ்ச ஊழல்கள் இடம்பெற்றன. ஆனால் அவை மறைக்கப்பட்டன. ஏனெனில் அது பெருமைபடக்கூடியதோ அல்லது பிரசுரப்படுத்தக்கூடியதோ அல்ல.

2.2.2 பிரச்சினையின் விளைவுகள் மற்றும் ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

பல வருடங்களாக மக்களின் பலபிரிவினர்களால் பொருளாதார இழப்புகள் அனுபவிக்கப்பட்டிருந்தபோதும் பலபொருட்களை வாங்குதல் மற்றும் பயன்படுத்தும் சேவைகளின் வளர்ந்துவரும் சூழ்நிலையுடன் அரசியல் அதிகாரத்தின் அகந்தை மற்றும் அதிகார துர்பிரயோகம் சிறப்புரிமையுடன் தண்டனை பெறாமல் செய்தல் என்பன அரச நிறுவகங்கள் மற்றும் அதில் சேவை செய்பவர்களின் உயர்வான கருத்து மதிப்பீடல்களை அழித்துள்ளது

இது மக்கள் மற்றும் தனியார் துறைகள் என்பனவற்றை எதிரமறையாக தாக்கி நாட்டின் அபிவிருத்தியை பாதிக்கும் முக்கிய விடயங்களில் பெறும்பாலான பிரஜைகள் ஈடுபடாமல் இருக்க வழிவகுத்துள்ளது. கண்டனங்கள் (சிலவேளைகளில் மூர்க்கத்தனம்) இடம்பெறுகின்றன. ஆனால் குடியியல் சமுதாயம் கலவர கூட்டத் தீர்மானம் அடங்களாக அடிக்கடி பதில் கூறுவதில் மிகவும் சிறிய அளவிலேயே உள்ளது. அரசாங்கம் மற்றும் குடியியல் சமுதாயம் என்பனவற்றின் கூட்டு பங்காளி த்துவத்தின் அபிவிருத்தி முயற்சிகளுக்கு அடிக்கடி பகைமை மற்றும் அழுத்தம் என்பனவற்றால் பதிலாக வைக்கப்படுகின்றது

அடிப்படை காரணங்கள்.

ஆயுத போரின் பின் தேசிய நல்லிணக்கம் பற்றிய தற்போதய செயற்திட்டம் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. மற்றும் அன்மையில் அனுமதி பெற்ற ஒரு தேசிய நல்லிணக்க கொள்கை ஒரு முக்கியப் படியாகும். ஒரு ஒற்றுமையான இலங்கைக்காக ஒரு பொதுவான புதிய துாரநோக்கின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் என்பனவற்றின் பொருப்பை முன்னேற்றம் அடையச் செய்ய இந்த முயற்சிகள் துரிதப்படுத்தப்படவேண்டும் ஆகவே குடியுரிமை என்ற உணரவு மற்றும் தேசிய நல்வாழ்வில் முன்னேற்றம் என்பனவற்றின் துாரநோக்கு அபிவிருத்தி என்பனவற்றை பகிர்ந்து கொள்ளல் ஒரு நீடித்த சவாலாகும்.

**2.2.3தீர்வுகள் நடவடிக்கைகள் மற்றும் அமுழ்படுததுதல்**

எதிர்காலம் சிலவேளை எங்களது சமுதாயத்தில் மற்றும் நிறுவனங்களில் முக்கியமாக இளைஞர் குழுக்களின் ஊக்கச் செயல் மற்றும் எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து அறிந்த சமய தலைவர்களின் தலைமைகள் என்பன ஊடாக அடையாளம் காணப்பட்ட எதிர்மறை அம்சங்களுக்கு சவால இட புதிய தொடர்பாடல் தொழில் நுட்பத்தை பாவிப்பதில் தங்கியுள்ளது எனலாம். பொருளாதார மற்றும் ஒரு மாற்று அரசியல் சமுதாய சம்பாஸணை பற்றிய சொல்லை பரப்பி முன்னேற்றமடையச் செய்வது மிகவும் முக்கியமானதொன்றாக விளங்குகின்றது. அந்த சம்பாஸனையை SDSD அபிவிருத்தி ஒரு புதிய உருபடிவத்துடன் இணைந்த மனித உரிமைகளின் முக்கிய கருத்துமதிப்பீடள்களை முதன்மைபடுத்தி முன்னேற்றம் அடையச் செய்வது சாத்தியமாக அமையும். நிலை கெட்டுள்ள சீரழிவுக்கு சவாலாக ஒரு செயற்திறன் கொண்ட தொடர்பாடல் மூளோபாயத்துடன் மற்றும் கடந்த பத்தாண்டு காலமாக வலிமை அடைந்துள்ள முழுமையான மாற்று சம்பாஸணை மற்றும் உயர்வான கருத்து மதிப்பீடல் என்பனவற்றை முன்னெடுத்தாலே அன்றி எங்கள் நாட்டிற்கு எதிர்காலம் இல்லை என்று விளக்கி கூறினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் அர்த்தம் எந்த ஒரு தோற்றுவாயிடமிருந்து இழஞ்ச ஊழல் சட்டமின்மை மரபு அதிகார துர்பிரயோகம் என்பனவற்றிற்கு மக்களின் பிரதிபலிப்பை ஏற்காது வெளியிடல் மற்றும் எண்ணக் கருத்துகள் வெளியீடல் தகவல் அறியும் சட்டம் மற்றும் ஊடக சுகந்திரம் என்பன வளுவூட்டப்படவேண்டும்.

மக்கள் தொடர்பாடல் மூலோபாயம் உயர்ந்த எண்ணக்கருத்துக்களை மாற்றி ஒரு புதிய குடியரிமை மாதிரிபடிவமாக உறுவாக்குதல் இந்த புதிய குடியுரிமை அரசாங்க வேலை செய்பவர்களது பொருப்புகள் மற்றும் உரிமைகளை அடையாளம் காண்கிறது. அது அரசாங்க அதிகாரிகளை அலுவலகங்களுக்கு பொருப்பாணவர்கள் மற்றும் மக்கள் அங்கத்தவர்கள் என்று அடையாளம் காண்கின்றது. அத்துடன் ஒன்றிணைந்த இலங்கை பிரஜைகளாகவும் நல்லாட்சியின் பயனாலியாகவும் காண்பதற்கு தாக்கம் விளைவிக்குமானால் தகவல் அறியும் உரிமை மற்றும் ஊடக சுகந்திரம் வளுவூட்டப்படவேண்டும்.

இந்த நிலமையை மாற்ற பின்வரும் தெளிவான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.


- மலைநாட்டு இளைஞர்களை சென்றடையுங்கள். உதாரணத்திற்கு தீவிரமான குடியுரிமையை மேம்படுத்துதல் செயல் திட்டம் இலங்கையின் SFCG முக்கிய நிகழ்வு மாற்ற மடைந்த மலைநாட்டு பண்பாடு அதில் இளைஞர்கள் தங்களது சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ள ஊக்கமளிக்கப்பட்டு மற்றும் தயார் ஆக்கப்பட்டுள்ளார்கள். தீர்மானம் செய்யப்படுபவர்களுடன் தீவிரமாக ஈடுபட்டு மற்றும் அவர்களுடைய மக்களின் உரிமைகள் என்பனவற்றிற்கு ஒத்தாசை வழங்குபவர்களிடம் இணைந்து மலைநாட்டு இளைஞர்கள் செயற்படுகிறார்கள்

- இலங்கையில் குடியுரிமையை வலிமைஅடையச் செய்ய கல்வி அறிவை ஒரு ஆயுதமாக பயன்படுத்துங்கள். உலகலாவிய குடியுரிமை கல்வி செயற்பாட்டை ஊக்கம் அடையச் செய்யும் பங்காளித்துவத்தை பேச்சுவார்த்தை மற்றும் முறைசார் அல்லது முறைசாரற்ற கல்வி மூலம் கட்டி எழுப்பும் துறைகள் அதாவது மனித உரிமை கல்வி சமாதான கல்வி அடங்களாக இலங்கை கலவரங்களால் பாதிக்கப்பட்ட நாளிலிருந்து நீடித்த அபிவிருத்திக்கு கல்வி மிகவும் அத்திய அவசியமானதொன்றாகும். அது ஆதரவு சமுதாய ஒற்றுமையான சகவாழ்வு மற்றும் பகிர்ந்து கொள்ளப்பட்ட பொருப்புகள் என்பனவற்றை மேம்படுத்தும் சமயம் கலாச்சாரம் சம்பிராதாயம் மற்றும் ஏனய வேறுபாடுகள் மதிப்பு மதிப்பிற்கு முக்கியத்துவம் வழங்குதல் மற்றும் பொதுவானவற்றை தெளிவு படுத்துதல் என்ற அடிப்படையில் பலவகையான மட்டங்களை அறிந்துகொள்ள அது ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது.

- பசிபிக் மற்றும் ஆசியாவில் கற்பிக்கப்படும் G.C.E தொடர்பான தலைப்புகள் கற்பிக்கப்படும்.

- உள்நாட்டின் மற்றும் உலகலாவிய அடையாளங்கள் மற்றும் அக்கரைகள் என்பனவற்றின் நல்லிணக்கத்தை ஆய்வு மற்றும் சம்பாஸணை இலகுவாக்கும. உதாரணமாக திறந்த சம்பாஸணை சொற்பொழிவு மேடைகள் தீவிரமான சமூகசேவை ஈடுபாடல்களுக்கு அரங்கத்தை வளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Source: Adapted from U. Chung, *Global Citizenship Education in the Asia-Pacific*. APCEIU. Presentation at the Technical Consultation on Global Citizenship Education. Seoul. Republic of Korea. September 2013.

- தொழில் நுட்பம் இன்னுமொரு முக்கியமான கருவி. அநேக நாடுகள் உண்மையான சொற்பொழிவு மேடைகள் அவர்கள் கல்வி கற்கும் சுற்றாடலை விரிவாக்க மற்றும் வகுப்பறைகளை மக்களை இணைத்து பரவலாக சிதறியுள்ள மாறுபட்ட எண்களைக் கொண்ட நோய்வாய்ப்பட்ட தனிமைபடுத்தப்பட்ட மக்களை அடைய உண்மையான சொற்பொழிவு. மேடைகளை பாவிக்கின்றார்கள். இலங்கையில் கணணி வலய பாவணை 21.9 வீதம் அதேவேளை தென்கொரியா சிங்கப்பூர் மற்றும் மலேசியா 84.8 73, மற்றும் 67 (உலகவங்கி அறிக்கை 2013) அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் குறைவான கணணி திறமை குறைவான ஆங்கில அறிவு பணம் செலவளிக்க முடியாத நிலமை உடல் கட்டமைப்பு குறைபாடு போன்ற மனப்பாங்கு போன்ற பிரச்சினைகளை கணணி பாவணையில் எதிர்கொள்கின்றார்கள்.

  அரசாங்கம் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்க அமைப்புகள் என்பன ஐ சி கொள்கைகள் நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்புர மக்களை புதிய தொழில் நுட்பத்துடன் வளுவடையச் செய்ய அறிமுகப்படுத்தியுள்ளன.

  உதாரணமாக நீடித்த அபிவிருத்தியின் செயல் திட்டத்திற்கு இளைஞர்கள் ஆசிரியர்களை ஒரு வெப்தளம் அடிப்படையிலான கல்வி மற்றும் மேடைகளை ஸ்தாபித்துள்ளனர். இது 120 நாடுகளைச் சேர்ந்த 30,000 பேர் பங்குபெறும் மாணவர்களால் பாவிக்கப்படுகின்றது.

- விளையாட்டு மனித உரிமைகள் வெவ்வேறு இனங்கள் நீதி மற்றும் சகிப்புத்தன்மை என்பனவற்றை ஒரு நீடித்த நிலைத்திருக்க மற்றும் ஆழ்ந்த தாக்கத்தை உருவாக்க பல்வேறுபட்ட சமுதாய மக்கள் பேட்டி சமுதாய பொருளாதார நிலைகள் கலாச்சாரம் மற்றும் இனம் என்பன மூலம் இணைந்திருக்கிறார்கள்.

  ஒரு சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான குடிமகனை மேம்படுத்துவது நிதி பொருளாதார நன்மைகள் என்பனவற்றை கொண்டு அவை அடிக்கடி குறைவாகவே எடைபோடபடுகின்றது.

- கற்கும் சூழல்களை உறுவாக்கி கற்பவர்களை உண்மையான வாழ்வின் அனுபவங்களுடன் இணைக்கின்றது. (அதாவது திட்டங்களை பரிமாரிக்கொள்ளல். சமூகம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் வெளியூர் மொழிக் கல்விகள் மேலே கூறப்பட்ட சொற்பொழிவு மேடைகள் சமுதாயம் உள்ளுர் மாகாணம மற்றும் தேசிய மட்டத்தில் என்பனவற்றில் தீவிரமாக பங்கு கொள்வதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் குடியுரிமையை முன்னேற்றம் அடைய உதவுகின்றது. எல்லாம் உள்ளூருக்கு சேர்ந்தவை என்ற சொல் சமுதாய மட்ட திட்டங்களின் முக்கியத்துவத்தை விளக்கி பெரிதுபடுத்தி காட்டுகின்றது. உதாரணத்திற்கு a+dpyptupdhyl ஒரு எதிர்கால தலைவரின் திட்ட நிகழ்வு பரிமாரல்களில் ஈடுபட வாய்ப்புகள் பெறுகின்றார்கள். அப்படியான நிகழ்ச்சி திட்டங்கள் அரசாங்க முதலீடு மற்றும் ஒத்தாசையுடன் அதிகரிக்கக்கூடிய தாக இருக்கும்

- குடியுரிமை விவகாரங்கள் மற்றும் போக்குகள் பற்றி புரிந்து கொள்ளல் மற்றும் ஆசிரியர் அறிவு என்பனவற்றை அதிகரிக்க ஆசிரியர் பயிற்சி திட்டங்களை ஆரம்பித்து மற்றும் தொடர்பாடல் திறமைகள் என்பனவற்றை முன்னேற்றம் அடையச் செய்தல். உதாரணமாக சிரி லங்கா தேசிய கல்வி கல்லூரி தொழில் பயிற்சிக்க மூன்று வருடன் வழங்குகின்றது.

- அதில் ஒரு வருடம் அரசாங்க பாடசாலையில் பயற்ச்சியும் அடங்குகின்றது. பயிற்ச்சி பெறும் காலப்பகுதியில மாதாந்த செலவுப்படி மற்றும் தங்குமிட வசதிகள் என்பன வழங்கப்படும்.

  இளைஞர்கள் மேற்கொள்ளப்படும் முயற்ச்சிகள் பரந்த பலதரப்பட்ட குரல்கள் மற்றும் எண்ணங்களுடன் சேர்ந்து வேறுபட்ட பண்பாடுகள் கல்வி பின்புலன்கள் வரலாறு மற்றும் அரசியல் சூழ்நிலைகள் மற்றும் சமுதாயங்கள் என்பனவற்றை பிரதிநுவப்படுத்துகின்றது. உதாரணத்திற்கு தீவிரமான குடியுரிமை சமுதாயத்தை பிரதிநுவப்படுத்தி தலைமைத்துவ பங்கை வளர்பதோடு யூனியன் SPOOLS ஒரு சிறந்த நுழைபாதையாக விளங்குகின்றது.

- இலங்கையில் புதிய தகவல் தொடர்பாடலுடன் பெண்களின் ஈடுபாடு போதுமானதல்ல. ஆகவே பலதரப்பட்ட தகவல் தொடர்பாடல் மிகவும் திறமையாக மற்றும் வலுவூட்டப்பட்ட பிரஜையாக வருவதற்கு சமுதாய தகவல் தொடர்பாடல்களை பாவித்து எல்லோரும் திறமையாக வெப்தளத்தை மேம்படுத்துதல் என்பனவற்றிற்கு தொழில்நுட்பம் மற்றும் அந்தரங்க அம்சங்கள் என்பனவற்றுடன் பழக்கப்படுத்திக்கொள்ள பயிற்ச்சி பட்டரைகளை ஒழுங்கு செய்தல் பயனுள்ளதாக அமையும்.

- ஒரு தீவரமான வலுவூட்டப்பட்ட மற்றும் சகிப்புத்தன்மையைக் கொண்ட நாடு ஒரு பொதுவான வரலாற்று விவரிப்பை பகிர்ந்து கொள்ளும் அல்லது குறைந்தது கடந்தகால வேதனைதரும் நிகழ்வை பற்றிய பலதரப்பட்ட எண்ணங்களுக்கு மதிப்பளிக்கும். இந்த பகிர்ந்து கொண்ட வரலாறு மற்றும் தேசிய மறுமலர்ச்சி மற்றும் எல்லா சமுதாயங்களையும் மிகவும் பெருமையாக தாங்கள் இலங்கையர்கள் என்று விரிவாக உணரவைக்க தற்போதய அரசாங்கத்தால் திட்டமிடப்பட்டுள்ள மாற்றமடையும் நீதி பொறிமுறைகள் மிகுந்த பங்களிக்கும். காணாமல் போனார் அலுவலகத்தில் உண்மைகளைத்தேடும் பொறிமுறைகளை மற்றும் உண்மை நல்லிணக்க ஆணைக்குழு அதனுடன் சேர்ந்த போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் என்பன இந்த விடயத்தில் ஒரு இன்றியமையாத பங்கை நல்கும்.

## 3. 2020 மற்றும் அதற்கும் மேலான தொலைவில் நீடித்து நிலைக்கும் எண்ணக்கருத்து

சமயத்தை ஒரு வாகனமாக பாவித்து மக்கள் மனதில் பொதுவான படிப்பின ஒழுக்கங்கள் மற்றும் குடியுரிமை கருத்து மதிப்புகள் என்பனவற்றை புகட்ட வேண்டும். சமயத்தை பின்பற்றி ஒன்றாக செயல்பட ஏற்பாடுகள் செய்து மக்களை அதன்வழிநடத்துவதற்கு எல்லா சமயத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்து கொள்ளப்பட்ட அல்லது பகிர்ந்து கொள்ளக்கூடிய படிப்பினை ஒழுக்கங்களின் உயரிய கருத்துக்கள் என்பன ஸ்தாபிக்கப்படும்.

ஒரு தீவரமான ஒற்றுமையான வளுவூட்டப்பட்ட மற்றும் சகிப்புத்தனமை வாய்ந்த நாடு ஒரு பொதுவான வரலாற்று விபரத்தை பகிர்ந்து கொள்ளும். அல்லது குறைந்தது பலவிதமான எண்ணக்கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் சமுதாயம் மற்றும் நிறுவகங்களில் உள்ள எதிர்மறை அம்சங்களை கண்டறிந்து முக்கியமாக இளைஞர்கள் குழுக்களின் தீவிர ஈடுபாடு மற்றும் நன்கு பக்குமடைந்த சமய தலைவர்கள் மூலம் அவற்றிற்கு சவாலாக அமைய புதிய தொடர்பாடல் தொழில்நுட்பங்கள் பாவிக்கப்படும் சட்டமின்மை இழஞ்ச ஊழல் அதிகார துர்பிரயோகத்தின் மக்கள் எதிர்ப்பு செயல்கள் கண்டன தாள்கள் மற்றும் வெளியிடுதல் எந்த ஒரு தோற்று வாயிடமிருந்தும் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. தகவல் அறியம் உரிமை மற்றும் ஊடக சுகந்திரம் என்பன வளுவூட்டப்படும்.

கல்வி அறிவு இலங்கை குடியரிமையை வலுவடையச் செய்யம் நிகழ்ச்சிகள் அதாவது உலகளாவிய குடியுரிமை கல்வி செயற்பாட்டை ஊக்குவிக்கும் பங்காளித்துவத்தை கட்டி எழுப்பும் முறைசார் அல்லது முறைசாரற்ற கல்வி மூலம் சம்பாஸணை மற்றும் ஒத்துளைப்பு சமூக அடிப்படையில் அமைந்த அணுகுமுறைகள் கற்கும் சூழலை உருவாக்கும். அது சமுதாயங்களுடன் இணைப்பை மேம்படுத்தி மற்றும் கல்வி பயிலுபவர்களை உண்மையான வாழ்க்கை அனுபவங்களுடன் இணைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T3

## T3 பால்பாகுபாடு[21]

### 1. அறிமுகம்

நீடித்த அபிவிருத்தி திட்ட நிகழ்ச்சியின் மதிப்பீடு மற்றும் திட்டங்களின் பால்பாகுபாடு பகுப்பாய்வின் ஒரு முக்கிய வகையாக விளங்குகின்றது.

இது சமுதாய முறையால் அமைக்கப்பட்ட அர்த்தங்கள் உயிரியலாக பால் சம்பந்தமான வித்தியாசமாக நியமிக்கப்படடவை.

இது ஆன்கள் தொடர்பாக அடிக்கடி பெண்களுக்கு சமமாக மற்றும் பக்கச்சார்பாக ஏற்படுத்தப்பட்டது. பகிர்ந்தளிப்பு வருமானம் வளங்களை அனுகும் வழிகள்.. உரிமைகள் மற்றும் உரித்துகள் என்பனவற்றின பகிர்ந்தளீப்புகளில் தொழிலபுரியும் இடங்களில் பால்பாகுபாடு நடைமுறை வழக்கங்கள் மற்றும் சமூகரீதியாக உறுவான பால்பாகுபாட்டின் பெண்கள் ஆன்கள் மேல் உள்ள வித்தியாசமான தாக்கங்கள் பற்றி ஒரு பரிசோதனை நடத்த ஆற்றளிக்கின்றது. ஐக்கிய ஒன்றியத்தினால் நீடித்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்கில் பாரபச்சமற்ற சமநிலை உறுதியளிக்கப்பட்டுள்ளது (இலக்கு இல J) அதே வேலை பல துறைகளில் உள்ள பால் பாகுபாடு நிலவும் நிலமை. மயில் பால்பாகுபாடு சம்பந்தமான ஒரு முக்கிய விவகாரமாக கருதப்படுகிறது. அது எல்லா நீடித்த அபிவிருத்தி இலக்குகளில் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இலங்கையில் பெண்கள் பற்றிய அநேக விவகாரங்களில் இரண்டு முக்கிய விடயங்கள் 2020 வரை தொடர உள்ளது. அவை (ஏ) பெண்ணை வருமையான பெண்ணிணப்படுத்துவது அநேக பெண்கள் ஆண்களைவிட ஏழை என்ற (பி) பெண்களுக்கு எதிராக நிலவும் வன்முறை இரண்டும் எதிர்மறையாக பெண்களாக தனிப்பட்ட நல்வாழ்வு சமுதாயம் குடும்ப அலகு மற்றும் தொழில்புரியும் இடம் என்பனவற்றை தாக்குகின்றது. ஆகவே இரண்டிற்கும் இழப்பீடு மற்றும் பால் சமநிலை என்பன தேவையாக உள்ளது.

இந்த நிலமை 60 பிலஸ் முதியோர் சனத்தொகை மற்றும் பெண்களின் அவர்களது நீண்ட ஆயுளுடன் சேர்ந்து நிலமையை மோசமடையச் செய்துள்ளது 2022ம் ஆண்டில் 60 பிலஸ் வயது மக்களின் தொகை 17 வீதம் அதிகரிக்கும் அதோடு ஆன் முதியோர்களது ஆயுசு 72.3 வருடத்திலிருக்கும்போது பெண்களின் ஆயுசு 82.5யை அடையும் என்று கருத்துருவாக்கப்பட்டுள்ளது பற்றாக்குறையான பாதுகாப்பு அற்ற நிதி வைத்திய கட்டணங்கள் மற்றும் ஓய்வூதிய பற்றாக்குறை, முதியவர்களை தொழிலுக்கு செல்ல கட்டாயப்படுத்துகின்றது. இவர்கள் இளைஞர்கள் பெறும் சம்பளத்தைவிட குறைந்த சம்பளத்திற்கு நீண்ட மணித்தியாளங்களுக்கு தொழில்புரிய நிர்பந்தப்படுத்தப்படுகிறார்கள். இன்னுமொரு மட்டத்தில் அத்துடன் பெண்களின் கருத்தரிபபு வீதம் 35 ஆக அதிகரித்துள்ளது. (இது ஒரு திடிர்

21 எழுதுனர் குழாம்: நெலுபர் டி மெல் (தலைவர்), லக்ஷ்மன் திஸ்ஸனாயக்க, வகீஷ குணசேகர, ஹரின் அமரசூரிய, ப்ரதீப் பீரிஸ், குமுதுகி சாமுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகறிப்பு இது 2022வரை கருத்துரவாக்கப்பட்டுள்ளது) இதன் விளைவு வயதான பெண்கள் பிள்ளைகளை பராமரித்தல் அத்துடன் சொத்தை மாற்றம் செய்வதிலும் ஏற்படுகின்றது அத்துடன் தொழில் புறியும் பிள்ளையளிடமிருந்து பெற்றார்களுக்கு பணம் வருவதற்கு பதிலாக பிள்ளைகள் தங்கள் நிதிதேவைகளுக்கு பெற்றார்களில் தங்கியுள்ளார்கள். வீட்டு பொருளாதாரத்தின் அபிவிருத்தி பன்முகப்படுத்தப்பட்ட முதலீடு மற்றும் தந்தைக்கான குழந்தை பராமரிப்பு விடுப்பு குடும்பங்கள் மற்றும் தொழில் நல்குபவர்கள் மத்தியில் நிலவும் பால் சம்பந்தமான சமனற்ற அனுகுமுறைகளை மாற்றுவதற்கான சிறந்த திட்டங்கள் என்பனவற்றிற்காக கொள்கைகள் அடங்களாக பெண்களை தொழிலில் அமர்த்துவதில் அரசாங்க பொதுக் கொள்கையில் பற்றாக்குறைகள் நிலவுவதால் குறைந்த அளவிலான FLPR மற்றும் பெண்களின் குறைந்த வருமானம் ஒரேவேளையில் தொடர்ந்து இருக்கும்.

## 2. சிக்கலான பிரச்சினைகள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

### 2.1 ஏழ்மையின் பெண்ணியம்

#### 2.1.1 தற்போதய நிலை, பிரச்சினை மற்றும் பிரச்சினையான பகுதிகள்

ஆண்களை விட பெண்களின் உழைக்கும் திறனை குறைத்து வைப்பதற்க்காக பல்வேறு அம்சங்கள் சதிசெய்கின்றன.ஆரம்பத்தில் இருந்து பார்த்தோமேயானால் தொழிற்சக்தியில் ஆண்கள் 74.7 வீதமும் பெண்கள் 35.9 வீதம் என்றிருப்பதே பெண்களின் பங்களிப்பை கணிசமான அளவு குறைத்துக் காட்டுகின்றது (இலங்கை தெபழிலாளர் ஆற்றல் மதிப்பீடு ஆண்டறிக்கை 2015). உலகமட்டதில் தொழிற்சக்தியில் பங்களிப்பு பட்டியலை ஒப்பிட்டு பார்க்கையில் பால் வேறுபாட்டு விடயத்தில் இலங்கை 28வது இடத்தில் அமைந்துள்ளது. (உலக வங்கி மேற்கோள் காட்டியது 2017, 185). இளம் பெண் தொழிலாளர்களிடமும் இந்த நிலமையே காணப்படுகின்றது. உயர்தரம் அல்லது அதற்க்கு மேற்ப்பட்ட தராதரத்தைக் கொண்டு வேலையற்ற நிலையில் உள்ள பெண்களின் வீதம் 16.9 ஆனால் அவ்வீதம் ஆண்களிடையே 12. வீதம் மாத்திரமே. (இலங்கை தொழிலாளர் ஆற்றல் மதிப்பீடு ஆண்டறிக்கை 2015). முறையற்ற பொருளாதாரத்தில் பணி செய்யும் பெணகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற போதிலும் கணிசமான அளவு நெகிள்வுத்தன்மையுடையதாக உள்ளது.முறையற்ற பொருளாதாரத்தில் வேலை செய்யும் பெண்களின் அளவு ஆண்களின் அளவிலும் குறைவு என்றாலும் பாதிப்பானது பெண்களுக்கே அதிகமாக காணப்படுகின்றது.

அதாவது வருமானத்தை பொறுத்தவரையில் கூட ஆண்களுடன் ஒப்பிடும் அளவிலும் பெண்கள் குறைவான காணப்படுவதால் பெண்கள் நிதி அடிப்படையில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றனர். 2012/13அரசாங்க துறையில் சராசரி எஅருமானம் 34000 ஆக இருக்கிறது இருந்தாலும் பெண்களின் வருமானம் 30000 ஆகவும் ஆண்களின் வருமானம் 37000 ஆகவும் காணப்படுகின்றது. தனியார் துறையில் பெண்களின் சராசரி வருமானம் 13600 ஆண்களுக்கு 21400 ஆக காணப்படுகின்றது. வீட்டு வருமான மற்றும் செலவு நிலைகுறித்த ஆய்வில் 2009/10 2011/12 அரசாங்கம் தனியார் அரசாங்கம் ஆகியவற்றில் இருபாலாருக்கும் கணிசமான வித்தியாசத்தில் வருமானம் இருப்பதற்க்கு ஆதாரம் உள்ளது.

60 வயதிற்க்கு மேற்ப்பட்ட சமுதாயத்தில் வாழும் சந்த்தொகையில் பெண்களின் வாழ்வுக்காலம் அதிகம் என்பதை காட்டுகின்றது 2022ம் ஆண்டிற்கான வாழ்வுக்காலம் குறித்த எதிர்வுகூறல்களை வைத்து பார்க்கும் போது 60 வயதிற்க்கு மேற்ப்பட்டவர்களின் எண்ணிகை 17 வீதத்தினால் அதுகரிக்கும் போதிலும் பெண்களின் வயதின் இறுதிக்காலம் 82 வயதாகவும் ஆண்களின் வயது 72.3 வருடங்களாகவும் காணப்படும். பொருளாதர பாதுகாப்பின்மை சுகாதாரச் செலவு அதிகரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட ஆயுட் காலம் பொருத்தமற்ற ஒய்வூதிய பயன்கள் ஆகியன வயதானவர்களை முறையற்ற தொழில்களுக்கு செல்வதற்க்கு வழிவகுக்கக் கூடியதாகவும்முள்ளது. அதுமட்டுமல்லாது நீண்ட நேரமாக இளயவர்களை வி ட முதயவர்கள் குறைந்த சம்பளத்திற்க்கு வேலை செய்ய நேரிடுகின்றது.இன்னொரு மட்டதில் பார்க்கும் போது 35 வயதிற்க்கு மேற்ப்பட்ட பெண்களுன் கருக்கட்டல் வீதம் அதிகரிப்பதன் காரணமாக வயதான பெண்கள் சிறுவர்களை பராமரிக்கும் நிலைக்குத் தள்ளபடுகின்றார்கள். பிள்ளைகளிடமிருந்து பெற்றோர்களுக்கு வருமானம் வரும் நிலை இல்லமல் பெற்றொரிடமிருந்து பிள்ளைகளுக்கு பணம் செல்வதனால் பிள்ளைகள் நிதிக்காக பெற்றோரிடம் தஙகியிருகும் நிலை காணப்படும் .

குழந்தைப்பராமரிப்பு விடுப்பு, முதலீடுகளை முறைப்படுத்தல் பன்முகத்தன்மை குடும்ப வருமாந்த்தை வளர்த்தல் மற்றும் கொள்கைகள் உட்பட பெண்களுடைய தொழிற்சக்த்தியை மேம்படுத்தும் சரியான கொள்கைகள் இல்லாத சூழ்னிலை தற்ப்போது காணப்பட்டு வருகின்றது இப்படிப்பட்ட காரணிகள் குடும்பம் தொழிளாளர் இடையே ஆண் பெண் சமத்துவத்தன்மையினை அதிகரிக்கச் செய்கின்றன.எப்.ல்.பி.ர் உட்பட பெண்கள் தொடர்ந்து குறைந்த சம்பளத்தில் வேலை செய்வது தொடர்கின்றது.

### 2.1.2 பிரச்சினைகளின் விளைவுகள் மற்றும் சாத்தியமான தாக்கல்கள்

- **பொருளாதாரம்**

பெண்கள் குறைவான அளவில் தொழிலில் பங்கேற்றல் அதன் விளைவு குறைந்த வருமானம் ஆகியவற்றால் பெண்பிள்ளைகள்து கல்வி முதலீட்டில் இருந்து குறைந்த பங்கு இலாபமே பெறப்படுகின்றது. பெண்களது கல்வியில் அரசாங்கத்தின் பங்கு இலாப இழப்பு மற்றும் நஸ்டம் என்பன பெண்கள் வீட்டு பராமரிப்பில் ஈடுபட்டிருப்பதால் சிறந்த கல்வியை இளம் பெண்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலமையை சுட்டிக்காட்டுகின்றது.

- 61.4 வீதமான பெண்கள் 5.9 வீத ஆன்களுக்கு எதிராக வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள் " பொருளாதார அடிப்படையில் மந்தநிலை"
- தலைமுறை சொத்து புளக்கத்தில் மாற்றம் பிள்ளைகளை பெற்றேர்களது நிதியில் தங்கியிருக்கச்செய்துள்ளது. அத்துடன் 2022 ஆம் ஆண்டு வரை 35 பிலஸ் வயது பெண்களது கருத்தறிக்கும் விகிதம் அதிகரித்த வணணம் இருக்கும்.
- முதியோர்கள் (60 பிலஸ்) சமுதாய அதிகறிப்பு மற்றும் பெண்களது நீண்ட ஆயுளின் விளைவு பெண்களை சாதாரண பொருளாதார துறையில் தொழில செய்ய நேரிடும் அது எதிர்மறையான தாக்கல்களை பொருளாதாரம் வருமானம் மற்றும் நல்வாழ்வு என்பனவற்றில் ஏற்படுத்துகின்றது.

**சமூகம் சார்ந்த**

சாதாரண பொருளாதார தொழில் துறையில் உள்ள பெண்களின் சம்பந்தப்பட்ட வறுமை வருமானம் நல்வாழ்வு மற்றும் தீர்மானங்கள் எடுக்கும் ஆற்றல் என்பனவற்றை பாதிக்கின்றது. வீட்டு தலமைத்துவம் வருமானம் உருவாக்குதல் என்பதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படவேண்டும். (ஆண்களிலிருந்து 86 வீதம் ) இலங்கையில் 4 மாவட்டத்தில் 1560 ஆன்களின் மாதிரியிலிருந்து)

- சாதாரண பொருளாதாரத்தில் உள்ள வயோதிப பெண்களின் வறுமை வீட்டில் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மற்றும் நல்வாழ்வு என்பனவற்றை பாதித்து அவர்களை குற்றச் செயல் மற்றும் வீட்டில் வன்முறை என்பனவற்றை எதிர்கொள்ளும் ஆபத்தை ஏற்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெற்றோர்கள் வசிக்கும் இடம் மற்றும் சிறுவர் பராமரிப்பு இடங்களுக்கு அருகில் வாழும் பெண்களின் அதிகரிப்பு தொழில் வாய்ப்புகள் மற்றும் சிறந்த வருமானம் என்பனவற்றை மட்டுப்படுத்துகின்றது. அத்துடன் நல்வாழ்வு தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பனவற்றிற்கு எதிர்மாரான பலன்களை வழங்குகின்றது.

- பராமரிப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ள நாட்டுப்புறம் சார்ந்த பெண்கள் தனிமைப்படுத்தியிருத்தல் மற்றும் அவர்களுக்கு நகர்புர அபிவிருத்தி பயன்களை அதிகரிக்க முடியாத நிலை. அதன் விளைவு குறைந்த வருமானம் மற்றும் தாழ்ந்த வாழ்க்கை நிலை

- நகர அபிவிருத்தியின் விளைவால் வதிவிடம் மாறி பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள நகர்புர பெண்களின் வருமான இழப்பு

- ஒன்றோன்று இணைந்த வறுமை மற்றும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து திறமை குறைந்த தொழில்களில் ஈடுபட்டிருத்தல் பெண்களது நல்வாழ்வு மற்றும் குடும்ப ஒற்றுமை என்பனவற்றை பாதிக்கின்றது (மற்றும் ஆன்களது குடும்பத்தை பராமரிக்கும் கரிசணையில் உள்ள குறைபாடு)

- காலநிலை மாறுபட்டதால் உணவுப் பொருட்களின் விலை அதிகறிப்பு இன்னுமொரு ஆபத்தாக உள்ளது. அதுபோல 6-59 மாத குழந்தைகளில் நிலவும் இரத்தசோகை 15 வீதமாக உள்ளது. மற்றும் கருத்தரிக்கும் பெண்களின் 26 சதவீதமக உள்ளது. முழமையாக 31.8 வீத பெண்கள் மொனராகல திருகோணமலை முல்லைததீவு போன்ற மாவட்டங்களில் உள்ளனர்

**சுற்றுச்சூழல்**

- பாதுகாப்பற்ற உணவு: ஏற்கனவே சமமற்ற வேதனத்தால் சுமைபொறுப்பு உடைய பெண்களின் (வீட்டுக் குடும்பதலைவிகள் அடங்களாக) பொருட்கள் வாங்கும் சாத்தியத்தை காலநிலை மாற்றம் மற்றும் பொருட்கள் விலை அதிகரிப்பு என்பன பாதிக்கின்றன.

- முதுமை அடைதல், களைப்படைந்த சமுதாயம் மற்றும் வரண்டுபோன நிலங்கள் இதன் விளைவு குறைந்த பயிர் விளைச்சல்கள் என்பனவற்றின தொடர்பு

- வரண்ட பயிரை சுற்றாடலினால் ஏற்பட்ட இருதய சிறுநீரக ஒழுங்கின்மை என்பனவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அதிகறித்த பராமரிப்பு பணிகள்

- காலநிலை மாற்றம் முதிய வயதுடைய பெண்களைத் தாக்கும் முக்கியமாக நாட்டுப்புற மற்றும் நகர்புர பகுதிகளில் வாழ்பவர்கள் அவர்கள் ஏற்கனவே நிதி உத்தரவாதம் எதுவுமின்றி இருப்பவர்கள். இவர்கள் காலநிலை மாற்றத்தின் விளைவை எதிர்கொள்ள நேரிடும்.

### 2.1.3 தீர்வுகள் நடவடிக்கைகள் மற்றும் நிறைவேற்றுதல்

அரசாங்க தனியார் மற்றும் அரசாங்க- தனியார் பங்காளித்துவம் என்பனவற்றில் கொள்கை கோட்பாடுகளை பின்பற்றி இல்லங்களை முன்னேற்றமடையச் செய்ய பன்முகப்படுத்த மற்றும் ஏற்பாடு: செய்ய கொள்கைகோட்பாடுகளை பின்பற்றி பராமரிப்புக்கு வேதனம் வழங்கப்படாதவர்கள் மற்றும் வீட்டுவேலை என்பனவற்றை மதித்து அங்கீகாரம் செய்தல் அதேவேளை வீடுகளில் பெண்கள் ஆன்கள் இடையே பகிர்ந்து கொண்ட பொறுப்புகள் கல்வி பாடத்திட்டத்துடன ஒன்றினைந்ததாக அமைந்து அதனைப்பற்றிய நிகழ்ச்சி திட்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாதாரண பொருளாதார தொழில்துறையில் வேதனங்கள் ஒப்பந்தம் மற்றும் தொழில் மணித்தியாலங்கள் என்பனவற்றிற்கான சிறந்த சட்ட அமைப்பை நிச்சயப்படுத்துதல் இது பெண்.'. முதுமை அடையும் பெண் தொழிலாளிகளில் மேற்கொள்ளப்படும் அடக்குமறை என்பனவற்றை உபயோகித்து இலாபத்தை அதிகரிக்க முயல்வதை தடுக்கும்.

- சிறந்த வேதனத்துடன் முறைசார் விதிமுறையில் அமைந்துள்ள ஒழுங்கான தொழிலில் அமர்ந்த பெண்களுக்கு தொழில் சட்டம் நவீனமுறை மற்றும் தலைமைத்துவ திறமை என்பனவற்றில் பயிற்சி வழங்கல் கொள்கைகோட்பாடுகள் சிறந்த முறையில் உருவாக்கபட வேண்டும். அந்த திறமை ஆற்றல்கள் தற்போது நிலவும் ஆன் பெண் பால்ரீதியான வேதன முரண்பாடுகளை குறைக்க வழிவகுக்கும்.

- குறைந்த வேதனத்திற்காக முதுமை மற்றும் களைத்து ஓய்வுற்றிருக்கும் தொழில அமைப்பில் பங்குபற்றுதல் பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து பண உதவி சாதாரண பாதுகாப்பு பொறிமுறைகள் மூலம் கடன்கள் என்பனவற்றின் உதவிக்காக தங்கியிருப்பதை குறைக்க வயோதிபவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் சமுதாய பாதுகாப்பு திட்டங்களை முன்னேற்றமடையச் செய்தல்

- முதியவர்கள் பிள்ளைகள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் நிதி உதவியில் தங்கியிருத்தல் என்பனவற்றை குறைக்க ஓய்வூதியம் மற்றும் சமுதாய நலன்புரி பாதுகாப்பு திட்டங்கள் என்பனவற்றை முன்னேற்றமடையச் செய்யவேண்டும்

- சமுதாயத்தில் பெண்களின் பங்குகள் என்பனவற்றின் அனுகுமுறை மாற்றங்களுக்காக நிகழ்ச்சி திட்டங்களை நடத்துதல்.

## 2.2 பெண்களுக்கு எதிரான வன்முறை

### 2.2.1 தற்போதய நிலை விவகாரங்கள் பிரச்சினையுள்ள இடங்கள்

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு முக்கியமான விவகாரம். அது பெண்களது நல்வாழ்வு மற்றும் அபிவிருத்தியை எதிர்மறைவாக தாக்குகின்றது. கொழும்பு அம்பாந்தோட்டை மட்டக்களப்பு மற்றும் நுவரேலியா போன்ற மாவட்டங்களில் ஆய்வு நடத்தியதில் 110 பெண்களில் வீட்டு வன்முறையை தங்களது கணவர்கள் மற்றும் ஆன் சினேகிதர்களால் அனுபவித்த 48 வீத பெண்கள் காயப்பட்டுள்ளார்கள் என்று அறிக்கை விடப்பட்டுள்ளது இவற்றில் 20வீதம் 3-5 தடவைகள் காயப்பட்டுள்ளனர். 25 வித பதிலாளிகள் அவர்கள் காயம் காரணமாக அவர்கள் படுக்கையில் இருக்க நேர்ந்ததாகவும் தெறிவித்திருந்தார்கள். 16 சத வீதமானோர் தொழில் விடுப்பு எடுத்து வீட்டில் இருந்துள்ளார்கள். 32 சத வீதம் சிகிச்சைக்காக வைத்தியரை நாடி உள்ளார்கள். இந்த எண்ணிக்கைகள் உளவியலரீதியாக மற்றும் சரீர துன்புருத்தல்களின் மற்றும் அதனைத் தொடர்ந்து வருமானம் இல்லாத பொருளாதாரம் என்பனற்றை சுட்டிக்காட்டுகின்றது அத்துடன் வீட்டு வன்முறையை /IPV தொடர்ந்து மற்றும் 22.9 வீத பெண்களால் அறிவிக்கப்பட்ட கருச்சிதைவு /IPV மற்றும் /IPV இல்லாமல் கருச்சிதைவு அடைந்த பெண்கள் 13.6 வீதம இடையே ஒரு தொடர்பு உள்ளது என்று சுட்டிக்காட்டுகின்றது.

பால் துஸ்பிரயோகத்தைத் தொடர்ந்து பெண்களின் சீர்குழைந்த வாழ்க்கை மற்றும் குறைந்த சம்பளத்திற்கான வேலைகளிடையே ஒரு ஒற்றுமை உள்ளது என்று தோன்றுகின்றன. பயமுருத்தல்கள் அச்சம் மற்றும் சமுதாய பழிச்சொல் என்பனபோன்ற காரணங்களால் உத்தியோகபூர்வமாக முறைபாடுகள் செய்ய தயங்கும் பெண்கள் ஒரு சூழ்நிலையில் 2011 ஆம் ஆண்டு பொலிஸ் பாலியல் தொடர்பான ஏரத்தாள 2600 முறையீட்டள்களை பெற்றுள்ளது. 2014ல் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுத்தல் சம்மந்தமான எதிர் ஆணைக்குழு தலைவரின் அறிக்கைக்கு முறைபாடுகள் பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2600 பெண் பதிலாளிகளுடன் UNDP வெகு அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் 90 வீதம் அரசாங்க போக்குவரதது சேவையில் நடைபெற்றது என்று அறிவித்தார்கள். 37 வீதமானோர் இந்த அனுபவம் தங்களது தொழிலை பாதிக்கலாம் என்று அறிவித்தார்கள். 76வீதமானோர் தங்களது கோபத்தை காட்டினார்கள். 68 வீதமானோர் வெட்கப்பட்டார்கள 48 வீதமானோர்கள் அச்சத்தை மற்றும் 45 வீதமானோர் பேசமுடியாது மௌனம் காத்தார்கள். பெண்களால் அனுபவித்த இந்த வன்முறை உணர்வு மிகவும் வெளிப்படையாக உள்ளது. தொழில்புரியும் இடங்களில் துஸ்பிரயோகம் தொழிலாளர்களை வேலைக்குச் செல்ல விடாது அத்துடன் அவர்களது வேலை திறன்னை குறைத்து அதன் விளைவு அவர்கள் தொழிலில இருந்து முற்றாக நீககவும் படுகின்றார்கள். தொழில்களில் பால் வேறுபாடு ஏற்பட்டு பெண்கள் பால் தொந்தரவால் பால் தொந்தரவு அற்ற இடங்களிலேயே தொழில புரிய விருப்பம் தெறிவிக்கின்றார்கள். அது அவர்களது தொழில வாய்ப்புகளை மற்றும் வருமானம் என்பனவற்றை மட்டுப்படுத்தும் உதாரணத்திற்கு ஒரு முக்கிய கரிசணை என்னவென்றால் ஆடை உற்பத்தி துறையில் தற்சமயம் நிலவும் ஆளணி பற்றாக்குறை இது சுகந்திர வர்த்தக வலயத்தில் பெண்கள் தொழில் புரிவதை தடுப்பதன் முக்கிய காரணமாகும்'. பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாலியல் துஸ்பிரயோகம் 2020ல் அப்படிப்பட்ட ஆளணி தட்டுப்பாடு ஒரு பாரியளவில் அதிகறித்து நாடு அன்மையில் பெற்ற GSP திட்டத்தின் வரி சலுகைகளை பெறுவதற்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது

அதேவேளை ஆன்கள் தமது உரித்து உணர்வு குறைந்த அளவிளான பொருப்புக்கூறல் மற்றும் பெண்களுக்க எதிரான வன்முறை செயல்களில் நீதித்துறை தண்டனையில் குறைவாக ஆனுக்கு சார்பாக இருப்பதால் நீதித்துறை அவனை பாதுகாக்க சதி செய்கின்றது. 2020ல் பெண்களுக்கு எதிரான வன்முறை துஸ்பிரயோகம் என்பன நீடித்து பெண்களது வாழ்க்கை அபிவிருத்தி மற்றும் தொழில் குழுவின் நீடித்த அபிவிருத்திக்காக பாதகமாக அமைந்துள்ளது.

### 2.2.2 பிரச்சிணைகளின் விளைவுகள் மற்றும் சாத்தியமான தாக்கங்கள்

**பொருளாதாரம்**

வீட்டு / நெருங்கிய சகா என்பவர்களின் வன்முறைக்குப்பின் பெண்கள் தொழில்துறை அமைப்பின் மாறுபட்ட வாழ்க்கையில் பயனற்ற பொருளாதாரம்.

- பயன்தரும் பொருளாதாரம் மற்றும் வன்செயலுக்குப்பின் மாறுபட்ட பெண்கள் வாழ்க்கை
- சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆளணி தட்டுப்பாடு

  பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு முக்கிய கரிசணையாகும். இது இளம் பெண்களை ஆடை உற்பத்தி துறையில் மற்றும் சுகந்திர வர்த்தக வலயத்தை அன்மித்த இடங்களிலும் தொழில் செய்ய விடுவதில்லை.

**சமூகம் சார்ந்த**

- பெண்களுக்கு எதிரான வன்முறையால் அவர்களது வாழ்வில் எதிர்மறையான தாக்கங்கள் மற்றும் வன்முறை பாதுகாப்பு உணர்வு தன்னம்பிக்கை மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பனவற்றை பாதிக்கின்றது.
- தாயின் மேல் மேற்கொள்ளும் வன்முறையை கண்ணால் காணுதல் / சிறுவயதில் மனஉளச்சல் மற்றும் எதிர்கால துன்புறுத்தல் என்பனவற்றின் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறை பிரசவத்தின் தொடர்பு
- பெண்களுக்கு எதிரான வன்செயலில் அனுபவித்த பழிச்சொல்
- பெண்களுக்கு எதிரான வன்செயலில் துயருறுவோரின் குற்றம் புரிந்தவர்களுக்கு அதிகப்படியான தண்டனை பெறாமல் சிறப்புச் சலுகை மற்றும் சட்டத்தை பேணுவதில தவருதல் மற்றும் நீதித்துரை ஆளணிகள் மீதான தப்அபிப்பிராயம் மற்றும் பெண்களின் உண்மைகள் மற்றும் உரித்துகள் சமுதாய நீதியின் குறைப்பாடு என்பனவற்றின் தொடர்பு
- எதிர்மறையான வாழ்க்கை மற்றும் சுயமதிப்பின் உணர்வு என்பன பிற்காலத்தில் பெண்களை தாக்கும் மன உளச்சல் செயற்திறமை இருக்கும் ஆற்றல் பெற்றோரின் அளவுக்கதிகமான கண்டிப்பின் ஆபத்து என்பனவற்றை பாதிக்கின்றது

### 2.2.3 தீர்வுகள் நடவடிக்கை நிறைவேற்றுதல்

- நாட்டுப்புர நகர்புர தொடர்பை மாத்திரம் நோக்கி அல்லாது பஸ் மற்றும் புகைவண்டியில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை யை முற்றாக நீக்கி தேசிய போக்குவரத்து கொள்கையை அறிமுகப்படுத்துகின்றது.
- பொலிசினால் வன்முறைகளுக்கு VAW/SGBV எதிராக ஒழுங்கான சட்டத்தை நிச்சயப்படுத்த சட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத்துதல்
- தொந்தரவுகளை தெறிவிக்கும் வண்ணம் ஊக்கப்படுத்துகிறது. புதிய சட்ட சீர்திருத்தல்களை அறிமுகப் படுத்தவும். தொழில்புரியும் இடங்களில் நிகழ்வுகளை தடுக்க சுகாதார தொழில்சார் நிபுணர்கள் அடங்களாக தொழில் வல்லுணர்களால் மனிதவள பயிற்சிகள் வழங்கள்
- VAW/IPV) SGBP என்பனவற்றை நோக்கி அனுகுமுறை மாற்றத்தை உருவாக்க கல்வி சமுதாய மற்றும் ஊடக நிகழ்ச்சி திட்டம் என்பனவற்றை நிறைவேற்றுதல். இந்த நிகழ்ச்சி திட்டங்களில் ஏயுறு /SGBv என்பனவற்றை நோக்கி முற்றான சகிப்துத்தன்மையான பண்பாட்டை புகட்ட மாறும் ஆன் பெண் என்பவர்களது அனுகுமுறையை மாற்றுதல்
- சாதாரண தொழில்துறையில் பெண்கள் பங்கெடுப்பு பற்றிய தேசிய கல்வி SGBV என்பனவற்றின் நிலவுதல் மற்றும் காலநிலை மாற்றம் மற்றும் சுற்றாடல் சீர்குழைவால் பெண்களுக்க ஏற்படும் தாக்கம் என்பனபற்றி தேசிய கல்வியை நடத்துதல்.
- சமுதாய அடிப்படையி நிகழ்ச்சி திட்டங்கள் IPV/SGBV என்பனவற்றினால் பாதிக்கப்பட்ட பெண்களை சமுதாயம் ஏற்றுக்கொள்ளாது மற்றும் அவர்களுக்கு நேர்ந்த பலிச்சொல்லை அகற்றுதல்

## 3. நீடித்து நிலைக்கும் என்ற எண்ணக்கருத்து 2020 மற்றும் அதற்கு அப்பால்

இந்த பன்முகவயதினர்களை நிலை அதிகரித்த பாதுகாப்பற்ற நிதி நிலை இதில் பாரிய தேகாரோக்கியம் மற்றும் பராமரிப்பு செலவுகள் என்பன அடங்கும். அது முதியோரான பெண்களை சாதாரண தொழில்துறையில் இணைந்துகொள்ள நிர்பந்திக்கும். கூடிய நேரங்களுக்கு இளைஞர்களைவிட குறைந்த வேதனம் பெறச் செய்ய முடியும். அதேவேளை வயதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



18-CM 27932

தாய்மார்கள் தலைமுறையின் சொத்து மாற்றலில் உள்ள வித்தியாசத்தை அனுபவிப்பார்கள். அதாவது தொழில்புரியம் பிள்ளைகளிடமிருந்து பெற்றார்களுக்கு பணம் வருவதற்கு பதிலாக பிள்ளைகள் தங்களது பணத்தேவைக்காக பெற்றார்களில் தங்கியிருப்பார்கள்.

முதியோர்களது எண்ணிக்கை அதிகரிப்பு இளம் பெண்களின் தொழில் வாய்ப்புகளை மிகவும் தீவரமாக தாக்கும். முதியோர் மற்றும் சிறுவர்களை பராமரிக்கும இளம் பெண்களுக்கு ஒரு சமநிலையற்ற சுமை உள்ளது. அவர்களுக்கு பெரியோர்கள் மற்றும் சிறார்கள் இருக்கும் இடங்களில் வாழவேண்டி இருப்பதால் அவர்களுக்கான சிறந்த வருமானம் தரும் தொழில்களை பெற இயலாது உள்ளது. இது முக்கியமாக நாட்டுப்புர பகுதிகளில் உள்ளது. இங்கு 85 சதவீத ஏழைகள் உள்ளார்கள். மற்றும் முதியோர் சமூகம் ஏற்கனவே இங்கு குடியேறி உள்ளது. இந்த நிலமை வடக்கு மற்றும் கிழக்கில் உள்ளது. இங்கு பெண்கள் கணவன்மார்களை இழந்து தனியே வாழ்கிறார்கள். அவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் மிகவும் மட்டுப்பட்ட நிலையிலேயே உள்ளது. அந்த மாவட்டங்களிலும் கூட நகர்புர மற்றும் தொழில்கள் அபிவிருத்தி என்பன நடந்தேறியுள்ளன. வீட்டுவேலைகள் பொருப்பு அவர்களை இந்த நன்மைகளை பெறுவதற்கு ஊக்கமளிப்பதில்லை

ஒரு ஒன்றுபட்ட செயற்திட்டம் அது ஓய்வூதிய நன்மைகள் 60 பிலஸ் உள்ள செயல் ஆற்றலுள்ள முதிய பெண்களை சிறந்த தொழில்களை பெற ஊக்கமளிக்கின்றது. வேதனம் வழங்கப்படாத பணி மற்றும் வீட்டுவேலை அடையாளம் கண்டு இல்லங்களின் பராமரிப்பின் ஊடாக அரசாங்கம் தனியார் கூட்டு பங்காளித்துவம் என்பனவற்றை கொண்டுவந்து பெண்கள் ஆன்கள் என'பவர்களது பொருப்புகளை ஒன்றாக சேர்த்து பெற்றாரை பராமரிப்பவர்கள் மற்றும் வீட்டுபணி என்பனவற்றை கல்வி பாடத்திட்டத்துடன் சேர்க்கின்றது. பெண்களின் சமநிலை அளவு சுமை நிலவும் வேதனம் கொடுக்காத சாதாரண தொழில்களில் இருந்து சுமைகளை அகற்றுகின்றது தொழில் நுட்பம் மற்றும் தலைமைத்துவ திறன்கள் என்பனவற்றில் பெண்களுக்கு பயிற்ச்சி பெற நிகழ்வு திட்டங்கள் அவை அவர்களை நல்ல ஊதியம் வழங்கும் ஒழுங்கான நிறுவனங்களில் தொழில்வாய்ப்புகள் வழங்குகின்றன. கொள்கைகோட்பாட்டினால் பால்நிலை அடிப்படையில் நிலவும் சம்பள வித்தியாசங்கள் என்பனவற்றை கங்காணித்து அவற்றை அழித்து பெண்கள் அரசாங்க போக்குவரத்து மற்றும் தொழில் நிலயங்களில் அவர்களது பாதுகாப்பு என்பனவற்றை நிச்சயப்படுத்துகின்றது. மற்றும் இது வீட்டு வன்முறையை தடுப்பதை வளுவூட்டுகின்றது. இந்தச் செயல் பெணகளை தொழிலுக்கு செல்ல ஊக்குவித்து அவர்கள் தங்களது வருமானத்தை அதிகரித்து அவர்களது நல்வாழ்வுக்கு வழிவகுக்கின்றது. இந்த ஒற்றுமையின் நீடிப்பு பொருளாதார வளர்ச்சி என்பன சமமான வாய்ப்புகளை எல்லோருக்கும் வழங்குவதில் தங்கியுள்ளது. வளமான வளங்களை பெற்று நன்றாக ஊதியம் வழங்கும் தொழிலில் நன்மதிப்புடன் எந்த வித வன்முறைகள் இன்றி வாழ வழிவகுக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T4

## T4. ஆளுகை[22]

### 1. தற்போதய நிலமை

30 வருட ஆயுத போராட்டத்தின் முடிவு இலங்கையர்களுக்கு சமாதான தேசிய முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றின ஒரு சகாப்தத்தை வரவேற்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது. ஆயினும் அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் அதிகாரங்களை தேடும் அரசியல்வாதிகளால் பன்முகப்படுத்தப்பட்டுள்ள சமுதாயத்தின் கோரிக்கைகள் ஒரு முரண்பாடான கோரிக்கையாக எண்ணப்பட்டு அதனைத்தொடர்ந்து கடும்போக்கு மற்றும் எதற்கும் இணங்காத அடாவடித்தனம் கொண்ட அரசியல் கலாச்சாரம் இந்த நாட்டின் தூரநோக்கான நல்லாட்சிக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

மக்கள் நல்வாழ்க்கை சமாதானமான முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றை ஊர்ஜிதப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் மக்களுக்கு தன்னம்பிக்கையை உறுவாக்கி நல்லாட்சியின் சிறந்த அம்சங்களை நிறைவேற்றி ஸ்தாபித்தல் என்ற பொருப்புடன் கூடிய புதிய அரசாங்கம் 2015ம் ஆண்டு இலங்கையில் பெரும்பாலான மக்களால் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டது.

நல்லாட்சியின் முக்கியமான அம்சங்கள 2015 ஆம் ஆண்டு தேர்தல் பிரசாரங்களில் அடையாளம் காணப்பட்டன. அதன்பின் பின்வருவன அடங்களாக

- அரசியல் சீர்திருத்தம் எதிர்மறை அம்சங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் சட்டம் பிறப்பிக்கப்பட்ட காலப்பகுதியிலிருந்து 30 வருட அனுபவங்களைக்கொணடு இருந்துவரும் 1978ம் ஆண்டு அரசியலாப்பு அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் அடங்களாக இலங்கையின் பன்முகத்தன்மை சமுதாயத்தின் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூககங்களின் கோரிக்கைகள் நன்மைகள் என்பனவற்றை சமப்படுத்தி தேசிய வினாவிற்கு பதிலலிக்கும்.

- அண்மைக்கால தசாப்தங்களில், பொதுமக்களால் எதிர் கொள்ளப்படுகின்ற சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்கேட்டிற்கு ஒரு காத்திரமான விடயமாக கொள்ளத்தக்க விதத்திலுள்ள சமூகத்தின் எல்லா மட்டங்களிலும், அரசாட்சியிலும் காணப்படுகின்ற, ஊழலின் கடுமையான தாக்கங்களையும் பாதிப்புக்களையும் இல்லாதொழித்தலும் அதற்காக விடையளித்தலும், சட்டவாட்சியின் மைய விடயங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் குற்றவியல் நீதித்துறையினை பாரபட்ச முறையில் நிருவகித்தல் என்பன அமைகின்றன.

---

22 எழுதுனர் குழாம்: சவித்ரி குணசேகர (தலைவர்), சிரி ஹெட்டிகே, மனோ தித்தவெல, மொஹான் முனசிங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாட்சி நிறுவனத்தின் சீர்திருத்தத்தின் மூலம் அரசியல் தலையீட்டினை ஒழித்தல் மற்றும் தொழில்வாண்மையை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலமாக பொதுமக்கள், பொதுநிர்வாகம் மற்றும் நீதித்துறை மீது வைத்துள்ள நம்பிக்கையினை மீளவும் ஏற்படுத்தல்.

- சட்டவாட்சி, மற்றும் நிதித்துறை, நிருவாகம் ஆகியவற்றில் மக்களின் நம்பிக்கையினை உருவாக்குவதன் ஊடாக அரச சுதந்திரத்துடன் நடைபெறுகின்ற சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி, குற்றவாளிகளை பொறுப்பு கூறவேண்டியவர்களாக மாற்றி, அதிகார துஷ்பிரயோகத்திற்கு பதில் அளித்தல்.

- மத்திய அரசாங்கம், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இடையே வலுவான அதிகாரப்பகிர்வினையும், தேர்தல் சீர்திருத்தங்களையும் கொண்டு வந்து, சட்டவாக்க நிறுவனங்களைப் பலப்படுத்துவதோடு தேசிய வளங்கள் மற்றும் நிதி என்பனவற்றை பொறுப்புக் கூறக்கூடிய விதத்தில் பயன்படுத்துதல்.

- சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வழக்காற்றுச் சட்டங்கள் என்பனவற்றை ஏற்றுக்கொண்ட ஓர் அரசு என்ற வகையில், இலங்கையின் கடப்பாடுகளுக்கு அமைவாக அரச மற்றும் அரசசார்பற்ற செயற்பாட்டாளர்கள் தொடர்பில் மக்களுக்கான ஒரு வலுவான அடிப்படை உரிமைகள் தொடர்பிலான சட்ட மூலத்தினை ஏற்படுத்தல்.

- நாட்டின் அனைத்து பாகங்களிலும் ஆயுத போராட்டம் மற்றும் உள்நாட்டு மோதல்கள் காரணமாக மனக்குறைகள், கோரமான அனுபவங்களைப் பெற்ற, வன்முறை, துஷ்பிரயோகம் பொருளாதார சொத்துக்களின் இழப்பு மற்றும் வாய்ப்புக்களை இழந்த, மனக்குறைகளையும் கோரமான அனுபவங்களையும் பெற்றவர்களுக்கு பதில் அளித்தல்.

நல்லாட்சிக்கான இவ்வடிப்படைத் தூண்களானது, சமாதானத்திற்கான தூர நோக்கு, அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் என்பனவற்றை 2030 களில் எய்துவதற்கு தொடர்ச்சியாக வலுவாக்கத்தக்க விடயங்களாக உள்ளன. இவை மக்களை மையமாக கொண்ட மற்றும் பொறுப்புக் கூறக்கூடிய அரசாட்சியானது, முரண்பாடற்ற சமூக பொருளாதார முன்னேற்றம் நிலைபேண்அபிவிருத்தி என்பனவற்றை வழங்கக்கூடியதாக உள்ளன. இவை மேலும் சர்வதேச ஒப்பந்தங்களுடன் இசைந்து செல்வதோடு, இலங்கையில் பதவிவகித்த ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்றுக்கொண்டுள்ள மற்றும் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச சட்டமரபுகள் மற்றும் SDG போன்ற உலகளாவிய கொள்கை ஆவணங்களும் அடங்கும்.

ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுதல், SDG போன்ற உலகளாவிய கொள்கை ஆவணங்களை ஏற்றுக்கொள்ளல், மற்றும் மனித உரிமைகள் சபை மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச மாநாடுகளில் பங்குபற்றுதல் என்பனவற்றின் போது, இலங்கையானது சர்வதேச நாடுகளைக் கொண்ட ஓர் சமூகத்தினுடைய, ஒரு பொறுப்புள்ள அங்கத்தவராகவே பங்கு கொள்கின்றது. (சில வேளைகளில் சர்வதேச நாடுகளின் “சர்வதேச சமூகம்” என கருதப்படுவதனைப் போன்று).

ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு இலங்கை அரசும் அனைத்து பிரதானமான மனித உரிமைகள் உபாயங்களையும் அங்கீகரித்துள்ளதோடு, அவ் ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாடுகளையும் ஏற்றுக்கொண்டுள்ளன. எமது நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்ற, அடிப்படை உரிமைகள் தொடர்பிலான வழக்குகளை தீர்மானிப்பதில், இலங்கையில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றங்கள் அந்த மரபுகளையும், நியமங்களையும் மனித உரிமைகள் விடயத்தில் பிரயோகிப்பதோடு, சர்வதேச வழக்காற்றுச்சட்டம் மற்றும் ஒப்பந்தங்களின் கீழ் இவ் உரிமை விடயங்கள் இலங்கையின் கடப்பாடுகளை அடிப்படையாக கொண்டவையாகும் என்பதனை தெளிவு படுத்துகின்றன.

துரதிஷ்டவசமாக சில அரசியல் தலைவர்களின் பொது எண்ணப்பாடானது இந்த யதார்த்தத்தினை விளங்கிக்கொள்ள தவறியுள்ளது அல்லது வேண்டுமென்றே பொதுமக்களை தவறாக வழிநடாத்தியும் குழம்பச்செய்தும் விடுவதோடு "சர்வதேச சமூகம்" என்பது ஓர் உயர் அதிகாரத்தைக் கொண்ட இலங்கை நாட்டிற்கு உரித்துடையது அல்லாத ஓர் வெளிச் சக்தியாகும் என காணபிக்கின்றனர். மேலும் இச்சுதந்திர தேசத்தின் இறைமையினை மிகவும் பாதிப்பதோடு, அதற்கு கடுமையான சவாலாகவும் அமைகின்றது எனக்காட்டுகின்றனர். இதனால் இலங்கை சர்வதேச சமூகத்தின் ஓர் அங்கமாக இருந்து கொண்டு, சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டவிழுமியங்கள் கொண்ட ஆட்சிக்கு அமைவாக இருந்த போதிலும் அது இதர பங்காளிகளினால் ஒரு அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படாமல் விடப்படுகிறது.

மேலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புக்களில் ஒன்றான மனித உரிமைகள் பேரவை என்பனவற்றில் உள்ள நாடுகள் புறநடையான நிறுவனங்கள் என்பதோடு, அவைகள் எமது நாட்டை அச்சுறுத்தி ஓர் மறைமுகமான நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக இயங்குகின்றன என்ற ஓர் கண்ணோட்டம் உள்ளது. இதன் இறுதி பெறுபேறு யாதெனில், சர்வதேச ஆட்சியின் மீதான நம்பிக்கை மற்றும் மக்களின் புரிந்துணர்வு என்பன மழுங்கடிக்கப் படுகின்றன. இதனால் இலங்கை உலகளாவிய மரபுகள் நியமங்களுக்கு ஏற்ப, தனது ஆட்சியானது மதிப்பிடப்படுகின்றது என்பதனை மக்கள் தொகுதியின் ஒரு சிலர் கருதுவதைப் போன்று, இலங்கை ஒரு சர்வதேச சமூகத்தில் ஒரு அங்கத்தவர் என்ற நிலைப்பாட்டினை மக்கள் புரிந்து கொள்ளாமல் விடப்படுகின்றனர். இதனால் பொதுமக்கள் தொடரான, அரசியல் ரீதியான தப்பபிப்பிராயங்களுக்கு உட்படுவதோடு, சர்வதேச விழுமியங்களும், நியமங்களும் மக்களின் உரிமையை வலுப்படுத்தவில்லை என்பதுடன் அரசாங்கம் தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கும், மதிப்பளிப்பதற்கும் கடமைப்படவில்லை என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றனர்.

இவைபோன்ற தவறான புலக்காட்சிகள் பொறுப்புக்கூறி பதிலளிக்கும் அரசாட்சியினை மலினப்படுத்துவதோடு, அவ்வாறானவைபற்றி சில சிறுபான்மை அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் இதனை வலியுறுத்துவதோடு இவர்கள் "சர்வதேச சமூகம்" என குறிப்பிடும் வெளிச்சக்தியை, அது இலங்கை அரசு இந்த மரபுகள் நியமங்கள் தொடர்பிலான மீறல்களுக்கு பொறுப்புக்கூறுவதாக அமைய வேண்டும் என்று கருதுகின்றனர். சர்வதேச சமூகத்தின் ஒரு பொறுப்பு வாய்ந்த அங்கத்தவர் என்ற வகையில், அவர்கள் அரசின் தமது சொந்த மக்கள் மீதான பொறுப்பினை மிகவும் அரிதாகவே தமது குரலின் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இதனாலயே மனித உரிமைகள் பேரவை மற்றும் அதனுடைய பிரகடனங்கள் போன்ற எந்த ஒரு சர்வதேச நடைமுறைகளும் தேசிய இணக்கத்தை அரசியல் கட்சிகள் இடையேயும் அவற்றினுடைய தலைவர்கள், பொதுமக்கள் மற்றும் மக்களை மையப்படுத்திய மேற்குறித்த தூண்களை அடிப்படையாக கொண்ட நல்லாட்சி என்பன பங்களிப்பினையும் செய்வதில்லை.

2030 க்கான தூரநோக்கானது மேற்குறித்த கடினமான விடயங்களுக்கு கட்டாயமாக தீர்வினைப் பெற்றுத்தர வேண்டும். இதனால் பின்வரும் விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. தற்போது நடைமுறையிலுள்ள 19வது திருத்தச் சட்டத்திற்கு மேலதிகமாக, அரசியலைப்பு சீர்திருத்தத்தினை சிந்திப்பதுடன் நின்றுவிடாது, அதனுடைய முக்கிய அம்சங்களை வெளிக்காட்டுகின்ற பகிரங்க பிரச்சாரத்திலும் ஈடுபட வேண்டும். இதனால் மக்கள் தமது பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பினூடாக இதனை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பதனை தீர்மானிப்பர். ஏற்கனவே நிபுணர் குழுக்கள் இவை தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டதோடு, முக்கிய விடயங்கள் குறித்து தமது பரிந்துரைகளையும் செய்துள்ளன. இவற்றுள் ஐக்கிய மற்றும் பிரிக்கமுடியாத இலங்கைக்குள் மத்திய, மாகாண, மற்றும் உள்ளூர் அதிகார நிறுவனங்களுக்கிடையே அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளல், மதச் சுதந்திரமும் சகிப்புத்தன்மையும் மற்றும் அரசாட்சிக்கான பொது நிறுவனங்கள் என்பன அடங்குகின்றன. உரிமைகள் தொடர்பிலான சட்டமூலம் குறிப்பாக பொருளாதார மற்றும் சமூகவியல் உரிமைகள் தொடர்பிலும் கருத்துரை வழங்கியுள்ளன. ஜனாதிபதி, அமைச்சரவை மற்றும் பாராளுமன்றம் என்பன கட்டாயமாக இதனை விவாதிப்பதோடு இப்பிரேரணைகளை தகவலறிந்த நிலையிலும் பொறுப்புணர்ச்சியுடனும் கலந்துரையாடவும் வேண்டும். இவைகள் நன்கு அறிவிக்கப்பட்டதாகவும், விரிவான பொதுமக்கள் பங்குபற்றுதலுடனும் இடம்பெற வேண்டும். இதனால் ஒரு பொது இணக்கப்பாட்டினை, அரசியலமைப்பு வரைபு தொடர்பில் பெற்றுக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபடமுடியும். இது ஒரு சமாதானத்திற்கான, முன்னேற்றத்திற்கான, நிலையான அபிவிருத்திக்குமான, தேசிய தேவைப்பாட்டிற்கான ஒரு விடயமாகும். இது தன்னை மக்களின் பிரதிநிதி என்று கூறிக்கொள்கின்ற, எந்த ஒரு அரசியல் கட்சியினுடைய பிரிவினைவாத அரசியல் நிகழ்ச்சி நிரலினாலும் மழுங்கடிக்கச் செய்யப்படக்கூடாது. அரசாங்கத்தினாலும், பொறுப்புக் கூறக்கூடிய அரசாட்சிக்கான அரசியலமைப்புச் சீர்திருத்தங்களின் அவசியத்தை அங்கீகரிக்கின்ற அனைவரினாலும், மற்றும் மக்களை மையப்படுத்திய முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி என்பனவற்றுக்கான வலுவான ஒரு தொடர்பாடல் உபாயமொன்று இருப்பதோடு, அது மக்களுக்கு தகவல்களை தெளிவாக வழங்குவதோடு, அதற்கு அதிகூடிய முன்னுரிமையை மேற்குறித்த தரப்புகளால் வழங்கப்படவும் வேண்டும்.

ஆ. அரசியலமைப்புச் சீர்திருத்தச் செயற்பாடுகளானது, நல்லாட்சியினுடைய மற்றுமொரு முக்கிய அம்சத்துடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது. அதாவது கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற வன்முறைகளில் மிகக்கூடுதலாக பாதிக்கப்பட்டவர்களின் காயங்களை குணப்படுத்துவதற்கான எதிர்கால முயற்சிகளாகும். சமாதானத்திற்கான முன்னேற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பன SDG எனப்படும் மனித உரிமைகள் தொடர்பான 16 அம்சப் பொறிமுறைகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதனை இலங்கை ஏற்றுக்கொண்டிருப்பதனை போன்று, தற்போதய அரசியலமைப்பிலும் அடிப்படை உரிமைகள் பற்றிய விடயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சில ஏற்பாடுகள் இல்லாவிடில் இவற்றினை அடையமுடியாது. இவற்றினை செய்வதற்கு பரந்தளவிலான சமுதாய விழிப்புணர்வு அங்கீகாரம், எமது ஆயுத மோதலுக்கான அடிப்படைக்காரணம், மற்றும் இம்மோதல்கள் மீண்டும் ஏற்பாடாது தடுப்பதற்கான தேவைப்பாடு என்பன அடங்குகின்றன. இந்த அடிப்டையில் யாப்புச் சீர்திருத்தம் மற்றும் இந்த இலட்சியங்களை அடைதல் என்பன வரிசைக்கிரமமாகவோ அல்லது மாற்றீடுகளாகவோ கருதப்படக்கூடாது.

ஏற்கனவே காணாமற்போனவர்களை தேடிக்கண்டுபிடிப்பதற்கான சட்டமூலம் ஆக்கப்பட்டுள்ளதுடன், இச்சட்டமூலமானது தாமதமின்றி போதுமானளவு காத்திரமான அரசு மற்றும் மக்களின் ஆதரவுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அரசாங்கத்துக்குள்ளே இருக்கின்ற சில முகவர்களுடன் மற்றய பொறிமுறைகள் தொடர்பான பிரேரணைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேரணைகளைக்கூட மக்களின் விவாதத்திற்காகவும், கலந்துரையாடலுக்காகவும் முன்வைக்கப்பட வேண்டும். ஏனெனில் உண்மைகளைக் கண்டறிவதற்கான மற்றும் தனியார் பாதுகாப்பு மற்றும் சொத்துக்கள் தொடர்பில் படுமோசமான உரிமை மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை கண்டுகொள்ளல் தொடர்பிலான விசாரணை பொறிமுறைகள் சம்மந்தமாக, பல தப்பபிப்பிராயங்கள் காணப்படுகின்றன அண்மைக்கால தசாப்தங்களில் உள்நாட்டு சட்ட முறைமை பல்வேறு காரணங்களினால் தமது நம்பகத்தன்மையினை இழந்துள்ளது. அதாவது கடந்த காலங்களில் நீதித்துறை நிர்வாக அமைப்பொன்று காணப்பட்டதுடன், பொது மக்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் ஆகியோர் தனியாட்கள் மற்றும் சொத்துக்களுக்கு கடுமையான சேதம் விளைவிப்பதன் பொருட்டு, வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளும், பொறுப்புக்கூறவேண்டிய தேவையும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தன. தற்போதுள்ள சவால் யாதெனில், தற்போதுள்ள நிறுவன அமைப்புக்களைப் பலப்படுத்துவது அல்லது புதியவைகளை உருவாக்குவதன் மூலம் வன்முறையின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களினதும் பொதுமக்களினதும் நம்பிக்கையினை, நீதி பரிபாலனம் தொடர்பான உள்நாட்டு நிறுவன அமைப்புக்கள் மீது மீள்நிறுவுவதாகும். இங்கு கவனம் செலுத்தப்படவேண்டிய விடயம் யாதெனில், வலுவான விசாரணைகளை மேற்கொள்வதற்கான நம்பகரமான சூழலை உருவாக்குதல், வழக்குத் தாக்கல் செய்தல், நீதித்துறை தீர்மானங்களை எடுத்தல், மற்றும் சட்டத்தை அமுல் செய்தல் என்பதோடு, இவைகளே நல்லாட்சியினதும், சட்டவாட்சியினதும் அடிப்படை மரபுகளாகவும் உள்ளன.

## 2 தீவிர சிக்கல்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

### 2.1 அரசாட்சியும் பரவலாக்கமும்

#### 2.1.1 தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

மூன்று அடுக்கு ஆட்சிக்கட்டமைப்புக்கு மாறாக, இலங்கையில் தொடர்ந்தும் அதிகளவில் அதிகாரம் மற்றும் தீர்மானமெடுத்தல் என்பன மையப்படுத்தப்பட்டதாக உள்ளன. அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தமும் அதன் பக்கவிளைவுகளும் அதனை தெளிவாக உணர்த்தியுள்ளன. உள்ளூராட்சி மற்றும் மாகாண அரசாங்கங்கள் அதிகளவில் இதன் பின்னணியாகவே இருந்தன மறுபுறம், ஆளுமை தொடர்பில் தேசிய மட்டத்தில் பல சிக்கல்கள் காணப்படுவதனால், அச்சிக்கல்கள் தேசியரீதியில் இயங்குகின்ற நிறுவனங்களை குறிப்பாக பொது நிருவாகம், நீதித்துறை, சட்ட அமுலாக்கல் மற்றும் உயர் கல்வி, ஆராய்ச்சியும் புத்தாக்கமும், தேசிய திட்டமிடல் போன்ற சேவைகளை உயர்தரத்தில் வழங்கல், அரசியல் மயப்படுத்தல் மற்றும் மூளைசாலிகளின் வெளியேற்றம் என்பன அண்மைக்காலமாக பல நிறுவனங்களை மோசமாக பாதித்துள்ளன. அரசியலமைப்பு மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்களானது இதுபோன்ற சிக்கல்களை தீர்ப்பதோடு நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு தேவையான சாதகமான சூழலையும் உருவாக்க வேண்டும்.

#### 2.1.2 ஏற்படக்கூடிய தாக்கங்களும் பிரச்சினைகளின் விளைவுகளும்

பொருளாதாரம்

- மூன்று அடுக்கு ஆளுகைக் கட்டமைப்பானது பொருளாதார மற்றும் சமுகவியல் திட்டமிடலுக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கும், பரவலாக்கலுக்குமான பெரும் வாய்ப்புகளை வழங்குகின்றன. உப தேசிய அலகுகளானது போட்டி சூழலில் இயங்கவேண்டியுள்ளதோடு முதலீடுகளை கவருதல், திறன் உள்ள ஊழியர்கள் மற்றும் உள்நாட்டு மக்களுக்கான வாய்ப்புக்களையும் உருவாக்குவதற்கான முயற்சிகளையும் தேவைப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றாடல;

- சுற்றாடல் வளங்களை முகாமை செய்வதற்கு நிகழ்ச்சித்திட்டங்களும் தேசிய கொள்கைகளும் முக்கியமாகவுள்ள அதேவேளை, நிலையான அபிவிருத்திக்குத் தேவையான நுண்முகாமைத்துவத்தின் உள்நாட்டு சூழ்நிலை மற்றும் பொதுப் பயன்பாடு என்பன கீழ்மட்டக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

### 2.1.3 பரிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்கல்

திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கத்தினை பரவலாக்கல், அதிகாரப் பகிர்வு விடயத்தில் கீழ்மட்ட கொள்கையினை பின்பற்றும், உள்ளூர், மாகாண மற்றும் தேசிய மட்டங்களில் அரசாமுகையில் மக்களின் பங்கேற்றல், உள்ளூர் அதிகார சபைகளை வலுவூட்டல் என்பன தற்போதுள்ள கூடுதல் மையப்படுத்தப்பட்டுள்ள தீர்மானம் எடுத்தல் கட்டமைப்புக்களை மாற்றுவதற்கான நடவடிக்கைகளாகும்

உபாயங்களும் கொள்கைளும் முக்கியமான முன் தேவைப்பாடுகளாக உள்ள அதேவேளை, உபாயக் குறிக்கோள்களை செயற்படுத்துவது இன்றுள்ள அரசாங்கம், பணிக்குழு அல்லது வேறு ஏதேனும் தரப்பிற்கு பெரும் சவாலாகவுள்ளது. தந்திரோபாயங்களின் குறைபாட்டிலும் பார்க்க அவற்றினை நிறைவேற்றுவதிலுள்ள விடுபாடுகளினால், குறித்த குறிக்கோள்கள் அடையப்படாமல் போனமை தொடர்பிலான பிறநாடுகளில் இடம்பெற்ற பல சம்பவங்கள் எங்களிடம் உதாரணமாகவுள்ளன. நாடுகளுக்கும் அரசாங்கங்களுக்கும் தந்திரோபாய பணிப்புரைகளை சிபாரிசு செய்யக் கூடிய சர்வதேச மற்றும் பிராந்திய மட்டங்களிலுள்ள பல நிறுவனங்கள் உள்ளன. ஒரு விடயத்தினை குறித்த நாட்டில் பலவிதமான கோணங்களில் செய்வதற்கு, அந்த நவீன நாடு தன்னால் சரியான தந்திரோபாயங்களை உருவாக்கவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலைக் கொண்டிருக்குமானால், அந்த தந்திரோபாயத்தினை வாங்கிக்கொள்ள முடியும். எவ்வாறாயினும் எங்களது கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவது எங்களது சொந்த பொறுப்பாகும் என்பதுடன் அதனை வெளியாட்களிடம் வழங்க முடியாது. இதனால் 2030 இற்கான தூர நோக்கினை நிறைவேற்றுவதற்கு சம அளவிலான பலத்தினை பிரயோகித்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

இலங்கையில் கடந்த அரசாங்கங்கள் இது போன்ற ஆய்வுகளை மேற்கொண்டிருந்ததுடன் குழுக்களையும் நியமித்தன. இதில் தந்திரோபாயங்களை வகுக்கக்கூடிய புத்திஜீவிகள் மற்றும் செயற்பாட்டாளர்கள் அடங்கிருந்தனர். ஆனால் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் குறைவாகவே அமைந்தன. ஆகவே இவ்வறிக்கையானது மேலும் வலுவான முறையில் அமுலாக்கத்தினை வேண்டி நிற்கின்றது.

### வெற்றிகரமான அமுலாக்கத்திலுள்ள தடைகள்

1. நீண்டகால தந்திரோபாயங்கள் இன்மை அல்லது அரசியல் காரணங்கள்/ பிரதிபலன்களுக்காக புதிய அரசினால் முன்வைக்கப்படுகின்ற தந்திரோபாயங்கள் / பழைய தந்திரோபாயங்களை எடுத்துக்கொள்ள மறுத்தல். (உதா. சக்திவளத்துறை பிரிவினை பார்க்கவும்)

2. சுதந்திரமான பொதுநிருவாக முறைமையொன்று இன்மை குறுங்கால அரசியல் எண்ணப்பாடு அல்லது பணிப்புரைகளுக்கு அமைய மாற்றங்களுக்கு உட்படல். (உதா. சக்தித்துறை பிரிவினைப் பார்க்கவும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அசாத்தியமான அரசியல் வாக்குறுதிகளை வாக்காளர்களுக்கு வழங்குகின்ற அரசியல் கலாச்சாரத் தன்மை. இதனால் நீண்ட கால வளர்ச்சிக்குத் தேவையான முதலீடு மறுக்கப்பட்டு, எவ்வித பலாபலனுமற்ற செலவீனம் ஊக்குவிக்கப்படுதல்.

4. அரசியல் மற்றும் பொது நிருவாக மட்டத்தில் காணப்படுகின்ற ஊழல்: இது விடயத்தில் இலங்கையானது தனது உலகளாவிய தரப்படுத்தலில் கடந்த பல வருடங்களாக இறங்குவரிசையில் சென்று கொண்டிருக்கின்றது.

5. கலால் வரி, வரி மற்றும் தீர்வைகள், சந்தை நடைமுறைகள், முதலீட்டுநிலைமை போன்றன குறித்து காணப்படுகின்ற நிலையற்ற கொள்கைகள்.

6. சட்டவாக்கமின்மை (காலம் கடந்தது) யும், சட்டத்தையும் ஒழுங்கையும் அமுல்செய்வதிலுள்ள அரசியல் செல்வாக்கும்.

7. அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் மாதிரியும் அதிகாரப் பகிர்வும் - தனியாகவும் கூட்டாகவும் யார் எதற்கு பொறுப்புக்கூறல், மற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலான படிமங்கள் குறித்து தெளிவின்மை

8. பொதுத்துறையின் செயலாற்றுகையினை பாதிக்கின்ற மக்கள் தொடர்பிலான காரணிகள் அறிவு - திறன் இடைவெளி, செயலாற்றுகை, சன்மானங்கள் மற்றும் கொடுப்பனவுடன் தொடர்பற்ற அங்கீகாரம், பொருத்தமற்ற அளவீட்டுக் கருவிகள், வெளிப்படையானதும் நியாயமானதுமான தொழில் மேம்பாட்டு வாய்ப்புக்கள்.

9. செயற்திறனின்மை ஏற்படுத்தும் வகையிலான அரசாங்க நிறுவனங்களின் கலாச்சாரம் பெறுமதி முறைமை தொடர்பான சிக்கல்கள், ஒழுக்கக்கோவை, ஊக்குவிப்பு, தொழிற்சங்கங்களுடனான முரண்பாடு.

10. காலம் கடந்த ஒழுங்குகள்/ சட்டங்கள் படுமோசமான நிலையிலுள்ள செயலாற்றுனரிற்கு ஊக்குவிக்கும் வகையிலானவை

இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தந்திரோபாயங்களை வலுவான முறையில் அமுல்படுத்தவதற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் திருத்தங்களும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட அமுலாக்கல் திட்டமும் அவசியமாகும். 2030 களில் எய்துவதற்கான தூரநோக்கினை அதிகளவில் குறைந்துவிடுகின்ற விடயங்களாக, வேறொரு மக்கள் தரப்பிடம் எதிர்கால அமுலாக்கலை விட்டுவிடுதல், அல்லது தற்போதுள்ள அமுலாக்கல் மாதிரி, கட்டமைப்பு மற்றும் முறைமைகளை அடிப்படையாகக்கொள்ளல் என்பன அமைகின்றன.

**பிரச்சினைகளுக்கான தீர்வினை நோக்கிய அணுகுமுறை**

1. மேற்குறித்த அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அதனுடைய வலுவான அமுலாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்கு நல்லாட்சிக்கான ஒரு செயற்திட்டம் அரச துறைக்கு அத்தியவசியமானதாகும். பின்வரும் பிரேரணைகள் ஒரு பயனுடைய ஆரம்பத்திற்கு அடிப்படைகளாகும்

2. பலமானதும் நன்று இணைக்கப்பட்டதுமான ஒரு வேலைத்தளக் கலாச்சாரத்தினைப் பேணிக்கொள்ளல், இது அரசாட்சி செயன்முறையின் ஒரு அங்கமாக இருப்பதோடு, அரச துறையின் சிறந்த செயலாற்றுகைக்கு அடிப்படையாகும். அரச துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் சுதந்திரமாக ஒருங்கிணைப்பு மற்றும் உயர் தரத்திலான ஒழுக்கக்கோவை என்பன உறுதியான தீர்மானம் எடுத்தல் தீர்மானமெடுத்தற் செயன்முறையினை பேணிக்கொள்வதோடு, அரச துறைமீதுள்ள சமூக நம்பிக்கை என்பனவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

3. நன்கு வரையயறுக்கப்பட்ட முகாமைத்துவம் சார்ந்த பொறுப்புக்கள், மற்றும் பொறுப்புக்கூறல்கள், அர்த்தமுள்ள தந்திரோபாய திட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற் திட்டங்கள், சுயாதீனமான நுண்ணறிவு என்பன அரச துறையின் ஆளுகைக்கு உரியவாறு இருத்தல் வேண்டும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்திற்கும், அரச நிர்வாகத்துறைக்குமிடையே தெளிவானதும் வெளிப்படைத் தன்மையுடையதுமான, உறவினை உறுதிசெய்தல். நிருவாகத்துடன் தொடர்புடைய அரச தொழிற்பாடுகளில் தேவையற்ற ஏதேனும் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதினை தடுப்பதற்கு இன்றியமையாததாகும், என்பதுடன் துரிதமாகவும் செயற்திறனுடனும் அரசாங்கத்தின் கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் அமுல்செய்வதனையும் உறுதிப்படுத்தல்.

5. நல்லாட்சிக்கான தந்திரோபாயங்களையும் கட்டமைப்பினையும் நிறுவுதல். ஒரு கட்டமைப்பானது எல்லா மட்டங்களையும் ஊடறுத்துச் செல்லக்கூடியதாக இருத்தல் (உதா. மத்திய மாகாணம் மற்றும் உள்ளூராட்சி) அதாவது அரச நிறுவனங்கள்/முகவர்கள், செயற்பாட்டு பரப்பினை மீள் வரையறை செய்தல், குறித்த கடமைப் பங்குகளை மீள் ஒப்படைத்தல், பொறுப்புக்களும் பொறுப்புக் கூறலும், என்பன பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரம், அரசியல் தலையீடுகள் அல்லது செல்வாக்கிலிருந்து விடுதலைபெறல் என்பன அவைகளுக்கு வலுவூட்டுகின்றன.

6. மிகுந்த விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புடன் சரியானதை, சரியான விதத்தில் இயற்கையாகவே செய்யக்கூடிய மக்களைக் கொண்ட ஓர் கலாச்சாரத்தினை ஏற்படுத்துதல், ஒருமைப்பாடு, நம்பிக்கை, மரியாதை, நேரடித்தன்மை, வேகம், வெளிப்படைத் தன்மை, மற்றும் எல்லா மட்டங்களிலுமுள்ள அரச சேவையாளர்களின் தலைமைத்துவம் போன்ற பெறுமானங்களை மனதில் பதியச்செய்தலும் மேம்படுத்தலும். மக்களை தமது முதன்மையான கடப்பாட்டுச் சேவையை மேற்கொள்ளப் பழக்குதல் போன்ற அர்ப்பண சிந்தனையை ஏற்படுத்தல். தமது நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது, தமது நியதிகளையும் ஏனைய கடப்பாடுகளையும் நிறைவு செய்தல் இவற்றை கணக்காய்வு, அதிகாரப் பகிர்வு, கொள்கைகளைக் கொண்டிருத்தல், நிதி, இடர்கள், மனித வளங்கள், சம வாய்ப்புக்கள், வேலைத்தள நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான கட்டுபாடுகளுக்கூடாக செயற்படுத்தும் செயன்முறைகளும் திட்டங்களும்.

7. அரசதுறையின் செயலாற்றுகையினை அதிகூடிய வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் முன்னெடுத்துச் செல்லல். இதனை தனிப்பட்ட மற்றும் நிறுவன மட்டத்திலான இருவிதமான செயலாற்றுகை அறிக்கையிடல் செயன்முறை, மதிப்பீட்டு முறைமை, மற்றும் செயலாற்றுகை கண்காணிப்பின் ஊடாக செயற்படுத்துவதாகும்.

மேற்குறித்தவற்றை அடைவதற்கு, கீழ் குறிப்பிடப்படும் அரசாட்சிக் கொள்கைகளின்பால் வழிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1. அரச மற்றும் அரசதுறை உறவு - அரசாட்சியுடன் அரச துறையின் உறவானது தெளிவாக இருப்பதுடன், ஒன்றிலொன்று தங்கியிருத்தலானது நன்கறியப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்டிருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முகாமைத்துவமும் மேற்பார்வையும் - முகாமைத்துவமும் மேற்பார்வையும் தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுக்கு, பொறுப்புக் கூறக்கூடியவறான தொழிற்பாடுகளைக் கொண்டிருத்தல்.

3. நிறுவனரீதியான கட்டமைப்பு – கட்டமைப்பானது தனது இயக்குனர்களை முழுமையாக உட்படுத்திக் கொண்டு சேவையாற்றுகின்றன.

4. ஒழுக்கக் கோவையும் ஒருங்கிணைப்பும் – பெறுமானம் மற்றும் செயற்பாடுகளில் ஒழுக்கக் கோவையும் ஒருங்கிணைப்பும் சேவைக்குட்பட்டிருத்தல்.

5. மக்கள் - மக்களை முகாமை செய்வதற்கான தலைமைத்துவம், தனிப்பட்ட மற்றும் அமைப்பு மட்டத்திலான அடைவுகள்.

6. நிதி – நிதி தொடர்பான ஒருங்கிணைப்பும் பொறுப்புக்கூறலும் பாதுகாக்கப்படுகின்றது.

7. தொடர்பாடல் - சென்றடையக்கூடிய, வெளிப்படைத் தன்மையுடைய, மற்றும் பதிலளிக்கக்கூடிய எல்லாத் தரப்பினருடனும் தொடர்பாடல்.

8. அரச துறைக்கான கொடுப்பனவு போட்டித்தன்மையுடையதாகவிருத்தல் - செயலாற்றுகையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறையை கொண்டிருத்தல்.

9. வெகுமதியும் - அங்கீகாரமும் - செயலாற்றுகை, இசைவாக்கம், மற்றும் உடன்பட்டிருத்தல்.

## 3. நிலைத்திருத்தல் கோட்பாடு - 2020 லும் அதற்கப்பாலும்

மேற்குறித்த அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரச துறை நல்லாட்சிக்கான ஒரு செயற்திட்டம் உதவியாக இருப்பதோடு, உறுதியான அமுலாக்கத்தினையும் உறுதிசெய்கின்றது. தற்போது காணப்படுகின்ற கூடுதலாக மையப்படுத்தப்பட்டுள்ள தீர்மானமெடுத்தல் கட்டமைப்பானது, திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கத்தினை பரவலாக்கல், அதிகாரப் பகிர்வில் கீழ்மட்டக் கொள்கையினைப் பின்பற்றல், உள்ளூர், மாகாண, தேசிய மட்டங்களில் அரசாட்சியில் மக்கள் பங்கு கொள்ளல், மற்றும் உள்ளூர் அதிகார சபைகளை வலுவூட்டல் மூலம் மாற்றத்தினை எற்படுத்தல்.

நன்கு வரையறுக்கப்பட்ட முகாமைத்துவப் பொறுப்புக்களும், பொறுப்புக்கூறல்களும் அர்த்தமுள்ள தந்திரோபாயத் திட்டம், நிகழ்ச்சிகள், செயற்திட்டம், மற்றும் சுயாதீன நுண்ணறிவு என்பன அரசதுறையுடன் அரசாட்சிக்கான மைற்கற்களாகும். அரச துறையானது உச்சக் கட்ட செயற்திறனுடனும், ஆற்றலுடனும் செயற்படுத்துவதென்பது செயலாற்றுகை கண்காணிப்பும், மதிப்பீட்டு முறைமையும், செயல்முறையும், தனிப்பட்ட மற்றும் நிறுவனரீதியான செயலாற்றுகையின் அறிக்கையிலுமாகும்.

அர்ப்பணிப்பு, அதிகூடிய விசுவாசம் என்பவற்றுடன், மக்கள் இயற்கையாகவே "சரியான விடயம், சரியான விதத்தில்" என எண்ணக்கக்கூடிய ஒரு கலாச்சாரம் ஏற்படுத்தப்படும். அரசியலமைப்புச் சீர்திருத்தமானது சமாதானம், இணக்கம், மற்றும் நிலையான அபிவிருத்தி என்பனவற்றை உறுதிசெய்யப்படுவதற்கு உதவியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T5

## T5. புத்தாக்கம்இ தொழிநுட்பம் மற்றும் கைத்தொழில்[23]

### 1. தற்போதைய நிலை

புத்தாக்கம் என்பது, புதிய விடயங்களை செய்வதும் பழைய விடயங்களை சிறப்பாக செய்வதுமாகும். புத்தாக்கத்தினைப் பொறுத்தமட்டில் இலங்கையானது முன்னிலையிலுமில்லை அல்லது நடுமத்தியிலுமில்லை. புத்தாக்கம் தொழிநுட்பத்துடன் தொடர்புடையது என்பதுடன் கைத்தொழில் துறையானது பரந்தளவிலான பிரயோகத்தினை கொண்டிருக்க வேண்டும். புத்தாக்கம் பற்றிய பாரம்பரியமான குறிகாட்டிகள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி (R&D) செலவீனங்கள், மற்றும் காப்புரிமைத்துறை என்பனவற்றிற்கான பெறுமானத்தை வழங்குகின்றன. இலங்கையினுடைய குறைந்த இடைத்தர வருமான மட்டம், அதனுடைய பலவீனமான கைத்தொழிற்துறை, என்பன அதனுடைய குறைந்த செயலாற்றுகையை வெளிக்காட்டலாம். ஆலைச் சேவைகள் துறையில் கூட ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் செலவீனங்கள் மிகவும் அரிதாகவே வெவ்வேறாக அறிக்கையிடப்படுவதும், காப்புரிமைத்துறையில் இல்லாதிருப்பதும் இலங்கை ஒரு பலமான செயலாற்றுகைக்குரியவர் அல்லர் எனக் கொள்ளப்படுகின்றது.

புத்தாக்கம் என்பது அதுவாகவே முடிகின்ற ஒரு விடயமல்ல. புத்தாக்கத்தில் பலமானது உற்சாகத்திற்கு வழிவகுப்பதோடு, பொருளாதார புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. இதனால் நிலையான நன்மைகள் மக்களுக்குக் கிட்டுகின்றன. மந்தகதியிலான வளர்ச்சி, ஏற்றுமதி பன்முகத்தன்மை என்பன பலவீனமான புத்தாக்கத்திற்கான சில எடுத்துக்காட்டுகளாகும். ஒரு சில குறிப்பிடத்தக்க விலக்களிப்புடன், எங்களது நிறுவனங்கள் உயர்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்கள், மற்றும் அதிக போட்டியினை எதிர்கொண்டு, புதிய வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் போன்றவற்றில் துரிதமாக இல்லை. சில உள்நாட்டு வியாபார செயன்முறைக்கான புத்தாக்கங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆனால் உள்நாட்டு நுகர்வோன் புத்தாக்கத்தின் தன்மைகளை மிகவும் அரிதாகவே பெற்றுள்ளான். புரிந்துகொள்ளத்தக்கதாக, ஒரு பொருளாதார விடயத்தில் மும்பாயுடன் இலங்கையை வைத்துப் பார்க்கையில், இலங்கையானது ஒரு தொழிநுட்பத்தை உருவாக்குபவராக அன்றி, அதனைப் பெறுகின்றவராகவே உள்ளது. இஸ்ரேல் மற்றும் பின்லாந்து போன்ற நாடுகள் காட்டியது போன்று சிறிய பொருளாதார தொழிநுட்பத்தை உருவாக்குவோராக இருக்கலாம். சூத்திரமாக தொழிநுட்பத்தை உள்ளீர்ப்புச் செய்தல் மற்றும் புத்தாக்கத்தினை அதிகரித்தல் என்பன சிறிய பொருளாதாரங்களில் வகையாக இடம்பெறுகின்றன. அது கூட இலங்கையில் இல்லை.
ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து கிடைக்கப்பெறுகின்ற GSP பிளஸ் வரிச்சலுகை, இந்தியா, சீனா, மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடன் அனேகமாக முடிவாகவிருக்கும் பரந்தளவிலான வர்த்தக மற்றும் முதலீட்டு ஒப்பந்தங்கள் என்பன அதிக சந்தை வாய்ப்புக்களை, மூன்று பில்லியன்களுக்கு அதிகமான மக்களுக்கு ஏற்படுத்தவுள்ளன. தொழிலாளர் பற்றாக்குறை, குறிப்பாக நீலக் கழுத்துச் சட்டைத் தொழில்களுக்கானது, சந்தை வழிமுறைகளுக்கு

---

23 எழுதுனர் குழாம்: ரொஹான் சமரஜீவ (தலைவர்), டேனியல் அல்போன்சோ, லொயுகா ராஷிட், நாதன் சிவகனநாதன், சன்ஜீவ வீரவரன, ஹான்ஸ் விஜயசூரிய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற வாய்ப்புக்களை கடினமாக்குவதோடு, கூடுதல் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருள் ஏற்றுமதியானது அறிவு மற்றும் புத்தாக்கம் கொண்ட தொழிலாளர்களிலேயே தங்கியுள்ளதுடன் ஏற்றுமதிகளும் ஊக்குவிக்கப்பட்டு துரிதமாக பல்லினத்தன்மையடைகின்றன. தற்போதுள்ள கடன் சுமையிலிருந்து விடுபடுவது என்பது புத்தாக்கத்தினூடாக பல்லினத்தன்மைகளைக் கொண்ட ஏற்றுமதியில் கவனஞ்செலுத்துவதிலேயே தங்கியுள்ளது.

## 2. தீவிர சிக்கல்கள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

### 2.1 தற்போதைய நிலை சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

அரசாங்கத்தின் செயற்பாட்டில் புத்தாக்க மேம்பாட்டில் பாரம்பரியமான அணுகுமுறைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. அதிகளவிலான அரசாங்க நிறுவன அமைப்புக்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வரிச்சலுகைகளும் இன்னும் பலவும் வழங்கப்பட்டுள்ளன. குடியேற்றவாத காலத்தில் தொடங்கப்பட்ட ஏற்றுமதிகளில் விதிக்கப்படுகின்ற பலவிதமான வரிகளின் மூலம் நிதியிடப்பட்டு, விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் ஆரம்பித்து, இலங்கை அனைத்து தீர்வுகளையும் பரிசீலித்துப் பார்த்திருக்கின்றது, எனினும் அனேகமாக அவைகளைக் குறைந்தளவிலேயே அமுல்செய்தன.

அரசாங்கத்தினுடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களை புத்துயிரூட்டுவது, முற்றிலும் அவசரமாக செய்வது, கடினமாவதுடன் அரசாங்கத்தின் மொத்த சீர்திருத்தத்தில் அத்துறை மாத்திரம் தனியாக கணிக்கப்படுகிறது. தனியார் நிறுவனங்கள் விண்ணப்பிப்பதற்கும், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான சலுகைகளைப் பெறும் பொருட்டு அண்மைய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட நிதியங்கள், அரசாங்கத்தின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளில் நேரடியாக ஈடுபட்டமை தோல்வியடைந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றன.

ஒரு அணுகுமுறைக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டியுள்ளது. ஆனால் அது பிரத்தியேகமானதாக இருக்கக்கூடாது. உதாரணமாக , அடையாளம் காணலும், புத்தாக்கத்திற்கான தடைகளை அகற்றலும் ஒரே வேளையில் நடைபெறலாம், அதாவது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக அரச- தனியார் பங்குடமையினை ஏற்படுத்தல். அரசாங்கத்தினுடைய ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்கள் அவசியத்திற்கேற்ப தொடரும். எவ்வாறாயினும், அவற்றினை அதிக வினைத்திறனுள்ள வெளிப்படைத் தன்மையானதாக இருப்பதற்கு நடவடிக்கைகள் அவசியமாகும்.எவ்வாறாயினும் இத்தீர்வுகள் தமக்குரிய சொந்த அமுலாக்கல் கஷ்டங்களைக் கொண்டுள்ளன.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், வரைவிலக்கணப்படி . பாதகமான முடிவுகளையும் மற்றும் தோல்விகள், பொதுநிதியானது அரசாங்கத்திற்கு கடினமானதாக உள்ளது. புத்தாக்க நிறுவனங்களின் நாளாந்த செயற்பாடுகளிலிருந்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை வேறுபடுத்தியறிவது கடினமாகியுள்ளது. மேற்குறித்த சிக்கலானது பொறுப்புக்கூறல் பிரச்சியையைத் தோற்றுவிப்பதோடு வரிசெலுத்துவோரின் நிதி பகிர்ந்தளிக்கப்பட்ட விதம் அல்லது சென்ற விதம் குறித்த அக்கறையினை காட்டுகின்றது. (மானிய உதவியில் இயங்கும் நிறுவனங்களின் வகைகள்)

புத்தாக்கத்தினை வேரூண்டச் செய்வதற்கு ஒரு மாற்றுவழியாக அதற்கான தடைகளை அகற்றுவதாகும். உதாரணமாக, அரசாங்கம் வர்த்தகம் செய்வதனை மேம்படுத்தி இலகுபடுத்தலாம், இலேசான வரிமுறைமையினை ஏற்படுத்தல், புலமைச்சொத்துக்கள் காப்பீடுகளை இலகுபடுத்திக் கொடுத்தல், போன்ற இன்னும் பல உள்ளன. இலங்கையிலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாக்கத்தில் கடுமையாக ஈடுபடும் நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவது, ஒரு வெளிப்படையான நடவடிக்கையாகும். அதிகமாக இந்தப்பணிகள் அரசாங்கத்தின் சீர்திருத்தங்களிலிருந்து பகுத்தறிய முடியாததாகும். முழு அளவிலான சீர்திருத்தங்களானது அவசரமாக பூர்த்திசெய்வது கடினமானதாகும். ஆனால் அதிக வருமானம் பெற்றுத்தரக்கூடிய Logistics போன்ற துறைகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்படலாம்.

புத்தாக்க நிறுவனங்களால் நடாத்தப்படுவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான வலுவூட்டும் காரணிகளை அல்லது முன்செயற்பாட்டுக்கான உதவியினை வழங்குவது மற்றொரு மாற்றீடாகும். உதாரணமாக புத்தாக்கப் பூங்காக்களை அமைப்பதற்கான நிலத்தை வழங்குதல், தொழில்வாண்மை மிக்கதாக முகாமை செய்வதற்கு விஷேட நிறுவனங்களுக்கு தேவையானவைகளை வழங்குதல், அரச-தனியார் பங்குடமை உபாயமாகும். அரசாங்கப்பங்களிப்பு என்பது, பொருத்தமான இடத்திற்கான காணி, அதனை சுத்தப்படுத்தல் ஏற்பாடு என்பனவாகும். குறிக்கோள் அடிப்படையில் வழங்கக்கூடியவைகள் வரைவிலக்கணப்படுத்தவதற்கு இலகுவானவைகளாகும். இந்த அரச முதலீட்டிலிருந்து கிடைக்கின்ற நன்மைகளைக் கொண்டு, ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அதனூடாக பூங்கா முகாமையாளர்கள் தனது பயன்பாட்டாளர்களுடன் நுழைந்து வசதிகளைப் பயன்படுத்தலாம், இந்த தந்திரோபாயத்தின் மற்றொரு காரணி யாதெனில், பல்கலைக்கழக - கைத்தொழில் பங்குடமைகளுக்கிடையே நெருக்கமான உறவை வைத்துக்கொள்வதாகும்.

**குறித்த அனுகூலத்தைக்கொண்ட பிரச்சினைகளுக்கான பதிலளிப்பு உள்ளடக்கிக்கொள்பவை:**

1. தீர்மானம் மேற்கொள்வோரிடையே புத்தாக்கம் தொடர்பான சினேகபூர்வ மனநிலை காணப்படாமை, பொதுமக்கள் தன்னம்பிக்கையின்றி இருத்தல், இதனால் புத்தாக்க கலாச்சாரத்திலும் பார்க்க சலுகைகள் பெறுகின்ற, அதற்குப்படிக்கப்படுகின்ற ஒரு கலாச்சாரத்திற்கு இட்டுச்செல்லப்படுதல்.

2. பாரம்பரிய காப்புரிமையை – மையப்படுத்தப்படுத்திய புத்தாக்கங்கள் வெகுமதிகள் சேவையினை இலக்காகக் கொண்ட புத்தாக்கங்களுக்கு மிகவும் பயனுறுதியானவை அல்ல. இலங்கையில் புலமைச் சொத்துக்களை மையமாகக் கொண்ட முறைமைகள் தொழிற்பாடற்றிருக்கின்றன.

3. இலங்கையில் காணப்படுகின்ற Angel மற்றும் venture மூலதன முறைமை இன்னும் வளர்ச்சியடையவில்லை. சில தொடக்கக்கட்ட மற்றும் துரிதப்படுத்தி முறைகளே காணப்படுகின்றன. ஒரு சில முக்கிய விதிவிலக்குடன், பெரியளவிலான நிறுவனங்களும் அமைப்புக்களும் புத்தாக்கத்திற்கு போதியளவு இடப்பரப்பினைக் கொண்டிருக்கவில்லை.

4. பரீட்சையை மையமாகக்கொண்ட தமது கல்வி முறைமை, குறிப்பைக்கற்றல் அடிப்படையாக் கொண்டிருப்பதனால், புத்தாக்கத்திற்கு உகந்ததாக இல்லை. பல பாடசாலைகள் விஞ்ஞானம் , தொழில்நுட்பம் , பொறியியல், கணிதவியல் (Stem) கல்வியை வழங்குவதில்லை. இளம் தொழில் வாண்மையாளர்கள் இடர்களை எதிர்கொள்வதற்கு அவர்களின் பெற்றோர்களே அதனை எதிர்ப்பவர்களாக உள்ளனர்.

5. இலங்கையின் சிறிய சந்தைப்பரப்பிலுள்ள கட்டுப்பாடுகளை விளங்கிக் கொள்ளாது பல உள்நாட்டு புத்தாக்குனர்கள் காலங்கடந்த தந்திரோபாயங்களுக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2. பிரச்சினையினால் இடம்பெறக்கூடிய தாக்கங்களும் விளைவுகளும்:

- புத்தாக்கமானது ஓர் மேம்படுத்தப்பட்ட செயலாற்றுகையின் பல்லினத்தன்மையுடைய பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித சேமநலன் என்பவற்றைக்கொண்ட நிலையான அபிவிருத்தியாகும்.

- இலங்கையானது சர்வதேச புத்தாக்கச் சுட்டியின் பிரகாரம் 90வது இடத்திலுள்ளது. 2016 வரை ஒரு படி வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது, தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்தில் இந்தியாவானது அதியுச்ச இடத்தினை வகிக்கின்றது. ஆறு புள்ளிகளிலிருந்து பார்க்கையில் கடந்த வருடம் 66வதிலிருந்து 60வது இடத்திற்கு வந்துள்ளது. மொத்தத்தில் ஈரான் பிராந்தியத்தில் 2 இடமும் 78 வதிலிருந்து 75 ஆவதிற்கும் , தஜிகிஸ்தான் (94வது) , கரஜிஸ்தான (95வது) , நேபாளம் (109வது), பாகிஸ்தான் (113வது) மற்றும் பங்காளதேஷ் (114வது) என்பன இலங்கைக்கு பின்புறமாக உள்ளன.

ஆட்டவணை 1: கீழ் - நடுத்தர வருமானம் பெறுகின்ற பத்து உச்ச நாடுகள் - புத்தாக்கச் சுட்டி மற்றும் உப – சுட்டி தரப்படுத்தலின் அடிப்படையில்

| | சர்வதேச புத்தாக்க சுட்டி வருமானக் குழுவின் நிலை (29 இற்குள்) | புத்தாக்க உள்ளீட்டு உபசுட்டி நிலை அடிப்படையில் | புத்தாக்க வெளியீட்டு உப-சுட்டி அடிப்படையில் | புத்தாக்க தேர்ச்சி விகிசாதார அடிப்டையில் |
|---|---|---|---|---|
| 1 | **வியட்நாம் (47)** | **இந்தியா (66)** | **வியட்நாம் (38)** | **வியட்நாம் (10)** |
| 2 | உக்ரையின் (50) | மொங்கோலியா (67) | உக்ரையின் (40) | உக்ரையின் (11) |
| 3 | மொங்கோலியா (52) | **வியட்நாம் (71)** | மோல்டோவா (42) | ஆர்மெனியா (17) |
| 4 | மோல்டோவா (54) | மோல்டோவா (73) | ஆர்மெனியா (47) | மோல்டோவா (22) |
| 5 | ஆர்மெனியா (59) | உக்ரையின் (77) | மொங்கோலியா(48) | மொங்கோலியா(27) |
| 6 | **இந்தியா (60)** | மொரோக்கோ (79) | **இந்தியா (58)** | ஐவரிகோஸ்ட்(42) |
| 7 | மொரோக்கோ (72) | டியுனிஸியா (81) | **பிலிப்பைன்ஸ் (65)** | **இந்தோனேசியா(42)** |
| 8 | **பிலிப்பைன்ஸ் (73)** | ஆர்மெனியா (82) | மொரோக்கோ (68) | கென்யா (50) |
| 9 | டியுனிஸியா (74) | **பிலிப்பைன்ஸ் (83)** | கென்யா (70) | **இந்தியா (53)** |
| 10 | கென்யா (80) | கிரிகிஸ்தான் (89) | டியுனிஸியா (71) | **பிலிப்பைன்ஸ் (55)** |
| | | | | |

குறிப்பு: தெற்கு மற்றும் தென்கிழக்காசிய கீழ் - நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தடித்த எழுத்துக்களில்.

மூலம்:சர்வதேசபுத்தாக்கச்சுட்டி-2017,பக்கம்-27 https://www.globalinnovationindex.org/gii-2017 report

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையானது புத்தாக்கத் தேர்ச்சியில் 10வது இடத்தில் 2016ல் இருந்தது. ஆனால் அதி சிறந்த, கீழ் - நடுத்தர வருமானம் பெறுகின்ற, பத்து நாடுகளின் எந்தவொரு வகுதியிலும் இலங்கை உள்ளடக்கப்படவில்லை, அதி உச்ச பத்து நாடுகளிலிருந்து தற்போது இடம்பெயரச் செய்வதற்கு, அந்நாடு உள்ளீடுகள், மற்றும் வெளியீடுகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டும். இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில், மொத்த தேசிய தலா வருமானத்தில் இலங்கையிலும் பார்க்க குறைந்த தலாவருமானத்தைக் கொண்ட ஒரு நாடாக வியட்நாம் காணப்பட்ட போதிலும், அந்நாடானது அதி உச்ச பத்து நாடுகளுள் ஒன்றாக மூன்று சுட்டிகளிலும் காணப்படுவதோடு, முன்னிலையிலும் இரண்டு உப சுட்டிகளில் காணப்படுகின்றது. இலங்கையானது 43வது இடத்தில் வியட்நாமிலிருந்து பின்தள்ளப்பட்ட நிலையில், மொத்த தரப்படுத்தலில் காணப்படுகின்றது. அனேகமாக வியட்நாமானது, இலங்கையின் ஏற்றுமதிகளை விடவும் சமநிலை நிகழ்வுகளிள்ளது.

சம தரப்பினராக உள்ள இந்தியாவும் வியட்நாமும், புத்தாக்க விடயங்களில் தடம்பதிக்கின்ற வேளையில், மேற்குறிப்பிட்டதனைப் போன்று, இலங்கையின் போட்டியிடும் தன்மையானது அனேகமாக மேலும் மோசமடையும் நிலை காணப்படுகின்றது. பொருளாதாரப் பிணைப்புக்களின் காரணமாக இக்கஷ்டநிலையானது கடனை இறக்குவதிலிருந்து இயலாமையைத் தோற்றுவித்து இளம் தரப்பினர்கள் விரும்புகின்ற தொழில் வகைகளைப் பிறப்பிக்கவும் முடியாமல் போகின்றது.

## 2.3. பரிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்கல்

ஒரு பிரகாசமான சுற்றுச்சூழல் - முறைமையை – உருவாக்குவதற்கு இத்தீவானது அதனுடைய பருமன், பல்லினத்தன்மை, மற்றும் வாய்ப்புக்களின் திறந்த நிலை என்பன காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்தாக்கவியலாளர்களினால் புத்தாக்கமானது ஊக்குவிக்கப்படுகின்றது. இந்நிலையானது பாவனையாளர் உற்பத்தியை ஏற்றுக்கொள்ளல், மற்றும் செயன்முறைப்புத்தாக்கம் என்பன மாதிரி மதிப்பீடு, தகவல் பகுப்பாய்வு கணியவியல் ஆராய்ச்சி, A/B பரிசோதனை மற்றும் ஒப்பீட்டு பரீட்சித்தல் சார்பாகவும், விரைவாகவும், மற்றும் குறைந்த செலவிலும் முறைமையாக மதிப்பிட்டு சுற்றாடலைப் பேணி அடைந்து கொள்வதாகும்.

இதற்கு சமாந்தரமாக, புத்தாக்கத்திற்கு சார்பான மனநிலையானது, கல்வி மற்றும் ஊடகங்களூடாக போசிக்கப்படும். கருத்தியலுக்கு உரமூட்டும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படும். வெற்றிகரமான புத்தாக்குனர்களுக்கு ஒரு சன்மானத்திட்ட முறைமை (மட்டுப்படுத்தப்படாத ஆனால் காத்திரமான புலமைச் சொத்து முறைமை விருத்தி செய்யப்படும் செய்யப்படும். Angel மற்றும் venture மூலதன முறையில் பாரிய நிறுவனங்களுக்கு புத்தாக்கங்களை ஏற்படுத்துவதற்கான தொடக்கக்கட்ட மற்றும் துரிதப்படுத்திகளை வழங்குதல் என்பன ஊக்கிவிப்புத் தொகையுடன் வழங்கிவைக்கப்படும். சர்வதேச பங்குடைமைகளுக்கான திறந்த வாய்ப்பு, உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்ளல் என்பன கொள்கைகள் மூலமாக அமுல்படுத்தப்படும்.

அரசாங்கமானது, வெற்றியாளர்களை தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாக ஒரு செயன்முறையை உருவாக்கி அது எங்கு காணப்படுகின்றதோ அங்கு அதனை கையாளுவதை புத்தாக்குனர்களின் கைகளுக்கு வழங்கலாம். சுருக்கமாகக்கூறின், இந்நிலையானது ஒரு "பரிசோதனை தேசம்" த்தினை உருவாக்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த நடவடிக்கைகள் உள்ளடங்குபவையாவன:

### 2.3.1 முன்னிலை சோதனை தளத்தினை பொருள் மற்றும் செயன்முறைக்கான புத்தாக்கத்தினை பிராந்தியத்தில் ஏற்படுத்துதல்:

இவ்விடயம் தனியார் நிறுவனங்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புக்கள் என்பன தேவையான காரணிகளை ஒரு புத்தாக்க சோதனை தளத்தில் இடல், இந்த செயற்பாடுளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினால் அதாவது முதலீட்டு சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை ஆகியனவற்றினால் சந்தைப்படுத்தப்படும். இச்செயன்முறை வெற்றி பெறுவதற்கு, நிறுவனங்களை நாட்டிற்குள் நகர்த்துதல் மற்றும் பணியாட்களை கொண்டுவருதல் என்பன அத்தியவசியமாகும். பொதுவாக, புலம்பெயர்ந்து வாழ்வோர் உட்பட திறன்மிக்க ஊழியர்கள் அனைவரும் எல்லை தாண்டிய நகர்வானது அவசியமாகும்.

விளைவுகளுக்காக:-

**பொருளாதாரம்.**

- கவர்ச்சிகரமானதும், அறிவுபூர்வமானதுமான வர்த்தகம் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடிதல்.
- இலங்கை ஒரு "பரிசோதனை தேசம்" என்ற அந்தஸ்த்தினை உருவாக்கி சந்தை சோதனை பொருட்களுக்கான புத்தாக்க கம்பனிகளை கொண்டுவருதல் மூலம் முழுப் பொருளாதாரத்துக்கும் நன்மைபயத்தல்

**சமூகம்**

- சந்தைச்சோதனை உற்பத்திகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகள் என்பன இலுகுவான முறையில் பரீட்சார்த்தம் செய்யப்படுவதோடு, புத்தாக்கம் மதிப்பிடலுக்கும் உட்படுத்தப்பட்டு பிரஜைகளுக்கான சேவைகளை வழங்குதல் வர்த்தகம் மற்றும் வெளிச்சக்திகள்.
- அரசாங்கத்தின் விதிமுறைகளை மீள்பொறிமுறைக்கு உட்படுத்துதல் அத்தியவசிமானதொரு முன்நிபந்தனைகளும் அரசாங்கத்தின் பிரத்தியேக வேலைத்திட்டங்களுடன் தேவையானதுமாகும்.

**சுற்றாடல்**

- இலங்கையினை சரியான நிலையில் வைப்பவதற்காக, கவனம் எடுத்து சோதனைக்களை உச்சமாக்கல், சந்தைச் சோதனை, சுற்றாடல் சினேக உற்பத்திகள் மற்றும் செயன்முறைகள் மூலம் சுற்றாடலுக்கான சேதம் என்பன குறைக்கப்படும்.
- சந்தைச்சோதனையானது பாதகமான புறக்காரணிகளை வேண்டிநிற்கின்றது. இதனால் விவசாயம் மற்றும் உற்பத்தி தயாரிப்புத் தொடர்பான புத்தாக்கங்கள் குறித்த சுற்றாடல் தாக்கமானது தவிர்க்கமுடியாததாகும்.

### 2.3.2 புத்தாக்கத்திற்கான இடைவெளியை உருவாக்கும் பொருட்டு ஊக்குவிப்புடன் கூடிய பெரிய நிறுவனங்களை இலங்கைக்குள் ஊக்குவித்தலும் Angel மற்றும் venture மூலதன நிதியியலாளர்களை மேம்படுத்துலும்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் குறைவாக பயன்படுத்தப்பட்ட அதாவது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வரி ஊக்குவிப்புக்களானது மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
19-CM 27932

என்பதுடன் மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு ஆதரவான முறையில் மாற்றியமைக்கப்படல் வேண்டும். மேலும் மூலதன நன்மைகளுக்கான வரிச் சலுகைகளும் வருமான வரிச் சலுகையானது முதல் 03 வருடங்களுக்கும் வழங்குதல் கருத்தில் கொள்ளத்தக்கதாகும். Angel மற்றும் venture மூலதன நிதியியலாளர்கள் அமைப்பிக்குள், உள்நாட்டில் உள்ள உயர் பெறுமதியான தனியாட்கள் மற்றும் நிறுவனங்கள் நுழைவது ஊக்குவிக்கப்படல் வேண்டும். நிபுணத்துவம் வாய்ந்த வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கை தொடர்பில் கவனம் எடுப்பதற்கு ஊக்குவிக்கப்படல் வேண்டும். மேலும் 50 பங்குதாரர்களுக்கு மேற்பட்டவர்களைக் கொண்ட கம்பனிகள் உருவாக்கப்படுவதற்கான சட்ட மூலம் இருப்பதோடு, kick starter முறையினை ஒத்த வகையிலான பெருந்தொகை முதலீட்டாளர்களுக்கான களம் உருவாக்கப்படல் வேண்டும். Race expert city என்ற ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டம் மீளவும் செயற்படுத்தப்படல் வேண்டும். இதனை ஒத்த வசதிகள் யாழ்ப்பாணம், மாத்தறை, கண்டி மற்றும் குருனாகல் போன்ற பிரதேசங்களில் மேம்படுத்தப்படல் வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகள் அதாவது காணி மற்றும் இதர சேவைகளும் வழங்கப்படல் வேண்டும்.
விளைவுகளுக்காக:-

**பொருளாதாரம்**

- வரி ஊக்குவிப்புக்களானது கலால் வரி முறைமையில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்பதோடு அது குறைந்த தாக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தில் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

**சமூகம்**

நல்லாட்சிக்கான பங்களிப்பு மற்றும் உத்தியோக பூர்வ நிர்ணயங்கள் என்பனவற்றை உருவாக்கும் வகையிலான பொறிமுறை செயற்பாடுகளையும் மற்றும் நிதியியலாளர்களையும் உருவாக்கல் வேண்டும்.

**சுற்றாடல்**

துரிதப்படுத்திகள் வடிவமைக்கப்படுகின்ற போது சுற்றாடலுக்கு தீங்கற்ற வகையிலான சேவை நடைமுறைகள் அமைவதோடு, அதன் தாக்கங்கள் குறைக்கப்படவும் வேண்டும். எவ்வாறாயினும் உற்பத்தி தயாரிப்புத் துறை மற்றும் விவசாயம் என்பன ஊக்குவிக்கப்படுவதோடு சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட முடியும் என்பதனால் அவை முகாமை செய்யப்படவும் வேண்டும்.

### 2.3.3 வெற்றிகரமான புத்தாக்குனர்களுக்கான வெகுமதி திட்டத்தின் ஊடாக கருத்துக்களை உரம்மிடும் நிலைகளை ஏற்படுத்தல். (வரையறுக்கப்படாத, வினைத்திறனுடனான, புலமைத்துவ சொத்து முறைமை அடங்கலாக)

அரசாங்கத்திற்கு உள்ள மிக சவால் நிறைந்த பணி யாதெனில் ஒரு வெகுமதி முறைமையினை ஏற்படுத்துவதாகும். காரணம் அது கருத்துக்களையோ புத்தாக்கங்களையோ இடாது இருப்பதாகும். இந் நிலையானது உலகில் தலை சிறந்த மூளைசாலிகளை நகர்த்த வேண்டிய தேவையை ஏற்படுத்தவதோடு, அவர்களைக் கொண்டு இருக்கின்ற விடையங்களை அனுவபவாயிலாக மதிப்பிட வேண்டியும் உள்ளது. இதனைக்கொண்டு பரிசுகள் மற்றும் வெகுமதிகள் உள்ளிட்ட சன்மான முறைமை ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுகிறது. ஒரு துரித “சுவடு” சட்ட முறையொன்றை உருவாக்குவதன் மூலம் ஒப்பந்த பிணக்குகளையும் சன்மான முறையோடு தொடர்பான விடையங்களையும் கையாள்வது விரும்பத்தக்கதாகும்.

விளைவுகளுக்காக:-

**பொருளாதாரம்**

- புதுமை புத்தாக்கத்திற்கான சன்மான முறைமை மற்றும் ஓர் திறன்மிக்க முரண்பாட்டுத் தீர்வு வழிமுறை என்பன தற்போது இருக்கின்ற கோணலான சட்ட முறைமையினை முன்தாண்டிச் செல்லக்கூடியதாக இருப்பதனால், அது முழுப் பொருளாதாரத்துக்கும் நன்மையானதாக உள்ளது. எவ்வாறாயினும் இவ்விரண்டு முறைகளும் ஒன்றோடொன்று இணைந்து ஸ்திரமற்ற தன்மையினை ஏற்படுத்திவிடாமல் இருப்பதினை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**சமூகம்**

- ஒரு தொகுதி சிறந்த செயலாற்றுகையானது ஓர் பிற்போக்கான சட்ட முறைமையினை ஊக்குவித்து மேம்பாட்டுக்கு வழிகோலுகின்றது.

**சுற்றாடல்**

- பாரிய விளைவுகள் அல்லது அனுமானங்கள் ஏதுமில்லை.

### 2.3.4 கல்விமுறை மற்றும் ஊடகங்கள் ஊடாக அறிவூட்டலுக்கு உகந்த வகையில் இலங்கையைக் காட்டிலும் பெரிதும் மேம்பட்ட மனநிலையைப் பேணி வளர்ப்பது

அரசு பல்கலைக்கழக தொழில் ஒத்துழைப்புடன் அண்மித்து அதே துறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வித்துறையுடன் பணிபுரியும் வேலை வாய்ப்புக்கள் மற்றும் இறுதி ஆண்டு கருத்திட்டங்கள் வணிக ரீதியான திட்டங்களை உருவாக்க நன்கு வடிவமைக்கப்படலாம். மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் படிப்படியான படிப்பினைகளைக் கற்பிப்பதில் உள்ள அனுபவங்களைப் பல்கலைகழகங்களுக்கு மட்டும் அல்லாமல், மூன்றாம் நிலை கல்வி நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்படவேண்டும். மேலாக, 'CCC' மற்றும் 'SLASSCOM' போன்ற தொழில் துறை சங்கங்களினால் ஆதரவளிக்கப்பட்ட இரண்டாம் நிலை மட்டத்திலான சிறிய காந்தம்/ செயல் விளக்கப் பள்ளிகள் புதுவழிமுறை காணலின் செயல் விளக்கமளிப்பை மேற்கொள்ள முடியும். உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்களில் உள்ள புதுமையான நட்புச் செய்திகளை உட்பொதித்தல் பயனுள்ளதாக இருக்கும். இலங்கையை விடப் பெரியதாகச் சிந்தனைச் செய்ய தொழில் முனைவோர் ஊக்குவிக்கப்பட வேண்டும். இதுவானது, இலங்கையை முழுமையாக மையம் கொண்டிருப்போரினது தேவதை மற்றும் துணிகர மூலதனத்தின் பிரபஞ்சத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படாது முதிர்ச்சியடைந்த தொழில் முனைவோர் (அதாவது வயது 30 ற்கு மேல்) மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கங்களின் பொருட்டு:

**பொருளாதாரம்**

- காந்தப்புள்ளிகள் முறை வெற்றி பெற்றால் புதுவழிகாண் சார்ந்த கல்வியின் மூலம் பெரு முனைப்பான பொருளாதாரம் வெற்றி பெறும்.

**சமுதாயம்**

- வெற்றி பெற்றால் சார்த்தகமான விளைவுகள்

**சுற்றுச்சூழல்**

- குறிப்பிடத்தக்க அளவு தாக்கங்கள் ஏதும் இல்லை

**அமுல்படுத்துகை**

ஓர் குறுகியகால வரையறை இருக்கையில், ஒரு முன்னோக்கான "பரீட்சைய நாடு" முன் முயற்சியைச் செயற்படுத்துவதற்கு ஒரு அமைவுறு நிர்வாகக் குழுவினால் உதவியளிக்கப்பட்டதான மேல்மட்ட அரசுத் துறை சார்ந்த செயற்குழுவைத் தாபிப்பது அவசியமாகின்றது. சம்பந்தப்பட்ட அரச முகவராண்மைகள் மற்றும் தரத்தவருடனான செயலாக்கம் மற்றும் தொடர்பாடல்களை மேற்கொள்ளும்போது, செயற்திட்டமானது தேவைக்கேற்றபடி விரிவாக்கப்பட்டு மற்றும் தக்கவாறு செயற்படுத்தலாம். செயல்முறைகளானது தாபிக்கப்பட்ட அரசுத்துறை மற்றும் முகவராண்மை அமைப்புக்களின் தாபிக்கப்பட்ட செயற்பாடுகளை விட விசாலமானதாக இருப்பது அவசியமாகும். அரச அமைச்சுக்கள் மற்றும் முகவராண்மைகளின் தரைவழி பாதுகாப்பற்ற மனப்பான்மையை நோக்குகையில், வெற்றிபெறுவதற்கு அரசாங்கத்தின் உயர் மட்டங்களில் அரசியல் சார்ந்த உள்ளார்ந்த ஈடுபாடு அவசியமாகின்றது. ஏனென்றால் உத்தேசிக்கப்பட்ட முன்னெடுப்பானது மானியங்களில் தங்கியிருக்கவில்லை, வெளிநாட்டு மற்றும் உள்ளக தனியார் துறையினரால் புதுவழி காண் உரித்தான முதலீடுகளை ஏற்பாடு செய்வது அவசியமாகின்றது. ஒரு "சோதனை நாடு" உருவாக்கப்படுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் சாத்தியமான முதலீட்டாளர்களினால் நன்கு புரிந்து கொள்வதற்கு தகவல் தொடர்பாடலில் தனிக்கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. கொழும்பில் மற்றும் பிற இடங்களில் தனித்துவமான நகரைத் தேடலின் மீள்ச் செயற்பாடு போன்ற கண்டுபிடிப்பு அலகுகள் உட்பட்டதான தரை நிலை நிலைப்பாடுகளின் தேவையின் பொருட்டு வலுவான தொடர்பாடல் தேவைப்பாடானதாகும். தரவு (எடுத்துக்காட்டாக R&D செலவினங்களை சரியாக ஒழுங்கமைத்தல்) மற்றும் உலகளாவிய குறியீட்டு கண்டுபிடிப்பு போன்ற கலப்பு குறியீடுகளின் உள்ளீடுகளை உருவாக்கும் குறிகாட்டிகளின் இலக்கு மேம்படுத்தலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**2020 ஆம் ஆண்டளவில் என்ன செய்யப்பட வேண்டும்**

1. ஒரு "சோதனை நாடு" முன் முயற்சியை அமுல்படுத்துவதற்கு ஓர் ஒத்திசைவு முகாமைத்துவ குழுவின் ஆதரவுடனான உயர்மட்ட அரச செயலாற்று அமைப்பொன்றைத் தாபித்தல்.

2. வெற்றிகரமான புதுவழிகாண் பொறியமைப்பு உட்பட கொழும்பில் திறமை மிக்க நகரத்தைத் தேடல் என்பதனை மீள் செயற்பாடாக்கி, தாபிக்கப்பட்ட நிறுவனங்களுக்குள் ஆரம்பநிலை மற்றும் புதுவழிகாண் வெற்றிகர அலகுகளை இனங்கண்டு "தரையில் உண்மைகள்" என்பதை உருவாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "சோதனை நாடு" என்பதைத் தடங்கல் செய்வதான சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் நடைமுறைகளைக் கற்று மிக முக்கிய முன்னுரிமை வரம்பு எல்லை மீறுதலைத் தவிர்ப்பதில் ஈடுபாடு கொள்ளவும்.

4. மேற்போந்தவற்றைப் பிரயோசனப்படுத்தி முதலீட்டுச் சபை அல்லது ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்தின் மேற்பார்வையின் கீழ் ஓர் சர்வதேச தகவல் தொடர்பு பிரச்சாரத்தை வடிவமைத்து மற்றும் செயற்படுத்தவும்.

5. பல வருட காலங்களாக வரி மற்றும் பிற அரசாங்க ஊக்கத்திறன்களின் திறனை ஆய்வு செய்து

6. புதிது புனைதல் தீவிர செயற்பாடுகளில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கும் வகையில் மற்றும் சீர்திருத்தங்களுக்கான பரிந்துரைகளை ஆக்கவுரு செய்யும் பொருட்டு உள்ளக ஆய்வுக்குழுவொன்றைக் கட்டாயமாக்குதல்.

7. புது வழிகாண் செயற்பாடுகளுக்கு எதிரானவர்களின் மனோநிலையை மாற்றுவதற்குப் பல்நோக்கு தொடர்பு பிரசாரத்தைத் திட்டமிடுவதற்கு ஓர் பணிக்குழுவை உருவாக்குதல்.

**2025 ஆம் ஆண்டளவில் என்ன செய்யப்படல் வேண்டும்**

1. படிப்படியாக ஆரம்பிக்கப்பட்ட செயல்களின் முன்னேற்றம் அல்லது பற்றாக்குறையை மதிப்பாய்வு செய்யவும்.

2. பின் தங்கிய பகுதிகளில் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

3. அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளையும் முழுமையாகச் செயற்படுத்தவும்

## 3. நிலைத்தன்மை அல்லது அணுகுமுறை - 2020 மற்றும் அதற்கு அப்பால்

வரவிருக்கும் இரண்டு ஆண்டுகளில் தொடங்கப்பட்ட செயல்களின் விளைவுகளைக் பெற சில காலம் ஆகும். உலகளாவிய புதுமைக் குறியீட்டில் கணிசமான முன்னேற்றதிற்கான அடித்தளத்தை உருவாக்கும் சாதனைகள் இக்காலத்திற்குள் சாத்தியமாகும்.

2025 ஆம் ஆண்டளவில் வெற்றிகரமான நடைமுறைத்தல் ஆனது குறைந்த – நடுத்தர வருமானமுடைய தெற்கு மற்றும் தென்கிழக்காசிய புதுமைகளைப் புகுத்தும் தர முன்னணிக்கு இலங்கையைத் தாவச் செய்யும். குறைந்த – நடுத்தர வருமான நாடுகளின் முதற் பத்து இடங்களிற்குள் மற்றும் தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய வருமான குழுவிற்குள் முதல் இரண்டு இடத்திற்குள் அடங்குவது சாத்தியமுடையதாகும். ஏற்றுமதியின் விரிவாக்கம் மற்றும் அளவிடக்கூடிய பங்களிப்புக்களை ஆவணப்படுத்துவதற்கும் ஏற்றுமதி தொகுதிகளின் முன்னேற்றதிற்கும் இது சாத்தியமானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T6

## T6. சர்வதேச தொடர்புகள்24

### 1. தற்போதைய நிலை

இலங்கையின் தேசிய ஒற்றுமை அரசாங்கத்தின் நோக்கமானது ஒரு திறந்த, அமைதியான, சனநாயக மற்றும் பாதுகாப்பான நாடாக, அது சர்வதேச சமூகத்தில் ஒரு பொறுப்பான மற்றும் மரியாதைக்குரிய உறுப்பினராக அதன் இடத்தை எடுப்பதாகும். அதன் நோக்கின் மையமாக சட்டத்தின் ஆட்சி மற்றும் பன்முகத்தன்மை, நல்லாட்சி, மறுசீரமைப்பு நிலையான அபிவிருத்தி என்பன அந்நோக்கின் மையத்தில் உள்ளது.

இலங்கை அதன் வெளிநாட்டு உறவுகளை ஒரு சுயாதீன மற்றும் சமாதான அடிப்படையில் தொடர்கின்றது. சர்வதேச அரங்கில், அமைச்சின் இதயத்துடிப்பில், எங்களது குறிக்கோளானது இருத்தரப்பு மற்றும் பல்தரப்பு பங்குதாரர்களுடனான கூட்டாண்மை மூலம் இலங்கையைப் பாதுகாப்பான மற்றும் வளமை மிக்கதாக வைத்திருக்க வேண்டும் என்பதாகும். இச் செயற்பாடானது, அமைச்சு அதன் கருவியாக அமைந்து, நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட தனிநபர்கள் ஊடான உலகளாவிய வலையமைப்பு மூலமாக இது சாத்தியப்பாடாக்கப்படுகின்றது.

இலங்கையின் வெளிநாட்டு உறவுகளைச் சிறப்பாக நிர்வகிக்கும் தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்திகள் என்பன இலங்கையினதும் இலங்கை மக்களினதும் நலனுக்கு முக்கியமானதாகும். உலகளாவிய சக்தியானது மேற்கிலிருந்து கிழக்கிற்கு மாறி வருகின்ற நிலையில் ஆசிய சமுத்திரங்களை அதன் மையமாகக்கொண்டு ஓர் கடற்பரப்பைக்கொண்ட வலிமையான பிராந்தியம் எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மாற்றத்தின் முன்னணி நாடக அரங்கான இந்துசமுத்திரம், இலங்கையின் சவால்கள் மற்றும் வாய்ப்புக்களை வெளிப்படுத்தும் உலகின் பரபரப்பான மற்றும் மிக முக்கியமான வர்த்தக தாழ்வாரங்களில் ஒன்றாக அமைகின்றது. இலங்கைக்கு நன்மையளிக்கக்கூடிய மற்றும் அனைத்து நாடுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான பயனுள்ள பிராந்திய ஒழுங்குகளை நிர்ணயிக்க அதன் நெகிழ்ச்சியையும் திறமையையும் பயன்படுத்த வேண்டும்.

### 2. சிக்கலான பிரச்சினைகள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

#### 2.1 தற்போதைய நிலைப்பாடு, பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள்

தற்போதைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்திகளை கருத்திற் கொள்கையில், இலங்கையின் வெளிநாட்டு உறவுகளைச் சிறப்பாக நிர்வகித்தல் இலங்கையின் நலன்புரி மற்றும் இலங்கை மக்களின் நலனுக்கு இது மிகவும் முக்கியமானதாகும்.

24 எழுதுனர் குழாம்: அப்துல் அசீஸ் (தலைவர்), வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய அரசு (இஅ) மற்றும் வெளிநாட்டு பயங்கரவாத போராளிகள் (வெபபோ), இந்திய துணைக்கண்டத்தின் அல்-க்வேதா உருவாக்கம் மற்றும் சமூக ஊடகங்களில் பயங்கரவாத மற்றும் தீவிரவாத குழுக்களின் பரவலான பாவனை போன்ற நிகழ்வுகளின் வெளிப்பாடானது, நாடுகளிடையே தகவல் மற்றும் உளவுத்துறை பகிர்வுக்கான பகிர்வுகள் என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. பரஸ்பர நன்மைகளுக்கான தீர்வுகளை இனங்காண்பதற்கான இந்த முக்கிய சிக்கல்களில் பிற நாடுகளுடன் இணைந்து செயற்பட தொடர்புடைய உள்நாட்டு பங்குதாரர்கள் இணைந்து செயற்படும் முயற்சியை வெளிவிவகார அமைச்சு தொடர்கின்றது. சர்வதேச மனித உரிமைகள் நெறிமுறிகள் மற்றும் தரநிலைகள் ஆகியவற்றுடன் இணங்குவதான பயங்கரவாதச் சட்டதிற்கான சட்டவரைபு ஏற்கனவே பரிசீலனையில் உள்ளது.

காலநிலை மாற்ற அச்சுறுத்தல்களுக்கான உலகளாவிய வேண்டுகோளை வலுவடையச் செய்யும் வகையில் பாரிஸ் உடன்படிக்கைக்கு இலங்கை ஒப்புதல் அளித்து கையொப்பமிட்டுள்ளது. இது, 2016 நவம்பர் மாதத்திலிருந்து இலங்கையின் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் சார்ந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பது இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கையில் முன்னுரிமை பெற்று விளங்குகின்றது. இந்துசமுத்திர விளிம்போர அமைப்புடனான (இசவிஅ) இலங்கையின் செயல்விழைவு தொடர்பானது, கடல்சார் இடரின்மை மற்றும் பாதுகாப்பு, கடல்சார் வளங்களைப் பாதுகாத்தல், சுதந்திரமான கடல் போக்குவரத்து மற்றும் நீலப்பொருளியல் நன்மைகளைப் பெறுதல் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ளமையாகும். பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டல் என்னும் தொனிப்பொருளில் நடை பெற்ற பல்தரப்பு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு துணைக்குழுவின் பொருட்டு 2016 மார்ச் மாதம் நடைபெற்ற 8 வது வங்காள விரிகுடா முன்னெடுப்பு கூட்டம் மற்றும் 16 வது உலக ஏற்றுமதி அபிவிருத்தி கருத்துக்களம் (உஅக 2016) கூட்டத்திலும் அமைச்சு பங்குபற்றியிருந்தது.

## 2.2 பரிகாரங்களும் நடவடிக்கைகளும் நடைமுறைப்படுத்தலும்

இலங்கை (தெற்கு) கிழக்காசியாவை இந்திய உபகண்டத்துடனும் மத்திய கிழக்கு நாடுகளுடனும் கிழக்கு ஆபிரிக்காவையும் இணைக்கின்ற பெரிய கப்பற்சேவை கடற்பாதை வழியேயுள்ள அதன் தனிச்சிறப்புடைய புவிப்பௌதிக அரசியல் அமைவிடமாகவிருக்கின்றது. இது மிகவும் முக்கியமான தொடர்பாடல் கடல்வழி ஒழுங்கைகளாகவும் வர்த்தகத்திற்கான கடல் ஒழுங்கைகளாகவும் உள்ளதன் காரணமாக இலங்கையானது இந்த பரந்த பிராந்தியத்தில் ஓர் இடைக்கப்பற்போக்குவரத்திற்கும் அணி ஆதரவிற்கும் வர்த்தக மற்றும் சேவைகள் தொட்டியாக எழுந்து கொண்டிருகின்றது. இலங்கை இந்து சமுத்திரத்தின் நவீன மற்றும் சுறுசுறுப்பான நெம்புகோல் ஒன்றாக விருகின்றது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிகளும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் இதற்கமைவாக அதன் புவிப் பௌதிகத் திறமுறைத் திறனை உச்சநிலைப்படுத்துவதன் பொருட்டு முடக்கி விடப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

மீளாய்வு காலப்பகுதியில் இந்த அமைச்சு கணிசமான அளவிற்கு இருதரப்புத் தொடர்புகளைக் புதுப்பித்துள்ளதுடன் அவற்றின் வழி வகைகளையும் ஆர்வத்துடன் மாற்றுவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. எமது முக்கியமான இராசதந்திரப் பங்காளியாகவும் மிகவும் அருகாமையில் அமைந்துள்ளதுமான அயல் நாடாகிய இந்தியாவுடனான எமது தொடர்புகள் கணிசமான அளவில் சிறந்த நிலைக்கு வந்துள்ளதுடன் அதியுயர்ந்த மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட நிலையான தொடர்ச்சியான முயற்சிகள் மூலம் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் கூடுதலான அளவில் தீவிரமான கவனம் செலுத்தப்பட்டவைகளாகவுள்ளன. வட அமெரிக்காவிலுள்ள எமது நண்பர்களுடனான பின்னிய செயல்விளைவுகள் ஏமம் மற்றும் பாதுகாப்பு துறையில் விரிவடைந்து கொண்டிருக்கும் ஒத்துழைப்புடன் குறிப்பிடத்தக்க மட்டத்தை அடைந்துள்ளது. ஆசியாவில் பூகோள வல்லாதிக்க நாடக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் சீனாவுடனும் ஐக்கியநாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு மன்றத்தின் அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய எமது அயலவர்களுடனான எமது ஈடுபாடு கிரமமான அடிப்படையொன்றின் மீது உயர்மட்ட விஜயங்களுடன் தொடர்ந்தும் நிலவிக்கொண்டிருகின்றது. கடற்பரப்பு, பாதுகாப்பு, ஏமம் மற்றும் சமுத்திர விடயங்கள் மீதான இரு தரப்புக் கலந்துரையாடல்கள் பாரம்பரியமான நட்புறவுடனான தூர கிழக்காசியா பங்காளர்களுடனான தொடர்புகள் விரிவடைந்துள்ளன. அவுஸ்திரேலியா, ஆசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் தென் ஆபிரிக்கா ஆகியவற்றிலுள்ள நாடுகளுடனான தொடர்புகள் தொடர்ந்தும் விரிவடைந்தும் வலுவடைந்து கொண்டும் இருந்தன. ஐரோப்பிய பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான இரு தரப்பு தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளும் செய்யப்படுள்ளன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பல புதிய தூரகங்களை/ துணைத் தூதரகங்களை திறப்பதன் மூலம் இலங்கையின் இராசதந்திர வலையமைப்பையும் விசாலித்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் இத்தாலி, மிலானில் புதிய கொன்சுரீலற்று நாயகத்தின் அலுவலகமொன்றைத் திறந்துள்ளதுடன் எதியோப்பியா, 2016 ஒற்றோபரில் வதிவிடத் தூதரகமொன்றையும் நிறுவியுள்ளது. அடிஸ் அபாபாவில் இலங்கை மீதான சர்வதேச தீவிர கவனத்தினை அனுகூலமான முறையில் பயன்படுத்தி இந் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துபவதற்கும் அபிவிருத்தி முயற்சிகளை அதிகரிப்பதற்கும் உத்வேகத்துடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் வர்த்தகர்களையும் கவர்ந்திழுப்பதற்கும் இந்த அமைச்சினால் பொருளாதார இராசதந்திரக் கொடைமுனைவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அமைச்சு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள பொருளாதாரக் கொள்கைத் தீர்மானங்களுக்கு குறிப்பாக ஆசியாவிலுள்ள சிறந்த செயலாற்றுகின்றவைகளாகக் கண்டறியப்பட்டுள்ள பொருளாதாரங்களுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளுடன் இணக்கப்பேச்சு நாடத்துதல் தொடர்பில் அரசாங்கத்தினால் . எடுக்கப்பட்ட வர்த்தக மற்றும் பொருளாதார கொள்கைத் தீர்மானங்களுக்கும் கூட ஆதரவு வழங்கியுள்ளது. இந்த அமைச்சு எமது மிகவும் அருகிலுள்ள அயல்நாட்டுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று குறித்த காலத்திற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு பங்களிப்பு செய்துள்ளது. மேலும் இந்த அமைச்சு இந் நாட்டிற்கு கூடுதலான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கவர்ந்திழுப்பதன் பொருட்டு அந்தந்த வரிசை முகவர் நிலையங்களுடன் பிரதான பொருளாதார வாயல்களிலுள்ள பூகோளப் பெறுமதிச் சங்கலித்தொடர்களுடன் இணைப்புகளை நிறுவுவதற்கும் வர்த்தக வளவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் அத்துடன் இந் நாட்டின் பொருளாதார வாயில்களிலுள்ள பூகோளப் பெறுமதிச் சங்கிலித்தொடர்களுடன் இணைப்புக்களை நிறுவுவதற்கும் வர்த்தக வளவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கும் அத்துடன் இந் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பு செய்யக்கூடியதாக உல்லாச பிரயாணத்துறையில் மேலும் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குமாக நெருக்கமாக இணைந்து பணியாற்றியுள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் நலனோம்பலின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்குமான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் சிறந்ததும் கூடுதலான வினைத் திறமையுடையமான கொன்சியூலர் சேவைகளை வழங்குதல் ஓர் முக்கியமான முன்னுரிமை விடயமாகவுள்ளது. ஓர் தொழில்நடை முறை மீள் பொறியியல் திட்டமானது 2017 ஆம் ஆண்டின் முற்பகுதியில் புதிய இலக்கமிடல் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும் விளைவை ஏற்படுத்தியுள்ளது. இது இந் நாட்டிற்கு மிகவும் தேவைப்படும் வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கும் வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களுக்கு முழுமையான தன்னியக்கமானவைகளும் உடனடியானவைகளும் வினைத்திறமையுடையவைகளும் அத்துடன் பின்னிய செயல் விளைவுச் சேவைகளை வழங்குகின்றதுமானவொரு முறைமையாகும். இந்த முறைமையானது மனிதக்கடத்தல் காரர்களினாலும் மக்களைக் கள்ளக்கடத்தல் செய்பவர்களினாலும் கடந்த காலத்தில் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட ஆவண மோசடிகளை ஆகக் குறைப்பதற்கான தீர்வை வழங்குவதற்கும் கூட உதவியுள்ளது.

இந்த அமைச்சும் வெளிநாடுகளிலுள்ள அதன் இராசதந்திரத் தூதரகங்களும் கொன்சியூலர் தூதரகங்களும் ஒன்றுடன் மற்றொன்று இணைக்கப்பட்ட நிலையில் இருந்து கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட பரப்புக்குள் பல்தரப்பு மட்டங்களில் பணியாற்றுகின்றன. இந்த அடிப்படையானவைகளும் முக்கியமானவைகளுமான அம்சங்கள் நீடித்த சமாதானம் மற்றும் பாதுகாப்பு மீது கட்டி எழுப்பப்பட்ட வளமுடைய இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கான இலக்கின் அம்சங்களாகவுள்ளன.

## 3. நிலை பேற்று நிலை நோக்குகள் -2020 ஆம் ஆண்டும் அதற்கு அப்பாற்பட்ட காலமும்

**2020**

2020 ஆம் ஆண்டளவில் இலங்கை இப் பிராந்தியத்தில் பல்வேறு பிராந்தியங்களையும் இணைக்கின்றவொரு வர்த்தக மற்றும் சேவைகள் தொட்டியாகவும் இடைக்கப்பற்போக்குவரத்து மற்றும் அணி ஆதரவுத் தொட்டியாகவிருக்கும். அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கணிசமான சர்வதேச தொடர்புகளை புதுப்பிப்பதன் மூலமான நடவடிக்கையினால் அதன் ஆர்வமுள்ள முயற்சிகளின் வெற்றிகரமான பெறுபேற்றையும் அவற்றின் மார்க்கங்களில் ஏற்படுகின்ற மாற்றத்தையும் கூட நாம் எதிர்பார்த்த நிலையிலிருப்போம், அவை பின்வருமாறு.

- இந்தியாவுடனான (மிகவும் அருகாமையிலுள்ள அயல்நாடு) தொடர்புகளை மேலும் மேம்படுத்துவதுடன் தொடர்ச்சியான முயற்சிகள் மூலமாக பரஸ்பர நம்பிக்கையை கட்டி எழுப்புவது மீது கூடுதலான தீவிர கவனம் செலுத்துதல்,

- கடற்பரப்புப் பாதுகாப்பு, ஏமம் மற்றும் சமுத்திர விடயங்கள் மீதான விரிவான பங்காளித்துவம் மற்றும் தொடக்க இருதரப்புக் கலந்துரையாடல்களுடன் பாரம்பரிய நட்புறவுடைய தூரகிழக்கு ஆசிய பங்காளிகளுடனான (விசேடமாக சீனாவும் ஜப்பானும்) தொடர்புகளை மேம்படுத்தல்,

- ஒத்துழைப்பை மீளப் புதுப்பித்தலுடன் வட அமெரிக்காவிலுள்ள நட்புறவு நாடுகளுடன் பின்னிய செயல்விளைவை மேற்கொள்ளுதல்,

- ஆசியாவிலும் அயல் நாடுகளிலுமுள்ள வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் வல்லாதிக்க நாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்தல்,

- கிரமமான அடிப்படையொன்றில் உயர் மட்ட விஜயங்களையும் உள்ளடக்கி ஐக்கியநாடுகள் பாதுகாப்பு மன்றத்தின் அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ளுதல்,

- சார்க் பிராந்தியத்திலுள்ள சக பாடிகளுடனான தொடர்புகளை ஆழமானவைகளாக்குதல்,

- ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் இருதரப்பு தொடர்புகளை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளுதல்,

- பொது நலவாய நாடுகள் அமைப்பிற்கு பலமான வர்த்தக, பொருளாதார மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு மற்றும் அதன் உறுப்பினர்களுக்கிடையே பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உதவி செய்தல்.

இலங்கை அரசாங்கமானது மீனவர்கள் விடயம் தொடர்பிலான இணக்கப் பேச்சுக்கள் நடாத்துவதற்கு வசதி ஏற்படுத்துதல் மீது மேலும் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். அதேவேளையில் ஊடகங்கள் மற்றும் அரசாங்க இராசதந்திர நடைமுறை மூலமாக இலங்கையின் தோற்றப்பாட்டை மேம்படுத்துவதன் மூலமாகவும் அறிவாளிகளின் தலையீட்டின் மூலமாக சில வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களினால் பரப்பப்படும் பொய்யான தகவல்களை எதிர்ப்பது தொடர்பிலும் தீவிரகவனம் செலுத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2025 -2030**

2020 ஆம் ஆண்டிற்கு அப்பாலும் நாம் பின்வருவனவற்றிற்கு உதவுவதை குறியிலக்காகக் கொள்ளுதல் வேண்டும்.

- UNCTAD,UNDP,FAO,WEP,UNDO மற்றும் நிதி நிறுவனங்கள் போன்ற சர்வதேச அமைப்புக்களுடன் சேர்ந்து பணிபுரிவதன் மூலம் SDG17 ஐ எய்துவதற்கு உதவிபுரிதல் (நடைமுறைப்படுத்தல் எனப் பொருள்படும்) இதில் மிக முக்கியமாக மேற்குலகிலுள்ள இருதரப்பு நன்கொடை வழங்கும் நாடுகளுடன் அபிவிருத்திக்காக நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவைப் பெறுவதற்கு சமீபத்தில் பலப்படுத்தப்பட்டதுடன் விரிவாக்கப்பட்டதுமான தொடர்பைப் பயன்படுத்தி சேர்த்து பணியாற்றுதல் வேண்டும்.

- குறித்த SDGS களுக்கான மாதிரியொன்றாக இலங்கையை படம் பிடித்துக் காண்பித்தல் வேண்டும். SDG 16:1 நீதியானதும் சேர்த்துக்கொள்ளப்படத்தக்க சமூகம் என இலங்கையை நெருக்கடிக்கும் நிச்சயமற்ற நிலைமைகளும் நிலவுகின்ற உலகில் சமாதானத்தைக் கட்டி எழுப்புவதற்கும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் தங்களை அர்பணித்துக் கொண்டுள்ள சமூகங்களையும் சனநாயக நிறுவனங்களையும் அபிவிருத்தி கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் பலப்படுத்துவதற்கான எமது நாட்டு மக்களின் முயற்சிகளில் இலங்கைக்கு கூடுதலான கவனத்தைச் செலுத்தலாமென்பதுடன் இதன் மூலம் வர்த்தக மற்றும் அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கு சாதகமான சுற்றாடல் ஒன்றை உருவாக்கலாம்.

- அதிகரித்துக்கொண்டிருக்கும் பொருளாதார முயற்சி மற்றும் முதலீடு ஆகியவற்றுடன் இலங்கையின் கைத்தொழில் அத்திவாரம் அதிகரித்துக்கொண்டிருக்கின்ற நிலையில் உள்ளடக்கப்படத்தக்க நிலைபெற்றுநிலை கைத்தொழில் அபிவிருத்தியை (SDG-09) நோக்கிய முயற்சிகளில் இருதரப்பு மற்றும் முத்தரப்பு நன்கொடை வழங்குநர்களுக்கிடையிலான இடைவெளியை நீக்குவதற்கு உதவலாம். வடக்கு - தெற்கு ஒத்துழைப்பானது தொழில்நுட்ப அறிவை வழங்கும் முக்கியமான வழிவகையான இன்னும் மாற்றமடையாத நிலையிலுள்ளது. இலங்கையின் தலைமைத்துவம் கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையில் இயந்திரமயமானதும் நிலையானதுமான வர்த்தக மற்றும் கடற்பரப்பு தொட்டியாகவிருந்து இணைப்பை வழங்குவது பொருளாதார முன்னேற்றதிற்கான தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கு நெம்புகோலாக உதவலாம்.

- ஐரோப்பிய ஒன்றியத்தின் வி.தே.பொ.மு+ (GSP+) அதாவது விருப்பத்தேர்வுகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை+ வர்த்தக வசதிக்கு அப்பால் பார்க்கவும். ஐரோப்பிய ஒன்றியமானது இலங்கையின் பொருளாதாரத்தின் மாற்றுகையின்மை காரணமாகவும் சீர்திருத்ததிற்கு ஊக்குவிப்பு வழங்குவதற்காகவும் இலங்கைக்கு இந்த வசதியை வழங்கியுள்ளது. இலங்கையும் ஒரு தரப்பாகவுள்ள 7 மிகவும் முக்கியமான மனித உரிமைகள் சமவாயங்களை உள்ளடக்கியுள்ள 27 சர்வதேச சமவாயங்களின் நடைமுறைப்படுத்தல் இந்த சலுகையையும் நலன்களையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விருப்பத்தேர்வுகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறைமை (வி.தே.பொ.மு) யிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான திறவுகோலாகவுள்ளது. இந்த நலனை பேணி வைப்பதற்கு பங்களிப்பு செய்கின்ற வேளையில் ஐரோப்பாவுடனான வர்த்தகத்தையும் தொடர்பையும் 2022 / 2025 காலப்பகுதியளவில் வி.தே.பொ.மு+ (GSP+) முடிவுறவுள்ள நிலையில் ஐரோப்பாவுடனான வர்த்தகத்தையும் தொடர்பையும் சுதந்திர வர்த்தகமாக மாற்றுவதற்கான தொலை நோக்கையும் கொடைமுனைவையும் கொண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T7

## T7. வறுமை மற்றும் சமத்துவமின்மை[25]

### 1. தற்போதைய நிலை

**இலங்கையில் வறுமை வீழ்ச்சியடைந்துள்ளது.** வறுமையின் பூரண அளவீடானது இலங்கையில் வறுமை வீழ்ச்சியடைந்து வருவதை சுட்டிக்காட்டுகின்றன. 1990/91 ஆம் ஆண்டில் வறுமைக் கணக்கின் எண்ணிக்கை 26.1 சதவீதத்திலிருந்து 2012/13ல் 6.7 சதவீதமாக (படம் T7.1) குறைந்துவிட்டது என்று பண ரீதியான அளவீட்டினைப்[26] பயன்படுத்தி மக்கள் தொகை வருமானம் மற்றும் செலவு தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (HIES)[27] கண்டறிந்துள்ளது. உலக வங்கியின் பூரண அதியுயர் வறுமை அளவீடானது US டொலர் 1.90 ppp என்ற அடிப்படையில், இலங்கையின் வறுமைத் தலைமையகம் 1.9 சதவிகிதம்[28] என மதிப்பிட்டுள்ளது. (நானாயக்கார டபிள்யூ, 2017). கல்வி,[29] சுகாதாரம்[30] மற்றும் வாழ்க்கைத் தரத்தை[31] அடிப்படையாகக் கொண்ட பல்வகைப்பட்ட வறுமை குறியீட்டை (எம்.பி.ஐ) பயன்படுத்தி, வறுமை மட்டமானது இலங்கை சனத் தொகையில் சுமார் 4 வீதமாகும். எனவே, இலங்கையில் 2020 ஆம் ஆண்டளவில் வறுமை நிலை பூச்சியமாகக் கூடிய நிலை காணப்படுவதாக இவ் வறுமைக் குறிகாட்டிகள் வெளிப்படுத்துகின்றன. (படம் T7.1 - தேசிய மற்றும் துறைசார் வறுமைக் கோடுகள்).

**வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஆட்களின் எண்ணிக்கை அதிகம்.** HIES இனால் 5.3 சதவிகிதமான குடும்பங்கள் மட்டுமே ஏழைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் சமுர்தி / திவிநெகும திட்டத்தின் கீழ் 16 வீதமான குடும்பங்கள் (தேசிய திட்டமிடல் திணைக்களம், 2017) உள்ளடக்மப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், இலங்கையில் கணிசமான எண்ணிக்கையிலான மக்கள் வறுமை நிலைக்கு கிட்டியவர்களாக உள்ளனர் என்பதை நாம் கவனத்தில் கொள்கின்றோம். இலங்கையின் வறுமைக் கோடானது, 10 சதவீதத்தால் சரிசெய்யப்பட்டால், வறுமைக் கோட்டின் கீழானவர்களின் எண்ணிக்கை 9.9 சதவீதமாக அதிகரிக்கும் (கூடுதலாக

---

25 எழுத்தாளர் குழு : காமினி படுவிடகே (உபதலைவர்), உடான் பெர்னான்டோ, கே.ரொமேஷன்

26 உத்தியோகபூர்வ வறுமைக் கோடானது (OPL) குறைந்தபட்சமாக பரிந்துரைக்கப்பட்ட உணவு எரிசக்தி உட்கொள்ளலினை மற்றும் உணவு அல்லாத தேவை அடிப்படையாகக் கொண்டுள்ளது (2002 ஆம் ஆண்டில் ஒரு ஆளுக்கு ஒரு நாளுக்கு 2030 கிலோ கிலோகிராம் அடிப்படை உணவை பெறுவதற்காக செலவு செய்யப்பட்ட செலவு)

27 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களமானது வீட்டு குடும்ப வரவு மற்றும் செலவு தொடர்பான மதிப்பாய்வானது ஒவ்வொரு 3-4 வருடங்களும் இலங்கையின் எல்லா பகுதிகளிலுமுள்ள 20,000 குடும்பங்களை உள்ளடக்கி செய்யப்படுகிறது. (அண்மையில் செய்யப்பட்ட மதிப்பாய்வில் வடக்கு மற்றும் கிழக்கு மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.)

28 http://www.worldbank.org/en/country/srilanka/overview இனுள் 20 ஆம் திகதி ஜுன் மாதம் 2017 நுழைந்தமை.

29 புாடசாலை சென்ற வருடங்கள் மற்றும் பாடசாலை வரவு

30 சிசு மரணம் மற்றும் போஷாக்கு

31 நிலத்தின் தன்மை, சொத்துக்கள், நீர், மின், மலசல கூடம், சமைத்தலுக்கான எரிபொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

620,000 மக்கள்), வறுமைக் கோட்டிற்கு அண்மியதாய் உள்ளோர் அல்லது திடீர் நிலையால் (இயற்கை அல்லது வேறுவகையில்) அந்நிலைக்கு தள்ளப்படுவோர் எளிதில் வறுமை மட்டத்தினுள் உள்வாங்கப்பட முடியும் என நானயக்கார (2017) கண்டறிந்துள்ளார். மேலும், USD 3.10 (நுகர்வுத் திறன் சமநிலை) என்ற மிதமான வறுமைக் கோட்டைப் பயன்படுத்தி, மிதமான வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் விகிதம் 14.6 சதவிகிதம் என்று அவர் கண்டறிந்துள்ளார். அதோடு மட்டுமல்லாமல் பல்லுறுப்பு வறுமை நிலையானது 11.2 சதவிகிதம் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. உண்மையில், ஒரு உலக வங்கி (2015) ஆவணமானது வறுமைக் கோட்டிற்கு அருகில் உள்ள 40 சதவீதமானவர்களை கொள்கை மற்றும் திட்ட குறுக்கீடுகள் விடயத்தில் கவனத்திலெடுக்க வேண்டும் என விவாதிக்கிறது. உதாரணமாக, வளர்ச்சி மற்றும் தொழில்கள் தொடர்பில்.

**கணிசமான இடம் சார் வேறுபாடுகள்.** கருத்திலெடுக்கப்பட வேண்டிய மற்றொரு விடயம் தான் வறுமை தொடர்பிலான கணிசமானளவு வேறுபாடுகள். ஒவ்வொரு மாவட்டங்களுக்கு இடையிலும் வறுமைத் தலா வீதத்தில் பாரியளவு வித்தியாசம் காணப்படுகிறது. போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மாவட்டங்களின் வறுமைத் தலா வீதம் மிக அதிகம் என இறுதி HIES இல் (2012/13) அறிக்கையிடப்பட்டுள்ளது. முக்கியமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் முல்லைத்தீவு மாவட்டம் (28.8 சதவீதம்), மன்னார் (20.1 சதவீதம்), மட்டக்களப்பு (19.4 சதவீதம்) மற்றும் கிளிநொச்சி (12.7 சதவீதம்) போன்ற மாவட்டங்களில் அதிகளவில் வறுமை வீதம் மதிப்பிடப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தவிர மொனராகலை (20.8 சதவீதம்), மற்றும் பதுளை (12.3 சதவீதம்) போன்ற மாவட்டங்களிலும் அதிகளவில் வறுமை வீதம் மதிப்பிடப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் தான் ஆகக் குறைந்த வறுமை வீதம் (1.4 சதவீதம்) மதிப்பிடப்பட்டுள்ளது. (படம் T7.2 பார்க்க.

வறுமைத் தலா வீதத்துக்கு மேலதிகமாக வறுமையில் உள்ளோரின் எண்ணிக்கையையும் கருத்திலெடுத்தல் அவசியமாகும். மேற்குறிப்பிட்டவாறு, கொழும்பு மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தான் ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய வறுமைத் தலா வீதம் மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், கொழும்பில் முல்லைத் தீவை விட அதிகளவிலான மக்கள் சனத் தொகை காணப்படுவதால் அங்கு வறுமையில் இருக்கும் மக்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாகும். இரத்தினபுரி மாவட்டத்தில் தான் வறுமையில் உள்ள மக்கள் அதிகளவில் காணப்படுகின்றனர். அதற்கு அடுத்த நிலையில் காலி, குருணாகலை, மட்டக்களப்பு மற்றும் பதுளை போன்ற மாவட்டங்கள் காணப்படுகின்றன. (ஒவ்வொன்றிலும் கிட்டத்தட்ட 100,000 வறுமைக்குட்பட்ட நபர்கள் உள்ளனர்.)

இலங்கையின் மாவட்டங்களில் வறுமையின் தலா எண்ணிக்கை மாற்றம் மற்றும் நுகர்வு வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்களவு மாற்றம் காணப்படுவதாக வறுமைக் கணக்கீட்டின் வளர்ச்சி நெகிழ்ச்சியானது[32] மதிப்பிடுகிறது.(அட்டவணை 1 ஐக் காண்க). பெரும்பான்மையான மாவட்டங்களில் வறுமை நிலைமையானது 2009/10 மற்றும் 2012/13 க்கு இடையில் வீழ்ச்சியை வெளிக்காட்டியுள்ளது. எனினும், அனுராதபுரம், மொனராகலை, பொலன்னறுவை மற்றும் வவுனியா[33] ஆகிய மாவட்டங்களில் வறுமை லை அதிகரித்துள்ளது. இதேபோல், பெரும்பான்மையான மாவட்டங்களில், சராசரி தனிநபர் நுகர்வானது 2009/10 மற்றும் 2012/13 இடையே வறுமை மட்டம் குறைந்து மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப அதிகரித்துள்ளது.

---

32 சராசரி தனிநபர் வருமானத்தின் வீதமானது வறுமை அளவீட்டின் வீதத்துடன் வீழ்ச்சியடைந்துள்ளது.

33 2009/.10 ர்ஐநுளு தரவு மதிப்பீட்டின் போது, வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்கள் தொடர்பிலான தரவுகளை பாதியளவில் அல்லது முழுமையாக தரவுகள் சேகரிக்க முடியாமையினால் ஒப்பீடு செய்ய முடியாதுள்ளது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறாயினும், அநுராதபுரம் மற்றும் மொனராகலையில், உண்மையான சராசரி தனிநபர் நுகர்வானது வீழ்ச்சியடைந்துள்ளது என்பது கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். இதேபோல், வட மாகாணங்களில், மத்திய மாகாணத்தில் நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டம், ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டம் ஆகியவற்றுடன் இணைந்து பல மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை பல்குறிகாட்டி வறுமைக் குறியீடு காட்டுகிறது.

2009/10 மற்றும் 2012/13 ஆகியவற்றின் HIES மதிப்பாய்வானது வறுமைத் தலா வீதம் அதிகமாயுள்ள எஸ்டேட் சமூகத்தின் வறுமை மட்டம் வீழ்ச்சியடைந்ததைக் காட்டினாலும், இன்னும் நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளுடன் ஒப்பிடும்போது வறுமைத் தலா வீதமானது உயர் அளவில் (10.9%) காணப்படுகிறது. வறுமை என்பது பன்மைத்துவமானது மற்றும் வருமானம் சார் வறுமைக்கும் மேலதிகமாக எஸ்டேட் சமூமானது வீட்டுத் தரம், நீர் தரம் மற்றும் கல்வி ஆகியவற்றில் பிற சமூகங்களை விட பின்தங்கியுள்ளது (அட்டவணை 2 ஐப் பார்க்கவும்).

**வறுமை சிக்கலானது.** எவ்வாறாயினும், எந்தத் தனிப்பட்ட குறிகாட்டியோ அல்லது அணுகுமுறையோ இச்சிக்கலான நிலையின் அனைத்து பரிமாணங்களையும் கைப்பற்ற முடியாது எனவும் வறுமையானது வருமானம் மற்றும் அடிப்படை சேவைகளுக்கும் அப்பாற்பட்டது என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும்.உதாரணமாக, வேலைவாய்ப்பு / வருமானம் மூலம் நிதிப் பற்றாக்குறை குறைந்தாலும், முறையான துறையில் உள்ளவர்களிடையே கூட ஏற்படும் பாதிப்பை குறைக்காது. உதாரணமாக, சாதாரண தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களின் குறைவான வருமானமானது, தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் அதிக அளவிலான ஊட்டச்சத்தின்மைக்கு காரணமாகிறது (ஜெயவர்த்தனா, 2012). இலங்கையின் முறைசாரா பொருளாதாரம் 60 சதவிகிதம் (கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரம் திணைக்களம், 2016, ப 34) மிக மிகக் குறைவானதாகும் உயர் நிலையில் இருந்தாலும். அவர்களில் மிகக் குறைந்த சதவீதத்தினர் மட்டுமே நிரந்தர பதவி வகிப்பவர்கள் (குணசேகர, 2015). இந்த தொழில் நிச்சயமற்ற தன்மையானது முறைசாரா பொருளாதாரத்தில் உள்ள குடும்பங்களில் வருமானம் ஈட்டுபவர்களில் பெரும்பான்மையானோர் ஊழியர்களாக அல்லது சுய தொழில் செய்வோராக இருக்கும் நிலையில் அதிகளவான பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இத் தொழில் நிச்சயமற்ற தன்மைக்கு மேலதிகமாக சமூக பாதுகாப்பு இன்மை எனும் விடயமும் அவதானிக்கப்பட்டது (அதாவது ஊழியர் சேமலாப நிதியம்), தொழிலை இழந்தால் சேமிப்பு இல்லை, ஓய்வூதியம் தொடர்பில் முறையான திட்டங்கள் இல்லை (சஞ்சீவனி, சில்வா, மற்றும் ஷிவகுமாரன், 2012) ஆகியவை அடங்கும்).

உள்ளூர் பொருளாதாரம், வளங்கள் / சொத்துக்கள், தொழிலாளர்களின் கல்வி அடைவுமட்டம் மற்றும் காலநிலை என்பனவருவாய் அல்லது தொழிலின் ஸ்தீரத்தன்மையில் தாக்கம் செலுத்துகிறது. இன்னுமும் முன்னேற்றமடையாத நிலையில் உள்ள வடக்கு மாகாணத்தின் குறைந்தளவில் கல்வி மட்டத்தை அடைந்துள்ள குடும்பங்கள் பெரும்பாலும் காலநிலையில் தங்கியிருக்கக் கூடிய துறைகளான ஒழுங்கு நிரந்தரமற்ற வருமானத்தை ஈட்டக் கூடிய வேளாண்மை மற்றும் கடற் தொழிலில் தான் தங்கியுள்ளது. (ரோமேசுன், குணசேகர, மற்றும் முனாஸ், 2014). சாகுபடி மற்றும் விவசாய நடவடிக்கைகளில் தங்கியுள்ள மொனராகலை விவசாயிகளுக்கு உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கு நீர்பாசன வசதியின்மையானது இம்மாவட்டத்தில் அதிக வறுமை நிலை காணப்படவதற்கு காரணமாய் அமைகிறது. (அமரசிங்க, சமாத் மற்றும் அன்பாஸ், 2005, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரம், உலக உணவு திட்டம், 2005). வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் கிராமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பில் ஆய்வு செய்த வறுமைப் பகுப்பாய்வு மத்திய நிலையமானது பின்வருமாறு சிபாரிசு செய்கிறத. அதாவது, எமது குடும்பங்களின் சொத்துக்கள் (உதாரணமாக வீட்டின் தன்மை, அசையக் கூடிய சொத்துக்கள்) என்பன முன்னேற்றமடைந்துள்ளது. ஆனால், உண்மையில் வருமானத்தில் தங்கியிருக்க கூடியவர்கள் போர் மூலம் பாதிக்கப்பட்ட மற்றும் வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தவர்களும் உள்ளடங்களாக, அரச தொழில் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். ஆகவே தொழில் உருவாக்கமானது சேவையிலேயே உள்ளது. மேலும், மேல் மாகாணத்துக்கு வெளியில் உள்ள உற்பத்தித் துறைகள் இன்னும் மெருகூட்டப்பட வேண்டும்.

**வறுமை மற்றும் அழிவுகள்.** இலங்கையானது பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகங் கொடுக்க கூடிய நிலை காணப்படுகிறது. மேலும் இலங்கையானது அதிக அடுக்கு நிகழ்வுடைய குறைந்த தீவிரத்தன்மையுடைய அல்லது குறைந்த அடுக்கு நிகழ்வுடைய அதிக தீவிரத்தன்மையுடைய அனர்த்தங்களைச் சந்தித்துள்ளது. இவ்வனர்த்தங்கள் வெள்ளம், சூறாவளி, மண்சரிவுகள், தொற்று நோய்கள், யானை மற்றும் மனிதர்களுக்கிடையான மோதல்கள் என்பவற்றை உள்ளடக்கும். அமெரிக்க டொலர் 380 மில்லியன்கள் வருடாந்தம் பேரழிவுகள் காரணமாக இழக்கப்பட்டு வருவதாகவும், வெள்ளம் தொடர்பான இழப்பு ஆண்டுதோறும் 240 மில்லியன் அமெரிக்க டாலர்கள் என உலக வங்கியின் ஆய்வில் மதிப்பிடப்படுகிறது (உலக வங்கி, 2015, பக்கம் 120)

பேரழிவுகள் மற்றும் அதிர்வுகள் வறுமை ஒழிப்பினை பாதிக்கும். பல நாடுகளிலிருந்தான சான்றுகளின் படி, பேரழிவு, ஒழுங்குமுறையான, தலைமுறை ரீதியில் மற்றும் நீண்டகால வறுமை நிலையினை அதிகரிப்பதுடன் அதிலிருந்து மீள வருவதற்கு பல வருடங்கள் எடுக்கக் கூடிய நிலை காணப்படுகிறது. (அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, 2017, பக்கம் 193). அதிகளவில் பாதிக்கப்பட்ட சமூகங்கள் வெள்ளம் அல்லது வறட்சி ஆகியவை ஆண்டுதோறும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதையும், இத்தகைய அடுக்கு நிகழ்வுடைய பேரழிவுகள் வறிய மக்களுடைய நீண்டகால நிலைத்தன்மையின் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு (2017) தெரிவித்துள்ளது.

மிகவும் பாதிக்கப்படும் ஒரு சமூகம் விவசாய சமூகமாகும். தேசிய பொருளாதாரத்தில் விவசாயத்துறையின் பங்களிப்பு பெருமளவில் குறைந்து வருகிறது (மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2016 ல் 7.5 சதவீதமாக), அதே நேரத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவு தொழிலாளர்கள் (2015 ல் 28.7%[34]) தொடர்ந்து இத் துறையில் ஈடுபடுகின்றனர். இவ்வினைத்திறன் சார் பிணக்குகள் ஏனைய துறைகளை விட விவசாய துறையில் ஈடுபட்டுள்ளோரின் உயர் வறுமை மட்டத்துக்கு இட்டுச் செல்லத்தக்க பங்களிக்கும் காரணியாக உள்ளது. விவசாயமானது காலநிலையுடன் தொடர்புடைய துறையாகும் மேலும், காலநிலை தொடர்பான அனர்த்தங்கள் விவசாய உற்பத்தியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகிறது. அடுக்கு நிகழ்வுடைய இயற்கை அழிவுகள் (உதாரணமாக, வெள்ளங்கள், மண்சரிவுகள் மற்றும் வறட்சி) என்பன விவசாய உற்பத்தியில் முக்கியமாக பருவகால விவசாய, மீன் வளர்ப்பு, விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் கால்நடைகள் வளர்ப்பு என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்துவதுடன், இம்மக்களின் உணவு தொடர்பான பாதுகாப்பினையும் குறைக்கிறது. (அனர்தத் முகாமைத்துவ அமைச்சு, 2017 பக்கம் 77).

34 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். (2016). இலங்கை தொழிலாளர் படை மதிப்பாய்வு – 2015. கொழும்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வறுமை மற்றும் அடிமையாதல்.** இலங்கையில் உள்ள மதுபானங்கள் சட்டவிரோத பானங்கள் உள்ளடங்கலான பானங்கள் இலங்கையின் வறுமை மட்டம் தொடர்பில் நேரடி தொடர்பு கொண்டதாக காணப்படுவதாக மதிப்பாய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இலங்கையில் மதுபான பாவனையாளர்கள் சராசரியாக 33 தொடக்கம் 39 சதவீதம்[35] என மதிப்பாய்வுகளைச் செய்த பல ஆய்வாளர்கள், அமைப்புகள் குறிப்பிடுகின்றது. (சோமதுங்கே, ரத்னாயக, விஜேசிங்க, யாப்பா, குரே, 2014) (ADIC,2015) மற்றும் பகையிலை பாவிப்போரின் எண்ணிக்கை 31 சதவிகிதமாகும் (ADIC, 2015). பாக்லியன் மற்றும் சமரசிங்கவின் (2004) மதிப்பாய்வின் படி தினசரி மதுபானம் அருந்தும் நபர்களில் 60 சதவீதமானோர் பிரத்தியேகமாக கசிப்பு அருந்துவர்களாக உள்ளனர். சட்ட விரோத பானங்களை உட்கொள்வதானது குடும்பத்தின் வறுமை நிலையை 2-3 சதவீதத்தில் அதிகரிக்கக் கூடியதாக குறிப்பிடப்படுகிறது. மதுபான உட்கொள்ளலின் போது உண்மையில் வறுமைக் கோட்டுக்கு கீழ் இல்லாத ஆனால் வறுமைக் கோட்டுக்கு சிறிதளவு அப்பாற்பட்டோர் என வகைப்படுத்தப்பட்டோர் இவ்விடயத்தில் வறுமைக்குட்பட்டோர் போலவே அவர்களின் நடத்தை இருக்கும். (ஜெயதிலக, செல்வநாதன் மற்றும் பண்டாரலகே, 2015). மேலும் 7 சதவீதமான ஆண்கள் தமத வருமானத்தை விட மதுபானத்திற்கான செலவு அதிகமாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். (பாக்லியன் மற்றும் சமரசிங்க 2004). ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு அண்மியதாய் உள்ள மக்களுக்கான அடிமையாதல் தொடர்பான உரையாடல்கள் வறுமை ஒழிப்பத் திட்டங்களுடன் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும்.

**நீதித்துறை.** 2016 செப்டெம்பர் மாதத்தின் படி, ஏறத்தாள 745,000 வழக்குகள் இலங்கைச் சட்ட முறைமையின் கீழ் முடிவுறாது உள்ளது. (நீதி அமைச்சு 2017) மேலும் நீதவான் நீதி மன்றத்தில்[36] ( மொத்த வழக்குகளில் 72 சதவீதமானவை) மற்றும் மாவட்ட நீதிமன்றத்தில[37] ( மொத்த வழக்குகளில் 23 சதவீதமானவை) பாரியளவான வழக்குகள் நிலுவையில் உள்ளது. இலங்கையின் சட்ட முறைமை பற்றிய உலக வங்கியின் (2013) மீளாய்வின் படி, 91 சதவீதமான குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் 70 சதவீதமான சிவில் வழக்குகள் 5 வருடங்களுக்குள் முடிவடைவதாக குறிப்பிடுகிறது. மேலும் 5 வருடங்களுக்கு மேலதிகமாக நீதி மன்றத்தில் தேங்கியிருக்கும் வழக்குகள் பெரும்பாலும் பிரிவிடல் வழக்குகள் மற்றும் பணம் தொடர்பான வழக்குகளாகும்.

இவ்வாறுத நீண்ட காலமெடுத்தலானது சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்த முடியாமை (நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு 2010) மேலும் இது பாதிக்கப்பட்ட சட்டத்தினூடாக நீதியை வேண்டி நிற்கும் மக்களை அதைரியப்படுத்துவதாகவும் அமையும். வியாபார நோக்கங்கள் பற்றிய இக்கால நீடிப்பைக் குறைப்பதற்கான திருத்தங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. (நிதி அமைச்சு 2016 பக்கம் 30-32), மேலும் ஏழை மக்கள் சட்ட நிவாரணங்களை அணுகக் கூடிய வகையில், சட்ட முறைமையின் ஏனைய பாகங்களுக்கும் அதே அளவான கவனம் தேவைப்படுகிறது.

---

35 69.6% ஆண்களும் 26.5% பெண்களும் அவர்களில் வாழ்நாயில் ஒரு முறையாவது மதுபானம் உட்கொண்டிருப்பதாக மதிப்பாய்வு குறிப்பிடுகிறது. 54.5மூ ஆண்களும் 7.6மூ பெண்களும் மதிப்பாய்வு செய்வதற்கு முன்னைய 12 மாதத்திற்குள் மதுபானம் உட்கொண்டிருக்கிறார்கள். 37.5மூ ஆண்களும் 2.4மூ பெண்களும் மதிப்பாய்வு செய்வதற்கு முன்னைய 30 நாட்களுக்குள் மதுபானம் உட்கொண்டிருக்கிறார்கள். மேலும் 5.4மூ ஆண்கள் ஒரு நாளில் 5 தடவைக்கும் மேல் மதுபானம் உட்கொள்வதாக தெரிவிக்கின்றனர். (சோமதுங்க, ரத்னாயக்க, விஜேசிங்க, யாபா மற்றும் குரே 2014) குடும்ப நல உத்தியோகத்தர்களின் மதிப்பாய்வின் படி மதுபானம் அருந்தும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகும்.

36 குற்றவியற் தன்மையிலான வழக்குகள்

37 சிவில் தன்மையிலான வழக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருமான சமத்துவமின்மை அதிகம்.**

இலங்கையின் சராசரி வீட்டு வருமானத்தின் கீனி குணகம் 0.48[38] ஆகும், இது வருமான சமத்துவமின்மை அதிகமாக உள்ளது என்பதற்கான அறிகுறியாகும். இந்த வருமான சமத்துவமின்மை இலங்கையில் சுதந்திரம் பெற்றதிலிருந்து (Isenman, 1980, பக். 247, ரட்னாயக்க, 2013, பக்கம் 7) ஆண்டுக்காண்டு மிகக் குறைவான மாற்றங்களுடன் தொடர்ந்தும் உள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கான இந்த புள்ளிவிவரமானது மக்களிடையே பகிரப்பட்ட விடயமல்ல. (படம் T7.3). (error! reference source not found)

**சமத்துவமின்மையானது ஏழைகள் சேவைகளை அணுகுவதிலிருந்து தடுக்கிறது.** அபிவிருத்தி இலக்கியத்தின் அடிப்படையில், சுகாதாரம் மற்றும் கல்வியானது அரசாங்கத்தினால் வழங்கப்பட வேண்டும் எனும் உலகளாவிய ரீதியிலான ஏற்பாடானது இலங்கையில் மானிட அபிவிருத்தி குறிகாட்டி உயர்வாய் உள்ளதற்கு முக்கிய காரணியாக அமைகிறது. உயர் கல்வியின் ஈடுபட்டதன் பிற்பாடு இலங்கையில் அநேக குடும்பங்களின் வருமானம் அதிகரிக்கின்றது. மேலும் உயர்கல்வி மூலம் வறுமை நிலையானது வீழ்ச்சி அடைவதாக குறிப்பிடப்படுகிறது. (படம் T 7.4 பார்க்க) சாதாரண தர தகைமையுடன் இருப்பவர்கள் தான் பெரும்பாலும் முறைசாரா துறையில் ஈடுபடுபவர்களாகவும் (தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். 2016) இத் தற்காலிகமான தொழில்கள் அவர்களின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.

இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் ஏழைக் குடும்பங்கள் கல்வி போன்ற அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைகளிலிருந்து நன்மைகள் பெறுவதை தடுக்கின்றன. ஏழை சமூகங்களின் அணுக முடியாமை மற்றும் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படும் கல்வி மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றில் ஏழ்மையான விளைவுகளை கொண்டிருப்பது என்பன இதற்கு சான்றாக அமைகிறது. ஏழ்மையான குடும்பங்களின் கல்வி அடைவு பலவீனமாக உள்ளது மற்றும் பணக்கார குடும்பங்கள் இலவச கல்வியில் இருந்து பயனடைய வாய்ப்புள்ளது என்று HIES ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (error! reference source not found ஐ பார்க்கவும்). ஜாதி தொடர்பான பிரச்சினைகள் பொதுவான கல்வியை அணுகுவதற்கு தடை விதிக்கிறது இதன் விளைவாக சாதி படிநிலையில் (லால், 2016) குறைவாக உள்ள குடும்பங்களின் குழந்தைகளுக்கு குறைந்த அளவிலான கல்வி வாய்ப்புகள் தான் உள்ளன. ஏழைக் குடும்பங்களின் குழந்தைகள் கூட தங்கள் கல்விக்கு ஏழைத் தொடக்கத்தை வைத்திருக்கிறார்கள். வெளிநாடுகளில் உள்ள ஆய்வுகள் ஒரு குழந்தைக்குப் பின்னரான கல்வி அடைவுக்கு பாலர் கல்வி முக்கியம் என்பதைக் சுட்டிக் காட்டுகின்றன (எஷெ்டு, 2015 பார்னெட், 2008 குட்மேன் மற்றும் சியன்ஸி, 2005 ரேய்னால்ட்ஸ் மற்றும் ஓ, 2004). வசதியான குடும்பங்களில் இருக்கும் 3-4 வயதிற்குள் உள்ள குழந்தைகளுக்கு ஏழை குடும்பங்களின் குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் பாலர் பள்ளியில் சேர வாய்ப்பு அதிகம் உள்ளதாக உலக வங்கி அறிக்கை (2014) கூறுகிறது. ஏழைக் குடும்பங்களின் குழந்தைகள் தங்கள் கல்விக்கு ஒரு ஏழைத் தொடக்கத்தையே அதிகமாகக் கொண்டுள்ளனர். சுகாதாரம் தொடர்பில், நானயக்காரவின் ஆய்வின் படி (2013), சுகாதார வசதிகள் ஆட்புல எல்லைக்குள் கிட்டுகின்றதாக இருந்தாலும், தொற்றக் கூடிய நோய்களின் அதிகரித்த நோய்த் தாக்கம் அல்லது குடும்பத் தலையாளி இயலாமையில் உள்ளமை , ஊட்டச் சத்து குறையாடு காரணமாக நீடிக்கக் கூடிய நோய்கள் இழப்புக்களை ஏற்படுத்துகிறது. இதனால் கல்வி மற்றும் ஆரோக்கியம் என்பன உள்ளடங்கிய கொள்கைகள்

38 தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம். (2015). குடும்ப வருமான செலவு மதிப்பாய்வு – 2012/13. கொழும்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தொடக்கத்தை தான் அளிக்கின்றன, ஆனாலும் எவரையும் பின்தங்கிய நிலையில் விடாதிருக்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**குடும்பங்கள் மற்றும் குழுக்கள் ஏழைகளாக அல்லது வறுமைக் கோட்டுக்கு அண்மிய குடும்பங்களாக அடையாளப்படுத்தப் படுகின்றன.** HIES ஆனது வறுமையின் போக்கு மற்றும் சனத்தொகையில் எம் மக்கள் ஏழைகளாக உள்ளனர் எனும் புரிந்துணர்வு மற்றும் அவர்கள் வழமையாக வசிக்குமிடம் என்பவை தொடர்பில் முன்னைய அத்தியாயங்களில் பெறுமதிமிக்க தகவ்களை வழங்கியுள்ளது. HIES இன் அடிப்படையிலான இசைவான(நிலைத்தன்மையான) அறிக்கைகளில் (நானயக்கார 2013; குணவர்தன 2007; உலக வங்கி 2016) கண்டறியப்பட்ட இலங்கையின் சனத்தொகையில் பல எண்ணிக்கையான குழுக்கள் ஏழைகளாக உள்ளனர் எனக் குறிப்பிடுகிறது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது

- ஏழைகள் அல்லது வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஏழைகள் (கீழுள்ள 40 சதவீதமானோர்) கிராய புறத்தைச் சேர்ந்தோராகவும், அளவுக்கதிகமான இளைஞர்கள் வினைத்திறனாக சம்பாதிக்கக் கூடிய வாய்ப்புக்களிலிருந்து தொடர்பற்றோராக இருத்தல்.
- குறைந்த கல்வித் தகைமை மற்றும் அவர்களின் குழந்தைகள் கூட மிகக் குறைந்தளவிலேயே இரண்டாம் நிலைக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வி வாய்ப்பினை அடைகின்றனர். [15] (இரண்டாம் நிலைப் பாடசாலை வரவு (87 சதவீதம்) முழுமையாக நிறைவு செய்தோர் (53 சதவீதம்)
- தொழிலில் ஈடுபடுவது குறைவு
- அதிகளவானோர் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர்.
- மேல் நிலையில் உள்ள 60 சதவீதமானோரின் வருமானம் மற்றும் நுகர்வு ஆகியவற்றின் வளர்ச்சியைக் காட்டிலும் வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஏழைகள் சிறிதளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர்.
- வினைத்திறனான சொத்துக்களின் உரித்துரிமையை கொண்டிருப்பதில் மிகப்பின்தங்கிய நிலை.
- 2002 இலிருந்து அடிப்படைச் சேவைகளை அணுகுவதில் சிறிதளவு முன்னேற்றம்.
- கடன் சந்தைகளுக்கு குறைந்தளவிலேயே அணுகக் கூடிய நிலை காணப்படுகிறது.
- வருமானம் மற்றும் நுகர்வு சமத்துவமின்மையானது சுகாதாரம் மற்றும் கல்விச் சேவைகளுடன் தொடர்புடையதாகவே உள்ளது.

  அடிப்படை வீட்டு உட்கட்டமைப்பினை அணுகுதலிலும் (நிலையான வீட்டுக் கட்டமைப்பு – 77 சதவீதம்) சுகாதாரம், போசாக்கு விளைவுகள் என்பவற்றிலும் சமத்துவமின்மை இருப்பதாகத் தெரிகிறது. ( இரும்புச் சத்துடன் கூடிய உணவு வகைகளை அணுகுதல் (51 சதவீதம்) மற்றும் குறை வளர்ச்சி வீதமும் 19 சதவீதமாகக் காணப்படுகிறது,)

உயர் தற்கொலை வீதம், பாடசாலை மாணவர்களின் வாழ்க்கையினுள் போதைப் பொருளை உட்செலுத்தல் , அதிகளவான குற்றச் செயல்கள், அரசியலில், இன மத விடயங்களில் அதிகப் பிரிவினைகள் காணப்படுவதால் தேசிய பிரச்சினைகளில் ஒருமித்த முடிவு எடுத்தலுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாகக் காணப்படல், எமது சமூகத்தின் கீழ் மட்டத்தில் உள்ள 40


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான வறுமை நிலை ஏமாற்றத்தின் காரணமாக வருமானத்தையும் வாய்ப்புக்களையும் மறுக்கும் இளைஞர்களாலேயே ஏற்படுகின்றது. வறுமையாலான மறை விளைவுகளும், சமத்துவமின்மையும் வளர்ச்சி மற்றும் பங்கிடலில் ஏற்படுத்தும் சமூக மற்றும் பொருளாதார ரீதியான எதிர்மறை பிணிப்புக்களுடனான பாதிப்பானது மாத்த சனத்தொகையினராலும் உணரப்படுகிறது.

## 2. தீவிரமான பிரச்சினைகள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள்

### 2.1. தற்போதைய நிலை, பிரச்சினைகள்

- ஏழைகள் மற்றும் ஒதுக்கப்பட்ட குழுக்கள் தொழிலில் ஈடுபட்டுள்ள துறைகள் வளர்ச்சியடையாமை.
- ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஏழைகள் பலனடையக் கூடிய வண்ணம் துறைகள் மற்றும் இடங்களை வினைத்திறனான முறையில் முன்னேற்றுவது தொடர்பில் முறையான கொள்கை வழிகாட்டிகள் இன்மை.
- மூலதனம், உற்பத்தி திறனை அதிகரிக்கும் தொழிநுட்பம் , சந்தைகள் மற்றும் வலையமைப்பு போன்றவற்றை அணுகும் வாய்ப்புக்கள் ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஏழைகளுக்கு குறைவு.
- சனத்தொகையில் கீழ் மட்டத்தில் உள்ள 40 சதவீதமான மக்கள் பொருளாதார, சமூக உட்கட்டமைப்புக்களை அணுகுவதில் குறைந்த வாய்ப்புக்களையே கொண்டுள்ளனர். மேலும், நவீன பொறிமுறைகளை உள்வாங்குதலில் அவர்களுக்கு அதிக சந்தர்ப்பச் செலவுகளுள்ளன.
- ஏழைகள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு அண்மிய ஏழைகளின் வாழ்க்கையில் வருடாந்தம் ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தங்கள் பாரிய மறை விளைவை உண்டாக்குகின்றது.
- போதிய சமூக பாதுகாப்பற்ற உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நீடித்த கால நோய்வாய்ப்பாட்டுள்ளவர்கள் வீட்டினுள் முடக்கப்பட்டு, அக்குடும்பத்தின் வறுமை நிலையை மேலும் சிக்கலுக்குள்ளாக்குகின்றனர்.
- ஏழைக் குழுக்கள் தங்கள் சொந்த வளங்களை நிர்வகிக்கவும், அரசாங்கத்துடனும் தனியார் துறையுடனும் பங்கு பெறவும், இன்னும் அதிக உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளை கடைப்பிடித்து சந்தை சக்திகளை சமாளிக்கவும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பொறுப்புள்ள பொருளாதார மற்றும் சமூக நிறுவனங்கள் என போதியளவில் ஒழுங்கமைக்கப்படாமை.
- தனிப்பட்ட குடும்ப அலகுகள் தேவையான மூலதன பங்களிப்பினை முறையான வலையமைப்பின்றி, அபாயங்கள் கொண்ட முதலீட்டு முடிவுகளை எடுக்கத்தக்க வலுவான பொருளாதார அலகுகள் அல்ல.
- பங்குதாரர்களுக்கான பரஸ்பர நன்மைகள் தொடர்பிலான மக்கள் தொடர்பு துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதன் மூலம் நுண் பொருளாதார முறைமையிலுள்ள பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் மீது கவனம் செலுத்தாமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2.2. பிரச்சனையின் சாத்தியமான தாக்கங்கள் மற்றும் விளைவுகள்

ஆழ் வேறூன்றிய பிரச்சினைகளிலிருந்து உருவாகும் தீவிரமான சிக்கல்கள் பொருளாதாரம், சமூகம் மற்றும் சூழலில் கணிசமானளவு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும் தனிப்பட்ட குடும்பங்கள் என்ற வகையில் தாக்கம் செலுத்த, கவனத்தை ஈர்க்க மற்றும் நியாயமான மற்றும் முறையான வருமானத்தை ஈட்டித் தரக் கூடிய தேவையான வளங்களைப் பாதுகாக்க இயலாமையிலுள்ள 40 சதவீதமான மக்கள் தொகையினரின் விரக்தி நிலையானது நாளுக்கு நாள் அரசியல் மற்றும் சமூக கட்டமைப்பினை தளம்பல் நிலைக்கு இட்டுச் செல்லும்.

மாற்றங்களற்ற மற்றும் தயார் நிலையில் இல்லாத விரச்சினைகளை வினைத்திறனான முறையில் முன்வைக்காத அழுத்தக் குழுக்கள் மற்றும் முகவராண்மைகள் மூலம் கோரிக்கைகளை சமாதானப்படுத்தும் வகையில் கையேடுகளை வழங்கும் செலவானது அதன் விளைவுகளை விட அதிகமானதாகவே இருக்கும். மேலும் அது சமூகத்தை பிளவுபடுத்தி தேவையற்ற பிரச்சினைகளில் இட்டுச் செல்லும். பின்வருவன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

- சிக்கல்களின் ஒட்டுமொத்த விளைவுகளும் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு சந்தை பங்குகளுக்கான போட்டியில் உற்பத்தித் துறையை தோல்வியடையச் செய்யும் மேலும் ஏகபோக அல்லது நேர்மையற்ற சக்திகள் ஒரு சிலருக்கு மட்டும் பயனளிக்க அனுமதிக்கும் விடயங்கள் தொடர்பில் தாமதமான கவனம்.

- முயற்சியாண்மைத் திறமையுடைய பெண்கள், இளைஞர்கள், வளர்ந்தவர்கள் செல்வத்தை உற்பத்தி செய்யும் உற்பத்திச் செயல்களில் இருந்து விலகி, நலன்புரி அல்லது சமூக ரீதியான எதிர்மறையான வழிகளில் வாழ்கின்றனர். இத்தகைய வழிவகையானது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தல் வளப் பாதுகாப்பு அளவீடுகளில் கவனமின்மை உள்ளீடுகள் மற்றும் கழிவுகளை நிர்வகிப்பதற்கான திறனை இழத்தல் ஆகியவற்றில் இட்டுச் செல்கிறது.

- உற்பத்தி மற்றும் பாரிய மக்கற் தொகையின் தேவைகளைப் பூர்தத்தி செய்யும் வண்ணம் நுகர்வின் அளவினை அதிகரிப்பதற்கு வினைத்திறனான மற்றும் விளைவாந்தன்மை மிக்க வள ஒதுக்கீட்டானது அவசியம்.

- பல்வேறு அரசியல் மற்றும் சமூக குழுக்களுக்கிடையிலான போட்டிகள் அரசாங்கத்தில் வினைத் திறனாக ஈடுபடக் கூடிய பிரஜையின் ஈடுபாட்டை முறியடித்து, ஊக்கமிழக்கச் செய்யும்.

- ஊக்கமளிக்கக் கூடிய நிலையான நெறிமுறைகளை புறக்கணித்து சமத்துவமின்மையை அதிகரிக்கும்.

## 2.3 நிவாரணங்கள், அளவீடுகள் மற்றும் அமுல்படுத்தல்.

நிலையான வளர்ச்சிக்கான அவசியமான தற்போதைய தலைமுறை மற்றும் வருங்கால சந்ததியினரின் நலனுக்காக இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டிய கடப்பாடு இருப்பதுடன், வளர்ச்சிக்காக வளங்களை விவேகமான முறையில் பயன்படுத்துவதை அதைரியப் படுத்தாது இருத்தல் வேண்டும். இது மக்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்திங்களில் மனிதகுலத்திற்கும் சுற்றுச்சூழலும் தோழமையான நடைமுறைகளை மேற்கொள்ளுமாறு அழைப்பு விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டம் மற்றும் ஒழுங்குமுறையானது சமுதாயத்தின் முக்கிய மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளை உள்ளடக்கிய சட்டத்தை உருவாக்குதல் மூலம் மக்களை உற்பத்தி மற்றும் நுகர்வு நடைமுறைகளை திறம்படச் செய்ய அணிதிரட்டப்படலாம். பின்வரும் பரிந்துரைகள் முதலீட்டிற்கான தேவையான நிலையான வறுமைக் குறைப்பிற்கான செயற்பாட்டு கலவையை உருவாக்கும்.

- தேவையான கட்டமைப்பு மாற்றங்களுக்கேற்ப புதுமையான வழிமுறைகளில் முதலீட்டிற்கான சுற்றுச்சூழலுக்கான சூழலைச் செயல்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக மேக்ரோ பொருளாதார சிக்கல்களைக் கூறும் போது, அத்தகைய கொள்கைகள் மைக்ரோ பொருளாதாரம் முழுவதுமான வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

  **2030க்கான நோக்கு: அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மெக்ரோ பொருளாதாரக் கொள்கைகள் நுண்ணிய மட்டத்தில் உள்ளாதான வளர்ச்சியை ஊக்குவிக்கும் உத்திகள் பற்றிய பிணிப்புக்களை பிரதிபலிக்கின்றன.**

  **விளைவுகளின் சுட்டிகள்: நிலையான வழிமுறைகளினூடான பாரியளவான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு உயர் சம்பளம், மற்றும் நுகர்வுத் திறனுடனான நேரடியாக பயனடையச் செய்யும் வகையில் துறைகளை வளர்ச்சி அடையச் செய்தல்.**

- பிரதேச செயலகங்களை திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைத்தல் அலகாகவும் அப் பிரதேசங்களின் நிலையான உற்பத்தி, நுகர்வு மற்றும் பாதுகாப்பு போன்றவற்றின் முதலீட்டிற்கான அபிவிருத்திக்கு பொது, தனியார் மற்றும் மக்கள் துறை பங்குதாரர்களை ஈடுபடுத்தும் மாகாண மற்றும் தேசிய மூலோபாயத்திற்கு ஏற்ப இடையீடாகவும் ஒழுங்கமைத்தல்.

  **2030க்கான நோக்கு:** பிரதேச மற்றும் மாகாண அரசாங்க அபிவிருத்தி நிர்வாகக் கட்டமைப்பானது அவர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதேசங்களின் மெக்ரோ பொருளாதாரத்தை வினைத்திறனாக மேம்படுத்தும் நோக்கில் சமூக பொருளாதார இடையீடுகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை தம்வசம் எடுத்து மீளகட்டமைத்தல்.

  **விளைவுகளின் சுட்டிகள்:** பிரதேச மற்றும் மாகாண மட்டங்களில் நிலையான உள்ளக நுண் பொருளாதார அபிவிருத்தி இடையீடுகள் மீதான முடிவெடுத்தல் மற்றும் கண்காணிப்பிற்கென ஏற்கப்பட்ட நடபடிமுறைகளை பரவலாக்கம் செய்தல்.

- 2030 ஆம் ஆண்டளவில் இலங்கையை வறுமையற்ற நாடாக மாற்றும் தேசிய இலக்கினை அடையும் பொருட்டு தற்போதைய நிலையான அபிவிருத்தி செயன்முறைக்கு ஆதரவளிக்கும் படியான தேசிய அழைப்புக்கு பதிலளிக்கும் வண்ணம் அந்நிகழ்ச்சிகளிலுள்ள வெற்றிடங்கள் தொடர்பில் அரச , தனியார் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் பிரகடனம் செய்யும் வகையில் ஒழுங்கமைத்தல்.

  **2030 க்கான நோக்கு:** அரச , தனியார் துறையிலுள்ள அமைப்புக்கள் ஏழை மக்கள் பயன் பெறும் வண்ணம் நிலையான உற்பத்தி சார் நிகழ்ச்சிகளில் சந்தர்ப்பங்களை அளித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளைவுகளின் சுட்டிகள்:** (1) அரச மற்றும் தனியார் துறையின் நலன்கள் ஏழ்மையான பிரதேசங்கள் மற்றும் சமூகங்களுக்கு பரவலாக வெளியிடப்படல் மற்றும் தொடர்பாடப்படல். (11) ஏழை மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கு பயன் தரும் வகையில் விரிவான செலவுகள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்ட நவீன வழிமுறைகள் கடைபிடிக்கப்படல். (111) ஏழைகளுக்கு சேவைகளை வழங்க சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சிறப்பு நடைமுறைகளை ஏற்றல்.

- கிராமிய மற்றும் நகர்புற பொருளாதாரங்களிலும் பொதுமக்கள் விவகாரங்களில் பிரஜைகளின் வினைத்திறனான ஈடுபாட்டினை அதிகரிக்கும் வகையில் எல்லா கிராம சேவகர் பிரிவுகளிலும் சுய நிர்வாக அபிவிருத்தி அணுகுமுறையை, 2020, 2025, 2030 ஆகிய ஆண்டுகளில் ஏழை மற்றும் பின்தங்கிய பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் நாடளாவிய ரீதியிலான பிரச்சாரங்களைத் தொடங்கி அதனைத் தொடர்ந்து மேம்படுத்தல் வேண்டும்.

**2030 க்கான நோக்கு:** குடியியல் கல்வி ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்றடைந்து வறுமையை ஒழிப்பதற்கு சமூக நலன்களைப் பாதுகாப்பதற்காக தொடர்ந்து புதுப்பிக்கப்படல்.

**விளைவுகளின் சுட்டிகள்:** (i) சமூகங்களுக்கு குடிசார் கல்வியைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை (ii) குடியியல் கல்வியை அதிகரிப்பதற்காக திரட்டப்பட்ட வளங்கள் (iii) சமூக நிறுவனங்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் சமுதாய நிறுவனங்கள் அரசாங்கத்திடம் இருந்து நிதி திரட்டல்.

- கிராமங்களில் உள்ள சமூக சுயாதீனமான, அதனுடன் தொடர்புடைய, பொறுப்புணர்வு வாய்ந்த பொருளாதார நிறுவனங்கள், தகவல், முடிவெடுக்கும் திறன் மற்றும் துணை வளங்கள் ஆகியவற்றுடன் சமூக தளங்களை பயன்படுத்துவதை மேம்படுத்தல். இத்தகைய நிறுவனங்கள் சமூகங்களுக்கு தூய்மையான கிராமம், பசுமையான கிராமம், தன்னிறைவுள்ள கிராமம், கிராமத்தில் சமாதானம், கிராமப்புற அமைதி, செழிப்பு மற்றும் நல்லிணக்கம் போன்ற கோஷங்களின் கீழ் தேவைப்படும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவுகின்றன. பொருளாதாரங்கள். நுண்ணிய பொருளாதாரங்களின் வாழ்க்கை மற்றும் பொருளாதார இடங்களுக்கு பல்வேறு வரி அமைப்பு திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

**2030 க்கான நோக்கு:** வலுவான, வலுவடைந்த மற்றும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகங்கள் முன்னேற்றப் பாதையில் வளங்களை திறம்படவும் மற்றும் செயற்பாட்டுடனும் நிர்வகிக்கும்.

**விளைவுகளின் சுட்டிகள்:** (i) சட்டபூர்வமான அங்கீகாரத்துடன் செயல்படும் சமூக நிறுவனங்கள் 80 சதவீதத்திற்கும் அதிகமான குடும்ப பங்களிப்புடன் 50 சதவீத பெண்கள் பங்களிப்புடனும் வளங்களை நிர்வகித்தல் மற்றும் விதிகளுக்கமைவான கிராமப்புற மேம்பாட்டு திட்டங்களை அமுல்படுத்தலில் ஈடுபடுகிறது. (ii) உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையுடனான ஒத்துழைப்புடன் திட்டங்கள் மற்றும் சுயநிர்ணயத்தை அமுல்படுத்துவதற்கு இத்தகைய அமைப்புகளால் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட நிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. நீடித்து நிற்கக் கூடிய முன்னோக்கு – 2020 உம் அதன் பின்பும்

தாழ்மட்ட சனத்தொகையில் 40 சதவீதத்தினரின் முன்னுரிமைத் தேவைகளைத் தீர்த்து வைப்பதற்கு 5,000 கிராம சேவகர் பிரிவுகளில் வருமானத்தை அதிகரிப்பதற்கு முதலீடுகளை முகாமை செய்வதற்கு உள்ளிட்ட, பொறுப்புக் கூறக்கூடிய, முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தின் உந்துதலால் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி அணுகுமுறைகளைத் தழுவிய சமூக நிறுவனங்கள் செயற்படுத்தப்படும். இது 2025 ஆம் ஆண்டில் 10,000 கிராம சேவகர் பிரிவுகளை (GND) உள்ளடக்கியதாக விஸ்தரிக்கப்படும். 2030 ஆண்டளவில் அனைத்துப்பிரிவுகளும் இதில் உள்ளடக்கப்படும்.


நாடாளாவிய ரீதியில் குடியியல் கல்விசார் செயற்பாடுகள் பிரதானமாக சமுதாயத்தை மையமாகக் கொண்டதாகவும் சமூகத்தினால் முகாமை செய்யக் கூடிய அபிவிருத்தி நடவடிக்கைகளாகவும் அமைய வேண்டியதுடன் இவை உள்நாட்டு அரசினால் 2020 ஆம் ஆண்டளவில் அளவிடப்பட்டு குறிப்பாக இனங்காணப்பட்ட பயிற்சி நிலையங்களில் 2025 ஆம் ஆண்டிலும் எஞ்சிய பகுதி 2030 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

பிரதேச செயலாளர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளை முறையாகத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான பிரதான பங்கை வகிக்க வேண்டியதுடன் குறிப்பாக, சமூர்த்தி பாதுகாப்பு வலையமைப்பு நடவடிக்கைகள் மற்றும் வறுமை ஒழிப்பிற்கு வளங்களின் பயன்பாட்டை நீடித்த முகாமை செய்வதற்கான முழுமையான அணுகுமுறை ஒன்றிற்கு ஏற்றவாறு ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களை தொகுக்கக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

1000 இற்கு மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்குட்பட்ட வறிய மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள கீழ்மட்ட சனத்தொகையில் 40 சதவீதத்தினரின் அடிப்படை மற்றும் வளர்ந்து வரும் தேவைகளை வழங்குவதற்கு விளைச்சல்/உற்பத்திகள்/ சேவைகள் என்பனவற்றின் சாத்தியமான வளர்ச்சிக்கு அரச மற்றும் தனியார் துறை முதலீடுகளினூடாகவும் பங்களிப்புடனும் புத்தாக்கங்களின் தொழிநுட்பத்தைத் தழுவி, இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரித்து விநியோக/ மதிப்புச் சங்கிலியை மேம்படுத்துவதற்கு அரச மற்றும் தனியார் துறை அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒன்றிணைத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு T 7.1: தேசிய மற்றும் துறைசார் வறுமைக்கோடுகள்




மூலம்: HIES, சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

உரு T7.2: மாவட்ட ரீதியான வறுமை ஆட்கணிப்பீட்டு விகிதம்




Data source: Poverty Headcount Ratio Brief: Decomposition of Consumption Poverty, Department of Census and Statistics

Map Source: CEPA, 2014. "Poverty Headcount Ratio by District - 1990/91 to 2012/13", Poverty Portal: Maps and Statistics. Colombo: Centre for Poverty Analysis.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1: வறுமை தொடர்பான பிராந்திய மட்டம் வேறுபாடு

**அட்டவணை** 1: வறுமை தொடர்பான பிராந்திய மட்டம் வேறுபாடு

| மாவட்டம்: | வறுமை நிலை | | | சராசரி ஆளுக்கான நுகர்வு (மெய் விதிமுறைகள் - 2002) | | | வறுமையின் வளர்ச்சி நெகிழ்ச்சி (a)/(b) | பல்-பரிமாண வறுமைச் சுட்டெண் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 /10 | 2012 /13 | Change (a) | 2009 /10 | 2012 /13 | வளர்ச்சி (b) | | |
| கொழும்பு | 3.6 | 1.4 | -0.61 | 5,310 | 6,160 | 0.16 | -3.82 | 1.7 |
| கம்பஹா | 3.9 | 2.1 | -0.46 | 4,857 | 5,708 | 0.18 | -2.63 | 1.4 |
| களுத்தறை | 6 | 3.1 | -0.48 | 4,104 | 5,085 | 0.24 | -2.02 | 3.7 |
| கண்டி | 10.3 | 6.2 | -0.40 | 3,505 | 4,111 | 0.17 | -2.30 | 4.7 |
| மாத்தளை | 11.5 | 7.8 | -0.32 | 3,294 | 4,132 | 0.25 | -1.26 | 6.5 |
| நுவர எலியா | 7.6 | 6.6 | -0.13 | 3,117 | 3,176 | 0.02 | -6.93 | 10.7 |
| காலி | 10.3 | 9.9 | -0.04 | 3,248 | 3,629 | 0.12 | -0.33 | 3.8 |
| மாத்தறை | 11.2 | 7.1 | -0.37 | 3,361 | 3,873 | 0.15 | -2.40 | 4.1 |
| ஹம்பந்தொட்டை | 6.9 | 4.9 | -0.29 | 3,506 | 3,804 | 0.08 | -3.42 | 2.2 |
| வவுனியா | 2.3 | 3.4 | 0.48 | 3,771 | 4,513 | 0.20 | 2.43 | 6.0 |
| மட்டக்களப்பு | 20.3 | 19.4 | -0.04 | 2,729 | 2,861 | 0.05 | -0.92 | 11.3 |
| அம்பறை | 11.8 | 5.4 | -0.54 | 2,904 | 3,091 | 0.06 | -8.45 | 2.8 |
| திருகோணமலை | 11.7 | 9 | -0.23 | 2,771 | 3,093 | 0.12 | -1.99 | 4.0 |
| குருணாகலை | 11.7 | 6.5 | -0.44 | 3,165 | 3,881 | 0.23 | -1.96 | 2.8 |
| புத்தளம் | 10.5 | 5.1 | -0.51 | 3,273 | 4,283 | 0.31 | -1.67 | 2.5 |
| அநுராதபுரம் | 5.7 | 7.6 | 0.33 | 3,574 | 3,423 | -0.04 | -7.88 | 2.2 |
| பொலன்னறுவை | 5.8 | 6.7 | 0.16 | 3,692 | 3,950 | 0.07 | 2.22 | 4.7 |
| பதுளை | 13.3 | 12.3 | -0.08 | 3,007 | 3,298 | 0.10 | -0.78 | 8.7 |
| மொனராகலை | 14.5 | 20.8 | 0.43 | 2,512 | 2,416 | -0.04 | -11.39 | 4.7 |
| இரத்தினபுரி | 10.5 | 10.4 | -0.01 | 3,008 | 3,087 | 0.03 | -0.36 | 3.9 |
| கேகாலை | 10.8 | 6.7 | -0.38 | 3,072 | 3,749 | 0.22 | -1.72 | 4.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | | 8.3 | | | | | | 5.2 |
| மன்னார் | | 20.1 | | | | | | 10.1 |
| முல்லைத்தீவு | | 28.8 | | | | | | 10.2 |
| கிளிநொச்சி | | 12.7 | | | | | | 6.4 |
| **இலங்கை** | **8.9** | **6.7** | **-0.25** | **3,677** | **4,192** | **0.14** | **-1.76** | **4.0** |

2009/10 மற்றும் 2012/3 ஆம் ஆண்டுகளின் வீட்டு வருமானம் செலவினம் தொடர்பான ஆய்வு தொடர்பான எழுத்தாளரின் கணிப்பீடு; நாநயக்கார.டப். (2017, மார்ச் 30). **பல்வேறு வறுமைக் கோடுகளின் அடிப்படையில் இலங்கையில் வறுமை நிலை.** பேசும் பொருளியலில் இருந்து பெறப்பட்ட தகவல். ரவவி:.:.:றறற.திள.டம.:வயடமனைபெநஉழமெஅனை.ள.:2017.:03.:30.:ளவயவரள-ழக-ிழஎநசவல-வை-ளசை-டயமெய-டியளநன-ழ-ெனைககநசநவெ-ிழஎநசவல-டைநௌ.:

**அட்டவணை 2:** ஏனைய அபிவிருத்திச் சுட்டிகள்


| | சொந்த வீடு | வீடு அறைகளுடன் அல்லது குடிசை | ஒன்றிற்கு மேற்பட்ட அறைகள் | வீட்டு வளாகத்தினுள் குடிநீர் வசதி காணப்படல் | தூய குடி நீர் | வீட்டு வளாகத்திற்கு பிரத்தியோக மலசலகூட வசதிகள் | கல்வி தராதரம் பரீட்சை சித்தி க.பொ.த (உ/த) அதற்கு மேல் |
|---|---|---|---|---|---|---|---|
| தேசிய | 86.1 % | 5.5 % | 79.2 % | 81.2 % | 88.7 % | 89.8 % | 12.0 % |
| நகரம் | 81.2% | 5.0 % | 78.1 % | 92. % | 98.7 % | 88.6 % | 19.7 % |
| கிராமம் | 91.5% | 2.7 % | 81.0 % | 79.6 % | 89.0 % | 90.8 % | 10.9 % |
| *தோட்டம்* | *8.2 %*** | *56.9 %* | *51.6 %* | *67.4 %* | *43.2 %* | *75.9 %* | *2.1 %* |

மூலம்: சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2013). 2012/3 ஆம் ஆண்டின் வீட்டு வருமானம் செலவினம் தொடர்பான ஆய்வு; அடிப்படை அறிக்கை, கொழும்பு. 2012 ஜூலை - செப்தெம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையில் பெறப்பட்ட அறிக்கை.(ஆய்வின் முதல் காலாண்டு) முழு ஆய்வும் அல்ல.

**72.7 சதவீதம் வாடகையற்ற வீட்டில் வசிப்பதற்கான அறிக்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரு T7.3: வீட்டு வருமானப் பங்கு




மூலம்: HIES, சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

உரு T7.4: வீட்டுத்தலைவரின் கல்வி நிலை மற்றும் வீட்டு வருமானம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம்: HIES 2012/3, சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

**உரு T7.5**: கல்வி நிலை 21 வயதும் அதற்கு மேற்பட்டோரினதும் - குடும்ப மாதாந்த வருமான அடிப்படையில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

# T8

## T8. நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் அமைதி[39]

### 1. தற்போதைய நிலைமை

இலங்கையின் நீடித்த அபிவிருத்தியை அடைவதற்கு தேசிய நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் அமைதி என்பன சிக்கல்களாகவுள்ளன. சமூகங்களுக்கு இடையில் சகோதரத்துவம், பரஸ்பர நம்பிக்கை மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு என்பன அமைதி மற்றும் நீடித்து நிலைப்பதற்கு அவசியமான அடித்தளத்தை வழங்கும். வெற்றிகரமான அபிவிருத்தி செயற்பாடுகளின் பாகுபாடற்ற தன்மை, பாலின சமத்துவம் மற்றும் கூட்டிணைவு என்பன தொடர்பான பொதுவான கொள்கைகளினூடாக நல்லிணக்கம் வலுவூட்டப்பட்டு உறுதிப்படுத்தப்படும். பாதுகாப்பு என்பது தனிப்பட்ட மற்றும் தேசிய அபிவிருத்தியின் முக்கிய மூலகமாகும். நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் நீடித்த அபிவிருத்தி முயற்சிகள் பரஸ்பரம் வலுவூட்டப்படும் போது ஒரு செயன்முறை வலுவூட்டப்படுவதனால் கிடைக்கும் வெற்றி ஏனைய செயன்முறைகளையும் வலுவூட்டுவதுடன் ஒரு செயன்முறையில் ஏற்படும் தோல்வி ஏனைய செயன்முறைகளையும் பாதிக்கும்.

அதே நேரம், இலங்கையில் ஆயுத மோதல்கள் நிகழ்ந்த உடனடிப் பின்னனியில் கடந்த சில ஆண்டுகளினுள் "பாதுகாப்பு" தொடர்பான பணிகள் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்புக் காரணிகளும் தோன்றியுள்ளது. புதிய மற்றும் வளர்ந்து வரும் சவால்களாகவுள்ள பரந்த அளவில் சர்வதேச மட்டத்தினால் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் அக மற்றும் புறச் சூழல்களில் உறுதியின்மையை ஏற்படுத்துகின்றது. இதனால் விடாமுயற்சியுடன் பல்லொழுக்க பகுப்பாய்வு நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகின்றது. இதனால், கொள்கை அபிவிருத்தி மற்றும் தமது வாழ்க்கையைப் பாதிக்கும் ஏனைய நடவடிக்கைகளிலும் பொது மக்கள் பங்குபற்றுவது அவசியமாகும்.

முரண்பாடுகளுக்குப் பிற்பட்ட காலத்திலும் அதன் பின்னர் 2030 வரையும் இலங்கையின் தேசிய பாதுகாப்புத் தொடர்பான தூர நோக்கின் உண்மையான அர்த்தம் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட, ஒன்றில் ஒன்று தங்கியுள்ள அமைதி, மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பான செயற்றிறனான மற்றும் நேர்மையான ஒன்றிணைப்பு ஒன்றிலிருந்து பெறப்பட வேண்டும். இதனை உறுதிப்படுத்தும் போது மனிதப் பாதுகாப்பை மையப்படுத்தி, நல்லிணக்கம் சமத்துவம், பாதுகாப்பு, பொறுப்பு மற்றும் முன்னோக்கும் நிலை என்பனவற்றை மேம்படுத்தக் கூடியவாறு அமைதல் வேண்டும்.

2015 இற்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கை முகங்கொடுக்கும் சவால்கள் பல்வேறுபட்டவையாகவும் தீவிரமானதாகவும் சிக்கலானதாகவும் உள்ளன. கடுமையான வன்முறைகள் மற்றும் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் போன்ற அவற்றுள் சிலவற்றிற்கான பதில்கள் சட்டம், ஒழுங்குமுறை என்பனவற்றின் அடிப்படையில் காணப்படும்.

---

39 எழுத்தாளர் குழு: மனோ தித்தவெல (தலைவர்), அசங்க அபேகுணசேகர, மொஹான் முனசிங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சவால்கள் இன,மத,மொழியியல் கோட்டைத் தாண்டுவதாகவுள்ளன. எனினும், உணவு, சக்தி, காலநிலை, சுகாதாரம், இயற்கை போன்ற பல உள்ளக மற்றும் வெளியக ஏற்ற இறக்கங்களில் இருந்து தோன்றியுள்ள பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழமையான தேசிய பாதுகாப்பிற்கு அப்பாற்பட்டதாக குடி மக்கள் மற்றும் அபிவிருத்தி பரிமாணங்களுடன் இணைந்து காணப்படுகின்றன.

அவற்றிற்கான பதில்கள் மக்கள் சாகியத்தில் சதுரங்கமாக வீழ்ச்சியடைந்தாலும் போதிய உள்நாட்டு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் இணைந்ததாகக் காணப்படும். ஐ.நாவின் உலகலாவிய பயங்கரவாத எதிர்ப்பு தந்திரோபாயம் அதன் அனைத்து வடிவங்களிலும், வெளிப்பாடுகளிலும் பயங்கரவாதத்தின் சவாலை எதிர்கொள்ளுவதற்கான ஒருங்கிணைந்த பாதையை வழங்குகிறது.

ஸ்திரத்தன்மை, செழிப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் குறிக்கோள்கள் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அவை பாதுகாப்புப் படைகள் உட்பட அனைத்து பிரதான ஜனநாயக கட்டுப்பாடுகளினூடாகவும் அடையப்பட வேண்டும். இலங்கையின் தேசிய பாதுகாப்பு தந்திரோபாயம் இந்த காரணிகள் அனைத்தையும் அதன் கொள்கை நுண்கணிப்பினூடாக ஒருங்கிணைக்க வேண்டியுள்ளதால் நாட்டில் ஒரு விரிவான மக்கள் மையப்படுத்தப்பட்ட பாதுகாப்பு தந்திரோபாயம் அவசியமாகும்.

2017 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய நல்லிணக்க கொள்கை, கொள்கை வழிகாட்டல்கள், நல்லிணக்க வேலைத்திட்டங்களை வடிவமைப்பதற்குரிய வழிகாட்டியாகச் செயல்படும். நல்லிணக்கத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள் இந்த கட்டமைப்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள (பிரிவு 2) இல் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள் கீழே அட்டவணை 9.1 இல் விவாதிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை BT 9.1 தேசிய பாதுகாப்பு**

போருக்குப் பிந்தைய கால கட்டத்தில், இலங்கை பாரம்பரியமற்ற, வளர்ந்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுடன் கூடிய புதிய பாதுகாப்பு சூழல் ஒன்றை எதிர்கொள்கிறது. பின்தொடரும் பாதுகாப்பு பிரச்சனைகளைச் சமாளிக்கும் அதேவேளை, முரண்பாடான சமுதாயம் ஒன்று காணப்படுகின்றது. கடல் வளப் பாதுகாப்பு, பொருளாதார பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு மற்றும் நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் ஆகியன இலங்கை எதிர்கொள்ளும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஆகும். இது தவிர, போருக்குப் பிட்டப்பட்ட கால கட்டத்தில், இலங்கையில் தேசிய நல்லிணக்கத்திற்குச் சவால்கள் (பிரதான உரையில் கலந்துரையாடப்பட்டது), முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களின் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம், சிறுபான்மையினரின் உரிமைகள், தீவிரமயமாக்கல் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளுதல் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்களின் மீள் எழுச்சி என்பன தோன்றியுள்ளன.

இலங்கையின் தேசியப் பாதுகாப்புக் கட்டமைப்பு, நாட்டின் பௌதீக எல்லைகளை அல்லது அதன் குடிமக்களின் பௌதீக பாதுகாப்பைத் தாண்டியதாகவுள்ளது. இந்த அடிப்படையில், இலங்கை பயன்படுத்தும் தேசியப் பாதுகாப்பு வரையறை மாற்றப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது, இலங்கையில் பிராந்தியத்தின் வர்த்தக, நிதி மற்றும் சேவை மையமாக மாறி வருகின்றது. சேவை மையமாக மாறி வரும் இலங்கையின் தந்திரோபாய திட்டத்தில் மீன் வளத்துறையில் உணவுப் பாதுகாப்பு, இந்து சமுத்திரத்திலுள்ள வளங்களின் அகழ்வு மற்றும் இலங்கையின் ‘காற்று/ கடல்’ தேடல் மற்றும் மீட்பு (SAR) வலயம் என்பன பாதுகாப்பான கடல்வளப் பிரதேசத்தையே சார்ந்துள்ளன. இருப்பினும், தற்போது கொள்கைகளின் பற்றாக்குறை, முக்கிய பங்குதாரர்களுக்கு (இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை, இலங்கை கடலோர காவல்படை) போதிய திறமையின்மை போன்ற காரணங்களினால் இலங்கையின் கடற்படைத்தளத்தை சிறந்த முறையில் கண்காணிப்பதற்குக் கடினமாக உள்ளது.

பொருளாதார பாதுகாப்பின் பரந்த வட்டாரத்தின் கீழ், வெளிநாட்டு முதலீடு முக்கிய ஒரு பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. தற்போது, இலங்கையில் பாரிய அளவிலான வெளிநாட்டு கருத்திட்டங்களின் தேசிய பாதுகாப்பு தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கான முறையான வழிமுறைகள் இலங்கையில் காணப்படவில்லை. இதன் விளைவாக, உள்நாட்டுப் பாதுகாப்பில் பாதிப்புகள் ஏற்படலாம் என்கின்ற பயம் சில நேரங்களில் வெளிநாட்டு முதலீடுகளினால் விளையக் கூடிய நன்மைகளைத் தடுக்கின்றது.

தற்போது இலங்கையில் ஒரு விரிவான இணைய உள்கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தினால் சைபர்-தாக்குதல்களினால் ஏற்படக் கூடிய கடுமையான பாதிப்புக்களை தடுக்க இயலாதுள்ளது. மேலும், இணையம் தொடர்பான எந்த ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் காணப்படவில்லை. இதற்காகப் போதிய நிதி முதலீடுகளும் காணப்படவில்லை.

சர்வதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியலில் (TOC) போதைப் பொருள் பரிமாற்றம், மனித உரிமைகள் மீறல், மனித கடத்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் கடத்தல், துப்பாக்கிச் சூடுகள் சட்டவிரோத வர்த்தகம், இயற்கை வளங்களை கொள்ளையடித்தல் போன்றவற்றிற்கு இலங்கையை ஒரு நுழைவாயிலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இலங்கையின் பாதுகாப்பற்ற கரையோரப் பகுதிகளில் பல்வேறு சர்வதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் (TOC) வலையமைப்புக்கள் செயற்படுகின்றன. இந்தப் பிராந்தியத்தில் ஏற்கனவே நிரம்பலடைந்த ஆயுத சந்தை மற்றும் கடந்த காலங்களில் தீவிரவாதக் குழுக்கள் வளங்களைச் சுரண்டிச் செல்வதற்கு உறுதுணையாக அமைந்த தொழில்நுட்பமும் கூட்டாகக் காணப்படுகின்றது.

சிக்கலான பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் பின்வருமாறு:

- **பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதம் - இளைஞர்கள், மதம் மற்றும் இனங்களைப் புறக்கணித்தல் என்பன தீவிரவாதத்திற்கு வழிவகுக்கும்.**

இன, மொழி மற்றும் மத அடிப்படைகளை உள்ளடக்கும் ஒரு பல்நோக்கு தந்திரோபாயம் (நல்லிணக்கத்தில் ஆரம்பித்து, பிரதான உரையில் விவாதிக்கப்பட்டது) நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பிரதான சமூக ஈடுபாட்டுத் திட்டங்கள் அவசியமாகும். மேலும், சிறிய மக்கள் தொகையினரிடையே தீவிரவாதமயமாக்கல் தோன்றுகின்றதாயினும், அது இன்னும் அதிகரித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கடல்வளப் பாதுகாப்பு – ஒரு தேசமாக நமது கடல்சார் எல்லையைப் பாதுகாத்தல்.**

இலங்கையின் கடற்படை களத்தின் பயனுள்ள கண்காணிப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இராணுவ வன்பொருள் தேவைகள் மேம்படுத்தப்பட வேண்டும். அத்துடன் தற்போதுள்ள கடல்சார் நுண்ணறிவு, கண்காணிப்பு மற்றும் புனரமைத்தல் (ISR) வலையமைப்பாக்கும் இயலுமை C3I (கட்டளை, கட்டுப்பாடு, தொடர்பாடலகள் மற்றும் நுண்ணறிவு) திறன்கள், கடற்படை மற்றும் விமானப்படை என்பனவற்றின் திறமைகள் மற்றும் செயற்பாட்டுத்திறன்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்து மேம்படுத்த வேண்டும்.

- **பொருளாதார பாதுகாப்பு - நமது முக்கிய பொருளாதார உள்கட்டமைப்பைப் பாதுகாத்தல்**

தேசிய பாதுகாப்பு தொடர்பான பெரிய அளவிலான வெளிநாட்டு கருத்திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கு இலங்கை சட்டத்தின் கீழ் **பாதுகாப்பு மீளாய்வொன்று** தாபிக்கப்பட வேண்டும். இதில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் பாதுகாப்பு இயலளவு, தேசிய பொருளாதாரத்தின் நிலையான செயற்பாடு, அடிப்படை சமூக ஒழுங்கமைப்பு, வாழ்க்கை நிலைமைகள் மீதான தாக்கம் போன்றவை உள்ளடக்கப்பட வேண்டும்.

- **சைபர் பாதுகாப்பு - நமது முக்கிய உள்கட்டமைப்புக்களுக்கு எதிராகவுள்ள இணைய அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாத்தல்**

நாம் உள்-முகவர் ஒத்துழைப்பு மற்றும் இணைய செயற்பாட்டுக் கட்டளை மையங்களுடன் இணைந்து தேசிய இணையப் பாதுகாப்புத் தந்திரோபாயத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் நமது இணைய பாதுகாப்பு உள்கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும். உள்ளக – முகவர் இணைய அதிரடிப்படையில் அரசு, தனியார் துறை மற்றும் சிவில் சமுதாய நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த இணையப் பாதுகாப்பு தந்திரோபாயத்தை செயற்படுத்த வேண்டும்.

- **சுகாதாரப் பாதுகாப்பு - தொற்று நோய்கள் மற்றும் வைரஸ் தொற்றுக்களைக் குறைத்தல்**

டெங்கு நோயில் கவனம் செலுத்துவதில் ஆரம்பித்து, வளர்ந்துவரும் சுகாதாரப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சந்திப்பதற்கு தேசிய தயார் நிலையை மேம்படுத்தும் ஒரு காரணியாக சுகாதாரம் காணப்பட வேண்டும். நோய்களை எதிர்த்து போராடுவதற்குத் தேவையான மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும், மருந்துகளைத் தயாரிப்பதற்கும் நிதி உதவிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பல்கலைகழகங்கள் மற்றும் ஏனைய மருத்துவ ஆராய்ச்சிக் நிறுவகங்களை ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய பாதுகாப்புக் காப்புரிமைகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் பயனுள்ளதாகும்.

- **சுற்றுச்சூழல் பாதுகாப்பு - நாட்டில் இயற்கை மற்றும் மனிதனால் உருவாகும் பேரழிவுகளைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புக்களைக் குறைத்தல்.**

குறுக்குச் செயற்பாட்டு நோக்கங்களைப் பார்க்க. T1. காற்றின் தன்மை, பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **எரிசக்தி பாதுகாப்பு  சக்தியில் தங்கியுள்ள நிலைமையைக் குறைத்தல் மற்றும் எதிர்காலத்தில் நீடித்த சக்திப் பாதுகாப்பை வழங்குதல்.**

பகுதிகளைப் பார்க்க: S3. சக்தி.

- **சர்வதேச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் - தீவிரவாதத்திற்கு வழிகோலும் இலங்கையின் அனைத்து வகையான கடற்றொழிலிற்கும் இலக்கு மற்றும் போக்குவரத்து வழித்தடங்களை ஒழித்தல்**

இலங்கையில் குடியேற்றக் கொள்கைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் எல்லை பாதுகாப்புப் படையினர்கள் மற்றும் பொலிஸ் படையினருக்கு விரிவான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மேலும் செயற்றிறனான எல்லைக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். இலங்கை கடற்படை எல்லைகள் மற்றும் கடலோர பகுதிகளைக் கண்காணிப்பதன் மூலமும் அவதானிப்பதன் மூலமும் போதைப்பொருள் கடத்தல், ஆயுதக் கடத்தல் என்பனவற்றை நிறுத்தி பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். கடற்படை, கடலோரப் பாதுகாப்புப் படை மற்றும் வான் படை என்பனவற்றிற்கு வழங்கும் உபகரணங்கள் மற்றும் பயிற்சிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

## 2. சிக்கலான பிரச்சினைகள், தாக்கங்கள் மற்றும் தீர்வுகள் (நல்லிணக்கத்துடன் தொடர்புடையவை)

### 2.1. உயர்ந்தளவில் இளைஞர் வேலையின்மை

#### 2.1.1. தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

தற்போதைய பொருளாதார நிலைமைகளை முன்னெடுத்துச் செல்வது, இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைத் தீர்க்கவில்லை. முரண்பாடு மற்றும் தவறான நிர்வாகம் ஆகியவற்றின் மரபுகள் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றன. கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்கட்டமைப்பு முதலீட்டிலிருந்து சாதகமான முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இது இளைஞர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குதல் மற்றும் பல்கலாச்சார, பாலின சமநிலையுடன் வேலை குழுக்களை ஊக்குவித்தல் போன்ற காரணிகளினால் பெறப்பட்டதாயினும் ஏனைய இடங்களில் அவ்வாறு எய்தப்பெறவில்லை.

#### 2.1.2. பிரச்சினைக்கு ஏதுவான தாக்கங்கள் மற்றும் விளைவுகள்

**பொருளாதாரம்:**

- பொருளாதார வளர்ச்சிக்கு தொழிலாளர் படையணியில் இளைஞர்களின் பங்களிப்புக் குறைவாகக் காணப்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகம்:**

- இளைஞர்களின் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்தல் வன்முறை மற்றும் தீவிரவாத ஆபத்தை அதிகரிக்கும்.

- சில்லறை மற்றும் பொதுவான குற்றங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு

**அடிப்படைக் காரணங்கள்:**

- பலவீனமான பொருளாதார நிலைமைகள் மற்றும் குறைந்த வளர்ச்சியானது தொழிலாளர் படையணியுடன் இணைந்து காணப்படுகின்றது. இதற்கான காரணம் காணப்படுகின்ற வேலைவாய்ப்புக்களுக்குப் பொருத்தமான (கல்வி மற்றும் பயிற்சி என்பனவற்றுடன் இணைந்தது) திறன்கள் காணப்படாமையாகும்.

- சில இடங்களில் மோதல்கள் மற்றும் உறுதியற்ற தன்மை என்பன காணப்படுவதனால் ஒரு பின்னடைவான வளர்ச்சி, குறைந்த முதலீடு மற்றும் வேலை உருவாக்கத்திற்கு வழிவகுக்கின்றது.

- பால், மொழி அல்லது மத அடிப்படையிலான பாகுபாடு.

**2.1.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

- நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதியை ஏற்படுத்துவதற்கு முழுநேர வேலைவாய்ப்புக்களை அதிகரித்து பொருளாதாரத்தில் இளைஞர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு ஏற்ற செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துதல், (குறிப்பாக இத்தகைய முயற்சிகளில் தொழிலாளர் படையில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல் மற்றும் சமூகங்களுக்கிடையில் உழைப்பு-பகிர்வுப் பங்கேற்பில் உள்ள அடிப்படை வேறுபாடுகளுக்கு தீர்வு காணுதல்), இத்தகைய நடவடிக்கைகள் ஒரே நேரத்தில் வருமானத்தை ஈட்டித்தரக் கூடியதாகவும் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்பவைகளாகவும் அமையும்.

- பல்பண்பாட்டு இளைஞர் பங்களிப்புகளில் சிறந்த முக்கியத்துவம் வாய்ந்த உள்கட்டமைப்பு திட்டங்களை துரிதப்படுத்துதல்.

- ஒரே நேரத்தில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துதல். உதாரணமாக, போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் உள்கட்டமைப்பு முதலீட்டில் தமது அன்றாட வாழ்வில் அரிதாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களை ஒருங்கிணைந்த இளைஞர் படையணிகளில் இணைத்துக்கொள்ளலாம்,

- ஒருங்கிணைந்த, பல கலாச்சார சுற்றுச்சூழல் திட்டங்களில் வேலையில்லாத இளைஞர்களை ஈடுபடுத்துதல். உதாரணமாக, மரம் நடுகை, கடலோர காலநிலை மாற்ற மேம்பாடு போன்றவை. இதற்கு ஒப்பீட்டளவில் குறைந்த திறனளவே தேவைப்படுகிறது, எனவே இச்செயற்பாடு ஆரம்பத்திலேயே மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். அதே நேரத்தில் திறன்களின் மேம்பாடு, அடுத்தடுத்த கட்டங்களில் மேம்படுத்தப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21-CM 27932

- தொழிலாளர் சந்தையில் உண்மையான அல்லது அதிக கேள்வியையுடைய செயற்றிட்டங்களுக்கு அவசியமான ஒன்றிணைந்த திறன் பயிற்சிகளை இளைஞர் தலைமையில் வழங்குதல்.

- உத்தியோகபூர்வ மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பாடநெறிகள் உள்ளடங்கிய கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.

- தேசிய கலைத்திட்டத்தில் ஒரு கட்டாய பாடமாக நல்லிணக்க பாடத்திட்டத்தை ஒன்றிணைத்தல்.

- இளைஞர் வேலைவாய்ப்பு திட்டங்கள், முற்போக்கான கல்வி சீர்திருத்தங்களை தேசிய நல்லிணக்கக் கலைத்திட்டத்தில் உள்ளடக்குதல், கீழ்-சலுகை பெற்ற இளைஞர்களையும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்களிலுள்ள இளைஞர்களையும் இலக்காகக் கொள்ளுதல், ஒரே சமயத்தில் அனைத்து சமூகங்களினதும் சமநிலை கருதப்பட வேண்டும். இதனால் resentment or அல்லது சமூகங்களுக்கு இடையில் பொறாமை உணர்வுகள் ஏற்படக் கூடாது.

## 2.2. உச்ச செயல்திறனிலும் குறைவாகச் செயற்படும் அரச நிறுவனங்கள் பலவீனமான வகைகூறலைக் கொண்டிருப்பதுடன், பால், மொழி மற்றும் மதஃ இன அடிப்படை .

### 2.2.1. தற்போதைய நிலைமை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

திறமையான, பொறுப்புணர்வுள்ள, உள்ளடங்கிய மற்றும் சுத்தமான நிறுவனங்கள் பொது நம்பிக்கையை அதிகரிப்பதுடன் அதிக முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றன. அனைத்து பின்னணியிலுமுள்ள மக்கள் சட்டத்திற்கும் ஆட்சிக்கும் மரியாதை செலுத்தி, நியாயமான, உள்ளடக்கிய, சுத்தமான மற்றும் திறமையான நிறுவனங்கள் ஒரு பிரதேசத்தில் காணப்படுவதனையே அதிகம் விரும்புகின்றனர். உதாரணமாக, உலகெங்கிலும் உள்ள பொலிஸ் படைகள், காவல்துறையினரைப் பிரதிபலிக்கும் வகையில், சீர்திருத்தங்களை சிறப்பாக எதிர்கொள்ள வேண்டும். அத்துடன் சமூகங்களிற்கு இடையே இருவழி தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அவர்கள் தங்களது பொலிஸ் தொழில்நுட்பங்களை மாற்றியமைக்க வேண்டும்.

### 2.2.2. பிரச்சினைக்கு ஏதுவான காரணிகள் மற்றும் விளைவுகள்

**பொருளாதாரம்**

- செயற்றிறனற்ற, ஊழல் நிறைந்த நிறுவனங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பகத் தன்மையை அழிப்பதுடன் மூலதன விமானத்தை முடக்கி, மூளைச்சலவை செய்கின்றன.

- செயற்றிறனற்ற சுகாதார பாதுகாப்புச் செயற்பாடுகள் பொது சுகாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தி, பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

- அரசாங்க வளங்கள் மற்றும் நிதிகளின் செயற்றினற்ற நிர்வாகம் வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளைக் குறைக்கிறன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகம்**

- பொது நிறுவனங்களில் பொது நம்பிக்கை இழப்பு.

**சுற்றாடல்**

- மோசமான ஒருங்கிணைப்பு மற்றும் ஆளுமை மீத்தோடமுல்லயில் நிகழ்ந்த சோகமயமான நிகழ்வு போன்ற சுற்றாடல் பேரழிவுகளுக்கு வழிவகுக்கும்.

**மூல காரணங்கள்:**

- இடஒதுக்கீட்டு ஊழல்
- ஊழல் மற்றும் கடுமையான குற்றங்களுக்குத் தண்டனை
- பல தசாப்த மோதல்களுக்குப் பின்னர் பெரும்பான்மையினர் பாதுகாப்புப் படையினராகப் பணியாற்றுகின்றனர்.
- மொழி உரிமைகளும் கொள்கைகளும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**2.2.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

- செயற்றிறனான மொழி உரிமைகள் மற்றும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படுவதனால், பொலிஸ் துறையில் இருந்து சுகாதார பராமரிப்புத் துறை வரை, நீதிமன்றங்கள் வரை அனைத்து அரச சேவைகளிலும் உத்தியோகபூர்வ மொழிகள் நடைமுறையில் இருக்கும்.
- செயற்றிறனான நிறுவனங்கள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதன் மூலம் நல்லிணக்கம் மற்றும் நீண்டகால ஸ்திரத்தன்மையை வளர்க்கலாம். உதா. காணாமற் போனோர் அலுவலகம் (OMP), விரிவான மறுசீரமைப்பு திட்டம் மற்றும் நம்பகமான உண்மையான நல்லிணக்க ஆணைக்குழு.
- பாகுபாடற்ற சட்டங்களை அறிமுகப்படுத்துதல் - தென்னாபிரிக்காவில் பிரிவினைவாதத்திற்குப் பிற்பட்ட காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டவாறு தேசிய நிறுவனங்களில் பெண்கள் மற்றும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.
- 2015 இல் தழுவப்பட்ட ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் வலுப்படுத்துதல்.
- ஆயுதப்படை மற்றும் பொலிஸில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.
- நீதித் துறையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல் மற்றும் அனைத்து வகையான குற்றம் மற்றும் ஊழல்களுக்கு, குறிப்பாக உயர் மட்ட அதிகாரிகள் சம்பந்தப்பட்டவைகளுக்கு அதிக பொறுப்புக் கூறல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிறந்த உண்மையான நல்லிணக்க ஆணைக்குழு பரந்த தன்மை, வகைகூறல் மற்றும் நேர்மை என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கும் வன்முறைகள் நடைபெறுவதில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களைப் பரிந்துரைக்க வேண்டும். அதே நேரத்தில் நீண்ட கால உறுதி மற்றும் முதலீட்டிற்கும் வளர்ச்சியிற்கும் பொறுத்தமான சூழல் என்பனவற்றை விருத்தி செய்வதற்குப் பொறுத்தமான தன்னம்பிக்கையையும் வளர்க்க வேண்டும்.

- பாரிய முதலீட்டாளர் மற்றும் வர்த்தகத்துறையில் உள்ள தன்னம்பிக்கை என்பனவற்றின் விளைவாக, அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் நல்லிணக்கத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் வளர்ப்பதில் முக்கிய பங்கை வகிக்கின்றன.

## 2.3. பாலினம் (பிரிவு T3 ஐயும் பார்க்கவும்)

### 2.3.1. தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

தற்போதுள்ள கலாச்சார நெறிமுறைகள் மற்றும் சமூக எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் பெண்களின் பக்கமே சார்ந்துள்ளன. பெண் ஊழியர்களின் பங்களிப்பு குறைவாக உள்ள அதே நேரம் உயர் பதவிகளில் உள்ள பெண்களின் எண்ணிக்கையும் குறைவாகவே உள்ளது. போருக்குப் பிந்திய நாடுகளின் பின்னணியை ஆராய்ந்தால் பெண்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட குழுக்களில் ஒருவராகவே உள்ளனர். அடிக்கடி அவர்களின் பாலினம் அவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்குவதற்கு அல்லது பாகுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் வீட்டு வன்முறைகள் அதிகரித்துள்ளதுடன் தீர்த்து வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றன. கல்வித்துறை மற்றும் வர்த்தகம் போன்ற துறைகளில் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்படுவதுடன் இது சனத்தொகையில் அரை மடங்கினரின் தேவையாகவும் உள்ளது. அதிக பாலின சமத்துவம் மற்றும் பாலின பங்கேற்பு ஆகியவற்றிலிருந்து இலங்கை அதிக பயன்களைப் பெற முடியும். பெண்களின் சமத்துவத்தை மேம்படுத்தவும், பாதுகாப்பை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது வீட்டிலும் மற்ற இடங்களிலும் வன்முறையைக் குறைப்பதுடன் ஆண்-பெண் உறவுகளில் ஆரோக்கியமான தன்மையை ஏற்படுத்தும். இது சிறந்த நல்லிணக்கச் செயற்பாட்டிற்கு வழி வகுக்கும். தொழில்துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகமாகவும் சமமாகவும் காணப்படும் போது பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும்.

### 2.3.2. பிரச்சினைக்கு ஏதுவான காரணிகள் மற்றும் விளைவுகள்

பொருளாதாரம்

- வடக்கில் மட்டுமல்ல, நாட்டின் பிற பகுதிகளிலும் பெண் தலைமையிலான குடும்பங்களில் பெண்களுக்கு குடும்பத்தின் பொருளாதார சுமையை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சமூகம்

- பெண்களுக்கு தீங்கு விளைவிக்கும் தற்போதைய கலாச்சார நெறிமுறைகள் மற்றும் சவால் என்பன மாற்றப்பட வேண்டும். பெண்கள் சம அந்தஸ்த்துடைய குடிமக்களாக சுதந்திரமாக சமுதாயத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் அவர்களின் திறனை முழுமையாக அடைந்து, சனத்தொகையில் சிறந்த குடிமக்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிவிட முடியும். பாலின சமத்துவமின்மை ஒரு உரிமைகள் சார்ந்த பிரச்சினை அல்ல. அது அடிக்கடி புறக்கணிக்கப்படும் ஒரு பொருளாதார செலவினம். அது சமூகத்தில் பரந்த அளவில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**சுற்றாடல்:**

- சுற்றாடல், அவற்றைச் சூழவுள்ள இயற்கை வளங்கள் என்பனவற்றுடன் தொடர்புகொள்வதில் பெண்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். சூழ்நிலை மாற்றங்கள் மற்றும் இயற்கை பேரழிவுகள் என்பனவற்றில் காரணமாக சுற்றாடலில் மாற்றங்கள் ஏற்படும் போது பாலினம் முக்கிய வகி பாகத்தை வகிக்கின்றது. அத்துடன் ஆண், பெண் இருபாலரும் இதில் பங்குபற்றுவது அவசியமாகும். விவசாயம் போன்ற சுற்றாடலைச் சார்ந்த வாழ்வாதாரத் தொழில்களில் பெண்களின் பங்களிப்பு முக்கியமாகும்.

**மூல காரணங்கள்:**

- பாலினம், குறிப்பாகப் பெண்கள் மற்றும் சமூகத்தில் அவர்களின் வகிபாகம் என்பன தொடர்பாகத் திரித்துக் கூறப்பட்ட ஆண் ஆதிக்கம் தொடர்பாக ஒரு நீண்ட வரலாறு மற்றும் கலாச்சாரம் காணப்படுகின்றது.
- கல்வி அமைப்பில் ஒரே மாதிரியான முரண்பாடுகள் காணப்படுகின்றன.
- வேலைத்தளங்களில் உள்ள பாரபட்சமான கொள்கைகள்.
- பாலின சமத்துவமின்மை தொடர்பான ஒத்திசைவான ஈடுபாடு காணப்படாமை.
- பல தசாப்தங்களாகக் காணப்பட்ட மோதல்கள் காரணமாகப் பெண்கள் மற்றும் மகளிரில் சமனற்ற

தாக்கத்தை ஏற்படுத்துதல்.

**2.3.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்**

- பாலினப்பாகுபாடு இளம் வயதிலேயே கல்வி அமைப்பில் சவாலாகக் காணப்படுகின்றது.
- பணி புரியும் இடத்தில் பாலின உணர்திறனை ஏற்படுத்தக்கூடிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- நல்லிணக்க முயற்சிகள் பெண்கள் மற்றும் அவர்களது செயற்பாடுகளின் பங்களிப்பை தீவிரமாக கருத்தில் கொள்ள வேண்டும். இவை நல்லிணக்கத்திற்குத் தனித்துவமான அடித்தளத்தை வழங்க வேண்டும். பொறுப்புணர்வுப் பொறிமுறை, உண்மையான நல்லிணக்க ஆணைக்குழு, இழப்பீட்டுத் திட்டம், காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் பொறுப்புக் கூறும் பொறிமுறை என்பன இதில் அடங்க வேண்டும்.
- பாலின பாகுபாடு மற்றும் வன்முறையை உருவாக்குதல் மற்றும் தொடர்ந்து உருவாக்குகின்ற கட்டமைப்பு குறைபாடுகளை மாற்றுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்களுக்கு பாதுகாப்பளிக்கும் மற்றும் நீதிக்கான அணுகலை வழங்கும் சட்டங்களை மேம்படுத்தவும், வலுப்படுத்தவும், அத்தகைய சட்டங்களை அமுல்படுத்த வேண்டும்.

- புதிய மற்றும் சவாலான பொறுப்புகளைப் பெண்கள் ஏற்றல். குறிப்பாக மோசமான பொருளாதார சூழ்நிலைகளில், யுத்தத்தால் மோசமாகப் பாதிப்புக்குள்ளாகும் பெண்களுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல். இந்த பெண்கள், இதே நிலைகளில் உள்ள ஏனைய பெண்கள், மக்களில் கணிசமான பகுதியும், பொருளாதாரம் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றுடன் அவர்களது திறனான தொடர்புகளும் நாட்டிற்குப் பயன் படலாம்.

- பெரிய பாலின சமத்துவம் மற்றும் பாலினக் கல்வி என்பன ஆண்கள் மற்றும் பெண்களுக்கு இடையிலான நல்லுறவிற்கு வழிவகுக்கும். மேலும், பாலின அடிப்படையிலான பாகுபாடு மற்றும் வன்முறைகளின் அளவைக் குறைக்கும்.

## 2.4 நிலம்

### 2.4.1. தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

இலங்கையில் நீண்ட காலம் நிலவிய உள்நாட்டுப் போரின் போது பலர் காணாமல் போயுள்ளனர். துரதிஷ்டவசமாக, பெரும்பாலான மக்கள் வடக்கு மற்றும் கிழக்கில் வீடுகளை இழந்துள்ளனர். இது தொடர்பாக அரசிற்கு பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டாலும் நிலத்தை இழந்தவர்களின் பிரச்சினை தொடர்ந்து காணப்படுகின்றது. பெரும்பாலான தனியார் நிலங்கள் தற்போது மீள வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் யுத்த வலயங்களில் நிலப்பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு காணப்படுகின்றமையினால் இந்த நிலங்களில் பயம் மற்றும் கண்காணிப்பு மற்றும் சில நேரங்களில், சிவில் உரிமைகள் முறையாகக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. மேலும், இவ்விடங்களைச் சுற்றிப் பதட்ட நிலைமைகள் காணப்படுவது பல்வேறு குழுக்களுக்கு இடையில் வன்முறை மற்றும் வெறுப்புணர்ச்சி என்பன ஏற்படக் கூடிய ஆபத்துகளுக்கு வழிவகுக்கின்றன. இது நல்லிணக்க முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த தனிநபர்களின் காணிகளை மீள வழங்குதல், மீள்குடியேற்றம் மற்றும் மீள் வீடமைத்தல் மற்றும் முன்னாள் போர் வலயங்களை இராணுவமயமாக்கல் ஆகியவை நல்லிணக்கம் பற்றிய தெளிவான மற்றும் உறுதியான ஆதாரமாகவும், நாட்டின் முதல் தர குடிமக்களாக சிறுபான்மையினரை நடத்துவதற்கான உண்மையான அரசியல் அபிலாசைக்கு உதவுகின்றன. இது நாட்டின் ஒரு வறிய பிரதேசமாகவுள்ள போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறந்த பொருளாதாரம், வாழ்வாதாரங்கள் மற்றும் செல்வத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

### 2.4.2. பிரச்சினைக்கு ஏதுவான காரணிகள் மற்றும் விளைவுகள்

#### பொருளாதாரம்

- வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பலரின் முதன்மை வாழ்வாதாரம், விவசாய நடவடிக்கைகள் ஆகும். இது தன்னிறைவான சமூகங்கத்தை உருவாக்குகின்றது. வருமானம், சுயாட்சி மற்றும் தன்னம்பிக்கை என்பன நில நிவாரணத்தின் நேரடி நன்மைகளாகக் காணப்படுகின்றன. இப்போது போர் அச்சுறுத்தல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவடைந்துள்ள நிலையில் பொதுமக்கள் தங்களது வாழ்வாதாரங்களில் ஈடுபட முடியும், இது ஒட்டுமொத்தமாக பிராந்திய அபிவிருத்திக்கு வழிவகுக்கும். நிலங்களில் வேலைகளில் ஈடுபடுவதற்கு தொழில்நுட்ப அல்லது முக்கிய திறன்கள் தேவையில்லை, அத்துடன் இது இப்பகுதிகளில் வருவாய் ஆதாரமில்லாமல் இருக்கும் திறமையற்ற தொழிலாளர்களுக்கு பொருத்தமானதாகவும் இருக்கும்.

**சமூகம்:**

- நிலங்களை மீள வழங்குதல் வீடற்ற நிலை மற்றும் வறுமை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும். இது பொருளாதார மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உணர்வை உருவாக்குகிறது, இது அரசாங்கமும் இராணுவமும் தொடர்பாக அவநம்பிக்கை மற்றும் விரோதப் போக்குகளை உதறித் தள்ள உதவுகிறது. இராணுவத்தினரிடம் காணப்பட்ட நிலங்கள் விவசாயம் மற்றும் பிற திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படலாம். இங்கு அனைத்து இனங்களின் பங்கேற்புக்கும் ஊக்கமளிக்கலாம். எனவே சமூக உணர்வை வளர்க்கப்படும்.

**சுற்றாடல்:**

- நிலத்தின் மூலம் வருமானம் மற்றும் அபிவிருத்தியை உருவாக்குதல் ஒரு தொழிலாளர் சார் செயன்முறை ஆகும், மேலும் அதிகமான மக்களின் செயல் ரீதியான பங்களிப்பு கைவிடப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத நிலத்தின் சிறந்த பயன்பாட்டிற்கு உதவுகிறது. விவசாய நடவடிக்கைகளின் ஆரம்பம் மண் அரிப்பு, சுற்றுச்சூழல் சீர்குலைவு மற்றும் நிலம் வீணாவது என்பனவற்றைத் தடுக்கும், இதனால் சுற்றாடலுக்கு உறுதியளிக்கக்கூடிய பயன்கள் விளைகின்றன.

**மூல காரணங்கள்:**

- போருக்குப் பின் வடக்கு மற்றும் கிழக்கில் பொதுமக்களுக்கு சொந்தமான நிலம், வீடுகள் என்பனவற்றில் இராணுவ ஆக்கிரமிப்பு முடிவுக்கு வந்துள்ளது.

- முன்னாள் போர் வலயங்களில் இருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு - சட்ட ரீதியான நடைமுறைகளைப் பற்றிய அறிவு இல்லை (அல்லது அத்தகைய நடைமுறைகள் இல்லாதிருத்தல்) அவர்களுக்கு நிலத்தை மறுசீரமைக்க உதவுதல். இதற்கான காரணம் நில உரிமைப் பத்திரங்கள் மற்றும் பிற அதிகாரப்பூர்வ ஆவணங்களை அவர்கள் இழந்துவிட்டனர் என்பது தான் உண்மை.

- நில இழப்பு, வாழ்வாதார இழப்பு. வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பல மக்களின் வருமானம் விவசாய விளைபொருள்களாகும், அத்தகைய நிலம் கையகப்படுத்தப்படுவதனால் பலர் அளாதரவாக உள்ளனர்.

- அபிவிருத்தி மற்றும் ஏனைய திட்டங்கள் இராணுவத்தின் கைகளில் உள்ளன. இதனால் அபிவிருத்தி மற்றும் வருமான வாய்ப்புகளை உள்ளூர் மக்கள் இழந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.4.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

- நில அதிகாரத்தை மாற்றியமைத்தல். அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் நிறைவேற்றப்பட்ட போதிலும், இலங்கையின் அதிகார பகிர்வு முறையானது இன்னும் சிறந்த விளைவுகளை பெறவில்லை. மாகாண சபைகளின் கைகளில் பெரும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும், இதனால் நில பயன்பாட்டை கருத்தில் கொண்டு மேலும் பயனுள்ள அணுகுமுறைகள் பின்பற்றப்படலாம்.

- வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த அனைத்து நிலங்களையும் மீளமைத்தல்.

- விவசாய நடவடிக்கைகள்/ பிராந்திய அபிவிருத்தி திட்டங்கள் சமூகத்தின் உணர்வை வளர்ப்பதிலும், அனைத்து இனங்களுடனும் ஒன்றிணைந்து பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுபான்மையினர், மற்றும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள் அனைவருக்கும் ஆதரவளித்து பொது இலக்கொன்றை அடைவதற்கு ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கு வாய்ப்பளிக்கும்.

## 2.5. மொழித் தடைகள்

### 2.5.1. தற்போதைய நிலை, சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள்

மொழி, தொடர்பாடலின் ஒரு அடிப்படை கருவியாகும் இது இலங்கையில் இன ஒருமைப்பாடு மற்றும் பங்களிப்புக்கான வழிமுறைகளை வழங்குகின்றது. கடந்த காலத்தில் தவறான மொழி கொள்கைகள் நாட்டில் இன ரீதியிலான நல்லிணக்கம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பது தெளிவாகின்றது. கல்வியின் மூலம் இலங்கையர்களின் இருமொழி திறன் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை வழங்குவதுடன் நல்லிணக்கம், சமாதானம் மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை வளர்த்துக் கொள்ள உதவும்.

### 2.5.2. பிரச்சனைக்கு ஏதுவான காரணிகளும் விளைவுகளும்

**பொருளாதாரம்:**

- இலங்கையில் தற்போதைய பொருளாதார நிலைமைகள் வெவ்வேறு இனக்குழுக்களுக்கிடையிலான தொடர்பாடல் இடைவெளியை நிரப்பவில்லை. இது நாட்டில் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தி உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது.

- வெளிநாட்டு முதலீட்டைப் பெறுவதற்கான வாய்ப்புக் குன்றியுள்ளது. குறிப்பாக புலம்பெயர்ந்தோர் அல்லது இந்தியா (தமிழ்நாடு) அவர்களின் முக்கிய மொழி தமிழ் மற்றும் அவர்கள் முழு தேசத்துடனும் அல்லாது வடக்கு, கிழக்குடன் மட்டுமே தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர்.

- அவர்களது மொழி முக்கியமில்லாத பகுதிகளில் பிரதான மொழியைப் பேசும் குழுக்களுக்கு இடையில் அதிக வியாபார வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சிக்கல்களை எதிர்கொள்வதற்கு அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உ.தா. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் மொழிபெயர்ப்பாளரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையை அறிமுகப்படுத்துதல், நிர்வாக உதவியிலிருந்து மாறுபட்ட எந்தவொரு சூழ்நிலையிலும் மொழிபெயர்ப்பாளர்கள் அடிப்படை மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்துதல்.

**சமூகம்:**

- இரு மொழிகளையும் கற்றல் இரு சமூகங்களிடையே உள்ளுணர்வு மாற்றங்களை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்தப்படலாம். இது இலங்கையில் உள்ள அனைத்து கலாச்சாரங்கள் தொடர்பாகவும் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள உதவும்.

**சுற்றாடல்:**

- இலங்கை எதிர்கொள்ளும் மொழி தடைகளை நிர்வகிப்பதன் மூலம், சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் நிறைவேற்றப்பட்டு சரியான நேரத்தில், பயனுள்ள விதத்தில் சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

**மூல காரணங்கள்:**

- சில பிரதேசங்களில் நிலவும் மோதல் மற்றும் உறுதியற்ற தன்மை சமூக வகுப்புகள் தோன்றுவதற்கு வழிவகுக்கின்றது.
- இருமொழி / மும்மொழித் திறன்களை வளர்ப்பதில் முதலீகள் காணப்படாமை.
- இளைஞர்களின் கல்வி முறையில் இரு மொழிகளிலும் ஒருங்கிணைப்பு காணப்படாமை.
- பெரும்பான்மையினரும் சிறுபான்மையினரும் உள்ள பகுதிகளில் பரவலாகக் காணப்படும் பக்கசார்பு மற்றும் சிறுபான்மையினர் பெருமளவில் வாழும் ஏனைய பகுதிகளில் காணப்படும் பக்கசார்பு
- வள கட்டுப்பாடு, நிதி மற்றும் மனித வளங்கள்

### 2.5.3. தீர்வுகள், நடவடிக்கைகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்

- இலங்கையில் உள்ள அனைத்து கலாச்சாரங்களையும் புரிந்து கொள்வதற்கு இரண்டு சமூகங்களிடையே உள்ளுணர்வு மாற்றங்களை உறுதிப்படுத்துவதற்கான ஒரு பிரதான கருவியாக இரு மொழிகளையும் கற்றறிந்து பயன்படுத்துதல்.
- இரு மொழிகளையும் கற்கும் சமூகங்களுக்கான ஒருங்கிணைந்த திறன்களை வழங்குதல்.
- உத்தியோகபூர்வ மொழிகளிலும் ஆங்கிலத்திலும் பாடநெறிகளை வழங்குவதன் மூலம் கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.
- பொதுச் சேவைகள் மற்றும் தகவல்தொடர்புகளை இரு உத்தியோகபூர்வ மொழிகளிலும் வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொலிஸ் உட்பட அனைத்து அரசாங்க சேவைகளிலும், குறிப்பாக தமிழ் பேசுபவர்கள் பெரும்பான்மை உள்ளவர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேசங்களிலும் தமிழ் பேசும் உத்தியோகத்தர்களை நியமித்தல்.

## 3. நீடித்து நிற்கும் முன்னோக்கு - 2020 மற்றும் அதற்கு அப்பால்

### 3.1. நல்லிணக்கம்

2017 ஆம் ஆண்டு மே மாதம் அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேசிய நல்லிணக்கக் கொள்கை ஒட்டுமொத்த சமாதானத்தையும், நல்லிணக்க செயற்பாட்டின் முக்கியத்துவத்தையும் காட்டுகின்றது. 2020 ஆம் ஆண்டளவில் நல்லிணக்க ஒழுங்குமுறைகளின் ஒருங்கிணைப்புக்கான செயலகம் முக்கிய இடைக்கால நீதி வழிமுறைகளை நிறுவுவதற்கு ஆதரவளிக்கும்: காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் (OMP), உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு (TRC) திருப்பிச் செலுத்தும் அலுவலகம் என்பன பாதிக்கப்பட்டவர்களுக்கு முழு ஆதரவை வழங்குமுகமாக 2020 ஆம் ஆண்டில் முழுமையாகச் செயற்படுத்தப்படும். கடந்த காலங்களில் நிகழ்ந்த மிக மோசமான குற்றங்கள் மற்றும் அட்டூழியங்களை ஆராய்வதற்கு உள்நாட்டு நீதித்துறைக்கான சட்டகக் கட்டமைப்பொன்று நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்குத் தயாராக உள்ளது. பொது மற்றும் தனியார் துறையில் பாரிய திட்டங்களை அதிகரிப்பதன் மூலம் இளைஞர்களின் வேலையில்லா விகிதம் குறைக்கப்படும். உதாரணமாக, மெகாபோலிஸ் திட்டம், மற்றும் சின்னமென் வாழ்க்கை திட்டம், சமூக அடிப்படையிலான முயற்சிகளில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் முதலீடு (SMEs) போன்றவை. வேலைவாய்ப்புகளை வழங்குவது, நாடு முழுவதுமான ஈடுபாட்டையும் உள்-சமூக ஒருங்கிணைப்புகளையும் ஊக்குவிப்பதோடு, உயர்ந்த இளைஞர் வேலையில்லாப் பிரச்சினையால் உருவாக்கப்பட்ட வன்முறை மற்றும் தீவிரவாத அபாயத்தை குறைக்கும்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், இலங்கை அரசாங்கம், தேசிய நல்லிணக்க கொள்கைகளை வகுப்பதிலும் பெண்களுக்கு எதிரான வன்முறை போன்ற பிரச்சினைகளைத் தீர்க்கவும், பெண் தலைமையிலான குடும்பங்களை மேம்படுத்துவதற்கும், பெண்களின் தொழில்முயற்சிகளை மேம்படுத்துவதற்கும், பாலினம் முக்கியத்துவத்தை மேம்படுத்துவதறகும் முக்கியத்துவம் அளித்துள்ளது. இந்த கொள்கைகள் 2020 ஆம் ஆண்டளவில் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மாகாண மட்டத்தில் அதிக முதலீட்டிற்கும் துரித அபிவிருத்திக்குமான பங்களிப்பை வழங்குவதுடன், ஒருங்கிணைந்த, ஜனநாயக இலங்கையில் அனைத்து சமூகங்களுக்கும் ஒரு சமமான இடத்தை வழங்கி அவர்களின் நீண்டகால பதட்டங்களை நீக்குதல், பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஊக்குவித்தல்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களை பொதுமக்களுக்குக் கையளித்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து இராணுவத்தை திரும்பப் பெறுதல் ஆகியன 2020 ஆம் ஆண்டளவில் நிறைவு செய்யப்படவுள்ளன. நிலங்களை மீளளித்து, பொதுமக்களுக்கு வர்த்தகங்ளை இடமாற்றம் செய்தல் என்பன சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் மேலதிக பொருளாதார வாய்ப்புகளை ஏற்படுத்தவும் குறிப்பாக வடக்கில் மற்றும் கிழக்கில் ஏதுவாக அமையும்.

தேசிய மட்டத்தில் தமிழ் மொழிக்கு சமமான பிரதிநிதித்துவத்தை வழங்குவதற்கு அரசாங்கம் முக்கிய நடவடிக்கைகளை எடுத்தள்ளது. 2020 ஆம் ஆண்டளவில், நீதி மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் சேவைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். உதாரணமாக, தமிழ் பேசும் மக்களுக்கு மிகவும் சுலபமாக அணுகக்கூடியவாறு அமைதல். அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், தேசிய இலக்குகள் என்பன தமிழ் மொழி உரிமைகளை மேலும் பலப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டில், தேசிய நல்லிணக்க முயற்சி தீவிரமாகவும் திறமையான இளைஞர் வேலைவாய்ப்பு திட்டங்கள், கல்வி, பாலின சமத்துவம் மற்றும் வாரியான பொருளாதார கொள்கை ஆகியவற்றில் முதலீடு, நல்ல நிர்வாகத்திற்கும், ஒரு தெளிவான தேசிய பார்வை தொடரவும் வழிவகுக்கும். இது சிங்கப்பூர் போன்ற நாடுகளில் பின்பற்றப்படும் உறுதிப்பாடு, புதுமை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கும். இது வளர்ந்துவரும் வெளிநாட்டு மற்றும் தேசிய முதலீட்டிற்கான அடித்தளத்தை அமைக்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி மற்றும் பிராந்தியங்கள் மற்றும் சமூகங்கள் முழுவதிலுமுள்ள சமூக குறிகாட்டிகளை மேம்படுத்துதல், இது 2030 மற்றும் அதற்குப் பின் அதிக சமூக நல்லிணக்கத்திற்கும் செழிப்பிற்கும் வழிவகுக்கும். 2030 ஆம் ஆண்டில் அனைத்து இலங்கையர்களுக்கும் சமாதானமான மற்றும் வளமான வருங்காலத்திற்கான கடின முயற்சி தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இம்முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிடின், வளர்ச்சி குன்றுதல், சமத்துவமின்மை, வறுமை, பிரிவினைவாத ஆட்சி போன்ற விளைவுகள் ஏற்படும்.

### 3.2. பாதுகாப்பு

எதிர்காலத்தில் குடிமக்களை மையப்படுத்திய பாதுகாப்பு மற்றும் பிரதேச மைய பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்ளக் கூடியவாறு அமையும். சர்வதேச அரங்கில் உள்ள அரசியல் கட்டமைப்பின் ஆயுட்காலம் குறித்து முன்கூட்டியே கணிக்க முடியாவிட்டாலும் எதிர்காலத்தில் வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் எமது பாதுகாப்பு மாதிரியை ஒழுங்கமைக்க வேண்டும். இதற்கான மாற்று இலக்கு இலங்கை ஒரு இயக்கவியல் பாதுகாப்பு மாதிரியைக் கொண்டிருக்க வேண்டும், அது நமது நாடு எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கலை எதிர்கொள்ளக் கூடியவாறு அமைதல் வேண்டும்.

2020

நாட்டின் தற்போதைய போக்குக் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் நமது நாடு எதிர்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள், இயல்பானதாக இருக்கக்கூடும். இத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு ஏற்றவாறு நிறுவன அமைப்பு முன்கூட்டியே வடிவமைக்கப்பட வேண்டும். எதிர்காலத்தின் பாதுகாப்பாக மொத்த பாதுகாப்பு அமைய வேண்டும். இலங்கை மக்கள் பௌதீக பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் நாட்டின் பாதுகாப்பு தந்திரோபாயத்தை முன்னெடுப்பதற்காக R & D முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பதற்கு உதவும். எனவே, நாம் இத்தகைய அச்சுறுத்தல்களினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருப்போம்.

2020 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கான பொது தேசிய அடையாளம் ஒன்றை உருவாக்குவது நாட்டிற்கு அவசியமாகும். குறிப்பாக இளைஞர்களின் தீவிரமயமாக்கலை கட்டுப்படுத்துவதற்கு. தீவிரமயமாக்கல் ஒரு உலகளாவிய அச்சுறுத்தலாகும். எனவே, இலங்கையில் அதன் தாக்கங்களைத் தடுக்க xenophobia வைத் தடுக்க வேண்டும். இது சம்பந்தமாக, அனைத்து இனங்களையும், கலாச்சாரங்களையும் மதங்களையும் மதிப்பதற்கு இலங்கையில் கல்வித் துறையில் கற்பிக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2025-2030**

இந்த காலப்பகுதியில், இலங்கையின், பாதுகாப்பானது மேலும் முழுமையான முறையில் அணுகப்பட வேண்டும். எதிர்காலத்திலும் இலங்கையில் பின்வரும் சாத்தியமான அச்சுறுத்தல்களை எதிர்கொள்வோம்: பொருளாதார தகவல் போர், சைபர் போர்முறை (உயிரியல் அங்கீகாரம் மற்றும் தனியுரிமைப் பிரச்சினைகள்), உயிரியல்-போர், விவசாய-பயங்கரவாதம், தீவிரவாதமும் இன அடையாளங்களும் அத்துடன் புவி-அரசியல் தந்திரோபாயச் சிக்கலகள். ஒரு விரிவான பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக் கொள்கை 2025 ஆம் ஆண்டளவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது சிந்தனைக் குழாய்கள் மூலமாக, பாராளுமன்றம் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் பங்களிப்புடன் தயாரிக்கப்பட வேண்டும்.

2030 ஆம் ஆண்டளவில் இலங்கை புவிசார் அரசியல் சூழலில் நிதி, கடல் மற்றும் சேவை என்பன தொடர்பாக இந்து சமுத்திரத்தின் நிலையமாக மாற வேண்டும். இதற்காக, இலங்கை இந்து சமுத்திரத்தில் சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையே தனது நிலைப்பாட்டை நிலைநிறுத்த வேண்டும். உலகப் பொருளாதார மன்றம்[40] 2030 ஆம் ஆண்டளவில் உலகம் பல துருவங்களாக இருக்கும் என்று முன்னறிவித்துள்ளது, எனவே இலங்கை இந்த சமநிலைப்படுத்தும் நடவடிக்கையை அதன் வெளியுறவுக் கொள்கையில் நீண்ட காலத் திட்டமாக உள்ளடக்க வேண்டும்.

மேலும், சீனாவின CPEC இன் "ஒரு பட்டி ஒரு சாலை" எனும் முயற்சி இந்து சமுத்திரத்தில் வர்த்தக முறைகளைப் பாதிக்கும். இது சீனாவிற்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையிலான வர்த்தகத்தைப் பெருமளவில் அதிகரிக்கும். இதன் மூலம் இலங்கை தனது வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். எனினும், இதனால் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகம் பாதிப்படையக்கூடாது.

---

40 https://www.weforum.org/agenda/2016/11/america-s-dominance-is-over/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

T9

# T9. இளைஞர் எதிர்ப்பரம்பரை முன்னோக்கு41

## 1. தற்போதைய நிலை

### 1.1. இலங்கையில் இளைஞர் தொகை

தேசிய இளைஞர் கொள்கை 15 வயது முதல் 29 வயது வரையிலான இளைஞர்களை இளைஞர்களாக வரையறுக்கிறது. 2012 ஆம் ஆண்டின் மக்கள்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பு 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த வயதினர் 4.92 மில்லியன் ஆகக் காணப்படுவர் (சுமார் 23 சதவீதம்) எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் இளைஞர் தொகையினைக் கருத்தில் கொண்டால், அவர்கள் தொழிலாளர் சக்தியாக முறையாகக் கையாளப்பட்டால், வளர்ச்சி மற்றும் உற்பத்தி சாதனமாகப் பயன்படுத்தப்படலாம். தேசிய இளைஞர் கொள்கை 2014, மூன்று பகுதிகள் அடங்கிய கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டது: ". இளைஞர்களுக்கு உகந்த, ஆதரவான மற்றும் சமநிலையான சூழல் காணப்படுவதனை உறுதி செய்வதற்கு (இளைஞர்களை உறுதிப்படுத்துவதற்கு) இளைஞர்களுக்கு சுயாதீனமான, ஆக்கத்திறனான,புத்தாக்கத்தை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புகள் உள்ளதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு (இளைஞர்களை உருவாக்குதல்) மற்றும் இளைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் தங்களின் சார்பாகவும் தங்கள் சமூகம் மற்றும் மனிதநேயம் சார்பாகப் பொறுப்பேற்கவும், (இளைஞர்களை மேம்படுத்துதல்) இளைஞர்களை வலுப்படுத்துதல் ". இலங்கையில் இளைஞர்களின் தொகை கிராமப்புறம், நகர்ப்புறம் மற்றும் தோட்டத் பகுதிகளிலும் பரந்து காணப்படுகின்றது. இதில் மூன்றாவது குறிப்பிடப்பட்ட பகுதியில் குறைந்த சதவீதத்திலேயே உள்ளனர். இளைஞர் தொகை ஏழு மாகாணங்கள் முழுவதும் பரவலாகப் பரந்து காணப்படுகின்றது. (இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு)

### 1.2 கல்வி மற்றும் தொழில்வாய்ப்பு

ஆட்கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகளுக்கு அமைய இலங்கையில் 15-19, 20-24, 25-29 வயதினரின் எழுத்தறிவு வீதம் முறையே 98.5, 98.3, 97.9 சதவீதம் ஆகும். பெண்களின் எழுத்தறிவு வீதம் உயர்வாகவும் கல்வி தொடர்பாக பாலின சமத்துவம் மிகக் குறைவாகவும் காணப்படுகின்றது. வேலைவாய்ப்புத் தொடர்பாகக் காணப்படும் தகவல்களுக்கு அமைய "க.பொ.த சா.த தகுதியுடன் காணப்படும் தொழிலாளர்களின் சதவீதம் 1992-2006 வரையில் 5.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. அத்துடன் க.பொ.த உ.த, பட்டதாரி தொழிலாளர்களின் சதவீதமும் அதிகரித்துள்ளது. அதே நேரம், கல்வி அறிவு அற்ற அல்லது ஆரம்ப கல்வியறிவுடன் தொழில் பெறுவோரின் அளவு குறிப்பிடத்தக்க அளவில் குறைவடைந்துள்ளது. (26.8 சத வீதத்திலிருந்து 21.0 சதவீதம் வரை)" (குணதிலக்க, ஆளுனர், Vodopivec, 2010) நூற்றாண்டு அபிவிருத்தித் திட்ட இலக்கில் குறிப்பிடப்பட்டவாறு (2014),

41 எழுதுனர் குழாம்: ப்ரவீன் அபயரத்ன (தலைவர்), நிலங்கி குலசிங்க, ரொசானே குரூஸ் மொரெஸ், ரன்ஜீவ முனசிங்க, சொஹான் தர்மராஜ், புமிந்த ஜயசூரிய, ஹர்ஷன ஹரிப்பிடிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கற்பதில் ஈடுபட்டுள்ள இளைஞர்களில் அரைவாசிப் பேர் பிரபல்யமான தொழில்கள் வைத்தியர், சட்டத்தரணி, பொறியியலாளர் மற்றும் ஆசிரியர்களாக விரும்புகின்றனர். எனினும் மத்திய வங்கி அறிக்கைப்படி 10 சதவீத இரண்டாம் நிலைப் பாடசாலைகளே உயர்தரத்தில் விஞ்ஞானப் பாடத்தை வழங்குகின்றன. அவர்களுள் கால்வாசிப் பேர் மேல் மாகாணத்தில் உள்ளனர். இதனால் அதிகளவு இலங்கை பட்டதாரி மாணவர்கள் கலைத்துறையில் கல்வி பயிலுகின்றனர். "இதனால் அதிகளவு கலைப் பட்டதாரிகள் காணப்படுவதனால் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட வேலை வாய்ப்புக்களே காணப்படுவதனால் அவர்களின் வேலையில்லாப் பிரச்சினை காணப்படுகின்றது" (UNDP, 2014). உயர்தரம் (சுமார் 200,000) மற்றும் பல்கலைக்கழக நுழைவிற்குத் (சுமார் 90,000) தகுதி பெறாத மாணவர்களின் எண்ணிக்கை பற்றி மேலும் ஆறாயப்படும். பல்கலைக் கழக நுழைவிற்குத் தகுதிபெற்றவர்களில், 100,000 பேரில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் காணப்படும் வரையறைகள் காரணமாக அனுமதியைப் பெற முடியவில்லை. 400,000 இளைஞர்கள் எந்தவொரு உயர் கல்வியையும் பெறவில்லை. கல்வி அமைப்பில் இந்த குறைபாடுகளை எதிர்கொள்வதற்காக இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன் மேம்பாட்டு அமைச்சு 17 நிறுவனங்களை நிறுவியுள்ளது. தேசிய தொழில் தகுதிக் கட்டமைப்பு, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) திட்டங்கள் 2014[5] ஆம் ஆண்டில் 80,000 இளைஞர்களுக்கு பயிற்சிகளை வழங்கின. இளைஞர்களின் (2014) மில்லேனியம் அபிவிருத்தி இலக்கு அறிக்கையின் படி, "நாட்டின் TVET துறை தாழ் மட்டத்தில் உள்ளது. இதற்கான காரணம், தகுதிகளிற்குக் குறைந்த வரவேற்பு, பட்டதாரிகளிற்குக் குறைந்த வேலைவாய்ப்பு, மற்றும் சந்தைத் தேவைக்குத் தகுதியற்ற பாடநெறிகள்" என்பனவாகும். 2015 ஆம் ஆண்டின் தொழிற்படை ஆய்வின் படி காலம் தாண்டிய உயர் கல்வி பாடத்திட்டங்கள், உயர் கல்வி முறை மற்றும் தனியார் துறைக்கு இடையே போதிய தொடர்பு காணப்படாமை, தொழிலாளர் சந்தையின் கோரிக்கைகளுக்குத் தகுதி இல்லாத தேர்ச்சிகள், இளைஞர்களிற்கு தொகையைப் பயன்படுத்தும் வாய்ப்புக்களை தடுத்தல் போன்றனவாகும்.

இலங்கையின் தொழிற்துறையில் சமீபத்திய வேலைவாய்ப்பு விகிதம் விவசாயத்துறையில் 28.4 வீதமாகவும், தொழில் துறையில் 26.3 வீதமாகவும், சேவைத் துறையில் 45.3 வீதமாகவும் உள்ளது. 2014 ஆம் ஆண்டின் இளைஞர் வேலையின்மை விகிதம் 18.5 சதவிகிதம் (UNDP, 2014) ஆகும். 2015 ஆம் ஆண்டில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது பயிற்சியில் ஈடுபட்ட இளைஞர்கள் 734,550 (மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரம் திணைக்களம், 2015) ஆகும். 2013 ஆம் ஆண்டின் தேசிய இளைஞர் ஆய்வு மற்றும் தரவரிசைகளின் அடிப்படையில் HDR 2014 இல் நடத்தப்பட்ட ஆய்வுகள் "முறையான தனியார் துறைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு, இளைஞர் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு வேலை வாய்ப்புகள், தொழில்முனைவு இன்மை, வர்க்கம், இனம், சாதி ஆகியவற்றின் ஆழமாக ஆழ்ந்த காரணிகள் "(UNDP, 2014). இந்த காரணிகள் இளைஞர்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதில் பிரதேச மட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன.

## 1.3. ஆட்சி மற்றும் கொள்கை

மேலே குறிப்பிடப்பட்டவாறு, இலங்கைக்கு தேசிய இளைஞர் கொள்கை - 2014 மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் கவுன்சில், தேசிய இளைஞர் கழகம், இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு போன்ற இளைஞர்களுக்காகவும் இளைஞர் விவகாரங்கள் தொடர்பாகவும் இயங்கும் அமைப்புக்கள் காணப்படுகின்றன. இலங்கையின் இளைஞர் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மனித அபிவிருத்தி அறிக்கை (HDR 2014) முக்கியமாகப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "இலங்கை இளைஞர்கள் தொடர்பான வன்முறை மற்றும் அரசியல் தீவிரவாதம் என்பன தொடர்பாக பொதுமக்கள் பெரும்பாலும் கவனம் செலுத்துகின்றனர். ஆனால் நெருக்கமான பகுப்பாய்வு, காலனித்துவத்திற்குப் பிற்பட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், அதன் கொள்கையிலும் சமுதாயத்திலும் (UNDP, 2014) சில தீவிர குறைபாடுகளில் முன்னணியில் உள்ளது என்பதைக் காட்டுகிறது. எனவே, உள்ளூர் இளைஞர்களின் நீண்டகால கொள்கைகளை செயல்படுத்தும்போது, அவர்களின் வாழ்க்கையில் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துவது முக்கியம். 2013 இல் தேசிய இளைஞர் ஆய்வில் ஒரு பகுதியாக நடத்தப்பட்ட கவனம் குழு கலந்துரையாடல்களில் பகிர்ந்து கொள்ளப்பட்ட ஒரு விடயம் "... கொள்கை நடைமுறைப்படுத்தல் காணப்படாமை. அமைதி மற்றும் ஜனநாயக வழிமுறையினூடாக மாற்றத்தை சாத்தியமாக்குவது அன்னியமானதாகவும், நம்பிக்கையற்றதாகவும் இருக்குமானால், ஒரு மாற்றம் அல்லது மாற்றத்தை சாத்தியமாக்குவது பற்றி ஏமாற்றமும், சிதைவும் வெளிப்படும். "(UNDP, 2014). அதே அளவிலான ஆய்வு,இளைஞர்கள் அரசியல் கட்சிகள், பிரதிநிதிகள் மற்றும் பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் பெரும் பகுதியினரை நம்பவில்லை. பொதுத் தனியார் மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதில் தொழில் நுட்பங்கள், அரசியல் தொடர்புகள், மற்றும் தொழில் பரிந்துரைகளில் பரிந்துரைக்கப்படும் என்று தேசிய இளைஞர் ஆய்வு 2013 தெரிவிக்கின்றது. இந்த தேவை மற்றும் அதனுடன் இணங்குவதற்கான முயற்சிகள், வேலையற்ற இளைஞர்களிடையேயும், முறைசாரா துறையில் வேலை செய்யும் இளைஞர்களிடையேயும் பாகுபாடு காணப்படுவதை அதிகரிக்கிறது.

## 2. முக்கிய சிக்கல்கள், தாக்கங்கள், தீர்வுகள்

### 2.1. அதிகரித்த நுகர்வோர்

முந்தைய தலைமுறையினர் (30 வயதுக்கு மேலானவர்கள்) தமது பெற்றோருக்கு ஒப்பான ஒரு சூழலிலேயே வளர்ந்தனர், ஒரு வானொலி அலைவரிசை, இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகள், மூன்றும் அரச கட்டுப்பாட்டிலே காணப்பட்டன. மற்றும் ஒரு நிலையான கம்பி தொலைபேசி இணைப்பு ஒன்று வீட்டில் அல்லது அண்மையில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் அல்லது அருகில் உள்ள நகரத்தில் காணப்பட்டது. 30 வயதுக்குட்பட்டோர் பல வானொலி மற்றும் தொலைக்காட்சி அலைவரிசைகள், விரைவாக விரிவடைந்த மற்றும் அணுகக்கூடிய மொபைல் போன் சந்தை மற்றும் இடம் சார்ந்த இணையத்தள அணுகல் வசதிகள், இவை அனைத்தும் துடிப்பான தனியார் துறை நிறுவனத்தால் இயக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள அனைத்து பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை தகவல் மையங்களிலும் இணையத்தள அணுகல் கை விரல் நுனியில் காணப்படுகின்றது. எல்லா இலங்கையர்களின் எல்லா வயதினரும் அனைத்து வகையான தகவல்களையும் பெறுகின்றனர். தற்போதைய பல்வேறு அரசியல் விவகாரங்கள், தொழில்நுட்பம், மற்றும் பிரபலமான கலாச்சாரம் ஆகியவற்றை இளைஞர்களுக்கு அம்பலப்படுத்துகின்ற அதே வேளையில், நுகர்வு மற்றும் போட்டித் தன்மை என்பனவற்றை ஆதரிக்கின்றது.

இளைஞர்கள் தங்கள் பெற்றோரிலும் முற்றாக மாறுபட்ட ஆடைகளை அணிகின்றனர். நவீன தொழில்நுட்ப சாதனங்களை அணுகவும், நாட்டின் பிற பகுதிகளுக்குச் சென்று கண்டுகளிக்கவும், பல்வேறு உணவு வகைகளை ருசிக்கவும், செலவழிப்பதில் குறைவான தயக்கத்தையும் காட்டுகின்றனர், பல்வேறு வகையான பொழுதுபோக்கு வாய்ப்புக்களை நாடுகின்றனர். தொழிலாளர் இடம்பெயர்வின் விளைவாக, தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப வாய்ப்புக்களை அணுகுதல், நுகர்வு பழக்க வழக்கங்கள், சமூக அடையாளங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் பங்கு பற்றுதல் ஆகியன நவீன தொழில் துறை, பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் பண்புகளை எடுத்துக் காட்டுகின்றன. இங்கு குறிப்பிடத்தக்க முக்கிய பண்பு வழக்கமான பொருளாதார மாதிரியின் அடிப்படையாகும், அதிகரித்த நுகர்வாகும். நுகர்வுப் பழக்க வழக்கங்கள் மூலம் ஊதியம் பெறுவதற்கும், 2020 ஆம் ஆண்டளவில் 5 மில்லியன் இளைஞர்களும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் 5 மில்லியன் இளைஞர்களுக்குமான வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கும் கோரிக்கை விடுக்கின்றது.

போருக்குப் பிந்தைய காலப்பகுதியில் இலங்கையின் நவீன பொருளாதாரத்துறை நவீன தொழில்துறை மாதிரியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது விநியோகம் மற்றும் நுகர்வுக்காக மூலப்பொருட்களை முடிவுப் பொருள்களாக மாற்றியமைக்கிறது. 1980 களின் முற்பகுதியில் பொருளாதாரத்துறையில் ஆதிக்கம் செலுத்திய விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைத் துறைகளினால் பிரதியிடப்பட்டது. இது தற்போது அதிக தொழிலாளர்களை உள்வாங்கி, பொருளாதார நடவடிக்கைகள் பெரும்பாலானவற்றிற்கு வகைகூறக் கூடியதாக உள்ளது. கடந்த எட்டு ஆண்டுகளில் ஒவ்வொரு பிரதான நகரிலுமுள்ள அனைத்து பெரிய நகரங்களிலும் அங்காடி சங்கிலிகள், நிதி மற்றும் குத்தகை நிறுவனங்கள் மற்றும் முன்னணி நுகர்வோர் பொருள்கள் என்பனவற்றின் தொடர்ச்சியான செயல்பாடுகள் மற்றும் விரிவாக்கம், இலங்கையின் புதிய தலைமுறையினரின் வருமானம், செலவினம் மற்றும் நுகர்வு பழக்கங்கள் என்பனவற்றை அதிகரித்துள்ளது.

இளைஞர்கள் பொருளாதார அமைப்பை நிர்ணயிப்பதற்கான திறனைக் கொண்டிருக்கவில்லை – அது தொடர்பாக வினவவும் வாக்களிக்கவும் மட்டுமே இயலும். இருப்பினும், நாம் இன்று, சிறந்த முறையில் தரம் வாய்ந்ததாக மேற்கொள்வதற்கு இணங்க, இலங்கையின் இளைஞர்கள் தரம் வாய்ந்த முறையில் நுகர்வர் என்று எதிர்பார்க்க வேண்டும். ஏராளமான திறன்களை வளர்ப்பதற்கும், பணியமர்த்துபவர்களுக்கும், அதிகாரம் பெற்ற இளைஞர்களுக்கும் அவர்களின் நுகர்வு தரம் மற்றும் அளவு என்பனவற்றின் அடிப்படையில் அமைய வேண்டும். இந்த சூழ்நிலையில், நிலையான நுகர்வு மற்றும் காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிக்கும் போது, அது ஒரு சவாலான சூழ்நிலையை முன்வைக்கிறது.

2017 ஆகஸ்ட் 2 ஆம் திகதி புவி மேற்பார்வை நாள், ஒரு வருடம் பூமியை ஆதாரமாக ஒதுக்கீடு செய்வதையும், அதன் விளைவாக பூமியை மீண்டும் உருவாக்குவதற்கும் நுகர்வு விளைவுகளை உறிஞ்சுவதற்கு பூமியின் திறனைப் பயன்படுத்துவதும் ஆகும். எதிர்கால தலைமுறையினருக்கான வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில், இடை-தலைமுறை சமத்துவத்தை நாம் எப்படி நுகர்வுக்கு இட்டுச் செல்கிறோம்? சமுதாயத்தின் சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதார நோக்கங்களை சமநிலைப்படுத்துவதற்கு மேற்கத்திய தொழில்துறை மாதிரி போதாதென்று இப்போது தெளிவாகின்றது. (பெட்டி B.1 அறிமுகத்தில் விவரிக்கப்பட்டுள்ள சமநிலைப்படுத்தப்பட்ட பச்சை வளர்ச்சி பாதையைப் பார்க்கவும்). சந்தை சக்திகளின் வள ஆதாரம், உற்பத்தி, நுகர்வு, மற்றும் கழிவுகள் என்பனவற்றை நீடித்த முறையில் திறம்பட மாற்ற முடியவில்லை. ஆனாலும், இதே மாதிரியான வளர்ச்சியை நாம் தொடர்கின்றோம், இளைஞர்களுக்கு ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை தொடர்ந்து உறுதிப்படுத்துகின்றோம்.

இன்றைய இளைஞர்களுக்கு ஒரு பாதுகாப்பான எதிர்காலம் இருக்க வேண்டுமானால், அறிவியல் மற்றும் அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு முரண் இல்லாத வளர்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான ஒரு பொருளாதார மாதிரியை நாம் தழுவிக்கொள்ள வேண்டும். இந்த சூழ்நிலையில் தீர்வுக்கு சுற்றாடல் அமைப்புகளின் சுமைத்திறனை அடிப்படையாகக் கொண்ட சுற்றுச்சூழல் பொருளாதார அணுகுமுறை பரிந்துரைக்கப்படுகிறது.

## 2.2. காலநிலை மாற்றம்

காலநிலை மாற்றம் இன்று ஒரு உள்ளக எண்ணக்கருவாகும். கிராமப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்கும், குறிப்பாக அவர்களின் வாழ்வாதாரத்திற்காகக் கணிக்கக்கூடிய வானிலை மாதிரிகளை சார்ந்து இருப்பவர்களுக்கும். வறண்ட பகுதிகளில் வறண்ட நிலப்பரப்புடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிர வானிலை நிகழ்வுகள் மேலும் வறட்சியையும் ஈரப் பிரதேசங்கள் மேலும் ஈரலிப்பையும் ஏற்படுத்தக் கூடியவாறு கடந்த தசாப்தத்தின் வானிலை மாற்றம் இலங்கையின் நீண்ட கால நிலைத்தன்மையை ஏற்படுத்தியுள்ளன. எனினும், காலநிலை மாற்றம் தொடர்பான நிகழ்வுகளின் தீவிரம் மற்றும் நிச்சயமற்ற தன்மை அதிகரிப்பைத் தொடர்ந்து அனுபவித்து வருவதனால், விவசாயம் மற்றும் தோட்டத் துறையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் வறட்சி ஏற்படுவதும் மற்றும் வெள்ளம் என்பன பொதுவாக நீர் காப்பைப் பாதிக்கும். இத்தகைய சூழ்நிலையில் சுற்றுலா துறையில் உள்ளார்ந்த ஆபத்து ஏற்படுகிறது. உணவு மற்றும் நீர் பாதுகாப்பின்மை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விளைவாகப் பொருளாதாரம் மற்றும் இலங்கை மக்களின் நலன் மற்றும் குறிப்பாக இளைஞர்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும். விவசாயம், தோட்டத்துறை மற்றும் சுற்றுலா துறைகளில் பணியாற்றும் இளைஞர்கள் குறைவான வேலை வாய்ப்புகளினால் பாதிக்கப்படுவர் அத்தகைய சூழ்நிலையில் தேக்கம் அல்லது குறைந்து வருமானம் ஆகிய விளைவுகளை ஏற்படுத்தும்.

இலங்கையில் காலநிலை மாற்றத்தின் தாக்கத்தின் மீதான தற்போதைய புரிந்துணர்வு மற்றும் ஆய்வுகள் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டமிடலுடன் இணைக்கப்பட வேண்டும். விவசாயத் துறை, நிலப் பயன்பாடு, உணவு பாதுகாப்பு போன்ற முன்னுரிமைகள் கருதப்பட வேண்டும்.

## 2.3. கிராமப்புற மற்றும் நகரப்புற இடம்பெயர்வு

மேற்கு மாகாணம் தவிர்ந்த இலங்கையின் சனத்தொகை முதன்மையாகக் கிராமப்புறங்களிலேயே தங்கி வாழ்கின்றனர். அவர்கள் விவசாய நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றனர். பல கிராமப்புற இளைஞர்கள் தற்காலிக மற்றும் நிரந்தர வேலை வாய்ப்புகளைத் தேடி நகர்ப்புறங்களுக்கு குடிபெயர்கின்றனர். இளைஞர்கள் அடிப்படை வருமான இலக்குகளை அடைய விவசாய நடவடிக்கைகளுடன் தொழில் மற்றும் சேவை தொடர்பான வேலைவாய்ப்புக்களுடனும் இணைக்கின்றன என்பதை தரவுகளை ஆராய்ந்ததில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பல கிராமப்புற இளைஞர்கள் பெரிய நகரங்களுக்கு குடிபெயர்கின்றனர், பிரதானமாக மேற்கு மாகாணத்தில் நிர்மாணத் துறையில் வேலை வாய்ப்புக்களை நாடிச் செல்கின்றனர். அவர்கள் தேவைப்படும் போது, வேளாண்மை நடவடிக்கைகளுக்குத் திரும்பவும் செல்கின்றனர். ஆனால் அவர்களின் முதன்மை வருமான ஆதாரமாகக் கொள்வதில்லை. மாறாக அவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் பயன்படுத்தவில்லை. நகர்ப்புற குடியேற்றத்தின் இத்தகைய வடிவங்கள் விவசாய துறைகளில் நிரந்தர மற்றும் திறமையான தொழிலாளர்கள் இண்மையையும் நிர்மாணத்துறையிலும் சேவைகள் துறையிலும் நம்பகமற்ற தொழிலாளர் குழாம் ஒன்றையும் உருவாக்கியுள்ளது.

திட்டமிடப்படாத நகரமயமாக்கல் உட்கட்டமைப்பு, அடிப்படை சேவைகள், நிலம், வீடு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றில் சிக்கல்களை ஏற்படுத்தும். இந்த நெரிசல் சக்திகள் இலங்கையின் கட்டுப்பாடற்ற நகர்ப்புறத்தின் மையத்தில் உள்ளன. மறை நகரமயமாக்கலினால் நகர்ப்புறத்தில் வசிக்கும் மக்கள்தொகைகளில் அதிகாரபூர்வ நகர எல்லைகளுக்கு வெளியே வசிக்கும் தொகையினர் தொடர்பாகத் புள்ளிவிபரங்களில் இருந்து புரிந்து கொள்ள முடிகின்றது.

"இலங்கையின் நகர்ப்புறச் சனத்தொகை 14-18 சதவீதத்தில் காணப்படுகின்றது என உத்தியோகபூர்வ புள்ளிவிபரவியல் குறிப்பிடுகிறது – எனினும் நீங்கள் நகரமயமாக்கலை அவதானித்தால் இது (உண்மையாக) 47 சதவீதமாகும்" என உலக வங்கி குறிப்பிடுகின்றது.

நகர்ப்புற குடியேற்றத்துடன் தொடர்புடைய சிக்கல்களைக் கையாள்வதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் தேசிய அபிவிருத்தி நோக்கங்களை நிறைவு செய்யும் குறுக்குவழி அணுகுமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22-CM 27932

அவசியமாகும். உதாரணமாக, விவசாய துறையில் குறைந்த வருவாயின் காரணமாக நகர்ப்புறப் பகுதிகளிற்குத் தற்காலிகமாக இடம்பெயர்ந்ததற்கான காரணம், காலநிலை மாற்றம், நீர் பாதுகாப்பின்மை, விலங்கு-மனித மோதல் மற்றும் சந்தை சிதைவுகள் ஆகியவையாகும். இந்த நிலைமை பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றை பாதிக்கிறது.

நகர்ப்புறங்களின் தன்மை, கட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் மேம்பட்ட தொடர்பு என்பன நிர்வகிக்கப்பட வேண்டும். நிலம் மற்றும் வீட்டுக் கொள்கை சீர்திருத்தங்கள் அனைவருக்கும் சிறந்த அணுகலை வழங்குவதற்காகப் புதுமையான வீட்டுவசதி நிதியுதவிகளை வழங்குவதற்கு இடமளிக்க வேண்டும்.

காலநிலை மாற்றத்தைத் தழுவும் உத்திகள், விவசாயத் துறையில் இளைஞர்களின் பங்களிப்புக்கு ஊக்குவிப்புப் பணம் வழங்குதல், தேசிய உணவு பாதுகாப்பு உத்திகள், சுற்றுச்சூழல் அடிப்படையிலான நில பயன்பாட்டு மேலாண்மை உத்திகள் மற்றும் நீர் முகாமைத்துவம் ஆகியவற்றை தக்கவைத்துக்கொள்ள ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள் தேவையாகும்.

## 2.4. மாசடைதல்

உற்பத்தி மற்றும் நுகர்வு அடிப்படையில் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளின் விளைவு பயனற்றதாகும். காற்று, நிலம் மற்றும் நீர் ஆகியவற்றில் வெளியிடப்படும் மாசுக்களை நாம் எவ்வாறு நிர்வகிக்கின்றோம் என்பது எதிர்கால தலைமுறையினரின் வாழ்க்கை மற்றும் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கின்றது. சமீபத்திய அறிக்கைகளின் படி பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் கடல் மாசடைவதற்குப் பங்களிப்பு செய்யும் பிரதான நாடுகளில் முதல் வரிசையில் இலங்கையும் இடம் பெற்றுள்ளன. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் திறம்பட கண்காணிக்கவோ கட்டுப்படுத்தவோ முடியாத பல மாசுக்கள் நிலத்தில் இருந்து மண்ணிற்கும் நீரிற்கும் செல்லுகின்றன. கைத்தொழில் வலயங்களுக்கு வெளியே அமைக்கப்பட்ட மக்கள் தனிமைப்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளில் இருந்தும் கைத்தொழில் பேட்டைகளில் இருந்தும் வெளியேறும் கழிவுப்பொருள்கள், குப்பைகள், தொழிற்சாலைக் கழிவுகள் ஆறுகள், நீரோடைகள், மற்றும் கடலுக்குள் கலப்பது ஒரு உதாரணம் ஆகும். பல்வேறு கழிவுகளை அல்லது சேகரிப்பு மையங்களில் சேகரிக்கப்பட்ட மின்னணு கழிவுகள் மற்றொரு வளர்ந்து வரும் அபாயம் ஆகும்.

இலங்கையில் இரசாயன விவசாய பூச்சிக்கொல்லிகள் மற்றும் உரங்களைக் கொள்வனவு செய்யும் நுகர்வோர் தொகை அதிகமாகும். வடகிழக்கு மாகாணத்தில் நாட்பட்ட சிறுநீரக (சி.கே.டி) நோய்க்கு முகம் கொடுக்கும் தொகையினர் அதிகமாகும். மத்திய மாகாணத்தில் உள்ள விவசாயிகள் மிக அதிக அளவு உரங்களைப் பயன்படுத்தி மண்ணை நன்கு வளமாக்குகின்றனர். ஆனால் அவை இரசாயனவியல் ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும் அபாயகரமானவையாக உள்ளன. உர மானியம் மற்றும் மாற்று உரமாக சேதன உரங்களை ஊக்குவித்தல் இவ்வபாயங்களைக் குறைப்பதற்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் நடைமுறைப்படுத்திய ஒரு முக்கியமான மாற்று வழியாகும். ஆயினும்கூட, பல விவசாயிகள் சந்தையில் கிடைக்கக்கூடிய இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை நம்பியிருக்கிறார்கள். மண் அரிப்பு காரணமாக மண்ணின் இழப்பு, முக்கியமாக கடுமையான மழைப்பொழிவு மற்றும் வெள்ளம் காரணமாக அதன் இயற்கை தாவர கலவைகள் அகற்றப்படுதல் மண்ணில் நிலவுகின்ற பிரச்சினைகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்மக் கழிவு உற்பத்தி மற்றும் மாசடைதல் ஆகியவற்றினால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு, தொடர்புடைய கொள்கைகள் மற்றும் தேசிய உத்திகள் தாமதமின்றி வினைத்திறனுடன் செயற்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக மேல் மாகாணத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டங்கள் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இடம்பெற்றுள்ளன, ஆனால் பல்வேறு அரசியல் மற்றும் சமுதாய அடிப்படையிலான அழுத்தங்களின் காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. இலத்திரனியல் மற்றும் தொழில்துறை கழிவுகளினால் அதிகரித்து வரும் அபாயங்களை எதிர்கொள்வதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இயலளவு அதிகரிக்கப்பட வேண்டும்.

சேதன உர மானியக் கொள்கையை அமல்படுத்துவதற்கும் மண் மற்றும் நீர் மாசுபடுவதைத் தடுப்பதற்கும், சீரழிந்த விவசாய நிலத்தை மறுசீரமைப்பதற்கும் சேதன விவசாயத் தொழில்நுட்பங்களை மேலும் பரந்த அடிப்படையிலான பயன்படத்தவும் அபிவிருத்தி செய்யவும் வேண்டும்.

## 2.5 தனியார் துறை மற்றும் கல்வி

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் பிரதான இயக்கியாகத் தனியார் துறை கருதப்படுகின்றது. தனியார் துறை வளர்ச்சிக்கான போட்டி, பிராந்திய மற்றும் உலகளாவிய ரீதியாக வளர்ந்துள்ளது. இது கல்வி, திறமை மற்றும் புத்தாக்கம் மிக்க ஒரு தொழிலாளர் படையணியை வேண்டி நிற்கின்றது. இலங்கையில் கல்வி கற்ற இளைஞர்கள் கல்வித் தராதரம் தனியார் துறை தொழிலாளர் கோரிக்கைகளுக்கு பொருந்தாதது இருப்பது தொடர்பாக இந்த அத்தியாயத்தின் அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கலைத்துறை தொடர்பான தகுதிகளுடன் பட்டம் பெற்ற பெரும்பாலான பட்டதாரிகள் தனியார் துறை வேலைவாய்ப்பிற்கு தகுதியற்றவர்களாக உள்ளனர். இவர்கள் தனியார் துறை தேவைகளை பூர்த்தி செய்வதில்லை. பொறியியல் மற்றும் மருத்துவ துறைகளில் பயின்ற பட்டதாரிகள் பெரும்பாலும் உள்ளூர் பொருளாதாரத்தில் மேம்பட்ட திறன்களையும் அறிவையும் பயன்படுத்த வாய்ப்பு இல்லாததால் நாட்டிற்கு வெளியே வேலைவாய்ப்புகளை நாடுகின்றனர். மேலும், இலங்கைப் பெற்றோர்களுக்கு, சில தொழில்கள் தொடர்பாக மரபார்ந்த மனப்பாங்கு காணப்படுகின்றது. அவை மற்றவைகளை விட மேலானது என எண்ணுகின்றனர். இரண்டாம் நிலை கல்வியின் இறுதியில், அந்த தொழில்களுக்கான கல்வியைப் பெறுவதில் பிள்ளைகளின் தேவைகள் குறைவாக உள்ளபோது, அவர்கள் மற்றொரு தொழில் வாய்ப்பைக் கண்டறிவதற்குப் போராடுகின்றார்கள். பெற்றோரும் இளைஞர்களும் உழைப்பு கோரிக்கையின் இயக்கவியல் மற்றும் வாய்ப்புகள் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்பது முக்கியம். பாடசாலை மட்டத்தில் தொழில் வழிகாட்டல் வழங்கப்படுவது அவசியம் என நினைத்தேன். இது இளைஞர்களுக்கு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகிறார்களோ என்பதனை அடையாளம் கண்டுகொள்வதற்கு உதவியாக அமையும்.

தொழிலாளர் சந்தையில் திறமையான தொழிலாளர்களின் பற்றாக்குறை மற்றும் எந்த தொழில் திறன்களும் இல்லாத தொழிலாளர் படையணியை அறிமுகப்படுத்துகின்ற உயர் கல்வி நிறுவகங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தனியார் துறை தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு சிறந்த ஊதியத்தைக் கொடுக்கத் தயாராக உள்ள நிலையில், கல்வி முறை இந்த கோரிக்கையை பூர்த்தி செய்வதில்லை. பிரயோக மற்றும் கோட்பாட்டு அறிவுடன் கூடிய தனிநபர்களை உருவாக்குவதற்கு ஏற்றவாறு பாடசாலைக் கலைத்திட்ட நடைமுறை மறுவடிவமைக்கப்பட வேண்டும். பாடசாலையை விட்டு வெளியேறும் போது, தொழில் வாய்ப்புகளைத் தேர்வு செய்யக் கூடியவாறு உயர்தரப் பாடத்திட்டங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும். தற்போதுள்ள தொழில்சார் பயிற்சி நிறுவனங்களிலிருந்தும், உயர்தரப் பரீட்சைக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற மாணவர்களுக்குத் தொழில்சார் கல்வித் துறைகளை அணுகுவதற்கான நடைமுறைகள் எதுவும் காணப்படவில்லை.

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் ஆடை உற்பத்தி ஆகிய துறைகளில் உலகளாவிய ரீதியில் போட்டிகள் நிலவுகின்றன. இருப்பினும், அனைத்து துறைகளிலும் உள்ள பாடத்திட்டங்கள் இந்த துறைகளில் இருந்து அல்லது தற்போது வளர்ச்சியடைந்துள்ள ஏனைய துறைகளான சூழல்-சுற்றுலாத்துறை, மற்றும் பச்சைத் தொழிநுட்பம் என்பனவற்றில் இருந்து மிகத் தொலைவில் உள்ளன. தனியார் துறை தற்போது புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பத்தை ஊக்குவிக்கும் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இருப்பினும், இத்தகைய திட்டங்கள் மற்றும் அரசியல் பற்றாக்குறை ஆகியன தொடர்பான தற்காலிகக் கொள்கைகள் நிறைவடைந்த பின், இந்த திட்டங்களில் தனியார் துறை ஈடுபாட்டை அதிகரித்துள்ளது. ஐ.நா. வின் நீடித்து நிற்கும் அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) ஏற்றவாறு பொருளாதார மாற்றத்தை அடைவதற்கு இலங்கையில் ஒரு திறமையான சக்திவாய்ந்த இளைஞர் கல்வித்திட்டம் ஒன்றை ஆரம்பித்தல் வேண்டும். புதிய துறையை ஊக்குவிப்பதிலும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதிலும் தனியார் துறையின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்றாலும், கல்வி முறைமை இளைஞர்களுக்குத் தேவையான திறன்களை வளர்ப்பதற்கு அவசியமான திறன்களை வழங்க வேண்டும்.

இலங்கையில் இளைஞர்களின் தரத்தை உயர்த்துதல் மற்றும் அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையான கற்றல் மற்றும் திறமைகளுக்கு வழிவகுத்து, நாட்டின் மாறிவரும் தொழிலாளர் சந்தைக்கு தேவையான திறனைக் கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிற்சி வாய்ப்புகள் அரசு உதவி பெறும் உயர் கல்வியில் நுழைவதற்கு தேவையான மதிப்பெண்களை வழங்குவதில்லை. உயர் கல்வியைப் பெறுவதற்கு குறைந்த சலுகை அடிப்படையில் சிறந்த கடன் மற்றும் புலமைப்பரிசில் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

கல்வி முறை பட்டதாரிகளிற்கு தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கண்டுபிடிப்புகளினால் உந்தப்பட்ட செயல்திறன் அடிப்படையிலான கலாச்சாரத்தை அழிப்பதற்கு உதவ வேண்டும்.

கல்வித் துறையில் ஆங்கில மொழிக்கு ஊக்கமளிக்கும் ஊக்குவிப்பு எல்லா இளைஞர்களுக்கும் ஆங்கிலத்தில் கற்பதற்கான வாய்ப்புக்களை வழங்குவதுடன் ஆங்கிலம் உலகளாவிய ரீதியில் தனியார் துறை தேர்வு செய்யும் மொழியாகவும் உள்ளது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பனவற்றிற்ன் உச்ச விளிம்பில் இருக்கும் இலங்கை நிறுவனங்கள் தொழில்நுட்ப பரிமாற்றங்களை முன்னோடியாகக் கொண்டிருக்க வேண்டும். இலங்கையில் அறிவையும் தொழில்நுட்பத்தையும் ஆதரிக்கும் மற்றும் ஊக்குவிக்கும் விதத்தில் அறிவுசார் சொத்துச் சட்டங்கள் மறுபரிசீலனை செய்யப்பட்டு மாற்றப்பட வேண்டும்.

### 2.6. விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு

விவசாயம் நமது பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்ற அதே வேளையில், தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் விதைகள் மற்றும் நகலிகள் 1970 மற்றும் 1980 களில் உருவாக்கப்பட்டன. இப்போது இந்த நகலிகளின் உற்பத்தித்திறன் மற்றும் நோய் எதிர்திறன் என்பன தீவிரமான பிரச்சினையாக மாறியுள்ளன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் நெல் விதை வகைகள் தனிமைப்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் மற்றும் புறக்கணிக்கத்தக்க ஊட்டச்சத்து காலநிலை மாற்றங்களுக்கு எதிர்ப்பைக் காட்டுகின்றன. மேலும், காய்கறி மற்றும் பழங்கள் என்பனவற்றை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பல விதைகள் இறக்குமதி செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 இல் உலக உணவு உச்சி மாநாடு "அனைத்து மக்களுக்கும், தமது நாளாந்த தேவைகளுக்குத் தேவையான சத்துணவை எல்லா நேரங்களிலும், போதுமான, தேவையான அளவில் பாதுகாப்பாகவும் பௌதீகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் அணுகக் கூடிய நிலை" எனும் தொனிப்பொருளில் கவனம் செலுத்துகின்றது.

உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான தேசிய தந்திரோபாய மதிப்பீடு 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. "உணவு பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த சிக்கல்களை எதிர்கொள்ளும் மற்றொரு முக்கியமான வழி, பேரழிவுக் குறைப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றில் முதலீடு செய்வதை உறுதிப்படுத்துவதாகும். தற்போது காணப்படாத விவசாயிகளுக்கும் கொள்கை வகுப்பாளர்களுக்கும் இடையிலான தகவல் தொடர்பு இடைவெளிக்குப் பாலம் அமைத்தல் ".

விவசாயத் துறையில் தொழில் வாய்ப்புகளை நிலைநிறுத்துவதற்கான ஒரு தந்திரோபாயமாக சிறிய அளவிலான விவசாய வர்த்தகத் துறைகளில் இளைஞர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்முயற்சியை மேம்படுத்துவதற்கும் இந்த அறிக்கையின் எழுத்தாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர். 2013 ஆம் ஆண்டின் இளைஞர் கணக்கெடுப்பின்படி, உணவு மற்றும் பாதுகாப்பு வசதிகள் இருந்தபோதிலும், இளம் வயதினரிடையே சமச்சீரான உணவு மற்றும் ஊட்டச்சத்து பற்றிய தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. உணவு பாதுகாப்பு குறித்து அச்சம் நகர்ப்புற குடியேற்றம் விவசாய துறையில் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு சிக்கலான வறுமை சுழற்சி ஆகியன காணப்படுகின்றன.

உயர் விளைச்சலைத் தரக்கூடிய, ஊட்டச்சத்துள்ள, மேம்பட்ட நோய் எதிர்ப்புத் தன்மையையுடைய விவசாய உற்பத்தியை பெறக்கூடிய விதைகள் மற்றும் நகலிகளை உற்பத்தி செய்வதற்கான தேசிய ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

இலங்கையில் காணப்படும் பல்வகையான மரபு ரீதியான நுகர்வுப் பழங்கள் மற்றும் காய்கறி வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் உள்நாட்டுச் சந்தை வாய்ப்பை விரவாக்குதல் மற்றும் அவற்றை வெளிநாட்டுச் சந்தைக்கு ஏற்றுமதி செய்தல்.

நீர்க்காப்பு, காலநிலை மாற்றம் மற்றும் குறுகிய ரீதியாகத் திட்டமிடப்பட்ட நிலப் பயன்பாடு, வழமையான நிலப் பாவனைச் செயன்முறைகள் என்பன விவசாயத்துறை மற்றும் உணவுக்காப்பு என்பனவற்றுடன் தொடர்புடைய தேசிய தந்திரோபாயத்தில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் ஆகும். அத்துடன் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மட்டுமன்றி நடுநிலையான உணவுப் பழக்க வழக்கங்களை மேற்கொள்வதற்கும் தேவையான அளவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 2.7. ஆட்சி (பிரிவு T3 ஐயும் பார்க்கவும்)

உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில் உலகளாவில் மாற்றத்திற்கான வினையூக்கியாகத் தொழிபட்டமை நிரூபிக்கப்பட்டுள்ளதனால் தாம் விரும்பும் மாற்றத்தை இளைஞர்கள் கண்டுபிடித்துள்ளதால் அவர்கள் முன்னெச்சரிக்கையான வழிமுறைகளைத் தேடுகின்றனர். மற்றும் இளைஞர்களின் இந்த குணவியல்பின் வாயிலாக, அவர்கள் விரும்பும் மாற்றம் தேசிய அளவிலான SDG ஐ நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு உந்து சக்தியாகும். இலங்கையில் அபிவிருத்திச் செயற்பாட்டை அமுல்படுத்துவது மற்றும் இலக்குகளை அடைவதற்கான தந்திரோபாயத்தை அமுல்படுத்துவதன் மூலம் அபிவிருத்தியை எவ்வாறு அடையமுடியும், அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பனவற்றை விளங்கிக் கொள்வதற்கு ஒரு முன்னுதாரண மாற்றம் தேவைப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் இளைஞர்கள் நவீன பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும், விருத்தி செய்வதிலும் அதிக அளவில் ஈடுபாடு கொண்டுள்ள அதே வேளையில், அவர்கள் அதனை நிர்வகிப்பவர்களாக இல்லை, ஆனால் அபிவிருத்திக்கான பாதையின் வாரிசுகளாக அவர்கள் உள்ளனர். முறையான அரசாங்கத் தலைமைத்துவம், அரசாங்க தொடர்பு மற்றும் சம்பந்தப்பட்ட செயல்களில் ஈடுபாடு இல்லாமல் காணப்படுகின்றமையினால் இளைஞர்கள் வேலையின்மை, பொருளாதார சமத்துவமின்மை, பேரழிவு விளைவு மற்றும் குறைப்பு நடவடிக்கைகள் மற்றும் உணவு பாதுகாப்பு போன்ற நீடித்து நிற்காத செயற்பாடுகளில் அவர்கள் எதிர்வினையாற்ற வேண்டியிருக்கும். இலங்கையுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ள நாடுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தல் போன்ற காரணிகள் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் இளைஞர்களால் உணரப்பட்ட ஏமாற்றங்களை அதிகரிக்கச் செய்யும்.

இலங்கையின் சனத்தொகை பங்கீட்டைப் பெறுவதற்கு, அதன் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதற்கு, அபிவிருத்திக்கு நிலையான அணுகுமுறைகளுடன் கூடிய அரச திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். இன்று, பல தேசிய மட்ட முயற்சிகள் நிலையான அபிவிருத்தியைத் தழுவியுள்ளன. எவ்வாறெனினும், இந்த முயற்சிகள் SDG இன் அரசாங்கத்திற்கு போதுமானதாக இருப்பது அவசியம். அவ்வாறு செய்வதற்கு, அமைச்சரவை மற்றும் அதிகாரங்களுக்கு இடையில் அரசாங்க கொள்கை மற்றும் திட்டங்களின் இரட்டிப்பாக்கம் மற்றும் பிரதிகளை நீக்குதல் அல்லது ஒருங்கிணைத்தல் மற்றும் பயனுள்ள முறையில் வழங்குதல் மற்றும் செயல்படுத்துதல் வேண்டும்.

## 3. நீடித்து நிலைத்தல் முன்னோக்கு - 2020 மற்றும் அதற்கு அப்பால்

முந்தைய பிரிவில் வழங்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகளும் கூட்டாக ஒருங்கிணைக்கப்பட்டு, குறுக்கீடு மற்றும் ஒருங்கிணைந்த தந்திரோபாயம் திறம்பட செயல்படுத்தப்பட வேண்டும். இத்தகைய ஒரு முழுமையான அணுகுமுறை SDG களின் மூலம் அளவிடப்படுகிறது. 2020 ஆம் ஆண்டின் இளைஞர்களின் பரிமாற்றக் கண்ணோட்டத்தில் எதிர்பார்ப்பு SDG களுக்கான தேசிய இலக்குகளை அடைவதற்கு உறுதியளிக்கும் ஒரு நாடு ஆகும். அவ்வாறு மேற்கொள்ளும் போது, இலங்கையின் சுற்றாடல் அமைப்புகளின் சுமைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேசிய பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில் துறை சார்ந்த தேசிய உத்திகளை அடிப்படையாகக் கொண்டதாக அரச நடவடிக்கைகளும் தலையீடுகளும் அமைய வேண்டும். சுற்றாடல் அடிப்படையிலான அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளும் போது, இலங்கையின் இயற்கை வளங்களின் செயற்றிறனான, திறமையான மற்றும் தந்திபரோபாய பயன்பாட்டை அனுமதிக்கக் கூடியதாக அமைய வேண்டும்.

### 3.1. சுழற்சிப் பொருளாதாரம்

SDG ஐ அடைவதற்கு, இலங்கை இளைஞர்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் முந்தைய பிரிவில் பரிந்துரைக்கப்பட்ட மாற்று தீர்வுகளை எதிர்கொள்ளும் சவால்கள், தற்போதுள்ள பொருளாதார மற்றும் நிர்வாக முறைகளுக்குள் காணப்பட்ட சிக்கல்கள், இலங்கையில் பயன்படுத்தப்பட வேண்டிய கோட்பாடுகள், அத்தகைய கொள்கைகளை பயன்படுத்துவது அ) நமக்குத் தேவையான பொருள்கள் மற்றும் சேவைகளின் தற்போதைய நுகர்வு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். ஆ) தங்கள் வாழ்நாள் முழுவதற்கும் சுழற்சி முறையில் மூலப்பொருள்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம், மீள்சுழற்சி செய்வதன் மூலம் பொருள்களின் மீள் பயன்பாடு மற்றும் இ) கைத்தொழில் துறை பொருளாதாரத்திற்கு அப்பால் எளிதில் உடையக் கூடிய கழிவுகளை மீளமைத்தல், உருமாற்றுதலுக்கு ஏற்றவாறு வடிவமைத்தல், அல்லது பொருள்களின் பௌதீக தேவை முதல் நிலையிலுள்ள பொருள்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையைக் குறைக்கக் கூடியவாறு வியாபார மாதிரிகளை வடிவமைத்தல். உலகளாவிய பொருளாதாரத்தில் இலங்கை இன்னும் ஒருங்கிணைந்த நிலையில், இருக்கக் கூடியவாறு சுழற்சிப் பொருளாதாரத்தை வடிவமைத்தல். அவ்வாறு செய்வதன் மூலம், இலங்கையின் பொருளாதார திட்டமிடல், எமது வளங்களை அடிப்படையாக கொண்ட முழுமையான செயற்பாடாகக் கருதுவது, தொழில் மற்றும் அளவீட்டின் அடிப்படையில் பிரிக்கக் கூடியது அல்ல. இத்தகைய அணுகுமுறை எமது சுற்றுச்சூழல் வளங்கள் மற்றும் சுற்றாடல் அமைப்புகளின் சுமை திறன் ஆகியவற்றைப் போதியளவில் கருத்திற் கொண்டிருக்க வேண்டும். நுகர்வோர், விவசாய உற்பத்தி, உணவு பாதுகாப்பு, நீர் பாதுகாப்பு, தொழில்துறை உற்பத்தி மற்றும் வர்த்தகம், வேலைவாய்ப்பு, மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான காலநிலை மாற்றம், அதிக நுகர்வு மற்றும் இயற்கை வளங்களின் அழிவு ஆகியவற்றிற்கு இடையே காணப்படும் தொடர்பு என்பனவற்றிற்கு இந்த எதிர் தலைமுறைக் கலந்துரையாடல் மூலம் தீர்வு காணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த இடை-உறவை எய்துவதற்கு ஏற்ற ஒரே வழி சுழற்சிப் பொருளாதார அணுகுமுறையாகும்.

கைத்தொழில்மயமான நாடுகளில், பொருளாதாரத்தை கட்டமைக்கும் போது காணப்படும் நிலைமை தொடர்பாகக் கவனம் செலுத்துவது போன்று நம் போன்ற அமைப்புக்கள் சந்தை வாய்ப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு புதிய தொழிற்துறைகளின் நிலையான வளர்ச்சிக்குக் காணப்படும் வளங்களை சிறந்த முறையில் விநியோகம் செய்யவும் அடையவும் வேண்டும். முன்னணி நிறுவனங்கள் கழிவுகளை வடிவமைப்பதில் ஒரு முறைமை-நிலை அணுகுமுறையைப் பின்பற்றுகின்றன - இது வளர்ந்துவரும் உலகில் காணப்படும் அழுத்தம் சந்தை உற்பத்தி முறைகளில் காணப்படுவதனை குறித்துக் காட்டுகின்றது. இதனால் குறைந்து வரும் வளங்களின் மீதான சர்வதேச அவதானமும் தொடர்ந்து உயரும். இதன் மூலம் சவால்களுக்கான வாய்ப்பை அளவிடுதல், முதலீட்டாளர்கள், அரசு, வணிக மற்றும் சிவில் சமூகம் ஆகியவை வளர்ந்து வரும் சந்தைக்கு சுழற்சிப் பொருளாதாரத்தின் பன்முகத்தன்மையைத் தழுவுவதன் தேவைப்படும் என்பது தெளிவு. கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏகபரிமாண மாதிரிகளின் தோல்விகளில் இருந்து இலங்கை முன்னனி உலகலாவிய நிறுவனங்களின் வட்டி உயர்வடைந்ததிலிருந்து படிப்பினையைப் பெற்றுக் கொள்ளும்.

### 3.2. நிலையான அபிவிருத்தியும் இளைஞர்களும்

வரலாற்று ரீதியாகவும், புரட்சிகரமான அடிப்படையிலும் இளைஞர்கள் தற்போதைய நிலைமை தொடர்பில் திருப்தியாக இல்லை என்பதை மனதிற் கொள்ளுதல் வேண்டும். மாற்றங்கள் ஏற்பட காலம் எடுக்கும் எனும் பொதுமக்களின் மனோ நிலையைத் தாண்டிய பாரிய எதிர்பார்ப்பு இளைஞர்களிடம் உள்ளது. ஏந்த நாட்டினதும் இளைஞர்கள் தமது முன்னைய தலைமுறையை விட நிறப்பாக வருதல் வேண்டும் மற்றும் முன்னைய தலைமுறையில் ஏற்பட்ட பிழைகளை தவிர்க்க அல்லது திருத்த வேண்டும் மற்றும் அவர்கள் வளர்ந்த நிலைமை போன்றல்லாத நிச்சயமற்ற தன்மை அற்ற எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றே எதிர் பார்க்கின்றனர். இளைஞர்கள் புதியவற்றை கண்டுபிடித்தல், நவீனத்துவம் மற்றும் சமூகப் புரட்சி போன்றவற்றை உருவாக்குகின்றனர். அவர்கள் பொதுவாக மாற்றத்தின் முகவர்களாக அல்லது வினையூக்கியாகவே கருதப் படுகின்றனர்.

இளைஞர்கள் வலுவாக்கப்பட்ட, தரப்படுத்தப்பட்ட, உறுதிப் படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைக் கொண்ட ஒரு சமூகத்தை அடைதலானது நிலையான அபிவிருத்தியின் இலக்குகளை அடைவதற்கு மிகச் சிறந்த வழியாகும். ஏதிர்கால சமூகத்தில் அவர்களின் பாத்திரம் மற்றும் மக்கற் தொகையில் அவர்களது பிரதிநிதித்துவத்தின் அளவு போன்றவற்றின் அடிப்படையில் நிலையான அபிவிருத்தியின் இலக்குகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதற்கான முக்கிய அடிப்படை முதலீடாகவே இளைஞர்கள் கருதப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வரை முக்கியத்துவம் வாய்ந்த மரபு ரீதியான அறிவு, பழக்க வழக்கங்கள் மற்றும் கலாச்சார பெறுமதிகளின் படி கட்டமைக்கப்பட்டுள்ள தொழிநுட்ப மற்றும் நவின விஞ்ஞானம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட எதிர்ப்பார்க்கப்பட்ட முன்னுதாரணங்கள் நிலையான அபிவிருத்தியின் பெறுமதிகளை தழுவி, நிறுவனமயப்படுத்தி மற்றும் சமூகமயப்படுத்தி விடும். ஆகவே, நிலையான அபிவிருத்திக்கான தேசிய மூலோபாயமானது இளைஞர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு அடிப்படையான, எதிர்காலத்தை எதிர் கொள்ளத் தக்க மாற்றமாக இருக்கும். மேலும் உண்மையிலேயே அது நடைமுறையில் அடையக் கூடியதாக இருக்கும். இலங்கையின் இளைஞர்கள் நிலையான அபிவிருத்திககான ஒரு தேசிய மூலோபாயத்தை முன்னெடுக்கவோ அல்லது இயங்கவோ எதிர்பார்க்க மாட்டார்கள், ஆனால் இலங்கை இளைஞர்களின் திறன்கள் ஒழுங்காக கையாளப்பட்டால், நிலையான அபிவிருத்தியின் இலக்குகளை அடைவதற்கு இளைஞர்கள் ஆர்வத்துடன் செயற்படுவார்கள் என்பதால் அவர்களை ஒரு உற்பத்தி இயந்திரமாக உபயோகிக்க முடியும்.


[1] இலங்கையின் தேசிய இளைஞர்கள் கொள்கைகள், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, 2014

[2] இலங்கை ஊழியப்படை மதிப்பாய்வு 2015, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், தேசிய கொள்கைகள் மற்றும பொருளாதார விவகாரங்கள் அமைச்சு ISBN 978-955-577-997-5

[3] இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவனம், இளைஞர்கள் அபிவிருத்தி: : இளைஞர்களுக்கான நூற்றாண்டின் அபிவிருத்தி இலக்குகளை அடையாங் காணல் (MDG), இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, 2014

[4] இலங்கைத் தேசிய மனித அபிவிருத்தி அறிக்கை 2014, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி, இலங்கை. ISBN 978-955-1031-33-6

[5] இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு புள்ளிவிபரங்கள், http://www.Youthmin.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=178&Itemid=233&lang=en இலிருந்து எடுக்கப்பட்டவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# R. பரிந்துரைகளும் தீர்வுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துரைகளும் தீர்வுகளும்

R

## R. பரிந்துரைகளும் தீர்வுகளும[42]

இப் பிரிவில், நாம் அறிக்கையை மேலோட்டமாக பார்வையிடுவோம். அடுத்து, அப் பரிந்துரைகள் பயனுள்ளதாக நடைமுறைப்படுத்தும் நிலையில், நாம் பிரதான பரிந்துரைகளையும், 2030ல் அடையவுள்ள தேசிய தூரநோக்கையும் சுருக்கம் செய்வோம். பரிந்துரைகளும், தூரநோக்கும் ஏனைய விபரத் திரட்டுக்கள், துறைகள், குறுக்கிடும் கருப்பொருட்கள் போன்றவற்றின் பிரகாரம் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. இங்கு ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையான முக்கிய பரிந்துரைகள் மட்டுமே, பிரதான முன்னுரிமைகளுக்கு தீர்மானம் மேற்கொள்வோர் கவனம் செலுத்த உதவும் பொருட்டு சுருக்கமாக்கப்பட்டுள்ளன. பிரதான உரைப்பகுதி அதிக விபரங்களையும், ஒவ்வொரு பகுதிக்கும் சார்பான மேலதிக பரிந்துரைகளையும் கொண்டுள்ளன.

42 எழுதும் குழு: மோஹன் முனசிங்க (தலைவர்) மற்றும் சநிஆ (PEC)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளும் தீர்வுகளும்

# RO

## RO. மேலோட்டம்

சிறி லங்கா தேசிய 2030 தூரநோக்கு, அதி உத்தம ஜனதிபாதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் 2017 ஜனவரி 2ல் வெளிப்படுத்திய தூரநோக்கை விளக்கி, கருத்து வழங்கும் அறிக்கையை தயாரிக்க ஜனாதிபதி நிபுணர் குழுவிக்கு (PEC) ஆணைவழங்கிய போது, ஆராய்ந்து உருவாக்கிய தந்திரோபாய ஆவணமாகும். அது 17 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் (SDG), மற்றும் 2015ல் ஐ.நா. உறுப்பினர் நாடுகளினால் உலகளாவியரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 2030 நிகழ்ச்சிநிரல்களையும் பதிலாற்றலாகக் கொண்டுள்ளது. ஜனாதிபதி சிறிசேனாவின் தூரநோக்கில், சிறி லங்கா, 2030ம் ஆண்டளவில் பொளாதார ரீதியாக சுபீட்சமிக்கதாகவும், போட்டித்தன்மையானதும், மேம்பட்ட, பசுமை சுற்றாடல் மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியடைந்த, சமூகரீதியாக உள்வாங்கல், இணக்கப்பாடுடைய அந்நியோன்னிய, அமைதியானதும், நீதியானதுமான நிலைபேறான, மேல் நடுத்தர வருமானமுள்ள இந்து சமுத்திர கேந்திரமாகத் திகழும். இத் தூரநோக்கை பரவலாக்குவதுடன், இவ் அறிக்கை அவ்வாறான நிலைபேறான எதிர்காலத்தை 2030ல் - 2020 லிருந்து 2025ன் இடைக்கால வருடங்களில் நிலைபேறான தன்மையுடனான அணுகுமுறை ஆகியவற்றை அடைவதை விபரிக்கின்றது.

ஜ.ஆ.குழு (PEC) அறிக்கை, சிறி லங்காவின் தற்போதைய நாட்டின் தோற்றக் குறிப்பு மற்றும் நிலை, முக்கிய நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளையும், வாய்ப்புக்களையும், எதிர்கால முன்னுரிமை மற்றும் இலக்குகளையும், 2030க்கு விமர்சிக்கப்படும் குறிக்கோள்களை அடைவதற்குரிய புதிய ஊக்குவிப்புக்களையும், வாய்ப்புக்களையும் வெளிப்படுத்தும் விரிவான ஒருங்கிணைந்த ஆவணமாகும்.

நாம், சமத்துவத்தை உள்ளடக்கிய பசுமை வளர்ச்சி அல்லது BIGG யை அடிப்படையாகக் கொண்ட இலக்குகளையுடைய தேசிய நிலைபேறான வழியையும், மக்களை சக்திமயமாக்குதல், அரசாங்கம், குடியியல் சமூகம் மற்றும் வணிக சமூகம் ஆகியவற்றிக்கு வழிகாட்டலை வழங்குதல் ஆகியவற்றையிட்டு ஜனாதிபதி அவர்களுக்கு இலகு மற்றும் தெளிவான மொழியில் விபரிக்க கோரப்பட்டுள்ளோம்.

இவ் அறிக்கை, எங்களின் ஆணையில் விதிக்கப்பட்ட சில வரையறைகளையும், மற்றும் காலம், மூலவள தடைகள் ஆகியவற்றையும் பிரதிபலிக்கின்றன. முதலாவதாக, இவ் அறிக்கையானது, விபரமான தேசிய அபிவிருத்தி திட்டம் ஒன்றாகவிருக்க முனையவில்லை – அதாவது, அப் பணியை ஏற்கனவே மேற்கொள்ளும் ஏனைய அரசாங்க கிளைகளின் வேலையைப் பிரதி பண்ணலை தடுப்பதாகும். நாம், தரவுகள், முழுமையானதும், விரிவான நீண்ட கால எண்ணக்கரு ரீதியான சட்டவரம்பு வேலைக்குள் பொருந்திய நடைமுறையிலுள்ள தேசிய, பகுதியான மற்றும் ஏனைய திட்டங்களை பயன் படுத்துகின்றோம். இரண்டாவதாக, நாம் விசாலமான பெரும்பாக தோற்றத்தை, பகுப்பாய்வு இல்லாத, இலகு ஒப்புநோக்கு முன்திட்டம் ஒன்றினாலேயே பயன்படுத்துகின்றோம். எனவே, எமது அடிப்படை விடயம், மொத்த தேசிய உற்பத்தி (GNP) வளர்ச்சி வீதத்தில் சராசரி 5% யும், 2030க்கு வரையான குடிசன வளர்ச்சியில் 1% யும் கருதுவதுடன், எங்களின் முடிவுகள் இவ் அடிப்படை வரிசையின் (உதாரணமாக (GNP) மாறி +/- 1%) பெறுமதிகளின் வீச்சுக்கு மேலானதாகும். மேலும், அனர்த்த முகாமைத்துவத்திற்காக தந்திரோபாய வழிகாட்டலை வழங்குவதற்கு சில முக்கிய தோற்றப் பகுதி மட்டத்தில் ஆராயப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உதாரணமாக விவசாயத்தை பாதிக்கும் மிக மோசமான அனர்த்தங்கள்). இறுதியாக, நாம், குறிப்பாக நடைமுறைப்படுத்துவதை பணியாக கொண்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கடந்தகால இலக்குகளையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதில் வெற்றியின்மை, இம் முக்கிய தலைப்பில் சில யோசனைகளை குறிப்பிடுவதை கடற்பாடாக்கியுள்ளது.

சமத்துவத்தை உள்ளடக்கிய பசுமை வளர்ச்சி **(BIGG)**, சிறி லங்காவின் நடுநிலை பாரம்பரியத்தைப் பின்பற்றுகின்றது. மீண்டும் கூறுவதாயின், ஜனநாயக மற்றும் பன்மைத் தன்மை கொண்ட நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்ட எமது நெறிமுறை பெறுமதிகள், இன ரீதியான பெறுமதிகள், உரிமை, சுற்றாடலை பாதுகாத்தல்; சுதந்திரத்திற்கான கௌரவம், நீதி, சமத்துவ வாய்ப்புக்கள், மனித உரிமைகள், ஆகியவற்றைக் கௌரவமாக கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்ட மக்களை மையப்படுத்திய, திறந்த சமூகப்-பொருளாதார முறைமைக்காக நாம் வேலையாற்றுகின்றோம். நாட்டின் செல்வமிக்க கடந்தகாலத்தின் பெருமைக்குரிய கூறுகளால் உந்தப்பட்டு, மூன்று குழுக்கள் (அரசாங்கம், தனியார் துறை, சிவில் சமூகம்) சமப்படுத்தப்பட்ட, கூட்டுறவு மற்றும் ஆற்றலுள்ள வகிபாகங்களை இச் சட்டவரம்பினுள் கட்டுப்படுத்தும் தேவையாகவுள்ளது.

அறிக்கையில் இடைவெளிகள் உள்ளன என்பதையும், அவைகளை மேம்படுத்த இடமுள்ளது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆகவே, இவ் வரைவை தேசிய ரீதியான கலந்தாய்வு செயல்முறை ஊடாக மீள்பார்வையிட சிபார்சு செய்கின்றோம். குறிப்பாக, நாம் ஒரு பல்முனையான உலகம், புதிய பொருளாதார அச்சுறுத்தல்கள், பிளவுபட்ட தொழில்நுட்பங்கள், எதிர்பாராத அனர்த்தங்கள், சமூக பதற்றம், இறுதியாக வானிலை மாற்றம் ஆகியவற்றின் ஊடாக முன்னேறுவதால், எதிர்கால அதிர்வுகளை முற்றாக எதிர்பார்ப்பது சாத்தியமாகாது. 2030 தூரநோக்கு இலக்கு, புதிய தகவல்கள் மற்றும் இப் பாதையின் ஊடாகப் பெறப்படும் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு காலவரை இடைவெளிகளில் மேம்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறான செயல்முறை ஒன்று, பன்முக குறிக்கோளையுடைய தூரநோக்கை குறுங்கால – (2020), நடுத்தர – (2025), நீண்டகாலவோட்ட எதிர்காலம் (2030) ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திடமான மற்றும் நெகிழ்சித்தன்மையை உறுதிப்படுத்தும். SDG ன் மீதான நடைமுறையிலுள்ள வேலை, சிறி லங்காவின் தேவைகளுக்கு பொருந்துவதற்காக போதுமானவாறு முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் முன்னுரிமையுடன், முன்னோக்கிச் செல்லும் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கு உதவப் பயன்படுத்தலாம். அது, சார்புள்ள குறிகாட்டிகளையும்;, இலக்குகளையும் இனம் காண்பதற்கும் சில காலம் எடுக்கலாம்.

இவ் அறிக்கையை மேம்படுத்த நாம் சிபார்சு செய்யும் தேசியரீதியில் அமையும் ஆலோசனை செயல்முறை, ஒருமைப்பாடு மற்றும் பரந்த உடைமையைக் கட்டியமைப்பதுடன், அறுதியான வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலுக்கும் வசதியளிக்கும் அவ்வாறான செயல்முறையொன்று அதியுத்தம ஜனாதிபதியினால் இட்டுச் செல்லப்படல் வேண்டும். ஆயினும், அரசாங்கத்தின் ஏனைய பிரிவுகள் மற்றும் நிறுவனங்களும் நேரகாலத்துடன் இவ் விடயத்தை உட்படுத்த நாம் ஆலோசனை வழங்குகின்றோம். PEC அறிக்கையிலுள்ள தந்திரோபாய சிபார்சுகள், ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் அதிக விபரமான திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடன் வரிசைப்படுத்தப்பட்டு, விரிவாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, அதி உத்தம ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் ஏற்கனவே உள்ளடக்கும் பல நடைமுறையிலுள்ள முன்னெடுப்புக்களுடன் ஆரம்பிப்பது சமயோசிதமாகவும், தர்க்கரீதியானதும், இலகுவானதுமாகும். அவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்

சூழல் பாதுகாப்பிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

மதுபானம், போதைப்பொருட்கள் தடுப்பிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

நீடித்த மன நோய் தடுப்பிற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

நிலைபேறான பாடசாலை சமூகத்திற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம்

வறுமையை போக்குவதற்கான கிராம சக்தி மக்களின் இயக்கம்

சிறுவர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான "தருவன் சுரக்கிமு" தேசிய நிகழ்ச்சித்திட்டம்

முக்கியமான பகுதிகளில் அதிகமாக அளவுகள் விபரிக்கப்பட்ட இலக்குகள் தேவைப்படுவதுடன், அவைகள் அதி உத்தம ஜனாதிபதி அவர்களினாலும், ஏனைய தீர்மானம் மேற்கொள்பவர்களினாலும் கண்காணிக்கப்படும். மேம்படுத்தப்பட்ட ஆட்சி ஆற்றலுள்ள நடைமுறைப்படுத்தலுக்கு அவசியமானதுடன், முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள், முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

பாராளுமன்றம், நீதித்துறை மற்றும் நடைமுறையிலுள்ள முனைப்புக்கள் ஆகியவற்றுடன் சக்திவாய்ந்த ஒன்றிணைந்த தொடர்பு செயல்படுவதாக இருத்தல் வேண்டும். வணிக சமூகம் மற்றும் சிவில் சமூகம் ஆகியனவும் ஆலோசனை மற்றும் நடைமுறைப்படுத்தல் செயல்முறை ஆகிய இரண்டும் கூட முக்கியமான வகிபாகத்தை வகிக்க வேண்டியுள்ளது. PECகுழு உறுப்பினர்கள் நிலைபேறான அபிவிருத்தியில் முற்றாக பரீட்சியமானவர்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளும் தீர்வுகளும்

# RC

## RC. கொத்தணி

### RC1. பொருளாதாரம்

### RC1.1. முக்கியநடவடிக்கைசார் பரிந்துரைகள்

அ.நிதிசார் கூட்டு முயற்சிகளை வலுவடையச் செய்வதுடன், உள்வாரியான உறுதித்தன்மையை அடைவதற்கான பாதுகாப்பான நிதி மற்றும் நாணயமாற்று கொள்கைகளையும் கடைப்படித்தல்

ஆ. ஏற்றுமதி வருமானங்களையும் FDI ஒழுக்குகளையும் அதிகரித்தல் –விநியோக- பகுதி மீளமைத்தல் ஊடாக ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்தலும், வெளிவாரி உறுதி நிலையை அடைவதற்கு வியாபார ஒப்பந்தங்களுக்குரிய உபாய அணுகுமுறையும் உருவாக்குதல்

இ. கிராமப் பகுதிகளில் நிலைத்திருக்கும் வறுமையைத் தீர்ப்பதற்கு உற்பத்தித்தன்மையை மேம்படுத்தல்களின் ஊடாக நிலை பேறான விவசாயத்தை மேம்படுத்தல்

ஈ. விரயமாகும் செலவீனத்தை குறைத்தல், குறிப்பாக வறுமையான வீட்டுத்துறைகளுக்கான சமூக நலனை நிச்சயித்து இலக்குவைத்தலை உறுதி செய்தல்

உ. அதிக வேலை வாய்ப்புக்களை – விசேடமாக பெண்களுக்கும், இளைஞர்களுக்கும் - சமத்துவமற்ற கவனிப்பை தீர்த்தலும், மற்றும் வளர்ச்சியை அதிகமாக உள்ளடக்கச் செய்தல்– வளர்ந்துவரும் சிரேஷ்ட குடிமக்களுக்கு, அவர்களின் அனுபவத்தை நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யவும், அவர்களின் இளைப்பாற்று, சமூக பாதுகாப்பு வேலைகளுக்கும் வாய்ப்புக்களை வழங்குதல்.

ஊ. அதிக இழப்புக்களை உண்டாக்கும் அரசவுடமை தொழிலுரிமை முயற்சிகளுக்கு மீள்பார்வை, மீள்கட்டமைத்தல் அல்லது தனியார்மயப்படுத்தல் போன்ற நடைமுறையிலுள்ள முயற்சிகளை தொடர்தல்.

எ. **செய்யும் வணிக** குறிகாட்டிகளை மேம்படுத்தல் - பொருளாதார செயற்றிறனை மேம்படுத்துவதற்கு - விசேடமாக ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல், வரிகளைச் செலுத்துதல், சொத்துக்களை பதிவு செய்தல், கடன்களைப் பெறுதல்.

ஏ. வெளிப்படைத் தன்மை, வகைகூறுதல் ஆகியவற்றை மேம்படுத்த அவசியமான சட்டவாக்கத்தை சட்டமாக்கி செயற்படுத்தி, அதனால் ஊழலை அரிதாக்குதல்.

### RC1.2. நிலைத்தன்மை பற்றிய தொலைநோக்கு

சிறி லங்காவின் நடைமுறை கொள்கை திட்டவரம்பு 2015ல் அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட "ஐந்து அம்ச திட்டம்: 60 மாதங்களில் புதியதொரு நாடு" என்பதிலுள்ள மேலார்ந்த அபிவிருத்தி தூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரநோக்கினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து அம்ச திட்டத்தின் (FPP) கீழுள்ள அபிவிருத்தியின் ஐந்து குறிக்கோள்கள், (1) ஒரு மில்லியன் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல் (2) வருமான மட்டங்களை மேம்படுத்தல் (3) கிராமிய பொருளாதாரங்களை விருத்தி செய்தல் (4) கிராமிய, தோட்ட துறைகள், மத்தியதர மற்றும் அரச ஊழியர்களுக்கான காணி உரிமையை உறுதி செய்தல் (5) பரந்த மற்றும் உறுதியான நடுத்தர வகுப்பாரை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது (தேசிய திட்டமிடல் திணைக்களம் (DNP), 2016) இக் குறிக்கோள்கள் 2017 செப்டம்பரில் அரசாங்கத்தினால் அன்மையில் வெளியிடப்பட்ட "தூரநோக்கு 2025" கொள்கை ஆவணம்[43] மீண்டும் குறிப்பிடுகின்றது. அது நாட்டை மிகவும் போட்டித்தன்மையானதாகவும், சிறி லங்காவின் வாழ்க்கைத் தராதரங்களை மீளமைப்பதற்கானதொரு வழியையும் குறிப்பிடுகின்றது. இக் கொள்கை ஆவணங்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிக்கோள்கள் SDGs உடன் பல ஒற்றுமைகளைப் பகிர்ந்து கொள்வதுடன், எதிர் வரும் வருடங்களில் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றங்களை அடைவதற்கான உறுதிகளையும் கொண்டுள்ளது. தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் பிரச்சினையான பகுதிகள் (ஒவ்வொரு சிக்கலான பிரச்சினைகளின் கீழ் ஆராயப்பட்டவைகள்), அரசாங்கத்தின் கொள்கை நிரல் ஆகியன DNP குறிப்பிட்ட இலக்குகளை அடைவதற்காக நாடு கைக்கொள்ள முனையும் பல நடவடிக்கைகளை இனம் கண்டுள்ளது. அவைகளில் அதிகமானவை தூர நோக்கு 2025 ஆவணத்தில் பிரதிபலிக்கின்றன. கீழேயுள்ள அட்டவணை 1, பொருளாதார சுபீட்சம், தற்போதைய மற்றும் 2020க்குப் பின்னர் தோன்றவுள்ள நிலைமை ஆகிய பல்வேறு அளவீடுகளுக்கான பரிந்துரைக்கப்பட்ட நடுத்தர-கால நடவடிக்கைகளின் மேலார்ந்த நோக்கை வழங்குகின்றது.

**அட்டவணை 1: பொருளாதார சுபீட்சத்தை அடைதல்: நடவடிக்கைகள், நடைமுறை மற்றும் சாத்தியமான எதிர்கால நிலைமகள்**

| குறிக்கோள் | அளவீட்டுக் குறிகாட்டி | இலக்குகளை அடைவதற்கான முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் | 2016ல் நிலைமை | 2020[3]க்கு அமைக்கப்பட்ட இலக்குகள் |
|---|---|---|---|---|
| **SDG 8/ FPP1/FPP 2/FPP3** | **மொ.உள்.உற் வளர்ச்சி விகிதம்** | கௌரவமான தொழில் உருவாக்கத்தை மேம்படுத்தல், தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக வேலை உற்பத்தித்தன்மையை மேம்படுத்தல், நடைமுறையிலுள்ள திட்டங்களை ஒன்றினைத்து சகல தொழிலாருக்கும் ஓய்வூதியமொன்றை விருத்தி செய்தல், நாட்டை விட்டு வெளிச்செல்லும் தொழிலாளர்களின் தேர்ச்சிகளை மேம்படுத்தலும், புதிய சந்தைகளை தேடுதல். | 4.4% | 7% |
| | **தனி நபருக்கான மொ.உள்.உற்** | | US$3,835 | US$5,797 |
| | அரச முதலீடு | பொது சமூக, பொருளாதார உட்கட்டமைப்பு திட்டங்களை கூர்ந்து நோக்குதலும், அதேவேளை உற்பத்தித்தன்மையுடைய, இலாப மையமான முயற்சிகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் முதலீட்டாளர்களுக்கான இடத்தினை உருவாக்குதல். | 5.2% மொ.உள்.உற் | 5.7% மொ.உள்.உற் |
| | தனியார் முதலீடு | | 25.1 மொ.உள்.உற் | 25.8% மொ.உள்.உற் |
| **SDG17** | வரவு செலவு பற்றாக்குறை | -அரசாங்க வருமானத்தை அதிகரிக்க வரியில் சீர்திருத்தம் மற்றும் நிர்வாக மீளமைவுகள் மேற்கொள்ளல்.<br>- விரயத்தை அரிதாக்குதல் மற்றும் ஊழலை அகற்றுதல் ஆகியவற்றூடாக அரசாங்க செலவீனங்களை குறைத்தல் | -5.4% of GDP | -3.5% of GDP |
| | | -ஏற்றுமதி உற்பத்தி விசேடத்துவம் மற்றும் சந்தை பல்வகைத்தன்மை ஆகியவற்றை ஊக்கப்படுத்தல் | | |
| | | | | |
| | நடைமுறை கணக்கு மீதி | -வியாபார வசதிக்கான அர்ப்பணிப்புக்களை நடைமுறைப்படுத்தல்<br>-பல்வேறு அதிக-தீர்வைகளை அறிமுகம் | -2.4% மொ.உள்.உற் மதிப்புள்ள | 2.2% மொ.உள்.உற் மதிப்புள்ள |

43 நோக்கு 2025, நிதி அமைச், 2017, இலங்கை அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| | | செய்தல்<br>-நடைமுறையிலுள்ள FTA மீள்பார்வை செய்தலும், மீள் பேச்சுவார்த்தை மேற்கொள்ளலும், பலம்வாய்ந்த ஆசிய பொருளாதாரங்களுடன் புதிய FTAs களை கைச்சாத்திடலும் | ஏற்றுமதி USD10 பில்லியன் | ஏற்றுமதிUSD20 பில்லியன் |
| | FDI | -ஒழுங்கு படுத்தல் நிறுவனங்களை மீளகட்டியமைத்து, வணிக ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்பாட்டு சூழல்களை மேம்படுத்தலும<br>-இலகுவானதும், வெளிப்படைத்தன்மையுமான நிர்வாக நடைமுறைகளுடனான குறைந்த கட்டண வரி மற்றும் வசதிகளை வணிக சூழலை நோக்கி நகர்த்தல்.<br>- காணி குத்தகை பெறுவதிலுள்ள தாமதங்கள் மற்றும் சிக்கல்களை இனம் கண்டு நீக்குதல்<br>- சிறிய, நடுத்தர முயற்சிகளை மரபு ரீதியான துறையுடன் ஒருங்கிணைத்தல் | 110வியாபார தரங்கள் | 70க்கும் கீழான தரங்களை அடைதல் |
| **SDG9/ FPP3** | | | | |
| | | | | |
| | உட்கட்டமைப்பு | பெரிய மற்றும் முன்னேற்றமடையும் நகர்கள், நகரங்கள், கிராமிய கேந்திரங்கள் ஆகியவற்றை தொடர்புபடுத்தும் செயற்றிறனான போக்குவரத்து வலைப்பின்னலை உருவாக்குதல் | | சிறந்த வீதி வலைப்பின்னல் |
| | | பயணிகளின் நகர்வுக்கான பொது போக்குவரத்தின் பங்களிப்பை அதிகரித்தல் | 58% | 65% |
| | புதுமையாக்கம் | தொழில்நுட்பம் மற்றும் புதுமையாக்க ஆய்வுகளில் முதலீட்டை அதிகரித்தல் | ரூபா. 3,195 மில்லியன் | ரூபா.4,961 மில்லியன் |
| **SDG1/SDG2/ FPP2t** | விவசாய உற்பத்தித்தன்மை | தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தில் முதலீடுகள், விவசாய பாரிய வலயங்களை நிறுவுதல், பெறுமதி சங்கிலிகள் அபிவிருத்தியை வலுவடையச் செய்தல், விவசாய சந்தைப்படுத்தல் அதிகாரசபையை நிறுவுதல், விவசாய நவீனமயப்படுத்தல் அதிகாரசபையை நிறுவுதல்.விவசாய மைய பாரிய தர விவசாய நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அமைத்தல். தனியார் துறை பங்குபற்றலை மேம்படுத்தலும், PPPs துறையை நவீனமடையச் செய்தல். | ரூபா. 11,680 மில்லியன் | ரூபா. 18,135 மில்லியன் |
| | விவசாய நடைமுறைகளை மீளமைத்தல் | தானிய உற்பத்தியில் முதலீடுகள், கலப்பினவகை மற்றும் உயர் விளைச்சலைத் தரும் பயிர்வகைகளை மேம்படுத்தலும், ஊக்கிவித்தலும். | ரூபா.2,779 மில்லியன் | ரூபா. 2,976 மில்லியன் |
| | | விதை மற்றும் பயிரிடும் பொருட்களில் முதலிடலும், விதை உற்பத்தி பன்னையை நிறுவுதலும் | ரூபா. 480 மில்லியன் | ரூபா. 913 மில்லியன் |

மூலம்: தேசிய திட்டமிடல் திணைக்களம், 2017, மக்கள் முதலீட்டு திட்டம் 2017 - 2020

தூரநோக்கு 2025 நேரடி வரிகள், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16% ன் அதிகரித்த அரச வருமானம், மிதக்கும் வெளிநாட்டு நாணய வீதத்தை அனுமதித்தல் ஆகிய முன்னைய உறுதிமொழிகளை மீண்டும் மொழியப்படுகின்றன. அதன்படி, முன்னோக்கம் பொறுப்பு முகாமைத்துவ இலக்கை ஈடுபடுத்தும் இறை கூட்டு முயற்சிகள் ஊடாக, தற்போதுள்ள மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் கடனுக்குமான விகிதத்தை 2020ல் 79% லிருந்து 70%க்கு கொண்டுவர நம்பப்படுகின்றது. இந்தியா, சிங்கப்பூர் மற்றும் சீனா ஆகியவற்றுடனான வியாபார சீர்செய்தல் நிகழ்ச்சித்திட்டத்துடன் - குவிகின்ற எதிரான சமநிலை சட்டங்களை நடைமுறைப்படுத்தல் உள்ளடங்கலான - உள்நாட்டு நிறுவனங்களின் போட்டித்தன்மை தாக்கங்களை அரிதாக்க நடைமுறையிலுள்ள வியாபார பேச்சு வார்த்தைகள் தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மைகளை கொண்டு, எதிர்காலத்தை விஞ்ஞானரீதியாக முன்மொழிவது பெரும்பாலும் சவாலானதொரு பணியாகும். விரும்பப்படும் இலக்குகளை அடைவதற்குரிய சுட்டிக்காட்டிகள் எவையேனும் உரிய வழிகளில் இல்லாதிருந்தால், முன்னேற்றத்தை கிரமமாக கண்காணித்தலும், தேவையான சீர்திருத்தல் நடவடிக்கை எடுப்பதும் முக்கியமானது. அமைக்கப்பட்ட இலக்குகளை பெற்றுக்கொள்ளும் வழிகளை உட்சமயப்படுத்துவதற்கு, வலுவான வணிக, நிதி தொடர்புகள் ஊடாக சிறி லங்கா அதன் பொருளாதாரத்தை உலக பொருளாதாரத்துடன் நெருக்கமாகவதும் கூட அவசியமாகின்றது. 2025 தூரநோக்கில் காணப்படும் வளர்ச்சியை உள்ளடக்குவதை உறுதிப்படுத்துவதுடன், ஏழைகளையும், தாக்கத்துள்ளாவோரையும் பாதுகாக்க, போதுமான பாதுகாப்பு வலைகளை வழங்குதல் மீதான ஒருமித்த கவனமெடுத்தல் உதவியாகவிருக்கும். நாட்டை மேல் நடுத்தர-வருமான நிலைக்கு இறுதியாக எடுத்துச்செல்ல, பொருளாதார வளர்ச்சியின் உயர்ந்த வீதங்களை அடைவதில் உள்ள தற்போதுள்ள தடைகளை அகற்றுவதற்கு, இறை, வணிகம், முதலீடு மற்றும் தொழில் சந்தை கொள்கைகள் ஆகியவற்றின் மீளமைப்புக்களும் கூட - சென்ற பிரிவுகளில் ஆராய்ந்தவாறு - முக்கியமானதாகும்.

அதிகமானதொரு மெய்யான மற்றும் பாதுகாப்பான பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டின் சுமார் 5%, மொத்த உள்நாட்டு உற்பத்தியை தற்போதைய 81.3 பில்லியன் அமரிக்க டொலரை (2010ல் நிலையான விலைகள் 79.7 பில்லியன் அமரிக்க டொலர்[44]) 2025ல் 124 பில்லியன் அமரிக்க டொலருக்கும், மேலும் 2030ல் 158 அமரிக்கன் டொலருக்கும் அதிகரிக்கும்.

எதிர்வரும் வருடங்களில், நிலையான குடிசன வளர்ச்சி வீதத்தை 1.1 எனக் கருதினால், சிறி லங்கா 2024ல்மொத்த உள்நாட்டு உற்பத்தி தலா புள்ளியாக 5,000 அமரிக்க டொலரை குறுக்கிட்டு, 2025ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி தலா புள்ளியாக 5,285 அமரிக்க டொலரையும், 2030[45] அளவில் 6,386 அமரிக்க டொலரையும் அடையும்.

2015ல், அவ்வாறான வளர்ச்சிப்போக்கு சிறி லங்காவை தற்போதைய உயர் நடுத்தர-வருமான நாடுகளான, தெற்காசியாவின் தாய்லாந்து, பசுபிக்கிலுள்ள பியூஜி, ஆபிரிக்க பிராந்தியத்தின் தென் ஆபிரிக்கா, தென் அமரிக்காவிலுள்ள கொலம்பியா ஆகியவற்றுடன் ஒப்பிடும் மட்டத்தில் இடம் பெறச்செய்யும். சிறி லங்காவின் 2030ன் மொத்த உள்நாட்டு உற்பத்தி தலா புள்ளி, கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக்கிலுள்ள நாடுகளின் - உயர் வருமான நாடுகளைத் தவிர்த்து - சராசரியுடன் ஒத்ததாகவிருக்கும். அந் நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி பிரச்சினைகளும், சுபீட்சங்களும், 2025 மற்றும் 2030ல் முகம் கொடுக்கவுள்ள சிறி லங்காவின் பொருளாதார பிரச்சினை வகைகளுக்கு பயனுள்ள சுட்டிக்காட்டிகளை வழங்கும்.

## RC2. சுற்றாடல்

### RC2.1. முக்கிய நடவடிக்கைசார் பரிந்துரைகள்

a. அனர்த்தங்களுக்கு தாக்கத்துள்ளாவதை குறைக்கும் அவசர குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல் (உதாரணம்: வறட்சிகள், வெள்ளங்கள், மண்சரிவுகள்) மற்றும் வானிலை மாற்றத்திற்கு இசைவாகுதல்.

44 உலக வங்கிஇ 2017, உலக அபிவிருத்தி சுட்டிகள்.

45 இக்கணக்கீடானது வருடாந்த வளர்ச்சி வீதத்தின் சூத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட தரநிலையை உள்ளடக்கியது. எதிர்கால மொத்த உள்நாட்டு உற்பத்தியானது என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு ஆனது தற்போதைய மொத்த தேசிய உற்பத்தியினையும்,' ஆனது மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதத்தினையும் , ஆனது வருடங்களின் எண்ணிக்கையும் குறித்து நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

b. பெரும் நகரங்களில் வாகன நெரிசல் காரணமாக வளி மாசடைதலைத் தவிர்ப்பதற்கான முதன்மையான நடவடிக்கை எடுத்தலும், மோட்டார் அல்லாத போக்குவரத்து, மின்சார வாகனங்கள், மின்சாரத்தால் இயங்கும் பகிரங்க போக்குவரத்து முறைமைகள் உள்ளடங்கிய சிறந்த மற்றும் நிலைபேறான போக்குவரத்து முறைமையை அறிமுகம் செய்தல்.

c. காடழிப்பை கட்டுப்படுத்தும் பங்குபற்றல் அணுகுமுறைகளை நடைமுறைப்படுத்தலும், காட்டுப் பரப்பை அதிகரிகரித்தலும், மண் அரிப்பையும், நில தர குறைவையும் குறைத்தல், மண் வளத்தன்மையை மேம்படுத்தல்

d. சுற்றாடலுக்கு இணக்கமான கழிவுகள் அகற்றும் முறைகளை அறிமுகப்படுத்தல்

e. சேவைகளை பாதுகாத்தலும், சுற்றுச்சூள வாழ்விட சுகாதாரத்தை மேம்படுத்தலும், மனித சுகாதாரத்தின் மீதான கடுமையான தாக்கங்களை அரிதாக்கலும், எல்லாத் துறைகளிலும், விசேடமாக கைத்தொழில், விவசாயம் ஆகியவற்றில் நீர் மாசடைதலை சிறப்பாக சட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஒழுங்கு படுத்தல், விலையிடும் கொள்கை ஆகியவற்றின் ஊடாகக் குறைத்தலும்

f. தேசிய மின்சார விநியோகத்திற்கு தொல்லுயிர் எச்ச எரிபொருள் அடிப்படையான மின்சக்தி பிறப்பாக்குதலை நவீன மீளளிக்கக்கூடிய சக்தியைப் பயன்படுத்தி மாற்றீடு செய்வதுடன், கைத்தொழில் மற்றும் வணிக பிரயோககங்களில் மீளளிக்கும் சக்தியின் பிரயோகத்தை மேம்படுத்தலும்.

g. விரயங்களை அகற்றுவதற்கு சகல மூலவளங்களைப் பயன்படுத்தும் தொழில் முயற்சிகளில் சுற்று பொருளாதார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதுடன், மூலவளங்களை மீளப்பெறுதலை ஊக்குவித்தலும்.

h. விவசாய நடைமுறைகளை இரசாயன பயளையும், விவசாய இரசாயனங்களையும், நீண்ட கால சுகாதார தாக்கங்களை தவிர்ப்பதற்காகவும், நிலத்தின் பண்புகளை மேம்படுத்தவும், அவைகளின் பயன்படுத்தலை அரிதாக்க நடைமுறைப்படுத்துதல்

### RC2.2. நிலைத்தன்மை பற்றிய தொலைநோக்கு

2030 ல் SDG மற்றும் ஏனைய தேசிய பசுமை கொள்கைகள் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்தலுடன், சிறி லங்கா அதன் மக்களின் உயர் தர வாழ்க்கை மற்றும் தனிமையான பசுமை வளர்ச்சி ஆகியவற்றுடனான மாசடைதலற்ற, தூய்மையான பசுமை சூழலை தேடுகின்றது. குறிப்பிட்ட கொள்கைகள் மற்றும் முயற்சிகள் பசுமை வளர்ச்சியை உள்ளடக்கி உறுதிப்படுத்தவும், பாரிய உரிமைத்துவம் மற்றும் வறுமை போக்குதல் ஆகியவற்றை செலவிட்டு அவைகளை அடைய வேண்டியுள்ளது.

சமூகரீதியான சமத்துவம், சமாதானம், உறுதிநிலை ஆகியவற்றுடனான சிறந்த சூழயியல் தொடர்பான நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை அடையும் தூரநோக்குடன், நாடு ஒரு தேசிய நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி நகர்கின்றது. இதற்கான பரந்தளவிலான முயற்சியுடன், வானிலை மாற்றத்தை கைக்கொள்வதற்கு விசேட கவனம் செலுத்துவதுடன், நாடு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சி ஊடாக, நிலைபேறான அபிவிருத்திற்கு அன்மையில் நீல பசுமை அபிவிருத்தி இலக்கை மேம்படுத்தப்பட்டுள்ளது. சிறி லங்கா பல நேர்கணிய அடைவுகளை தரக்கூடிய சுற்றாடல் முனைப்புக்களையும், சுயமாக விதிக்கப்பட்ட இலக்குகளையும் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் முனைப்புகள் ஊடாக சேதன விவசாயம், காட்டு வனங்களின் பரப்பளவை 35% ல் அதிகரித்தல், 2020ல் 20% மின்சக்தியை பிறப்பிப்பதற்காக மீள்பாவனை சக்தியைப் பயன்டுத்தல், வீட்டுப்பாவனைக்கும், வணிக கட்டடங்களுக்கும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட மின்சார விநியோகத்திற்கான பிரச்சாரத்தை அறிமுகம் செய்தல், நிகர அளவீட்டு மாணியையிடல் ஆகியன அதி உத்தம ஜனாதிபதி அவர்களால் நிறுவப்பட்ட இலக்குகளுக்கான முக்கிய உதாரணங்களாகும்.

இக் கொள்கைகளையும், சட்ட நீதி ஒழுங்குவிதிகளையும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்காக அதிகமான திணைக்களங்களும், நிறுவனங்களும் உள்ளன.

எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைவதை தடைசெய்வதில் அடிப்படை இடையூறுகள் உள்ளன. அவைகளை இனம் கண்டு, சீர்செய்யப்படல் வேண்டும். இக் கொள்கைகளையும், நீதி ஒழுங்குவிதிகளையும் நடைமுறைப்படுத்துவது, திணைக்ளங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிக்கிடையேயுள்ள மிக குறைந்த தொடர்பாடல் மற்றும் இணைப்பாக்கல் போன்றவற்றை உள்ளடக்கிய பல பிரச்சினைகளால் பலவீனமாகவுள்ளது. இப் பலவீனங்கள், நாட்டிற்கு பயனளிக்காது, நிதி, பௌதீக மற்றும் மனித வளங்கள் போன்றவற்றை விரயத்திற்கு இட்டுச் செல்கின்றன. ஆகவே, நாடு உள்ளக - திணைக்கள, உள்ளக- நிறுவன ரீதியான தொடர்பாடலை மேம்படுத்த தெளிவானதொரு பொறிமுறையை அபிவிருத்தி செய்தல் வேண்டும். இது கொள்கை வரைச்சட்டத்தின் ஆற்றல்மிக்க நடைமுறைக்குரிய முற்தேவையாகும். மேலும் பசுமை கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றை விருத்தி செய்து, நடைமுறைப்படுத்தலில் அக்கறையுள்ள தரப்பினர்களின் பாரிய கூட்டுமுயற்சியும், கூட்டுறவையும் ஈடுபடச் செய்யும் தேவையுள்ளது.

நாடு இவ் இலக்குகளை அடைவதற்கு சகல அரசதுறை நிறுவனங்களையும் ஈடுபடச் செய்ய வேண்டியுள்ளது. இதற்காக இத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் நிதிரீதியான மற்றும் நிதிசாரா ஊக்குவிப்புக்கள் ஊடாக தனியார் துறை மற்றும் சிவில் சமூகத்தின் அர்ப்பணிப்பையும் பெற வேண்டியுள்ளது.

உடன் கவனத்தில் எடுக்கப்படும் முக்கிய பகுதிகள், சுகாதாரம், திண்ம கழிவு முகாமைத்துவம், விவசாயம் மற்றும் போக்குவரத்து ஆகியனவாகும். ஒரு ஆரோக்கியமான தேசத்தை முன்னிட்டுச் செல்வதற்கு, நாம் எமது சுற்றாடலை தூய்மை மிக்கதாகவிருக்க உறுதி செய்ய வேண்டியுள்ளது. இது ஓர் உயர் முன்னுரிமையாகவுள்ளது. திண்ம கழிவு முகாமைத்துவம் நகரப் பகுதிகளில் ஒரு கடினமான மற்றும் அவசியமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சமூகத்தை, விழிப்புணர்வு, பயிற்சியளித்தல், கழிவுகள் தோன்றும் மூலதார நிலையில் கழிவுகளை வேறாக்குதலுக்காக, சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் ஆதரவைப் பெறல் ஆகியவற்றில் ஈடுபடச் செய்தல், ஆற்றலுள்ள திண்ம கழிவு முகாமைத்துவத்தின் பாரிய இலக்குகளில் ஒன்றாகும்.

அவ்வாறு ஈடுபடுத்தலின் ஊடாக நம்பிக்கையை கட்டியெழுப்புதல், திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் முக்கிய பிரச்சினைகளுக்கு உதவ சமூக குழுக்களை ஊக்கப்படுத்தும்.

வேறாகப் பிரித்தெடுக்கப்பட்ட கழிவிலிருந்து மூலவளங்களை மீளப்பெறும் தொழில் நுட்பத்தை வழங்கி, பயன்படுத்தலை தனியார் துறை ஊடாகச் செய்லாம். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஊக்களிப்பு மற்றும் பசுமை பாராட்டை வழங்குவது, அவர்களை பல மீள்சுழற்சி கைத்தொழில்களை ஆரம்பிக்க அல்லது தற்போதுள்ள பிளாஸ்திக், பத்திரிகை, இறப்பர், புடவை, கண்ணாடி மற்றும் உலோகங்களுக்கான மீள்சுழற்சி கைத்தொழில்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவாக்குவதற்கும் ஊக்கப்படுத்தலாம். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் சேதன மற்றும் உயிரியல் பயளைக்கான இயந்திரத்தொகுதியை சிறிய தர அளவில் ஆரம்பித்து, இரசாயன பயளையை, உயிரியல் பயளையினால் மாற்றீடு செய்ய ஆதரவு வழங்கலாம். அவசியமாயின், ஏனைய வகைகளான கழிவுகளுக்கும் நீண்ட கால தீர்வுகளான, கூடிய முதலீடு மற்றும் நீண்ட விநியோகக்காலம் ஆகியன தேவைப்படும். சுகாதாரரீதியான நிலத்தை நிரப்புதல், சக்தி திட்டங்களுக்கான கழிவு போன்றவற்றை பின்னர் அறிமுகப்படுத்தலாம்.

உள்ளக ஒழுங்காற்று நடைமுறைச் செயற்றிறனுள்ள அணுகுமுறையைக் கொண்ட CKDu ஐ அகற்றுதல் சகல அக்கறையுடைய தரப்பினர்களின் முடிவுகளையும், சேவையைப் பெற்றுக்கொள்பவர்களுக்கு சிறந்ததொரு தீர்வை வழங்கி, அவர்களுக்கு பாதுகாப்பானதும், இடரற்றதுமான வாழ்க்கையை உறுதிப்படுத்தும். விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பயளைகளை, இயற்கை பயளைகயைப் பயன்படுத்துவதாலும், உயிரியல் சக்திகொண்ட கமத்தொழில் நடைமுறைகளின் ஊடாகவும்,CKDu போன்ற எதிர்கால பேரழிவுகள் போன்றவற்றை நிரந்தரமாக அகற்றலாம்.

சேதன விவசாயத்தின் மற்றுமொரு பெரும் பயன்பாடு விவசாய நடவடிக்கைகளிலிருந்து நீர் மாசடைதலை அரிதாக்குவதாகும். நீர் நிலைகள் மாசடைவதன் காரணத்தின் தாக்கத்தை நீக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். கடந்த பதினைந்து வருடங்களாக தாமதமாகிய, விரய நீர் வெளிப்படுத்தலுக்குரிய கட்டண முறைமையை அறிமுகம் செய்தல், சகல வியாபார நிறுவனங்களிலும் நீர் பாவனை மற்றும் மாசடைந்த நீர்த் தொகுதியை வெளியிடல் போன்றவற்றை குறைக்கலாம். பாடசாலை மட்டத்தில், தூய்மையான நீரின் மேன்மையையும், அதனைப் பாதுகாத்தலும் பற்றிய விளிப்புணர்வு, எதிர்கால சந்ததியினரை மிகவும் பொறுப்புடன் செயலாற்றச் செய்யும். எல்லா நீர் நிலைகளும், அவைசார்பான சட்டவிதிகளில் பரிந்துரைக்கப்பட்டவாறு இடையக வலயங்களை கொண்டிருத்தல் வேண்டும்.

வளி மாசடைதலுக்குரிய பாரிய பங்களிப்பு வாகனப் போக்குவரத்தாகும். மாசடைதல் அற்ற போக்குவரத்தை திட்டமிடல், LRT முறைமையுடன் நீண்ட கால ரீதியில், வாகன நெரிசலையும், வளி மாசடைதலையும் அரிதாக்கலாம். மாநகர மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, தற்போதைய போக்குவரத்து மாதிரிகளை மாற்றுவதற்கான நீண்ட காலத் திட்டமொன்றைக் கொண்டுள்ளது. குறுங்காலத் திட்டங்களான பேருந்து வண்டிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஒழுங்கைகள், பேருந்து துரித மாற்ற முறைமைகள், முக்கிய சந்திகளில் மேம்பாலங்களைக் கட்டுதல் ஆகியன எமது போக்குவரத்து பிரச்சினைகளை எளிதாக்குவதுடன், வளி மாசடைதலையும் குறைக்கும். மின்சார கார்களுக்கு மாறுவதற்கு மக்களை ஊக்கப்படுத்தலும், தனியார் துறைக்கு வரிச் சலுகைகள் மற்றும் ஊக்கிவிப்புத் தொகைகளை வழங்கி சூரிய சக்தியேற்றும் நிலையங்களை அமைத்தல் ஊடாக வளி மாசடைதலை அகற்றலாம். போக்குவரத்து, கைத்தொழில், மற்றும் மின்சக்தி பிறப்பாக்கல் ஆகியவற்றிக்கு தொல்லியியல் எச்ச எரிபொருள் பாவனையை பின்வாங்க செய்வதற்கான பல்வேறு நிதி ரீதியான மற்றும் நிதி ரீதியற்ற நடவடிக்கைகள் போன்ற அரசாங்கத்தின் உபாயங்கள் போன்றவை எங்களின் வளியின் தரத்தை மேலும் மேம்படுத்தலாம்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்களுக்கு ஏற்ப, கைத்தொழில்களின் அமைவிடங்கள், வீட்டுத் திட்டங்களையும், தொடர் வணிக பகுதிகளை அமைத்தல் போன்றவற்றிக்கான வலய ஏற்பாடுகள், காணி பயன்படுத்தலுக்கான முக்கியமானதொரு தேவையாகும். அரச துறை கட்டடங்களுக்கான பசுமைக் கட்டட வழிகாட்டிகள், முன்மொழியப்பட்ட பசுமை அரசாங்க பொருட்கோரல் திட்டம் மற்றும் சூழலியல் கொண்ட கிராமங்களின் அபிவிருத்தி ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல், சமூகத்தை உள்ளடக்கி ஈடுபடச் செய்யும் பசுமை பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்திற்கான சுற்றாடல் தூரநோக்கு தூய்மையான பசுமை நாடாகும். எதிர்கால குடிகளாக வரவுள்ள இன்றைய பாடசாலை சிறார்களை ஈடுபடுத்துதல் மிகவும் முக்கியமானது. விளிப்புணர்வை உருவாக்குதல், சூழல் தொடர்பான திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றில் பயிற்சியளித்தலும், அவர்களின் ஈடுபாடும், அவர்களை மாற்றத்திற்கான வீரர்களாக பொறுப்புள்ளவர்களாக்கும்.

2020 தூரநோக்கு, அரச துறை, தனியார் துறை மற்றும் விசேடமாக பாடசாலை சிறுவர்களை விளிப்பூட்டுதல், பயிற்சியளித்தல் மற்றும் ஊக்கப்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக சகல குழுக்களையும் ஈடுபடச்செய்வதும், 2030 தூர நோக்கை நோக்கி அடியெடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதுமாகும்.

RC3 **சமூகம் -**

## RC 3.1 முக்கிய செயற்பாடுச் சிபார்சுகள்

(அ) படிப்படியான வரி விதிப்பு மட்டும் அதிகரித்த சமூக முதலீடுகளென்ற இரட்டை தந்திரோபாய நடவடிக்கைகள் மூலம் குடும்பங்கள் மற்றும் சமூகத்திற்கு ஸ்திரமான வருமானங்கள் கிடைக்கக்கூடிய வழிகளை அமுல்படுத்தல்.

(ஆ) வேலையில்லாப் பிரச்சினை மற்றும் முறைசாராத் தொழில் நடவடிக்கைள் தொடர்பில் பாதுகாப்பான பொருத்தமான திட்டச் செயற்பாடுகளை நிர்வகித்தல்

(இ) தேசிய சமூக மட்டத்தில் மீள் இணக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய பலதரப்பட்ட பூரணமான செயற்பாடுகளை ஏற்படுத்தலும் நிர்வகித்தலும்.

(ஈ) பிராந்திய கிராமிய மட்டங்களிலுள்ள சமூக வேறுபாடுகளை நீக்குவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதுடன் பால்நிலைச் சமநிலையினை சீர் செய்தல்.

(உ) கிராமிய நகர மட்டங்களில் நிலவும் தனிப்பட்ட சுகாதார வசதி, கல்வி, வாழ்வாதாரம், போக்கு வரத்து தேவைகள் தொடர்பிலுள்ள குறைபாடுகளைச் சீர்செய்தல்.

(ஊ) சமூகத்திலுள்ள வறிய, வலுக்குன்றிய, வயது முதிர்ந்த, மனநோய்ப்பட்ட வர்க்கத்தினருக்கு பலன்தரக்கூடிய செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்.

(எ) அரச நிர்வாகம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பங்களிப்பு செய்யக்கூடியவாறு உள்ளூராட்சி சபைகளில் பொது மக்களின் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தல்.

(ஏ) அரசின் சட்ட திட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் தனிநபர் பாதுகாப்பு, இஸ்திரத்தன்மையை பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் சட்டச் சீரழிவு, அதிகார துஸ்பிரயோகம், ஊழல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல். பால்நிலை வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RC 3.2. நிலைத்திருத்தக்கூடிய நிலைபேறான செயற்பாடு

2020ம் ஆண்டுக்கு இன்னும் மூன்று வருடங்கள் உள்ளன. இக்குறுகிய காலத்தில் தற்போதய நிலையில் பெரியளவு மாற்றத்தினை ஏற்படுத்துதலை யாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் பொருத்தமான கொள்கைகளை வகுத்து அறிமுகப்படுத்தி செயற்படுத்துவதன்மூலம் 2020ம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்க முக்கிய முன்னேற்றத்தினை அடைய இயலும். மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களில் இது சாத்தியம். அதே சமயத்தில் குறிப்பிடப்பட்ட சமூக தேவைச் செயற்பாடுகள் பன்முகப்படுத்தப்படல் வேண்டும். வேறு விதமாகக் கூறினால் பலதரப்பட்ட செயற்பாடுகள் சமகாலத்தல் நிறைவேற்றப்பட்டால் நோக்கம் எய்தப்படும். தவிர சிறு சிறு செயற்பாடுகள் வெற்றியினைத் தரமாட்டாது.

எனவே தேசிய மற்றும் பல்வேறு செயற்பாட்டுத் திட்டங்கள்மூலம் அறிக்கையிற் கூறப்படும் சமூகத்தின் முன்னேற்றத்தினை அடையமுடியும். இருப்பினும் வேரோடிப்போயுள்ள சில சமூகப் பிரச்சினைகளை 2020ம் ஆண்டளவில் தீர்த்துக்கொள்வது சிரமமான விடயமாகும். ஆனால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலம் 2025ம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைய முடியும். செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை கண்காணிப்பதற்கும் அளவிடுவதற்கும் பல்வேறு தரப்புக்களின் ஒத்துழைப்பினை பெறுவதன்மூலம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்வதுடன் தொடர் நடவடிக்கைகளையும் தேசிய செயலகத்தில் மேற்கொள்ளப்பட முடியும்.

சமூகப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் 2020ம் ஆண்டளவில் அடைவுமட்டம் தொடர்பில் தரவுகளைப் பெறமுடியாவிடினும், அடுத்த மூன்றாண்டு காலப்பகுதியில் கொள்கை திட்ட அபிவிருத்தி தொடர்பாக குறிப்பிட்ட முன்னேற்றத்தினை ஈட்டிக்கொள்ள முடியும். இவ்வகையான ஆரம்ப செயற்பாடுகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படின் 2025 வரையில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் பொருத்தமான தீர்வுகளை எய்தமுடியும். உதாரணமாக வறுமை தொடர்பான பிரச்சினைகள் 2025 வரையில் தீர்க்கப்படுவதுடன் சம வருமானம் தொடர்பான இலக்கு எய்தப்பட்டு தொடர்ச்சியான வரிவிதிப்புத் திட்டங்கள் மூலம் குறிப்பிடத்தக்களவு வருமானச்சீரின்மை போன்றவை சீர் செய்யப்பட முடியும்.

எமது நாடு அடுத்து 10 வருட காலத்தில் அல்லது 2030ம் ஆண்டு வரையில் சமூக பொருளாதார மற்றும் சுற்றுச் சூழல் அபிவிருத்தி தொடர்பாக முன்னேற்றமடைவதற்கு பின்வரும் விடயங்கள் வழிவகுக்கும். எமது நாடு மாற்றமடைந்துவரும் பூகோளக் கொள்கை தொடர்பாக சர்வதேச தலையீடுகளின்றி செயற்பட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளும் தீர்வுகளும்

# RS

## RS1 விவசாயமும் உணவும்

### RS1.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) நவீன தொழில்நுட்ப முறைகள் மூலம் பருவகால மழை வீழ்ச்சி, காலநிலை மாற்றம் தொடர்பாக ஏற்ற முன்னாயத்தங்கள் செய்வதற்கான வழிமுறைகளைக் கையாளுதல்.

(ஆ) வரட்சியைத் தாங்கக்கூடிய குறைந்தளவு நீர்த் தேவையுடைய பயிர்வகைகளை இனங்காணுதலும், அவை தொடர்பான விவசாய இரசாயனப் பாதர்த்தங்களை அறிமுகப்படுத்துதல்

(இ) விவசாயிகளுக்கு நீர் சேகரிப்பு மற்றும் விவசாயத்துக்குரிய தொழில்நுட்பம் சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவினை வழங்குதல். இவ்விடயத்தில் மத்திய, நீண்டகால பெறுபேறுகளை எய்தமுடியும்.

(ஈ) விவசாயிகளுக்கு குறைந்தளவு நீர் தேவைப்படும் பயிர்வகைகளை அறிமுகப்படுத்தி உற்பத்திகளை இலாமீட்டக்கூடிய வகையில் சந்தைப்படுத்துவதற்கான அறிவுரைகளை வழங்குதல்.

(உ) நுகர்வோருக்கு போசாக்குச் சத்துள்ள மற்றும் உணவுமுறையில் பொருத்தப்பாடான மாற்றங்களுக்கான அறிவுரைகளை வழங்குதல். குறைந்த மாப்பொருள் மற்றும் சீனி நுகர்வு ஆகியவற்றுக்குப் பதிலாக பழங்கள், மற்றும் மரக்கறி வகைகளை நுகர்வதின் மூலம் விவசாயத்திற்கு தேவையான நீரின் அளவைக் குறைத்துக்கொள்ள முடியம்.

### RS1.2 நிலைபேறான நோக்கு

**2020**

UN/WFP அவர்களினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2017ம் வருடத்திற்கான உள்நாட்டு அரிசி உற்பத்தி 7 மாதங்களுக்கு சிறிது கூடிய காலத்திற்கு போதுமானதாக இருந்தது. இவ்வுற்பத்தி வீழ்ச்சி 2016க்கு 10 வருடங்களுக்கு முன்பிருந்த நிலையை விட மிகவும் மோசமானது. புள்ளிவிபரத் திணைக்களத்தின் GDP கணிப்பீட்டிற்கிணங்க தேயிலை விலை அதிகரித்தபோதும் விவசாயத்தில் Q2 – 2017 காலப்பகுதியில் 2.9 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டது.

2017/18 காலபோகம் நீர்த்தட்டுப்பாடு காரணமாக விவசாயத்திற்கு சார்பான ஆண்டாக கொள்ளமுடியாது. ஆதனால் WFP விவசாயக் கடன்களை இரண்டு மடங்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்ததுடன் கடந்த 2 ஆண்டுகளில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளன. 2020க்கு இன்னும் ஒரு வருடம் உள்ளதுடன் உள்நாட்டு உணவுப் பொருட்கள், போசாக்கு, விவசாய வருமானம் ஊக்கமளிப்பதாக அமையவில்லை.

**2025 – 2030**

முன்னர் குறிப்பிட்ட 5 அம்ச செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படடால் நீடித்த பயன்பாட்டினை எய்தமுடியும். விவசாய மேன்மை 2020ன் பின்பு ஏனைய பொருளாதார அபிவிருத்தியிலும் தங்கியுள்ளது. GDP க்கு தற்போதுள்ள 10 வீத பெறுமதி அதிகரிப்பு பொருளாதாரத்துக்கு நன்மை பயக்காது. அப்படியிருந்தும் விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு உயர்தர வாழ்க்கை நிலை மற்றும் நீடித்த உற்பத்திச் செயற்பாடுகளுக்கும் வழிசமைக்கும். பாரம்பரிய ஏற்றுமதி விளைபொருட்கள் மற்றும் பாரம்பரியமற்ற விளை பொருட்கள் அதாவது பழங்கள், மரக்கறி வகை, பூக்கள் போன்றன நவீன தொழில் நுட்பம் உபயோகிப்பதன் மூலம் அதிகரிக்கப்பட முடியும்.

முன்மொழியப்பட்டுள்ள Mega Polis அபிவிருத்தி மற்றும் பௌதீக உட்கட்டமைப்பு பொருளாதார அபிவிருத்தியில் மாற்றத்தினை ஏற்படுத்தும். அத்துடன் சூழல் முறைமையிலும் நிலப் பாதுகாப்பு தொடர்பாகவும் மாற்றங்கள் ஏற்படலாம். இம்முறை இயந்திர சாதன அமைப்பு மற்றும் முதலீடு தொடர்பிலும் ஊக்கமளிக்கலாம். இதனால் அரிசி நுகர்வுக்கான தேவை குறைவடைந்து பதிலாக பழங்கள், காய்கறிகள், மீன், பாற்பண்ணை உற்பத்திகள் அதாவது நீரில் தங்கியிருக்காத பயிர் வகைகளுக்கான உற்பத்தி அதிகரிக்கப்பட முடியும். ஏவ்வாறாயினும் யாவும் தாமாகவே நடைபெறும் என எண்ணமுடியாது. ஒரு வழிகாட்டல் முறை இன்றியமையாதது. அல்லது கிராமிய ஏழை மக்கள் பாதிக்கப்படலாம். நீடித்த காலச் செயற்பாட்டிற்கு FTA மற்றும் திறன்சார் அறிவுடமை வரவேற்றகத்தக்கது.

## RS2 கல்வி

### RS2.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) நாடுபூராக உள்ள முன் - முதன்மை பாடசாலை மாணவர்களுக்கு பொருத்தமான

கல்வி ஊக்குவிப்பு வழங்கப்படுவதுடன் குறைந்த வருமானக் குடும்பகளைச் சேர்ந்தோருக்கு ECCE நிதி உதவி வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) சகல மாணவர்களும் வெற்றிகரமான கல்வி, தன்னம்பிக்கை, பொறுப்புணர்வுள்ள பிரசைகளாக மற்றும் சமூகத்தில் பங்காளர்களாக வாழ்வதற்கேற்ற கல்வி முறையினை தாபித்தல்.

(இ) ஆசிரியத் தொழிலின் முன்னேற்றம், தரம், பயிற்சி தொடர்பில் நவீன கற்றல் - கற்பித்தல் முறைகளை ஏற்படுத்தல்

(ஈ) சீரான மறுசீரமைப்பு முறைகள் தொடர்பான உரிய பயிற்சிகள் வழங்கப்படுதலை உறுதிப்படுத்தல்

(எ) தற்கால மற்றும் எதிர்கால சமூக அபிவிருத்துக்கு உகந்தவாறு பல்கலைக் கழகங்கள், உயர் கல்வி நிலையங்களை தரம்பிரித்து நவீன மயப்படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RS2.2 நிலைபேறான நோக்கு – 2020ம் ஆண்டும் அப்பாலும்

கல்வியின் நீடித்த தரத்தனை உறுதிசெய்வதற்கு ஏதுவாக தந்திரோபாய உத்திகளுடன் உரிய திட்டங்களை வகுத்து குறுகியகால அபிவருத்தி செயற்பாடுகள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் 2025 மற்றும் நீண்டகால நிகழ்ச்சிகளை அபிவிருத்தி செய்தல். அத்துடன் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 2025 மற்றும் 2030 நீண்டகால அபிவிருத்திக்கு நிதி ஏற்பாடுகளைச் செய்தல், திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

ஸ்ரீலங்கா உயர் - மத்திய வருமான நாடு என்பதை கருத்திற்கொண்டு அபிவிருத்தி அடைந்த நாடுகளைப் பின்பற்றி புதிய தொழில் நுட்பம் தொடர்பான வசதிகளை ஏற்படுத்தி திறமையான மாணவர்களை மேலும் ஊக்குவிக்கலாம். எனவே அரசியல் தலைமை, கொள்கை வகுப்பாளர்கள், கல்விமான்கள், மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களின் ஒத்துழைப்பு அவசியமானதுடன் 3030 வரை எதிர்பார்க்கப்படும் கல்வித்திறன் எய்தப்படலாம்.

# RS3 சக்தி

## RS3.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) காரண காரிய அடிப்படையில் விசேடமாக விஞ்ஞான அடிப்படையிலும் நீண்ட காலத்திற்குகந்த திட்டங்களை அமுல்படுத்தல்

(ஆ) நீடித்த சக்தி அபிவிருத்தி தொடர்பில் நிதியினை உரிய முறையில் நிர்வகித்தல், உறுதியான முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் முன்னுரிமை வழங்கப்படல்.

(இ) மின் வினியோகம் பாவனையாளர்களுக்கு நம்பிக்கையானதாகவும் போதுமானதாகவும் இருப்பதற்கு ஏற்ற வகையில் ஒழுங்கான வினியோகத்தினை ஏற்படுத்தல்.

(ஈ) காற்றாலை, சூரிய சக்தி, உயிர்வாயு ஆகியன மூலம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் கார்பன் கழிவினை ஏற்படுத்தமாட்டாது என்பதுடன் அபிவிருத்திக்கும் வழிசமைக்கும்.

(உ) மன்னார் கடற்பரப்பில் பெறக்கூடிய வாயு அபிவிருத்தி தொடர்பில் முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படாவிடின் வெளிநாட்டுச் செலாவணி குறைவடைவதுடன் தேசிய பொருளாதாரத்தினையும் பலப்படுத்த முடியும்.

(ஊ) அரசாங்கமானது சக்தி தொடர்பான எல்லா வகையான திட்டங்களையும் பங்காளிகளுடன் அர்த்தபூர்வமான முறையில் கலந்துரையாடி அபிவிருத்தி செய்வதினை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RS3.2 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

### 2020

**மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்திபெறும் முறையானது எதிர்கால வரப்பிரசாதம்**

ஸ்ரீலங்கா போதியவளவு சூரிய ஒளி கிடைக்கப்பெறும் உஷ்ண வலய நாடு. எமக்குப் போதியளவு காற்று கிடைப்பதுடன் கடலை அண்டிய சிறிய நாடு என்பதால் வடக்கின் கூடுதலான பகுதியில் நாட்டின் வடக்கு, வட மேல், தென்கிழக்கு பகுதிகளில் காற்று தொடர்ச்சியாக வீசும். மலை நாட்டில் சில காலங்களில் காற்று மிக வேகமாக வீசுவதுண்டு. எமது நாட்டில் உக்கிய தாவரங்களிலிருந்து பெறப்படும் 'Bio Gas' பெறக்கூடிய விரைவாக வளரும் மரங்கள் நாட்டப்பட முடியும். எமது நாட்டின் குப்பை கூளங்கள் இயற்சிதைவுத்திறன் (Bio degradable) கொண்டவையாகையால் ஒட்சிசன் இல்லாமல் anaerobic முறையில் சிறியளவிலான மின்சாரம் பெற்றுக்கொள்ளப்பட முடியும். அத்துடன் சூரிய சக்தி, மின் பிறப்பாக்கிகள், காற்று மூலம் பெறப்படும் மின்சாரம் பாவனையில் உள்ளதுடன் இலங்கை மின்சார சபை மூலமும் மின் வழங்கப்படுகின்றது. ஸ்ரீ லங்காவானது சக்தி பெறப்படும் விடயத்தில் பசுமையான நாடாகவே காணப்படுகின்றது. எமது நாட்டிலுள்ள பாரிய மற்றும் சிறிய நீர் மின் வழங்கல் முற்று முழுதாக பயன்படுத்தப்படுகின்றன. 1970 களில் 80 வீதமாக பயன்படுத்தப்பட்ட உயிர் வாயு மற்றும் 2015 களில் மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்தி வினியோக மாற்றம் பயன்படுத்தப்படுகின்றது. மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்தியின் அதிகரிக்கப்பட்ட பாவனை மற்றும் பாவனையாளர்களின் பங்களிப்புடனான மின் வினியோகம் தொடர்பில், மின்சாரம் வழங்கல் தொடர்பில் பங்கீட்டு வலையமைப்பு முறை உரிய முகாமைத்துவம் பேணப்படல் வேண்டும். அதன்மூலம் தொடர்ச்சியான மின்வினியோகத்தினை வழங்க முடிவதுடன் நவீன பொருளாதார நடவடிக்கைகளில் நம்பிக்கைத் தன்மையினை ஏற்படுத்த முடியும். தேவைப்பாடு தொடர்பான முகாமைத்துவம் மூலம் பாவனையாளர்களின் பங்களிப்புடன் மின்சாரத்தினை வீண் விரையம் செய்யாமல் பேணவும் மற்றும் கட்டணம் தொடர்பான சீரான நடவடிக்கைளுக்கு அபிவிருத்தியடைந்த மின்மானி உட்கட்டமைப்பு தேவைப்படும். CEB, LECO ஆகியன ஏற்கெனவே நவீன மின்மானி உட்கட்டமைப்பினை ஆரம்பித்திருப்பதுடன் மேலும் பல முன்னோடித் திட்டங்களை 2018, 2019 ஆண்டுகளில் செயற்படுத்த உள்ளனர். மேலும் 2018 தொடக்கம் இலகுவான மற்றும் முன்கூட்டியே பணம் செலுத்தும் முறையிலான மின்மானி பொருத்தல் பாவனையாளரின் வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்படவுள்ளதால் பாவனையாளர் தங்களின் நுகர்வினை கண்காணிக்கவும், முகாமைத்துவப்படுத்தவும் ஏதுவாக அமையும்.

### 2025 – 2030

"ஸ்ரீலங்காவின் தேசிய சக்திக் கொள்கை மற்றும் தந்திரோபாய நடவடிக்கைகள்" என்ற வரைபு கடந்த 10 ஆண்டு காலத்தில் நிர்வகிக்கப்பட்ட மின் வழங்கல் முறைகளில் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டனவா என சிந்திக்கச் செய்கின்றது. இது பரிஸ் உடன்படிக்கை (COP 21) மற்றும் SDG தொடர்பில் ஊக்கமளிக்கின்றது. ஸ்ரீலங்காவானது GHG ளெியேற்றுகையினை 20 வீதம் குறைத்துக்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களைக் கருத்திற்கொண்டு காற்றுமூலம் 414 MW, சூரிய சக்தி மூலம் 410 MW, 2020 அளவில் மற்றும் காற்று மூலம் 894 MW> சூரிய சக்தி மூலம் 1009 MW 2030திலும் பெறப்படலாமென கூறப்பட்டுள்ளது. இம்முறையில் GHG வெளியேற்றுகையினை 20 வீதம் வரையும் குறைத்துக்கொள்ள ஏதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய முறையிலான மற்றும் நீடித்த நோக்குடைய "Smart" மின்வழங்கல் திட்டம் தொடர்பிலும் ஆலோசிக்கப்படுகிறது. இம்மாதிரியன ஏற்பாடுகள் எதிர்கால அபிவிருத்தி கால நிலை மாற்றம் உட்பட, தொழில்நுட்ப முன்னேற்ற மின்சார புகையிரத சேவை, மோட்டர் வண்டிகள் மற்றும் நகரத் தேவைகளுக்கான மின் வினியோகத்தினையும் பெற்றுக்கொள்ள ஏதுவாகும

## RS4 சுகாதாரம்

### RS4.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள

(அ) பல படிநிலைகளையுடைய (a hierarchical system) முறைமூலம் நடமாடும் ஆய்வுகூட வசதியுடனான சுற்றாடல் வைத்தியசாலைகள் ஊடாக ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கமுடியும். சிக்கலான நோயாளர்கள் தொடர்பில் 2ம், 3ம், தர வைத்தியசாலைகள் மூலம் சேவைகளை வழங்கமுடியம்.

(ஆ) வைத்தியசாலைகளைக் கண்காணித்தல், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, மற்றும் மருந்துகள் உபகரணங்கள் வழங்கல் முறைகளில் சீரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) பொதுமக்களை உரிய சுகாதாரம் பேணல், உடல்நலக்கேடு மற்றும் வீதி விபத்துக்களைத் தவிர்த்தல் தொடர்பில் அறிவூட்டல்.

(ஈ) சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரதேசங்களில் பிரசவ மற்றும் சிசு இறப்புக்கள், தொற்றுநோய்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு பயிற்றப்பட்ட ஆளணியினரை கூடிய எண்ணிக்கையில் வேலைக்கமர்த்துவதுடன் பின்தங்கிய பகுதிகளில் கடமையாற்றுவதினைக் கருத்திற்கொண்டு பொருத்தமான கொடுப்பனவுகளை வழங்குதல். அத்துடன் நோயாளிகளின் வசதிகருதி உரிய வைத்தியசாலைகளுக்கு அழைத்துச் செல்ல பயிற்சிபெற்ற நோயாளர் காவு வண்டி சேவையாளர்களை ஈடுபடுத்தல்.

(உ) அரச செலவீனத்தைக் குறைப்பதன் பொருட்டு தேசிய சுகாதார காப்புறுதித் திட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைப்பின் மூலம் வைத்தியர்கள் பொதுமக்களின் வசதிகளை அதிகரித்தல்.

### RS4.2 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள

**2020 – 2025**

இக்காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் வழங்கல் தொடர்பில் வெளிப்படையான பெறுகை நடவடிக்கைகளை அமுல்படுத்தல். மின்மப் பயன்பாட்டு (Electronic) வைத்தியப் பதிவுகளைப் பேணுதல். பாதகமான பொருட்கள் பாவனை தொடர்பில் அரசு உரிய முகாமைத்துவத்தினை. அமுல்படுத்தும். சகல நோயாளர்களின் விபரங்களும் அங்கீகரிக்கப்பட்ட வைத்திய முறையில் பதிவு செய்யப்படும்.

**2025 – 2030**

தேசிய ரீதியிலான சுகாதார காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்படும். பொது மற்றும் தனியார் இணைப்புச் சேவைகள் எங்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RS5 கடல் வளங்கள்

### RS5.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் மனிதவலுவுடன் கூடிய கடல் ஆராய்ச்சி நிறுவனம் அமைத்தலும் அதனை கடல் ஆராய்ச்சியில் சிறந்த நிலையமாக அபிவிருத்தி செய்து அதனூடாக கடல்வள ஆராய்ச்சிகள் தொடர்பில் இணைப்பு நடவடிக்கைகள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தல்.

(ஆ) சுற்றுச் சூழலுக்கேற்ப மீன்பிடி உபகரணங்களை அறிமுகப்படுத்தலும் ஏற்ற செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்தல்

(இ) கடல் பாதுகாப்பு வலயம் தொடர்பான வலையமைப்பினை அதிகரித்து அப்பகுதியில் பயனுறுதியான முகாமைத்துவத்தை வழங்குதல்.

(ஈ) மீன்பிடித் துறைமுக உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல், குறைந்தளவே பயன்படுத்தப்படும் Dikkowita மீன்பிடித் துறைமுகத்தினை அபிவிருத்திக்கு பயன்படுத்தல்

(உ) கடுமையாக பாதிக்கப்பட்ட சூழல் அமைப்புக்கள புனரமைத்தல், முக்கிய கடல்வாழ் உயிரினங்களின் வதிவிடங்களை பாதுகாத்தல்.

(ஊ) எதிர்காலத்தில் கடல்மூலம் கிடைக்கக்கூடிய வளங்களில் கவனம்செலுத்தி கூடுதல் முதலீடுகளைச் செயற்படுத்தி உச்ச பொருளாதார வளத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

(எ) மீன்பிடியைத் தவிர மீளப் புதுப்பிக்கக்கூடிய சக்தி, கப்பற் போக்குவரத்து, சுற்றுலா, கனிமப்பொருட்கள், மருத்துவப்பொருட்கள் கடலிலிருந்து கிடைக்கக்கூடுமாகையால் தொடர்பான நடவடிக்கைகளை விஸ்தரித்தல்.

### RS5.2. நிலைபேறான நோக்கு

நமது நாடு மீன்பிடியைத் தவிர ஏனைய கடல்வளத்தினை முழுதாக அறிந்துகொள்ள வில்லை. எனவே நாட்டின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல்வேண்டும். அத்துடன் கடல் சூழல் பாதுகாத்து பேணப்படல் அவசியம். கடல் வளம் தொடர்பான விஞ்ஞன அறிவு மற்றும் தொழில்நுட்பம் மூலம் கடலிலிருந்து அதிகரித்த நாட்டின் அபிவிருத்தி தேவையினை பெற்றுக்கொள்ள முடியும். நாம் கரையோர மீன் உற்பத்தி மற்றும் கடல்தொழில் உபகரத் தொழில்நுட்பம் மூலம் மீன் ஏற்றுமதியினை இலக்குவைத்து செயற்படமுடியும். மேலும் கடலுணவு எற்றுமதித் தொழில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். நம்நாடு கடல்சார் பொருளாதாரத்தில் நன்மைபெற வேண்டுமெனில் துறைமுகங்கள் "பசுமைத்துறைமுக" கருப்பொருளின்கீழ் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

அடிப்படை ஆய்வு, வழங்கல் தொடர்பான ஆய்வு மற்றும் உயிரற்ற வளங்கல் உரிய செயற்பாடுகள் அவசியம். கடல் தொடர்பான சூழல் சுற்றுலா மூலம் கடல் முலையூட்டிகளை அவதானித்தல் போன்றவற்றிற்கு சுவாகச்குழல் (Snorkeling) மூழ்கல், நீர் விளையாட்டுக்கள் போன்றன அபிவிருத்தி செய்யப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RS6 போக்குவரத்து

### RS6.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) நிலையான பௌதிக சூழலில் சகலருக்கும் நியாய கட்டணத்துடன் கிடைக்கக்கூடிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தல்.

2030ம் ஆண்டளவில் பூர்த்தியான போக்குவரத்து சேவைகளில் இடைவெளிகளை சீர் செய்தல். (a) பிள்ளைகள், மகளிர், சிரேஸ்ட பிரஜைகள், மற்றும் அங்கவீனர்கள் (b) பின்தங்கய சமூகங்கள் மற்றும் பண வசதியற்றோர் தொடர்பான விடயத்தில் விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு சேவை வசதிகள் அளித்தல். 2025ம் ஆண்டவில் 100,000 இற்கு மேற்பட்ட சனத்தொகை கொண்ட ஒவ்வொரு நகரமும் போதியளவு நடைபாதை, துவிச்சக்கரவண்டிப் பாதை மற்றும் பொதுப் போக்குவரத்து, வசதிகளுடன் நகரின் பௌதிக காலாசார அமைப்புக்கேற்ற போதுமான வசதிகளைக் கொண்டிருத்தல்வேண்டும்.

(ஆ) **உயிர் பாதுகாப்பு:** பாதுகாப்பான போக்குவரத்து அபிவிருத்திக்காக 5 வீத மூலதன ஒதுக்கீடு வழங்குதல். பிரயாணத்தில் பாதுகாப்பு, பெண்கள் உட்பட சகலருக்கும் வழங்கப்படுதல் சமூகத்தின் அடிப்படை உரிமையாகும்.

(இ) **இயற்கைச் சூழலை பாதுகாத்தல்:** போக்குவரத்து கட்டமைப்பு, சேவைகள் தொடர்பாக 2020 தொடக்கம் (a) பௌதிகவள உபயோம், (b) பயனாளிகளின் எண்ணிக்கை (c) புதுப்பிக்கத்தக்க சக்தி உபயோகம் (d) சூழல் மீதான தாக்கங்கள் (e) பயணத்தூரம் மற்றும் எரிபொருள் நுகர்வு தொடர்பிலும் மதிப்பீடுகள் மேற்கொள்ளல்.

(ஈ) **தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் தொடர்புகளை முன்னேற்றுதல்:** 2018ம் ஆண்டளவில் பன்முக வசதிகளுடன் போக்குவரத்தில் அபிவிருத்திசெய்வதற்கு ஏற்ற தந்திரோபாய திட்டங்களாக (a) உள்ளூர் விமான சேவை அபிவிருத்தி (b) சர்வதேச விமான சேவை அபிவிருத்தி மற்றும் (c) ஏற்றுமதி வசதிகளுடன் விமான நிலைய அபிவிருத்திகளை முன்னெடுத்தல்.

(உ) **தொழில் வசதிகள் மற்றும் உற்பத்தித்திறன்:** 2030ம் ஆண்டளவில் அரசாங்கம் போக்குவரத்து தொழில்துறை மற்றும் சுமூகமாக வேலை செய்யக்கூடிய வசதிகளை ஏற்படுத்தவுள்ளது. உள்ளூர் பெறுமதியை அதிகரிக்கும் வகையில் போக்குவரத்து சேவை ஊக்குவிக்கப்படும்.

(ஊ) பாரிய திட்டங்கள் தொடர்பில் உரிய பங்காளிச் சமூகத்துடன் கலந்தாலோசித்த பின்பே அமுல்படுத்தல் தொடரப்படும்.

### RS6.2 நிலைபேறான நோக்கு

“வழமையான செயற்பாடு” என்ற முறை ஸ்ரீ லங்காவினை 2020ம் ஆண்டளவில் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்பில் நிலைத்து நிற்க முடியாத நிலையினை ஏற்படுத்தும். நகர நெருக்கடி 20 வீதத்திற்கு மேற்பட்ட GDP யினை உள்வாங்குவதுடன், வளி மாசடைதல், வீதி விபத்துக்கள், விரையம், அதிகரித்த சக்தி நுகர்வு போன்ற தாக்கங்களை ஏற்படுத்தலாம். இப்பிரச்சினைகள் கருத்திற்கொள்ளபபடாவிடின் பாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் பாதிப்பு, நகர மற்றும் கிராமப் பகுதிகளில் ஏற்படுவதுடன் 2022 அளவில் தாங்கமுடியாத தாக்கத்தினை ஏற்படுத்தலாம் பொருளாதார செயற்பாட்டு வீழ்ச்சி காரணமாக உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் இடப்பெயர்வுகள் ஏற்படும் சாத்தியத்துடன் ஸ்ரீ லங்காவில் பொருளாதார சமநிலையிலும் மாற்றங்கள் ஏற்படலாம். எப்படியாயினும் முன்மொழியப்பட்ட தலையீடுகள் குறிப்பிட்ட தாக்கத்திலிருந்து காப்பாற்றுவதுடன் நாட்டினை பொருளாதார அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதுடன் 2030 அளவில் போக்குவரத்துச் செலவினை அரைவாசியாக குறைப்பதுடன் சமூக புரிந்துணர்வு மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஆகக்குறைந்தது 1/3 ஆக குறைக்கப்படலாம்.

## RS7 நகர அபிவிருத்தியும் பௌதீக திட்டமிடலும்

### RS7.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) தேசிய பௌதிக திட்மிடல் கொள்கையில் அரச தலைமை மட்டத்திலான தலையீடு

(ஆ) தேசிய பௌதிக திட்மிடல் கொள்கை தொடர்பில் பொதுமக்கள் விரிவாகவும் விரைவாகவும் அறிந்துகொள்வதற்கான ஏற்பாடுகள்.

(இ) பொருத்தமான நிபுணத்துவம், தொழிலநுட்ப மற்றும் நிறுவன அமைப்புமூலம் உள்ளூராட்சி சபைகளின் திட்டமிடல் மற்றும் அமுலாக்கக் கிளைகளை வலுப்படுத்தல்.

(ஈ) தேசிய, மாகாண, உள்ளூராட்சி பாதீடுகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதி உள்ளூர் அபிவிருத்தி திட்டங்களுக்கேற்ப செயற்படுத்தப்படுவதனைக் கண்காணித்தல்.

(உ) தேசிய பௌதிக திட்டத்திற்கிணங்க வருடாந்த மற்றும் கிரமமான காலப்பகுதியில் செயற்பாடுகளை அமுல்படுத்தல்

(ஊ) உட்கட்டமைப்பு திட்டங்களைப் பொறுத்தவரையில் திட்டமிடல் நடவடிக்கையின் பங்குதாரர்களை கலந்துரையாடுவதன் மூலம் சமூத்தினை சுமூகமான நிலையில் பேண ஏதுவாகும்.

### RS7.2. நிலைபேறான செயற்பாடுகள்

முன்குறிப்பிட்டதற்கிணங்க வெற்றிகரமான சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு திட்டமிடப்பட பௌதிக அபிவிருத்தி செயற்பாடு மிகவும் அவசியமானது. நிலையான பௌதிக அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு அதிமேதகு ஜனாதிபதி தலைமையிலான மற்றும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களினால் பிரேரிக்கப்பட்ட முன்மொழிவு தேசிய பௌதிக திட்டமிடல் சபையின் பணிப்புரைகளுக்கு அமைய அமுல்படுத்தப்படல் வேண்டும். இத்தேசிய பௌதிக திட்டம், தேசிய ரீதியிலான கொள்கை வழிகாட்டித் திட்டமாக பிராந்திய, உள்ளூர் தேவைகள் இனங்காணப்பட்டு நிறைவேற்றப்படல் வேண்டும். நடைமுறைப்படுததலின்போது சமூக பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமென அரசாங்கத்தினால் கருதப்தப்படும் விடயங்கள் தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படும். அரசாங்கமானது சில திட்டங்களை மீளாய்வு செய்து அவசிய தேவைக்கேற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையிலுள்ள திட்டங்கள், அவற்றின் உடனடி உபயோகம் தொடர்பில் ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

முக்கிய முன்னுரிமைத் திட்டங்களான பொருந்தெருக்கள் மற்றும் புகையிரதத் திணைக்கள அபிவிருத்தி திட்டமிடப்பட்ட காலவரையில் அதாவது 2025 வரையில் நிறைவேற்றப்படுவதன் மூலம் எதிர்கால குடியேற்ற அபிவிருத்தி விஞ்ஞான ரீதியான மக்கட்தொகை மற்றும் உலகமயமாக்கல் தொடர்பில் பங்களிப்பு செய்யப்படலாம்.

பிராதான உட்கட்டமைபு அபிவிருத்திகள், திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும்போது தீவின் பௌதிக தரை அமைப்பில் படிப்படியான மாற்றங்கள் ஏற்படுத்தப்படுவதுடன், இவ்வாறு எதிர்பார்க்கப்படும் நகர அபிவிருத்தி மற்றும் குடியிருப்பு பங்கீடு மாற்றமடைதல் 2030 காலப்பகுதியில் எதிர்பார்க்கப்படலாம்.

## RS8 நீர்.

### RS8. 1.முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) தேசிய ரீதியில் சிறிய நீர்த்தேக்கங்கள் மற்றும் குழாய் நீர் திட்டங்களை மாகாண சபைகள், நீர் வழங்கல் சபை மற்றும் ஏனைய அதிகார சபைகள் மூலம் முன்னெடுத்தல்

(ஆ) மலைச்சரல்களில் சிறிய கட்டு அணைகள் அமைத்து மண்ணரிப்பை தடுப்பதுடன் நீர் விரையமாதலை தடுத்தல்.

(இ) மத்திய சுற்றுச் சூல் அதிகார சபையின் அனுசரணையுடன் நீர் மாசடைதலை தடைசெய்ய தேசிய ரீதியான செயற்பாட்டினை ஆரம்பித்தல்

(ஈ) நாட்டின் பல பாகங்களிலுமுள்ள சிறிய நீர்ப்பாசனங்களுக்குரிய குளங்களை புனரமைத்தல்.

(உ) தேசிய ரீதியான விழிப்புணர்வு நிகழ்வுகளின் மூலம் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபையின் உதவியுடனும் நீர்த்தேக்க முகாமைத்துவம் தொடர்பில் மற்றும் நில அகழ்வினை கட்டுப்படுத்தல், வீட்டுத் தோட்ட அமைப்பு, சிறிய அளவிலான விவசாய அமைப்புக்களை ஊக்கப்படுத்தல்

### RS8.2. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்.

**2030 - இலக்கு**

நாட்டில் காலநிலை மாற்றம், வரட்சி, மழை ஏற்படினும் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் தரமான குடிநீர் வழங்கப்படவேண்டுமென்பது அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். அத்துடன் விவசாயம், நெல் மற்றும் வர்த்தகப் பயிர்ச் செய்கை போன்றவையும் முக்கியமானவையாகும். அத்துடன் கிராமப் பகுதிகள், தோட்டங்கள், நகரங்கள் போன்ற இடங்களில் வதியும் குடும்பங்களுக்கு அடிப்படை சுகாதார வசதிகள் வழங்கப்படுவது பிரதான இலக்காகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2020**

2030 நோக்கி நகரும்போது 2018 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் மழைநீர் சேகரிப்பு, குடிநீர் மற்றும் விவசாயத் வேைகளுக்காக சிறு குளங்களைப் புனரமைத்தல், அத்துடன் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள நீர்தேக்கங்களை மீளமைத்தல் ஆகிய அடங்கும். அத்துடன் குடிநீர் மற்றும் சிறியளவிலான விவசாயத்துக்கு கிணறுகள் திருத்தம் செய்தல், அமைத்தலுடன் மற்றும் கிராமிய மற்றும் தோட்டப்புறப் பாடசாலைகளில் மாகாண மற்றும் அரசாங்க நிறுவனங்களின் உதவியுடன் சுகாதாரத் தேவைகளை அபிவிருத்தி செய்தலாகும், உடனடியாகவே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தரவு மற்றும் தேவையான நிதிப்பங்கீடு ஒதுக்கப்படல் வேண்டும்.

**2025**

2020 – 2025 பயணத்தின் இரண்டாவது அம்சமாக 2030 நோக்கத்துக்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டு கொள்கை முடிவுகள் ஏற்கப்பட்டு போதுமான நிதி ஒதுக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் "தேசிய நீர்ப் பாவனை தொடர்பான பிரதான திட்டம்" தயாரிக்கப்பட்டு நிலத்தடி நீர் மற்றும் மேற்தரை நீர் என்பவற்றின் உச்சப் பயன்பாட்டிற்காகவும் நீரின் தரத்திற்காகவும் செயற்படுதல் வேண்டும்.

2025ல் நீருடன் தொடர்புடைய அரச நிறுவனங்கள் அனைத்தினதும் பங்களிப்புடன் "தேசிய நீர் முகாமைத்துவத்திற்கா செயலகம்" நிறுவப்பட்டு, நீர் தொடர்பான கொள்கைகள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும். நோக்கங்களாக சனத்தொகையின் 65 வீதத்தினருக்கான குடிநீர் வழங்கல், குழாய் நீர் வினியோக வலையமைப்பினை முன்னேற்றுதல், மழைநீர் சேகரிப்பு, தேவையான நிதி ஒதுக்கீடு, பெறுகைத் திட்டமிடல், நகரங்களுகளின் கழிவு நீர் அகற்றும் வலையமைப்பு மற்றும் கிராமிய தோட்டப்புற பிரதேசங்களின் சுகாதார வசதிகள் என்பனவும் உள்ளடங்கும். பிரதான வேலைத் திட்டங்களுடன் குடிநீர் வினியோகம் தற்போதுள்ள 45 வீதத்திலிருந்து 60 வீதமாக உயர்வடைவதுடன் தேசிய நீர்வழங்கல் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உதவியுடன் அமையும்.

**2030**

2030ம் ஆண்டுக்கான பயணத்தின் முடிவில் நாட்டிலுள்ள 90 வீதமான நீர்த்தேக்கங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்படுவதுடன் மற்றும் அபிவிருத்தி புனர்நிர்மானம் மூலம் பெரிய, நடுத்தர, சிறிய குளங்களுக்கான நீர் வினியோகம் செய்யப்படும். ஆறுகள் மற்றும் நீர்நிலைகளில் உள்ள நீரின் தரம் உலக சுகாதார நிறுவன குடிநீர் நியதிகளுக்கு இணங்க பேணப்பட்டு விவசாயத்துக்கும் பயன்படுத்தப்படும். சகல பிரஜைகளுக்குமான குடிநீரில் 65 சதவிகிதம் குழாய் நீர் வசதி மூலமும் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட வளைங்கள் மூலமும் கிடைப்பதுடன் மிகுதி 35 வீதம் மழைநீர் சேகரிப்பு மூலம் பெற்றுக்கொள்ளப்படும்.

2030ல் சீரான நீர் வழங்கல், தேசிய நீர் முகாமைத்துவ செயலகத்தின் ஏற்பாட்டில் நீர்ப்பாசன, விவசாய, குடிநீர் மற்றும் நீர்வலுத் தேவைகளுக்காக கிடைக்கப்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2030க்குப் பின் நீர்த்தேக்க மாற்றீடு, தேசிய நீர்ப்பாசனத் திட்டம் முன்மொழிந்தால் செயற்படுத்தப்படலாம். ஆனால் நீர்த்தேக்க அபிவிருத்தி மற்றும் பொருத்தமான விவசாயப் பயிர்கள், குடிநீர்த் தேவை, கைத்தொழில் தேவை, நீரின் கிடைக்குமளவு மற்றும் மழை வீழ்ச்சியைப் பொறுத்து செயற்படுத்தப்படும்.

நகர மற்றும் கிராமப் பிரதேசங்களில் குழாய்நீர் வினியோகத்திற்குப் பதிலாக மழைநீர் சேகரிப்பு முறை பயன்படுத்தப்படலாம். எல்லா வகையான வர்த்தக, விவசாயத்திற்கு வழங்கப்படும் நீர் கணிப்பீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிடப்படும். எவ்வாறாயினும் நெற் செய்கைக்கான நீர் தேசிய பாதீட்டில் மானியமாக கருதப்படும்.

தேவையேற்படின் நீர்த்தேக்க நீர் கணிப்பிடப்பட்டு கிடைக்கப்பெறும் நீர் தரம்பார்க்கப்பட்டு தேவைக்கேற்றவாறு பயன்படுத்தப்படலாம்.

அரச கொள்கைகிணங்க நகரத்திலுள்ள கழிவுநீர் அகற்றும் முறை சீர் செய்யப்பட்டு புதிய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2030க்குப் பின் உரிய சுகாதார வசதிகள் அனைவருக்கும் கிடைக்கப்பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24-CM 27932

# பரிந்துரைகளும் தீர்வுகளும்

# RT

## RT. ஊடறுக்கும் தொனிப்பொருட்கள்

### RT 1 காலநிலை மாற்றம், அனர்த்தம் மற்றும் தரமான வளி

### RT1.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) வறியோர் மற்றும் வலுவற்றவர்கள் பாதுகாப்பிற்காக காலநிலை மாற்றம் தொடர்பில் முன்னுரிமை பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும்

(ஆ) வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு மற்றும் வரட்சி என்பவற்றினை தடுப்பதற்கு காடழித்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

(இ) திடமான கொள்கை முடிவுகள், நீடித்த நில உபயோகம் மற்றும் அனர்த்த முன்னறிவிப்பு ஏற்பாடுகள் அவசியம் தேவையானவை.

(ஈ) சகல பிரஜைகளுக்கும் போதிய கல்வியறிவு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன் விசேடமாக பாடசாலை மட்டத்தில் வழங்கப்படல் வேண்டும்.

(உ) வரட்சியின் நீண்டகாலத் தேவையினை நிவர்த்தி செய்வதற்கு நாட்டின் தென்மேற்கு தொடக்கம் வட கிழக்கு வரையிலான பகுதிகளில் உள்ள மேலதிக நீரை பெற்றுக்கொள்ள நவீன திட்டங்கள் தேவைப்படும்.

### RT1.2. நிலைபேறான நோக்கு

பொருளாதார அபிவிருத்தியுடன் குடிசனத் தொகை மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் 2020ம் ஆண்டளவில் கண்டி, கொழும்பு மற்றும் பிரதான நகரங்களில் புகை வெளியேற்றும் வாகனங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. அத்துடன் காற்று மாசடைதல் பூஜ்ஜியமாகவிருப்பதுடன் மாசடைதல் தொடர்பான சுகாதாரப் பிரச்சினைகள் குறைவடையும்.

ஆரோக்கியமான தொழிலாளர்கள் மற்றும் அதிகரித்த வேலைத்திறன் காரணமாக அரசாங்கத்தின் சுகாதாரம் தொடர்பான செலவீனம் குறைவடையும். ஊள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து பொருளாதார வளர்ச்சி ஏற்படும். கண்டி உட்பட பல நகரங்கள் நல்ல சுற்றுச் சுழல் உள்ளனவாக விளங்கும். கண்டியில் பின்பற்றப்படும் வீட்டுத் தோட்ட முறைமைக் கோட்பாடு மண்ணரிப்பை தடுக்க உதவும். மலைச்சாரல்களில் வீடுகள் அமைப்பது தடைசெய்யப்படுவதன் மூலம் மண்சரிவு போன்ற அனர்த்தங்களைத் தவிர்க்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடுகளின் வளர்ச்சி மண்ணில் நீரை தேக்கி வைத்திருப்பதுடன் மண்ணில் ஊடுருவும். நீர் ஆவியாதல் மூலம் வெளியேறுத் தவிர்க்கப்படும். இதன்மூலம் இயற்கையான குளிரூட்டல் இடம்பெற்று உலர்வனவு தவிர்க்கப்படும். புராதன காலத்து புத்திசாதுரியமான நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவம் மூலம் நீர்வீழ்ச்சி போன்ற அமைப்புக்களின் அறிமுகத்தால் வரட்சி நிலையிலும் தாக்குப்பிடிக்க முடியும். சொட்டு நீர்ப்பாசன முறையின்கீழ் குறுகியகால பயிர்வகைகளைப் பயிரிட்டு விவசாயிகள் அதிகசெலவின்றி சத்தான உணவினையும் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிட்ட விடயங்களை உரிய முறையில் பின்பற்றினால் வறுமைநிலை குறைவடைவதுடன் 2020 ஆண்டளவில் சமாளிக்கக்கூடிய நிலை ஏற்படும்.

உரிய விஞ்ஞானமுறைத் திட்டமிடற்படி மரநடுகை மூலம் வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு போன்ற அனர்த்தங்களைத் தவிர்க்க இயலும். ஆற்றங்கரைகள், நீர்த் தேக்கங்கள், வாய்க்கால்கள் போன்றவற்றின் அருகாமையில் அனுமதியற்ற அமைப்புக்களைத் தவிர்ப்பதன் மூலம் 2020 அளவில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்றவற்றை தவிர்க்க இயலும். இயற்கை வளங்களான மணல், மண், கிரவல், மற்றும் உலோகப் பொருட்கள் அகழ்வு செய்தல் தடைசெய்யப்பட்டு அவை பேணப்பட்டால் அதிகளவான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தவிர்க்கப்படலாம். இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் 2020 அளவில் அனர்த்தங்கள் இடம்பெறாமல் இருப்பதுடன் இளைய வயமுதல் கல்வி, விழிப்புணர்வு மூலம் வருங்காலச் சந்ததியினருக்கு சிறந் வாழ்கை முறையினை வழங்கமுடியும்.

## RT2 நீதிநெறி, பெறுமதிகள் மற்றும் பிரஜாஉரிமை

### RT2.1 முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) பயனுறுதியான பொதுசனத் தொடர்பு, தந்திரோபாய நடவடிக்கைகள் மூலம் ஒன்றுபட்ட நாட்டுக்குள் யாவரும் ஒழுக்கம், நீதிநெறி என்பவற்றழன பின்பற்றி அர்த்முள்ள பிரஜைகளாக வாழ்வதற்குரிய அறிவுரைகளை வழங்குதல். ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் போன்ற மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் சமயசம்பந்தமான நிகழ்ச்சிகள் அவற்றில் அடங்கும். எல்லாச் சமயங்களும் பொது நோக்குடனும், மனித உரிமைகளை மதிப்பதிலும் மக்களை அறிவுறுத்தல் வேண்டும். இதன்மூலம் பரஸ்பர நம்பிக்கை, சகிப்புத்தன்மை, பொறுமை, முரண்பாடுகளை அமைதியாக தீர்த்தல், வன்முறையற்ற சமூகம் என்பவற்றினை உருவாக்கலாம். இதன்மூலம் சமய அல்லது இன அடையாளங்களை அரசியல் மயப்படுத்தல், சமயத்தின் பேரில் எதிர்மறையான செயற்பாடுகள் போன்றவற்றை தடுக்கமுடியும்.

(ஆ) ஸ்ரீ லங்காவின் பிரஜாஉரிமையினை நிலைநாட்ட கல்வியறிவினை பயன்படுத்தலாம். பூகோள பிராஜாஉரிமை தொடர்பான முறைசார், முறைசாராக் கல்வியறிவுமூலம் நட்புத்தன்மை, உரையாடல் மற்றும் கூட்டுறவினை வளர்க்கமுடியும்.

(இ) கற்பதற்கான சூழல் வாய்ப்புக்களை சமூகத்தில் ஏற்படுத்துவதன்மூலம் சமூகங்களுக்கிடையிலான பிணைப்பினை அதிகரிக்கமுடியும் (நிகழ்ச்சி பரிமாற்றம், சமூக அடிப்படையிரான செயற்பாடுகள் மற்றும் பிறமொழிக்கற்கை மூலம்). குறிப்பிடப்பட்ட விடயங்களினால் தேசிய, மாகாண, உள்ளூர் வட்டங்களில் யாவரும் ஒன்றுபட்ட பங்களிப்பினை பெற்றுக்கொள்முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) அரச தலையீடுகள்மூலம் பல்லின மற்றும் பலசமய புரிந்துணர்வினை உறுதிப்படுத்தல். சமூக மற்றும் சரித்திரக் கல்விமுறைமூலம் இளைஞர்களின் சுதந்திரமான பொறுப்புணர்வுள்ள உளப்பாங்கினை ஏற்படுத்துவதுடன் ஏனைய சமூகங்களின் பாரம்பரியங்களை புரிந்துகொள்வதுடன் ஒவ்வொருவரின் மொழினை கற்றலும், ஒவ்வொருவரின் கொண்டாட்டங்களை அறிந்துகொள்லும், காலசார, சங்கீத, இலக்கிய, சமையற்கலை தொடர்பான அறிவினை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுதலாகும். கூடுதலான இளைஞர் சமுதாயம் பங்கேற்கும் சமய நிகழ்வுகளில் ஏனைய சமய சமூகங்கள் தொடர்பான நேர்சிந்தனைகளை புகட்டல் வேண்டும் அதன்மூலம் சமயங்களுக்கிடையிலான புரிந்துணர்வினை மாணவர்கள் ஏற்றுக்கொள்ள ஏதுவாகும்.

(உ) அரச தலையீடுகள்மூலம் சமஉரிமையினை அங்கீகரித்து அரச யாப்பின் விதிமுறைகளுக்கிணங்க மனிதஉரிமை மற்றும் கலாசாரங்களை அனுசரித்தல். குடியியற்கல்விமூலம் மற்றும் சர்வதேச மனிதஉரிமை தொடபான கல்வி புகட்டல். இம்முறையானது எழுத்தளவில் அல்லது நடைமுறையில் பின்பற்றக்கூடிய, மற்றும் மாணவர்கள் விடயங்களைச் சரிவரப் புரிந்து மனிதஉரிமைகள் தொடர்பில் அறிந்து நாட்டில் சமாதான கூடியியங்குகின்ற வரவேற்றக்கூடிய மாற்றங்களை ஏற்படுத்த உதவும்.

## RT2.2. நிலைபேறான நோக்கச் செயற்பாடுகள்

மக்கள் மனங்களில் பொதுவான நற்குணம், பண்பு மற்றும் குடியுரிமைப் பெறுமானம் என்பன சமயக்கருவி மூலம் அறிவூட்டப்படல் வேண்டும். நற்குணம், நற்செய்கைகள்மூலம் எல்லா சமயத்தவரும் சமய அறிவூட்டலை மக்களிடம் பரப்பமுடியும்.

சுறுசுறுப்பான, தெளிவான கருத்துள்ள பிரஜைகள் ஒற்றுமை, பரஸ்பர நன்மதிப்பினை பேணுவதில் அக்கறையாகச் செயற்படுவார்கள்.

புதிய தொழில்நுட்பத் தொடர்பாடல் மூலம் சமூகத்தின் எதிர்மறைச் சிந்தனைகளை அறிந்து இளைஞர் வட்டம் சமயத் தலைவர்கள் மூலம் நற்செயல்களை செயற்படுத்தல். அதிகார துஸ்பிரயோகம், சட்டவரம்பு மீறுகை, இலஞ்சம் தொடர்பாக விமர்சித்து அபிப்பிராயம் வெளியிடுதல் தகவல் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் ஊக்கமளிக்கப்படல் வேண்டும்.

கல்வியானது இலங்கையில் பிரஜாஉரிமைக்கு வலுச்சேர்க்கும். முறைசார், முறைசாராக் கல்வியூடாக சர்வதேச பிரஜாஉரிமை தொடர்பான நிகழச்சிகள் செயற்பாடு, ஒற்றுமை, உரையாடல், கூட்டுறவு தொடர்பான விளக்கம் பிரஜைகளுக்கு நன்மை பயக்கும். சமூக அடிப்படையிலான நகர்வுகள் யதார்த்த வாழ்க்கையின் ஒற்றுமையினை வலுப்படுத்தும்.

## RT3. பால்நிலை

## RT3.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) அரச, தனியார் மற்றும் பொதுதனியார் கூட்டுச் செயற்பாடுகளின் மூலம் வீடுகளில் கருமங்களில் ஈடுபடுவோரின் பணியினை அங்கீகரித்தலும் மதித்தலும். அதேசமத்தில் வீடுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் பொறுப்புணர்வுடன் பணிகளைப் பகிர்ந்துகொள்வது தொடர்பாக கல்வித்திட்டத்தில் பிரதானமாக புகுத்தப்படல்வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஆண்கள் பெண்களுக்கான பணிச் சமநிலையை பேணுதல்.

(இ) பெண்கள் இரண்டாம்நிலை மற்றும் உயர்கல்வி கற்கக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் அவர்களை தொழில்நுட்ப, புதிய கருத்துக்கள், தலைமைத்துவம் தொடர்பில் பயிற்சிபெற்று உயர்ந்த சம்பளம் பெறும்வகையில் திட்டங்களை உருவாக்குதல். ஆப்படியான அபிவிருத்திமூலம் தற்போதுள்ள பால்நிலை வேதன வித்தியாசனத்தின குறைத்துக்கொள்முடியும்.

(ஈ) முதியோர்களுக்கான இளைப்பாற்று நன்மைகள், தொழிலாளர் நலன் தொடர்பிலும் உரிய பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை உருவாக்குதல்.

(உ) கிராம மற்றும் நகர இணைப்பு போக்குவரத்து வசதிகளுடன் பெண்கள் பாலியல் தொல்லைகளின்றி பயணிக்கக்கூடிய பேரூந்து மற்றும் புகையிரத சேவைகளை அறிமுகப்படுத்தல்.

(ஊ) VAW/SGBV என்பவற்றுக்கெதிராக உரிய சட்டத்திருத்தங்களை அறிமுகப்படுத்தல்.

(எ) தொல்லைகள் கொடுப்பது தொடர்பில் புகாரிடலை ஊக்குவிக்கும் கொள்கையினை அறிமுகப்படுத்தல். வேலைத்தலங்களில் அப்படியான செயற்பாடுகளை நிறுத்தும் முகமாக உரிய பயிற்சித்திறனுடையோர் மற்றும் சுகாதாரத் துறையினர் மூலம் மனிதவளம் தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்

## RT3.2. நிலைபேறான நோக்கு

2022 அளவில் 60+ வயதுடையோர் 17 சதவீதத்தால் அதிகரிப்பதுடன் பெண்களின் வாழ்வுக்காலம் 82.5 வருடங்களாகவும் ஆண்களுக்கு 72.3 வருடங்களாகவும் 2026 காலப்பகுதிக்குள் எதிர்பார்க்கப்படுகிறது. 35+ வயதுடைய பெண்களின் கர்ப்பமுறும் வீதமும் 2022 வரையான காலப்பகுதிக்கு கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான மக்கட்தொகை அதிகரிப்பு நிதிவளத்திலும், சுகாதாரம், மற்றும் நீண்டகால கவனிப்புச் செலவு காரணமாக தாக்கஞ் செலுத்துவதுடன் வயதான பெண்கள் நீண்ட நேரம் குறைந்த ஊதியத்தில் கூடிய நேரம் வேலைசெய்யவேண்டிய நிர்ப்பந்தத்தினையும் ஏற்படுத்தலாம். அதேநேரத்தில் வயதான தாய்மார் சந்ததி உறவு தொடர்பில் அதாவது பிள்கைள் பொற்றோருக்கு உதவுவதற்கு மாறாக பிள்ளைகள் தொடர்ந்தும் பெற்றோரில் தங்கியிருக்கும் நிலை ஏற்படலாம்.

முதியோர்கள் சனத்தொகை உயர்வு இளம்பெண்கள் தொழில் செய்வதில் தாக்கத்தினை ஏற்படுத்தும். இளம்பெண்கள், வயதானோர் மற்றும் பிள்ளைகளைப் பராமரிக்கவேண்டிய தேவைக்கு தள்ளப்படுவதுடன் தொழில்மூலம் சம்பாதிக்கமுடியாத நிலை ஏற்படலாம். குறிப்பாக கிராமப்பகுதிகளில் 85 சதவீத வறியவர்களும் அதிகமான எண்ணிக்கையில் முதியோர்களும் வாழ்கின்றர். இப்படியான நிலைமை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகரிதுள்ளதற்கான காரணம் பல பெண்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட வாழ்வாதார வசதிகளுடன் தனிநபர் வீட்டுரிமையாளராக உள்ளனர். அந்த மாகாணங்களில் நகர மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நடைபெற்ற போதிலும் பெண்களுக்கான வீட்டுப் பணிச்சுமை காரணமாக அவர்களுக்கு கிடைக்கக்கூடிய வசதிகளைத் தவறவிடுகின்றனர்.

இளைப்பாற்று நலன்கள் தொடர்பாக இணைந்த திட்டம், 60+ வயதான பெண்களுக்கான மேம்பட்ட தொழில்வாய்ப்பு, வேதனமின்றியாற்றும் வீட்டுப்பணி, கவனிப்பு, ஆண்கள் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25-CM 27932

பெண்களுக்கான இணைந்த பொறுப்புக்கள் தொடர்பான இணைந்த அறிவு ஆகியன கல்வித்திட்டத்தில புகுத்தப்படுவதுடன் பெண்கள் தொடர்பான வேலைத்தலப் பண்புகள் பற்றியும் அவர்களின் சம்பளமற்ற வேலைப்பளு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இளம் பெண்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் தலைமைத்துவம் தொடர்பான பயிற்சி வழங்கப்படுதல் அவர்கள் முறைசார் பொருளாதார நன்மைகளைப் பெறவும் பால்நிலை தொடர்பான வேதன இடைவெளியை ஒழிக்க, பொதுப் போக்குவரத்து மற்றும் வேலைத்தலங்களில் பாதுகாப்பாக செயற்படவும் வீட்டு வன்முறையினை தவிர்க்கவும் மேலும் பெண்கள் வெலைசெய்து சம்பாதிப்பதை ஊக்கப்படுத்தி அதன்மூலம் வாழ்க்கையினை வளமடையச்செய் இயலுமாகின்றது. ஓத்திசைவுடன்கூடிய பண்பான சமூகத்தின் நிலைபேறான வாழ்விற்கான பொருளாதார உற்பத்தி பெண்களுக்கான சமஉரிமை, உரியசம்பளம், கௌரவமான தொழில் மற்றும் பாரிய பால்நிலை தொடர்பான இடற்பாடுகளின்றி வாழக்கூடிய சமூகத்தினை கட்டியெழுப்புவது அவசியம்.

## RT4 ஆட்சி

## RT4. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) மத்திய, மாகாண, உள்ளூர் பொது நிறுவனங்கள் தொடர்பில் மீழ்வரையறை, சீர்செய்தல்,பொறுப்புக்கூறல், சுதந்திமாகவும் தலையீடுகளின்றியும் செயற்படுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட நல்லாட்சி அரசினை உருவாக்குதல்.

(ஆ) உயர்ந்த பண்பு, ஒற்றுமை, கலாசாரப் பெருமை பேணப்படுவதுடன் சீரான பொதுமக்கள் தொடர்பான நிறைவேற்றுகைகள் ஏற்படுத்தப்படுவதுடன் பொது ஊழியர்கள் சுதந்திரமாக இயங்குவதுடன் சமூகத்தின் நம்பிக்கையினை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

(இ) தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் வெளிப்டையான செயற்பாடுகளுடன் அதனது கொள்கை, தந்திரரோபாய நடவடிக்கைகளை செயற்படுத்துவதுடன் பொதுநீர்வாக செயற்பாடுகளில் எவ்வித அழுத்தங்களுமின்றி செயற்படும் முறையினை உறுதிப்படுத்தல் வேணுடும்.

(ஈ) பொது சேயையினை உயர்ந்த வினைத்திறன், ஆற்றலுடன் செயற்படுத்தி செயற்பாடுகளைக் கண்காணித்து, தரம்கணித்து தனியார் அல்லது நிறுவனம் தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

(எ) தலைமத்துவமானது மக்கள் சரியான விடயத்தினை சரியான முறையில் விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புடன் ஆற்றுவதற்கேற்ற கலாசாரத்தினை ஏற்படுத்தல். ஒற்றுமை, நம்பிக்கை, மதிப்பு, நேர்மை, விரைவு ஆகிய தன்மைகளுடன் வெளிப்படையாக எல்லாத்தர அரச உத்தியோகத்தர்களுடனும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

## RT4.2 நிலைபேறான செயற்பாடு

நல்லாட்சி தொடர்பில் அடிப்படைச் செயல்முறை பிரச்சினைகளை தீர்க்கக்கூடியதாகவும் பயனுறுதியான அமுலாக்கத்தினை உறுதிசெய்யக்கூடியதாகவும் அமைதல் வேண்டும். திட்டமிடல் மற்றும் அமுலாக்கத்தினை பன்முகப்படுத்துவதன் மூலம் மக்கள் தேசிய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண, உள்ளூர்மட்ட செயற்பாடுகளில் பங்குபற்றுவதுடன் உள்ளூர் சபைகளின் அதிகாரப்பகிர்வு தற்போது மத்தியினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

நன்கு வரையறுக்கப்பட்ட முகாமைத்துவ பொறுப்புக்கள், ஆக்கபூர்வமான தந்திரோபாய திட்டங்கள், நிகழ்ச்சிகள், செயற்திட்டங்கள் மற்றும் சுதந்திரமான செயற்பாடுளாகியன அரச பகிரங்க சேவையின் முக்கிய விடயங்களாகும். பொதுத்துறையானது உச்சஅளவு பயனுறுதி, வினைத்திறன், செயற்பாடுகளைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதுடன் தனியார் நிறுவனம் தொடர்பில் அடைவுமட்டம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பித்தல்.

மக்கள் இயல்பாவே சரியான விடயத்தினை சரியான விதத்தில் விசுவாசம் மற்றும் அர்ப்பணிப்புடன் ஆற்றுதற்கேற்ற கலாசாரத்தினை ஏற்படுத்தல். அரசமைப்பு மறுசீரமைபு நடைமுறையானது சமாதானம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தியினை உறுதிப்படுத்த உதவும்.

## RT5. புத்தாக்கம், தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில்

### RT5.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) பொருட்கள் மற்றும் செய்முறை புத்தாக்கம் தொடர்பில் தனியார் நிலையங்கள் மற்றும் இலாபங்கருதா உரிமங்கள், புத்தாக்கம் தொடர்பில் இயங்கவைத்தல்.

(ஆ) ஸ்ரீ லங்காவில் இனங்காணப்பட்ட வளம் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தி செயற்படுத்துவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கையாளுதல்.

(இ) வெற்றிகரமான புத்தாக்க செயற்பாட்டாளர்களுக்கு வெகுமதியளிப்பதன் மூலம் மேலும் ஊக்கப்படுத்த இயலும்.

(ஈ) புத்தாக்கத்துக்கான உகந்த மனநிலைளை தோற்றுவிப்பதற்கு கல்வி மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் ஊடாக செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

### RT5.2 நிறைபேறான செயற்பாடு

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்குள் ஆரம்பிக்கப்படவுள்ள செற்பாடுகள் உரிய பயனைத் தருவதற்கு சிறிது காலமெடுக்கும். இக்காலத்தில் பெறப்படும் எய்தல்கள் பூகோள புத்தாக்கரீதியில் முக்கிய முன்னேற்றத்திற்கு வழிசமைப்பதாக அமையும்.

2025 வரையில் வெற்றிகரமான அமுலாக்க செயற்பாடுகள் குறைந்த மத்திய வருமான தென்கிழக்காசிய வருமான நாடுகளின் பட்டியலில் முதன்மை வகிப்பதற்கு ஏதுவாகும். குறைந்த மத்திய வருமான நாடுகளில் இடம்பிடிக்கவும் தென்கிழக்கு ஆசியாவில் இலக்கினை அடையும் 10 நாடுகளில் ஒன்றாக இடம்பெறவும் இயலும். அத்துடன் ஏற்றுமதி மற்றும் ஏற்றுமதி அளவு தொடர்பான விடயங்கள் உரிய பத்திரங்கள் மூலம் அளவீடு செய்யப்படலாம். 2025க்குப் பின் இலக்குகள் உயர் மத்திய வருமான நாட்டுக்கு பொருத்தமான வகையில் மீளமைக்கப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## RT6. சர்வதேச உறவுகள்

### RT6.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) ஸ்ரீ லங்கா பல்வேறு பிராந்தியங்களை அணைக்கும் வாணிபச் சந்தையாகவும் கப்பற் போக்வரத்து தொடர்பிலும் பூகோள தந்திரோபாய திறனை உயர்த்திக் கொள்ளல் வெண்டும்.

(ஆ) பொருளாதாத்தினை வலுப்படுத்த அபிவிருத்தியினை மேம்படுத்த புத்திகூர்மையான செயற்பாடுகளுடன் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள், வர்த்தகர்களைக் கவரும் செயற்பாடுகள் சர்வதேசத்தின் நேர்ச்சிந்தனை அணுகல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

(இ) ஸ்ரீ லங்காவின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் இந்துசமுத்திர அடிப்படையிலான கூட்டுச் செயற்பாட்டினை மேம்படுத்தல் IORA தொடர்பில் கடற்பாதுகாப்பு, கடல்சார்ந்த வளங்களின் பாதுகாப்பு, சுதந்திரமான கப்பற் போக்குவரத்து, கடல்வளப் பொருளாதாரத்தினை ஈட்டுதல் ஆகியன முக்கியமாகும்.

(ஈ) வெளிநாடுகளில் வதியும் எமது நாட்டினரின் நலன்புரி செயற்பாடுகளின் மேம்பாடு தொடர்பில் திறந்த செயற்பாடுகளை வெளிப்படுத்துவதுடன், மனிதக் கடத்தல் மற்றும் ஆவண மோசடிகள் தொடர்பில் விழிப்புடன் செயற்படும் வெளிநாட்டு தூதுவர் வேையினை உறுதிப்படுத்தல்.

(உ) மீனவர் பிரச்சினை தொடர்பில் சில புலம்பெயந்தோரின் தவறான பிரசாரங்களை தவிர்க்கும் பொருட்டு உரிய ஆலோசனைகளுடன் புத்திசாதுரியமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

### RT6.2. நிலைபேறான நோக்கு

**2020க்கு அப்பாலான எமது செயற்பாடு**

- சர்வதேச நிறுவனங்களான UNCTAD, UNDP, FAO, WFP, UNDO மற்றும் நிதி தொடர்பான நிறுவனங்களுடன் மற்றும் நிதியுதவி செய்யும் மேற்கத்திய நாடுகளுடன் எமது பலமான நீடித்த உறவுச் செயற்பாடுகள் மூலம் அபிவிருத்திக்கு தேவையான பண மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.

- எமது நாட்டினை முன்மாதியாக செயற்படும் விதத்தில் சமாதான பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தி அதன்மூலம் ஏனைய நாடுகளின் கவனத்தினை ஈர்த்து நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள், நிகழ்ச்சிகளை முன்னேற்றுதல். அதன்பயனாக வர்த்தக அபிவிருத்தி தொடர்பான சூழலை ஏற்படுத்தலாம்.

- எமது நாட்டின் கைத்தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் உதவியளிக்கும் நாடுகளுடன் இணக்கப்போக்கினை கடைப்பிடித்து அதன்மூலம் நாட்டின் பொருளாரத்தினை கிழக்கத்திய, மேற்கத்திய நாடுகளின் அனுசரணையுடன் அபிவிருத்தி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐரோப்பிய யூனியனுடன் தொடர்பாடல்களை உரிய முறையில் மேற்கொண்டு அதன்மூலம் தொடர்ச்சியான அனுகூலங்களைப் பெறுதல்

## RT7. வறுமை, ஏற்றத்தாழ்வு

### RT7.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) நுண்பொருளாதார வளர்ச்சிக்கான செயற்பாடுகளில் உள்ளூர்மட்ட பங்குபற்றுதலை

உறுதிப்படுத்தல்.

(ஆ) தனியார் மற்றும் நிறுவன உற்பத்திகள் தொடர்பில் பிரதேச்திலிருந்து மாகாண தேசிய மட்டங்களில் பொருட்கள் சேவைகள் தொடர்பில் வறுமைநிலையில் உள்ளவர்களுக்கும் பயன் கிடைக்கக்கூடிய வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

(இ) தேசிய சேவைக்கு பொது, தனியார் மற்றும் மக்கள் தொடர்பான நிறுவனங்கள் பங்களிப்பு செய்வதன்மூலம் வறுமை நிலையினருக்கு உதவ முடியும். நாட்டினை 2030 அளவில் வறுமையற்ற நாடாக மாற்றுவதுடன் 2030க்கு "ஒருவரின் நன்மைக்கு மற்றும் எல்லேரினதும் நன்மைக்காக" என்ற தொனிப்பொருளை அடையமுடியும்.

(ஈ) வறுமையான சமூகங்களுக்கு உதவும் முகமாக நாடளாவிய ரீதியில் பிரசைகள் பங்களிக்கும் இயக்க செயற்பாடுகளை முன்னிறுத்தி அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

(உ) நல்லாட்சி, பண்பாடு தொடர்பில் சமூக நிறுவனங்களை உற்சாகப்படுத்தி அவை ஒள்ளையொன்று நோக்கிச் செயற்படுவதன்மூலம் மறுமை மற்றும் ஏற்றத்தாழ்வு போன்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்யமுடியும்.

### RT7.2. நிலைபேறான நோக்கு

அடிமட்ட நியைிலுள்ள 40 சதவீத மக்கள் தொகையினருக்கு 5000 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் நிலைபேறான தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களை ஊக்குவித்து செயற்படல். காலப்போக்கில் இத்தொகை 10,000 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் 2030 அளவில் சகல பிரிவுகளுக்கும்.

நாடுபூராவுமான குடியியற்கல்வி இயக்கம் இனங்காணப்பட்ட பயிற்சி நிலையங்கள் ஊடாக வழங்கப்படுவதுடன் 202ம் ஆண்டில் ஆரம்பித்து 2025 அளவில் பின்பு 2030 அளவில் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்படும்.

பிரதேச செயலாளர் அலுவலகங்கள் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் முக்கிய பங்காற்றுவதுடன் சமுர்த்தி பாதுகாப்பு, நிலைபேறான முகாமைத்துவம் வறுமையொழிப்பில் பிரதான பங்காற்றலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றையொன்று நோக்கிச் செல்லும் அரச மற்றும் தனியார் அபிவிருத்தி தலையீடுகள் அடிப்படை மற்றும் சேவைகள் தொடர்பிலும் சொந்த முதலீடுகள், வழங்கல்கள் மூலம், தொழில்நுட்ப உபயோகம், இறக்குமதிக் குறைவு அதிகரித்த ஏற்றுமதிமூலம் நன்மையடையலாம்.

## RT8. மீளிணக்கம், பாதுகாப்பு மற்றும் சமாதானம்

### RT8.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

**மீளிணக்கம்**

(அ) மீளிணக்கப்பாடு தொடர்பில் காணாமற்போனோருக்கான ஆலவலகம் ஏற்படுத்தல். நஷ்டஈட்டுக்கொடுப்பனவு, உண்மை மற்றும் மீளிணக்கப்பாட்டு ஆணைக்குழு மற்றும் நம்பிக்கைான சட்டப்பொறிமுறைமூலம் மிகவும் பாரதூரமான சட்டமீறல் தொடர்பில் விசாரணை போன்று நடவடிக்கைகள்,

(ஆ) அரசியலமைப்பு மீளாய்வு தொடர்பில் எல்லாச் சமூகத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் சீர்திருத்தங்களை ஏற்படுத்தல்.

(இ) முன்மொழியப்பட்ட மீளிணக்க முயற்சிகள் தொடர்பில் தேசிய ரீதியில் பூரணமான தொடர்பாடல் தந்திரோபாயத்தினை அதிமேதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி, சகல அமைச்சர்கள் ஆகியோரின் வழிகாட்டலுடன் முன்னெடுத்தல், எதிர்பார்க்கப்படும் பிரதேசங்களில் ஏற்ற நிகழ்வுகளை நடாத்தி குழப்ப நிலையினைக் குறைப்பதுடன் மீளிணக்கப்பாட்டினையும் கட்டியெழுப்பமுடியும்,

(ஈ) வடக்கு கிழக்கில் இராணுவத்தின் வசமுள்ள தனியார் காணிகளை மீள ஒபபடைத்தல். ஏதாவது காரணத்தினால் சில காணிகள் தேசிய பாதுகாப்பிற்கு தேவைப்படின் நீதியான கொடுப்பனவுடன் காணி சுவிகரித்தலுக்கான தெளிவான விளக்கமளிக்கப்படல் வேண்டும். இராணுவத்தால் மீளஒப்படைக்கும் காணிகள் தொடர்பில் தெளிவான கொள்கை தொடர்பாடல் தந்திரோபாயத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

(உ) சகல அரச சேவைகளிலும் பால்நிலைச் சமநிலை பேணல் தொடர்பில் உடன் முயற்சிகள் மேற்கொள்வதுடன் குறிப்பாக உயர் மட்டங்களில் நடவடிக்கை அவசியம்.

**பாதுகாப்பு**

(அ) நாட்டினைப் பாதுகாப்பதில் பலதரப்பட்ட பாதுகாப்பு செவையினர் உள்ளமையினால் தேசிய பாதுகாப்பு கொள்கையின அமுல்படுத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டின் கடற்பகுதியினை பயனுறுதியான முறையில் கண்காணிப்பதற்கு பூரண நடவடிக்கை தேவை. துற்போதய கடற்பாதுகாப்பு, புலனாய்வினர் மற்றும் ஆகாய இயக்கப் பாதுகாப்புத் துறையினரின் ஆற்றல் மதிப்பிடப்படுவதுடன் பலப்படுத்தப்படவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கடல்கடந்த திட்டமிடப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்கு கடுமையான குடிவரவுக் கொள்கையுடன்கூடிய பலமான கரையோர பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும். இக்கொள்கைள் பூரண பயிற்சிபெற்ற கரையோர பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் படையினரின் செயற்பாட்டுடன் மேற்கொள்ளப்படலாம்.

(ஈ) நாட்டின் சட்டத்தில் வெளிநாட்டு திட்டங்களைப் பொறுத்தவரையில், பாதுகாப்பு விடயம் தொடர்பில் மீளாய்வு அவசியம். முன்மொழியப்படும் மீளாய்வு தேசிய பாதுகாப்பில் வெளிநாட்டு திட்டங்களின் தாக்கம் மற்றும் தேசிய பொருளாதாரம் தொடர்பான சுதேச செயற்பாட்டு வினைத்திறன் அடிப்படை சமூக சட்டம் வாழ்க்கைத்தரம் தொடர்பானவையாக இருத்தல் நன்று.

(உ) தேசிய கணனி தொடர்பான பாதுகாப்புத் தந்திரோபாயம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுத்தப்படல் வேண்டும்.

## RT8.2. நிலைபேறான நோக்கு

**மீளிணக்கம்**

அமைச்சரவையினால் 2017 மேமாதம் இயற்றப்பட்ட தேசிய மீளிணக்கக் கொள்கை அனைத்து மீளிணக்க செயற்பாடுகளையும் வழிநடத்தும். 2020 அளவில் மீளிணக்கப் பொறிமுறை தொடர்பான செயலகம் கடல்கடந்த நீதி தொடர்பாகவும் செயற்படலாம். காணாமற்போனவர்களுக்கான அலுவலகம், உண்மை மற்றும் மீளிணக்க ஆணைக்குழு ஆகிய பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்கும். உள்ளூர் நிதித்துறை கடந்தகால குற்றங்கள், வன்செயல்கள் தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கும். அரச மற்றும் தனியார் துறையின் வேலைவாய்ப்புக்கள் மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை பிரச்சினை தீர்க்கப்படலாம். தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் சமூக ஒற்றுமையினை ஏற்படுத்துவதுடன் கடல்கடந்த நீதி மற்றும் மீளிணக்கச் செயற்பாடு சீர்செய்யப்பட்டு வன்செயல் தீவிரவாதம் போன்றவற்றை குறைப்பதற்கும் வழிசமைக்கும்.

எமது அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியில் அபிவிருத்திக் கொள்கைகள் செயற்திட்டங்கள் தேசிய மீளிணக்கக் கொள்கை, பெண்களுக்கெதிரான வன்முறை, பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பங்களுக்கான சலுகை, பெண்களின் புதிய தொழில்களை தொடங்குவதற்கான அபிவிருத்தி தொடர்பில் உரிய திட்டங்களை வகுத்து செயலாற்றுகின்றது. இதன்மூலம் 2020 அளவில் சாதகமான விளைவுகள் ஏற்பட முடியும்.

அரசியலமைப்புத் திருத்தமானது மாகாணங்களில் பாரிய முதலீடுகள் மற்றும் விரைவு படுத்தப்பட்ட அபிவிருத்தியுடன் எல்லாச் சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு ஜனநாயக நாட்டில் சரிநிகர் சமனாக நீண்டகால பதட்டநிலையினைப் போக்கி ஒரு பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையுடைய நாடாக விளங்க வழிசமைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020 அளவில் இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதுடன் இராணுவம் வியாபார நடவடிக்கைகளையும் நிறுத்திவிடும். கையகப்படுத்தப்பட்ட காணிகள் மீளக் கையளிக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதன் மூலம் சமூக மீளிணக்கம் ஏற்படுவதுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேலதிக பொருளாதார வசதிகள் ஏற்றடுத்தப்படுவதற்கு திட்டமிடல் அவசியமாகும்.

தேசிய வாழ்வில் தமிழ் மொழிக்கு சமஅந்தஸ்து வழங்குவதற்குரிய முக்கிய படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2020 அளவில் இப்படிமுறைகள் பூரணமாக நடைமுறையில் அமுல்படுத்துவதற்கு நீதி, பொலிஸ் சேவைகளும் தமிழ் பேசும் சமூகத்தினருக்கு உறுதுணையாக விளங்கும். அரசியலமைப்பு மறுசீரமைப்பு மூலம் தமிழ் மொழி உரிமைகள் கூடுதலாக உள்வாங்கப்பட்டு தேசிய இலக்கிற்கு வழிசமைப்பதாக அமையும்.

எமது நாடு 2025 அளவில் தேசிய மீளிணக்க முயற்சி, பயனுறுதியான இளைஞர் தொழில்வாய்ப்பு நிகழ்ச்சிகள், கல்விக்கான முதலீடுகள், பால் சமநிலை மற்றும் புத்திசாலித்தனமான பொருளாதாரக் கொள்கை, நல்லாட்சிக்கான உயர்ந்த மதிப்பு, சட்டத்திற்கான விதிமுறை, பல்கலாசார ஸ்ரீ லங்கா, தெளிவான தேசிய நோக்கு என்பன மூலம் "சிங்கப்பூர்" போன்ற ஸ்திரமான புத்தூக்க வளர்ச்சிகொண்ட நாடாக மிளிர்ச்சிபெறும். இதன்மூலம் வெளிநாட்டு மற்றும் தேசிய முதலீடுகள் வளர்ச்சியடைவதுடன், நிலையான GDP வளர்ச்சி, சமூகங்கள் பிராந்தியங்களுக்கிடையிலான ஒற்றுமை, சமூக அமைதி மற்றும் சபீட்சம் ஆகியன 2030 லும் அதன் பின்னரும் ஏற்படும். மீளிணக்கம் தொடர்பில் கடின முயற்சி மேற்கொள்ளப்படின் அமைதி மற்றும் சுபீட்சத்திற்கான எதிர்காலம் 2030க்கு அப்பால் நிச்சயம் உருவாகும். இத்தகைய முயற்சிகள் இல்லாதுபோனால் யாம் நலிவுற்ற, முரண்பட்ட, வளர்ச்சி குன்றிய, வசதியற்ற ஏழ்மையான பிளவுபட்ட அரசாட்சியையே பெறவேண்டும்.

**பாதுகாப்பு**

எதிர்காலத்தில் பாதுகாப்பு பிரதேசம் மற்றும் நாட்டினை மையப்படுத்திய விடயங்களாக இருக்கும். சர்வதேச அரங்கில் நாட்டின் நிலையினை முன்கூட்டியே கூறமுடியாதபோதும், யாம் எமது பாதுகாப்பு முறையினை எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். எனவே சக்திவாய்ந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதன்மூலம் எமது நாடு எதிர்கொள்ளக்கூடிய சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

**2020**

நாட்டில் தற்போதுள்ள சவால் 2020ல் எமது நாட்டினால் எதிர்நோக்கக்கூடிய அச்சுறுத்தல் பாரம்பரியமற்ற தன்மை கொண்டதாக இருக்கும். அப்படியான அச்சுறுத்தலை தாக்குப்பிடிக்கக்கூடிய நிறுவன அமைப்பு வடிவமைக்கப்படல் வேண்டும். ஸ்ரீ லங்கா மக்கள் உடல்ரீதியான அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கப்படுவதுபோல் பொருளாதாரம, சமூக, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அச்சுறுத்தகளிலிருந்தும் பாதுகாக்கப்படல் வேண்டும். அந்தவகையில் தேசிய பாதுகாப்பு நாட்டின் எதிர்காலம் தொடர்பான தந்திரோபாய நடவடிக்கைகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இதன்மூலம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால அச்சுறுத்தல்களை இனங்கண்டு அவற்றிற்கு சவால் கொடுக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2020 அளவில் ஸ்ரீ லங்காவின் பொதுவான தேசிய அடையாளம் எய்தப்படுவதுடன் இளைஞர் தொடர்பான தீவிரவாதப் போக்கினை தடுக்க இயலும். தீவிரவாதப் போக்கு பூகோள ரீதியான அச்சுறுத்தலாக உள்ளதுடன் உள்நாட்டில் அதன் தாக்கங்களை குறைப்பதற்கு அந்நிய நாட்டினர்பால் காட்டப்படும் வெறுப்பு தடைசெய்யப்படவேண்டும். இந்தவகையில் சகல இனங்களினதும் காலாசாரம், சமயம், தொடர்பில் நாட்டின் கல்வி மட்டத்தில் போதிக்கப்படல் வேண்டும்.

**2025 – 2030**

இக்காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா முழுமையான விதத்தில் பாதுகாப்பினை அடையவேண்டும். எதிர்காலத்தில் பின்வரும் திறன் தொடர்பான அச்சுறுத்தல்களை எமது நாடு சாதுரியத்துடன் கையாளவேண்டும். பொருளாதாரம், கணனி, உயிரியல் தொடர்பான பிரச்சினைகள், விவசாயம், தீவிரவாதம், இனஅடையாளம், மற்றும் பூகோள அரசியல் தந்திரோபாயம் தொடர்பான விடயங்களை புத்திசாலித்தனமாக கையாள வேண்டும். 2025 அளவில் பூரணமான பாதுகாப்பு தொடர்பான கொள்கை புத்திஜீவிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொருத்தமான பங்களிகளின் ஆலோசனையுடன் வரையப்படல் வேண்டும்.

2030 அளவில், ஸ்ரீ லங்கா இந்து சமுத்திர அமைவிட அந்தஸ்தில் நிதி, கடல்சார் மற்றும் சேவைகள் தொடர்பில் பூகோள அரசியல் ரீதியாக நிரந்தரமற்ற நிலையினை அடையலாம். அப்படியான சந்தர்ப்பத்தில் ஸ்ரீ லங்கா தனது நிலையினை சீனா மற்றும் இந்தியா இடையில் தந்திரோபாய ரீதியில் செயற்பட வேண்டும். உலக பொருளாதார ஒன்றியம்[46], 2030 அளவில் உலகம் பல அழுத்தங்களுடன் செயற்படக்கூடுமாகையால் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

மேலும் இந்து சமுத்திரத்தில் சீனாவின் ஆதிக்கம் வர்த்தக விடயங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். அதனூடாக சீனா பாகிஸ்தானிடையில் அதிகரித்த வர்த்தகம் இடம்பெறலாம். ஸ்ரீ லங்காவும் தனது வர்த்தகம் தொடர்பில் விஸ்தரிப்பு நடவடிக்கைகளுக்கு முனையலாம் ஆனால் அப்படியான நடவடிக்கை இந்தியா மற்றும் ஸ்ரீ லங்காவிற்கு இடையிலான வர்த்தகத்தினை பாதிப்பதாக அமையக்கூடாது.

## RT9. இளைஞர்

### RT9.1. முக்கிய செயற்பாட்டுச் சிபார்சுகள்

(அ) இளையசமுதாயத்துக்கு ஸ்ரீ லங்காவில் மாற்றமடையும் தொழிற் சந்தையின் தேவைக்கேற்ப கல்வித் திறமைகளைப் பெறக்கூடிய வகையில் தரமான கல்வியினை வழங்குதல்.

(ஆ) இளையசமுதாயத்தினர் நிலபேறான அபிவிருத்தி வளர்ச்சி தொடர்பான, விஞ்ஞான அனுபவ ரீதியான கல்வி மூலம் எதிர்காலத்தினை பாதுகாத்துக் கொள்ளலாம்.

46 https://www.weforum.org/agenda/2016/11/america-s-dominance-is-over/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) இளையசமுதாயத்தினரை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் பொருட்டு ஊக்குவிப்பு வழங்குவதுடன், விவசாயம் தொடர்பான அபிவிருத்தி, சிறிய அளவிலான விவசாய வியாபாரத்தினை ஊக்குவித்தல்.

(ஈ) இளையசமுதாயத்தினர் பங்குபற்றக்கூடிய வேலை அமைப்புக்களில் புதிய தொழில்நுட்ப அறிமுகத்தின ஏற்படுத்தல்.

(உ) இளையசமுதாயத்தினரில் திறனை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கத்தின் நிலைபேறான திட்டங்களை அமுல்படுத்தல்

## RT9.2 நிலைபேறான நோக்கு

முன்கூறப்பட்ட பிரச்சினைகள் மற்றும் தொடர்பான தீர்வுகள் பயனுறுதியான முறையில் அமுல்படுத்தப்படுவதற்கு உள்ளார்ந்த, இணைந்த, தந்திரோபாய செயற்பாடுகள் செயற்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூரணமான முயற்சி ஐக்கிய நாடுகளின் நிலபேறான அபிவிருத்தி இலக்குகள் (SGDs) மூலம் கணிப்பிடப்படலாம். 2020ம் அதற்கு அப்பாலும் சந்ததி மாற்ற நோக்கு தொடர்பில் இளைய சமுதாயத்தினர் தேசிய இலக்குகளை எய்த உதவுவார்கள். அரசாங்கம் அப்படியான முயற்சிகளில் தகுந்த தேசிய தந்திரோபாய நடவடிக்கை மூலம் நாட்டின் பொருளாதார முறையினை முன்னேற்ற முடியும். பொருளாதார அடிப்படையிலான செயற்பாடுகள் புத்தி சாதுரியமானவையாக வினைத்திறன் மற்றும் ஸ்ரீ லங்காவின் இயற்கை வளங்களை தந்திரோபாயமாகப் பவித்து இளைய சந்தியினருக்கு இடையில் சமநிலையைப் பேணலாம்.

### வட்டப் பொருளாதாரம்

ஸ்ரீ லங்கா ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைய முற்படும்போது அதிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஏற்படக்கூடிய பொருளாதார அரச முறைமைகளுக்கு ஏற்ப மற்றும் இளைய சந்ததியினரால் எதிர்நோக்கப்படும் சவால்கள் தொடர்பான தீர்வு முறைகள் ஏற்கெனவே குறித்துரைக்கப்பட்டிருந்தும், வட்டப் பொருளாதாரக் கொள்கைகள் பிரயோகிக்கப்படலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் அ) தற்போது நாம் நுகரும் பொருட்கள் சேவைகள்பற்றி மீள யோசித்தல், அவற்றினை அடைந்துகொள்ள விரும்புதல் ஆ) பொருட்களைப் பரிமாற்றம், புதிய பொருட்கள் பெற்றுக்கொள்ளல், இ) கழிவுப் பொருட்களை மீளவாக்கம் செய்வதன் மூலம் இலகுவாக்கலாம். பூகோள பொருளாதாரத்தில் ஸ்ரீ லங்காவும் இணைந்துகொள்வதால் யாம் அவர்களின் வட்டப் பொருளாதாரத்தினை ஏற்கவேண்டியுள்ளது. மெதுவாக அருகிக்கொண்டிருக்கும் வளங்கள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனம் அதிகரிக்கின்றது. சவால்களைக் கருத்திற்கொண்டு சிந்தித்தால் அபிவிருத்திச் சந்தைகளில் வட்டப் பொருளாதாரம் பல்வகை மட்டத்திலான ஆதரவை நாடிநிற்பதுடன் - முதலீட்டாளர், அரசாங்கம், வியாபார – சிவில் சமூகம் போன்றோரின் உதவியை எதிர்பார்க்கின்றது. எனவே ஸ்ரீ லங்கா கடந்தகாலத் தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு பூகோள அமைப்பிடமிருந்து உதவிகளை பெற்றுக்கொள்கின்றது.

### நிலைபேறான அபிவிருத்திக்கான இளைய சமுதாயத்தினர்

சரித்திரம் மற்றும் பரிணாம மாற்றம் தொடர்பான அறிவிற்கிணங்க இளைய சந்ததியினர் உள்ள சமூக அந்தஸ்துடன் திருப்தி அடைவதில்லை. அவர்களின் எதிர்பார்ப்புக்கள் பொதுவாக மக்களின் வழமையான செயற்பாடு என்பதுடன் மாற்றத்திற்கு காலமெடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த நாட்டின் இளைய சமுதாயத்தினரும் முந்திய சமுதாயத்தினரிலும் பார்க்க சிறந்த செயற்பாடு, முந்திய சமுதாயத்தினரின் தவறுகளைத் திருத்துதல் மற்றும் பாதுகாப்பான எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பார்கள். இளைய சமுதாயத்தினர் புத்தாக்கம், அழகு, மற்றும் சமூகப் புரட்சி என்பவற்றில் கவனம் செலுத்துவர். அவர்கள் பொதுவான மாற்றத்தின் ஊக்கிகள்/பிரதிநிதிகள் என ஏற்றுக்கொள்ளப்படுவர்.

இயற்கை வளங்களின் அதிகளவான நுகர்வு சூழல் மாசடைதல் மற்றும் சமனற்ற நிலை காரணமாக ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் 2030 நிகழ்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவாறு குறிப்பிடப்பட்டுள்ள 17 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பூகோள ரீதியில் ஏற்றுக்கொள்ப்பட்டுள்ன. எதிர்கால பாதுகாப்பு தொடர்பில் இளைய சந்ததியினர் வலிமை, இயலுமை மற்றும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நிலைபேறான அபிவிருத்தியினை அடையமுடியும். எதிர்கால சமூகத்தின் அவர்களின் பங்களிப்பு, மற்றும் மக்கட் தொகை பிரதிநிதித்துவம் அபிவிருத்தித் திட்டங்களுக்கான அடிப்படை முதலீடாக கருதப்படுகின்றன.

**எதிர்பார்ப்புகள் மற்றும் நிறைவேற்றுகை**

எதிர்பார்க்கப்படும் கோலவுரு, நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் தொழில் நுட்பம் முற்றும் நவீன விஞ்ஞானம், பாரம்பரிய அறிவுச் செயற்பாடுகள் மற்றும் கலாசாரப் பெறுமதிகள் பொருத்தமானவையும் முக்கியமானவையுமாகும்.

ஏனவே நிலைபேறான அபிவிரத்திக்கான நிகழ்சி நிரல் வருங்காலத்துக்கு மட்டுமல்ல இளைய சமுதாயத்தினர் ஏற்கக்கூடிய மாற்றத்தினை ஏற்படுத்துவதுடன் உண்மையில் நடைமுறைச் சாத்தியமானதாகவும் அமைதல் வேண்டும். ஸ்ரீ லங்காவில் உள்ள இளைய சமுதாயத்தினர் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய தந்திரோபாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாமற்போனாலும் உரிய முறையில் நிர்வகிக்கப்பட்டால் இளைய சந்ததியினரின் திறமை வலுக்கூடியதாகவும் நிலைபேறான அபிவிருத்தியை பெற்றுக்கொள்ளக்கூடியதாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Annex

# A

## Annex A

## REPORT CONTRIBUTORS

| | | |
|---|---|---|
| **CHIEF EDITOR AND OVERALL COORDINATOR** | Mohan Munasinghe | |
| **TOPICS** | **LEAD AUTHORS** | **S** |
| **INTRODUCTION** | Mohan Munasinghe | PEC |
| **CLUSTERS** | | |
| C2 - ECONOMY | Saman Kelegama and Dushni Weerakoon | Wimal Nanayakkara, Ashani Abeysekera, Yolanthika Ellepola |
| C3 - ENVIRONMENT | Hemanthi Ranasinghe and W. L. Sumathipala | Kamal Ranathunga, Sena Peiris, Lakmini Senadheera |
| C4 - SOCIAL | Siri Hettige and Savithri Goonesekere | S. Colambage, P. Ganeshamurthy, Subhangi Herath |
| **SECTORS** | | |
| S1- AGRICULTURE & FOOD | Anura Ekanayake | Gerry Jayawardena, S.R.K. Aruppola |
| S2 - EDUCATION | Madhura Wehella | Jayantha Balasooriya |
| S3 - ENERGY | Shavi Fernando | Tilak Siyambalapitiya, Harsha Wickramasinghe, Randika Wijekoon |
| S4 - HEALTH | P.A. Gooneratne | Ruvaize Haniffa, Palitha Bandara, Ajit Amarasingha, Maruieanne Samaraweera |
| S5 - MARINE RESOURCES | Kamal Ranatunge | Ariyaseela Wicremanayaka, Upali Amarasinghe |
| S6 - TRANSPORT | Amal Kumarage | Rohan Samarajiva, Jagath Munasinghe, T.L. Gunaruwan |
| S7 - URBAN DEVELOPMENT AND PHYSICAL PLANNING | Jagath Munasinghe | Sumith Samaratunge, Kumaraguru Sugirdhan |
| S8 - WATER | S R K Aruppola | Sarath Gamini |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **CHIEF EDITOR AND OVERALL COORDINATOR** | Mohan Munasinghe | |
| **THEMES** | | |
| T1 - CLIMATE CHANGE, DISASTERS AND AIR QUALITY | W.L. Sumathipala | Ariyaratne Hewage, Hasula Wickremasinghe, Shiromani Jayawardene |
| T2 - ETHICS, VALUES AND CITIZENSHIP | Asanga Tillekeratane | Savithri Goonesekere, Siri Hettige, Mano Titawella, Mohan Munasinghe |
| T3 - GENDER | Neloufer de Mel | Lakshman Dissanayake, Vagisha Gunasekera, Harini Amarasuriya, Pradeep Peiris, Kumuduni Samuel |
| T4 - GOVERNANCE | Savitri Goonesekere | Mano Titawella |
| T5 - INNOVATION, TECHNOLOGY AND INDUSTRY | Rohan Samarajiva | Daniel Alphonsus, Louiqa Rashid, Nathan Sivagananathan, Sanjiva Weerawarana, Hans Wijayasuriya |
| T6 - INTERNATIONAL RELATIONS | Abdul Azeez | |
| T7 - POVERTY AND INEQUALITY | Gamini Batuwitage and Udan Fernando | K. Romeshun |
| T8 - RECONCILIATION, SECURITY AND PEACE | Mano Tittawela | Asanga Abeygunasekera and Mohan Munasinghe |
| T9 - YOUTH TRANSGENERATIONAL PERSPECTIVE | Praveen Abhayaratne | Nilangi Kulasinghe, Rozanne Croos Moraes, Ranjiva Munasinghe, Sohan Dharmarajah, Buminda Jayasuriya |
| **RECOMMENDATIONS AND CONCLUSIONS** | Mohan Munasinghe | PEC |
| **COMPILING AND EDITORIAL SUPPORT** | Chandima Wickremasinghe | Nishanthi De Silva, Yvani Deraniyagala, Priyangi Jayasinghe, Thisuri Wanniaratchi |
| **PROJECT MANAGEMENT TEAM** | Mohan Munasinghe | J. Wijeyratne, Chandima Wickremasinghe, Shiral Laktilaka, Harindra Dassanayake, Sria Munasinghe, Nishanthi De Silva, Yvani Deraniyagala, Priyangi Jayasinghe, Thisuri Wanniaratchi |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Annex

# B

## Annex B.

## PRESIDENTIAL EXPERT COMMITTEE ON SUSTAINABLE SRI LANKA 2030 VISION

1. Prof. Mohan Munasinghe
2. Dr. Saman Kelegama
3. Dr. Dushni Weerakoon
4. Prof. Hemanthi Ranasinghe
5. Dr. W.L. Sumathipala
6. Prof. Savitri Goonesekere
7. Prof. Siri Hettige
8. Mr. Asoka Abegunawardhana
9. Dr. Ajith Amarasinghe
10. Prof. K Amirthalingam
11. Eng. S R K Aruppola
12. Dr. Jayantha Balasooriya
13. Dr. Suren Batagoda
14. Dr. Gamini Batuwitage
15. Prof. Neloufer de Mel
16. Prof. K N O Dharmadasa
17. Dr Anura Ekanayake
18. Eng. Shavi Fernando
19. Dr. Udan Fernando
20. Dr Kishu Gomes
21. Dr. Pani Gooneratne
22. Dr. T L Gunaruwan
23. Dr. Ahilan Kadirgamar
24. Dr. S A Karunaratne
25. Prof. Amal Kumarage
26. Dr. Ram Manikkalingam
27. Mr. Sanjay Mudalige
28. Dr. Jagath Munasinghe
29. Prof. Prasanna Perera
30. Dr. Kamal Ranatunge
31. Eng. Nihal Rupasinghe
32. Prof. Rohan Samarajiva
33. Mr. Susil Sirivardena
34. Dr. Tilak Siyambalapitiya
35. Mr. Mano Tittawela
36. Prof. Asanga Thilakerathne
37. Prof. Jayadewa Uyangoda
38. Dr. Madhura Wehella
39. Eng. Harsha Wickramasinghe
40. Mr. Ariyseela Wickremanayake
41. Dr. Hans Wijesuriya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by
**Department of Government Information**

Printing- Dept. of Government Printing

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org